அருள்மிகு உமாபதி சிவனார்

அருளிய

சிவப்பிரகாசம்



தவத்திரு. முனைவர்

அ.வே.சாந்திகுமார சுவாமிகள்

அருள்மிகு உமாபதி சிவனார்

அருளிய

சிவப்பிரகாசம்



தவத்திரு. முனைவர்

அ.வே.சாந்திகுமார சுவாமிகள்

CENTRE FOR SHAIVA STUDIES
Puducherry

உ

என்றும் வேண்டும் இறையருள்

ஸ்ரீ கணேசன் அவர்களின்

திருக்கரங்களில்

18 செப் 2023

THAVATHIRU SRI LA SRI
Dr. A.V. SHANTHI KUMARA SWAMIGAL
'N' Block, Aura Homes
Lake Area 8th Street, 2nd Cross Street,
Near Mattuthavani Bus Stand,
Othakadai (PO), Madurai-625107.

9944334436
9994012498

அருள்மிகு உமாபதி சிவனார்

அருளிய

சிவப்பிரகாசம்

சிவப்பிரகாசம்

சித்தாந்த சைவத்தின் முப்பொருள் உண்மைகளைச் சிவஞானபோதம், சிவஞானசித்தியார் ஆகிய முதல்வழி நூல்களைத் தழுவிக் கூறினும், அவற்றை விளக்கிக் கூறும் வகையால், அவற்றின் வேறாகத் தனக்கெனத் தனித்தன்மை வகுத்துக் கொண்டு கருத்து விளக்கம் செய்கிறது உமாபதிசிவனார் அருளிய 'சிவப்பிரகாசம்.'

தவத்திரு. முனைவர் அ.வே.சாந்திகுமார சுவாமிகள்

பத்ரிகாஸ்ரம துவாரகாபீடம் ஸ்ரீஸ்ரீஸ்ரீ வித்ய நாராயண தீர்த்த சுவாமிகளால் சாயிமார்க்கத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டவர்.

மதுரைக் காமராசர் பல்கலைக்கழக சைவ சித்தாந்தத் தத்துவத்துறையில் 'சிவப்பிரகாசம் – சைவசித்தாந்தக் கருத்துகளின் வளர்ச்சியும் தொடர்ச்சியும்' என்னும் தலைப்பில் ஆய்வு செய்து முனைவர் (*Ph.D.*) பட்டம் பெற்றவர்.

சாகித்திய அகாதெமியின் இந்திய இலக்கியச் சிற்பிகள் வரிசையில் 'குமரகுருபரர்', 'சுந்தரமூர்த்தி சுவாமிகள்', 'அப்பர்' ஆகியோர் குறித்து நூல்கள் எழுதியுள்ளார்.

சமயஅறிஞர், சைவசித்தாந்தப் பேராசிரியர், கவிஞர், இலக்கிய ஆய்வாளர் எனப் பல்வேறு துறைகளில் தடம்பதித்துச் செயலாற்றி வருபவர்.

திருமுறை அருட்பணி அறக்கட்டளை, காஞ்சிபுரம்

காந்தக்கல்லும் ஊசியுமேயென ஆய்ந்து தமிழோதிய சீர்பெறு காஞ்சிப்பதியில், திங்கள்தோறும் சிவத்தலங்களுக்குச் சென்று திருமுறை வழிபாடு இயற்றித் தோத்திரங்களைப் போற்றியும், ஆண்டுதோறும் சைவசித்தாந்த வகுப்புகள் நடத்தி, சாத்திரங்களைச் சாற்றியும் வருகின்ற திருமுறை அருட்பணி அறக்கட்டளை இந்நூலைப் பெருமையுடன் வெளியிடுகிறது.

அருள்மிகு உமாபதி சிவனார்

அருளிய

சிவப்பிரகாசம்

தவத்திரு. முனைவர்

அ.வே.சாந்திகுமார சுவாமிகள்

வெளியீடு

திருமுறை அருட்பணி அறக்கட்டளை

பதிவு எண். 209/2004

எண்.7, பங்காரம்மன் தோட்டம், காஞ்சிபுரம் – 631 501

அருள்மிகு உமாபதி சிவனார் அருளிய சிவப்பிரகாசம் ◆ (c) தவத்திரு. முனைவர்
அ.வே.சாந்திகுமார சுவாமிகள் ◆ பதிப்பு: முதற்பதிப்பு, 25, மே 2021 ◆ வெளியீடு:
சமயச்செம்மல் கயிலைமணி சு.சதாசிவம் எம்.ஏ., பி.எட்., திருமுறை அருட்பணி
அறக்கட்டளை, பதிவுஎண்.209/2004 எண்.7. பங்காரம்மன் தோட்டம், காஞ்சிபுரம்
– 631 501 ◆ ஓவியங்கள்: ஸ்யாம் சங்கர் ◆ வடிவமைப்பு, அச்சு: பி.கி.இராம்குமார்
எம்.ஏ., (ஜெயஸ்ரீ கிராபிக்ஸ், மதுரை) ◆ அளவு: டபுள் கிரவுன் (18செ.மீ x 24செ.மீ)
◆ தாள்: 21.6 கே.ஜி., ஜெ.கே.மேப்லித்தோ ◆ பக்கம்: xL+392◆ விலை: ரூ.600/-

Arulmigu Umapathi Sivanar Aruliya 'SIVAPPRAKASAM' ◆ (c) Thavathiru. Dr.
A.V.Shanthikumara Swamigal ◆ Edition: First Edition, 25, May 2021 ◆ Published by:
Samayachemmal Kayilaimani S.Sadasivam M.A., B.Ed., Thirumurai Arutpani Arakkattalai,
Reg.no.209/2004 No.7. Bangaramman Thottam, Kancheepuram - 631 501.
Email:thirumuraiarutpanitrust@gmail.com ◆ Arts: Shyam Sankar ◆ Designing &Printing:
P.K.Ramkumar M.A., (JAYASRI GRAPHICS, Madurai) ◆ Size: Double Crown (18cm X
24cm) Paper: 21.6kg JK Maplitho ◆ Pages: xL+392 ◆ Amount: Rs.600/-

ISBN: 978-81-909574-0-3

திருவடிகளுக்கு...

உள்ளே...

ஆசியுரை xi

அணிந்துரை xiv

வாழ்த்துரை xvii

பதிப்புரை xxvii

என்னுரை xxxi

1. முன்னுரை 01
2. உமாபதி சிவனார் வாழ்வும் வாக்கும் 09
3. சிவப்பிரகாசம் - சைவ சித்தாந்தக் கருத்துகளின் வளர்ச்சியும் தொடர்ச்சியும் 31
4. சிவப்பிரகாசம் காட்டும் பொது அதிகாரம் 71
    - 4.1 பதி இலக்கணம் 73
    - 4.2 பசு இலக்கணம் 105
    - 4.3 பாச இலக்கணம் 113
        - 4.3.1 ஆணவம் 117
        - 4.3.2 கன்மம் 131
        - 4.3.3 மாயை 143
        - 4.3.4 மாயேயம் 161
        - 4.3.5 திரோதானம் 187
    - 4.4 சுத்த நிலை 195
    - 4.5 சைவ சித்தாந்த முத்தி 203

5. சிவப்பிரகாசம் காட்டும் உண்மை அதிகாரம் 227
5.1 ஆன்ம இலக்கணம் 229
5.2 அவத்தை இலக்கணம் 243
5.3 உணர்த்தும் முறைமை 255
5.4 ஞான வாய்மை 263
5.5 தச காரியம் 281
5.6 ஒன்றி நின்று உணரும் உண்மை 309
5.7 புனிதன் நாமம் 325
5.8 அணைந்தோர் தன்மை 339
6. பயன்பட்ட நூல்கள் 357

7. இணைப்பு

i) சிவஞானபாடியத்தில் சிவப்பிரகாசம் 371
ii) கலாசோதனை 381
iii) சிவதத்துவம் 383
iv) வித்யாதத்துவம் 384
v) ஆன்மதத்துவம் 385
vi) ஐந்தவத்தை 386
vii) கிரேக்கப்படம் 387
8. குறிப்புகள் 388

ஆசியுரை

உ
குருபாதம்

தருமையாதீனம் 27ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

தருமபுரம்
மயிலாடுதுறை 609 001
நாகை மாவட்டம்

உலகத்திலுள்ள நூல்களை மூன்று வகையாகப் பிரிப்பர். முதல்நூல், வழிநூல், சார்புநூல் என்று வகைப்படுத்துவர்.

> "முதல் வழி சார்புஎன நூல் மூன்றாகும்"

என்பது நன்னூல் இலக்கண நூற்பா. முதல் நூல் என்பது இறைவனாலும் இறையருள் பெற்ற அருளாளர்களாலும் அருளப்பட்டதாகும்.

> "வினையின் நீங்கி விளங்கிய அறிவன் முனைவன் கண்டது முதல்நூலாகும்"

என்பது தொல்காப்பிய மரபியல் நூற்பா. வழி நூல் என்பது, காலத்தேவைக்கு ஒப்ப, முதல் நூலின் கருத்துகளை ஏற்றுக் கொண்டும் பின்னுள்ள காலநிலைக்கு ஏற்பச் சில புதிய விளக்கங்களைத் தந்தும் உருவாக்குவது ஆகும்.

> "முன்னோர் நூலின் முடிபு ஒருங்கு ஒத்துப்
> பின்னோன் வேண்டும் விகற்பம் கூறி
> அழியா மரபின் அதுவழி நூலாகும்"

என்பது பாயிரம். சார்பு நூல் என்பது, முதல்நூல், வழிநூல் என்னும் இரண்டு நூல்களுக்குப் பின்னர் அந்நூல்களின் கருத்துகளை ஏற்றும், சிற்சில திரிபுகள் கொண்டதும் ஆகும்.

> "இருவர் நூற்கும் ஒருசிறை தொடங்கித்
> திரிபு வேறுடையது புடை நூலாகும்"

என்பது பாயிரம். எனவே ஒரு கருத்தை விளக்கப் பல்வேறு காலநிலைக்கு ஏற்ப மூன்று வகையான நூல்கள் தோன்றும்.

இந்நிலையில், இலக்கண வகையில் அகத்தியம் முதல்நூல் எனவும், தொல்காப்பியம் வழிநூல் எனவும், நன்னூல் சார்புநூல் எனவும் அமைந்துள்ளன. தோத்திர அமைப்பில் திருத்தொண்டத்தொகை முதல் நூலாகவும், திருத்தொண்டர் திருவந்தாதி வழி நூலாகவும், திருத்தொண்டர் மாக்கதை சார்பு நூலாகவும் அமைந்தன. சாத்திர நிலையில், சிவஞானபோதம் முதல்நூல் என்றும், சிவஞானசித்தியார் வழிநூல் என்றும், சிவப்பிரகாசம் சார்புநூல் என்றும் பொருந்தி உள்ளன.

"அவன் அவள் அதுவெனும் அவை மூவினைமையின்"

என்று சிவஞானபோதம் முதல் நூற்பாவில் கூறுகிறது. கண்ணால் காணப்படும் இப்பிரபஞ்சம் அவன், அவள், அது என்னும் மூன்று அவயவப் பகுப்புடையது என்றும், அது மூன்று செயல்பாடுகளை உடையது என்றும் கூறியது. பின்னே வந்த வழிநூலாகிய சிவஞானசித்தியார் மூன்று செயல்பாடுகளை உடையது என்னும் பூடகமான விஷயத்தை விளக்கியுள்ளது. மூவகைச் செயல்பாடுகள் என்பன தோன்றி, நின்று, அழியும் தன்மைகளைக் குறிக்கும் என்று அருள்நந்தி சிவாச்சாரியார் விளக்கினார்.

"ஒருவனோடு ஒருத்தி ஒன்று என்று உரைத்திடும் உலகம்
எல்லாம் வருமுறைவந்து நின்று போவது"

என்பது சித்தியார் பாடல். இதுதான் பின்னோன் வேண்டும் விகற்பம் கூறல் ஆகும்.

இவ்விரண்டிற்கும் பின்னே தோன்றிய சார்பு நூலாகிய சிவப்பிரகாசம் இக்கருத்தினைக் கீழ்வருமாறு விளக்குகிறது.

"உலகம் எலாம் ஒருவனோடு ஒருத்தி ஒன்று என்று
உளதாகி நின்று அளவில் ஒடுங்கும்"

என்பது சிவப்பிரகாசம். இதில் "உளதாகி" என்பது தோன்றி என்றும், "நின்று" என்பது வாழ்ந்து என்றும் "ஒடுங்கும்" என்பது மறைந்து என்றும் பொருள் தருகின்றன. இப்பகுதியில் "அளவில்" என்னும் சொல்லில் தான் சார்பு நூலின் தேவை விளங்குகிறது. அளவில் என்பது ஒரு கால எல்லையில் – அதாவது ஊழி முடிவில் என்று பொருள் தருகிறது. உலகத்தை ஒடுக்குவதும் மீளத்தோற்றுவித்தலும் இறைவன் செய்யும் அருட்செயலாகும். கன்மமலம் பரிபாகம் ஆதல் பொருட்டு உலகத்தை ஒடுக்குதலும், ஆணவ மலம் பரிபாகம் ஆதல் பொருட்டு மீளத் தோற்றுவித்தலும் இறைவனால் உயிர்கள் பொருட்டு நிகழ்த்தப்பெறுகின்றன.

இங்ஙனம் உள்ள சார்பு நூலாகிய சிவப்பிரகாசம், அவையடக்கச் செய்யுளில் அரிய கருத்தினை விளக்கியுள்ளது. பொதுவாகப் பழமை என்றால் பெருமையும், புதுமை என்றால் சிறுமையும் என்று கணக்கிட்டு உலகில் விமர்சிக்கின்றனர். ஆனால் அறிவு ஆராய்ச்சியில் இது ஏற்கத்தக்கது அல்ல. பழமையில் குறையும், புதுமையில் நிறையும் ஓரோவழி ஏற்படுவதற்கு வாய்ப்பு உண்டு. இதனை இலக்கண ஆசிரியர்கள்,

"பழையன கழிதலும், புதியன புகுதலும் வழுவல
கால வகையினானே"

என்று கூறுவர். இக்கருத்தினை நன்கு ஏற்றுக் கொண்ட ஆசிரியர் உமாபதி சிவாசாரியார்.

"தொன்மையவாம் எனும் எவையும் நன்றாகா இன்று
தோன்றிய நூலெனு மெவையுந் தீதாகா"

என்று விளக்கியுள்ளார். ஆய்வியல் அணுகுமுறை மேற்கொள்வார் பின்பற்ற வேண்டிய நுட்பமான இக்கருத்தினை விளக்கிய நூல் சிவப்பிரகாசம் ஆகும். இதனை நன்குணர்ந்த அறிஞர் சாந்திகுமார சுவாமி அவர்கள், சிவப்பிரகாசம் குறித்த ஓர் ஆய்வு நூலை வெளியிடுகின்றார். அவர் முனைவர்ப் பட்டம் பெற்றவர் ஆதலினால் பல்வேறு ஒப்புமைக் கருத்துகளுடன் இந்நூலை உருவாக்கியுள்ளார்.

யோக மார்க்கம் பற்றிய விளக்கத்தினைச் சிவப்பிரகாசம் கீழ்வருமாறு கூறுகிறது.

“அண்டம் மேவிட அனைத்தும்
அனைத்தையும் அண்டம் மேவிக்
கொண்டல் போல் எவையும் ஞானங்
குறைவிலா நிறைதலாலே
கண்டதோர் பொருளை அந்தக்
கருத்தினால் காணில் தானே
அண்ட நாயகனார் மேனி
ஆனதேல் ஐயம் இன்றே”

ஐம்பூதங்களும் வானத்தைப் பொருந்தி நிற்க, அவ்வானம் அனைத்தையும் தன்னுள் அடக்கி நிற்றல் போல, இறைவன் அருளில் அனைத்தும் கலந்து நிற்கின்றன. இதனை உணர்ந்து அனைத்தையும் காணும்போது அவற்றுள் இறைவனையே கண்டு மகிழ்வதும், வழிபடுவதும் யோகம் ஆகும். இதனை விளக்கிய முனைவர் அவர்கள், “பார்க்கின்ற மலரூடு நீயே இருத்தி” என்று தாயுமானவரும், “கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்” என்று அப்பர் அடிகளும், “கூறும் நாவே முதலாகக் கூறும் கரணம் எல்லாம் நீ” என்று மாணிக்கவாசகரும், “கண்ணுதல் கருணை வெள்ளம் ஆயிரம் முகத்தாற் கண்டார்” என்று சேக்கிழாரும் அருளியுள்ள தொடர்களை இணைத்துக் கருத்து விளக்கத்தைத் தெளிவாகத் தந்துள்ள திறம் பாராட்டுதற்குரியது.

இங்ஙனம் நூற்கருத்துகளை ஆங்காங்கே நுண்மாண்நுழை புலத்துடன் விளக்கியுள்ள இந்நூலாசிரியரின் சிந்தனை ஆற்றல், படிப்போர்க்கு விருந்தாக அமையும். இந்நூலினை நம் அன்பிற்குரிய புலவர் திரு. சு.சதாசிவம் அவர்கள் தம்முடைய திருமுறை அருட்பணி அறக்கட்டளை மூலம் வெளியிடுவது மகிழ்ச்சிக்குரியது.

முனைவர் அவர்கள் இன்னும் பல நூல்கள் வெளியிடவும் நூலினை வாங்கிப் பயில்வோர் சமயநலம் பெற்றுச் சால்புறவும் அறக்கட்டளையினர் இதுபோன்று பல நூல்கள் வெளியிட்டுப் பணி செய்யவும் உலக உயிர்கள் அனைத்தும் நலம் பல பெற்று நீடு வாழவும் ஸ்ரீசெந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

என்று விளக்கியுள்ளார். ஆய்வியல் அணுகுமுறை மேற்கொள்வார் பின்பற்ற வேண்டிய நுட்பமான இக்கருத்தினை விளக்கிய நூல் சிவப்பிரகாசம் ஆகும். இதனை நன்குணர்ந்த அறிஞர் சாந்திகுமார சுவாமி அவர்கள், சிவப்பிரகாசம் குறித்த ஓர் ஆய்வு நூலை வெளியிடுகின்றார். அவர் முனைவர்ப் பட்டம் பெற்றவர் ஆதலினால் பல்வேறு ஒப்புமைக் கருத்துகளுடன் இந்நூலை உருவாக்கியுள்ளார்.

யோக மார்க்கம் பற்றிய விளக்கத்தினைச் சிவப்பிரகாசம் கீழ்வருமாறு கூறுகிறது.

“அண்டம் மேவிட அனைத்தும்
அனைத்தையும் அண்டம் மேவிக்
கொண்டல் போல் எவையும் ஞானங்
குறைவிலா நிறைதலாலே
கண்டதோர் பொருளை அந்தக்
கருத்தினால் காணில் தானே
அண்ட நாயகனார் மேனி
ஆனதேல் ஐயம் இன்றே”

ஐம்பூதங்களும் வானத்தைப் பொருந்தி நிற்க, அவ்வானம் அனைத்தையும் தன்னுள் அடக்கி நிற்றல் போல, இறைவன் அருளில் அனைத்தும் கலந்து நிற்கின்றன. இதனை உணர்ந்து அனைத்தையும் காணும்போது அவற்றுள் இறைவனையே கண்டு மகிழ்வதும், வழிபடுவதும் யோகம் ஆகும். இதனை விளக்கிய முனைவர் அவர்கள், “பார்க்கின்ற மலரூடு நீயே இருத்தி” என்று தாயுமானவரும், “கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்” என்று அப்பர் அடிகளும், “கூறும் நாவே முதலாகக் கூறும் கரணம் எல்லாம் நீ” என்று மாணிக்கவாசகரும், “கண்ணுதல் கருணை வெள்ளம் ஆயிரம் முகத்தாற் கண்டார்” என்று சேக்கிழாரும் அருளியுள்ள தொடர்களை இணைத்துக் கருத்து விளக்கத்தைத் தெளிவாகத் தந்துள்ள திறம் பாராட்டுதற்குரியது.

இங்ஙனம் நூற்கருத்துகளை ஆங்காங்கே நுண்மாண்நுழை புலத்துடன் விளக்கியுள்ள இந்நூலாசிரியரின் சிந்தனை ஆற்றல், படிப்போர்க்கு விருந்தாக அமையும். இந்நூலினை நம் அன்பிற்குரிய புலவர் திரு. சு.சதாசிவம் அவர்கள் தம்முடைய திருமுறை அருட்பணி அறக்கட்டளை மூலம் வெளியிடுவது மகிழ்ச்சிக்குரியது.

முனைவர் அவர்கள் இன்னும் பல நூல்கள் வெளியிடவும் நூலினை வாங்கிப் பயில்வோர் சமயநலம் பெற்றுச் சால்புறவும் அறக்கட்டளையினர் இதுபோன்று பல நூல்கள் வெளியிட்டுப் பணி செய்யவும் உலக உயிர்கள் அனைத்தும் நலம் பல பெற்று நீடு வாழவும் ஸ்ரீசெந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

அணிந்துரை

சிவத்தமிழ்ச் செல்வர், சித்தாந்த சரபம்
பேராசிரியர் முனைவர் ஆ.ஆனந்தராசன்
இணைப்பேராசிரியர் (ஓய்வு)
சைவசித்தாந்தத் தத்துவத்துறை,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை.

சிவப்பிரகாச நூல் சைவ சித்தாந்தக் கருத்து வளர்ச்சிக்கு அளித்துள்ள கொடையினை எடுத்துக் காட்டுமுகமாக இவ்விரிவான ஆராய்ச்சி நூலைப் படைத்துள்ளார் ஆசிரியர் சாந்திகுமார சுவாமிகள் அவர்கள்.

சிவஞானபோதம், சிவஞான சித்தி என்னும் இரு நூல்களுக்குள்ளே சித்தாந்த நுண்பொருள்கள் யாவும் அடங்கிக் கிடக்கின்றன என்றாலும் அந்நூல்களில் வெளிப்படையாக விளங்கித் தோன்றாத அந்நுண் பொருள்களை எடுத்து விளக்கிய பெருமை உமாபதி சிவம் அவர்களுக்கே உரியது.

அவர் தமது நூலின் தொடக்கத்தே புறச்சமயத்தார், அகச் சமயத்தார் ஆகிய அனைவருக்கும் விளங்காத அரும் பெரும் பொருள் சைவ சித்தாந்தம் என்ற கருத்தை வெளியிட்டுள்ளார்.

சைவ சித்தாந்தத்தினைப் புறச்சமயத்தவர்க்குக் கூறினால் அஃது அவர்களுக்கு இருள்போலத் தோன்றும் என்று குறிப்பிடுகிறார். இக்கருத்தை விளக்கப் புகுந்த இந்நூலாசிரியர் சாந்திகுமார சுவாமிகள் இதுபற்றிக் கூறியிருப்பது பின்வருமாறு:

‘புறச் சமயத்தார் சைவ சித்தாந்தத்தின் அடிப்படை நூல்களையும், பொருள் உண்மைகளையும் ஏற்றுக் கொள்ளாதவர்கள். இவர்களுக்குச் சைவ சித்தாந்தத்தின் சிறப்பு விளங்காது. ஆகையால் ‘புறச் சமயத்தவர்க்கு இருளாய்’ என்று சிவப்பிரகாசம் கூறும்.’

இது பொதுப்படையான விளக்கமே. இன்னும் சற்று நுணுகிச் சென்று பின்வருமாறு விளக்கிக் காட்டினால்தான் படிப்போர் இதனை நன்கு விளங்கிக் கொள்ள இயலும்.

சைவ சித்தாந்தம் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களும் என்றும் உள்ளன எனவும், அவைகளில் பதியே ஏனைய எல்லாப் பொருள்களுக்கும் தாரகம் எனவும் கூறும். இதனை, பதியாகிய கடவுள் என்ற ஒரு பொருள் உண்டு என்பதையே உடன்படாத புறப்புறச் சமயிகள் (புத்தர், சமணர், உலகாயதர்) எங்ஙனம்

அணிந்துரை

சிவத்தமிழ்ச் செல்வர், சித்தாந்த சரபம்
பேராசிரியர் முனைவர் ஆ.ஆனந்தராசன்
இணைப்பேராசிரியர் (ஓய்வு)
சைவசித்தாந்தத் தத்துவத்துறை,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை.

சிவப்பிரகாச நூல் சைவ சித்தாந்தக் கருத்து வளர்ச்சிக்கு அளித்துள்ள கொடையினை எடுத்துக் காட்டுமுகமாக இவ்விரிவான ஆராய்ச்சி நூலைப் படைத்துள்ளார் ஆசிரியர் சாந்திகுமார சுவாமிகள் அவர்கள்.

சிவஞானபோதம், சிவஞான சித்தி என்னும் இரு நூல்களுக்குள்ளே சித்தாந்த நுண்பொருள்கள் யாவும் அடங்கிக் கிடக்கின்றன என்றாலும் அந்நூல்களில் வெளிப்படையாக விளங்கித் தோன்றாத அந்நுண் பொருள்களை எடுத்து விளக்கிய பெருமை உமாபதி சிவம் அவர்களுக்கே உரியது.

அவர் தமது நூலின் தொடக்கத்தே புறச்சமயத்தார், அகச் சமயத்தார் ஆகிய அனைவருக்கும் விளங்காத அரும் பெரும் பொருள் சைவ சித்தாந்தம் என்ற கருத்தை வெளியிட்டுள்ளார்.

சைவ சித்தாந்தத்தினைப் புறச்சமயத்தவர்க்குக் கூறினால் அஃது அவர்களுக்கு இருள்போலத் தோன்றும் என்று குறிப்பிடுகிறார். இக்கருத்தை விளக்கப் புகுந்த இந்நூலாசிரியர் சாந்திகுமார சுவாமிகள் இதுபற்றிக் கூறியிருப்பது பின்வருமாறு:

‘புறச் சமயத்தார் சைவ சித்தாந்தத்தின் அடிப்படை நூல்களையும், பொருள் உண்மைகளையும் ஏற்றுக் கொள்ளாதவர்கள். இவர்களுக்குச் சைவ சித்தாந்தத்தின் சிறப்பு விளங்காது. ஆகையால் ‘புறச் சமயத்தவர்க்கு இருளாய்’ என்று சிவப்பிரகாசம் கூறும்.’

இது பொதுப்படையான விளக்கமே. இன்னும் சற்று நுணுகிச் சென்று பின்வருமாறு விளக்கிக் காட்டினால்தான் படிப்போர் இதனை நன்கு விளங்கிக் கொள்ள இயலும்.

சைவ சித்தாந்தம் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களும் என்றும் உள்ளன எனவும், அவைகளில் பதியே ஏனைய எல்லாப் பொருள்களுக்கும் தாரகம் எனவும் கூறும். இதனை, பதியாகிய கடவுள் என்ற ஒரு பொருள் உண்டு என்பதையே உடன்படாத புறப்புறச் சமயிகள் (புத்தர், சமணர், உலகாயதர்) எங்ஙனம்

ஏற்றுகொள்வர்? மேலும், உடம்பிற்கு வேறாக ஆன்மா என்ற பொருள் எங்கேயிருக்கிறது? எனவும் அவர் வாதிடுவர். அவர்களுக்குச் சைவ சித்தாந்தம் ஓர் இருள் போலத்தான் தோன்றும்.

உயிர்களின் இயல்புகளையே இறைவன் இயல்புகளாகக் கொண்டு கூறுவர் புறச்சமயிகளில் ஒரு சாரார் (ஏகான்மவாதிகள்). அவர்கள் பதிக்குரிய இலக்கணங்கள் அனைத்தும் உடைய தேவ தேவனாகிய சிவபிரானது பெருந்தன்மையை எங்ஙனம் உணரமுடியும்?

அகப்புறச் சமயத்தார் சிவனைக் கோரமூர்த்தியாக நினைத்து வழிபடுவர். அவர்கள் 'சிவம் சாந்தம்' என்னும் நிலையினை எங்ஙனம் உணர்ந்து கொள்ள இயலும்? அவர்களும் பரம கருணாமூர்த்தியாகிய பரமசிவனை உணர மாட்டாதவரேயாவர்.

இதனால், முக்கூற்றுப் புறச்சமயத்தார்க்கும் சைவ சித்தாந்தம் இருள்போலத்தான் தோன்றும் என்பது விளங்கும்.

இனி, அத்துவித ஞானமே நிட்டைக்குச் சாதனம் என்பதை எல்லா வைதிக சமயங்களும் வலியுறுத்தும். ஆயினும் அத்துவிதம் என்பதற்குப் பொருள் கொள்வதில் அவை தம்முள் வேறுபடுகின்றன.

அத்துவிதம் என்பது பொன்னும் அணிகலனும் போலக் கடவுளும் உலகமும் ஒன்று என்று ஒரு சிலர் கூறுவர். இருளும் ஒளியும்போல வேறு என்று வேறுசிலர் கூறுவர். சொல்லும் பொருளும்போல ஒன்றும் வேறும் என்று மற்றும் சிலர் கூறுவர்.

இவர்கள் சொல்லுவனவற்றையெல்லாம் மறுத்து அத்துவிதம் என்பதன் பொருள் இது என்பதை எடுத்துக் கூறுகிறார் உமாபதி சிவம். அத்துவிதமாவது, இறைவன் உயிர்களோடும் உலகத்தோடும் ஒன்றாய், வேறாய், உடனாய் இருக்கும் நிலை என்று கூறி, அம்மூன்று நிலைகளையும் இனிது விளக்குதற்கு மூன்று உதாரணங்களையும் எடுத்துக்காட்டுகிறார்.

இக்கருத்தமைந்த 'உடலுயிர் கண்ணருக்கன் அறிவொளிபோல் பிறிவரும் அத்துவிதமாகும் சிறப்பினதாய்' என்னும் செய்யுட் பகுதியை, சிவஞான போதச் சிற்றுரை பேருரைகளைக் கொண்டும், சிவப்பிரகாச நூலுக்கு எழுந்துள்ள பல உரைகளைக் கொண்டும் முனைவர். சாந்திக்குமார சுவாமிகள் அவர்கள் திறம்பட விளக்கியிருக்கும் பான்மை படிப்போர் சிந்தனைக்கு நல்விருந்தாகும்.

இன்னும் வினைகள் வந்து பயன்தரும் முறை, கேவல, சகல, சுத்தம் என்னும் அவத்தைகளின் இயல்பு, குணங்களின் விரிவு, புத்திகுண பாவங்கள், ஞானவாய்மை, ஞானவாய்மையின் பயன் ஆகியவற்றைத் தமது நுண்மாண் நுழைபுலங்கொண்டு அவர் விளக்கியிருப்பது பெரிதும் பாராட்டுதற்குரியது.

பல்லாண்டுக் காலம் முயன்று, தேவைப்பட்ட கருவி நூல்கள் அனைத்தையும் தேடிப்பெற்றுத் தீர ஆராய்ந்து செய்த பேருழைப்பின் பயனாக உருவாகியது இவ்வாய்வு நூல் என்பதில் யாதோர் ஐயமுமில்லை.

சிவப்பிரகாசம் குறித்து ஒரு முழுமையான, விரிவான ஆராய்ச்சி இதுகாறும் செய்யப்பெறவில்லையே என்ற குறை இந்நூலால் நீங்குகிறது.

இந்நூல் இனிவருங் காலங்களில் ஆய்வாளர்கட்கும் பிறருக்கும் நல்ல வழிகாட்டியாய் அமையும் என்று நம்புகிறேன்.

ஆ.ஆனந்தராசன்

மதுரை -20
26-08-2020

வாழ்த்துரை

முனைவர் ச.கங்காதரன்
பேராசிரியர் & துறைத்தலைவர் (ஓய்வு)
சைவ சித்தாந்தத் தத்துவத் துறை
மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

பேராசிரியர் S.S.சூரியநாராயண சாஸ்திரி அவர்கள் சென்னைப் பல்கலைக்கழகத் தத்துவத் துறைத் தலைவராக (1927 - 1942) 15 ஆண்டுகள் பணியாற்றினார். சாங்கிய காரிகை உரையுடன் கூடிய பதிப்பு, ஸ்ரீகண்டரின் சிவாத்வைதம் போன்ற பல நூல்கள், பல ஆய்வுக் கட்டுரைகள் உருவாக்கியதுடன், டாக்டர் T.M.P. மகாதேவன், டாக்டர் வ.ஆ.தேவசேனாபதி ஆகியவர்களுக்கு ஆய்வு வழிகாட்டியாக அமைந்ததைத் தன் பெரும்பேறாகக் கருதினார். அதன் தொடர்ச்சியாக டாக்டர். தேவசேனாதிபதி அவர்கள் எனக்கு ஆய்வு நெறியாளராய் அமைந்தார். அதுபோன்று திருவருளால் அ.வே.சாந்திகுமார சுவாமிகள் அவர்கள் ஆய்வாளராய் அமைந்ததை அடியேன் வாழ்வின் பெரும்பேறாகக் கருதுகிறேன். அவர் உருவாக்கிய இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்க நேர்ந்ததையும் அடியேன் நற்பேறாகக் கருதுகிறேன்.

இந்நூலின் முகப்பில் அமைந்த உமாபதி சிவத்தின் திருவுருவப்படம் இந்நூலின் தரத்தை வெளிப்படுத்துவதாக அமைகிறது. நூலைப் படிக்குமுன் நூலாசிரியரின் திருவடிகளை வணங்கி நூலைப் படிக்கவேண்டும் என்பதை உய்த்தறியுமாறு உமாபதி சிவத்தின் "நூல்வழியும் நூற்பெயரும்" என்னும் தலைப்பில் அமையும் பின்வரும் பாடல் உணர்த்துகிறது.

"தெரித்தகுரு முதல்வர்உயர் சிவஞான போதம்
    செப்பினர்பின்பு அவர் புதல்வர் சிவஞானசித்தி
விரித்தனர் மற்று அவர்கள் திருவடிகள் போற்றி
    விளம்பிய நூல் அவையிரண்டும் விரும்பி நோக்கி
கருத்தில்உறை திருவருளும் இறைவன் நூலும்
    கலந்து பொது உண்மையெனக் கருதி யானும்
அருத்திமிக உரைப்பன் வளர் விருத்த நூறும்
    ஆசில் சிவப்பிரகாசம் ஆகும் அன்றே (சிவம்.11)

இந்த ஆய்வைக் கொற்றவன் குடியில் உள்ள உமாபதி சிவத்தை வழிபட்டுத் தொடங்கலாம் எனும் கருத்தை அடியேன் சுவாமிகளுக்குத் தெரிவிக்க, அவர்கள் ஏற்பாட்டின்படி உமாபதி சிவத்தை வழிபடச் சென்றபோது, அன்று உமாபதி சிவத்தின் குருபூசை தினமாக அமைந்தது. தற்செயலாக நிகழ்ந்த இந்த நிகழ்வு இந்த ஆய்வு நன்முறையில் அமையும் என்பதற்கு முன்னோடியாக அமைந்தது.

“சொற்றகு முதல்வழித் தொன்மை நூன்முறை கற்றொளிர் சிவப்பிரகாச நூல்புகல் கொற்றவன் குடிவரு குரவன் எம்மையாள் நற்றவன்” பதம் பணிந்து முதற்கண் என் பணிவான வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். இவ் ஆய்வுக்கு அவரருளிய அருளின் திறம் என்றும் நினைந்து போற்றற்குரியது என்பது சாந்திகுமார சுவாமிகள் எழுதிய முதல்பகுதி. அடுத்து ஆய்வுக்கு உதவி செய்த அனைத்து அன்பர்களுக்கும் சுவாமிகள் நன்றி தெரிவித்துக் கொள்கிறார்.

சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினா வெண்பா ஆகியவை ஒன்றுக்கொன்று தொடர்பும் இயைபும் உடையன ஆதலால் இந்நூல்கள் ‘முக்கோண சாத்திரங்கள்’ என அழைக்கப்படும் காரணத்தை ஆய்வு நூலில் சாந்திகுமார சுவாமிகள் நன்கு விளக்கியுள்ளார்.

சிவப்பிரகாசத்தின் இதய பாசுரமான “புறச்சமயத்தவர்க் கிருளாய்” எனத் தொடங்கும் பாடலின் பொருளைச் சாந்திகுமார சுவாமிகள் தெளிவாக விளக்குகிறார். இந்த இதய பாசுரம் ஈசாவஸ்ய உபநிடதத்தின் முதல் மந்திரம் போல விளங்குவதை எடுத்துக்காட்டுகிறார். இவ்விளக்கம் “வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தத்திறன்” என்னும் உமாபதி சிவத்தின் கூற்றை விளக்குவதுடன் சுவாமிகளின் சித்தாந்த, வடமொழிப்புலமை, உபநிடதங்களில் ஆழங்கால்பட்டமை ஆகியவற்றையும் நமக்குத் தெரிவிக்கிறது.

உமாபதி சிவனார் வாழ்வும் வாக்கும் பகுதியில் பெற்றான் சாம்பானுக்கு உமாபதிசிவம் கொடுத்த முத்தி பற்றிய நிகழ்வை ‘குஞ்சிதாங்க்ரி ஸ்தவம்’ என்ற நூலில் குறிக்கிறார். (சுலோ.305). பக்குவம் பெற்ற முள்ளிச்செடிக்கு உமாபதிசிவம் முத்தி கொடுப்பதன் மூலம் பெற்றான் சாம்பான் மனைவியின் ஐயத்தைப் போக்குகிறார். இச் செய்தியை,

> “திருநிறைந்த பார்வையினால் தேடரிய நோக்கமதை
> உருநிறைந்த ஒரு சாம்பான் என்பாற்கும் ஓர் செடிக்கும்
> அருள்நிறைந்த அன்று ஈந்த அறா அருளாளன்”

என்று பாம்பன் சுவாமிகள் உமாபதி சிவத்தைப் போற்றுவதை எடுத்துக்காட்டிய ஆசிரியரின் திறம் பாராட்டிற்குரியது.

திருக்குறளின் வழியிலேயே ‘திருவருட்பயன்’ செய்த உமாபதியார், நெஞ்சுவிடு தூதுவில் திருக்குறளை எடுத்தாண்டு, திருக்குறளை ‘திருவள்ளுவர் உரைத்த

மெய்வைத்த சொல்'' என்றும், திருவள்ளுவரை "நிலைத்தமிழின் தெய்வப்புலமைத் திருவள்ளுவர்'' என்றும் போற்றுகின்றார்:

"தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றையவர் என்று - நிலைத்தமிழின்
தெய்வப் புலமைத் திருவள்ளுவர் உரைத்த
மெய்வைத்த சொல்" (நெஞ்சுவிடு தூது, *49-52*)

திருக்குறளைச் சைவர் ஓர் அறநூல் என்ற அளவில் மட்டும் கொள்வதில்லை. மெய்யுணர்வு பெற உதவும் சைவநூல் என்றே சைவர் கொள்வர்.

"திருக்குறளின் உட்கிடை சைவசித்தாந்தமே'' என்ற சைவ அறிஞர் க.வச்சிரவேலு முதலியார் எழுதிய நூலின் தலைப்பை உற்று நோக்கினால் சைவசித்தாந்தத்தின் உட்கிடையும் திருக்குறளின் உட்கிடையும் ஒன்றே என்பதை அறியலாம்.

'ஒழுக்கம், அன்பு, அருள்' என்று தொடங்கும் சிவஞான சித்தியார் (சுபக்கம், 2ஆம் நூற்பா, 22) பாடல் சைவத்தில் ஒழுக்கம் இன்றியமையாதது என்று கூறும். சைவத்தில் உள்ள ஒழுக்கம் முதலிய 16 பேறுகளே முழுமையான பேறுகள் என்று சைவ அறிஞர் சித்தாந்த பண்டிதர் ப.இராமநாதபிள்ளை கூறுவர்.

சிவஞான முனிவர் 'ஒழுக்கம் முதலிய பதினாறும் மற்றவை போல்வனவுமாகிய நன்மைகள் ஒருவனுக்கு உளவாயின் இரங்குவானது பணியாகிய அம்முயற்சி அறமாய் முடியும். எனவே, இவ்வொழுக்கம் முதலியவற்றை மறுதலித்த தீமைகள் ஒருவனுக்குளவாயின், அம்முயற்சி பாவமாய் முடியுமென்பதூஉம் பெற்றாம். ஒழுக்கம் என்பது ஈண்டு உலகத்தோடு ஒட்ட ஒழுகுதலை. ஈண்டுத் துறவென்றது எல்லா நிலையினுஞ் சேரற்குரிய பிறர்மனை விழையாமை, வரைவின் மகளிர் விழையாமை முதலிய ஆண்டகைமையே என்று உணர்த்துவார். அழுக்கிலா என விசேடித்தார். அறிவாவது தக்கனவும் தகாதனவும் பகுத்தறிதல். "இனமலர் கையில் கொண்டு அங்கு இச்சித்த தெய்வம் போற்றி'' யெனப் பின்வருதலின் ஈண்டு வந்தித்தல் வணங்கல் அர்ச்சித்தல் என்பனதன்னின் மூத்தோர் மாட்டுச் செய்வனவற்றையெனக் கொள்க. இவ்வொழுக்கம் முதலியவெல்லாம் இயம, நியமமென்னும் இருவகையுள் அடங்கி அறஞ்செய்வார்க்கெல்லாம் பொதுவகையான் வேண்டப்படும் அங்கமாகலின் இவற்றை வேறெடுத்து ஓதினார். ஆகவே, ஒழுக்கம் அன்பு அருள் போன்றவை அங்க ஒழுக்கம் எனப்படும்.

"மனமது நினைய வாக்கு வழுத்த மந்திரங்கள் சொல்ல
இனமலர் கையிற் கொண்டங்கு இச்சித்த தெய்வம் போற்றிச்
சினமுதல் அகற்றி வாழும் செயல் அறமானால் யார்க்கும்
முனமொரு தெய்வம் எங்கும் செயற்கு முன்னிலையா மன்றே''

(சித்தியார், சுபக், 2ஆம் நூற்.24)

அவ்வொழுக்க முதலிய நன்மைகளையுடையவனாய் அவற்றை மறுதலித்த தீமைகளை நீக்கி ஒழுகுவான் ஒருவனுக்குத் தன் கருத்திற் கியைந்ததொரு கடவுளை மனமொழி மெய்களான் வழிபட்டு வாழும் செயலாகிய அறமும் உளதாயின் முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளாகிய சிவபிரானே, அத்தெய்வத்தின் இடமாக நின்று அச்செயலை ஏற்றுக்கொண்டு பயன் உதவும் என்பது இப்பாடலுக்குச் சிவஞான முனிவர் கொடுக்கும் பொழிப்புரை. மேற்கூறிய ஒழுக்க முதலிய அங்கங்கட்கு ஈண்டுக் கூறிய அறம் மனம், மொழி, மெய்களால் கடவுளை வணங்கல் அங்கியாகலின் உடன் எடுத்து ஓதினார். ஒழுக்கம் முதலிய பதினாறு அங்க ஒழுக்கம், (அங்கம் - பகுதி, அங்கி - அங்கத்தை உடையது. பகுதியை உடையது).

சிவஞான சித்தியார் சுபக்கத்தில் ஒழுக்கம் அன்பு அருள் என்று தொடங்கும் பாட்டுக்கு அடுத்து ‘மனமது நினைய’ என்னும் பாட்டு வருகிறது. இவ்விரண்டு பாக்களுக்கும் சிவஞான முனிவர் கொடுக்கும் அங்க ஒழுக்கம், அங்கி ஒழுக்கம் என்னும் விளக்கம் சித்தாந்த அறிஞர் க.வச்சிரவேலு முதலியார்க்கு திருக்குறள் கடவுள் வாழ்த்தில் ‘இருள்சேர் இருவினையும் சேரா’ என்ற பாடலை அடுத்து ‘பொறிவாயில் ஐந்து அவித்தான் பொய்தீர் ஒழுக்கநெறி’ என்று பாட்டு வருவதை எண்ணிப் பார்க்கத் தூண்டுகிறது.

‘இருள்சேர் இருவினையும் சேரா’ என்னும் குறளில் திருவள்ளுவர் வினை, வினையின் பயன், வினையின் பயன் வினையைச் செய்த உயிரை அடைய வேண்டும் என்னும் நியதி, வினையின் பயனிலிருந்து விடுபடுவதற்கு இறைவன் பொருள்சேர் புகழை விரும்பிச் சொல்லுதலே ஒரேவழி என்னும் நான்கு செய்திகளையும் (இந்தப் பாட்டில்) திருவள்ளுவர் ஒப்புக் கொள்கிறார். இறைவன் பொருள்சேர் புகழைப்புரிதல் என்னும் போதே திருமுறைகளைப் பொருள்தெரிந்து பாடுதல் என்பதாகிறது. சித்திரை மாத முதல் தேதியிலிருந்து பங்குனி கடைசி தேதிவரை பன்னிரு திருமுறைகளைப் பட்டியலிட்டு படிக்கும் மரபு சைவர்களால் இன்றும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அவ்வாறு பன்னிரு திருமுறைகளை ஓதியும் துன்பம் முழுமையாக நீங்கவில்லையே என்னும் ஏக்கமும் பிரார்த்தனையும் உண்டாகின்றன.

திருமுறை ஓதும் அன்பர் இறைவனின் பொருள் சேர் புகழ் புரிதலாகிய திருமுறைகளை ஓதியும் துன்பம் முழுமையாக நீங்கவில்லையே, இதற்கு என்ன பரிகாரம் என்று திருவள்ளுவரை திருமுறை ஓதும் அன்பர் ஐயத்துடன் கேட்கிறார். இக்கேள்விக்குப் பதிலாகவே,

“பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடு வாழ்வார்”

என்ற குறளைப் பதிலாக அளிக்கிறார். திருமுறைகளை ஓதுதல் பிறவி நோயைத் தீர்க்கும் மருந்து. ஒழுக்க நெறி நின்று திருமுறைகளை ஓதுதல் பத்தியத்துடன் கலந்து மருந்தை உட்கொள்வதைப் போன்றது என்ற கருத்து விளங்குகிறது.

இவ்வாறு கடவுள் வாழ்த்தின் ஐந்தாவது, ஆறாவது பாடலுக்கான உறவு திருக்குறளைப் பலமுறை படிப்பதனால் மட்டும் விளங்காது. திருக்குறள், திருமுறைகளை முதலில் பயில வேண்டும். இவற்றின் பொருளை உணரச் சைவ சித்தாந்த சாத்திரமாகிய சிவஞானபோதம் சிவஞான சித்தியார், சிவப்பிரகாசம் போன்ற சாத்திரங்களை ஓதவேண்டும். பிறகு மீண்டும் திருக்குறள், திருமுறைகளை ஓதினால் திருக்குறளில் பல்வேறு நிலைகளில் (Various dimension of meaning) பொருளை உணரத் திருவருள் கூட்டும். ஆகவேதான் திருக்குறளை, சைவசித்தாந்த உட்கிடையைப் புரிந்து கொள்ளப் பயிலவேண்டும்.

கடவுள் வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல் ஆகிய அறத்துப்பாலின் முதல் நான்கு அதிகாரங்கள் திருக்குறளின் முகத்தைக் காட்டும். நிலையாமை (34), துறவு (35), மெய்யுணர்தல் (36), அவாவறுத்தல் (37), ஊழ் (38) என்னும் அறத்துப்பாலின் இறுதி ஐந்து அதிகாரங்கள் திருக்குறளின் அகத்தைக் காட்டும். ஆக இந்த ஒன்பது அதிகாரப் பாடல்களைப் பொருள் உணர்ந்து ஒழுக்கத்துடன் பயில்வார் சைவநெறியின் நீர்மையைப் புரிந்து கொண்டு செயலாற்றும் வன்மை பெறுவர்.

சிவப்பிரகாசத்தில் இடம்பெற்றுள்ள நாலுவகை சத்திநிபாதங்களை மேலும் விரித்துக்கூறும் சிவானந்த மாலை, அதனையும் விரித்துக் கூறும் சத்திநிபாத அகவல் ஆகியவை சைவசித்தாந்தக் கருத்துகளின் வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டு. ஆய்வின் முன்னோடிகளாய்ச் சிலரை நம் சுவாமிகள் குறிப்பிட்டாலும் காஞ்சி ஞானப்ரகாச சுவாமிகள் (முத்து சு.மாணிக்கவாசக முதலியார்) அருளிய 'சிவப்பிரகாசம் மூலமும் உரையும்' என்னும் நூல் இவ் ஆய்வில் முதன்மையான இடம்பெறுவதை நாம் அறியலாம். சி.சு.மணி அவர்கள் தெளிவுரை செய்த சிவப்பிரகாசம் நூலின்படி சிவப்பிரகாசப் பாடல்கள் சந்தி பிரித்துக் காட்டப்பட்டுள்ளன என்பதை சுவாமிகள் குறிப்பிடுவதையும் நாம் நோக்கலாம்.

சிவப்பிரகாசம் பொது, உண்மை என இரு பிரிவாக உண்மைகளை விளக்குகிறது. பொது இயலில் காரண அவத்தைகளாகிய கேவல, சகல, சுத்த நிலைகள் விளக்கப் படுகின்றன. உண்மை இயலில் காரிய அவத்தைகளாகிய நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படக்கம் (சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம்) என்னும் ஐந்து நிலைகள் விளக்கப்படுகின்றன. ஒவ்வொரு அவத்தையிலும் செயல்படும் கருவிகள் சொல்லப்படுகின்றன. அவத்தை நிலைகளில் செயல்படும் கருவிகளைப் பிறசாத்திரங்கள் மேல் இருந்து கீழ் நோக்கிச் செல்லும் முறையில் கருவிகள் குறைந்து செயல்படுவதைக் கூற, சிவப்பிரகாசம் கீழிலிருந்து மேல்நோக்கிக் கருவிகள் கூடுவதைச் சொல்கிறது.

"ஞானம் இவன்ஒழிய நண்ணியிடும் நற்கல்அனற்
பானு ஒழியப் படின்" (திருவருட்பயன், *50*)

குருவின் அருள் இல்லாமல் சாதகனுக்கு ஞானம் விளையாது என்பதை திருவருட்பயன் 50வது பாடலில் உமாபதி சிவம் கூறுகிறார். குருவின் அருள் நமக்கு எவ்வாறு விளக்குகிறது என்பதை சிவப்பிரகாசம் 70ஆவது பாடலில் அதே ஆசிரியர் விளக்குகிறார்.

“மாயை மாமாயை மாயாவரும் இருவினையின் வாய்மை
ஆய ஆருயிரின் மேவும் மருளினில் இருளாய் நிற்கும்
மாயை மாமாயை மாயாவரும் இருவினையின் வாய்மை
ஆய ஆருயிரின் மேவும் அருளினில் ஒளியாய் நிற்கும்” (சிவப்.70)

“இங்ஙனம் கூறிய பாசநீக்கம் வந்தவிடத்து உயிர் அறிவில்
திருவருள் விளங்குங்கால் இந்த மாயை கன்மங்களும் அருளேயாம்”

என்பது சிவஞான முனிவரின் பொழிப்புரை.

இரண்டாவது அடியில் வரும் ‘ஆய’ என்னும் சொல் ‘அதுவாகவே ஆக’ என்னும் பொருளைத் தரும்படியும், நான்காவது அடியில் வரும் ‘ஆய’ என்னும் சொல் ‘ஆய்வு செய்ய’ என்னும் பொருளிலும் பயன்படுத்தப்படுகிறது. ஆய என்னும் ஒரு சொல்லோ இருவகைகளில் பொருள்தருமாறு பயன்படுத்தப்படுகிறது. குரு பக்குவத்திற்கேற்ப சீடனுக்குத் தீக்கை செய்யும்போது குருவின் அருளே ‘ஆய’ என்னும் சொல் ‘ஆய்வு செய்ய’ என்னும் பொருளில் பயன்பட உதவுகிறது. குருவின் இந்த அருளை முழுமையாகப் புரிந்து கொள்ளும் சீடன் அதற்கேற்ற நிலையில் ஒழுகி முழுமையான பயனை அடைகிறான்.

‘பக்குவம்’ என்பதன் விளக்கத்தையும் நாம் உரியவகையில் புரிந்து கொள்ள வேண்டும். உணர்த்துவான் உணர்த்தினாலும் முதலிலேயே நுண்பொருளை உணரமாட்டாது படிப்படியே உணர்ந்து வரும் தன்மையே பக்குவம். நுண்பொருளை உணர மாட்டாமையே ‘அபக்குவம்’ என்றும், அதனை உணரும் தன்மையே பக்குவம் என்றும் உணரப்படுகின்றன.

இக்கால அறிவியலின் படி பொது என்பது ஆராய்ந்து அறியப்படுவது என்றும், சிறப்பு என்பதை அநுபவத்தால் விளங்குவது என்றும் கொள்ளலாம். “Podu and Sirappu are two levels of cognition of reality; the former could be said to be empirical in the modern scientific sense and the latter is understood as transcendental which goes beyond the level of mere observation and prediction of the natural sciences.” (V.S.George Joseph, Centrality of self in Saiva Siddhanta, p.50)

ஒரு பொருளுக்கு அதன் தன்மையிலே இயல்பாய் என்றும் உள்ள இயல்பு ‘சிறப்பியல்பு’ எனப்படும். இத்தன்மை பொருளைவிட்டு நீங்குவதில்லை. வேறொரு பொருளின் சார்பு காரணமாக ஒரு பொருளின்கண் உண்டாகி அச் சார்பு நீங்கும்போது உடன் நீங்கும் இயல்பு ‘பொது இயல்பு’ எனப்படும். இத்தன்மை நிலையானதன்று. இவ்விரண்டு இயல்புகளும் முறையே “சொரூப இலக்கணம்” என்றும், “தடத்தலக்

கணம்" என்றும் சொல்லப்படும். 'இலக்கணம்' என்றாலும் 'இயல்பு' என்றாலும் ஒன்றே.

ஆன்மா மும்மலங்களில் கட்டுப்பட்டு நிற்கும் நிலை பெத்தநிலை. இது நீங்கும் தன்மை உடையது. முத்தியில் மும்மலங்களும் நீங்கும். முத்திநிலையில் ஆன்மா மீண்டும் மும்மலங்களோடு சேராது. ஆன்மாவிற்கு முத்திநிலை என்றும் நீங்காமல் இருப்பதாகும். என்றும் நீங்காத நிலை சகசம் எனவும், நீங்கும் தன்மையுடைய பெத்த நிலை ஆகந்துகம் எனவும் வழங்கப்படும். எனவே, சகசமாய் உள்ள முக்திநிலையே உண்மை இயல்பு. ஆகந்துகமாய் உள்ள பெத்த நிலையே பொது இயல்பு. ஒன்றாதல், வேறாதல், உடனாதல் என்ற மூன்று தன்மையும் ஒருங்கே தோன்ற நிற்கும் நிலையே அத்துவிதமாகும் என்பதே சைவசித்தாந்தம் கூறும் விளக்கம். சாத்திரங்கட்கு மிக முற்பட்ட காலத்தில் இக்கொள்கை தமிழரிடையே நிலவியது என்பதை,

"ஈறாய் முதல் ஒன்றாய் இரு பெண் ஆண் குண மூன்றாய்
மாறா மறைநான்காய் வருபூதம் அவை ஐந்தாய்
ஆறார் சுவை ஏழோசையொடு எட்டுத் திசை தானாய்
வேறாய் உடன் ஆனான் இடம் வீழிம் மிழலையே"

எனும் திருஞானசம்பந்தர் தேவாரத்தின் பொருள் வடமொழியிலோ வேறு மொழிகளிலோ இதுவரை காணப்படவில்லை என்று ஔவை. துரைசாமிப் பிள்ளை கூறுவர். இப்பாசுரக் கருத்தையே மெய்கண்டார் சிவஞானபோதத்தில் 'அவையே தானேயாய் நிற்கும்' என்று எடுத்தோதினார் என்பதை சுவாமிகள் நன்கு விளக்கியமைகிறார்.

சமயவாதிகள் கூறும் தத்துவங்கள் யாவும் சைவசித்தாந்தத்தில் ஒவ்வோரளவில் அடங்குவனவாக, சைவ சித்தாந்தத்தின் தனிஇயல்பு வேறாகும் என்பது விளங்கும்.

"When the scriptures teach non-duality (advaita) they (siddhanta) mean to deny not the existence of two, but the duality of the two; they say "They are not two", not 'There are not Two" என்று S.S. சூரிய நாராயண சாஸ்திரிகள் கூறுவது சங்கரர், மெய்கண்டார் ஆகிய இருவர் கொள்கைகளையும் நன்கு விளக்குகிறது. இங்கு 'இல்லை' என்பதற்கும் 'அல்ல' என்பதற்கும் வேறுபாடு உண்டு என உணரவேண்டும். 'இல்லை' என்பது இரண்டாவது பொருளையே மறுக்க வந்தது. 'அல்ல' என்பது இரண்டு பொருள்களுக்கு இடையே உள்ள வேற்றுமையை மட்டுமே மறுக்க வந்தது. இங்கு ஸ்வீடன் பர்க் என்பவர் கருத்தையும் சாந்திகுமார சுவாமிகள் இணைத்து விளக்குவது நமக்கு விளக்கமாக உள்ளது.

ஒரு பொருள் நிலை பெறுவதற்கு அதனோடு இறைவன் ஒன்றாய்க் கலந்து நின்றால்தான் அப்பொருள் நிலைபெறுதல் இயலும். எனவே இறைவன் ஒன்றாய்க் கலந்து நிற்றல் இன்றியமையாதது.

கண்ணொளி தானே உருவத்தைக் காணக்கூடிய ஆற்றல் உடைத்தன்று. அதனோடு கதிரொளி கலந்து காட்டுகிறபோது கண்ணொளி காணும் ஆற்றல் பெறுகிறது. கதிரொளியும் கண்ணொளியும் இணைகிறபோதுதான் காட்சி புலப்படுகிறது. பொருளைக் காண்பது கண்ணொளியே அன்றிக் கதிரொளி அன்று. எனவே, கதிரொளி கண்ணிற்குப் பொருளைக் காட்டுகிறது. இவ்வாறே உயிர் ஒரு பொருளை அறிகிறபோது, உயிரும் இறைவனும் பிரித்தறியாது இருப்பர். இத்தன்மையால் அவன் “தானேயாய்” இருக்கின்றான். உயிரின் அறிவை விளக்குவதற்கும் பிற பொருள்களை இயக்குதற்கும் இறைவன் “வேறாய் நிற்றல்” இன்றியமையாததாகிறது.

கண்ணொளி பொருளைக் காண்பதற்கு உயிர் அறிவும் உடனின்று காணவேண்டும். எனவே, உயிர் ஒரு பொருளை அறியுங்கால் இறைவனும் அதனோடு உடனிருந்து அறியவேண்டும். இத்தன்மையால் அவன் “அவையேதானேயாய்” நிற்கிறான். உயிர்கள் பொருள்களை அறிந்து நுகர்தற்கு இறைவன் ‘உடனாய்’ நிற்றல் இன்றியமையாததாகிறது.

“The Working process of combination of information from the two eyes in the brain is not so clear” (Barlow, 1972) என்பதன் மூலம் கண்ணொளியும் ஆன்மபோதமும் இணைந்து செயல்படும் செயல்பாட்டை உளவியலால் (Psychology) இன்றும் தெளிவாக விளக்க இயலவில்லை என்று அறியலாம். அதாவது அச்செயல்பாடு விரைவாகவும் நுட்பமாகவும் செயல்படுகிறது என்று உளவியல் கூறுவதை சாந்திகுமார சுவாமிகள் எடுத்தாள்வது அறிவியல் கருத்தோடு சைவ சித்தாந்தம் ஒத்து வருவதைக் காட்டுகிறது.

பரஞானம் அபரஞானம் என ஞானம் இருவகைப்படும்

“தத்ரா பரா ரிக்வேதோ யஜுர்வேத|:
ஸாமவேதோ அதர்வவேத:
சிக்ஷா கல்போ வ்யாகரணம் நிருக்தம்
சந்தோ ஜ்யோதிஷமிதி|
அத பரா யயா ததக்ஷரமதிகம்யதே||”

என்று அங்கிரஸ் சௌனகரிடம் உபதேசிப்பதாக முண்டகஉபநிடதம் (1:5) கூறும். அதாவது ரிக்வேதம், யஜுர் வேதம், சாமவேதம், அதர்வணவேதம், இலக்கணம், வானவியல் போன்றவை அபரஞானம். அழிவற்றவராகிய இறைவன் எந்த அறிவால் அடையப்படுகிறாரோ அது, பரம் - உயர்ந்தது; அக்ஷரம் - அழியாதது பற்றிய அறிவே உயர் ஞானமாகும்.

இவ்விரு ஞானத்தையும் அருள்நந்திசிவனார் ‘பதிபசு பாசம் தெரித்துப் பரசிவனைக் காட்டும் ஞானம்’ என்பர். பதிபசு பாசத்தைத் தெரிக்கும் ஞானம் அபரஞானம். பரசிவனைக் காட்டும் ஞானம் பரஞானம்.

"...... உயர்ஞானம் இரண்டாம் மாறா
மலமகல அகலாத மன்னு போதத்
திருவருள் ஒன்று; ஒன்று அதனைத் தெளிய ஓதும்
சிவாகமம் என்று உலகறியச் செப்பும் நூலே" (சிவப்.10)

என்னும் சிவப்பிரகாசத்தில் "மாறாமலம் அகல, அகலாத மன்னும் போதத் திருவருள் என்று பரஞானத்தையும், அந்தத் திருவருளைப் பெறுமாறு உதவுகின்ற சிவாகமங்கள் அபரஞானத்தையும் குறிக்கும்" என்று உமாபதி சிவனார் கூறுவர். சிவ ஆகமங்கள் தரும் அபரஞானமே பரஞானத்திற்கு வாயிலாகத் திகழ்வது. இப்பரஞானமே சிவத்தை விளக்குவது.

"இங்கிவை பொது இயம்பும் என்பர்கள் இதன்மேல் ஆன்மாத்
தங்கிய அஞ்சவத்தை தன்னுண்மை உணர்த்தும் தன்மை
பொங்கொளி ஞான வாய்மை அதன் பயன் புனிதன் நாமம்
அங்கதில் அணைந்தோர் தன்மை அறைகுவன் அருளினாலே"

இது சிவப்பிரகாசத்தின் 51ஆவது பாடல். இப்பாடலில் உள்ள பாகுபாடுகளைப் பொன்னேபோல் போற்றிக் கச்சியப்ப முனிவரும் திருத்தணிகையாற்றுப் படையில்,

"உயிரே அவத்தை உணர்த்தும் தன்மை
அருளின் இயல்பே ஆங்கதன் பயனே
பெரும்பெயர்த்திறமே பெற்றவர் முறை என்று
அனைவகை ஏழும் அரில்தபத் தெரிப்ப"

என்று அருளிச் செய்வர்.

இங்கு சிவப்பிரகாசம் கூறும் 'ஞானவாய்மை'யை 'அருளின் இயல்பு' என்றும், புனிதன் நாமத்தைப் 'பெரும் பெயர்த்திறம்' என்றும், 'அணைந்தோர் தன்மை'யைப் 'பெற்றவர்முறை' என்றும் கூறுவர் கச்சியப்ப முனிவர்.

திருமுருகாற்றுப்படை பழமுதிர்சோலைப் பகுதியில் முருகனைப் போற்றித் தமிழில் இருபத்தாறு மந்திரங்களை நக்கீரர் போற்றிப் பரவுகின்றார். அவற்றுள், 'அரும்பெறல் மரபில் பெரும்பெயர் முருக' என்பது பத்தொன்பதாவது மந்திரமாக இடம்பெறுகிறது. இங்கு முருகப்பெருமானைக் குறிக்கவரும் 'பெரும்பெயர்' என்ற தொடரையே 'பெரும்பெயர்த்திறம்' என்று சிவப்பிரகாசத்தில் உண்மைப்பகுதியை விளக்கும் முறையில் தணிகையாற்றுப்படையில் அருளிய திறம் நோக்கி மகிழத்தக்கது.

ஆன்மா சார்ந்ததன் வண்ணமாய் நிற்றலை "தற்றரும தருமி" என்னும் சொல்லால் ஆகமங்கள் கூறுகின்றன. தத் - அது; தருமம் - குணம்; தருமி - குணத்தை உடையது. எனவே 'தற்றரும தருமி' என்பதற்கு 'அதன் குணத்தைத் தன் குணமாக உடையது' என்பது பொருளாகும். இங்கு 'அது' என்பது ஆன்மாவால் கூறப்படும் பொருள். இவ்விளக்கத்தை ஆசிரியர் எடுத்துக்காட்டுவது எண்ணி மகிழ்தற்குரியது.

இவ்ஆய்வில் தசகாரியம் பற்றி சுவாமிகள் நன்கு விளக்கியுள்ளார். இருபத்து நான்கு பக்கங்களைக் கொண்ட இப்பகுதியை 'சிவப்பிரகாசம் காட்டும் தசகாரியம்' என்னும் தனி நூலாகவே வெளியிடலாம். இதில் வரும் தசகாரியச் செய்திகளைத் திருவாவடுதுறைப் பண்டார சாத்திரங்களின் கருத்துக்களோடு ஒப்புநோக்கி ஒருங்கே வைத்துள்ள தன்மை, பலகாலும் படித்துப் பார்த்து சிந்திப்பதற்குரியது. பண்டார சாத்திரங்களில் விளக்கப்பட்ட அநுபவ தாத்பர்யங்கள் சிவப்பிரகாசம் பயிலாது அறியத்தக்கதன்று.

இதுவரை வெளிவந்துள்ள சிவப்பிரகாசத்தின் ஒவ்வோர் உரையுளும் வெவ்வேறிடங்களில் உரைச்சிறப்பு வாய்த்திருத்தலின் அவற்றை ஒருங்கு வைத்து நோக்கி யுணர்ந்து 'ஒருபுதிய உரை' செய்து உலகுக்குதவுதல் சைவப்புலவர் கடனாகும். அது சிவப்பிரகாசத்தைக் கண்டு காட்டும் உபகாரமாய் அமையும் என்பது சுவாமிகளின் கருத்து.

நிறைவாக, இவ் ஆய்வையே 'ஒரு புதிய உரை'யாக வழங்கியிருக்கும் அ.வே.சாந்திகுமார சுவாமிகளைப் போற்றி மகிழ்கின்றேன்.

உமாபதி சிவனாரின் திருவடிகள் போற்றி

சென்னை - 33 **ச.கங்காதரன்**
10-07-2020

பதிப்புரை

உ
திருச்சிற்றம்பலம்
'திருமுறையே சைவநெறிக் கருவூலம்'
Cell : 98406-38813
திருமுறை அருட்பணி அறக்கட்டளை
பதிவு எண். 209/2004
எண். 7, பங்காரம்மன் தோட்டம், காஞ்சிபுரம் – 631 501.

திருவிளங்க! சிவயோக சித்தியெலாம் விளங்க! சிவஞான நிலை விளங்க! சிவ அனுபவம் விளங்க! சிற்றம்பலத்தே கூத்துவிளங்க! உரு உயிர் விளங்க! உணர்வு விளங்க! உலகமெலாம் விளங்க! கூத்தப்பெருமான் திருவருளால் காலத்திற்கேற்ப அருளாளர்கள் (அவதாரப் புருஷர்கள்) தோன்றுவர். இவர்கள்தான் வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவர்கள்.

திருமுறைகளையும் சாத்திரங்களையும் அருளிச்செய்த அருளாளர்கள் நிறைமொழி மாந்தர்களாக விளங்கியவர்கள். திருமுறைகள் நமக்கு இலக்கியம் வழி பக்தி உணர்வையும், சாத்திரங்கள் இலக்கண வழி மெய்யுணர்வையும் தரவல்லவை. இவற்றுள் தோத்திரங்கள் பெரும்பான்மையான அன்பர்கள் படித்தும், பயின்றும் பயன்பெறுகின்றனர். சாத்திரங்கள் சற்று ஆழ்ந்த சைவ நாட்டம் உடையவர்கள் நாடிச் சென்று ஞானாசிரியர்கள் துணையுடன் அறியமுயல்கின்றனர். இவ்வகையில் பதினான்கு சாத்திரங்களையும் கற்றுணர்வது என்பது யாவர்க்கும் எளியது அல்ல. அவற்றுள் ஒரு சிலவற்றையாவது அறிந்து மெய்யுணர்வு பெற அமைத்துக் கொள்வது வழக்கம்.

பதினான்கு சாத்திரங்களுள், எட்டு சாத்திர நூல்களை (சித்தாந்த அட்டகம்) அருளிச் செய்த அருளாசிரியர் அருள்திரு உமாபதிசிவம் ஆவார்கள். எட்டு நூல்களுள் சிவப்பிரகாசம் முப்பொருள் உண்மையை விளக்கியருள்கின்றது. அதாவது பதி - தானாக அறியும் பொருள், உயிர் - அறிவித்தால் அறியும் பொருள், பாசம் - அறிவித்தாலும் அறியாத பொருள் என்னும் இம்மூன்றும் என்றும் உள்ள பொருள்களாகும். இவற்றுள் உயிர் சடப்பொருளா சத்துப்பொருளா என்றால் சடமுமல்ல, சத்துமல்ல, தானாக அறியும் நிலை ஆன்மாவுக்கு இல்லையாதலால், அறிவித்து அறிவதால் சத்து. அதனால் ஆன்மா சடசத்து. ஆன்மாவும் சடப்பொருள்போல் அனுபவித்தாலும் அறியாத நிலையில் இருந்தால் இறைவனுக்கு வேலையில்லாமல் போயிருக்கும் அல்லவா? அறிவித்தால் அறியும் நிலையில் ஆன்மா இருப்பதனால்தான், ஆன்மாவை உய்விப்பதற்காக (கடைத் தேற்றம் பெற) இறைவன்

தானாகவும், தன்னடியார்கள் மூலமாகவும் உய்யும் வகை அருளுகின்றான். சந்தான குரவர்களுள் ஒருவராக விளங்கும் அருள்திரு உமாபதிசிவம் அவர்கள் அவதாரம் செய்து, நமக்கு வழங்கிய சாத்திர நூல்களுள் ஒன்றாக விளங்கும் சிவப்பிரகாசம் நூறு விருத்தப்பாக்களைக் கொண்டது. பாயிரம், பொது, உண்மை என மூன்று பகுதிகளாக உள்ளது. இவரது திருவருட்பயன் நூலும் சிவப்பிரகாசமும் இணைந்து செல்பவை. திருவருட்பயனில் அருளது நிலை முதல் இன்புறு நிலை வரை சொல்லப்பட்ட செய்திகளை சிவப்பிரகாசத்தில் ஞானவாய்மையும், அதன் பயனும் ஆகிய இரண்டில் சுருக்கமாகவும், தெளிவாகவும் கூறியுள்ளார்.

இவ்வகை இரண்டையும் அடிப்படை ஞானவழி எனக் கொண்டு - **சைவ சித்தாந்தக் கருத்துகளின் வளர்ச்சியும் தொடர்ச்சியும்** என்ற ஆய்வு நூலைச் செய்து உய்யும் வகைக்கு வழிவகுத்துள்ளார் இந்நூலாசிரியர்.

இந்த அரும்பெரும் ஆய்வுக்கருத்துக்களை, தம் நுண்மாண் நுழை புலத்தால் சித்தாந்த சைவத்தை எளிமையாக்கி சமைத்துத் தந்துள்ளவர். தவத்திரு முனைவர் அ.வே.சாந்திகுமார சுவாமிகள் ஆவார்கள். இவர் பாண்டிய நாடே பழம்பதியின் தலைநகரமாகவும், சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த பதியாகவும், திருவிளையாடல்கள் நிகழ்ந்த அருள்பூமியாகவும் விளங்கும் **மதுரையம்பதி** மண்ணின் மதிநுட்ப மைந்தராவார்கள்.

இவர்கள் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்குவதுடன், நூல் யாத்து எவர்க்கும் எளிய வழியில் எடுத்தியம்பும் அளப்பரிய ஆற்றலுடையவர். தோத்திரம், சாத்திரம், விஞ்ஞானம், மெய்ஞ்ஞானம், வானசாஸ்திரம், ஜோதிடம், நுண்கலை, ஆகமவிதி, வழிபாட்டுச் சீர்மை யாவையும் தம் அறிவின் களஞ்சியத்தில் கருத்துப் பேழைகளாக உடையவர் என்பதை இவரின் நூலினைப் படித்தவர்களும், சொல்லக்கேட்டவர்களும் வியந்து நோக்குவர். சிவப்பிரகாசம் என்னும் இந்த அருமையான ஆய்வு நூல் சைவர்களுக்குக் கிடைத்த மாபெரும் கொடை போன்றதாகும். இந்நூலின் ஆய்வு நிலையில் உமாபதி சிவனாரின் வாழ்வு முதல், இயற்றியுள்ள **புராணங்கள், கோவை, கலிவெண்பா, பஞ்சகம், வடமொழியில் குஞ்சிதாங்க்ரிஸ்தவம், பௌஷ்கர பாஷ்யம், ஸ்ரீநடராஜ நாமாவளி, மந்திரஸ்தவம் ஆகிய நூல்களின் வரிசையைக் குறிப்பிட்டுள்ளமை பெரிய அரிய செய்திகளாகும்.** மேலும் எட்டு சாத்திர நூல்களைத் தனித்தனி தலைப்பின் கீழ் நுண்ணிய கருத்துகளுடன் விளக்கியுள்ளார். நூலின் தொன்மை, புதுமை என்பவற்றின் நிறை குறை அமையுமாறு உள்ளவற்றை - காளிதாசர் இயற்றிய **'மாளவிகாக்னிமித்ரம்'** என்னும் நூல் முன்னுரையில் குறிப்பிடுவதை இங்கு ஆதாரப்படுத்தியுள்ளமை அரிய செய்தியாகும். **போற்றிப் பஃறொடை** நூலினை **'சாத்திரத்தில் தோத்திரம்'** என்று கூறலாம் என்ற ஆய்வுத்தொடர் சிந்தைக்கு ஒரு இன்ப ஊற்றாகும்.

'அத்துவிதம்' என்னும் சொல் 'இரண்டில்லை' என்றோ 'இரண்டன்மறுதலை' என்றோ பொருள்படலாம். 'இரண்டல்ல' என்றே பொருள்படும் என்பதற்கான விளக்கம் (பக்கம்.54) எளிமைப்படுத்தப்பட்டுள்ளமை அருமை. நால்வகை வாக்குகள் விவரித்துள்ளமை உரையின் உச்சமாக உள்ளது.

மாயேயம் விளக்குமிடத்து, தத்துவங்கள் தோன்றும் முறை அவை விரியும் முறைகள் (ப.163) தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

'சிந்தை நினைவு, ஐயம் வந்து தரும் மனம்' என்னும் சிவப்பிரகாசத் தொடரை 'சிந்தை நினைவு வந்து ஐயம் தரும்' என்று மாற்றிப் பொருள் கொள்ளவேண்டும் போன்ற அரிய சிந்தனைகள் நமக்கு ஞான விளக்கம் தருகின்றன. மாயா வாதத்துள் (சங்கற்பத்தை) விவேகமுத்தி எனப்படுவதை "பந்தம் அது அகல முந்து விவேகம்..." என்னும் பாடலால் (ப.212) உமாபதி சிவம் மாயாவாதத்தின் விவேக ஞானம் குறித்து மறுதலை செய்வார். இதனை உரையாசிரியர் எடுத்து எளிமைப் படுத்தியுள்ளமை தனிச்சிறப்பாகும். பசுவின் அறிவு, சிற்றறிவு - சிற்றுணர்வு - சுட்டறிவு என்று சொல்லப்படும் நிலையினை உடையது. இக்கூறுகள் உயிர், அறிவிக்க அறியும், தன்மையுடையது என்பதற்கு 'அறிவுளதாகும் உருஉறும் உயிர்கள்' என்று ஈசுவர அவிகாரவாதி சங்கற்பம் என்ற தொகுப்பிலிருந்து மேற்கோள் காட்டியுள்ளமை வியக்கத்தக்க செய்தியாய்க் காணமுடிகிறது.

இத்தகைய அரும்பெரும் செய்திகளை ஆய்வின் அடிப்படையில் உரையாக அமைத்து, செம்மாந்த புலமை நயத்துடன் வழங்கியுள்ளமை, ஆலவாய் அண்ணலின் அருட்கருணையே நூல் ஆசிரியருக்கு உற்றதுணையாக அமைந்திருக்கிறது என்பதில் ஐயமில்லை. இத்தகைய அரிய நூலினைப் பாண்டியநாட்டில் யாத்து, தொண்டை நாட்டின் தலைநகராக விளங்கும், கல்வியிற் கரையிலாத காஞ்சி மாநகரில் வெளியிடத் திருவருள் அன்னவர்க்கு உணர்த்தியமை, திருவேகம்பனின் அருளாகும்.

அதிலும், காஞ்சி மாநகரில் திருமுறை, சாத்திரம், தமிழ்ப்பணி, சமயப்பணி, சமுதாயப்பணி எனத் தொண்டாற்றி வரும் திருமுறை அருட்பணி அறக்கட்டளையின் வாயிலாக இந்நூல் வெளிவரக் கருதி முடித்தமை, காஞ்சி மக்கள் பெற்ற பேறாகும். சைவ உலகம் போற்றும் வண்ணம் இச்செயல் அமைகிறது. அறக்கட்டளையின்பால் அளப்பரிய அன்பும் ஆதரவும் காட்டிவரும் சுவாமிகள், அறக்கட்டளையில் சமயப் பணிகளுள் எண்ணி மகிழத்தக்க நிலையில் இந்நூல் வெளியீடு அமைந்துள்ளது. இந்நூலினைப் பெற்றுக் கற்று உணர்ந்து ஆன்ம சுத்தி பெற்று அருளனுபவத்தில் திளைக்க வேண்டும் என்பதே நம் நோக்கமாகும். இதற்கு எல்லாம் வல்ல திருவேகம்பப் பெருமானின் திருவருள் முன் நிற்க வேண்டிப் பிரார்த்தித்துக்கொண்டு,

சுவாமிகள் பொன்னார் திருவடிகளை வணங்கி, இப்பதிப்புரை வழங்கிட எளியேனிடம் பணித்தமைக்கு நன்றியினைச் சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

வணக்கம்

இங்ஙனம்,

சு. சதாசிவம்

நிறுவனர்

திருமுறை அருட்பணி அறக்கட்டளை

7, பங்காரம்மான் தோட்டம், காஞ்சிபுரம்.

காஞ்சிபுரம்,

நாள்: 24.05.2021

என்னுரை

அருள்மிகு உமாபதி சிவனார்

ஓங்கொளியாய் அருள்ஞான மூர்த்தி ஆகி
உலகமெலாம் அளித்தருளும் உமையம்மை காணத்
தேங்கமழும் மலர்இதழி திங்கள் கங்கை
திகழ்அரவம் வளர்சடைமேல் சேர வைத்து
நீங்கலரும் பவத்தொடர்ச்சி நீங்க மன்றுள்
நின்று இமையோர் துதிசெய்ய நிருத்தம் செய்யும்
பூங்கமல மலர்த்தாள்கள் சிரத்தின் மேலும்
புந்தியினும் உறவணங்கிப் போற்றல் செய்வாம் (சிவ.2)

சைவம் வாழ மதுரை மாநகருக்கு எழுந்தருளிய திருஞானசம்பந்தப் பெருமான் திருநீற்றுப்பதிகம் பாடி பாண்டிய மன்னனின் வெப்புநோயைத் தீர்த்தருளினார். ஆனால், சமணர்கள் தர்க்கவாதம் புரிவதை விடுத்து, அனல்வாதம், புனல்வாதம் செய்ய அழைத்தனர். அவரவர் சமய உண்மையைக் கண்முன் காட்ட வேண்டும் என்பதே நிபந்தனை. திருஞான சம்பந்தப்பெருமானும் அதற்கிசைந்தார்.

முதலில் அனல்வாதம். தாம் அருளிய திருப்பதிகச் சுவடியைக் கொண்டுவரச் செய்து வழிபட்டு அதனை விரித்தருளினார் சம்பந்தப்பெருமான். ‘போகமார்த்த

பூண்முலையாள்' என்ற திருநள்ளாற்றுப்பதிகம் கிடைத்தது. அத் திருப்பதிக ஏட்டினை அனலில் இட்டு, இறைவன் திருவருளை வேண்டித் 'தளிரிள வளரொளி' என்னும் திருப்பதிகம் பாடினார். அவ்வேடு தீயில் எரியாது பச்சென்றிருந்தது. "எரி இடில் இவை பழுதிலை மெய்ம்மையே" (3:87) அது முன்னையிலும் பச்சென்றிருந்த காரணத்தால் 'பச்சைத் திருப்பதிகம்' எனப் போற்றப் பெறுவதாயிற்று.

அடுத்து புனல்வாதம். சம்பந்தப் பெருமான் வைதிக சைவ சமய உண்மையைச் சமணர்கள் உணரமாட்டாராயினும், அரசன் அதனை உணர்ந்து உய்யப் பக்குவம் எய்தி நின்றமையால் அவனுக்கு உணர்த்தவே, 'வாழ்க அந்தணர்' எனத் தொடங்கும் பதிகத்தை அருளிச்செய்தார். அதன்கண் சைவ சமய உண்மைகளை எல்லாம் எடுத்து பொதிந்து வைத்தருளினார். அதுவே தமிழில் சைவ முதல் உண்மைச் செய்யுள். இப்பதிகம் மட்டும் பன்னிரண்டு திருப்பாடல்களை உடையது. சம்பந்தப் பெருமானின் திருஅவதாரத்தின் பயன் அப்பதிகமே எனலாம்.

அப்பதிகத்தை ஒரு திருவேட்டில் எழுதுவித்து அத்திருவேட்டினைத் தமது திருக்கரத்தினாலே ஆற்றில் இட்டார். ஏடு வைகையாற்றைக் கிழித்துக் கொண்டு எதிர் ஏறிச் சென்றது. ஏடு நின்ற இடம் ஏடகம் எனப்பெற்றது. அதுமுதல் இத்திருப்பதிகம், 'திருப்பாசுரம்' என அழைக்கப்பட்டது. "பல்லார்களும் மதிக்கப் பாசுரஞ் சொன்ன பத்தும்" என்பது திருக்கடைக்காப்பு,

"வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாம்அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே" *(3:54:1)*

சேக்கிழார் பெருமான் இத்திருப்பாசுரத்தை, பக்குவ ஆன்மாக்களுக்கு 'வேதநெறி சைவநெறிகளின் மெய்ப்பொருள் விளக்கமாகிய ஞானோபதேசம்' என்று குறிப்பிட்டு அப்பாசுரத்தின் உறுதியும் தெளிவும் பொருளின் ஆழமும் விரிவும் அழகும் கருதி இருபத்து நான்கு பாடல்களால் விளக்கம் செய்து துதிக்கின்றார். அவை இருபத்து நான்கு அட்சரங்களை உடைய சிவசூரியனின் காயத்திரியைப் போல விளங்குகின்றன. அங்ஙனம் இருந்தும்,

"வெறியார் பொழிற் சண்பையர் வேந்தர் **மெய்ப்பாசுரத்தைக்**
குறி ஏறிய எல்லையறிந்து கும்பிட்டேன் அல்லேன்
சிறியன் அறிவுக்கு அவர்தந் திருப்பாதம் தந்த
நெறியே சிறிது யான் அறிநீர்மை கும்பிட்டேன் அன்பால்" (பெரிய.புரா.2743)

என்று பணிமொழி கூறினர் எனில் திருப்பாசுரத்தின் பெருமையை எவ்வாறு எடுத்தியம்புவது? (மெய்ப்பாசுரம் - உண்மைப் பொருணிலை காட்டும் பதிகம்).

மேலும், ஒவ்வொரு பாட்டின் உரை முடிகின்ற நிலை குறிப்பதற்கு சம்பந்தப் பெருமான் பொழிந்தனர், அருளினர் எனப் பன்னிரண்டு பாட்டுகளில் சம்பந்தப் பெருமானின் திருப்பெயரைப் பன்னிருவகையாகக் கூறுகின்றார் சேக்கிழார் பெருமான். புறத்தே ஒளிதரும் சூரியர்கள் பன்னிருவர் ஆதலின் அக்குறிப்புப்பட **சிவப்பிரகாசம் தரும் ஞானசூரியராகிய சம்பந்தப் பெருமானை** அவ்வகையிலேயே போற்றிச் சிறப்பித்தார் எனலாம்.

இறைவர்பால் உணர்வரிய மெய்ஞ்ஞானம் பெற்ற ஞானாசிரியர் அருளிய ஞான உபதேசத்துக்கு அவ்விறைவரது 'மெய்ம்மொழி' பெற்ற ஆசிரியர் சேக்கிழார் பெருமான் உரைவகுத்தருளிய பெருமை பெற்றது இத் 'திருப்பாசுரம்'. அதனால்தான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை சேக்கிழார் பெருமானை, 'நகுபாசுரமுதல் உரை செய்தலினால் நல்ல உரையாசிரியர்' என்பார். இன்றளவும் இப்பதிகத்திற்குச் சேக்கிழார் பெருமான் விளக்கியருளிய உரைக்குறிப்பே போற்றப்பெறுகிறது.

சேக்கிழாருக்குப்பின் யாரும் தேவாரத் திருப்பாடல்களை அவர் வழியாகவன்றிக் கற்க முடியாது எனுமளவிற்கு, சேக்கிழார் பெருமான் தேவாரத்தோடு முழுமையாக ஒன்றியிருக்கிறார் (Cekkilar is entirely incorporated in to the Thevaram and nobody after him has been able to read it except through him) என்று கருதுவர் பிரெஞ்சு மொழியியல் வல்லுநர் (Lingustic) ப்ஃராங்சுவா க்ரோ (Francois Gros).

வைகைக்கரையில் ஞானாசிரியரான சம்பந்தப் பெருமானிடத்தில் பக்குவமுற்ற நன்மாணாக்கன் ஆகிய பாண்டிய மன்னன் பாசுரம் வழியாக 'மெய்ஞ்ஞான' உபதேசம் பெற்றான். இதனால்தான் இத்திருப்பாசுரத்தை அருள்நந்தி சிவனார் 'மன்ற பாண்டியன் கேட்பக் கிளக்கும் மெய்ஞ்ஞானம்' என்றே போற்றுகிறார்.

சிவஞான போதத்திற்குப் பேருரை தந்த மாபாடியம் உடையாராகிய திருமாதவச் சிவஞான யோகிகள் பாடியத்தைத் தொடங்குங்கால் தாம் செய்யும் கடவுள் வணக்கமாக முதற்கண் மெய்ஞ்ஞான விளக்கமாக அமைந்த 'வாழ்க அந்தணர்' என்னும் திருப்பாசுரத்தின் முதற்பாடலையும், அதன்பின் திருவாசகத்தின் முதற்பாட்டாகிய சிவபுராணத்தில் 'நமசிவாய வாழ்க' முதல் இருபது அடிகளையும், அதன்பின்னர் 'அகரமுதல' என்னும் திருக்குறளையும், அதன்பின் தில்லைக் கற்பக விநாயகருக்குப் 'பொற்பொது' எனும் குறளையும், குருமரபு வாழ்த்தாகக் 'கயிலாய பரம்பரை' விருத்தத்தையும் செய்த பின்னரே தொடங்கினார் என்பது நம் மனங்கொள்ளத்தக்க அருட்செய்தியாகும்.

“இப்பாசுரத்தின் பன்னிரண்டு திருப்பாட்டுகளும், சிவாகமங்களின் ஞானபாத முடிபாய்ச் சிவஞானபோதத்துள் வடித்தெடுத்துக் காட்டப்படும் பன்னிரண்டு சூத்திரங்களின் கருத்துகளையும் எடுத்துக்காட்டும் சிறப்பினை உடையது. பொது சிறப்பு என்ற இருதன்மைகளைக் காட்ட முதன்மூன்று பாட்டுகள் ஒரு யாப்பும் சந்தமும் ஆகவும், ஏனையவை வேறுயாப்பும் சந்தமுமாகவும் இருபிரிவினதாயமைந்த சிறப்புடையது. இவ்வாறு இரண்டு இயலின் அமைந்த திருப்பதிகம் இஃதொன்றேயாம். இவ்வியல்பினை இப்பாசுரத்திற்குப் பேருரை செய்தருளிய சேக்கிழார் பெருமானும் இவ்விருவகை யாப்பினால் அமைத்தருள்வதும் காண்க. (1) பரசமயம் நிராகரித்து (2) நீறு ஆக்கும் காதலனைப் பெற வரங்கிடந்து பெற்ற சிவபாத இருதயரின் வரம் ஒருங்கே நிறைவேறிய சிறப்பு இத்திருப்பதிகத்திற்குரியது. இன்னும் இவ்வாறு எண்ணுதற்குமரிய பற்பல சிறப்புகளைக் கண்டு கொள்க” என்பார் சிவக்கவிமணியவர்கள் (திருத்தொண்டர் புராணம், ஐந்தாம் பகுதி, பக்.1007–1008).

“இலக்கியம் கண்டு அதற்கு இலக்கணம் இயம்பலின்’ என்பது நன்னூற்பா. பன்னிரண்டு திருமுறைகளும் பொருளால் சிவநெறி இலக்கியங்கள் என்றாலும் தமிழ் இலக்கணங்கட்கும் இலக்கியம் ஆகின்றன.

வேத சிவாகமங்களாகிய இலக்கணங்கட்கு திருமுறைகள் பிற்கால இலக்கியங்களாகவும், சித்தாந்த சாத்திரங்கள், மெய்கண்ட நூல்கள், பொருளால் அவற்றோடு ஒத்த பிறநூல்களும் ஆகிய சிவநெறி இலக்கணங்கட்கு, திருமுறைகள் முற்கால இலக்கியங்களாகவும், சிவநெறித் தெளிவு இலக்கியங்களாகவும் திகழ்கின்றன என்பார் மகாவித்துவான் சி.அருணைவடிவேல் முதலியார்.

இவ்வகையில் மூல இலக்கியங்கள் செய்தருளிய திருஞான சம்பந்தப் பெருமானின் இத் திருப்பாசுரமே சைவசித்தாந்தத்தின் உண்மைப் பொருணிலையைக் காட்டும் இலக்கியமாகத் திகழ்கிறது எனலாம்.

சைவ சித்தாந்தப் பொருணிலையை விளக்கிக் காட்டும் சித்தாந்த சாத்திரங்களில் அருளாளர்களால் சிறப்பித்துக் கூறப்படுவன பதினான்கு நூல்கள் ஆகும். அவற்றுள், சிவஞானபோதம், சிவஞானசித்தியார், சிவப்பிரகாசம் ஆகிய மூன்றும் **‘சைவத்தின் ப்ரஸ்தான த்ரயங்களாக’** விளங்குகின்றன எனலாம்.

சிவபரம்பொருளை உணர்தற்குரிய மெய்யறிவு (சிவஞானபோதம்) மிகின் சிவஞானம் சித்திக்கும் (சிவஞான சித்தியார்). அச்சிவஞானம் கைவரப்பெற்றார்க்கே சிவம் பிரகாசிக்கும் (சிவப்பிரகாசம்). இம்மூன்று நூல்களும் தம் பெயரானே ஒன்றன்பின் ஒன்றாய் உணர்ந்து அருள்நெறி கைவரப் பெறுவதற்குரிய உண்மையைப் புலப்படுத்தி நிற்றல் ஈண்டு அறிந்து மகிழத்தக்கதாகும்.

*

(1) “வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தத் திறன்”, (2) “கிரியை என மருவும் அவை யாவும் ஞானம் கிடைத்தற்கு நிமித்தம்”, (3) “மருவியிடும் உயர்ஞானம் இரண்டாம் மாறா மலம் அகல அகலாத மன்னு போதத் திருவருள் ஒன்று; ஒன்று அதனைத் தெளியவோதும் சிவாகமம்” (4) “பலகலை ஆகமம் வேதம் யாவையினும் கருத்துப் பதிபசு பாசம் தெரித்தல்”, “(5) “ஏற்ற இவை அரன் அருளின் திருவிளையாட்டாக இயம்புவார்கள்”, (6) “இருள்ஒளிர இருண்ட மோகமாய்... அறிவு முழுதினையும் மறைக்கும்” (7) “உற்ற தொழில் நினைவு உரையின் இருவினையின் உளவாம் ஒன்று ஒன்றால் அழியாது”, (8) “உன்னரிய திருவருளை ஒழிய மலம் உளது என்று உணர்வு அரிதால் அதன் உண்மை தெரிவரிதாம் உனக்கே”, (9) “இகலிவரும் இவை உணரில் இருள்வெளியாம் தன்மை”, (10) “மயில் அண்டசலம் நேர் சிந்தைதனில் உணர்வாகும்” (11) “முற்சினம் மருவு திரோதாயி கருணை ஆகி திருந்திய சத்திநிபாதம் நிகழும் அன்றே” (12) “நீடிய கேவல சகலம் நிகழாவாறு நிறுத்தி மலம் அறுக்கும் அது நிலையார் சுத்தம்”, (13) “திரிமலமும் அகல உயிர் அருள்சேர் முத்தி”, (14) “அசத்தைச் சத்துடன் நின்று நீக்கும் தன்மையால் சதசத்து ஆமே”, (15) “தத்துவ வன்னரூபன்”, (16) “ஈட்டிய தவத்தினாலே இறையருள் உருவாய் வந்து கூட்டிடும்” (17) “நன்னலம் பெற நிறைந்த ஞானமே ஞானம்”, (18) “மருள்எனில் இருளாய் நிற்கும்; அருள்எனில் ஒளியாய் நிற்கும்” (19) “பாசமது அகல ஞானம் பற்றல்”, (20) “தான் பணியை நீத்தல்”, (21) “ஏசில்நேயத்து அழுந்துதல்”, (22) “மன்னிட வியாபியாய வான்பயன் தோன்றும்”, (23) “தற்பரம் ஆகி நிற்றல் சாக்கிராதீதம் தானே”, (24) “ஒன்றி நின்று உணரும் உண்மைக்கு உவமை ஆணவத்தொடு ஒன்றே”, (25) “ஒளியின் முன்னர் அழிந்திடும் இருளும் நாசம் அடைந்திடா மிடைந்திடாவே”, (26) “ஏகத் தொன்மையில் துகள் இலாரே”, (27) “அகம்புறம் எனாத செம்மையார் நன்மையாரே”

நுண்மையும் சுருக்கமும் ஒளியுடைமையும் மென்மையும் கொண்ட இந்த சித்தாந்த நுண்தொடர்கள் சாத்திரம் பயில்வார் செவிவழிப் புகுந்து நெஞ்சில் அருளாய் நிற்கும் அனுபூதி வாசகங்கள். இவ்வனுபூதி வாசகங்களைத் தன்னிடத்தே கொண்டு திருவருட் பிரகாசமாய்த் திகழ்வது **“உமாபதி சிவனார் அருளிய சிவப்பிரகாசம்”**. ஒரு சாத்திர நூலில் இவ்வளவும் அடங்கிய பெருமையைப் பேசுவது என்பது பொன்னுக்கு வெள்ளி பூசினாற்போலாகும்.

*

“சொற்றகு முதல்வழித் தொன்மை நூன்முறை கற்றொளிர் சிவப்பிரகாச நூல்புகல் கொற்றவன் குடிவரு குரவன் எம்மையாள் நற்றவன்” பதம் பணிந்து முதற்கண் என் பணிவான வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். இவ் ஆய்வுக்கு அவரருளிய அருளின்திறம் என்றும் நினைந்து போற்றற்குரியது.

இந்நூலுக்கு ஆசியுரை வழங்கிச் சிறப்பித்துள்ள, தருமையும் கமலையும் விரிதமிழ்க் கூடலும் திருநகராக அரசு வீற்றிருந்து மேன்மைகொள் சைவநீதி உலகமெலாம் விளங்கப் புரந்தருளும் **தருமையாதீனம் 27ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின்** பொன்னார் திருவடிக் கமலங்களை வணங்கிப் போற்றி மகிழ்கிறேன்.

'குருவை வழிபடின் கூடலும் ஆமே' என்னும் திருமந்திர மொழியின்படி, திருநெல்வேலியுறை செல்வர், தருமைக் குருமணிகளின் குருவருளும் திருவருளும் ஒருங்கே பெற்றுத் துவராடை பூண்டு **ஸ்ரீமத் மீனாட்சி சுந்தரத் தம்பிரானாகப்** பெருமான் திருவடி சுமக்கும் அருளினர் ஆனார். தருமையில் அருட்பணியாற்றி வரும் அவர்களுக்கும் 'அன்பின் வழிவந்த கேண்மை'யில் என் மனமார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

இவ்ஆய்வைச் செய்வதால் அது சித்தாந்தத்திற்குச் செய்யும் கொடையாக அமையும் என்று கூறி ஆய்வின் வளர்ச்சியை அவ்வப்போது கேட்டு மகிழ்ந்து இந்நூலை முழுதும் ஆராய்ந்து வாழ்த்துரையை நூலின் மதிப்புரையாக வழங்கிய என் சித்தாந்தப் பேராசிரியர், "தோத்திர சாத்திரங்களை மனனுறப் பெற்றவர்" **முனைவர் ச.கங்காதரன்** அவர்களுக்கு என் இதயம் கனிந்த நன்றி.

சந்திக்கும் பொழுதெல்லாம் சித்தாந்தத்தில் ஏற்படும் ஐயங்களைத் தகுந்த நூல்களின் ஆதாரங்களோடு தெளிவித்து உதவும் 'மெய்காண் திருவினார்', "சித்தாந்த சரபம்" பேராசிரியர் **முனைவர் ஆ.ஆனந்தராசன்** அவர்கள் மனமுவந்து அணிந்துரை நல்கியுள்ளார்கள். அவர்களுக்கு என் நெஞ்சம் நிறைந்த நன்றி.

என் மீது கெழுதகை அன்பைப் பொழிந்த தமிழாகரர் **முனைவர் ச.சாம்பசிவனார்** அவர்கள் என் ஆய்வுக்கு வளமும் நலமும் சேர்த்தவர்கள். அவர்களையும் இச்சமயத்தில் நினைந்து நன்றி கூறுகிறேன்.

நான் யார்? என் உள்ளம் யார்? எனும் திருவாசகத்தின் பக்தி மொழியின் படி என்னை சாகித்திய அகாதெமிக்கு அறிமுகம் செய்து நூல்கள் எழுதுமாறு வேண்டி என்னைப் பணிகொண்டு அன்பு பாராட்டிய அருமைப் பேராசிரியர் **முனைவர் இரா.மோகன்** அவர்களை இத்தருணத்தில் நீள நினைந்து நன்றிகளைச் சமர்ப்பிக்கிறேன்.

'கற்றல் கேட்டல் உடையார் பெரியார்' என்று பாலறாவாயரின் மந்திர மொழிக்கு எடுத்துக்காட்டாகத் திகழும் **மயிலைப் பெரியவர் ஐயா ம.சி.நித்தியானந்தம்** அவர்கள்; சைவத்திறம் போற்றும் மயிலைச் சின்னண்ணன் குடியில் பிறந்தவர்கள். சைவ சித்தாந்தத்தின் தெளிபொருள் விளக்கங்களைத் திருமுறைகள் மூலமாக நுனித்துணர்ந்த நுண்மைசால் அறிஞர். இந்நூலினை ஆய்வேட்டின் நிலையிலே

பார்த்து மகிழ்ந்து வாழ்த்தினார்கள். அவர்களையும் இந்நூல் வெளியிடும் இத்தருணத்தில் என் நெஞ்சத்தில் நினைத்து நன்றி மலர்கள் தூவி வணங்கி மகிழ்கிறேன்.

'உரையும் பாட்டும் உடைய' **மகாவித்துவான். மா.அமிர்தலிங்கம் ஐயா** அவர்கள் எனக்குக் காஞ்சியில் கிடைத்த சித்தாந்த பொக்கிசம். சிவப்பிரகாச ஆய்வைப் பற்றி அடிக்கடி கேட்டு, சிவப்பிரகாசத்தின் 48ஆம் பாடலுக்கு நேரடியாக உரைவிளக்கம் சொல்லியருளினார்கள். இந்நூலின் வழியாக அவர்களுக்கும் என் நன்றி கலந்த வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கொள்ளுநர் கொள்ளக் குறையாது அறம் செய்யும் அன்னை அருட்காஞ்சியில் சைவமும் தமிழும் தழைத்தோங்கத் தொண்டாற்றிவரும் 'புனிதர் பேரவை'யான திருமுறை அருட்பணி அறக்கட்டளை நிறுவனர், 'நன்றறி யுள்ளத்துச் சான்றோர்', **சமயச்செம்மல் சு.சதாசிவம் அவர்கள்,** என்பால் கொண்ட பேரன்பு காரணமாக, அறக்கட்டளை மூலம் இந்நூலை வெளியிடுகிறார்கள். அவர்களுக்கும் என் நெஞ்சகத்து நன்றி.

தொடர்ந்து நான் வெளியிடும் நூல்களின் கையெழுத்துப் பிரதிகளைத் திருத்தி உதவிய, சென்னைப் பட்டாபிராம் இந்துக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் 'நினைப்பின் இனியர்' **முனைவர் அ.நாகலிங்கம்** அவர்களுக்கு என் அன்பின் நன்றி.

இந்நூலைப் படித்து ஒழுங்கமைத்துக் கொடுத்த என் மேனிலைப் பள்ளித் தமிழாசான் 'நகைசால் வாய்மொழித் தமிழ்சால் தோன்றல்' **புலவர் கி.வேலாயுதன் ஐயா** அவர்களுக்கு என் மனமிகு நன்றிகள்.

திருமுறை அருட்பணி அறக்கட்டளை ஆண்டுதோறும் நடத்தும் சைவ சித்தாந்த வகுப்பில் நான் பெரிதும் உவந்து போற்றும் "சொல்வலை வேட்டுவர்கள்", "சித்தாந்தப் பேராசிரியர்"கள் **பேராசிரியர் முனைவர் டி.பி.சித்தலிங்கையா, தமிழாகரர், பேராசிரியர் முனைவர். அருணை. பாலறாவாயன், சைவநன்மணி, புலவர் சரவண.சதாசிவம், பேராசிரியர் முனைவர். மு.சிவச்சந்திரன், திருவாவடுதுறை ஆதீனப் புலவர் சு.குஞ்சிதபாதம், பேராசிரியர் முனைவர் அமுத.இளவழகன்** ஆகியோர் தொடர்பிற்கும் நட்பிற்கும் என்றென்றும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

ஈன்ற பொழுதினும் பெரிதுவந்து இந்நூலைப் போற்றி மகிழும் என் அன்னை **திருமதி அ.வேலம்மாள் அண்ணாமலை**யின் திருத்தாள் போற்றி வணங்குகின்றேன்.

இவ்ஆய்வுக்கு என்னுடன் ஒத்துழைத்தும், உற்றுழி உதவியும், எழுதிய கையெழுத்துப் பிரதிகளை முதலில் படித்துப் பார்த்தும், கருத்துகளையும் தெரிவித்த என் அன்புச் சகோதரிகள் திருமதி. **பாலாமணி பாண்டியன்,** திருமதி. **லோகநாயகி**

பிரான், திருமதி. **ஜெயலெட்சுமி நாகராஜ்,** திருமதி. **பொன்மலர் ரகுநாதன்** ஆகியோர்களுக்கும், 'நிழலினும் போகாப் புதல்வர்' அன்பு **பா.தத்தாத்ரேயன்,** அன்பு **பி.ஸ்ரீசாயிகாயத்ரி,** அன்பு **நா.லலித்சாய் சங்கர்** ஆகியோருக்கும் என் நன்றி.

என் உடன்பிறந்தவராய் அன்பு காட்டும் உதவி ஆணையர் (ஓய்வு) **எம்.கணேசன்** அவர்களுக்கும், பல்கலைக்கழகப் பணியில் எனக்குப் பலவகையிலும் உதவிய பாசமிகு **சி.பால்ராஜ்** அவர்களுக்கும், நவில்தொறும் நூல்நயம் போலும் பண்பு பாராட்டுகின்ற சட்ட அதிகாரி, தென்னக இரயில்வே (ஓய்வு) மற்றும் சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் **ப.ராஜசேகரன்** அவர்களுக்கும், இவ்ஆய்வுக்கு சித்தாந்த நூல்களை அனுப்பித் தந்த ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் பக்தர் சென்னை **வே.அருணன்** அவர்களுக்கும், திருப்பனந்தாள் கலைக் கல்லூரி நூலகர் அன்பு **ச.அ.சம்பத்குமார்** அவர்களுக்கும், என்மீது பாசத்திற்குரிய நேசம் பாராட்டும் மதுரைத் திருவள்ளுவர் மன்றத் தலைவர் **க.இராசேந்திரன்** அவர்களுக்கும், என்னைக் குருவாக வணங்கிப் போற்றும் திருமதி **பெ.பாண்டிராணிக்கும்,** என்னைத் தந்தையாய் பாசம் காட்டி மகிழும் அன்புப் பிள்ளைகள் திருமதி **சி.மோகனப்பிரியா வெங்கட்டிற்கும்,** திருமதி **ஜி.ஆர்யாரவிக்கும்,** என் அன்பு இளவல் **ஆர்.வீரக்குமார்க்கும்** நன்றிகள் பலபல.

இந்நூலில் கண்ணும் நெஞ்சமும் நிறையும் வகையில் உமாபதிசிவனார் படங்களை வரைந்து உதவிய ஓவியர் **ஸ்யாம் சங்கர்** அவர்களுக்கு என் இதயம் கனிந்த நன்றி.

இந்நூலினைச் செம்மையாகவும் விரைவாகவும் கணினியாக்கம் செய்து கொடுத்த **ஜெயஸ்ரீ கிராபிக்ஸ் பி.கி.இராம்குமாரின்** உதவியும் ஒத்துழைப்பும் போற்றத்தக்கன.

ஆன்மிக வாழ்வில் அல்லும் பகலும் எம்மை வழிநடத்திச் செல்லும் "கருவழி நீக்கும் திருவிழிக் கடவுளாம்" எம் **சற்குரு சீரடி சாயிநாதனைப்** பிரார்த்தனை செய்து இந்நூலினை அவர்தம் தாமரைத் திருவடிகளில் சமர்ப்பிக்கின்றேன்.

யானே புலனும் நலனும் இலன் அன்றே
ஆனாலும் பெற்றேன் உமாபதிசிவனார் தந்த சிவப்பிரகாசச் சிறப்பு.
'உமாபதி சிவனாரின் திருவடிகள் போற்றி'

25 மே, 2021

மதுரை.

அ.வே.சாந்திகுமார சுவாமிகள்

சொற்சுருக்க விளக்கம்

அ.அ. மன்றம்	-	அருள்நந்தி சிவம் அருட்பணி மன்றம்
அ.ப.க.	-	அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
உ.ஆ	-	உரை ஆசிரியர்
உ.வே.சா.	-	உ.வே.சாமிநாத ஐயர்
க.ஆ.	-	கட்டுரை ஆசிரியர்
கழகம்	-	சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்
காஞ்சி ஞானப்ரகாச சுவாமிகள்	-	காஞ்சி தொண்டை மண்டலாதீனம் சீலத்திரு. ஞானப்ரகாச தேசிக பரமாச்சாரிய ஸ்வாமிகள் (229ஆம் பட்டம்)
கு.ஆ.	-	குறிப்புரை ஆசிரியர்
சிவ.	-	சிவப்பிரகாசம்
சுலோ.	-	சுலோகம்
செ.ப.க.	-	சென்னைப் பல்கலைக்கழகம்
த.ப.க.	-	தமிழ்ப் பல்கலைக்கழகம்
தி.உ.	-	திருநெறி உரை
தொ.ஆ	-	தொகுப்பு ஆசிரியர்
ப.	-	பக்கம்

ப.ஆ. - பதிப்பு ஆசிரியர்

பக். - பக்கங்கள்

பா.எண் - பாடல் எண்

பொ.ஆ. - பொழிப்புரை ஆசிரியர்

ம.கா.ப. - மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

மு.கா.நூ. - முன்னர்க் காட்டிய நூல்

மேலது - மேலே காட்டிய நூல்/ஆசிரியர்

வி.உ. - விளக்கவுரை

வி.கு. - விளக்கக் குறிப்புரை

M.K.U - Madurai Kamaraj University

p. - page

Pp. - pages

முன்னுரை

திருநெறிய தமிழ்கொண்டு தேவாரப் பாடல்களால் 'பதிகப்பெருவழி' பக்தி இயக்கமாக வளர்ந்துவந்த சைவசமயம், பன்னிரண்டாம் நூற்றாண்டிற்குப் பிறகு, தத்துவ விளக்கங்களாக வளரத் தொடங்கியது. தேவாரத் திருமுறைகளில் ஆங்காங்கே சொல்லப்பட்ட தத்துவக் கருத்துகள், சைவ சித்தாந்த மெய்ப்பொருளியலாக சித்தாந்த சாத்திரங்களில் வரைமுறைப்படுத்தப்பட்டன. அத் தத்துவங்களை எடுத்துக்கூறும் நூல்கள் மெய்கண்ட சாத்திரங்கள் எனப்பட்டன. அவ்வகையில் வரிசைப்படுத்தப்பட்ட பதினான்கு மெய்கண்ட சாத்திரங்களில் உமாபதி சிவனார் அருளிய 'சிவப்பிரகாசம்' தனியிடம் பெற்றுத் திகழ்கிறது.

சிவப்பிரகாசம்

> "அன்றிய பாச இருளும் அஞ்ஞானமும்
> சென்றிடும் ஞானச் சிவப்பிர காசத்தால்
> ஒன்றும் இராவ ரும்அரு ணோதயந்
> துன்றிருள் நீங்குதல் போலத் தொலைந்ததே"[1]

என வரும் திருமந்திர மொழி,

> "புறவிருள் ஞாயிற்றின் ஒளியால் நீங்குவது போன்று,
> அகவிருள் சிவப்பிரகாசத்தால் விலகும்"

என்பதை விளக்கி நிற்கும்.

இத்திருமந்திர மொழியின்படி சைவ சித்தாந்தத் தத்துவத்தின் பிரகாசமாய் 'சிவப்பிரகாசம்' விளங்குகிறது.

சைவ சித்தாந்த தத்துவ வரலாற்றில் 'சிவப்பிரகாசம், அதற்கு முன் எழுந்த சாத்திரங்களின் கருத்தைப் பின்பற்றி 'சைவ சித்தாந்தக் கருத்துகளின் வளர்ச்சியையும் தொடர்ச்சியையும்' தொடங்கிவைக்கிறது. சைவ சித்தாந்தக் கருத்துகள்

முன்னுரை

திருநெறிய தமிழ்கொண்டு தேவாரப் பாடல்களால் 'பதிகப்பெருவழி' பக்தி இயக்கமாக வளர்ந்துவந்த சைவசமயம், பன்னிரண்டாம் நூற்றாண்டிற்குப் பிறகு, தத்துவ விளக்கங்களாக வளரத் தொடங்கியது. தேவாரத் திருமுறைகளில் ஆங்காங்கே சொல்லப்பட்ட தத்துவக் கருத்துகள், சைவ சித்தாந்த மெய்ப்பொருளியலாக சித்தாந்த சாத்திரங்களில் வரைமுறைப்படுத்தப்பட்டன. அத் தத்துவங்களை எடுத்துக்கூறும் நூல்கள் மெய்கண்ட சாத்திரங்கள் எனப்பட்டன. அவ்வகையில் வரிசைப்படுத்தப்பட்ட பதினான்கு மெய்கண்ட சாத்திரங்களில் உமாபதி சிவனார் அருளிய 'சிவப்பிரகாசம்' தனியிடம் பெற்றுத் திகழ்கிறது.

சிவப்பிரகாசம்

"அன்றிய பாச இருளும் அஞ்ஞானமும்
சென்றிடும் ஞானச் சிவப்பிர காசத்தால்
ஒன்றும் இராவ ரும்அரு ணோதயந்
துன்றிருள் நீங்குதல் போலத் தொலைந்ததே"[1]

என வரும் திருமந்திர மொழி,

"புறவிருள் ஞாயிற்றின் ஒளியால் நீங்குவது போன்று,
அகவிருள் சிவப்பிரகாசத்தால் விலகும்"

என்பதை விளக்கி நிற்கும்.

இத்திருமந்திர மொழியின்படி சைவ சித்தாந்தத் தத்துவத்தின் பிரகாசமாய் 'சிவப்பிரகாசம்' விளங்குகிறது.

சைவ சித்தாந்த தத்துவ வரலாற்றில் 'சிவப்பிரகாசம், அதற்கு முன் எழுந்த சாத்திரங்களின் கருத்தைப் பின்பற்றி 'சைவ சித்தாந்தக் கருத்துகளின் வளர்ச்சியையும் தொடர்ச்சியையும்' தொடங்கிவைக்கிறது. சைவ சித்தாந்தக் கருத்துகள்

சிவப்பிரகாசத்தின் வழி எவ்வாறு வளர்ச்சியும் தொடர்ச்சியும் பெற்றன என்பதை எடுத்துக் காட்டுவதே இவ்ஆய்வின் அடிப்படை நோக்கமாகும்.

நூற்கருத்து

“நிலவு உலகாயத ஆதி
நிகழ் சிவாத்துவித அந்தத்துள்
குலவினர் அளவு அளாவாக்
கொள்கையது ஆகி வேதத்
தலைதரு பொருளாய் இன்பாய்த்
தாவில் சத் காரியத்தாய்
மலைவறும் உணர்வால் பெத்த
முத்திகள் மதித்தாம் அன்றே” (சிவ.99)

உலகத்தில் நிலவும் உலகாயதம் முதல் சிவாத்துவிதம் ஈறாக உள்ள சமயங்களிலே ஒழுகுபவர்கள் கொண்ட கொள்கைகளுக்கு மேலாய் வேதத்தின் முடிந்த முடிபை உணர்த்துவதும் பேரின்பத்தைத் தருவதும் குறைவற்ற சத்காரிய வாதத்தின் இயல்பையுடையதும் ஆகிய சித்தாந்த ஞானத்தால் பெத்த முத்தி நிலைகள் இந்நூலில் கூறப்பட்டன.

சத்காரிய வாதம்

தோன்றுகின்ற பொருள்கள் யாவும் தோன்றுவதற்கு முன்னும் தத்தம் முதற்காரணங்களில் நுண்ணிலையில் உள்ளன என்று கூறுவது ‘சத்காரிய வாதம்’ எனப்படும். (சத் - உள்ளது; சற்காரியம் - உள்ளதாகிய காரியம்).

இதனை, ‘உள்ளதே தோன்றும்; இல்லது தோன்றாது’ என்று சுருக்கிக் கூறலாம். இதுவே, சைவசித்தாந்தத்திற்கு அடிநிலையானது.

சாங்கியம் சத்காரிய வாதத்தை ஏற்கும். அதனால் ‘உலகம் உள்பொருள்’ என்று கூறும். உலகம் தோன்றும் காலத்தில் தன் முதற்காரணங்களினின்று தானே தோன்றி, ஒடுங்கும் காலத்தில் அங்ஙனமே ஒடுங்கும். எனவே, இதற்கு ‘நிமித்த காரணமாக’ ஒரு கருத்தா இறைவன் வேண்டுவதில்லை என்று சொல்லும்.

“இல்லதுமாகாமல், உள்ளதுமாகாமல், இவற்றின் வேறாய பொருள் தோன்றும்” என்பது பௌத்தம். அவ்வாறான பொருளை அது ‘சூன்யம்’ என்று குறிப்பிடும். அதன் வாதம் ‘சூன்யவாதம்’ எனப்படும்.

“இல்லதுமாய், உள்ளதுமாய் இருக்கின்ற பொருள் தோன்றும்” எனச் சமணம் கூறும். ஒரு முடிபைக் கூறாமல் பல முடிபையும் சேர்த்துக் கூறுவதால் அதன் வாதம் ‘அனேகாந்த வாதம்’ எனப்படும். அனேக அந்தம் - பல முடிபு. இது ‘சமுச்சயவாதம்’ என்றும் சொல்லப்படும். சமுச்சயம் - கூட்டம்.[2]

சிவப்பிரகாசத்தின் வழி எவ்வாறு வளர்ச்சியும் தொடர்ச்சியும் பெற்றன என்பதை எடுத்துக் காட்டுவதே இவ்ஆய்வின் அடிப்படை நோக்கமாகும்.

நூற்கருத்து

“நிலவு உலகாயத ஆதி
    நிகழ் சிவாத்துவித அந்தத்துள்
குலவினர் அளவு அளாவாக்
    கொள்கையது ஆகி வேதத்
தலைதரு பொருளாய் இன்பாய்த்
    தாவில் சத் காரியத்தாய்
மலைவறும் உணர்வால் பெத்த
    முத்திகள் மதித்தாம் அன்றே” (சிவ.99)

உலகத்தில் நிலவும் உலகாயதம் முதல் சிவாத்துவிதம் ஈறாக உள்ள சமயங்களிலே ஒழுகுபவர்கள் கொண்ட கொள்கைகளுக்கு மேலாய் வேதத்தின் முடிந்த முடிபை உணர்த்துவதும் பேரின்பத்தைத் தருவதும் குறைவற்ற சத்காரிய வாதத்தின் இயல்பையுடையதும் ஆகிய சித்தாந்த ஞானத்தால் பெத்த முத்தி நிலைகள் இந்நூலில் கூறப்பட்டன.

சத்காரிய வாதம்

தோன்றுகின்ற பொருள்கள் யாவும் தோன்றுவதற்கு முன்னும் தத்தம் முதற்காரணங்களில் நுண்ணிலையில் உள்ளன என்று கூறுவது ‘சத்காரிய வாதம்’ எனப்படும். (சத் - உள்ளது; சற்காரியம் - உள்ளதாகிய காரியம்).

இதனை, ‘உள்ளதே தோன்றும்; இல்லது தோன்றாது’ என்று சுருக்கிக் கூறலாம். இதுவே, சைவசித்தாந்தத்திற்கு அடிநிலையானது.

சாங்கியம் சத்காரிய வாதத்தை ஏற்கும். அதனால் ‘உலகம் உள்பொருள்’ என்று கூறும். உலகம் தோன்றும் காலத்தில் தன் முதற்காரணங்களினின்று தானே தோன்றி, ஒடுங்கும் காலத்தில் அங்ஙனமே ஒடுங்கும். எனவே, இதற்கு ‘நிமித்த காரணமாக’ ஒரு கருத்தா இறைவன் வேண்டுவதில்லை என்று சொல்லும்.

“இல்லதுமாகாமல், உள்ளதுமாகாமல், இவற்றின் வேறாய பொருள் தோன்றும்” என்பது பௌத்தம். அவ்வாறான பொருளை அது ‘சூன்யம்’ என்று குறிப்பிடும். அதன் வாதம் ‘சூன்யவாதம்’ எனப்படும்.

“இல்லதுமாய், உள்ளதுமாய் இருக்கின்ற பொருள் தோன்றும்” எனச் சமணம் கூறும். ஒரு முடிபைக் கூறாமல் பல முடிபையும் சேர்த்துக் கூறுவதால் அதன் வாதம் ‘அனேகாந்த வாதம்’ எனப்படும். அனேக அந்தம் - பல முடிபு. இது ‘சமுச்சயவாதம்’ என்றும் சொல்லப்படும். சமுச்சயம் - கூட்டம்.[2]

காரணப் பொருளில் காரியப் பொருள் முன்னரே இல்லை. அது பின்னரே வந்து தோன்றுகிறது என்று தருக்கம் கூறும். அதாவது நூல் ஆடையில்லை. ஆனால் நூல்களின் சேர்க்கையால் முன்னேயில்லாத ஆடை என்ற புதிய பொருள் தோன்றிவிடுகிறது என்று கூறும், இது சத்காரிய வாதத்திற்கு நேர்மாறான 'அசத்காரியவாதம்' ஆகும்.

"உள்ளதே தோன்றும்" என்பதை மறுக்கும் மாயாவாதம் உள்ளிட்ட யாவும், 'இல்லது தோன்றும்' எனக் கூறுவதற்கு அஞ்சி, வாய்பாட்டளவில் எதை எதையோ சுற்றி வளைத்துக் கூறும். அது 'இல்லது தோன்றும்' என்பதாகவே முடியும்.

தோன்றுகின்ற பொருளுக்குக் காரியம் என்று பெயர். காரியம் முன்பு இல்லாமல் எங்கிருந்தோ புதிதாகத் தோன்றுவது அன்று. தோன்றுவதற்கு முன்னும் அது உள்ளது. ஆடையாகிய காரியம் நூலிலும், குடமாகிய காரியம் மண்ணிலும் முன்னமே இருக்கின்றன.

"கருதுகாரணம் உண்டாகக் காரியம் உள்ளதாகி வருதலால்"

என்பது சிவஞானசித்தியார்.[3]

காரியம் அதன் காரணத்தில் இல்லையாயின் எவ்வளவு முயன்றாலும் அதனை உண்டு பண்ணமுடியாது. அதுபோல, காரணத்தில் இல்லாத ஒன்றைக் காரியத்தில் உண்டாக்க முடியாது. மண்ணிலிருந்து ஆடை தோன்றுவதில்லை. நூலிலிருந்து குடம் தோன்றுவதில்லை. காரணத்தில் காரியம் நுண்ணிலையில் உள்ளது என்பதைக் கருதல் அளவையால் சைவசித்தாந்தம் நிறுவுகிறது:

மேற்கோள் :	பசுக்கன்றின் தலையில் கொம்பு தோன்றுவதற்கு முன்பும் உள்ளது.
ஏது :	பின்னர் அது தோன்றுவதைக் காணலாம்.
எடுத்துக்காட்டு :	எது எதன்கண் இல்லையோ அஃது அதனின்றும் ஒரு காலத்தும் தோன்றாது. முயலின் தலையில் கொம்பு ஒரு காலத்தும் தோன்றாமை போல.

எனவே, 'இல்லது வாராது; உள்ளது போகாது' என்றும் கூறலாம். புலனாகாத நுண்ணிலையே 'காரணநிலை' என்றும், புலனாகின்ற பருநிலையே 'காரியநிலை' என்றும் சொல்லப்படுகின்றன.

எனவே, காரியம் காரணத்தில் நுண்ணியதாய், சூக்குமமாய் உள்ளது என்பது ஒருதலையாய் அறிவுக்கும், அளவைக்கும், அறிவியலுக்கும் ஏற்புடையதாகிறது.

பெத்தம் முத்தி

சிவஞான சித்தியார் அருளிச்செய்த அருள்நந்தி சிவனார் அந்நூலைப் பரபக்கம், சுபக்கம் என்னும் இருபெரும் பிரிவுகளாக வகுத்துக் கொண்டார். ஆயினும், பரபக்கத்தின் தொடக்கத்தில் 'பெத்தமோடு முத்தி எல்லாம் . . . . . துகள்தீர

இந்நூலில் சொல்லகிற்பாம்'[4] என்று கூறியவர் சுபக்கத்தின் தொடக்கத்தில் பொது உண்மை என்ற அதிகார வரம்பைக் கூறவில்லை. சிவஞான போதத்தின் பன்னிரு சூத்திரப் பாங்கிலேயே அமைத்துக் கொண்டார்.

"பொது உண்மையெனக் கருதி யானும் அருத்திமிக உரைப்பன்", "மலைவறும் உணர்வால் பெத்தமுத்திகள் மதித்தாம் அன்றே" என்று கூறுவதன் மூலம், சிவப்பிரகாசத்தில் பொது, உண்மை என்ற பாகுபாட்டை வகுத்துக்கொண்டு கருத்து விளக்கம் செய்தவர் உமாபதி சிவனாரேயாவர்.

"சைவ சித்தாந்தம் 'பொது', 'உண்மை' என்னும் வகையுடைமை முதனூல் வழிநூல்களில் வகுத்துக் கொண்டோதினும் எடுத்தோதாமையால் அத்தெரிவரிய வகையைச் சிவப்பிரகாசம் தெரியுமாறு எடுத்தோதியுள்ளது சிறப்பாகும்" என்பார் காஞ்சி ஞானப்ரகாச சுவாமிகள்.[5]

பின்னர் வந்த உரையாசிரியர்கள் இப்பாகுபாட்டைப் பொன்னே போல் போற்றிச் செய்து சாத்திரங்களுக்கு உரை வரைந்துள்ளனர் என்பது மனங்கொள்ளத்தக்கது.

"பெத்தம் முத்தியென்றது ஏதெனில், பெத்தம் பாசத்தோடுங் கட்டுப்பட்டு நிற்கை. முத்தி அந்தக் கட்டு விடுகையென அறிக" என்று கூறுவர் சிவப்பிரகாசர்.[6]

"கட்டறுத் தென்னை யாண்டு கண்ணார
நீறிட்ட அன்பரொடு யாவருங் காணவே" [7]

என்பது திருவாசகத்தின் திருச்சதகம்.

இப்பாடலில், பாசமாகிய கட்டறுத்து ஆட்கொண்டு அடியார் கூட்டத்தில் தம்மைச் சேர்த்த அருமையினைக் கூறுகிறார் மாணிக்கவாசகர்.

"பாசத்தைப் பசுக்கள் விட்டுப் பதியினை அடைய முத்தி"

என்பது சித்தியார்.

வேதத் தலைதரு பொருள்

வேதம் நெறி என்றும், சைவம் துறை என்றும் கூறப்படும். வேதங்கள் கூறும் வழிகளில் சென்று புகும் துறைகள் பல திறப்படும். ஆனால், வேதநெறி காட்டக் கண்டு சென்றடையும் சமயத்துறைகளுள் மேம்பட்டது சைவத்துறையேயாகும்.

"வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத்துறை விளங்க" [8]

என்பது சேக்கிழார் பெருமான் வாக்கு.

உயிர்களின் பக்குவபேதம் நோக்கிப் பலப்பல துறைகளில் சமய நூல்கள் பல எழுந்தன. அவ்வாறு வெவ்வேறு துறைகளில் எழுந்த அந்தந்த நூல்களே மெய்ந்நூல்கள் என உணர்ந்த உயிர்கள் அவற்றில் தோய்ந்து பின் தெளிந்து, படிப்படியாக அறிவுபெற்று, சிறிதுசிறிதாக முதிர்ந்து சைவத்துறையைச் சாரும்.

இதனை,

“. . . . . தர்க்கம் இடும்
தொன்னூல் பரசமயந்தோறும் அதுஅதுவே
நன்னூல் எனத்தெரிந்து நாட்டுவித்து - முன்னூல்
விரத முதலாய பல மெய்த்தவத்தின் உண்மைச்
சரியை கிரியா யோகம் சார்வித்து - அருள்பெருகு
சாலோக சாமீப சாரூபமும் புசிப்பித்து
ஆலோகந் தன்னை அகற்றுவித்து” [9]

எனவரும் கந்தர் கலிவெண்பாவால் அறியலாம்.

இத்தகைய சைவத்துறையை அடைந்த சிலரே தழைத்தோங்கிய வேத மரத்தின் உச்சியில் பழுத்த தெவிட்டா இன்பம் தருகின்ற அருங்கனியைப் பிழிந்து சாரமாகிய சைவசித்தாந்தத் தேனமுதைப் பருகியவர்கள் ஆவர்.

“ஒரும்வே தாந்தம்என்று உச்சியில் பழுத்த
ஆரா இன்ப அருங்கனி பிழிந்து
சாரம் கொண்ட சைவ சித்தாந்தத்
தேன்அமுது அருந்தினர் சிலரே யானவர்” [10]

(வேதாந்தம், வேதத்தலைதரு பொருள் - உபநிடதம் எனப்படும்) மேலும்,

“உலகியல் வேதநூல் ஒழுக்கம் என்பதும் நிலவு மெய்ந்நெறி சிவநெறிய தென்பதும்” அறிவுடையோரால் இன்றியமையாது உணரற்பாலன என்னும் சேக்கிழாரது திருவுளக் கிடக்கையால், ‘மெய்ந்நெறியாவது சைவச் சிவநெறியே’ என்பது தெற்றெனப் புலப்படும்.

“மெய்யாவது நிலைபேறுடையது அதுவே, ‘வீடு’ எனப்படுவது. பிறப்பிறப்புகளிற்பட்டு மேல், கீழ், நடு என்னும் மூவுலகங்களிலும் மாறிமாறிப் போக்கு வரவு புரிந்து, அலமருகின்ற உயிர்கள் அவ்வலமரலினின்றும் நீங்கி, என்றும் ஒரு பெற்றியாய் நின்று நீடு வாழும் நிலையை விரும்பினால், அவை அதன்பொருட்டுச் சிவநெறியை அடைதல் இன்றியமையாதது என்பது மேற்கூறியவற்றால் விளங்கும்” என்பார் மகாவித்துவான் அருணை வடிவேலு முதலியார்.[11]

ஒருவந்தம் கைத்துடையார் (உறுதியாகக் கைக்கொள்பவர்)

“ஆக்கம் இழந்தேம்என்று அல்லாவார் ஊக்கம்
ஒருவந்தம் கைத்துடை யார்”[12]

ஊக்கத்தை உறுதியாகத் தம்மிடம் கைப்பொருளெனப் பெற்றிருப்பவர்கள் தம் செல்வம் முதலிய ஆக்கங்களை இழந்தாலும் அதற்காக அலமந்து வருந்தார்.

"வெருவந்த செய்தொழுகும் வெங்கோல னாயின்
ஒருவந்தம் ஒல்லைக் கெடும்"[13]

குடிமக்கள் அஞ்சி நடுங்கும்படியான செயல்களைச் செய்யும் வெங்கோலானாக இருந்தால் அவ்வரசன் உறுதியாக விரைந்து கெடுவான்.

"ஒருவந்தம் அன்றால் உறைமுதிரா நீரால்
கருமந்தான் கண்டழிவு கொல்லோ - பருவந்தான்
பட்டின்றே யென்றி பணைத்தோளாய் கண்ணீரால்
அட்டினேன் ஆவி யதற்கு"[14]

என்னும் 'திணைமாலை நூற்றைம்பது' பாடலில், கார்ப்பருவம் உறுதியன்று (ஒருவந்தம் அன்றால்) என்று சொல்லிய தோழிக்குத் தலைமகள், 'பருவம் வரவில்லையென்று என்னைத் தேற்றும் தோழியே! என் கண்ணீரை நீராக வார்த்து என்னுயிரைப் பருவத்துக்குக் கொடுத்தேன்'' என்று கூறுகிறாள்.

"'ஒருவந்தம்' என்ற சொல் திருக்குறளில் இரண்டு இடங்களிலும், திணைமாலை நூற்றைம்பதில் ஓரிடத்திலும் ஆக மூன்றிடங்களில் ஆட்சி பெற்றது. ஏனைய சங்க நூல்களில் இல்லை. இச்சொற்படைப்புக்கும், சொல்லாட்சிக்கும் வள்ளுவரே தந்தையாகிறார்" என்பார் ச.தண்டபாணி தேசிகர்.[15]

ஒருவந்தம் என்ற சொல்லுக்கு நிலைபேறு, உறுதி, துணிவு என்னும் பொருள்களைச் சுட்டுகின்றனர் உரையாசிரியர்கள்.[16]

"சித்தாந்தத் தே,சிவன்தன் திருக்கடைக்கண் சேர்த்தி
சென்னம்ஒன்றிலே சீவன் முத்தராக
வைத்து ஆண்டு மலம்கழுவி ஞான வாரி
மடுத்துஆனந் தம்பொழிந்து வரும்பிறப்பை அறுத்து
முத்தாந்தப் பாதமலர்க் கீழ்வைப்பன்" [17]

"சிவன் தன் திருக்கடைக் கண்களை நம்மீது செலுத்தி, ஒரு பிறவியிலேயே சீவன் முத்தராக வைத்து, ஆண்டு கொண்டு, மும்மலமும் நீக்கி, ஞானக்கடலில் புக வைத்து, சிவானந்தத்தைப் பொழிந்து, வர இருக்கும் பிறப்பையும் நீக்கி, முத்தியாகிய திருவடிமலரின் கீழ் நம்மை வைப்பான்"

என்று மொழிந்திடும் சித்தியாரைக் கருத்தில் கொண்டு,

மெய்ந்நெறியாகிய சித்தாந்தச் சிவநெறியை ஒருவந்தம் கைத்துடையார் பிறப்புகளில் பட்டு அலமந்து வருந்தாமல் வீடு பெறுவர் என்பது திண்ணம்.

அடிக்குறிப்புகள்

1. திருமந்திரம், 1970
2. சி.அருணைவடிவேலு முதலியார், சிவஞான போத மாபாடியப் பொருள்நிலை விளக்கம், ப.239.
3. சிவஞானசித்தியார், சுபக்கம், 36.
4. சிவஞானசித்தியார், பரபக்கம், நூற்கருத்து,10.
5. காஞ்சி ஞானப்ரகாச சுவாமிகள், சிவப்பிரகாசம் மூலமும் உரையும், பக்.17-18.
6. மதுரைச் சிவப்பிரகாசர், சிவப்பிரகாச மூலமும் உரையும், ப.301.
7. 8:5:49.
8. பெரியபுராணம், 1899
9. குமரகுருபரர், கந்தர்கலிவெண்பா, 18-20.
10. குமரகுருபரர், பண்டார மும்மணிக்கோவை, 11.
11. சி.அருணை வடிவேல் முதலியார், சிவஞானபோதச் சிற்றுரை விளக்கம், ப.க.
12. திருக்குறள், 593.
13. மேலது, 563.
14. திணைமாலை நூற்றைம்பது, முல்லை, பா.103.
15. ச.தண்டபாணி தேசிகர், திருக்குறள் உரைக்களஞ்சியம், பொருட்பால் - அரசியல், பக்.635,731.
16. இரா.சாரங்கபாணி, திருக்குறள் உரை வேற்றுமை, பொருட்பால், பக்.275-277, 320-321.
17. சிவஞானசித்தியார், சுபக்கம், 268.

CENTRE FOR SHAIVA STUDIES
Puducherry

CENTRE FOR SHAIVA STUDIES
Puducherry



பட்ட கட்டையிற் பகற்குருடு ஏகுதல் பாரீர்
– மறைஞான சம்பந்தர் வாக்கு



உமாபதி சிவனார் 'கொடிக்கவி' பாடி
சிதம்பரத்தில் கொடியேற்றல்



உமாபதிசிவனார் பெற்றான் சாம்பானுக்கும்
கள்ளிச் செடிக்கும் முத்தி அருளல்



"ஐயன் திருநடம் எதிர்கும்பிடும் அவர்
ஆர்வம் பெருகுதல் அளவின்றால்"

2. உமாபதி சிவனார் வாழ்வும் வாக்கும்

முன்னுரை

வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்க, தோத்திரம் செய்த திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரையும் சமய குரவர்கள் என்பதுபோல, சாத்திரம் சாதித்தவர்களை சந்தான குரவர் என்பது சைவ சித்தாந்த மரபு.

திருக்கயிலையில் சீகண்ட பரமேசுவரர் சிவஞானத்தை நந்தியம்பெருமானுக்கு அருளிச்செய்தார். அவர் சனற்குமார முனிவருக்குக் கூறியருளினார். சனற்குமார முனிவர் சத்தியஞான தரிசனிகளுக்கு விளக்கியருள, அவர் பரஞ்சோதி முனிவருக்கு வழங்கியருளினார். இந்த நால்வரும் 'தேவபரம்பரை' எனவும், 'அகச்சந்தானம்' எனவும் அழைக்கப்பட்டனர்.

பரஞ்சோதி முனிவர் மண்ணுலகில் பொதியமலை நோக்கிச் சென்று கொண்டிருந்தபொழுது, திருவெண்ணெய் நல்லூரில், திருஞானசம்பந்தப் பெருமானது திருவருட்பாடலால் தோன்றிய சுவேதவனப் பெருமாளைக் கண்டு, அவருக்கு சிவஞானத்தை அளித்து, 'மெய்கண்டார்' என்று தமது ஞானத் தந்தையின் (சத்தியஞானம் - மெய்; தரிசினி - கண்டார்) திருப்பெயரைச் சூட்டினார். அவர் தம் குலகுருவாகிய அருள்நந்தி சிவத்திற்கு அதனைப் போதித்தார். அவரிடமிருந்து மறைஞானசம்பந்தர் அச் சிவஞானத்தைப் பெற்றார். உமாபதி சிவம் மறைஞானசம்பந்தரிடமிருந்து அதனை உபதேசமாகக் கேட்டார். இந்நால்வரும் 'பூதபரம்பரை' எனவும், 'புறச்சந்தானம்' எனவும் அழைக்கப்படுகின்றனர்.[1] இவ்வாறு 'சைவ சித்தாந்த மரபு' வாய்மொழியாக குரு சீடர் முறையில் வழங்கி வருகிறது.

இச்சித்தாந்த மரபை,

"தேவர்பிரான் வளர்கயிலைக் காவல் பூண்ட
    திருநந்தி அவர்கணத்தோர் செல்வர் பாரில்

பாவியசத் தியஞான தரிசனிகள் அடிசேர்
பரஞ்சோதி மாமுனிகள் பதியாம் வெண்ணெய்
மேவியசீர் மெய்கண்ட திறலார் மாறா
விரவுபுகழ் அருணந்தி விறலார் செல்வத்
தாவில்அருள் மறைஞான சம்பந்தர் இவர்இச்
சந்தானத்து எமையாளும் தன்மை யோரே" (சிவ.5)

என்று சிவப்பிரகாசத்தில் அகச்சான்றாக உமாபதி சிவம் குறித்தருளினார்.

உமாபதி சிவத்தின் மாணவர் அருள் நமச்சிவாயர். அவருடைய மாணவர் சித்தர் சிவப்பிரகாசர். அவரைக் குருவாகக் கொண்ட நமசிவாய மூர்த்திகள், திருவாவடுதுறை ஆதீனத்தை நிறுவியவர். உமாபதியின் ஞானசிரியராக விளங்கிய மறைஞான சம்பந்தரின் மற்றொரு சீடர் மச்சு செட்டியார் - அவர் வழியில் எட்டாவதாக வந்த மாணவர் குருஞான சம்பந்தர், தருமபுர ஆதீனத்தை நிறுவியவர். இந்த இரண்டு ஆதீனங்களின் வழியில் வருபவர்கள் 'அபிடேக பரம்பரையினர்' என்று அழைக்கப்படுகின்றனர். இந்நிலையில் திருக்கயிலாய மரபாகிய, சித்தாந்த மரபு வழிவழியாக வளர்ந்து அருளி வருகிறது. அகச் சந்தானம், புறச்சந்தானம் மரபில் எட்டாவது சந்தான குரவரான உமாபதி சிவம் அருளிய சாத்திர நூல்கள் எட்டாகும். அவை 'சித்தாந்த அட்டகம்' என்று வழங்கப்படுகின்றன. இதுபற்றியே,

"எட்டுருக் கொள்ளும் சிவத்தினை எவரும்
எளிதினில் எய்திடற் கெனவே
எட்டெனும் வரிசை எழிற் குருவாகி
எம்பிரான் ஏவலின் செடியார்
எட்டுறச் சிவத்தை இயற்றிய பெருமான்
எட்டெனும் நூலருள் செய்தோன்
எட்டக மலரால் சிட்டர்கள் பரவும்
இறைஉமா பதிசிவம் தொழுவாம்"[2]

என்று போற்றித் துதி செய்வர் தே.ஆ. ஸ்ரீநிவாஸன்.

உமாபதி சிவனார் வாழ்க்கை பற்றியும் மற்றும் அவரருளிய நூல்கள் பற்றியும் ஓர் அறிமுகமாக இவ்வியல் அமைகிறது.

வரலாற்று மூலங்கள்

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் இயற்றிய புலவர் புராணம், க.சுவாமிநாத தேசிகர் பாடிய சந்தானாசாரிய புராண சங்கிரகம், சிவராஜ தீட்சிதர் தொகுத்தளித்த சைவ சமய சந்தானாசாரியர் புராண சுருக்கம், மயிலை சண்முகம் பிள்ளை இயற்றிய சந்தானகுரவர் நான்மணிமாலை, மு.அருணாசலம் எழுதிய தமிழ் இலக்கிய வரலாறு ஆகிய நூல்களிலிருந்து உமாபதி சிவத்தின் வரலாற்றை அறிந்து கொள்ளலாம்.

மேலும், வடமொழியில் எழுதப்பட்ட பார்த்தவன மான்மியமும், இராஜேந்திரபுர மான்மியமும் உமாபதிசிவத்தின் வரலாற்றைக் கூறுவன.

பின்னர் வந்த புலவர்கள் பலர் எழுதிய வாழ்த்துச் செய்யுள்கள், தாயுமானவரின் எந்நாட்கண்ணி முதலியவை உமாபதிசிவத்தின் பெருமையைக் கூறுகின்றன.

உமாபதி சிவனாரின் வாழ்வு

பெருமை நன்றுடைய தில்லையில், 'நாம் அவர்களுள் ஒருவர்' என்று அம்பலவாணரால் திருவாய் மலர்ந்தருளப்பெற்ற தில்லைவாழ் அந்தணர் மரபில், நடராச தீட்சிதர் - கௌரி அம்மையார் ஆகிய இருவருக்கும் மகவாய்த் தோன்றினார் உமாபதி சிவம். தில்லைவாழ் அந்தணர்களில் 'ஸ்ரீவத்ஸ' கோத்திரத்தில் பிறந்தவர் உமாபதிசிவம்.[3]

இளமையிலேயே சிவப்பேரொளி மிகுந்த இவர், மந்திரமூர்த்தி தீட்சிதரிடம் ஸ்ரீவித்யா உபதேசம் பெற்று, ஸ்ரீவித்யா ஜப யஜ்ஞத்தைத் தொடர்ந்து செய்து, சிவகாமியம்மையின் அருளைப் பெற்றார். இவர் பூசை செய்த ஸ்ரீசக்ரம் தில்லை சிவகாமசுந்தரியின் சந்நிதியை அடுத்த ஒரு தனி மேடைமீது இன்றும் இருக்கிறது.

தில்லைவாழ் அந்தணர்கள் திருமணம் செய்துகொண்ட பின்னர்த்தான், தில்லையம்பலவாணரை வழிபாடு செய்வதற்குரிய உரிமை பெறுவர் என்பது மரபு. உமாபதி சிவம் சபேச தீட்சிதரின் மகளான பார்வதி அம்மையாரை மணந்து இல்லற வாழ்வை இனிது நடத்தி, இரண்டு புதல்வர்களையும் (ஸ்ரீமூலநாதர், விருஷபத்துவஜர்) ஒரு புதல்வியையும் (சுசீலா) பெற்றார்.[4]

இவருடைய இல்லற வாழ்வு பற்றிய செய்திகள் நமக்கு முழுமையாகக் கிடைக்கவில்லை. உமாபதி சிவாசாரியார் சந்தான குரவராக விளங்கினமையால் அவருடைய மெய்யியல் வாழ்வையே பின்னர் வந்தவர் கூறினார்கள் எனலாம்.

பட்ட கட்டையிற் பகற் குருடு

இங்ஙனம் தில்லைவாழ் அந்தணர் மரபில் தோன்றி தீட்சை பெற்று, வேத வடமொழி ஆகமங்களையும், தமிழ்த் திருமுறைகளையும் கற்றுணர்ந்து, தமக்குரிய முறைநாளில் உமாபதி சிவம் தில்லைஅம்பலவாணரை முறைப்படி பூசை செய்து வந்தார். அக்காலத்தில் அவ்வாறு அம்பலவாணரைப் பூசை செய்து வருபவர்கள் அனைவரும் பல்லக்கில் சென்று வருவது வழக்கம். அவ்வழக்கப்படி தீவட்டி ஏந்திக்கொண்டு பணியாள் முன்னே செல்ல, பின்னே பல்லக்கில் அம்பலவாணரின் உச்சிக்கால வழிபாட்டை முடித்துக்கொண்டு உமாபதி சிவனார் சென்றார். அப்போது "பட்ட கட்டையில் பகற் குருடு ஏகுதல் பாரீர்' என்றொரு குரல் கேட்டது. தாம் பல்லக்கில் ஏறிச் செல்வதையும், முன்னால் தீப்பந்தம் ஏந்திச் செல்வதையும் குறித்தே இவ்வாறு கூறப்பட்டது என்பதை உமாபதி சிவம் உணர்ந்தார். எனவே, பல்லக்கில் இருந்து குதித்து அக்குரலுக்குரியவரைத் தேடிச் சென்றார். அவ்வாறு கூறியவர் 'மறைஞான சம்பந்தர்' என்று அறிந்து அவர் இருந்த திசைநோக்கிச் சென்று, அவரைக் கண்டு மகிழ்ந்தார். உடனே அவரைத் தம் ஞானாசிரியராகத் தம் உள்ளத்துள் ஏற்றுக்கொண்டார்.

மறைஞான சம்பந்தர் உமாபதியின் பக்குவத்தைச் சோதிக்க எண்ணி, நெசவாளர்கள் வாழ்ந்து வந்த தெருவில் புகுந்து, பாவுக்கு வார்க்கும் கஞ்சியைக் கையில் ஏந்திக் குடித்தார். உமாபதி சிவனார் சிறிதும் தயங்காமல் உடனே அவருடைய முழங்கை வழியே ஒழுகிய கஞ்சியைத் தம் கையில் வாங்கிப் பருகினார். இந்நிகழ்ச்சியை,

“பழுதில் அம் முனிவன் சென்று செங்குந்தர்
பாவடிக் கூழ்க்கை ஏற்றருந்த
நழுவுதன் முழங்கைவழி இவன் அயின்றான்”[5]

என்று புலவர் புராணத்தில், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் குறிப்பர்.

குருவைப் போற்றல்

மறைஞானசம்பந்தர் உமாபதி சிவத்தைத் தம் சீடராக ஏற்றுக்கொண்டு ‘மெய்ஞ்ஞான உபதேச’த்தை வழங்கினார். தமது ஞானாசிரியர்பால் சித்தாந்த நுண்பொருள்கள் யாவற்றையும் நன்கு உணர்ந்து, ஞானஅபிடேகம் பெற்று, அநுபூதிச் செல்வராக விளங்கினார் உமாபதி சிவம்.

“பார்திகழ வளர்சாம வேதம் மல்கப்
பராசரமா முனிமரபு பயில ஞானச்
சார்புதர வந்துஅருளி எம்மை ஆண்ட
சைவசிகா மணிமருதைத் தலைவன் அந்தண்
கார்மருவு பொழில் புடைசூழ் மதில்மீதே மதியம்
கடவாமை நெடும்கொடியின் கரம்தகையும் கடந்தைச்
சீர்நிலவு மறைஞான சம்பந்தன் எந்தை
திருவளரும் மலரடிகள் சென்னி வைப்பாம்” (சிவ.6)

என்று தம் ஞானாசிரியர் மறைஞானசம்பந்தருக்கு குரு வணக்கம் செய்கிறார் உமாபதி சிவம். ஞானாசிரியருக்கு அவரது மாணவர் ‘ஞானப் புதல்வர்’ ஆதலினாலே ‘எந்தை’ என்று சிறப்பிக்கின்றார்.

பொதுவாக ஞானாசிரியரிடமிருந்து தீட்சை பெறும்பொழுது ‘தீட்சா நாமம்’ வழங்கப்படுவது வழக்கம். உமாபதி சிவனாருக்கு ‘தீட்சா நாமம்’ என்று எதுவும் வழங்கப்படவில்லை. ஆதலால், அவருடைய பிள்ளைத்திருநாமமே எப்பொழுதும் நிலைபெறுவதாயிற்று. உமாபதி சிவம், உமாபதி சிவாசார்யர், உமாபதி தேவர், உமாபதிதேவ நாயனார், கொற்றவன்குடி உமாபதி சிவம் என்றே அழைக்கப்படுகிறார். அவருடைய நூல்களிலும், அவரைப்பற்றிய நூல்களிலும் இவ்வழக்கத்தைக் காணலாம்.

உமாபதி சிவம் மறைஞான சம்பந்தரிடம் உபதேசம் பெற்றதை அறிந்து கொண்ட தில்லைவாழ் அந்தணர்கள் இவரைத் தங்கள் சமூகத்தினின்றும், ஊரின்றும் விலக்கி வைத்தனர். இதனை,

"இம்முறை வாழ்வார் தம்மை எழிலருள் நிருத்தர் தாளை
மெய்ம்முறை பூசை செய்யும் வேதியர் அறியாராகித்
தம்முறை பிறழ்ந்தார் இந்தத் தனி உமாபதியார் என்ன
எம் மரபு இழந்தீர் என்றே எள்ளினர்" [6]

என்று சந்தானாசாரிய புராண சங்கிரகம் கூறும்.

அதன்மேல் உமாபதி சிவனார் சிதம்பரத்திற்கு கிழக்கேயுள்ள கொற்றவன்குடி என்ற இடத்தில் திருமடம் அமைத்துக்கொண்டு அங்கேயே வாழ்ந்து வரலானார். தமக்குரிய முறைநாளில் தில்லை அம்பலவாணரைப் பூசை செய்யவும் அந்தணர்கள் தடுத்துவிட்டனர். தடுத்த அந்தணர்கள் திருக்கோயிலைத் திறந்து பார்த்தபோது, பூசைப் பெட்டகத்தைக் காணவில்லை. அவர்கள் அப்போது திகைத்து வருந்த தில்லை அம்பலவாணர் 'நாம் உமாபதியின் பெட்டகத்துள் இருக்கின்றோம்' என்று அசரீரியாகக் கூறினார். அந்தணர்கள் உமாபதியின் பெருமையுணர்ந்து, அம்பலவாணருக்குப் பூசை செய்ய அனுமதியளித்தனர். பூசை முறை முடிந்தவுடன் மீண்டும் கொற்றவன் குடிக்கே திரும்பினார் உமாபதி சிவனார்.

கொடிக்கவி பாடி கொடியேற்றல்

உமாபதியின் பெருமையை உலகறியச் செய்ய, தில்லை அம்பலவாணர் விரும்பினார். ஒவ்வொரு கோவில் திருவிழாவும் கொடியேற்றத்துடன்தான் தொடங்க வேண்டும் என்பது மரபு. அம்மரபு பற்றியே தில்லைக் கோவிலின் திருவிழாவிற்கு கொடியேற்றம் தொடங்கியது. அப்போது, கொடி ஏறாமல் தடைபட்டது. எந்த முயற்சியும் பயன்தராது போகவே, தில்லைவாழ் அந்தணர்கள் கவலையடைந்தனர். அப்போது 'உமாபதி சிவம் வந்தால் கொடியேறும்' என்றோர் திருவாக்கு ஆகாயத்தில் எழுந்தது. அனைவரும் உமாபதி சிவனாரிடம் முறையிட, அவர் வந்து 'கொடிக்கவி' பாடி, கொடியேற்றத்தை நிகழ்த்தி, விழாவைத் தொடங்கி வைத்தார். அப்போது அவர் பாடியருளிய 'கொடிக்கவி' சைவ சாத்திர நூல்களுள் ஒன்றாகத் திகழ்கிறது.

"மாமறை பேசும் ஏமமன்றத்துக்
காமரு விழவிற் கவின்கொடி ஏறாது
சென்னியுந் தில்லை செழுமறை யவரும்
என்னிது வாங்கொல் என்று ஏங்கிய போழ்தத்து
மஞ்சுகண் துஞ்சு மலையரையன் தருஉங்
கிஞ்சுக வாயுமை கேள்வன் பணிப்பான்
நின்னிடை எய்த நீயென்று மொழிந்த
தன்னிகர் இல்லதோர் தனிக்கொடிப் பாட்டு' [7]

என்று கொடியேற்றத்தையும், கொடிக்கவியையும் போற்றிப் புகழ்கிறது சந்தானகுரவர் நான்மணிமாலை.

பெற்றான் சாம்பான் முத்தி

சில நாள்கள் செல்ல அவருடைய மடத்தில் ஒரு அற்புதம் நிகழ்ந்தது. பெற்றான் சாம்பான் என்பவர் பெருமான் திருமடைப்பள்ளிக்கு விறகு வெட்டிக் கொண்டு வந்து கொடுப்பவர். அவரின் பரிபக்குவ நிலையைக் கண்ட அம்பலவாணர் அவர் கனவில் தோன்றி,

“அடியார்க் கெளியன் சிற்றம்பலவன் கொற்றங்
குடியார்க் கெழுதிய கைச் சீட்டு - படியின்மிசை
பெற்றான் சாம்பானுக்குப் பேதமறத் தீக்கை செய்து
முத்தி கொடுக்க முறை”[8]

என்று எழுதிய சீட்டு ஒன்றைக் கொடுத்து, அதை உமாபதி சிவனாரிடம் சேர்க்கும்படி உத்தரவிட்டார். சாம்பான் அதைப் பத்திரமாக வைத்திருந்தார்.

ஒரு நாள் மழை காரணமாக விறகு வரத் தாமதித்ததால், உமாபதி சிவனாருக்கு உணவுவேளை காலம் கடந்து போயிற்று. அப்போது, உமாபதி சிவனார், காரணம் கேட்க, அங்கிருந்தோர் ‘பெற்றான் சாம்பான் மழையினால் விறகு கொண்டு வராமையால் உணவு செய்ய தாமதித்தது’ என்று கூறினர். அதுகேட்ட உமாபதியார் ‘நாளை அவர் வரின் நம்மிடைக் கொணர்க’ என்றனர்.

பெற்றான் சாம்பான் மறுநாள் திருமடத்திற்குச் சென்று உமாபதி சிவனாரைக் கண்டார். பெற்றான் சாம்பான் தன் வரலாற்றைக் கூறி, தான் பத்திரமாக வைத்திருந்த அம்பலவாணர் அருளிய கைச்சீட்டை (திருமுகம்) உமாபதி சிவனாரிடம் கொடுத்து வணங்கி நின்றார். உமாபதிசிவனார் அதனை எடுத்துப் பார்த்து, அதில் கண்ட செய்தியை உணர்ந்து, பெருமானுடைய திருவருளை எண்ணி வியந்து, அக்கணமே பெற்றான் சாம்பானுக்கு சத்தியோ நிருவாண தீக்கை அளித்து, முத்தியும் கொடுத்தார். இவ்வற்புத நிகழ்ச்சியைத் தாம் இயற்றியருளிய ‘குஞ்சிதாங்க்ரி ஸ்தவம்’ நூலில் உமாபதி சிவனார் குறிப்பிட்டருளினார்.

“சூதாதீனாம் விமுக்த ப்ரதமபி மஹிதம்
கௌரவம் பத்ரமூலம் ஸ்வம்
ந்ருத்தம் தர்சயித்வா சுகயதி நிதராம்
குஞ்சிதாங்க்ரிம் பஜேஹம்||”[9]

“பெற்றான் சாம்பானுக்கு முத்தி கொடுப்பதன் பொருட்டு, கைச்சீட்டளித்து, என்னை கௌரவப்படுத்தி, தனது நடனத்தையும் காட்டிப் பேரின்பம் தந்த அம்பலவாணரின் குஞ்சித பாதத்தை வணங்குகிறேன்” என்று அருளிச் செய்கிறார் உமாபதி சிவனார். இதுவே, இந்நிகழ்ச்சிக்கு அகச்சான்றாகத் திகழ்கிறது.

பின்வந்த மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களும், தம் சேக்கிழார் பிள்ளைத்தமிழில் இவ்வற்புதத்தை,

"தாயவொளி இருடபுபொன் மாளிகைத் தில்லை
சபாநடன நாதர்பெத்தான்
சாம்பானை உய்த்தனம் நிருவாண தீக்கையாற்
தகு முத்தி அடைவிஎன்றே
ஆயதிரு முகம் உய்த் திடப்பெற்ற கயிலாய
அம் பரம் பரையில் அளவா
அருள்உருவ மாய்அவ தரித்திட்ட மெய்ஞ்ஞான
அற்புத உமாபதி சிவன்"[10]

என்று பாடிப் போற்றுகிறார்.

முள்ளிச்செடிக்கு முத்தி

பெற்றான் சாம்பானுக்கு முத்தி கொடுத்த உண்மையை உணராது, பெற்றான் சாம்பான் மனைவி அரசனிடம் சென்று வேறுவிதமாகக் கூறினாள். அதுகேட்ட அரசன் இதன் உண்மையைக் கேட்கும்பொருட்டு மடத்திற்கு வந்தான். மடத்திற்கு வந்த அரசன் உமாபதி சிவனாரின் அருள்நிலையைப் புரிந்துகொண்டு, 'பெற்றான் சாம்பானுக்கு முத்தியளித்ததுபோல் மற்றொருவருக்கும் செய்து கொடுக்க வேண்டும்' என்று வேண்டினான்.

உமாபதி சிவம் அங்கிருந்த அனைவரையும் தம் கண்களால் நோக்கி, அவர்களில் யாரும் பக்குவ நிலையை அடையாதிருப்பது கண்டு, தாம் பூசித்த மூர்த்தியின் திருமஞ்சன நீராலே வளர்ந்த, கோமுகையின் பக்கத்தில் இருந்த முள்ளிச்செடி பக்குவ நிலையில் இருப்பதைக் கண்டார். அதன்மீது தம் அருட்பார்வையைச் செலுத்த அது ஆகாயத்தில் எழும்பி மறைந்தது. அதனால் அரசனும், பெற்றான் சாம்பான் மனைவியும் அமைதியடைந்து உமாபதி சிவனாரை வணங்கி மகிழ்ந்தனர்.

"திருநிறைந்த பார்வையினால் தேடரிய மோக்கமதை
உருநிறைந்த ஒரு சாம்பான் என்பாற்கும் ஓர் செடிக்கும்
அருள்நிறைந்த அன்று ஈந்த அறா அருளாளன்"[11]

என்று பாம்பன் சுவாமிகள், உமாபதி சிவனாரை ஏற்றிப் போற்றுவர். பின்னர்ச் சில காலம், சிவஞானச் செல்வராகிய உமாபதி சிவனார் தாம் பூசித்து வந்த ஆன்மார்த்த மூர்த்தியான அழகிய சிற்றம்பலமுடையாரை அருள் நமச்சிவாயரிடம் கொடுத்து, அடைந்தார்க்கு அருள் உபதேசம் செய்யும் முறையை விளக்கி, அம்பலவாணரை பூசித்துவரச் செய்தார். கொற்றவன் குடியிலே சித்திரை மாதம் அஸ்த நட்சத்திரத்தில் ஆனந்த அம்பலவாணரின் திருவடி நீழலை அடைந்தார்.

இன்றும் கொற்றவன்குடி மடத்தில் குருமூர்த்தமாக எழுந்தருளியிருக்கும் உமாபதி சிவனாருக்கு சித்திரை மாதம் அஸ்த நட்சத்திரத்தில் குருபூசை நடைபெற்று வருகிறது. இம்மடம் துறையூர் வீரசைவ ஆதீனத்தைச் சேர்ந்த குமாரதேவர் திருமடத்தின் மேற்பார்வையில் உள்ளது.

உமாபதி சிவனார் வாழ்ந்த இடமான, சிதம்பரம் தெற்கு வீதிக்கு இணையாகக் கிழக்குப் பக்கத்தில் உள்ள மாலைகட்டித் தெருவில் உள்ள இல்லத்தில், திருவாவடுதுறை ஆதீனம் கிளைமடம் அமைத்து, அதனைப் போற்றி வருகிறது.[12]

உமாபதி சிவனாரின் காலம்

உமாபதிசிவனார் அருளிய சங்கற்ப நிராகரணத்தில்,

"ஏழஞ்சு இரு நூறு எடுத்த ஆயிரம்
வாழும் நல்சகனம் மருவா நிற்ப" [13]

என வரும் தொடரில், அந்நூல் இயற்றப்பட்ட ஆண்டைக் குறிப்பிட்டுச் சொல்கிறார்.

ஏழஞ்சு இருநூறு எடுத்த ஆயிரம் என்பது சகஆண்டு 1235. சகஆண்டுடன் எழுபத்தெட்டைக் கூட்டினால் கிடைப்பது 1313. இதன்படி இந்நூல் இயற்றப்பட்ட ஆண்டு கி.பி. 1313ஆகும். எனவே, இந்த ஆண்டை வைத்துக் கொண்டுதான் பிற சாத்திர நூல்களின் காலத்தையும் அந்நூல்களின் ஆசிரியர்களின் காலத்தையும் நாம் கணக்கிட முடிகிறது.

இதன் மூலம் உமாபதி சிவனாரின் காலம் 13, 14 ஆம் நூற்றாண்டு என்று உறுதியாகக் கூறலாம். மேலும், உமாபதி சிவனாரின் காலம் 1270 - 1315AD. என்று சென்னைப் பல்கலைக்கழகத்தின் New Catalogues Catalogorum (Vol.II) கூறுகிறது.[14]

உமாபதி சிவனார் - சற்குரு

உமாபதி சிவனார் இளமையிலேயே தம் மரபிற்கு ஏற்ப வடமொழியும் தென்மொழியும் கற்று வேதங்களிலும், வேதாங்கங்களிலும் பயிற்சியுடையவராக விளங்கினார். இந்நிலையில், பராசர முனிவரின் குடியில் பிறந்து, சாம வேதம் ஓதும் மரபினில், 'மறை' என்னும் அடைமொழியால் சிறப்பிக்கப்பட்ட மறைஞான சம்பந்தரை ஞானாசிரியராகக் கொண்டார் உமாபதி சிவனார். அவரிடமிருந்து சைவ ஆகமங்களையும், சித்தாந்த விளக்கங்களையும், திருமுறைகளையும் முழுதும் கற்றுணர்ந்தார் என்று கூறலாம்.

மறைஞான சம்பந்தர் நூல் ஏதும் செய்யவில்லை. எனினும், சதமணிக்கோவை அவரால் இயற்றப்பட்டது என்று சில அறிஞர் கருதுவர். உமாபதி சிவனார் தமது சிவப்பிரகாச நூலின் பாயிரத்தில் சிவப்பிரகாச நூலினை எவ்வாறு அருளிச் செய்துள்ளோம் என்பதைக் காட்டி அருள்கிறார்.

"தெரித்தகுரு முதல்வர்உயர் சிவஞான போதம்
செப்பினர்பின்பு அவர்புதல்வர் சிவஞான சித்தி
விரித்தனர்மற்று அவர்கள்திரு அடிகள் போற்றி
விளம்பியநூல் அவைஇரண்டும் விரும்பி நோக்கிக்
கருத்தில்உறை திருவருளும் இறைவன் நூலும்
கலந்துபொது உண்மையெனக் கருதி யானும்

அருத்திமிக உரைப்பன்வளர் விருத்தம் நூறும்
ஆசில்சிவப் பிரகாசம் ஆகும் அன்றே" *(சிவ.11)*

இப்பாடலில், 'விளம்பிய நூல் அவை இரண்டும் விரும்பி நோக்கி' என்பது, தமக்கு முன்னே ஞானாசிரியர்களாக விளங்கிய மெய்கண்டார் அருளிய சிவஞானபோதம், அருள்நந்தி சிவனார் வழங்கிய சிவஞான சித்தியார் ஆகிய இரு நூல்களையும் குரு வாக்காகக் கொண்டும், 'இறைவன்நூல்' என்றமையால் வேதமாகிய சுருதியை இறைவன் வாக்காகக் கொண்டும் 'கருத்தில் உறை திருவருளும்' என்பதால் தமது அருளனுபவமாகிய சுவானுபத்தைக் கொண்டும் சிவப்பிரகாசத்தை அருளினார் என்பதாம்.

அருள்நந்தி சிவனார், மெய்கண்டான் நூல் என்று மட்டுமே குறிக்க, உமாபதி சிவனார் ***'தெரித்த குரு முதல்வரின் உயர் சிவஞான போதம்'*** என்று குறித்தருளுகிறார்.

இறைவன் திருவாய்மலர்ந்தருளிய வேத சிவாகமம், தமது ஆசாரியார் திருவாக்கு, தமது அருளனுபவம் பொருந்தத் தெரிவிப்பவரே சற்குரு ஆவார் என்னும் கருத்தில்,

"சொன்ன சுருதி குருவாக்குச் சுவானுபவம் ஒன்றத் தெரிவிப்பான் தேசிகன்" என்றருளிச் செய்வார் அம்பலவாண தேசிகர்.[15]

இங்ஙனம் சற்குருவின் இலக்கணத்தை, சிவப்பிரகாசத்தில் வரும் உமாபதி சிவனாரின் வாக்கையே கொண்டு அம்பலவாண தேசிகர் வரையறுத்தார் எனலாம்.

உமாபதி சிவனார் வாக்கு (அருளிய நூல்கள்)

சாத்திர நூல்கள் பதினான்கனுள் இவருக்கு முன்னர் இயற்றப்பெற்ற ஆறு நூல்கள் போக எஞ்சியுள்ள எட்டு நூல்களைச் செய்தவர் உமாபதி சிவனார். அவை, சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினா வெண்பா, போற்றிப் பஃறொடை, கொடிக் கவி, நெஞ்சுவிடு தூது, உண்மைநெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம் என்பனவாகும்.

சாத்திர நூல்களைத் தவிர, கோயிற்புராணம், திருமுறை கண்டபுராணம், சேக்கிழார் புராணம், திருத்தொண்டர் புராணம், திருப்பதிக் கோவை, திருப்பதிகக் கோவை, சிவசேத்திர சிவநாமக் கலிவெண்பா, ஞானசாத்திர பஞ்சகம் முதலிய இலக்கிய நூல்களையும், வடமொழியில் குஞ்சிதாங்க்ரி ஸ்தவம், பௌஷ்கர பாஷ்யம், நடராஜர் சஹஸ்ர நாமாவளி, நடராஜத்வனிமந்திரஸ்தவம் ஆகிய நூல்களையும் அருளிச் செய்தார்.

'திருவருட்பயன்' சாத்திர நூலுக்காக, திருமுறைப் பாடல்களைத் தொகுத்து தேவார அருண்முறைத் திரட்டு, ஆகமங்களிலிருந்து ஆகமச் சாரமாக விளங்குகின்ற சூத்திரங்களைத் தொகுத்து வடமொழியில் 'ஸதரத்தின ஸங்கிரஹம்' ஆகிய இரண்டும் உமாபதி சிவனாரால் தொகுக்கப்பட்ட நூல்களாகும்.

I.சாத்திரங்கள்

சங்கற்ப நிராகரண நூலை முற்றக் கற்றுச் சமய பேதங்களையும் சித்தாந்த நெறிகளையும் அறிந்து அந்த நன்னெறியின் உண்மைகளை **உண்மை நெறிவிளக்க**

நூலை ஓதுதலால் உணர்ந்து, பிறகு நெஞ்சிலே ஞானாசிரியரை நண்ணும் நாட்டத்தினை **நெஞ்சுவிடு தூது** நூலால் அடைந்து, அப்பால் ஞானாசிரியர் கற்பித்தருளும் சித்தாந்த நெறி ஒன்றையே கடைப்பிடித்து ஒழுகுவதெனக் கொடிகட்டித் துணிதலை **கொடிக்கவி** நூலறிவாற் கொண்டு, அங்ஙனம் தனக்கு நன்னெறி காட்டியும் நிறுத்தியும் உதவவல்ல தேசிகரைச் சிவமெனவே போற்றும் பண்பினைப் **போற்றிப் பஃறொடை** நூலைப் படிப்பதனால் புரிந்து, அவ்வாசான் அருளால் தனது ஐயப்பாடுகளையெல்லாம் கேட்டுத்தெளிதலை **வினாவெண்பா** நூல் கற்றலால் எய்தி, இதன் பின்னர் யாவும் திருவருட்செயலில் நிகழ்வனவே என்ற துணிவு தோன்றி நிலையுறுதலை, **திருவருட்பயன்** நூலினைப் பயின்று தோய்தலில் பெற்று, அம்முதிர்வினால் முடிவில் சிவப்பிரகாசத்தே கலந்து நிற்றலாகிய பேரின்ப வாழ்வினை **சிவப்பிரகாச** நூலினாற் பயனாகக் கொள்ளல் கூடும். இவ்வாறு கேசாதி பாதமுறையாகச் சித்தாந்த அட்டக நூல்களை விவரிக்கின்றார் தே.ஆ.ஸ்ரீநிவாஸன்.[16]

சிவப்பிரகாசம்

நூறு விருத்தப்பாக்களைக் கொண்ட இந்நூல், ‘பாயிரம்’, ‘பொது’, உண்மை’ என மூன்று பகுதிகளாக உள்ளது.

பழமையான நூல்கள் என்பதால் அவை யாவும் உயர்ந்தன என்பது தவறு. அவற்றுள் சில ஒதுக்கத்தக்கனவாயும் இருக்கலாம். புதிதாகத் தோன்றிய நூல்கள் என்பதனாலேயே அவை யாவும் குறையுடையன என்பதும் தவறு. அவற்றுள் சில ஏற்றுக்கொள்ளத் தக்கனவாகவும் இருக்கலாம்.

“தொன்மையவாம் எனும்எவையும் நன்றுஆகா இன்று
தோன்றியநூல் எனும்எவையும் தீதுஆகா” *(சிவ.12)*

பழமையான நூல்கள் இருக்க, புதிய நூல்கள் ஏன் இயற்றப்படவேண்டும் என்று கேட்போருக்கும், படிப்போருக்கும் விடையளிக்கும் முகமாக இவ்விரண்டு அடிகளில் நூல் ஆராய்ச்சியைப் பற்றிய கருத்தை வலியுறுத்துகிறார் உமாபதி சிவனார்.

“புராண மித் ஏவ ந ஸாதுசர்வம்
ந ஜனபி காவ்யம் நவாமித்ய வத்யம்” [17]

(For a poem is not good because it is old; nor is every new poem to be blamed because it is new) என்று காளிதாசர் தம்முடைய ‘மாளவிகாக்னிமித்ரம்’ என்னும் நூல் முன்னுரையில் குறிப்பிடுவது இங்கு நோக்கத்தகும்.

புன்கூர்ச் சிவப்பிரகாசர் என்பார் சிவப்பிரகாசத்தில் காணும் கருத்துகளை விளக்கி ‘சிவப்பிரகாசக் கட்டளை’ என்னும் நூலை எழுதியிருக்கிறார்.[18]

தருமபுர ஆதீனத்தின் அடியவரும், வெள்ளியம்பலத் தம்பிரானின் மாணவரும் காவை அம்பலநாதத் தம்பிரான் சிவப்பிரகாசச் செய்யுட்களுக்கு ‘கொளு’க்களை எழுதியுள்ளார். இக்கொளுக்கள் கழகம் வெளியிட்ட மதுரைச் சிவப்பிரகாசர் உரையில், ஒவ்வொரு சிவப்பிரகாச விருத்தத்தின்கீழ் வெளியிடப்பட்டுள்ளன.

“சிவப்பிரகாசச் செய்யுள் ஒவ்வொன்றின் கருத்தையும் சூத்திர வடிவில் எடுத்துக்கூறும் நூல் ஒன்று உண்டு. அதன் பெயர் ‘சிவப்பிரகாசக் கருத்துரைச் சூத்திரம்’ அதன் ஆசிரியர் காழிப் பழுதை கட்டிச் சிற்றம்பல நாடிகள்” என்பார் டி.பி.சித்தலிங்கையா.[19]

சீகாழி கண்ணுடைய வள்ளலார் எழுதிய ‘திருநெறிவிளக்கம்’ சிவப்பிரகாசத்தை ஒட்டிச் செல்கிறது. “சிவப்பிரகாசத்துக்குப் பின் சென்ற நூலாகையால் சத்தம் வேறுபட்டும் அத்தமொன்றுபட்டும் வருகையாலே அது காட்ட வேண்டியதாயிற்று” என்பார் மதுரைச் சிவப்பிரகாசர்.

“சிவஞான போதத்தாற் சென்மவிடாய் தீர்ந்து
சிவஞான சித்தியாற் றேறி - சிவஞான
போதத்தை மெய்கண்டான் போதித்தான் சித்தியினைச்
சாதித்தான் றானருணந் தி”

மற்றிரண்டு மாய்ந்து மறுவி லுமாபதியார்
கொற்ற சிவப்பிரகா சத்தொன்னூ - லற்றநிலை
ஆங்கதுவே சீவன்முத்த னாக்குவிக்கு மந்நூலே
ஓங்குகநீ டூழியும்பின் னும்”

என்று சிவஞான வள்ளலார் சிவப்பிரகாசத்தின் பெருமையை விதந்து கூறுவாராயினர்.[20]

திருவருட்பயன்

உலகியல், மெய்ந்நெறி என்னும் இருவகை நெறிகளுள் உலகியலை உணர்த்துவதாய் திருவள்ளுவரது திருக்குறளுக்குப்பின் மெய்ந்நெறி உணர்த்தும் திருக்குறளாய் அமையுமாறு திருவருட்பயனைச் செய்தருளினார் உமாபதிசிவனார். ‘அகர முதல எழுத்தெல்லாம்’ என்று திருவள்ளுவர் தொடங்கியது போன்றே “அகர உயிர்போல’ எனறே தொடங்குகிறது திருவருட் பயன். அதனால் இது, ‘சிவநெறித் திருக்குறள்’ என்று அழைக்கப்படுகிறது.

“தெள்ளுநீர்ப் புலமை வள்ளுவன் தனக்கோர்
நற்றுணை உடைத்தெனக் கற்றவர் களிப்ப
அருட்பயன் என்னா அதற்கொரு நாமம்
தெருட்படப் புனைந்து செந்தமிழ் யாப்பிற்
குறளடி வெள்ளை ஒரு நூறு இயம்பினன்” [21]

என்று திருவருட்பயன் சிறப்புப் பாயிரம் கூறுகிறது.

இந்நூல் பத்து அதிகாரங்களில் நூறு குறட்பாக்களால் சித்தாந்தக் கருத்துகளைப் பேசுகிறது. பதிமுது நிலை, உயிரவை நிலை, இருள்மல நிலை, அருளது நிலை,

அருளுறு நிலை, அறியும் நெறி, உயிர் விளக்கம், இன்புறு நிலை, ஐந்தெழுத்து அருள்நிலை, அணைந்தோர் தன்மை என்பன இந்நூலின் பத்து அதிகாரங்களாகும்.

சிவப்பிரகாசமும், திருவருட்பயனும் இணைந்து செல்பவை. பெயரிலும் அவை ஒற்றுமை உடையவை. சிவப்பிரகாசம் என்பது சிவனது ஒளி எனப் பொருள்பட்டுத் திருவருளையே குறிப்பதாகும்.

“சிவப்பிரகாசத்தில் ஞான வாய்மையும், அதன் பயனும் ஆகிய இரண்டையும் சுருக்கமாகவும் செறிவாகவும் கூறிச்சென்ற உமாபதி சிவனார் திருவருட்பயனில் அருளது நிலை, அருளுரு நிலை, அறியும் நெறி, உயிர் விளக்கம், இன்புறு நிலை என்ற ஐந்து அதிகாரங்களில் திருவருளின் இயல்பையும், அதனால் ஆன்மா அடையும் பயனையும் படிப்படியாக இனிமையான முறையில் மாணவர்களுக்கு ஏற்றமுறையில் விளக்கிச் சென்றுள்ள பான்மை வியக்கத்தக்கதாய் உள்ளது.” என்பார் ஆ.ஆனந்தராசன்.[22] தமது திருவருட்பயன் வழித்துணை விளக்கவுரையில் சிவப்பிரகாசத்தை சுமார் பதினைந்து இடங்களில் எடுத்தாண்டு, திருவருட்பயனுக்குள்ள தொடர்பை விளக்கிச் செல்கிறார்.

சிவப்பிரகாசத்தில் ***‘செலஅரிதாய் செல்கதியாய்ச் சிறிதாகிப் பெரிதாய்’*** என்னும் தொடரை திருவருட்பயனில், ***‘பெருமைக்கும் நுண்மைக்கும் பேரருட்கும் பேற்றின் அருமைக்கும்’*** என்று எதிர்நிரலாக அமைத்தார் உமாபதிசிவனார்.

சித்தாந்த நூற்பொருள்களை அறிவதற்குத் திருவருட்பயனை முதற்கண் பயில்வது மரபாகும். சாத்திர நூல்களுள் இதுவே பெரிதும் பயிற்சியில் உள்ளது.

வினா வெண்பா

“வினாவாவது அறியலுறவு வெளிப்படுவது. அது மூவகைப்படும். அறியான் வினா, ஐய வினா, அறிபொருள் வினாவுமென. அறியான் வினா பொதுவகையில் அறியப்பட்டு சிறப்புவகையால் அறியப்படாமை நோக்கி வினவுவது. இதுவோ? அதுவோ? என்று வினவுவது ஐய வினா. அறிபொருள் வினா அறியப்பட்ட பொருளையே ஒரு பயன் நோக்கி வினவுவது. மேலும், அறிபொருள் வினா அறிவொப்புக் காண்டலும், அவனறிவு தான் காண்டலும், மெய்யவற்குக் காட்டலும் என விரியும்” என்று வினாவின் வகையும், பயனையும் கூறுவர் சேனாவரையர்.[23]

திருஞானசம்பந்தர் தேவாரத்தில், ***“நல்லிமையோர் தொழு பொற்கழலீர் சொலீர்’*** [24] என்று இறைவனை நோக்கியும், ***“வினவினேன் அறியாமையில் உரை செய்ம்மினீர் அருள் வேண்டுவீர்”*** [25] என்று அடியார்களை நோக்கியும் இறைவனுடைய இயல்புகளை வினவும் முறையில் சில பதிகங்கள் அமைந்துள்ளன.

“கருத்தனைப்பொழில் சூழுங்கண்டியூர்
வீரட்டத்துறைக் கள்வனை
அருத்தனைத்திறம் அடியார்பால் மிகக்
கேட்டுகந்த வினாவுரை” [26]

எனும் திருக்கண்டியூர் வீரட்டப் பதிகத்தின் திருக்கடைக்காப்பில், திருஞானசம்பந்தப் பெருமான் வாக்கினாலேயே இப்பதிகங்கள் “வினாவுரை” என்றே குறிக்கப்பட்டன.

எனவே, கேட்போருக்கு உய்த்துணர்வு உண்டாதற்பொருட்டும், சில கருத்துக்களைச் சிந்தனை செய்யுமாறு தூண்டுதல்பொருட்டும் வினா கேட்கப்படுவதால் ‘கேட்டு உகந்த வினாவுரை” என்று திருமுறை கூறுகின்றது.

இதன் அடிப்படையிலேயே இருபா இருபஃது என்னும் நூலில் அருள்நந்தி சிவனார் தம் ஞானாசிரியரான மெய்கண்ட தேவரைப் போற்றிப் பல்வேறு வினாக்களை வினவும் முறையிலேயே சைவ சித்தாந்த உண்மைகளை உணர்த்தியருளினார். வினாக்கள் யாவற்றுக்கும் நேரடியான விடைகள் தரப்படவில்லை எனினும் வினாக்கள் அமைந்திருக்கும் விதத்தில் விடைகள் சுட்டப்படுகின்றன.

ஆனால், உமாபதி சிவனார் அருளிய வினா வெண்பா, தம் ஞானாசிரியர் மறைஞான சம்பந்தரை வினவும் முறையில் வினாக்களாகவே அமைகின்றது. இவ் வினாக்களுக்குரிய விடைகளை நுணுகி ஆராய்ந்து அறிந்துகொள்ள வேண்டும். இந்நூல் மொத்தம் பதின்மூன்று வெண்பாக்களால் ஆனது. முதல் பன்னிரண்டு வெண்பாக்களும் வினாக்களாகவும், பதின்மூன்றாவது வெண்பா நூற்பயனைக் கூறுவதாகவும் அமைந்துள்ளது.

நூற்பயன் கூறும் வெண்பாவில், ஞானாசிரியரிடத்து வினாவி உண்மைப் பொருளை உணர்ந்து கொள்ளவேண்டும் என்றும், ஏனையோர் இதன் உண்மையை அறியவில்லையெனில், ‘ஊமன் கனவில் பால் குடித்ததை ஒக்கும்’ என்றும் கூறப்படுகிறது.

போற்றிப் பஃறொடை

உமாபதி சிவனார் தம் ஞானாசிரியராகிய மறைஞான சம்பந்தர் குருமூர்த்தியாக வந்து தம்மை ஆட்கொண்ட அருட்செயல் குறித்து, அவரைச் சிவபரம்பொருளாகவே எண்ணிப் பலவாறு போற்றி மகிழ்கிறார். ‘போற்றி’ என்று ஞானாசிரியரைப் புகழ்ந்து வணக்கம் கூறுவதால் இதனைச் **‘சாத்திரத்தில் தோத்திரம்’** என்று கூறலாம். பஃறொடை யாப்பில் 95 கண்ணிகளை உடையது. நூல் இறுதியில் ஒரு வெண்பாவைக் கொண்டுள்ளது.

இறைவன் தொழிலனைத்தும் ஆன்மாக்கள் உய்தற்பொருட்டே என்பதை நினைவுகூர்ந்து, தமக்குச் சிவஞானம் தந்தருளிய இறைவனின் கருணையை வாழ்த்தி, பதினான்கு முறை போற்றி வணங்குகிறது இந்நூல். இது சித்தாந்த நூல் எண்ணிக்கையை நினைவூட்டுவதாகவும் கொள்ளலாம்.

கருணை காரணமாக ஐந்தொழில்கள் இயற்றி, ஆன்மாக்கள் பாசத்திலிருந்து விடுபடுவதற்கு வேண்டிய அனுபவங்களைத் தந்து, அனுபவம் முதிர்ச்சியடையும் பொழுது இறைவனே குருவாக வந்து, சத்திநிபாதம் கொடுத்து, இறுதியில் முத்தியும் அருள்வது பற்றிக் கூறுகிறது.

இக்கருணையை வியந்து 'ஆராத நன்றி உணர்வினால்' நூலின் இறுதியில், "ஊன் உயிர்தான் முன் கண்ட காலத்தும் நீங்காத முன்னோனை என்கொண்டு போற்றிசைப்பேன் நான்" என்று கூறி நிறைவு செய்கிறார் ஆசிரியர்.

கொடிக்கவி

தில்லை அம்பலவாணப் பெருமானது கோயில் கொடி ஏறும் பொருட்டு பாடப்பட்ட நூலாகும். முதற்பாடல் கட்டளைக் கலித்துறையிலும், மற்றைய மூன்று பாடல்கள் வெண்பா யாப்பிலும் பாடப்பெற்றுள்ளன.

கொடியின் சிறப்பு, கொடியில் எழுதப்படும் விடையின் (காளை) உருவம், திருவிழாவின் நோக்கம், திருவருளால் ஆன்மாக்கள் மும்மலம் நீங்கி, முதல்வன் திருவடியைச் சேரும் வழி ஆகியன கூறப்படுகின்றன. மேலும், திருவைந்தெழுத்தின் சிறப்பும், அதன் வகைகளும் அதன் துணைகொண்டு, ஆன்மாவின் அறிவை மறைக்கும் மலத்தை நீக்கி அடையும் சிவப்பேற்றையும் நன்றாக விளக்கி கூறுகிறது.

இன்று கோயில் திருவிழாக் காலங்களில் முதல் நாள் கொடியேற்றத்தின் போது இச் சாத்திர நூலை சாற்றியே கொடியேற்றும் மரபு உள்ளது.

நெஞ்சுவிடு தூது

உமாபதி சிவனார், தம் ஞானாசிரியராகிய மறைஞானசம்பந்தரைத் தலைவராகவும், தம்மைத் தலைவியாகவும் கொண்டு, தமது நெஞ்சைத் தூதாக விடுத்து, அவரிடம் சென்று, அவர்தம் அருளைப் பெற்று, அதற்கடையாளமாக, அவரிடமிருந்து திருக்கொன்றை மாலையை வாங்கி வருமாறு கேட்பதாக அமைந்துள்ளது. சாத்திர நூல்களுள் இது ஒன்றே சிற்றிலக்கிய வகையில் அமைந்தது.

தூது என்ற சிற்றிலக்கிய வகையை இன்றைய தொலைத் தொடர்பு இயலின் வழியாகக் காணலாம்.

i) கருத்தைச் சொல்பவர் (Addresser) - உமாபதி சிவனார்

ii) கருத்தைப் பெறுபவர் (Addressee) - மறைஞான சம்பந்தர்

iii) சொல்லப்படும் கருத்து (Message passed between them) - ஆன்மா இறைவனை அடைந்து முத்தி பெறுதல்

iv) இருவருக்குமிடையே பரிமாறப்படும் குறிகள் (code which makes that message intelligiable) - பதி பசு பாசம்

v) வாய்ப்பான ஊடகம் (Contact or medium) - நெஞ்சம்

vi) ஊடகம் உணர்த்தும் பொருள் (content to which medium reports) - சித்தாந்த மெய்யியல்

என இவ்வாறு நெஞ்சுவிடு தூதை தொலைத் தொடர்பு இயலில் அமைத்துக்காட்டலாம்.

இந்நூல் கலிவெண்பா யாப்பில் அமைந்துள்ளது. 125 கண்ணிகளை உடையது. நூலின் இறுதியில் ஒரு தனி வெண்பா உள்ளது.

இறைவனின் பெருமை, சிற்றறிவுடைய ஆன்மாக்களின் சிறுமை, பாசங்களின் இயல்பு ஆகியன முற்பகுதியில் விளக்கப்படுகின்றன. தாம் அடையத்தக்க தலைவனின் பெருமையைக் கூறுமுகமாக அவனைச் சிவனெனவே கொண்டு 'தசாங்கங்களின் இயல்பு' இடைப்பகுதியில் கூறப்படுகிறது. அவை, 'நற்குணமே குன்று; இன்பமே ஆறு; ஆகமங்கள் எட்ட முடியாத நாடு; சிவஞானமே ஊர்; அருளே மலை; சத்தியே குதிரை; ஞானமே யானை; ஆறு சமயங்களும் அடைய முடியாதது அவனுடைய கொடி; நாதமே முரசு; திருமால், பிரம்மா ஆகியவர்கள் உள்ளங்களுக்கு அப்பாலும் செல்லக்கூடிய ஞான ஆணை" என்பனவாகும்.

தலைவனை அடையுங்கால் இடையே உலகாயதன், மாயாவாதி, புத்தன், சமணன் முதலிய புறச்சமயத்தோரிடத்து நெஞ்சு சேரக்கூடாத இடங்கள் என்று சொல்லி, தம் தலைவனிடத்துச் சென்று கொன்றை மாலை வாங்கி வரவேண்டும் என்பது இந்நூலின் இறுதிப்பகுதியில் சொல்லப்படுகிறது.

குமரகுருபரர் தம் ஞானாசிரியர் மாசிலாமணி தேசிகரிடம் தீட்சையும் உபதேசமும் பெற்ற பிறகு, குருவருளின் திருவருளைப் போற்றிப் பாடிய 'பண்டார மும்மணிக் கோவை'யை, நெஞ்சுவிடு தூது, போற்றிப் பஃறொடை ஆகிய இரண்டு நூல்களுடன் ஒருங்கு வைத்துஉணர்வது இங்கு நோக்கத்தகும்.

அடிமுடி தேடிய வரலாற்றுடன் தொடங்குகிறது நெஞ்சுவிடுதூது. பண்டார மும்மணிக் கோவையும் இதனை அடியொற்றியே தொடங்கும்.

உமாபதி சிவனார் தம் ஞானாசிரியர் மறைஞான சம்பந்தரை, ஞானம் என்னும் யானையைத் தனக்கு உரிமையாக உடையவன் என்பதாக, ***'ஞான ஆனையான்'*** என்று உருவகம் செய்தார்.

> *"ஊனிடைப் பிறவிக் கானகத்து உழலாது*
> *ஏனைய முத்திநாடு எய்தஓர்*
> *ஞான வாரணம் நல்குதி"* [27]

என்று குமரகுருபரர், மாசிலாமணி தேசிகரிடம் 'முத்தி நாட்டை யான் அடைய ஓர் ஞானமாகிய யானையை எனக்கு அருள்வாய்' என வேண்டுகிறார். ஞான ஆனையை உடையவரிடத்தில்தானே ஞான ஆனையை வேண்ட முடியும்.

திருக்குறளின் வழியிலேயே 'திருவருட்பயன்' செய்த உமாபதி சிவனார், இந்நூலில் திருக்குறளை எடுத்தாண்டு, திருக்குறளைத் 'திருவள்ளுவர் உரைத்த மெய் வைத்த சொல்' என்றும், திருவள்ளுவரை 'நிலைத்தமிழின் தெய்வப்புலமைத் திருவள்ளுவர்' என்றும் போற்றுகின்றார்:

> *"தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி*
> *வலைப்பட்டார் மற்றையவர் என்று - நிலைத்தமிழின்*
> *தெய்வப்புலமைத் திருவள்ளுவர் உரைத்த*
> *மெய்வைத்த சொல்"* [28]

திருக்குறள் ஓர் அறநூல் என்ற அளவில் கொள்ளப்படாமல் மெய் உணர்தலுக்குத் துணை செய்யும் என்று சைவச் சான்றோர்கள் கொண்டார்கள் என்பதற்கு இஃது ஓர் எடுத்துக்காட்டு.

கொன்றை, பொன்னார் மேனியனாகிய சிவபெருமானைப் போன்று பொன்னிறம் வாய்ந்த பூவாகும். ஐந்திதழ்களையுடைய இம்மலர் சிவபெருமானுக்குரிய மந்திரமாகிய திருவைந்தெழுத்தின் அடையாளமாகும். இவ்விதழ்களின் மேலாகத் தமிழ் ஓகார வெழுத்தமைப்பில் திருவாசிபோல் வளைந்துள்ள முனை ஓங்காரமாகிய பிரணவத்தின் அமைப்புடையது. இவ்வாறு திருவைந்தெழுத்தின் அமைப்பில் உருவும் நிறமும் வாய்ந்த கொன்றை மலர் ஐந்தெழுத்தின் உருவாகி நின்ற இறைவனுக்குரிய அடையாளப் பூவாயிற்று எனபர் பெரியோர்.[29]

மறைஞான சம்பந்தர் ஞானத்தை அருளும் சிவபரம் பொருளே யாதலால், அவருக்கு உரிய அடையாளப் பூவாகிய கொன்றை மாலையை விரும்பினார் உமாபதி சிவனார் எனலாம்.

உண்மைநெறி விளக்கம்

விருத்தப்பாக்களால் ஆன ஆறு பாடல்களை உடையது. இவ் ஆறு பாடல்களில் பத்துப்பொருள்கள் விளக்கப்படுகின்றன. முதற்பாடல் தத்துவ ரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி என்ற மூன்றையும், இரண்டாம் பாடல் ஆன்ம ரூபம், ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி என்ற மூன்றையும், எஞ்சிய நான்கு பாடல்களும் முறையே சிவ ரூபம், சிவ தரிசனம், சிவ யோகம், சிவ போகம் ஆகிய நாற்பொருள்களையும் விளக்கி நிற்பன. இப்பத்தும் ஞானப்பாதையின் பத்துப் படிகளாகும். இவை, 'தச காரியம்' என அழைக்கப்படுகின்றன.

சங்கற்ப நிராகரணம்

சங்கற்பம் என்பது கொள்கை விளக்கம். நிராகரணம் என்பது கொள்கை மறுப்பு. அகவற்பாவில் அமைந்துள்ள இந்நூல் 20 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

மாயா வாதம், ஐக்கிய வாதம், பாடாண வாதம், பேத வாதம், சிவசம வாதம், சங்கிராந்த வாதம், ஈசுரஅவிகார வாதம், நிமித்தகாரண பரிணாம வாதம், சைவ வாதம் என்னும் ஒன்பது மதங்களின் கொள்கைகள் அவ்வச் சமயத்தாரால் கூறப்பட்டு, அதற்கு அடுத்த படியில் உள்ள சமயத்தாரால் முறையே மறுக்கப்படுகின்றன.

தில்லையம்பதியில், பொன்னம்பலத்தில், திருக்கூத்து இயற்றும் அம்பலவாணப் பெருமானின் ஆனித்திருவிழாவின் ஆறாம் திருநாளில், திருத்தேர் மண்டபத்தில் சமய வாதி எண்மர் வீற்றிருந்து, அவர்களின் நடுவில் மெய்கண்ட தேவ நாயனாரின் திருவருள் கைவரப்பெற்ற சைவ சித்தாந்தப் பெரியார் ஒருவர் இருந்து, அச் சமயவாதிகளின் கருத்தை மறுப்பதுபோல இந்நூலை அமைத்துள்ளார் உமாபதி சிவனார்.

நிறைவாக, சித்தாந்த நெறியின் தெளிபொருள் சிவப்பிரகாச நூலில் விரிவாக விளங்க உரைக்கப்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டுகின்றார்.

இந்நூலில், சமயக் கோட்பாடுகளை உள்ளவாறு உணர்ந்து, அந்த அந்த சமயத்திற்கு மறுப்புகளையும் கூறி, சித்தாந்த மரபு வழிவந்த நூல் நுவலும் உண்மைகளை எடுத்துரைக்கும் ஓர் தத்துவ அறிஞராகத் திகழ்கிறார் உமாபதி சிவனார்.

சங்கற்ப நிராகரணத்தை அடியொற்றி, அம்பலவாண தேசிகர் அருளிய சித்தாந்தப் பஃறொடையில் சித்தாந்த சைவத்தோடு மாறுபடுகின்ற சமயங்களை மதமும் மறுதலையுமாக மறுத்துள்ளமையைக் காணலாம்.[30]

ii.இலக்கிய நூல்கள்

கோயிற் புராணம்

தில்லைத் திருச்சபையில் திருநடனம் அருளிப் புலிக்கால் முனிவருக்கும், பதஞ்சலி முனிவருக்கும் முத்தியளித்த வரலாறும், சிம்மவர்மன் (இரணியவர்மன்) பேறுபெற்ற வரலாறும் இந்நூலில் விளக்கப்படுகின்றன.

இந்நூல் வாழ்த்து, பாயிரம், வியாக்கிரபாதச் சருக்கம், பதஞ்சலிச் சருக்கம், நடராசச்சருக்கம், இரணியவர்மச் சருக்கம், திருவிழாச் சருக்கம் எனும் ஐந்து சருக்கங்களாக 415 பாடல்களைக் கொண்டுள்ளது. தில்லைக் கோயிலின் பெருமையைக் கூறுவதே இந்நூலின் நோக்கமாகும்.

தல புராணங்களில் முதலில் எழுதப்பெற்றது கோயிற் புராணம் என்பது குறிப்பிடத்தக்கது.[31]

திருமுறை கண்ட புராணம்

சோழப் பேரரசன் இராசராசன் சைவத் திருமுறைகளைத் தேடித் தொகுக்கும் முயற்சியில் ஈடுபட்டதையும், திருநாரையூர் நம்பியாண்டார் நம்பி திருமுறைகளைத் தொகுத்து முறைப்படுத்தியதையும் 46 செய்யுள்களால் கூறுகிறது.

பதினொரு திருமுறைகளும் தொகுக்கப்பட்ட முறையையும், பன்னிரண்டாம் திருமுறை அவற்றோடு சேர்க்கப்பட்டதையும், மூவர் பாடிய தேவாரங்களின் தொகைகளையும், தேவாரப் பதிகங்களின் பண் அமைப்புகளைப் பற்றியும் அதன் வகைகளைப் பற்றியும் இந்நூல் குறிப்பிடுகிறது.

சேக்கிழார் புராணம்

திருத்தொண்டர்களின் பெருமையைப் போற்றிய சேக்கிழாரின் அருமையைப் பேசுவது. சேக்கிழாரின் வரலாற்றை விளக்கும் முறையில் 103 செய்யுள்களால் இயற்றப்பட்டது. மேலும், பெரியபுராணம் தோன்றிய வரலாற்றைச் சொல்வதனால் இது ‘திருத்தொண்டர் புராண வரலாறு’ என்றும் அழைக்கப்படுகிறது.

> “மதுர விராமா யணகதை யுரைசெய்த
> வான்மிக பகவனும் ஒப்பல்ல
> விதிவழி பாரதம் உரைசெய்து கரைசெய்த
> வேத வியாதனும் ஒப்பல்ல

சிதைவற ஆயிரம் நாவுடன் அறிவுள
சேட விசேடனும் ஒப்பல்ல
பொதிய மலைக்குறு முனிவனும் ஒப்பல்ல
புகழ்புனை குன்றைமுனிக்கு என்பார்" [32]

புகழ்மாலை பூண்ட சேக்கிழார் பெருமானுக்கு, மதுரமாகிய இராமாயண காவியத்தைச் செய்த வான்மிக முனிவரும் ஒப்பல்ல; பாரதத்தைக் காவியமாகச் செய்து நீதிகளை வரையறுத்த வேதவியாசரும் ஒப்பல்ல; ஆயிரம் நாவோடு அறிவின் மேம்பட்ட ஆதிசேடனும் ஒப்பல்ல; பொதியமலையின் அகத்திய முனிவரும் ஒப்பல்ல" என்று சேக்கிழாரை வியந்து பாராட்டுகிறார் உமாபதிசிவனார்.

திருத்தொண்டர் புராணசாரம்

பெரிய புராணத்தில் வரும் 63 நாயன்மார்கள், 9 தொகை யடியார்களின் வாழ்க்கையின் தனிச்சிறப்பை 78 விருத்தங்களால் இனிது கூறுகிறது.

சிவனடியார்களை சிவமாகவே கொண்டு வழிபடல் வேண்டும் என்பதை விளக்குவதற்காகவே உமாபதி சிவனார் இதை இயற்றியிருக்கிறார். சேக்கிழாரின் காப்பியத்திற்கு 'காப்பியச் சுருக்கமாக' இஃது அமைந்துள்ளது எனலாம்.

திருப்பதிக் கோவை

தில்லையாகிய கோயில் முதலாக நொடித்தான் மலை ஈறாக உள்ள சைவத் திருத்தலங்கள் இருநூற்று எழுபத்து நான்கினையும், பதினான்கு திருவிருத்தங்களில் தொகுத்துக் கூறுகிறது.

புராணங்களாலும், திருமுறைகளாலும் சிதம்பரம் போற்றப்பெற்றிருந்தாலும் 'கோயில்' என்றதும் 'தில்லை' என்னும் பெருமையைத் தேடித்தந்தவர் உமாபதி சிவனார். 'கோயில் திருவேட்கள நெல்வாயில்' என்றே திருப்பதிக் கோவையில் 'கோயில்' என்று தில்லையை முன்வைத்தே தொடங்குவதால், 'தலமுறைத் தேவாரம்' தில்லையை முன் வைத்தே தொகுக்கப்பட்டது. இப்பெருமை உமாபதி சிவனாரைச் சாரும்.[33]

இந்நூலில், இத்திருத்தலங்களைத் 'தாகமுடன் நினைப்போர்க்கும், துதிப்போர்க்கும் வினைகள் சாரா; பிறப்பு அகலும்; சத்திய முத்தியும் உண்டு' என்று பயன் கூறி நிறைவு செய்கிறார் உமாபதி சிவனார்.

திருப்பதிகக் கோவை

சிவத்தலங்கள் இருநூற்று எழுபத்து நான்கிலும் தேவார மூவர் பாடிய பதிகங்களை எண்ணி, மொத்தப் பதிகங்கள் 749 என்று கூறுகிறது.

749 பதிகங்களும் தலமுறையில் அமையும் பாகுபாட்டினை இக்கோவையில் பதினான்கு பாடல்களில் செறிவாக அமைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

சிவசேத்திர சிவநாமக் கலிவெண்பா

திருப்பதிகளையும், திருப்பதிகங்களையும் தொகுத்தாற் போன்று திருத்தலங்களில் எழுந்தருளியுள்ள அம்மையப்பரின் திருநாமங்களைத் தொகுத்துக் கூறுவது. கலிவெண்பா யாப்பில் 301 கண்ணிகளில் இயற்றப்பட்டுள்ளது.

மாணிக்கவாசகரால் பாடப்பெற்ற பதினான்கு திருத்தலங்களும், முருகப் பெருமானின் ஆறு திருத்தலங்களும் இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளன.[34]

தமிழில் இயற்றப்பட்டுள்ள ஓர் அரிய படைப்புமுறை நூல் என்று இந்நூலைக் குறிப்பிடலாம்.

ஞான சாத்திர பஞ்சகம் அல்லது .ஞான சரிதை

ஞான பூஜா கரணம், ஞான பூசை, ஞான தீட்சை அல்லது ஞான தீட்சா விதி, ஞானாந்தியேட்டி, போஜன விதி என்னும் ஐந்து சிறு நூல்களைக் கொண்டது இந்தப் பஞ்சகம்.

i) ஞான பூஜா கரணம் : சிவஞானத்தை எய்திய ஒருவர் கிரியைகள் ஏன் செய்ய வேண்டும் என்பதை தடை விடைகளால் சொல்வது. இந்நூலில் 30 செய்யுள்கள் உள்ளன.

ii) ஞான பூசை : சீவன் முத்தர்கள் செய்யும் வழிபாடுகளைப் பற்றிச் சொல்வது. இது 18 செய்யுள்களைக் கொண்டது.

iii) ஞான தீட்சா விதி : ஞானதீக்கை திருவிருத்தம் எனவும் வழங்கப்படும். எட்டுச் செய்யுள்களில் தீட்சையின் விளக்கங்களைத் தருகிறது.

iv) ஞானந்தியேட்டி : இரண்டு செய்யுள்களில் சீவன் முத்தனாகிய இல்லறத்தானின் கிரியைகளைச் சொல்வது.

v) போஜன விதி: போஜன விதியைப் பற்றி நான்கு செய்யுள்களால் சொல்வது. பிச்சை ஏற்பதையும், அவ்வுணவை எவ்வாறு அருந்த வேண்டும் என்பதையும் சொல்வது

iii. வடமொழி நூல்கள்

குஞ்சிதாங்க்ரி ஸ்தவம்

தில்லை அம்பலவாணரின் தூக்கிய திருவடியின் பெருமைகளை 313 சுலோகங்களில் கூறுகிறது. இவ்விருத்த சுலோகங்கள் யாவும் பாதம் ஒன்றுக்கு 21 எழுத்துக்கள் அமைய இயற்றப்பட்டுள்ளன. சுலோகங்கள் யாவும் ‘குஞ்சிதாங்க்ரிம் பஜேஹம்’ என்னும் முடிபோடு விளங்குகின்றன.

தூக்கிய திருவடி, அம்பிகையின் திருவடியாகும். ‘குஞ்சிதாங்க்ரி’ (குஞ்சித அங்க்ரி) என்ற வடமொழி எழுத்துக்களுக்கு கடபயாதி சங்க்யை வழியாகக் கணக்கிட்டால் பதினைந்து வரும். இது ஸ்ரீவித்யைக்குரிய பஞ்சதசாக்ஷரீ மந்திரத்தைக் குறிக்கும். இதனை, புவனாபதிச் சக்கரத்தில் திருமந்திரம் கூறும்.[35] உமாபதி சிவனார் இளமையில் ஸ்ரீவித்யா உபாசனை பெற்றதால் இதனைக் குறிப்பாக உணர்த்தினார் எனலாம்.

இந்நூலில் வேதங்களைப் போல இருபத்தெட்டு ஆகமங்கள் சிறப்பித்துக் கூறப்படுகின்றன.

பௌஷ்கர பாஷ்யம்

'புஷ்கரம்' என்றால் தாமரை மலர். அதில் தேன் இருப்பதுபோல், அதிக இனிமையான சைவ ஆகம சித்தாந்த முக்த்யுபாயத்தை புஷ்கலமாகவும், பூரணமாகவும் விளக்குவது பௌஷ்கர ஸம்ஹிதை. இருபத்து எட்டு சைவ ஆகமங்களில் 'பாரமேச்வரம்', அதன் ஏழு உபாகமங்களுள் ஒன்று பௌஷ்கராகமம். இவ்வாகமத்தின் ஞான பாதம் மட்டுமே இன்று எஞ்சியுள்ளது.[36]

உமாபதி சிவனார் தமது உரையில் உபநிடதம், ஆகமம், புராணம் முதலிய பிரமாணங்களைக் கூறிச் சைவ சித்தாந்தத்தை நிறுவுகிறார்.

IV. தொகுப்பு நூல்கள்

தேவார அருண்முறைத் திரட்டு

மூவர் தேவாரத்திலிருந்து திருமுறைப் பாடல்களைத் தேர்ந்தெடுத்து, திருவருட்பயன் பத்து அதிகாரங்களுக்கு மேற்கோள்கள் காட்டும் முறையில் இந்நூல் அமைந்துள்ளது.

சம்பந்தர் பாடல்கள் 23, அப்பர் பாடல்கள் 64, சுந்தரர் பாடல்கள் 12 ஆக மொத்தம் 99 பாடல்கள் இதில் இடம் பெற்றுள்ளன. சாத்திர இலக்கணத்திற்குத் தோத்திர இலக்கியமாக இது அமைகிறது எனலாம்.

ஸதரத்தின ஸங்கிரஹம்

சுவாயம்புவம், மிருகேந்திரம், பராக்கியம், மதங்கம், விசுவசாரோத்தரம், கிரணம், சர்வக்ஞானோத்தரம், நிசுவாசகாரிகம், காலோத்தரம், விசுவாசகாரிகம், தேவியாமளம் ஆகிய ஆகமங்களிலிருந்து அவற்றின் சாரமாக விளங்கும் சைவ சித்தாந்தப் பொருளை வடமொழியில் விளக்குவது. சிவப்பிரகாசர் இதனை 'சதமணி மாலை' என்னும் பெயரில் மொழிபெயர்த்துள்ளார்.

நிறைவுரை

சந்தான குரவரான உமாபதி சிவனார் அருளிய நூல்கள் அனைத்தும் சைவத்தின் பெருமையை நிலை நாட்டுவனவாகவே அமைந்துள்ளன. சாத்திரங்களில் எட்டு சாத்திரங்களை அருளி 'அட்ட சாத்திரம்' செய்திருப்பினும், அவர்தம் உள்ளத்தைக் கவர்ந்தவர் சேக்கிழார் பெருமானே ஆவார். அதனால்தான் சேக்கிழார் புராணம் என்னும் திருத்தொண்டர் புராண வரலாற்றையும், பெரிய மலையைச் சிறிய ஆடியில் காட்டுவதுபோலப் பெரிய புராணத்திற்குத் திருத்தொண்டர் புராண சாரம் அருளிச் செய்தார். திருவருட் பயனுக்குத் திருமுறைகளை மேற்கோள் காட்டித் திருமுறைகளின் மேன்மையை எடுத்துரைத்தார். உமாபதி சிவனார் சிவனைப் போற்றியும் சைவத்தை ஏற்றியும் ஆற்றிய திருத்தொண்டு உலகம் உள்ளளவும் உயர்ந்து நிற்கும்.

அடிக்குறிப்புகள்

1. டி.பி.சித்தலிங்கம், சைவசமயத் தோற்றமும் வளர்ச்சியும், பக்.126-127
2. தே.ஆ.ஸ்ரீநிவாஸன், கொற்றவன்குடி ஸ்ரீஉமாபதிதேவநாயனார் துதிப்பாடல்கள், Sri Umapati Sivacarya His life and Contribution to saivism, ப.277
3. இராசவன்னியன், கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியாரின் இலக்கிய நூல்கள் - ஓர் ஆய்வு, ப.1.
4. ஸ்ரீ உமாபதிசிவம் சரித்திரச் சுருக்கம், Sri Umapati Sivacarya His Life and contribution to Saivism, ப.260
5. வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், உமாபதி சிவாசாரியர் சருக்கம், புலவர் புராணம், பா.5.
6. சுவாமிநாத தேசிகர், சந்தானாசாரிய புராண சங்கிரகம், பா.12
7. சந்தான குரவர் நான்மணிமாலை, பா.12
8. மு.அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு - 14ஆம் நூற்றாண்டு, ப.106
9. குஞ்சிதாங்க்ரி ஸ்தவம், சுலோ.305
10. சேக்கிழார் பிள்ளைத்தமிழ், செங்கீரைப்பருவம், 4
11. பாம்பன் சுவாமிகள், திருப்பா, எம்பரன் (31), பா.1
12. இராசவன்னியன், மு.கா.நூ., ப.3
13. சங்கற்ப நிராகரணம், பாயிரம் : 26, 27
14. ஆர்.சுப்பிரமணியன், ஸ்ரீ உமாபதி சிவம் வாழ்க்கையும் நூல்களும், Sri Umapati Sivacarya His life and contribution to Saivism, ப.282
15. அம்பலவாண தேசிகர், சன்மார்க்க சித்தியார், பா.18
16. தே.ஆ.ஸ்ரீநிவாஸன், சங்கற்ப நிராகரணம் நூலின் சார்புக்கட்டுரை, பக்.உள,உஅ
17. C.R.Devadhar, Malavikagnimitram of Kalidasa, p.xi.
18. டி.பி.சித்தலிங்கம், மு.கா.நூ., ப.139
19. மேலது, ப.139
20. மேற்கோள், மு.திருவிளங்கம் (முகவுரை), சிவப்பிரகாசம்
21. நிரம்பவழகிய தேசிகர் உரை, திருவருட்பயன், சிறப்புப்பாயிரம்.
22. ஆ.ஆனந்தராசன், திருவருட்பயன் வழித்துணை விளக்கவுரை, ப.vi
23. தொல்காப்பியம், சொல்லதிகார மூலமும் சேனாவரையருரையும், ப.31
24. 2 : 1 : 2
25. 3 : 38 : 1
26. 3 : 38 : 11
27. குமரகுருபரர், பண்டார மும்மணிக் கோவை, 2 : 42-45
28. நெஞ்சுவிடு தூது, வரி : 49 - 52

29. க.வெள்ளைவாரணனார், சைவ சித்தாந்த சாத்திர வரலாறு, ப.383
30. ஆ.ஆனந்தராசன், சித்தாந்த பஃறொடை, அருள்திரு அம்பலவாண தேசிகர் அருளிய பண்டார சாத்திரங்கள், ப.31
31. மு.வரதராசன், தமிழ் இலக்கிய வரலாறு, ப.197
32. சேக்கிழார் புராணம், பா.91
33. ஆர்.சுப்பிரமணியன், மு.கா.நூ., ப.285
34. இராசவன்னியன், மு.கா.நூ., ப.34
35. திருமந்திரம், 1289
36. K.பாலசுப்பிரமணிய சாஸ்திரிகள், பௌஷ்கர பாஷ்ய ஸங்கிரஹம், Sri Umapati Sivacarya His Life, works and contribution to Saivism, ப.98.

3. சிவப்பிரகாசம் – சைவ சித்தாந்தக் கருத்துகளின் வளர்ச்சியும் தொடர்ச்சியும்

முன்னுரை

சிவஞானம் போதமாகும் செய்தியையும், அவ்வாறு குருவருளாற் கிடைத்த சிவஞானம் சித்தியாகும் செய்தியையும் சிவஞான போதமும், சிவஞான சித்தியாரும் கூறும். போதமும் சித்தியுமாகிய சிவஞானத்தால் சிவம் பிரகாசித்தலைத் தெளியக் கூறுவதே சிவப்பிரகாசம்.

சிவப்பிரகாசம் என்பது, 'சிவ பரம்பொருளினது பிரகாசத்தை உணர்த்தும் நூல்' எனப் பொருள்படும். இது காரணக்குறியாய் நின்ற அன்மொழித் தொகை[1]

சிவப்பிரகாசத்தின் சிறப்புப் பற்றியும், அதில் இடம்பெறும் சைவசித்தாந்தக் கருத்துகளின் வளமைபற்றியும் ஆராய்வதே இவ்வியலின் நோக்கமாகும்.

சித்தாந்த சைவம்

'வேதத்தின் பொருளை உண்மையில் தெளிவுபட விளக்குவன சைவாகமங்களே' எனவும், 'அதனால் உண்மையில் சித்தாந்தம் என்றற்கு உரியது சைவாகமப் பொருளே' எனவும் கருதுகின்ற சமயமே, 'சைவ சமயம்' எனப்படுகின்றது.

"வேதநூல் சைவநூல் என்று இரண்டே நூல்கள்
வேறு உரைக்கும் நூல் இவற்றின் விரிந்த நூல்கள்
ஆதிநூல் அநாதி அமலன் தரு நூல் இரண்டும்
ஆரண நூல்; பொது சைவம் அரும் சிறப்பு நூலாம்
. . . . வேதாந்தத்
தீதுஇல் பொருள் கொண்டு உரைக்கும் நூல்சைவம் பிறநூல்
திகழ்பூர்வம் சிவாகமங்கள் சித்தாந்தம் ஆகும்"[2]

என்பது சிவஞான சித்தியார்.

சிவாகமங்களின் பொருளைச் சிறிதும் திரிபின்றி உண்மையாகக் கொண்ட 'சித்தாந்த சைவம்', அதன் கொள்கையே 'சைவசித்தாந்தம்' அவ்வாகமங்களின் முடிவான கொள்கை என்பதால் 'ஆகமாந்தம்' என்றும் சொல்லப்படும்.

'சித்தாந்தம்' - சித்தம் என்ற சொல் நிலைநிறுத்தப் பெற்ற உண்மை என்றும், அந்தம் என்பது முடிபு என்றும் பொருள்தரும். இவ்விரண்டு சொற்களும் இணைந்து நின்று முற்ற முடிந்த மெய்ப்பொருட் கொள்கை என்னும் கருத்தினைக் குறிக்கும். இதுவே, ஏனைய தத்துவ வாதிகளின் முடிபுகளுக்கெல்லாம் மேம்பட்ட இறுதி முடிபு (end of ends or conclusion of conclusions) தத்துவ சிந்தனையில் இறுதி முடிவிடம் (The last terminus of philosophical thoughts)[3].

'மலர்' என்பது தாமரை மலரைக் குறிப்பது போன்றும், 'பழம்' என்பது வாழைப்பழத்தையே குறிப்பது போன்றும், 'சித்தாந்தம்' சைவ சித்தாந்தத்தையே குறிக்கும். "சித்தாந்த ஏவ சித்தாந்த: பூர்வபக்ஷாஸ்தத: பரே" எனவரும் இரத்தின திரயம் 'சித்தாந்தமே சித்தாந்தம், மற்றவை பூருவ பட்சங்கள்' என்று கூறும். பூர்வ பட்சம் - முன்பு கொண்ட கொள்கை; முடிவான கொள்கையாகாது.

பதி, பசு, பாசம் என்னும் பொருள்கள் மூன்று உள்ளன. இம் மூன்றும் தனித்தனி முதல்கள். இவற்றிடையே காரண காரியத் தொடர்பிற்கு இடம் இல்லை. பதி - இறை; பசு - ஆன்மா, உயிர்; பாசம் - தளை.

இம் முப்பொருள்களும் காலத்திற்கு உட்படாதவை. அஃதாவது தோற்றம் என்பதும், அழிவு என்பதும் இன்றி என்றும் உள்ள உள்பொருள்கள் (realities). அதனால் இவை 'அனாதி நித்தியம்' என வடமொழியில் சொல்லப்படுகின்றன.

இம் முப்பொருள்களுக்கிடையே உள்ள தொடர்பு வியாபகம் (பெரு நிறைவு), வியாப்பியம் (அதற்கு உள்ளடங்கிய நிறைவு). வியாத்தி (சம நிறைவு) என்பதாகும்.

தூலம், சூக்குமம் என்னும் முறைமைபற்றி நோக்கினால், பாசம் - தூலம்; பசு - சூக்குமம்; பதி - அதி சூக்குமம்.

பதியும், பசுவும் சித்து (அறிவுடையன) ; பாசம் - சடம் (அறிவற்றவை). பதியும், பசுவும் அறிவுடையன எனினும் பதி சூக்குமச் சித்து (நுண்ணிய அறிவு), பசு, தூலசித்து (பருமையான அறிவு)

பதி ஒன்றே; பசு எண்ணில; பாசம் மூன்று ; அவை - ஆணவம், கன்மம், மாயை. ஆணவம் உயிர்களின் அறிவை மறைத்து அறியாமையைச் செய்யும்; மாயை ஆணவத்தால் உண்டாகும் மறைப்பைச் சிறிதே நீக்கி, அறிவை ஓரளவில் விளங்கச் செய்யும். கன்மம், மாயை காரியப்படும் நெறியை வகுக்கும்.

மாயையின் காரியங்கள் 'மாயேயம்' என்றும், கன்மம், மாயை ஆகியவற்றைச் செயற்படுத்தும் திரோதானத்தை 'மலம்' என்றும் கூறி, மொத்த மலங்கள் ஐந்து என்றலும் வழக்காகும்.

ஆன்மாவிற்குப் 'பக்குவம்' என்பது ஒன்று உண்டு. அஃதாவது உணர்த்துவான் உணர்த்தினாலும், முதலிலேயே நுண்பொருளை உணர மாட்டாது படிப்படியாகவே அதனை உணர்ந்து வரும் தன்மை. நுண்பொருளை உணரமாட்டாமையே, 'அபக்குவம்' என்றும், அதனை உணரும் தன்மையே 'பக்குவம்' என்றும் சொல்லப்படுகின்றன.

ஆன்மாக்கள் 'அபக்குவம்' காரணமாக அவற்றைப் பாசங்கள் பற்றலாயின. பாசத்தின் தொடர்பால் ஆன்மாக்கள் பதியை அறிய மாட்டாது பாசத்தையே அறிந்து அல்லல் உறுவன. அதனால், ஆன்மாக்கள் யாவும் அநாதி பெத்தர்கள். இறைவன் சூக்கும சித்தாதலின், பாசங்கள் அவனை எக்காலத்தும் பற்றுதல் இல்லை. அதனால் அவன் 'அநாதி முத்தன்'.

ஆன்மாக்கள் பக்குவம் எய்தாதபொழுது, பாசப்பற்று காரணமாகப் பல பிறவிகள் எடுத்துப் பிறப்பு இறப்பில் சுழலும். அச்சுழற்சியின் பயனாகப் பக்குவம் எய்திய பொழுது, இறைவன் தன்னைப் புலப்படுத்தி, அப்பாசத்தினை நீக்கி, தன்னையே பற்றித் தன்னோடு ஒன்றியிருக்குமாறு செய்வான். அங்ஙனம் செய்யப் பெறும் நிலையே ஆன்மாக்கள் அடையும் முத்தி நிலையாகும். "பாசத்தைப் பசுக்கள் விட்டுப் பதியினை அடைய முத்தி" என்று சித்தியார் உரைக்கும்.[4]

பாசத்தினின்று ஆன்மாக்கள் விடுபடுவதற்கு இறைவன் படைத்தல் முதலான ஐந்தொழில் செய்வான். தன்னை உணரச் செய்து, தன்னை அடையுமாறு செய்தல் 'அருளல்' எனப்படும். வீடுபேறு பெற்ற ஆன்மா இறைவனது இன்பத்துள் மூழ்கி நிற்கும். இதுவே அமைதிநிலை. முடிந்த பயனாய நிலை. "படைப்பு நிலை யிறுதிப் பயன்" என்று சம்பந்தர் தேவாரம் கூறும்.[5]

> "வீடு என்று அறைதரு சொற்குப் பொருளோ விடுதலை ஆதலினால்
> வீக்குண்டோனுங்கட்டுண்டோனும் விளங்குந் திடமாகப்
> பீடுறு கட்டுத் தானாய் விட்டுப் பெயராது இது சடமாம்
> பிணிபட்டோன் அசுதந்திரனாம் இப்பிணி பெயரச் செய்வோன்
> நீடு சுதந்தரம் உளனாம் ஒருவன் நேரும் இவ்வேதுவினால்
> திகழ்பதி பசு பாசம் எனும் முப்பொருள் நித்தியம் என்றருளி
> வேள்தனை வெல்லுங் குருவாய் எனையாள் மெய்ப்பொருள் நீயன்றோ
> வேதகிரிப் பவரோக வயித்திய வேணி முடிக் கனியே"[6]

என்பது திருக்கழுக்குன்றம் வேதகிரீசுரர் பதிகம்.

இப்பாடலில், 'பீடுறு கட்டுத்தானாய் விட்டுப் பெயராது இது சடமாம் என்பது பாசம்; பிணிபட்டோன் அசுதந்திரனாம் என்பது பசு; இப்பிணி பெயரச் செய்வோன் என்பது பதி; வீடு என்பது 'அப்பிணியிலிருந்து விடுதலை' என்பதாகும்.

இங்ஙனம் சுருக்கிக் கூறப்பட்ட சித்தாந்த சைவத்தின் முடிபுகளே சிவஞானபோதம் தொடங்கிப் பிற சாத்திர நூல்களிலும் தடைவிடைகளால் விரிவாகக் கூறப்படுகின்றன.

ஒவ்வொரு மதத்திலும் அதற்கு முதல் நூல் செய்த வகையால் அவற்றைத் தோற்றுவித்த ஆசிரியர் பெயரால் அழைக்கப்படுவதுபோல, சிவஞான போதத்தின் ஞானாசிரியராகிய மெய்கண்டார் வழி சித்தாந்த சாத்திரங்கள் 'மெய்கண்ட சாத்திரங்கள்' என அழைக்கப்படுகின்றன.

சைவாகமங்கள், வேதங்கள், வேதங்களின் முடிபுகளான உபநிடதங்கள், பன்னிரு திருமுறைகள், பதினான்கு சாத்திரங்கள் மற்றும் திருமுறைச் சாத்திரங்களோடு மாறுபடாத வகை கொண்ட பல நூல்களும் சித்தாந்த சைவத்திற்கு உரை அளவைகளாகும்.

சிவப்பிரகாசச் சிறப்பு

நிலமகள் தன் இடையில் உடுத்தியிருக்கும் ஆடைகளாகிய கடல்களின் (ஏழு) எண்ணிக்கையைப் போல நான்கு மடங்கு எண்ணிக்கை உடையது (இருபத்தெட்டு) சிவாகமங்களாகிய கடல். அச் சிவாகமங்களாகிய கடலைக் கடப்பதற்கு உதவும் மரக்கலமாகத் திகழ்வது 'சிவப்பிரகாசம்' மரக்கலம் என்றால் அதனை வழி நடத்துகின்ற மாலுமி ஒருவன் வேண்டும். அம் மாலுமியே 'திருவருட்பயன்'.

> **"தரைமகள் மருங்கில் பரிவுடன் வளைத்த**
> **நரலையின் தொகைக்கு நான் மடங்கு உடைய**
> **சைவநூற் சலதி நொய்தினிற் கடத்தும்**
> **மரக்கலம் அதற்கு மாலுமி ஒப்ப...**
> **குறளடி வெள்ளை ஒருநூறு இயம்பினன்"[7]**

என்று நிரம்ப அழகிய தேசிகர் வகுத்த திருவருட்பயன் சிறப்புப் பாயிரத்தில், 'சிவாகமங்களாகிய கடலைக் கடக்க உதவுவது சிவப்பிரகாசம்' என்று போற்றி உரைப்பர்.

சிவப்பிரகாசத்தின் முக்கிய நோக்கம் இறைவனுடைய கருணையைக் கொண்டே அவனை அறிய முடியும் என்பதை எடுத்துக் கூறுவதாகும். எனவே, சிவம் பிரகாசிக்கும் முறையை மிகுத்துக் கூறும். திருவருட்பயன், இறைவனின் கருணையாகிய திருவருளைப் பெறுவதற்கு உள்ள முயற்சியைக் கூறும். வினா வெண்பா, திருவருளால் தான் முத்தி பெறும் முறைமையைக் கூறத் திருவுளம் பற்ற வேண்டும் என்று குரு அருளை வேண்டி நிற்பதாகும். திருவருட்பயன் வழியாகச் சிவப்பிரகாசத்தின் உண்மையை உணர்ந்து, அதில் ஏற்படும் நுட்பமான ஐயங்களை வினா வெண்பாவினால் அறிந்து சித்தாந்தத் தெளிவை அடையலாம். எனவே, இம்மூன்றையும், **'முக்கோணச் சாத்திரங்கள்'** என்றழைக்கலாம்.

ஒரு முக்கோணத்தின் அடிப்பாகம் சித்தாந்தம் என்றால் அதன் மேல் உச்சி சிவப்பிரகாசம் ஆகும். முக்கோண அடிப்பாகத்தின் இரு முனைகள் திருவருட்பயனும், வினா வெண்பாவும் ஆகும். இதனை,



சித்தாந்தம்

இவ்வாறு வரைபடத்தில் அமைத்துக்காட்டலாம்.

இரு இயல்புகள்

அளவை இயலில் 'பல பொருள்கட்குப் பொதுவாய் உள்ள இயல்பு 'பொது வியல்பு' என்றும், ஒரு பொருட்கு மட்டும் சிறப்பாய் உள்ள இயல்பு 'சிறப்பியல்பு' என்றும் கூறப்படும்.

சித்தாந்தத்துள் 'ஒரு பொருளுக்கு அதன் தன்மையிலே இயல்பாய் என்றும் உள்ள இயல்பு' 'சிறப்பியல்பு' எனப்படும். இத்தன்மை பொருளைவிட்டு நீங்குவதில்லை. வேறொரு பொருளின் சார்பு காரணமாக ஒரு பொருளின்கண் உண்டாகி அச்சார்பு நீங்கிய போது உடன் நீங்கும் இயல்பு 'பொது இயல்பு' எனப்படும். இத்தன்மை நிலையானதன்று. இவ்விரண்டு இயல்புகளும் முறையே 'சொரூப இலக்கணம்' என்றும், 'தடத்த இலக்கணம்' என்றும் சொல்லப்படும். 'இலக்கணம்' என்றாலும் 'இயல்பு' என்றாலும் ஒன்றே.

ஆன்மா மும்மலங்களில் கட்டுப்பட்டு நிற்கும் நிலை பெத்த நிலை. இது நீங்கும் தன்மை உடையது. முத்தியில் மும்மலங்களும் நீங்கும். முத்தி நிலையில் ஆன்மா மீண்டும் மும்மலங்களோடு சேராது. ஆன்மாவிற்கு முத்தி நிலை என்றும் நீங்காமல் இருப்பதாகும். என்றும் நீங்காத நிலை சகசம் எனவும், நீங்கும் தன்மையுடைய பெத்தநிலை ஆகந்துகம் எனவும் வழங்கப்படும். எனவே, சகசமாய் உள்ள முத்திநிலையே உண்மை இயல்பு. ஆகந்துகமாய் உள்ள பெத்த நிலையே பொது இயல்பு.

"பெத்தத்தினின்ற நிலைபற்றிக் கூறும் இலக்கணம் ஆகந்துகமாகலிற், பொதுவியல்பென்றும், முத்தியினின்ற நிலைபற்றிக் கூறும் இலக்கணம் சகசமாகலிற், சிறப்பியல்பென்றும் ஆயின. புடை நூலாசிரியர் முதற்கண் 'பொதுவுண்மையெனக் கருதி' யென்றெடுத்துக்கொண்டு, முடிவின்கட் 'பெத்தமுத்திகண் மதித்தாமன்றே' யென முடித்தமையின், ஈண்டுக் கூறப்படும் பொதுவியல்பு, சிறப்பியல்பு இவையே பொருளாதல் அறிக" என்பார் சிவஞான முனிவர்.[8] இவ்வுண்மை சிவப்பிரகாசத்தைக் கொண்டு சிவஞான முனிவரால் இனிதே நிறுவப்பட்டது.

பொதுவியல்பு உணர்த்தும் நூல்கள் பொது நூல்கள், சிறப்பு இயல்பு உணர்த்தும் நூல்கள் சிறப்பு நூல்கள் எனப்படும். பவுட்கரம், மிருகேந்திரம், மதங்கம் முதலிய சிவாகமங்கள் பெத்தத்தின் நிலைபற்றி இலக்கணம் கூறுதலின் அவை பொது எனவும், சர்வஞ்ஞானோத்தரம் முதலிய சிவாகமங்கள் முத்தியின் இயல்பு பற்றி கூறுவதால் அவை சிறப்பு எனவும் கூறப்படும். உபநிடதங்களில் சுபாலம் முதலிய உபநிடதம் உலகந் தோன்றியொடுங்கு முறைமையும், தோற்றியொடுங்குவதற்கு ஒரு கருத்தாவுண்டென்னும் மாத்திரையும் போல்வன உணர்த்துதலிற் பொது எனப்படும். சாந்தோக்கிய முதலிய உபநிடதம் இரு வகையுங் கூறுதலிற் பொதுவும் சிறப்புமாம். அதர்வசிகை, அதர்வசிரம், சுவேதாசுவதரம், கைவல்லியம் முதலிய உபநிடதங்கள் முத்தி நிலையே பற்றிச் சாதகமும் பயனுங் கூறுதலின் உண்மை எனப்படும்.

‘ஞானாமிர்தம்’ பொதுவியல்பு மாத்திரம் கூறுதலின் பொது எனவும், திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார் முதலிய நூல்கள் உண்மை இயல்பு கூறுதலின் உண்மை எனவும், சிவஞான போதம், சிவஞான சித்தியார், சிவப்பிரகாசம் ஆகியவை சிறப்பு இயல்பு, பொது இயல்பு ஆகிய இரண்டையும் கூறுதலின் பொதுவும் சிறப்புமாம்.

சிவப்பிரகாசம் பொதுவியல்பு கூறும் பகுதி பொது அதிகாரம் எனவும், உண்மையியல்பு கூறும் பகுதி உண்மை அதிகாரம் எனவும் வழங்கப்படும்.

இக்கால அறிவியலின்படி பொது என்பது ஆராய்ந்து அறியப்படுவது என்றும், சிறப்பு என்பது ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்டு உள்ளுணர்வாகிய அநுபவத்தால் விளங்குவது என்றும் கூறுவர் அறிஞர். (Podu and Cirappu are two levels of cognition of reality; the former could be said to be empirical in the modern scientific sense and the latter is understood as transcendental which goes beyond the level of mere observation and prediction of the natural sciences)[9]

அவத்தை நிலைகள்

அறிவுப் பொருளாகவும், அறிவில் பொருளாகவும் விளங்கும் ஆன்மா இயற்கை மலத்தால் மறைக்கப்பட்டுக் காரிய மாயையின் உதவியால் வேறு வேறு நிலைகளை உடையதாகும். இதனை வடமொழியில் ‘அவத்தை’ என்பர். அவத்தை - நிலை.

“ஓங்கிவரும் பல உயிர்கள் மூன்று அவத்தைப் பற்றி
உற்றிடும் கேவலம் சகலம் சுத்தம் எனஉணர்க” *(சிவ.33)*

அவை, கேவலம், சகலம், சுத்தம் என மூன்று வகைப்படும். அறிவு விளங்கா நிலை கேவலம் என்றும், மாயையின் காரியங்கள்பற்றி அறிவு விளங்கும் நிலை சகலம் என்றும், இறைவன் திருவருளைக் கொள்ளும் நிலை சுத்தம் என்றும் சொல்லப்படும்.[10] இம் மூன்றும் அடிப்படை நிலைகளான காரண அவத்தைகள் என்று குறிக்கப்படும். அவற்றின் காரியம் நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படங்கல் என ஐந்து நிலைகளாகச் சொல்லப்படும். இவற்றை வடமொழியில் முறையே ‘சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம்’ என்பர். இவை, ‘காரிய அவத்தைகள்’ எனப்படும்.

"ஈங்குவரும் கலாதியொடு குறி உருவம் ஒன்றும்
இன்றி மலம்அன்றி ஒன்றும் இல்லை எனும் இயல்பாய்
ஆங்குஅறிவை அறிவுஅரியன் அறிகருவி அணையா
ஆதலினால் இருள்மருவு மலர்விழிபோல் அதுவாய்
நீங்கும்வகை இன்றி நித்தவியாபகமாய் அங்கண்
நிற்பது கேவலம் என்று நிகழ்த்தும் நூலே" (சிவ.33)

எனக் கேவல அவத்தையும்,

"இனைய பல பிறவிகளில் இறந்து பிறந்து அருளால்
இருவினைகள் புரிந்து அருந்தும் இது சகலம்" (சிவ.48)

என சகல அவத்தையும்,

"நாடிய சத்திநிபாதம் நாலுபாதம்
நண்ணும்வகை எண்ணரிய ஞானபாதம்
கூடுமவர் தமக்கு உணர்வாய் நின்றஞானக்
கூத்தன்ஒரு மூர்த்திகொடு குறுகி மோகம்
நீடிய கேவல சகலம் நிகழாவாறு
நிறுத்திமலம் அறுக்கும் இதுநிலையார் சுத்தம்" (49)

என சுத்த அவத்தையும்,

"பொற்புறு கருவி யாவும்
புணராமே அறிவிலாமைச்
சொற்பெறும் அதீதம் வந்து
தோன்றாமே தோன்றி நின்ற
சிற்பரம் அதனால் உள்ளச்
செயல் அறுத்திட உதிக்கும்
தற்பரம் ஆகி நிற்றல்
சாக்கிர அதீதம் தானே" (சிவ.80)

என சாக்கிராதீதமும் குறிக்கப்பட்டன.

ஆன்மா அடையும் காரண அவத்தை நிலைகளான கேவலம், சகலம், சுத்தம் என்னும் மூன்று அவத்தைகளின் அடிப்படையிலேயே சிவப்பிரகாசத்தில் 'பொது அதிகாரம்' பிரிக்கப்பட்டுள்ளது. 'சிறப்பு அதிகாரத்தில்' காரிய அவத்தைகள் விளக்கிக் காட்டப்படுகின்றன. இதில் முக்கியமாக முத்தி அவத்தையின் சிறப்பு கூறப்படுகிறது.

இங்ஙனம் அவத்தைகளை முதன்மையாகக் கொண்டே ஆன்மாவின் இலக்கணம் வெகு தெளிவாக உணர்த்தப்படுவதை அறியலாம்.

சிவப்பிரகாசம் புடைநூல்

'முதல்வழி புடையென நூல் மூன்றாகும்'[11] என்னும் நன்னூல் சூத்திரப்படி சிவஞான போதம் முதல் நூலாகவும், சிவஞான சித்தியார் வழி நூலாகவும், சிவப்பிரகாசம் சார்பு (புடை) நூலாகவும் கொள்ளப்படும்.

"முன்நூலும் வழிநூலும் சார்பு நூலும்
மூன்றாகும் உலகத்து மொழிந்த நூல்கள்"[12]

என வரும் சித்தியார் இங்குக் குறிக்கத்தக்கது.

"முதல், வழி, அவ்விரு நூல்களும் ஒரு வழி முடிந்த பொருளை ஓர் உபகாரம் நோக்கி ஒரு கோவைப்பட வைப்பது சார்பு நூல் ஆகும்' என்பது இறையனார் அகப்பொருள் உரை கூறும் சார்பு நூல் பற்றிய விளக்கமாகும்.

"சார்பு நூல் பொருள் ஒத்திருக்கும். ஆனால் வைப்பு முறை வேறுபட்டிருக்கும். 'பொருளை ஓர் உபகாரம் நோக்கி ஒரு கோவைப்பட வைப்பது' என எழுதியுள்ள விளக்கம் தனித்தன்மையுடையது" என்பார் ர.வையாபுரி.[13]

"வெண்ணெய் அம்பதி திகழ் மெய்கண்டவன்அருள்
உள்நிலை உடையோன் ஒருவன் உரைத்த
தவப்பிரகாசத் தன்மையில் விரித்த
சிவப்பிரகாசச் செழுந்தமிழ் உண்மையை
அருளுடன் ஆய்ந்து கொள்ளத்
திருவருள் வினவல் திருந்திடும் அன்றே"[14]

என்று 'மெய்கண்டாரின் திருவருள் மரபிலே வந்து, தவப்பிரகாசத் தன்மையில் விரிந்த சிவப்பிரகாசம்' என்று சங்கற்ப நிராகரணம் கூறும்.

சிவஞான போதத்தின் செறிவான கருத்துகள், சித்தியாரில் விரிவாக விளக்கப் பட்டுள்ளதால், சித்தியார் போதத்திற்கு விரிவுரை போன்றது. அதனால், போதத்தையும், சித்தியையும் பிரித்துக் காணல் இயலாது.

சிவஞான சித்தியாரில் பதினான்கு பாடல்களில் விளக்கப்பட்ட அளவை இலக்கணத்தை, 'புகலளவைக்கு அளவாகி' என்னும் ஓர் தொடரால் குறிக்கிறது சிவப்பிரகாசம்.

ஆன்மாக்களின் அவத்தைபற்றிக் கூறும்பொழுது, சாக்கிரத்திலிருந்தே தொடங்கும் முறையை மாற்றி, சிவப்பிரகாசம் துரியாதீதத்திலிருந்து சாக்கிரம் வரை கூறுகிறது.

சித்தியாரில் சாதனவியலின் எட்டாஞ் சூத்திரத்தில் விளக்கப்பட்ட பல்வேறு சமயங்களின் முத்திநிலை, சிவப்பிரகாசத்தில் பொது அதிகாரத்தில் கூறப்பட்டது.

அதேபோல, சாதனவியலில் சொல்லப்பட்ட தீக்கை முறையைச் சிவப்பிரகாசம், பாயிரத்தில் நூல் கேட்கும் மாணாக்கரின் தகுதிகளாகக் கூறுகிறது.

தத்துவங்கள் மாயையில் தோன்றுமிடத்து, காலம் முதலாகச் சொல்லுவது தோற்றமுறைமை. அது பிரபஞ்சத்தோற்றம் சொல்லுமிடத்து முதல் வழி நூல்களில் கூறப்பட்டது. சிவப்பிரகாசம், ஆன்ம இலக்கணத்தை அவத்தை முறையாகக் கூறுவதால், ஆன்மாக்களுக்கு உணர்த்தும் முறைமையாக கலை முதலாகத் தொழிற்பாட்டு முறையில் கூறுகிறது. இக்காரணத்தைக் கொண்டே ‘புடைநூல்’ என்பார் மதுரைச் சிவப்பிரகாசர்.[15]

சிவப்பிரகாசத்தில் பாடல்கள் தொடங்கும் வரிகளைக் கொண்டே,

“பலகலையும் எண்ணரிதும் பார்க்கிலரும் செறிந்திடுமே
மலநிலையால் வரும் எண்ணே மருவியவும் காட்டிடுமே
சொல அரிதாம் பன்னிறமும் தன் அறிவும் சொல்புகலும்
பிலம்உள போல் தீங்கண்டம் பேர்முதலாப் பன்னிரண்டே”[16]

என்று சுவாமிநாதர் தகசாரியம் கூறும். அதாவது ‘சிவப்பிரகாசம், சிவஞான போதத்தின் பன்னிரு சூத்திரப் பகுப்பு உடையதாகும்’ என்று விளக்குகிறது. ஆனால், சிவப்பிரகாசத்தில் முப்பொருள்பற்றிக் கூறும் அமைப்புமுறை வேறு என்பது விளங்கும். முதல் ஐம்பது திருவிருத்தங்கள் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருட்கும் பொதுவியல்பு உணர்த்துவன. பின் ஐம்பது திருவிருத்தங்கள் திருவருள் துணைகொண்டு சீவன் முத்தியியல் உணர்த்துவன. எனவே, இந்நூற் பகுப்பு முன்னூற் பகுப்புகளுடன் வேறுபடுதல் இனிது விளங்கும். காவை அம்பலவாணதேசிகர் சிவப்பிரகாசத்தின் நூறு செய்யுட்கட்கும் நூற்கருத்துக் கூறி ‘உரைவிளக்கமாக’ப் பாகுபாடு செய்கிறார்.

காழிச் சிற்றம்பலவர், அடிவரவும் அதிகாரஅடைவும் கூறுகிறார். பொது அதிகாரத்தில் பொருட் பாகுபாடு செய்து, உண்மை அதிகாரத்தில் சிவப்பிரகாசம் கொண்ட பொருட் பாகுபாட்டையே கூறுகிறார். இவ்விருவரும் பன்னிரு சூத்திரப் பாகுபாடு செய்யாமல், நூற்கருத்து, பொருட் பாகுபாடு என்ற வகையில் செய்தனர் என்பது குறிக்கத்தக்கது.

எனினும், சிவஞான போதப் பன்னிரு சூத்திரப் பகுப்பு முறையிலேயே சிவப்பிரகாசத்தை உணர்தல் மரபு என்று கருதுவர் அறிஞர்.[17] இவ்வாறு சிவப்பிரகாசத்தில் மூல நூலிலிருந்து அமைப்பு முறையும், செய்திகளும், சற்றே விரித்தும், சுருக்கியும் முறைமாற்றியும் தரப்பட்டுள்ளமை தெளிவு. எனவே, இறையனார் அகப்பொருள் உரையின்படி சிவப்பிரகாசத்தை, ‘முதற்நூற் பொருளை அது சொல்லிச் செல்லும் வகையால் சொல்லாமல் ஒரு பயன்கருதி பிறிதொரு வகையால் கூறுவதனால் – அதாவது நூல் அமைப்பு முறையினால்’ ‘புடைநூலா’கும் என்றே கூறுதல் வேண்டும்.

சிவப்பிரகாசத்தில் கூறப்பட்ட திருவருளும், திருவைந்தெழுத்தும் திருவருட்பயனில் விரித்தோதப்பட்டன. குருவருளும், குருவின் பெருமையும் போற்றிப்

பஃறொடையிலும், நெஞ்சுவிடு தூதிலும் விரித்துரைக்கப்பட்டன. சிவப்பிரகாசத்தில் ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி, ஆன்ம லாபம் என்று மூன்றாகச் சொல்லப்பட்ட தச காரியம் உண்மைநெறி விளக்கத்தில் பத்தாக விரித்துக் கூறப்பட்டது. சிவப்பிரகாசத்தின் பிழிவே வினா வெண்பாவாகும்[18] "அகச்சமயத்து ஒளியாய்" என்னும் தொடரை விளக்க எழுந்ததே சங்கற்ப நிராகரணம் ஆகும். இங்ஙனம், சிவப்பிரகாசக் கருத்துகள், பின் வந்த சாத்திர நூல்களில் அதன் வளர்ச்சியாகவும், தொடர்ச்சியாகவும் கூறப்பட்டன. அதற்குப் பின் எழுந்த சைவ நூல்கள் அவற்றைச் சாத்திர விளக்கமாகக் கொண்டன என்று கூறலாம்.

பரஞானம், அபரஞானம்

ஞானமாவது, 'வீடு பயக்கும் உணர்வு'[19] என்பார் பரிமேலழகர். அந்த ஞானம், பரஞானம், அபரஞானம் என்று இரு வகைப்படும்.

"தத்ராபரா ரிக்வேதோ யஜுர்வேத|:
ஸாமவேதோ அதர்வவேத :
சிக்ஷா கல்போ வ்யாகரணம் நிருக்தம்
சந்தோ ஜ்யோதிஷமிதி|
அத பரா யயா ததக்ஷரமதிகம்யதே||"[20]

என்று அங்கிரஸ் சௌனகரிடம் உபதேசிப்பதாக முண்டக உபநிடதம் கூறும். அதாவது, ரிக்வேதம், யஜுர்வேதம், சாமவேதம், அதர்வண வேதம், இலக்கணம், வானவியல் போன்றவை அபரஞானம். அழிவற்றவராகிய இறைவன் எந்த அறிவால் அடையப்படுகிறாரோ அது பரஞானம். பரம் - உயர்ந்தது; அக்ஷரம் - அழியாதது பற்றிய அறிவே உயர்ஞானமாகும்.

இவ்விரு ஞானத்தையும் அருள்நந்தி சிவனார், 'பதிபசுபாசம் தெரித்துப் பரசிவனைக் காட்டும் ஞானம்'[21] என்பார். பதிபசுபாசத்தைத் தெரிக்கும் ஞானம் அபரஞானம். பரசிவனைக் காட்டும் ஞானம் பரஞானம்.

"...... உயர்ஞானம் இரண்டாம் மாறா
மலமகல அகலாத மன்னு போதத்
திருவருள் ஒன்று;ஒன்றுஅதனைத் தெளிய ஓதும்
சிவாகமம்என்று உலகறியச் செப்பும் நூலே" (சிவ.10)

என்னும் சிவப்பிரகாசத்தில், 'மாறா மலம் அகல, அகலாது மன்னும் போதத் திருவருள்' என்று பரஞானத்தையும், அந்தத் திருவருளைப் பெறுமாறு உதவுகின்ற சிவாகமங்கள் அபரஞானத்தையும் குறிக்கும்' என்று உமாபதி சிவனார் கூறுவர். சிவஆகமங்கள் தரும் அபர ஞானமே பரஞானத்திற்கு வாயிலாகத் திகழ்வது. இப்பரஞானமே சிவத்தை விளக்குவது.

முதல் நூலாகிய ‘சிவஞான போதம்’ என்னும் பெயருக்கு, சிவஞான சுவாமிகள், சிவஞான மாபாடியத்தில், ஞானத்தின் வகையைச் சொல்லும் இச்சிவப்பிரகாசப் பாடலை எடுத்துக் காட்டி விளக்குவர் :

“பரஞானத்தைப் போதிப்பது எல்லா அபர ஞானங்கட்கும் பொது ஆதலின் ஈண்டுச் சிவஞானம் என்றது அவ் அபரஞானமாகிய சிவாகமமேயாகும். போதித்தல் - அவற்றின் நிச்சயப்பொருள் இது என உணர்த்துதலாம். ஆகவே, சைவ ஆகமங்களின் பொருள் நிச்சயம் உணர்த்துவது ‘சிவஞான போதம்’ எனக் காரணக் குறியாயிற்று.”[22]

“மலம் அகல, அகலாது மன்னும் போதத் திருவருள்”

என்னும் சிவப்பிரகாசத் தொடருக்கு விளக்கமாக,

“பிறிவே பிறித்துப் பிறியா அறிவெனும் பெற்றி தந்த செறிவே”[23]

என்று அம்பலவாண தேசிகர் நிட்டை விளக்கத்தில் குறிப்பர். ‘பிரியத் தக்கனவாகிய பாசங்களைப் பிரித்துப் பிரியாத சிவஞானம் உதவிய பரிபூரணப் பொருளே’ என்பது பொருளாகும்.

“ஆதாவபூத் த்விதா ஞ்ஞானமதிகாரி விபேதத :
பராபரணே பேதேந பதிபஸவர்த்த தர்ஸகம்
ஸிவப்ரகாசகம் ஞ்ஞானம் சிவஞ்ஞானம் பரம் ஸ்ம்ருதம்
வேதாத்யம் அபரம் ஞ்ஞானம் பஸுபாஸார்த்த தர்சகம்” [24]

என வரும் காமிகாகம வசனங்களே, இவ்விரு ஞானங்களுக்கான மூலாகம வசனங்கள் ஆகும். அதிகாரி பேதத்தால் ஞானமானது இரு வகைப்படும். அவை, பரம், அபரம். சிவம் பிரகாசிக்கும் ஞானமே பரஞானமாகிய சிவஞானம்; பசு பாசங்களைப் பற்றிக் கூறும் வேதம் முதலியவை அபரஞானம் என்பது இவ்வாகமத்தின் பொருளாகும்.

திருஞான சம்பந்தப் பெருமான், அம்மையின் திருமுலைப்பாலை அருந்திய அளவிலேயே, அபரஞானம், பரஞானம் அனைத்தும் கைவரப்பெற்றார்:

“சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவ முதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார் அந்நிலையில்” [25]

என்று சேக்கிழார் திருஞானசம்பந்தப் பெருமானைப் போற்றுவர். சிவனடியைச் சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானமாகிய (உவமையிலா கலைஞானம்) அபரஞானம், பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானமாகிய (உணர்வரிய மெய்ஞ்ஞானம்) பரஞானம் என்று இயைத்துப் பொருள் கொள்ள வேண்டும். இவ்விருத்தமே, சாத்திர ஞானத்திற்குச் சேக்கிழார் வழங்கிய கொடை எனலாம்.

"மேவரு ஞானம் இரண்டு அவற்றொன்று
விமலனார் பாத தாமரையே
ஓவறும் அன்பின் உணர்திரு அளிக்கும்
ஒப்பிலா உயர் கலைஞானம்
தாவரும் பவத்தை வேரொடுங் களையுந்
தக்க மெய்ஞ்ஞானம் ஒன்று"[26]

என்று தணிகைப் புராணத்தில், சேக்கிழாரைப் பின்பற்றியே கச்சியப்ப முனிவரும் இவ்விரு ஞானத்தைக் குறித்தார்.

"ஞானம் என்பது தொகையால் ஒன்றாம்; வகையால் பரம், அபரம் என இரண்டாம்; பெறும் வாயில் விரியால் கேட்டல் முதலியவற்றால் நான்காம். இனி ஞான வேள்வி என ஐந்தாயும்,[27] சரியை முதலிய நிலைபற்றி உண்மை, உபாயம் என்ற வேறுபாட்டால் எட்டாயும், தசகாரியம் பற்றிப் பத்தாயும், முன்கூறிய எட்டு நிலைகளும் ஒவ்வொன்று நான்காகும் முறைபற்றி முப்பத்திரண்டாயும் இன்னும் பலவாறாயும் விரிந்து நிற்பது ஞானம் என்பர். அவையெல்லாம் பரம், அபரம் என்ற இரு முதல் ஞானங்களுள் அடங்குமென்பர்" அறிஞர்.[28]

சிவப்பிரகாசத்தின் இதயப் பாசுரம்

முதல்நூல், வழிநூல் ஒட்டி எழுதப்பட்டிருப்பினும் புதுவகையை வகுத்துக் கொண்ட சாத்திரம் சிவப்பிரகாசம். இது சொற்சிக்கனமாகத் தருக்க முறையில் பல நுட்பமான கருத்துகளைத் தெளிவுபட உரைப்பது.

சிவப்பிரகாசப் பாயிரத்தில், 'நூல் நுவலும் பொருள்' கூறும் திருவிருத்தம் ஒன்றே பிற சமயங்களோடு ஒப்பிட்டு உயர்வு காட்டும் சைவத்திறனை விளக்கி நிற்கும் எனலாம்.

"புறச்சமயத் தவர்க்குஇருளாய் அகச்சமயத்து ஒளியாய்ப்
புகல்அளவைக்கு அளவாகிப் பொன்பணிபோல் அபேதப்
பிறப்புஇலதாய் இருள்வெளிபோல் பேதமும்சொற் பொருள்போல்
பேதாபேதமும் இன்றிப் பெருநூல் சொன்ன
அறத்திறனால் விளைவதாய்உடல் உயிர்கண் அருக்கன்
அறிவொளிபோல் பிறிவுஅரும் அத்துவிதம் ஆகும்
சிறப்பினதாய் வேதாந்தத் தெளிவாம் சைவ
சித்தாந்தத் திறன்இங்குத் தெரிக்கல் உற்றாம்" (சிவ.7)

என்னும் சிவப்பிரகாசத்தை, 'வளம்பயில் நூலின் மதிப்புடன் வகுத்து, விளம்புறு பொருளின் மேன்மையை விரித்தது'[29] என்று காவை அம்பலநாதத் தம்பிரான் விதந்து கூறுவர்.

புறச் சமயத்தவர்க் கிருளாய்

சமயங்களை அகச்சமயம் என்றும், புறச்சமயம் என்றும் இரண்டாகப் பாகுபடுத்திக் கூறுதலே முன்னைய வழக்கமாக இருந்தது. அப்பாகுபாட்டினை மேலும் விரித்துச் சமயங்களை அகம், அகப்புறம், புறம், புறப்புறம் என்னும் நான்கு கூறாய்ப் பிரித்து ஒவ்வொரு கூற்றையும் அறுவகையாக வகுத்து முதன்முதலாக ஆராய்ந்து காட்டிய பெருமை சிவஞான முனிவர்க்கே உரியதாகும்.[30] அப்பகுப்பே பின்னர் நின்று நிலவுவதாயிற்று.

உலோகாயதர், மாத்தியமிகர், யோகசாரர், சௌந்திராந்திகர், வைபாடிகர், ஆருகதர் (சமணர்) ஆகிய அறுவரும் புறப்புறச் சமயத்தார் எனப்படுவர். இவர்கள் அடிப்படை நூல்களாகிய வேதம், சிவாகமம் என்ற இரண்டையும் ஏற்றுக் கொள்ளாதவர்கள். ஆயினும் ஒரு நூல் என்றும் பிரமாணம் என்றும் கொண்டு ஒரு நெறியிலே நிற்றலால் அந்நெறியும் சமயம் எனக் கொள்ளப்படும். அகச்சமயம் புறச்சமயங்களிலும் புறமாதலை நோக்கிப் புறப்புறச் சமயம் என வைக்கப்பட்டன.

தார்க்கிகர், மீமாஞ்சகர், ஏகான்மவாதிகள், சாங்கியர், யோக மதத்தினர், பாஞ்சராத்திரிகள் ஆகிய அறுவரும் புறச்சமயத்தவர் எனப்படுவர். இவர்கள் வேதங்களைப் பிரமாணமாகப் பொதுவகையில் கொண்டாலும், சிறப்பு வகையில் சிறிது சிறிது வேறுபடுகின்றார்கள். தார்க்கிகர் வேதப்பொருளோடு முரணிப் பொருட்டன்மை கொள்பவர். மீமாஞ்சகர் வேதத்தில் கரும காண்டத்தை மட்டுமே கொள்பவர்கள், ஞான காண்டமாகிய உபநிடதங்களை இகழ்பவர். ஏகான்மவாதிகள் ஞான காண்டம் மாத்திரம் பிரமாணம் கொண்டு கரும காண்டத்தை இகழ்பவர்கள். சாங்கியர், யோகர், பாஞ்சராத்திரிகள் ஆகிய மூவரும் வேத வாக்கியங்களில் தத்தம் மதத்திற்குப் பொருந்துவன மாத்திரமே எடுத்துக்கொண்டு, ஏனையவற்றிற்குப் பிரமாணம் கொள்ளாமையாலும், வேதப்புறமாகிய நூல்களைப் பிரமாணம் எனக் கொள்ளுதலாலும், இவ்வறுவரும் சிவாகமநிந்தகர் ஆதலால் இவர்கள் நெறிகள் புறமாகக் கொள்ளப்பட்டன.

பாசுபதர், மாவிரதர், காபாலர், வாம மதத்தினர், வைரவ மதத்தினர், ஐக்கியவாத சைவர் ஆகிய அறுவரும் அகப்புறச் சமயத்தார் ஆவர். பாசுபதர் முதலிய ஐவரும் வேதம், சிவாகமம் ஆகியவற்றை உடன்பட்டாலும் இரண்டற்கும் வேறாகிய பாசுபதம் முதலிய நூல்களைச் சிறப்பாகக் கொள்வர். வேதம், சிவாகமம் இரண்டுள்ளும் ஆகாதவை என்று விலக்கப்பட்டவைகளை ஆதரித்து வருபவர்கள். ஐக்கியவாத சைவர் வேதம், சிவாகமம் ஆகியவற்றைச் சிறப்பு வகையால் ஏற்றுக் கொண்டாலும், அதனைச் சாதிக்கும் சிவாகம வாக்கியங்களை இகழ்பவர். இக்காரணங்களால் இவர்களின் நெறியும் அகத்திற் புறமாக வைக்கப்பட்டன.[31]

இவ்வாறு மூன்று வகையாகப் பிரித்துக் காணப்பட்ட புறச்சமயங்கள் மூன்றும், முக்கூற்றுப் புறச்சமயங்கள் என்று கூறப்படும். இச்சமயங்களில் உள்ள அனைவரையும் 'புறச்சமயத்தார்' என்று சிவப்பிரகாசம் குறிப்பிடும்.

இவர்கள் சைவ சித்தாந்தத்தின் அடிப்படை நூல்களையும் பொருள் உண்மைகளையும் ஏற்றுக் கொள்ளாதவர்கள். இவர்களுக்கு சைவசித்தாந்தத்தின் சிறப்பு விளங்காது ஆகையால் 'புறச்சமயத்தவர்க்கிருளாய்" என்று சிவப்பிரகாசம் கூறும்.

அகச்சமயத் தொளியாய்

பாடாணவாத சைவர், பேதவாத சைவர், சிவசமவாத சைவர், சிவ சங்கிராந்த வாத சைவர், ஈசுவர அவிகாரவாத சைவர், சிவாத்துவித சைவர் (நிமித்த காரண பரிணாம வாத சைவர்) இவ் ஆறு வகையினரும் அகச்சமயத்தார் எனப்படுவர்.

'அகச்சமயத் தொளியாய்' எனும் சிவப்பிரகாசப் பாடலில், சித்தாந்த சைவத்தோடு ஒப்பப் பொருள் உண்மை கொண்ட, உள்ளுரிமை உடைய அகச்சமயங்களே குறிக்கப்பெற்றன."[32] என்று சிவஞான முனிவர் விளக்கம் தருவர்.

வேதம், ஆகமம் இவற்றைப் பிரமாணங்களாகக் கொண்டு பதி, பசு, ஆணவம், கன்மம், சுத்த மாயை, அசுத்தமாயை எனும் அநாதி நித்யப் பொருள்களையும் ஒப்புக்கொண்டு, அவற்றிற்கு உண்மை இயல்பு கூறும்போது மட்டும் வேறுபடுகின்ற சமயங்கள் அகச்சமயங்களாகும்.

"அகச்சமயத்தில் உள்ளவர்களுக்கு, சைவ சித்தாந்தத்தின் மெய்ப்பொருளை ஆகமங்களின் அடிப்படையில் தக்க ஆசிரியர் மூலம் எடுத்து உணர்த்தினால் அவர்கள் இவ்வுண்மையைத் தெரிந்து கொள்வார்கள் என்பதனால் சிவப்பிரகாசம் 'அகச்சமயத் தொளியாய்' என்று கூறிற்று"[33] என்று சிவஞான பாடியத்தில் சிவஞான முனிவர் கூறுவர்.

புகலளவைக் களவாகி

'பிரமைக்குச் சிறந்த காரணமாவது யாது அது பிரமாணம்' என்பர் தருக்க நூலார். 'பிரமை' என்பது மெய்யான அநுபவ அறிவு. இது வடமொழியில் 'பிரமா' என நிற்கும். 'பிரமாணம்' தமிழில் 'அளவை' எனப்படும். 'பொருள்களைத் திட்டமாக அளந்தறியும் கருவி' என்பது பொருளாகும். 'பொருள் உண்மைக்கு அளவு கூறுதல்' என்பார் சிவஞான முனிவர்.[34]

பொருள்களைத் திட்டமாக அளந்தறியுமிடத்து அந்நிகழ்ச்சிக்கண் மூன்று பொருள்கள் உள்ளனவாகும். அவை, 'பிரமாதா, பிரமாணம், பிரமேயம்' என்பன. இவை 'அறிவின் வாயில்கள்' என்றழைக்கப்படும். அளவை வழியாக வரும் அறிவு 'பிரமிதி' எனப்படும். பிரமாதா - அளப்பவன். பிரமேயம் - அறியப்படும் பொருள்.

பதி, பசு, பாசம் ஆகிய முப்பெரும் உண்மைகளை நாம் தெளிவாக உணர்ந்து கொள்ள, அறிவின் வாயில்கள் பற்றி அறிந்துகொள்ள வேண்டியது மிக அவசியம். இம்மூன்றின் அடிப்படை உண்மைகளை முறையாக அறிந்தால்தான் மெய்யறிவுபற்றித் தெரிந்துகொள்ள இயலும். ஆதலின், அளவை என்பது மிக அவசியமான ஒன்றாகும்.[35]

மெய்கண்டார் சிவஞான போதத்தில் அளவையியல் என்று தனியே கூறவில்லையெனினும் அளவையென்னும் அடித்தளத்தின்மீது நின்று நூற்பாக்களை

விவரிக்கின்றார். முதல் நூற்பாவில், ‘என்மனார் புலவர்’ என்பது அளவை நூலின் இயல்புணர்ந்தோரைக் குறிக்கும் எனலாம். “விளம்பிய உள்ளத்து மெய் வாய் கண் மூக்கு அளந்து அறிந்து அறியா’ எனவரும் சிவஞான போதத்து ஐந்தாம் சூத்திரத் தொடர், ‘பொருளை அளந்து அறியும்போதே அறிவின் எல்லையை அறிய வேண்டும்’ என விளக்குகிறது.[36]

அதன்பின் சிவஞான சித்தியார் அருளிய அருள்நந்தி சிவம் பதினான்கு பாடல்களில் அளவை இயலை விவரித்துச் சொல்கிறார். அதற்கு உரை எழுதிய மறைஞான சம்பந்தர் அளவை இயலின் முக்கியத்துவம் குறித்து ஒரு பழம் பாடலை எடுத்துக்காட்டி விளக்குகிறார்:

> “பண்ணிலாற் கில்லாத பாட்டிற் பயம் போன்றும்
> கண்ணிலாற் கில்லாக் கவின்போன்றும் - எண்ணில்லா
> அஞ்சொலளவை அறியா தவற்கில்லை
> செஞ் சொலளவின் சிறப்பு”

பண் அமையாத பாட்டினால் பயன் மிகுதிப்படாதது போலவும், கண் இல்லாதவர் இயற்கை அழகை நுகர இயலாதது போலவும், அளவை இயலின் தன்மை அறியாதவர்கள் சொற்களின் சிறப்பை அறிய இயலாது என்பது இதன் பொருளாகும். இதனால் அளவை இயலின் இன்றியமையாமை நமக்குப் புலனாகிறது.[37]

‘பொறிகளால் காணும் காட்சியும், குறிகளால் உய்த்துணரும் அநுமானமும், கருத்தா மொழியாகிய ஆகமமும்’[38] என அளவை மூன்று வகைகள் ஆகும் என்று கூறியபோதிலும், பத்து வகையான அளவைகள் இந்தியத் தத்துவங்களில் காணப்படுகின்றன.

உலகாயதம் (பிருகஸ்பதி), காட்சி என்ற ஒன்றை மட்டும் கொள்கிறது, பௌத்தம் (புத்தர்) அத்துடன் அநுமானத்தைச் சேர்த்து இரண்டு என்றும், சாங்கியம் (கபிலர்) ஆகமத்தைச் சேர்த்து மூன்று என்றும், நியாயம் (அக்கபாதர்) உவமானத்தைச் சேர்த்து நான்கு என்றும், வைசேடிகம் (கணாதர்) அருத்தாபத்தியை இணைத்து ஐந்து என்றும், மீமாம்சை (சைமினி) அபாவத்தைச் சேர்த்து ஆறு என்றும் கூறுகின்றன. மேலும், கிருதகோடியும், வேதவியாசரும் முறையே எட்டு, பத்து (இயல்பு, ஐதிகம், மீட்சி, சம்பவம்) எனத் தத்தமக்கு ஏற்ற வகையில் அளவைகளை எடுத்துரைத்தனர் என்று மணிமேகலை கூறும்:

> “வேத வியாதனும் கிருத கோடியும்
> ஏதமில் சைமினி எனும் இவ் ஆசிரியர்
> பத்தும் எட்டும் ஆறும் பண்புறத்
> தம்தம் வகையால் தாம் பகர்ந்திட்டனர்
> காண்டல் கருதல் உவமம் ஆகமம்
> ஆண்டைய அருத்தாபத்தியோடு இயல்பு

ஐதிகம் அபாவம் மீட்சி ஒழிவறிவு
எய்தி உண்டாம் நெறி என்று இவை தம்மால்
பொருளின் உண்மை புலங்கொளல் வேண்டும்"[39]

இப்பத்துக்கு மேலாகவும் அளவைகளை எண்ணுவாரும் உளர் என்று கூறி, ஆனால் அவையெல்லாம் 'காண்டல், கருதல், உரை' என மூன்று அளவைகளில் அடங்கும் என்பார் அருள்நந்தி சிவம்.

"...... அவையிற்றின் மேலும் அறைவர்; அவைஎல்லாம்
அளவை காண்டல் கருதல் உரை என்ற இம்மூன்றில் அடங்கிடுமே"[40]

என வரும் சித்தியாரின்படியே,

"காட்சி கருதல் உரை அளவையினால்
காணுறும் எவ்வகைப் பொருளும்" [41]

என்று திருத்தணிகைப் புராணமும் கூறிற்று.

காட்சி என்பது ஐம்பொறிகளுள் ஒன்றாலும் மனத்தாலும் நேரே அறியும் அறிவு. இங்குக் கண் என்ற அறிகருவி மூலம் பெறும் அறிவு மட்டும் அல்லாமல் ஐம்பொறிகள் அனைத்தின் மூலமாகப் பெறும் அறிவும் காட்சி எனப்படும். இது வடமொழியில் 'பிரத்தியட்சப் பிரமாணம்' என வழங்கப்படும்.

"கண்ணால் வண்ணமும் செவியால் ஓசையும்
நண்ணிய மூக்கால் நாற்றமும் நாவால்
சுவையும் மெய்யால் ஊறும் எனச் சொன்ன
இவை இவை கண்டு கேட்டு உயிர்த்து உண்டு உற்று....
குணம் கிரியையின் அறிவது ஆகும்"[42]

கருதல் என்பது விட்டு நீங்காமல் இருக்கும் இரு பொருள்களின் தொடர்பை அறிந்து, அவற்றில் ஒன்றை மட்டும் நேரே பார்த்து, பார்க்காத மற்றொன்றை நிச்சயம் இருக்க வேண்டும் என்று முடிவு செய்தல். இது 'வழி அளவை' என்றும் கூறப்படும். மறைந்திருக்கும் நெருப்பை அதனோடு விட்டு நீங்காமல் இருக்கும் புகையைக் கொண்டு அறிவது. விட்டு நீங்காமை 'அவினாபாவம்' எனப்படும். புகை காட்சியில் படும்பொழுது மறைந்திருக்கும் நெருப்பை அறியலாம். ஆகையால், விட்டு நீங்காது இருக்கும் பொருள் காட்சியில் பட வேண்டும். இச் செய்தி வடமொழியில் 'அநுமானப் பிரமாணம்' என்றழைக்கப்படும்.

இது மேற்கோள், ஏது, எடுத்துக்காட்டு என்னும் மூன்று உறுப்புகளைக் கொண்டது. எடுத்துக்காட்டைச் சொல்லும்போது ஏதுவிற்கும் துணியப்படும் பொருளுக்கும் உள்ள விட்டு நீங்காத தொடர்பை அறிவிக்கும் சொற்றொடரை உடன் கூட்டிச் சொல்லுதலும் உண்டு. அச்சொற்றொடரை 'வியாத்தி உரை' என்பர்.

"குறைவிலா வியாத்தியால் மறைபொருளைக் காண்டல்"[43]

என்பது சிவநெறிப் பிரகாசம்.

ஏதுவும், இயல்பு, காரியம், இன்மை என மூவகைப்படும். மரம் முதலிய சொற்களைக் கேட்கும்போதும், படிக்கும்போதும் அவற்றின் பொருளாகிய மரம் முதலிய கருத்துகளை நம் அறிவு அறிந்துகொள்வது, இயல்பு ஏது, சகச ஏது எனப்படும். தன் காரணத்தை விட்டு நீங்காத காரியம், காரிய ஏது எனப்படும். புகையுடைமை காரிய ஏது. பனி இன்மையால் குளிர் இல்லை என்பதும், குளிர் இன்மையால் பனி இல்லை என்பதும் இன்மை ஏது எனப்படும். இது 'அநுபலத்தி ஏது' எனவும் வழங்கப்படும்.

சில உண்மைகளை நம் பொறிகளின் வாயிலாக நேரே பார்க்கவும் இயலவில்லை; பகுத்தறிவின் மூலமாக அறியவும் இயலவில்லை. அப்படிப்பட்ட வாழ்க்கைக்குத் தேவையான உண்மைகளை நாம் ஞானிகளின் வாய்மொழி மூலமாக அறிகின்றோம். இது 'உரை அளவை' எனப்படும். வடமொழியில் 'ஆகமப் பிரமாணம்' என்று சொல்லப்படும். இதனை,

மணிமேகலை,

"ஆகம அளவை அறிவன் நூலால்
போக புவனம் உண்டு எனப் புலங்கொளல்" [44]

என்று கூறும்.

இம்மூன்றிலும் ஆன்மாவிற்கு அறியும் கருவியாக இருப்பது ஆன்மாவின் அறிவாகும். இதுவே, 'ஆன்ம சிற்சத்தி' என்று சைவ சித்தாந்தம் கூறுகிறது. இதனை, 'உயிரின் ஓடு உணர்வு' என்று சித்தியாரில் அருள்நந்தி சிவம் குறிக்கின்றார். இதற்கு,

"தன்னை நோக்கி நிற்கும் அறிவாகிய ஆன்மாவினின்றும்
விடயங்களை நோக்கியோடும் அறிவாகிய சிற்சத்தி"

என்று விளக்கம் தருவர் சிவஞான முனிவர்.[45]

தார்க்கிக மதத்தாரோ காட்சி முதலியவற்றையே 'அளவை' என்பர். இக்கருத்தை சைவசித்தாந்தம் ஏற்பதில்லை. அறியும் கருவி பிரமாணம்; அதனால் காட்டப்படும் பொருள் பிரமேயம் ஆவதால் பிரமாணம், பிரமேயம் ஆகாது. அதுபோல் எது பிரமேயமோ அது பிரமாணமாகாது.

ஐம்பொறிகளும் பிரமாணம் எனில், பொறிகள் ஆன்மாவின் அறிவால் அறியப்பட்டுப் பிரமேயமாவதால் அவற்றைப் பிரமாணம் என்று கூறலாகாது. எனவே, அவற்றை அறியும் ஆன்மாவின் சிற்சத்தியே பிரமாணம் ஆகும். பொறி முதலிய அதற்கு வாயில் ஆதல்பற்றிப் பிரமாணமென்று உபசரித்துக் கூறப்படுகிறது.

எனவே, ஆன்மாவின் சிற்சத்தி பிரமாணம், பொறிகள் முதலியவை துணைக் கருவிகள், காட்சி, கருதல், உரை ஆகிய பிரமிதிகள் உபசாரமாய் பிரமாணம் எனப்படும்.[46]

“புந்திக்கு மேலான போதமாகிச்
செய்ய சிவசத்தி துணையாய் விளங்கும் சீவ
சிற்சத்தி பிரமாணமெனத் தெரிப்பர் தெரிந்தோர்”[47]

என்று சிவநெறிப் பிரகாசம் கூறும். உண்மையான அளவையானது, தான் எவ்விடத்தும் எல்லாவற்றையும் அளப்பதாகவே இருத்தல் வேண்டுமன்றி, ஓரிடத்தும் தான் பிறிதொன்றால் அளக்கப்படும் பொருளாதல் கூடாது. பொருள்களை அளந்தறிவது ஆன்மா. அஃது அளத்தற்கு அதற்கு நேர் கருவியாய் இருப்பது அதனது அறிவாற்றலே. அவ்வாற்றல் ‘ஆன்ம சிற்சத்தி’ எனப்படும். ஆன்மா பிறபொருளை அறியுமிடத்து ஆன்மா அளப்பவனாயும் (பிரமாதா), அதனது சிற்சத்தி அளவையாயும் (பிரமாணம்) நிற்கும்.

சுத்தமான சிவசத்தி சகாயமாய்ப் பிரகாசியா நிற்கும் ஆன்ம சிற்சத்தியைப் பிரமாணம் என்று சிவநெறிப் பிரகாசம் கூறும். ஆன்ம சிற்சத்தி முடிந்த பிரமாணமாக இருந்தாலும், சிவசத்தி மனிதனுக்கு உதவவில்லையானால் - அதாவது கடவுள் அருளால் மனிதனுக்கு உரிய அறிவு வெளிப்பட வில்லையானால், இந்த மூன்று துணைப் பிரமாணங்களினால் மனிதனுக்கு ஏதும் பயன் இல்லை.[48]

எனவே, ஆன்ம சிற்சத்தி சிவஞானத்தால் காரியப்படுவதால் பிரமேயமாகுமா என்றால் ஆகாது. அறிதல் என்பது இங்கு ‘அறிந்து அநுபவித்தல்’ என்பதாகும். பிரமாணம் என்பது அறிந்து அநுபவிக்கும் அறிவாம். பிரமேயம் என்பது அறியப்பட்டு அநுபவிக்கும் பொருளாம். எனவே, எதையும் அநுபவிக்காது அறியும் சிவஞானம் (சிவசத்தி) ஞானமே அன்றிப் பிரமாணமாகாது.[49]

பெத்த நிலையில் ஆன்மாவின் அறிவுக்குத் துணை செய்யும் காட்சி, கருதல், உரை ஆகியவை உபசாரமாகப் பிரமாணம் எனப்படுவதுபோல, முத்தி நிலையில் ஆன்மாவின் அறிவிற்குத் துணை புரியும் சிவஞானமும் உபசாரமாகப் பிரமாணம் என்றே கொள்ளப்படும். பெத்தம், முத்தி இரு நிலைகளிலும் பதி, பசு, பாசங்களே பிரமேயங்களாகும். முத்தி நிலையில், ‘பிரமாதா, பிரமாணம், பிரமேயம், என்னும் வேறுபாடின்றி ஆன்மாப் பதியிலே வியாப்பியமாய் அதனுள் அழுந்திவிடும்.

அளவையானது, தன் குறிக்கோளாகிய உண்மை அறிவை அடையும் பொழுது அதுவே அறிவியலாக மாறுகிறது. இது அறிவு அளவியல் என்றும், அறிவு அளவை இயல் என்றும், அறிவாராய்ச்சியியல் என்றும் கூறப்படும். அடிப்படை உண்மையை (metaphysics) அறிந்து கொள்வதற்கு அளவை இயலும் (Logic) அறிவு அளவை இயலும் (Epistemology) இணைந்து செயல்பட வேண்டும். அப்பொழுதுதான் உண்மையை உள்ளவாறே உணர முடியும். இப்பேருண்மையை சைவ சித்தாந்தம் தெளிவாக விளக்குகிறது.[50]

சிற்சத்தியைவிட்டு, காண்டல், கருதல், உரை என இப்பிரமாணங்களையே பிற சமயங்கள் பிரமாணமாக வற்புறுத்துகின்றன. சைவ சித்தாந்தம் கூறும் பிரமாணம் பிறர் கூறும் பிரமாணங்களுக்கெல்லாம் பிரமாணமாக அமைகிறது. ஏனெனில், அறிவு

தொழிற்படவில்லையானால் பிற பிரமாணங்கள் தொழிற்படா. இக்கருத்தையே, சிவப்பிரகாசம் 'புகல் அளவைக்களவாகி' என்று கூறுகிறது. புகல் அளவை என்பது தொல் நையாயிகர் முதலியோர் கூறும் காண்டல் முதலிய அளவை. சைவ சித்தாந்தம் கூறும் 'ஆன்ம சிற்சத்தி' அளவை அவைகளுக்கெல்லாம் அளவையாக உள்ளது என்பதாகும். இது 'அளவை இயலில் காணப்படும் புதுக்கருத்தாகும்' என்பார் சோ.ந.கந்தசாமி.[51]

வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தம்

வேதாந்தம் என்பது காரணப்பெயராய் வேதங்களின் முடிபாகிய உபநிடதங்களைக் குறிக்கும். இடுகுறிப் பெயராய் நிற்கும்பொழுது உத்தர மீமாம்சையின் பிரம்ம சூத்திரத்தைக் குறிக்கும். காரணப்பெயர் வடமொழியில் யோகப்பெயர் என்றும், இடுகுறிப்பெயர் வடமொழியில் உரூடிப் பெயர் என்றும் குறிக்கப்பெறும்.[52]

நூற்றெட்டு உபநிடதங்களுள் முதலில் அமைவது ஈசாவாஸ்ய உபநிடதமாகும். இறுதியில் அமைவது முக்திகோபநிடதம் ஆகும். **"ஈசாவாஸ்ய மிதக்ம் ஸர்வம்"** (அனைத்தும் ஈசனால் நிறைந்துள்ளது) என்று சிவபிரானுக்கு உரிய ஈசன் என்னும் பெயரில் ஈசாவாஸ்யம் தொடங்குவதாலும், இறுதியில் உள்ள முக்திகோபநிடதம் **"ஊர்த்வ பூர்ண அதோபூர்ண மத்ய பூர்ணம் சிவாத்மகம்"** (மேலும் கீழும் நடுவும் சிவத்தால் பூர்ணமாக உள்ளது) என்று நிறைவுறுதலாலும், "உபக்ரமோபஸம்ஹார" (உபக்ரமம் - தொடக்கம்; உபசம்ஹாரம் - முடிவு) நியாயப்படி எல்லா உபநிடதங்களிலும் உள்ள பெரிய பொருள் சிவனே ஆயினன்.[53] எனவே, அவனுக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லை என்னும் பொருளில் **'ந தத்ஸமச் சாப்யதிகச்ச திருச்யதே'** என்று சுவேதாசுவதர உபநிடதம் குறிப்பது இங்குக் குறிக்கத்தகும்.[54]

"மறைகளின் தலைமை பொருந்திய
பிருகதாரணியம் முதன் மறைகள்
பிறவும் நல்லிதயத்து உறு பொருளால் உன்
பெருமையே பேசிடுமன்றே
அறவனேயிவற்றின் கருத்தெலாம் உன்
பாலடைவதே நியமம் என்றுரைப்பார்" [55]

என்றும்,

"நின்புடையெல்லாம் முதன்மையும்
உண்மை நிகழ்த்தும் மாண்டுக்கிய சுருதி" [56]

என்றும், 'உபநிடதங்கள் சிவபிரானின் முழுமுதன்மை யையே எடுத்துரைக்கின்றன' என்று சிவதத்துவ விவேகம் கூறுகிறது.

சைவ சித்தாந்தம் நூற்றெட்டு உபநிடதங்களையும் ஏற்கும். **"நூற்றெட்டாதி வேதம் எடுத்துரைத்த விருத்திக்கேற்க அமையும் இலக்கண வடிவாய்"** [57] என்று தாயுமானவர் எடுத்துரைப்பார்.

உபநிடதங்களும் சிவாகமங்களும் சூத்திரமும் பாடியமும் போன்றவை. பலபொருள்படும் சூத்திரத்தை அங்ஙனம் படாதவாறு இதுவே அதன் பொருள் என்று தெளிவுபடுத்தி உணர்த்துவது பாடியமாகிய பேருரையாகும். உபநிடதங்களைச் சூத்திரம் எனக்கொண்டால், ஆகமங்களின் ஞானபாதத்தை அச்சூத்திரங்களுக்கு அமைந்த பாடியம் எனக் கொள்ளல் தகும். எனவே, வேத முடிவாய் விளங்கும் உபநிடதங்களில் கூறப்பட்டிருக்கும் பொருளைத் தெளிவாக எடுத்துரைப்பதே ஆகமமுடிவாய் விளங்கும் சைவ சித்தாந்தம் என்பதை உணர்த்தும் முகமாக ***'வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தம்'*** என்று சிவப்பிரகாசம் கூறுகிறது. இதனை ***'வேதத் தலைபொருளாய்'*** என்று இறுதியிலும் கூறிற்று. மேலும் உணர்த்துதற்கு ***'வேதப் பயனாம் சைவமும் போல்'***[58] என்று தோத்திரமாகிய பெரிய புராணம் கூறுவது இக்கருத்தையேயாகும்.

'சிவாகம ஞானபாதங்கள் உபநிடதங்களின் தெளிபொருள் என்பதால் பிற மத ஆசிரியர்கள் பேருரைகள் எழுதியதுபோல சைவப்பெருமக்கள் உபநிடதங்களுக்குத் தனியாகப் பேருரை எழுதவில்லை என்ற ஒரு கருத்து உண்டு'' என்பர் அறிஞர்.[59]

சைவ சித்தாந்தத் திறன்

இறைவனுக்கும் உலகிற்கும் உயிர்களுக்கும் உள்ள தொடர்பு 'அத்துவிதம்' என்ற சொல்லால் குறிக்கப்பெறும். இது சைவ சித்தாந்தத்திற்கே உரிய சிறப்புப் பெற்ற கொள்கையாகும்.

'அத்துவிதம்' என்ற சொல் பிரிவின்மையை (அந்நியநாத்தியை) உணர்த்தும். 'பிரிவின்மை' என்று கூறுவதால் 'பொருள் இரண்டு' என்பதும், 'இரண்டாயினும் வேறுவேறாய் நில்லாது ஒன்றியே நிற்கும்' என்பதும் பெறப்படும். எனவே, இத்தன்மையை 'இருமையில் ஒருமை' என்று சைவ சித்தாந்தம் கூறும்.

"ஏகமேவாத்விதீயம்" என்பது சாந்தோக்ய உபநிடதத்தின் ஆறாம் சூத்திரக் கருத்து.[60] (ஏகம் ஏவ - ஒன்றாகவே ; அத்விதீயம் - இரண்டற்ற). 'அத்வைதம்' என்ற வடமொழிச் சொல்லே தமிழில் அத்துவிதம் என்று வழங்கப்படுகிறது.

'த்வைதம்' என்னும் வடமொழிப்பெயர், அதன்மேல் எதிர்மறைப் பொருளைத் தரும் நகாரம் சேர்ந்தே, 'அத்வைதம்' என வந்தது. "சொன்ன மொழிப்பொருள் நீக்கு நகாரம் அச்சொன்முன் மெய்யேல் - அந்நிலையாக உடல்கெடும் ஆவி முன்னாகியது - தன்னிலை மாற்றிடும்'' என்பது வீரசோழியம்.[61] அதாவது, ஒரு சொல்லின் எதிர்மறைப் பொருளைத் தருவது நகாரம். அச்சொல்லின் முதல் எழுத்து மெய்யெழுத்தாயின், அந் நகாரத்திலுள்ள நகர மெய் கெட ('ந்' கெட்டு), உயிரெழுத்தாகிய 'அ', அச்சொல் முன் வந்து அச்சொல்லின் பொருளை மாற்றும். எடுத்துக்காட்டாக, த்வைதம் என்ற சொல்லின் முதல் எழுத்து மெய்யெழுத்தானதால், நகாரத்தில் மெய்கெட்டு, அகாரமாகி 'அத்வைதம்' என்றானது.

எதிர்மறையை உணர்த்தும் நகாரம் தன்னோடு சேரும் மொழியின் முதல் எழுத்து உயிரெழுத்தானால், அந்த நகாரத்தில் அகரம் முன்னிற்க, நகரமெய்

பின்னிற்கும். ந+ஆதி என்பதில் வருமொழியின் முதலில் 'ஆ' என்ற உயிரெழுத்து நிற்பதால் ந (ந்+அ) என்பது முன்பின்னாக மாறி அ+ந்+ஆதி=அநாதி என்று ஆகிறது.[62]

பாணினீய மெனும் வியாகரணத்து இரண்டாம் அத்தியாயத்தில், நகரத்தின் வழி வந்த அகரத்திற்கு, பதஞ்சலி முனிவர் தமது வியாகரண பாஷ்யத்தில் விளக்கம் அளிக்கிறார்:

"தத்ஸாத்ருச்யம் அபாவஸ்ச்ச ததந்யத்வம்ஸ் ததல்பதா|
அப்ராசஸ்த்யம் விரோதஸ்ச்ச நஞர்த்தா: ஷட் ப்ரகீர்திதா:||" [63]

அவ்வாறு வரும் நகாரம் அன்மை (ஸாத்ருச்யம்), இன்மை (அபாவம்), வேற்றுமை (அந்யத்துவம்), குறை (அல்பதம்), பொறையின்மை (அப்ராசஸ்த்யம்), மறுதலை (விரோதம்) ஆகிய ஆறு காரணங்களையும் உணர்த்தும். ஆனால், பொதுவாக இன்மை, அன்மை, மறுதலை என்ற மூன்று மட்டுமே சிறப்பாகக் கொள்ளப்படும்.

'பிரகாசம்' என்பதன்மேல் நகாரம் வரும்பொழுது, 'அப்பிரகாசம்' என வரும். 'அப்பிரகாசம்' என்பது பிரகாசத்தினது இன்மை, 'இருள்' எனப் பொருள் தருதலால், அதில் நகாரம் இன்மைப் பொருளைத் தந்துநிற்கும்.

'பிராமணன்' என்ற பெயர்மேல் நகாரம் வரும்பொழுது ந+பிரமாணன் என்பது அப்பிராமணன் என்று ஆகும். பிறப்பில் பிராமணனாய், பிராமணனுக்கு உரிய ஒழுக்கத்தைக் கொள்ளாதவன் அப்பிராமணன் எனப்படுவான். எனவே, 'பிராமணனாயினும் பிராமணன் அல்லன்' என்பது அதன் பொருளாகும். ஆகவே, அதில் நகாரம் அன்மைப் பொருளைத் தந்து நிற்கும்.

தருமம் என்பதன் மேல்நகாரம் வரும்பொழுது 'அதருமம்' என வரும். 'அதருமம்' என்பது, தருமத்தின் மறுதலையாகிய 'பாவம்' எனப் பொருள் தரும். ஆகவே, அதில் நகாரம் மறுதலைப் பொருளைத் தந்து நிற்கும்.

தத்துவ உலகில் நன்கு அறியப்பட்டவர்கள் மூவர். சங்கரர், இராமனுசர், மத்துவர் ஆகியோர். அவருள், மத்துவர் தவிர மற்ற இருவரும் நகாரத்திற்கு இன்மைப் பொருளே கொண்டனர்.

'பிரமம் தவிர இரண்டாவது பொருள் இல்லை' என்று கூறுவர் சங்கரர். பிரமத்தைத் தவிர மற்றைய பொருள்கள் யாவும் தோற்றமே. பிரமமே தன்னை உயிராகவும் உடலாகவும் உலகமாகவும் தோற்றுவித்துக்கொண்டு அவற்றுள் இடம் பெற்றிருக்கும். அவித்தை (மாயை) காரணமாக அந்தப் பிரமம் தன்னை உயிராகவே கருதி நிற்கும். விவேக ஞானம் தோன்றிய காலத்தில் அவித்தை நீங்கி அது தன்னைப் பிரமம் என்று உணரும். எனவே, கடவுளும் உயிரும் பொருளால் வேறல்ல; ஒன்றே. சில காரணங்களால் அவை வேறு போலத் தோன்றுகின்றன. அத் தோற்றம் பொய்யானது. கடவுளும் உயிரும் ஒன்று என்பதே உண்மை.[64]

கடவுளுக்கும் உயிர்களுக்கும் உள்ள தொடர்பிற்குப் பொன்னும் அணிகலனும்போல என்ற உவமை கூறப்படும். பொன்னும் பொன்னால் செய்யப்பெற்ற

அணிகலன்களும் வேறுவேறு பெயர்களைப் பெற்றிருந்தாலும் அவை யாவும் பொன்னே. ஆதலால் அவற்றுக்கிடையே வேற்றுமை இல்லை. இது அபேதவாதமாகும்.

“உலகு கிடையாது; உயிர்கள் கிடையா. பிரமம் மட்டுமே உள்ளது.” எனக் கொண்ட சங்கரருக்கு அத்துவிதம் என்பதன் பொருள் இரண்டில்லை ஒன்றே என விளக்குவது எளிதாயிற்று. ஆனால், இராமநுசர் அசித்து ஆகிய உலகம், சித்து ஆகிய உயிர்கள், ஈசுவரன் ஆகிய இறைவன் என சைவ சித்தாந்தம் கூறுவதைப் போல முப்பொருள் உண்மையைக் கொள்பவர். இறைவன், உலகம், உயிர்கள் ஆகியவற்றிடையே உள்ள தொடர்பை விவரிக்க இராமநுசர் ‘அப்பிரதக்சித்தி’ என்னும் சொற்றொடரைப் பயன்படுத்துகிறார். ‘அப்பிரதக்சித்தி’ என்பதற்குப் ‘பிரிக்க முடியாதது’ என்று பொருள்.[௫] உலகு, உயிர்கள், இறைவன் ஆகிய மூன்றும் சேர்ந்தது ஒரு பொருள்.

இராமநுசர் கருத்துப்படி இந்த உலகத்தையும் உயிர்களையும் இயக்குபவன் இறைவன். அவன் இவை அனைத்துள்ளும் வியாபித்து நின்று இவற்றை இயக்குகின்றான். நமது உடலை உயிர் இயக்குகின்றது. உயிரை இறைவன் இயக்குகின்றான். எனவே, உயிர்கள் அனைத்தும் உலகமும் இறைவனது சரீரம். இறைவன் சரீரி. அதாவது அச்சரீரத்தை உடையவன்; உருவாக்கியவன்; கட்டுப்படுத்துபவன் இறைவன். இவ்வாறு கொள்வதால் இறைவனுக்குப் புறம்பாக அவனிடமிருந்து வேறுபட்ட பொருள் எதுவும் இல்லை என்பது பெறப்படுகிறது.

இவ்விதமாக இராமநுசர் உலகமும் உண்மை; உயிர்களும் உண்மை என்ற கொள்கையை விடாமல், அதேசமயம் பிரமம் ஒன்றே உள்ளது என்பதற்கு மிக நுட்பமான விளக்கம் கொடுத்தார்.[௬] சித்தாகிய உயிரும் அசித்தாகிய உலகமும் பிரமத்திற்கு விசேடணமாக உள்ளன. இவற்றால் விசேடிக்கப்பட்டு விசிஷ்டமாய் நிற்கின்ற பிரமம் ஒன்றே.

இறைவனுக்கும் உயிர்களுக்கும் உள்ள இச்சம்பந்தம் சொல்லுக்கும் பொருளுக்கும் உள்ள தொடர்பைப் போன்றது. சொல் வேறு; பொருள் வேறு ஆதலின் பேதம். சில இடங்களில் சொல்லும் பொருளும் அபேதமாகக் கூறப்படும். ‘கறுப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள’ என்பது தொல்காப்பியம். கறுத்தல் என்ற சொல்லும், சிவத்தல் என்ற சொல்லும் சினங்கொள்ளுதல் என்ற பொருளை உடையன என்பது இந்நூற்பாவின் கருத்து. இதில் சொல்லும் அதன் பொருளும் வேறாகக் கூறப்பட்டுள்ளன. இது ‘பேதம்’. இனி, ‘தெவ்வுப் பகையாகும்’ என்பது மற்றொரு நூற்பா. ‘தெவ்வு’ என்ற சொல் பகை என்ற பொருளைத் தரும் என்பது இதன் கருத்து. ஆனால், இந்நூற்பா சொல்லே பொருள் என்னும் படி இரண்டையும் ஒன்றாகக் கூறுகிறது. இது “அபேதம்.”[௭]

இறைவனும் உலகமும் ஒன்றே என அபேதமாகவும், அவை வேறு வேறு என பேதமாகவும் கூறுதலால் இவ்விரண்டையும் சேர்த்து ‘பேதாபேதம்’ என்று குறிக்கப்பட்டது.

அத்துவிதம் என்பதில் உள்ள நகாரத்திற்கு மத்துவர் மறுதலைப் பொருள் கொண்டார். துவைதம் என்றால் இரண்டு என்று பொருள். அவை, ஆன்மாவும், இறைவனும் ஆகும். ஆன்மா வேறு, இறைவன் வேறு. இவை இரண்டெனும் நிலை நீங்கி ஒன்றெனும் நிலையை ஒருபோதும் அடைவதில்லை. இவை இரண்டும் என்றும் இரண்டே ஆகும். இதுவே மத்துவரது, பிரம்மப் பொருளியல் கொள்கையாகும்.

பிரமமும் உயிரும் எவ்வகையில் மறுதலையான பொருள்கள் எனில், பிரமம் பெரிது; அறிவே வடிவாயும் ஆனந்தமே வடிவாயும் உள்ளது; தூயது. உயிர் சிறிது; அறியாமையையும் துன்பத்தையும் உடையது; மலங்களிற் பட்டு நிற்பது. இவைபோன்ற தன்மைகளால் அவை தம்முள் ஒளியும் இருளும் போல்வனவாம். இவ்வாறு கூறுவது 'பேதவாதம்' எனப்படும்.[68] இக்கருத்துகளை,

"...... பொற்பணி போல அபேதப்
பிறப்பிலதாய் இருள்வெளி போல் பேதமும் சொற்பொருள்போல்
பேதா பேதமும் இன்றிப் பெருநூல் சொன்ன
அறத்திறனால் விளைவதாய்" (சிவ.7)

என்று சிவப்பிரகாசம் கூறும்.

நகாரம் எதிர்மறைப் பொருளைப் பலவகையில் குறிக்குமாயினும், அஃது எண்ணுப்பெயர்மேல் வரும்பொழுது அன்மைப் பொருளைத் தவிர, இன்மை மறுதலைப் பொருளைத் தருதல் வழக்கத்தில் இல்லை. 'அநேகம்' என்பதில் 'ஏகம்' என்னும் எண்ணுப் பெயர் மேல் நகாரம் வருகின்றது. அவ்விடத்தில் ஏகம் - ஒன்று, அநேகம் - ஒன்றல்ல என்ற அன்மைப்பொருளைத் தவிர, 'ஒன்று இல்லை' என்று இன்மைப் பொருளையோ, அல்லது 'ஒன்றன் மறுதலை' என்ற மறுதலைப் பொருளையோ தரவில்லை. ஏனெனில், 'அநேகம்' ஒன்றில்லை என்றோ, 'ஒன்றன் மறுதலை' என்றோ பொருள் தருமாயின் அச்சொல் 'சூனியம்' என்னும் பொருளையே தரல் வேண்டும். அவ்வாறின்றி, 'அநேகம்' என்பது, 'ஒன்றல்ல, பல' என்றே பொருள் தருகின்றது.[69]

இஃதன்றி எண்ணுப்பெயர்மேல் நகாரம் வந்து அஃது இன்மை மறுதலைப் பொருளைத் தருவதாக எந்த எடுத்துக்காட்டும் காட்ட இயலாது. ஆகவே, 'துவிதம்' என்னும் எண்ணுப்பெயர் மேல் வரும் நகாரமும் இன்மை மறுதலைப் பொருள்களைத் தாராது, அன்மைப் பொருளையே தரும் ஆதலால், 'அத்துவிதம்' என்னும் சொல் 'இரண்டில்லை' என்றோ, 'இரண்டன் மறுதலை' என்றோ பொருள்படாமல், 'இரண்டல்ல' என்றே பொருள்படும். அதனால், 'பிரம்மமும், உலகமும் இரண்டாயினும் இரண்டல்லவாய் இருக்கும்' எனப் பொருள் தந்து, இரண்டும் வேறு வேறாய்த் தனித்துக் காணப்படாது ஒன்றி நிற்கும் நிலையையே உணர்த்துவதாகும். அங்ஙனமாகவே, இறைவன் உயிர்களோடு கலப்பினால் ஒன்றாயும், பொருள்தன்மையால் வேறாயும், உயிர்க்கு உயிராதல் தன்மையால் உடனாயும் நின்று செயற்படுத்துவான். இவ்வாறு

ஒன்றாதல், வேறாதல், உடனாதல் என்ற மூன்று தன்மையும் ஒருங்கே தோன்ற நிற்கும் நிலையே அத்துவிதமாகும் என்பதே சைவ சித்தாந்தம் தரும் விளக்கமாகும்.

சாத்திரங்கள் தோன்றுவதற்கு மிக முற்பட்ட காலத்திலேயே இக்கொள்கை தமிழரிடையே நிலவியது என்பதை,

“ஈறாய் முதல் ஒன்றாய் இரு பெண்ணான் குணமூன்றாய்
மாறாமறை நான்காய் வரு பூதம் அவை ஐந்தாய்
ஆறார் சுவை ஏழோசையொடு எட்டுத்திசை தானாய்
வேறாய் உடன் ஆனான் இடம் வீழிம் மிழலையே” [70]

என்னும் திருஞானசம்பந்தர் திருமொழியால் உணரலாம்.

“வேறாய் நின்று அந்தமும் ஆதியுமாம் திறத்தை, “வேறாய் ஈறாய் முதலாய்” என்றும், ஒன்றாய் நின்று உலகியற் பொருள்களை இயக்கும் திறத்தை, ‘ஒன்றாய் இருபெண்ணானாய், குணமூன்றாய், மறைநான்காய், பூதமவை ஐந்தாய், ஆறார் சுவையாய், ஏழோசையாய், எட்டுத்திசை தானாய்” என்றும், உயிர்களோடு ஒன்றாகாமலும் வேறாகாமலும் உடனிருந்து கண்டும் காட்டியும் உதவியருளும் முதல்வன் திறத்தை “உடனானான்” என்றும் இத்திருப்பாட்டில் திருஞானசம்பந்தப் பெருமான் அருளிச் செய்கின்றார். இவ்வாறு இறைவனது மூவகை நிலையினையும் திருவருளால் உணர்ந்து ஒருங்கே எடுத்து ஓதிய நூல் வடமொழியிலோ வேறு மொழிகளிலோ இதுகாறும் காணப்படவில்லை” என்பார் ஔவை.சு.துரைசாமிப் பிள்ளை.[71] இக்கருத்தைக் கொண்டே மெய்கண்டார் சிவஞான போதத்தில், ‘அவையே தானேயாய் நிற்கும்’[72] என்று எடுத்தோதினார்.

இதனால், “சமயவாதிகள் கூறும் தத்துவங்கள் யாவும் சைவ சித்தாந்தத்தில் ஒவ்வோரளவில் அடங்குவனவாக, சைவ சித்தாந்தத்தின் தனி இயல்பு வேறாகும்” என்பது விளங்கும்.[73]

“When the scriptures teach non-duality (advaita) they (siddhanta) mean to deny not the existence of two, but the duality of two; they say, “They are not two”, not “There are not two” என்று S.S.சூரியநாராயணசாஸ்திரியின் கருத்து இங்குக் குறிக்கத்தக்கதாகும்.[74]

சங்கரர் ‘இரண்டு இல்லை’ என்று கூறுவது பரம்பொருளைத் தவிர இரண்டாவதாக ஒரு பொருளும் இல்லை எனப் பொருள்படும். ஆனால் சைவம், ‘இரண்டு அல்ல’ எனக் கூறுவது இரண்டு பொருள்கள் இரண்டாய்ப் பிரிந்து விளங்காமல் ஒரே பொருள்போல ஒற்றுமைப்பட்டு கலந்திருப்பதைக் குறிக்கும். ஆகையால், ‘இல்லை’ என்பதற்கும் ‘அல்ல’ என்பதற்கும் வேறுபாடு உண்டு என உணர வேண்டும். ‘இல்லை’ என்பது இரண்டாவது பொருளையே மறுக்க வந்தது. ‘அல்ல’ என்பது இரண்டு பொருள்களுக்கிடையே உள்ள வேற்றுமையை மட்டுமே மறுக்க வந்தது.[75]

“The philosophy of Swedenborg is also advaita. Swedenborg gives the name “distincte unum” where saiva siddhanta uses advaita. The words “distincte unum” mean “one and distinct” என்பர் கோபால் செட்டி.[76]

எனவே, சைவ சித்தாந்த அத்துவிதத்தின் அருமை கூறுமுகமாக, சிவப்பிரகாசம், ‘பெருநூல் சொன்ன அறத்திறனால் விளைவதாய்” என்று கூறும். இங்குப் பெருநூல் என்றது சிவாகமங்களை. அறம் என்றது அவற்றில் விதிக்கப்பட்டுள்ள சரியை முதலிய சிவ புண்ணியங்களை. இனி, பெருநூல் சொன்ன அறத்திறனால் விளையும் சைவ சித்தாந்தம், இறைவனுக்கும் ஆன்மாவிற்கும் உள்ள சம்பந்தத்தை,

“...... உடல் உயிர் கண் உ;ருக்கன்
அறிவொளிபோல் பிறிவரும் அத்துவிதமாகும்
சிறப்பினதாய் வேதாந்தத் தெளிவாம் சைவ
சித்தாந்தத் திறன்இங்குத் தெரிக்க லுற்றாம்” (சிவ.7)

என்று சிவப்பிரகாசத்தின்வழி கூறும். இத்திருவிருத்தத்தில், ஒன்றாதலுக்கு, ‘உடலும் உயிரும்’, வேறாதலுக்குக் ‘கண்ணொளியும் கதிரவன் ஒளியும்’, உடனாதலுக்கு ‘கண்ணொளியும் ஆன்மபோதமும்’ உவமைகளாகச் சிவப்பிரகாசம் காட்டும்.

உயிர் தனக்கு வேறாகிய உடலிற் பொருந்தி, அவ்வேற்றுமை சிறிதும் தோன்றாமல் அவ்வுடலே என்னும்படி ஒற்றுமைப்பட்டு நிற்கிறது. இதுபோன்றே, இறைவன், உயிர் உலகம் ஆகியவற்றால் கலந்து ‘அவையேயாய்’ நிற்கின்றான். உயிரின் கலப்பு இல்லாமல் உடல் தனித்து நிற்றல் இயலாது. அதுபோல, இறைவனது கலப்பு இல்லாமல் எவ்வகைப் பொருளுக்கும் இருப்பு என்பது கிடையாது. ஒரு பொருள் நிலைபெறுதற்கு அதனோடு இறைவன் ஒன்றாய்க் கலந்து நின்றால்தான் அப்பொருள் நிலைபெறுதல் இயலும். எனவே, ‘ஒன்றாய்’க் கலந்து நிற்றல் இன்றியமையாதது.

கண்ணொளிதானே உருவத்தைக் காட்டக்கூடிய ஆற்றல் உடையதன்று. அதனோடு கதிரொளி கலந்து காட்டுகிறபோது கண்ணொளி காணும் ஆற்றல் பெறுகிறது. கதிரொளியும் கண்ணொளியும் இணைகிறபோதுதான் காட்சி புலப்படுகிறது. பொருளைக் காண்பது கண்ணொளியே அன்றிக் கதிரொளி அன்று. எனவே, கதிரொளி பொருளைக் கண்ணிற்குக் காட்டுகிறது. இவ்வாறே உயிர் ஒரு பொருளை அறிகிறபோது, இறைவனும் உயிரும் பிரித்தறியாது நிற்பனவாம். உயிர் பொருளை அறிவதற்கு இறைவன் அதற்கு அறிவிப்பவனாய் இருப்பான். இத்தன்மையால், அவன் ‘தானேயாய்” நிற்கின்றான். உயிரின் அறிவை விளக்குவதற்கும், பிற பொருள்களை இயக்குவதற்கும் இறைவன் ‘வேறாய்’ நிற்றல் இன்றியமையாததாகிறது.

கண்ணொளி பொருளைக் காண்பதற்கு உயிர் அறிவும் உடன் நின்று காணவேண்டும். எனவே, உயிர் ஒரு பொருளை அறியுங்கால் இறைவனும் அதனோடு

இருந்து அறிதல் வேண்டும். இத்தன்மையால் அவன், ‘அவையே தானேயாய்’’ நிற்கின்றான். உயிர்கள் பொருள்களை அறிந்து நுகர்வதற்கு இறைவன் ‘உடனாய்’’ நிற்றல் இன்றியமையாததாகிறது.

“The working process of combination of information from the two eyes in the brain, is not so clear (Barlow, 1972)’’ என்பதன் மூலம் கண்ணொளியும் ஆன்மபோதமும் ஒருங்கிணைந்து செயல்படும் செயல்பாட்டை உளவியலால் இன்றும் தெளிவாக விளக்க இயலவில்லை என்று அறிந்து கொள்ளலாம். அதாவது அச்செயல்பாடு மிக விரைவாகவும், நுட்பமாகவும் செயல்படுகிறது என்று உளவியல் (Psychology) கூறும்.[77]

இவ்வாறு மூன்று விதமான சம்பந்தங்கள் கூறினால் அநேகாந்த வாதம் ஆகுமே எனில் ஆகாது. ஏனெனில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு இயைபு பற்றிக் கூறப்பட்டது. (அநேகாந்தவாதம் - அநேக முடிவுகளைக் கூறும் வாதம்)

இவ்வாறு, ‘அத்துவிதம்’ என்றும் சொற்குப் பொருள்கூறி இஃது ஏனையோர் கூறும் பொருள்போலன்றி, சிறப்புடையது என்பதையே ‘பிறிவரும் அத்துவிதமாகும் சிறப்பினதாய்’’ என்று சிவப்பிரகாசம் கூறும். “பிறிவரும் அத்துவிதம்’ என்பதை உடம்பொடு புணர்த்தோதினார் புடைநூலாசிரியர்’’ என்பார் சிவஞான முனிவர். ஒரு சொல்லில் அதன் பொருளைத் தவிர வேறொரு பொருளையும் குறிப்பாகச் சேர்த்தல் ‘உடம்பொடு புணர்த்தல்’’ ஆகும். “பிறிவரும் அத்துவிதம்’ என்பதில் ‘பிரிக்க இயலாததால்’ என ஏதுப் பொருளும் வந்துள்ளதால் ‘உடம்பொடு புணர்த்த’லாகக் கூறப்பட்டதாகும்.[78]

‘சைவ சித்தாந்தத் திறன்’ என்பதில் ‘திறன்’ என்பது பொது, உண்மை என்னும் வகையாகும். சிவஞான போதத்திலும், அதன் வழிநூலான சிவஞான சித்தியாரிலும் இவ்விருவகையும் கூறப்பட்டாலும், அவை இரண்டும் பெயர் சுட்டிக் கூறப்படவில்லை. சிவப்பிரகாசத்தில் அப்பகுப்புத் தெளிவாகவே எடுத்துக்கூறப்பட்டுள்ளது. மேலும், சுத்த சைவம் முதலிய பிற சமயங்களிலிருந்து பிரித்துக் காட்டும் பொருட்டுச் ‘சைவ சித்தாந்தத் திறன் இங்குத் தெரிக்கலுற்றாம்’’ என்று சிவப்பிரகாசம் கூறுகிறது.

சங்கரர் கொண்ட ஏகான்மவாத அத்துவிதம், ‘பிரமப்பொருள் கேவலம் அத்துவிதம்’ என்பதால், ‘கேவலாத்துவிதம்’ என்றும், மத்துவர் கொண்ட துவிதம், கடவுளும், உயிரும் வேறு தனிப்பொருள்களாகக் கொள்ளுதலால் ‘துவிதவாதம்’ என்றும், இராமநுசர் கூறும் அத்துவிதம் பிரமம் ஒன்றேயாயினும், “பல விசேடணங்களோடு கூடிய விசிட்டமாகிய ஒன்றே’’ என்பதால் ‘விசிட்டாத்துவிதம்’ என்றும், சைவ சித்தாந்தம் கூறும் அத்துவிதம் ‘ஐக்கிய அநுபவ சுத்தநிலை’ என்பதால் அது ‘சுத்தாத்துவிதம்’ என்றும் அழைக்கப்படும்.

‘மண்டலப் பிராம்மண’ உபநிடதத்தில் ‘சுத்தாத்வைத ஸித்தி’ என்றும், ‘சுத்தாத்வைத ப்ரஹ்மம்’ என்றும், ‘சுத்தாத்வைத ஜாட்ய’ என்றும் மூன்றிடங்களில் ‘சுத்தாத்துவிதம்’ என்ற சொல் ஆளப்பட்டிருப்பதை நாலாயிரப் பிரபந்த சாரத்தில் எடுத்துக்காட்டி,[79] “சுவானுபூதி நீத்துத் தன்னையே பெரிய தெய்வமாகக் கூறிக்கொள்ளும்

ஏகவாதத்தைவிட, ஆண்டான் அடிமையாகக் கூறிக்கொள்ளும் துவைதஞ் சிறந்தது; இதினுஞ் சிறந்தது சம்பந்தப் பொருள் பயக்கும் அத்துவைதம்; இதினுஞ் சிறந்தது இறைவனது மோன முத்திரையில் நிறுத்தலெனா வெமது முடிவான சித்தாந்தம்" என்று திருப்பாவில் "சுத்தாத்துவித"த்தின் சிறப்பைக் கூறுவர் பாம்பன் சுவாமிகள்.[80]

இதுகாறும், புறச்சமயத்தவர்க்கிருளாய், அகச்சமயத்தொளியாய், புகலளவைக்கு அளவாகி, பொன்பணிபோல் அபேத பிறப்பிலதாய், இருள்வெளிபோல் பேதமும், சொற்பொருள்போல் பேதாபேதமும் இன்றிப் பெருநூல் சொன்ன அறத்திறனால் விளைவதாய், உடலுயிர்கண் அருக்கன் அறிவொளிபோல் பிறிவரும் அத்துவிதமாகும் சிறப்பினதாய், வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தத் திறனை, 'இதயப் பாசுரம்' விளக்கியமைகிறது.

"உபநிடதம் எல்லாம் மறைந்தாலும் ஈசாவாஸ்ய உபநிடதத்தின் முதல் மந்திரம் ஒன்று நினைவில் இருந்தால் போதும் என்று பெரியோர் கூறுவர். அதுபோல, சித்தாந்த சாத்திரத்தில் பதினான்கும் பார்க்கப்படவில்லையாயினும், மேற்கூறிய இதயப் பாசுரமாகிய திருவிருத்தம் குன்றின் மேலிட்ட விளக்குபோல் அனவரதமும் திகழும்" என்பார் நல்.முருகேசமுதலியார்.

மேலும், "உபநிடத வாசகங்களை வைத்து அநுபூதிப் பிரகாசம் என்ற நூல் ஒன்று அமைந்ததுபோல, உமாபதி சிவனாரது 'சிவப்பிரகாசம்' சிவனது திருவருள் சுயம்பிரகாசமாய்த் திகழ்வது. அதன் பெருமை அளப்பில" என்று சிவப்பிரகாசத்திற்குப் புகழாரமும் சூட்டுவார்.[81]

சிவப்பிரகாச உரைகள்

உமாபதி சிவனாருக்குப் பின் சுமார் நூற்றைம்பது ஆண்டுகட்குள்ளேயே சிவப்பிரகாசம் செல்வாக்கு மிகுந்ததாக இருந்தது என்பது அறியத்தக்கது. சிவப்பிரகாசத்திற்கு உரை எழுதிய ஒவ்வோர் உரையாசிரியரும் அதற்கு பதவுரை, பொழிப்புரை, விளக்கவுரை, விசேடஉரை, ஆராய்ச்சிவுரையாக அமையும் அகலவுரைகளை வழங்கியுள்ளனர். சித்தாந்தம் பயில்வார்க்கும், பயின்று அதன் வழியே சென்று சித்தாந்தத்தைக் கடைப்பிடிக்க விரும்புவார்க்கும் பயில்வதற்குரிய நூல்களையும், சிவப்பிரகாசத்தைப் பின்பற்றி, பின்வந்த கருவி நூல்களையும் அறிமுகப்படுத்தி, சிவப்பிரகாசத்திற்கு உரை செய்திருப்பது உரையாசிரியர்களின் தனித்தன்மையாகும். இவ்வுரைகளே சித்தாந்தத்திற்கு அவர்கள் வழங்கிய கொடையாகும். இதனை, மாணிக்கவாசகரின் திருவாசகமொழியில் சொன்னால், "சேய நெடுங்கொடை"[82] (அகன்ற பெரிய கொடை) என்று கூறலாம்.

இனி, சிவப்பிரகாசத்திற்கு உரை செய்த உரையாசிரியர்களின் சிறப்பைப் பறவைப் பார்வையாகப் பார்க்கலாம்.

சிவஞான முனிவர்

ஆகம சித்தாந்த நூல்களாகிய சிவஞான போதத்திற்குப் பாடியமும், சிற்றுரையும், சிவஞான சித்தியாருக்குப் பொழிப்புரையும் யாத்த சிவஞான முனிவர் சிவப்பிரகாசத்திற்குத் தனிநிலையில் முழுமையான உரை அருளவில்லை. ஆயினும் பல பாடல்களுக்கு அரிய விளக்கங்கள் கொடுத்துள்ளார்கள். சிவஞான முனிவர் சில இடங்களில் கூறும் சித்தாந்த உண்மைகள் சிவப்பிரகாச அடிப்படையில் அமைந்தவை. அவ்வரிய தெளிவான விளக்கங்களின் மூலம் சிவப்பிரகாசத்தின் மெய்ப்பொருளை உணரலாம்.

சிவஞான மாபாடியத்தில் அறுபத்தைந்து இடங்களில் (பிற்சேர்க்கை, ப.371), சிவப்பிரகாசத்தின் பெரும்பான்மையான பாடல்களுக்கு விரிவான விளக்கமும், அதற்கு முந்தைய உரையாசிரியர்கள் எழுதிய உரைகளில் காணப்படும் பொருந்தாமைகளையும் எடுத்துக்காட்டி, தக்க உரைகளையும் ஆங்காங்கே புலப்படுத்திச் சென்றுள்ளார்கள். அவை, சிவஞான முனிவர் சிவப்பிரகாசத்தை எவ்வாறு ஆழ்ந்து நோக்கிப் பொருள்நலம் கண்டுள்ளார்கள் என்று அறிய உதவுகின்றன. எடுத்துக்காட்டுகளாகச் சிலவற்றை இங்குக் காட்டுதல் பொருத்தமானதாகும்:

1. சிவப்பிரகாசக் காப்புச் செய்யுளான 'ஒளியான திருமேனி' என்பதற்குச் சிவஞானமுனிவர் தரும் விளக்கம் அவர்தம் பேருரையிற் காணப்படுகிறது. "அடியார்களின் உள்ளங்கள் வினையைக்கூட நினையா என்று உள்ளங்களையே எழுவாயாகக் கொள்ள வேண்டும். எழுவாய் 'உள்ளங்கள்' எனப் பன்மையாக இருப்பதைப்போல பயனிலைகளும் 'ஆளும்' எனவும், 'நினையா' எனவும் பன்மையாக இருப்பதைக் கண்டு கொள்ளலாம். இவ்வாறல்லாமல் வினையை எழுவாயாக்கி உரைப்பவர்களின் கருத்து பொருந்தாமையையும் எடுத்துக்காட்டி விளக்குவர்" சிவஞான முனிவர்.[83]

2. "ஆன்மா மலத்தோடு கூடியிருக்கும்போது மாயா கன்மங்களும், மலமாய் விளங்கும்: ஆன்மா சிவத்தோடு கூடியிருக்கும் போது மாயா கன்மங்களும் சிவமாய் விளங்கும்" என்பதை, 'மாயை மாமாயை' என வரும் சிவப்பிரகாசம் எடுத்துக்காட்டும். இப்பாடலுக்கு விரிந்த உரை ஒன்றை வழங்கி, முந்தைய பாடலான 'நன்னலம் பெற நிறைந்த ஞானமே ஞானம்" என்பதற்கு இயைபு காட்டி விளக்குகிறார்கள்.

"மருளெனில் இருளாய் நிற்கும் அருளெனில் ஒளியாய் நிற்கும்" என்பதற்கு பெத்தத்தில் நின்ற நிலை பொது இயல்பு என்றும், முத்தியில் நின்ற நிலை உண்மை இயல்பு என்றும் வழங்கப்படுமாதலால், மாயா கன்மங்கள் மலத்தைச் சார்ந்து நிற்றல் அவற்றின் பொதுவியல்பு; சிவத்தைச் சார்ந்து நிற்றல் உண்மையியல்பு. உண்மை அதிகாரத்தில் பொதுவியல்பைக் கூறியது எடுத்துக்காட்டாக வைத்து விளக்குவதற்காம்" என்பார்.[84]

சண்டேசுவர நாயனார் தந்தையின் காலைத் துண்டித்ததும், அப்பர் சுவாமிகள் நஞ்சை அமுதாக ஏற்றதும் கன்மமும், மாயையும் ஆன்மா சிவத்தைச் சார்ந்தபோது

சிவமாய் விளங்கும் என்பதற்கு நல்ல உதாரணங்கள். சண்டேசர் செய்தது சிவ புண்ணியம். அப்பர் சுவாமிகள் அனுபவித்தது சிவபோகம். இங்கு ஆசிரியர் உமாபதி சிவனாரின் திருவுள்ளக் குறிப்பை உரையாசிரியர் சிவஞான சுவாமிகள் உணர்ந்து உரை செய்துள்ள திறம் வியந்து போற்றுதற்குரியது" என்பார் சு.குஞ்சிதபாதம்.[85]

மதுரைச் சிவப்பிரகாசர் உரை

சிற்றம்பல நாடிகள் பரம்பரையில் வந்த மதுரைச் சிவப்பிரகாசர், ***"சிவப்பிரகாசத்திற்கு ஓர் சிவப்பிரகாசர்"*** என்னும்படி வெகு விரிந்த உரையொன்றை எழுதியுள்ளார். இவர் காலம் கி.பி.1488 ஆகும். இதுவே, இப்பொழுது கிடைக்கின்ற உரைநூல்களுள் மிகப் பழைமையானதாகும்.

"இந்த வியாக்கினஞ் செய்தது மெய்கண்ட சந்ததியில் காவையம்பலநாதத் தம்பிரானார் திருவடி மரபில் ஆசாரியரில் மதுரையில் ஞானப்பிரகாசத் தம்பிரானார் திருவடியடியாரில் சிவப்பிரகாசன் செய்த வியாக்கியானமென அறிக" என்று உரைவரலாறுகூறும்.[86]

"பொழிப் பகலம் நுட்ப நூல் எச்சமென் றாறாக்
கொழித்தகலங் காட்டாதார் சொற்கள் - பழிப்பின்
நிரையாமா சேக்கு நெடுங்குன்ற நாட
உரையாமோ நூலுக்கு நன்கு"

என்றமையான் நூல்களுக்கு நால்வகைப் பொருளுங்கூட்டி வியாக்கிசெய்யும் விதியுண்டாகையால் அவ்விதியைப் பற்றிப் பொழிப்பும் அகலமும் நுட்பமும் நூலெச்சமுங் காட்டி வியாக்கியெழுதினதென அறிக" என்று தன் உரையில் கூறுவர் மதுரைச் சிவப்பிரகாசர்.[87] அதற்கேற்பவே, மதுரைச் சிவப்பிரகாசர் உரை அமைந்துள்ளது. இதில் காட்டப்படும் மேற்கோள்கள் கடல்போல் விரிந்துள்ளன.

"சிவப்பிரகாசத்திற்கு மதுரைச் சிவப்பிரகாசர் எழுதிய பேருரையானது மிகப்பெரிய சைவ சித்தாந்தக் கருவூலமாயுள்ளது. அதிலிருந்து கிடைக்கின்ற சைவ சித்தாந்த நூற் செய்திகள் பல" என்பார் மு.அருணாசலம்[88] அதன்படியே, சிவப்பிரகாச உரையில், திருநெறி விளக்கம், தத்துவ விளக்கம், தத்துவப் பிரகாசம், ஞானப் பஃறொடை, மெய்ஞ்ஞான விளக்கம், சிவானந்த மாலை, சிவார்ச்சனா போதம், தேவிகாலோத்தரம் முதலிய சாத்திர நூல்களை எடுத்தாள்கிறார் மதுரைச் சிவப்பிரகாசர்.

'ஏற்ற இவை அரனருளின் திருவிளையாட்டு' (சிவ.18) எனவரும் சிவப்பிரகாச திருவிருத்தத்திற்கு, இறைவன் செய்யும் ஐந்தொழிற்கும் தொடர்புணர்த்தும் உரையும், முத்தியின் வகைகள் கூறி நிறைவாகச் சைவசித்தாந்த முத்தியை எடுத்துக்காட்டும் சிவப்பிரகாச விருத்தத்திற்கு **(சிவ.50)** வரைந்த விரிந்த உரையும் சிறப்புடையன.

இலக்கணம் சிதம்பரநாத முனிவர் உரை

காஞ்சிபுரத்தைச் சேர்ந்த இவர், சிவஞான முனிவரின் மாணக்கராவார். இவருடைய காலம் கி.பி.1780 ஆகும். இவ்வுரை சுருக்கமானது; தெளிவானது.

இவ்வுரையை நல்ல பதிப்பாக வெளியிடுவது இன்றியமையாதது என்று காஞ்சி ஞானப்ரகாச சுவாமிகள் கருதுவர்.[89]

மூவகை ஆன்மாக்களுக்கும் அருளும் முறைமைகளைக் கூறும் (தீவகமாமென உருவாய் வந்து) சிவப்பிரகாசப் பாடலில், **(சிவ.8)** தீவகமாம் (தீவகம் - பார்வை விலங்கு) என்றமையான் "முன்னும் பின்னும் வருவழிக் கொளல்" என்னும் தந்திரவுத்தியால் **சகலர்க்கு** என்பது பெற்றாம். இனி, தீவகமாம் என்பதைச் சுடராக்கி **விஞ்ஞானகலரிற் பக்குவர்க்கு** ஞானச் சுடராய் வந்து என்றும், உருவாய் என்பதற்குப் **பிரளயாகலரிற் பக்குவர்க்கு** அனந்ததேவ நாயனாராக வந்து என்றும், தீவகமாம் என உருவாய் எனக் கூட்டி முன் உரைத்தவாறும் உரைத்துத் திருநோக்கு முதலியவற்றைச் சகலர்க்கு ஆக்கிப் பாசநாசம் மேவ அருள் உதவும் என்பதை மூவர்க்கும் ஆக்கி முடிப்பினும் ஆம்" என்று விசேட உரை செய்வர் இலக்கணம் சிதம்பரநாத முனிவர்.[90]

சிந்தனை உரை

சிவப்பிரகாசத்திற்கு எழுந்த இச் சிந்தனை உரை, திருவாவடுதுறை ஆதீனத்து மூன்றாம் குருமகா சந்நிதானமாக விளங்கிய அம்பலவாண தேசிகர் அருளியதாகும். இச்சிந்தனை உரையை சுவாமிகள் எழுதினார் என்பதை,

> "முந்தும் ஆகமத்தை அருட்டுறை அண்ணல்
> மொழிபெயர்த்து உரைத்த நூல் முதலா
> முதல்வழிச் சார்பாம் மூன்று நூற் கருத்தும்...
> நற்கதி அடையா உயிர்களுக்கு இரங்கி
> நற்கதி கொடுத்திட வேண்டிச்
> சிந்தனையாக்கிப் பதிபசுபாசம்
> தெரிந்திட லளிதமாய்"

என வரும் உலகுடைய நாயனார் அருளிச்செய்த கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தால் அறியலாம்.[91] இவ்வுரை ஆதீனத்தில் மரபாகக் கற்பிக்கப்பட்டு வருகிறது.

> "ஒளியான திருமேனி உமிழ்தானம் மிகமேவு
> களியார வரும்ஆனை கழல்நாளும் மறவாமல்
> அளியாளும் மலர்தூவும் அடியார்கள் உளமான
> வெளியாகும் வலிதாய வினைகூட நினையாவே" (சிவ.பாயிரம்)

என்னும் சிவப்பிரகாசப் பாயிரப் பாடலுக்கு, சிவப்பிரகாசம் காட்டும் ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி, ஆன்ம லாபம் என்னும் மூன்று தச காரியங்களை விளக்கும் முகமாக உரையருள்கிறார் சிந்தனை உரையாசிரியர்.

"கழல்நாளும் மறவாம லென்னவே தெரிசனமும், உளமான வெளியாகு மென்னவே சுத்தியும், வலிதாய வினைகூட நினையாவே என்னவே ஆன்ம லாபமுங்

கூறியவாறும்; தசகாரியம் பத்தும் ஞானம்பற்றல் பணிநீத்தல் நேயத்தழுந்தலென்னுந் தரிசனஞ் சுத்தி லாபம் மூன்று எடங்கியவாறும்; ஒளியான திருமேனியெனவே சிவரூபமும், உமிழ்தான மிகமேவுகளியார வருமியானை யெனவே சிவதரிசனமும், கழல்நாளும் மறவாமல் அளியாளும் மலர்தூவு மடியார்களுமான வெளியாகு மெனவே சிவயோகமும், வலிதாய வினைகூட நினையாவே யெனவே சிவபோகமுங் கூறியவாறும்; இவை நாலோடேனைய வெல்லாம் உடனிகழ்ச்சியாமாறும் நுண்ணுணர்வினா லறிக. யாமும் அவ்வாறு செய்வோமென்பது கருத்து.''[92]

“ஆக்கியோன் பெயரே வழியே எல்லை
நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே
கேட்போர் பயனோடு ஆஎண் பொருளும்
வாய்ப்பக் காட்டல் பாயிரத் தியல்பே” [93]

என்னும் பாடலுக்கேற்ப, நூலைக் கற்கப் புகும்போது நூல் நுதலிய பொருளாகிய ‘தச காரியத்தை’ப் பாயிரத்தின் வழியே விளக்கியமைவது சிறப்புடையதாகும். பின்னால் எழுதப்பட்ட ‘தச காரியம்’ என்ற பண்டார சாத்திரங்களில் விளக்கப்பட்ட தாத்பரியங்களும் சிவப்பிரகாசம் பயிலாது அறியத்தக்கவை அல்ல.[94]

இலங்கைக் கொழும்பு மு.திருவிளங்கம் புத்துரை

இலங்கையைச் சேர்ந்த திருவிளங்க தேசிகர் சிவப்பிரகாசத்திற்கு ஒரு புத்துரை எழுதி, 1918ஆம் ஆண்டு வெளியிட்டார்கள். அந்நூலின் முகவுரையில், ‘மதுரைச் சிவப்பிரகாசர் செய்த உரையையும், இலக்கணம் சிதம்பரநாத முனிவர் செய்த உரையையும் தழுவியும், பொருள் இனிது விளங்கப்பெறாத விடங்களில் அவற்றைத் தழுவாமலும் இப்பதவுரை எழுதப்பட்டது... படிப்பவர்களுக்கு உபகாரமாக அரும்பதவுரையும் விஷயவகராதியுஞ் சேர்க்கப்பட்டிருக்கின்றன.” என்று உரையாசிரியர் எழுதுகிறார்.[95] ஆனால், பெரும்பாலும் இலக்கண சிதம்பரநாத முனிவர் உரையையே தழுவிச் சென்றிருக்கிறார் என்பது இவரது உரையால் விளங்கும்.

அசுத்த மாயை குறித்த சிவப்பிரகாசப் பாடலில் ‘அரன் அருளால் மன்னியிடும்’ என்னும் தொடருக்கு, “மாயை பிரபஞ்சமாய்த் தோன்றுதலும், ஒடுங்குதலும், உயிர்களுக்குக் கருவியாய் நின்று அறிவை விளக்குதலும், போகந்தருதலும் ஆகிய இவையெல்லாஞ் செய்தற்கு அறிவில்லாத சடமாகையால், அதனால் இயலாது. கன்மத்துக்கேற்ப இவற்றைக் காரியப் படுத்துந்தன்மை சித்தாகிய முதல்வனுக்கே யுள்ளதாம். ஆதலால், முதல்வனது அருளாகிய திரோதான சத்தியின் செயலால் மாயை காரியப்படும்” என்று எடுத்துக்காட்டி விளக்குவர் திருவிளங்கனார்.[96]

காஞ்சி ஞானப்ரகாச சுவாமிகள் உரை

திருக்கயிலாய பரம்பரை மெய்கண்டார் மரபு காஞ்சிபுரம் தொண்டை மண்டல ஆதீனம் 229 ஆம் பட்டம் குருமகா சந்நிதானம் சீலத்திரு ஞானப்ரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகளே, இந்நூலில் “காஞ்சி ஞானப்ரகாச சுவாமிகள்” என்று சுருக்கமாக அழைக்கப்படுகிறார்.

சுவாமிகளின் காலத்திற்குப் பின்னர்த்தான் அவரருளிய சிவப்பிரகாச உரை வெளிவந்துள்ளது. அந்தந்த திருவிருத்தங்களின் உரையில் வெவ்வேறு உரைகாரர்களின் கருத்தைச் சுருக்கமாக விமர்சனம் செய்து, எது பொருத்தமானது என்பதை சுவாமிகள் அடையாளம் காட்டி விளக்குகிறார். பல உரைகளின் வேறுபாடுகளை ஆராய்வதற்கு முன், பாடபேதமுறும் இடங்களில் கருத்தை நிறுத்தி, நாற்பத்தைந்து இடங்களை எடுத்துக்காட்டித் தொகுத்தளித்திருக்கிறார்கள்.

“உத்தேசமாத்திரத்தால் ‘எண்ணரிதாய்’ என்னும் திருவிருத்தம் உயிர் உறும் கேவலம் சகலம் சுத்தம் என்னும் மூன்று நிலையும் கூறிற்று. அதன்மேல் உயிர் கேவலம் சகலம் சுத்தம் என்ற முந்நிலை அடைதலை விரித்துணர்த்தத் தொடங்கி 33இல் கேவலாவத்தையும், 48இல் முதலடி யீற்றுச் சொல் முதலாக 49 மூன்றாவதடி முடிய சுத்தாவத்தையும் உணர்த்தப்பட்டன. அவத்தைகளைக் கொண்டு விளக்கம் செய்தலால் கற்போர் அம்முறையை அறிந்து உணர்ந்து கொள்ள வேண்டும்” என்று உரைசெய்வர் காஞ்சி ஞானப்ரகாச சுவாமிகள்

“நீக்கமில் அதீதம் ஆசு நிறைந்த கேவலமாம் நீர்மை
சாக்கிரம் கலாதி சேர்ந்த சகலமாம் தன்மையாகும்
நீக்கமில் இரண்டும் கூடாது ஒழிய ஓர் நிலையில் நீடும்
சாக்கிர அதீதம் சுத்தத் தகைமையது ஆகும் தானே” (சிவ.62)

என்னும் சிவப்பிரகாச விருத்தத்திற்கு சுவாமிகளின் உரை பின்வருமாறு :

“ஆன்மாக்கள் கருவிகள் நீங்கினும் நீங்காத ஆணவ மலத்தாலே மறைப்புண்டு மூலாதாரத்திற் கிடக்கும் அதீதம் நீக்கமில் அதீதம் எனப்பட்டது. இது காரிய கேவலாவத்தை. காரண கேவலம் ஆசு நிறைந்த கேவலம் எனப்பட்டது. காரிய சகலம் சாக்கிரம் எனப்பட்டது. காரண சகலம் கலாதிசேர்ந்த சகலம் எனப்பட்டது. காரிய சுத்தம் சாக்கிராதீதம் எனப்பட்டது. காரண சுத்தம் சுத்தத் தகைமையது எனப்பட்டது. இக்காரியாவத்தை மூன்றும் அக்காரணாவத்தை மூன்றொடும் ஒப்புறுத்தப்பட்டன. அவை காரணம் என்பதை யுணர்த்த ‘நீர்மை’, ‘தன்மை’, ‘தகைமை’ என்னும் இயல்பு, (சகசம்) குறிக்குஞ் சொற்கள் நின்றன.

இத்திருவிருத்தத்திற்குச் சிந்தனையுரையாளர், ‘நீக்கமில்... கேவல நீர்மையாம்’, ‘சாக்கிரம் .... தன்மையாகும்’, ‘ஊக்கமில்... ஆகும்’ என்ற மூன்றும் முறையே பாசத்தின் சொரூப லட்சணமும் தடத்த லட்சணமும் அவ்விரண்டுங் கூடாத சுத்தாவத்தை முடியுந் தானமும் உணர்த்திய என்றருளினார். ‘ஓர் நிலையில் நீடும் வியாபக அறிவே வீடு பேற்றிற்குரித்து’ என்றும் அவரருளியதும் உணரற்பாலது.

காஞ்சிபுரம் பிள்ளையார் பாளையம் இலக்கணம் சிதம்பரநாத முனிவர் உரையுள், காரணாவத்தை மூன்றனையும் உணர்த்தியதாக மட்டும் காணப்படுகின்றது. காரியாவத்தைகளைத் தரிசிப்பித்து, அத்தரிசனங்கொண்டே காரணாவத்தைகளையுந் தரிசிப்பித்தருளினார் ஆசிரியர் உமாபதி சிவனார் என்று மதுரைச் சிவப்பிரகாச சுவாமிகளே குறித்தருளினார்கள். திருவிளங்க தேசிகர் அதையே கொண்டுரைத்தார்.

“அதீதத்தால் கேவலத்தையும், சாக்கிரத்தால் சகலத்தையும், சாக்கிராதீதத்தால் சுத்தத்தையும் என்ற முறையில் காரியாவத்தைகளைக் கொண்டு காரணாவத்தைகளை விளக்கியருளி, மேலும், காரண கேவலம் உடலெடுத்தற்கு முன்னதாய அநாதி கேவலம். காரண சகலம் உடலெடுத்தது முதல் மாறிப் பிறப்பிறப்புறாது வீடுபெறுமளவும் நிகழும் ஆதிசகலம். காரிய சகலம் பிறப்பிறப்புக்கிடையில் அடையுஞ் சகலம். காரண சுத்தம் ஆதியந்தமில்லாத வீட்டு நிலை” என்று சிவப்பிரகாசம் உணர்த்தியருளும் அவத்தை நிலைகளை விளக்கிக் காட்டுவர் காஞ்சி ஞானப்ரகாச சுவாமிகள்.[97]

“சுவாமிகளின் தமிழ்நடை, இலக்கணப் பிழையின்றித், தருக்க ரீதியாய் காணப்படும் சிவஞான சுவாமிகளது நடைக்கு ஒப்பாகும். ஆனால் பாடியத்தில் இருப்பதுபோல் நீண்ட வாக்கியங்கள் காண்பதில்லை. பொருள் கொள்வது சிறிது கடினமே. ஒரு முறைக்கு இருமுறை பிடித்தால் ஆழமும் அழகும் கண்டு மகிழலாம்” என்பார் நல்.முருகேச முதலியார்.[98]

இது தவிர, ப.இராமநாதபிள்ளை, சி.சு.மணி, கு.சுந்தரமூர்த்தி, ஆ.ஈசுரமூர்த்திப் பிள்ளை ஆகியோரும் இக்காலத்தில் சிவப்பிரகாசத்திற்கு உரை எழுதியவர்களில் குறிப்பிடத்தகுந்தவர்கள் ஆவர். இவர்களின் உரைகள் இந்நூலில் கருத்தின் இயைபு கருதியும், மேற்கோள் கருதியும் தேவையான இடங்களில் எடுத்தாளப் பட்டிருக்கின்றன என்பது இவண் குறிக்கத்தக்கது.

இதுகாறும் கூறியவற்றால், ஒவ்வோர் உரையுளும் வெவ்வேறிடங்களில் உரைச்சிறப்பு வாய்த்திருத்தலின் அவற்றை ஒருங்கு வைத்து நோக்கியுணர்ந்து ‘ஒரு புதிய உரை’ செய்து உலகுக்குதவுதல் சைவப் புலவர் கடனாகும். அது சிவப்பிரகாசத்தைக் கண்டு காட்டும் உபகாரமாய் அமையும் எனலாம்.

நூல் கொடுக்கும் முறையும் கொள்ளும் முறையும்

பெத்தமாகவும் முத்தியாகவும் சொல்லப்பட்ட இச் சிவப்பிரகாசத்தையும், இதனால் விளங்கப்பட்ட சைவ சித்தாந்தத் திறனையும் கற்க விரும்பும் மாணாக்கரின் தகுதியை நோக்கிக் கொடுக்க வேண்டும். அங்ஙனம் அம்மாணாக்கருக்கு எவ்வாறு உபதேசிக்க வேண்டும் என்பதை சிவப்பிரகாசம்,

> “திருவருள் கொடுத்து மற்று இச்
>   சிவப்பிரகாச நன்னூல்
> விரிவது தெளிவு மாற்றால்
>   விளம்பிய ஏது நோக்கி
> பெருகிய உவமை நான்கின்
>   பெற்றியின் நிறுவிப் பின்முன்
> தருமலை வொழியக் கொள்வோன்
>   தன்மையிற் சாற்றலாமே” (சிவ.100)

என்று கூறுகிறது.

“சிவப்பிரகாசம் என்னும் மெய்ப்பொருள் நூலை விரிவாகவும், தெளிவுறும் வகையிலும், மூவகை ஏதுக்களினாலும், நான்கு வகை உவமைகளாலும் பொருள்

இயல்பை உணர்ந்து, முன்னும் பின்னும் உள்ள கருத்துக்களை முரணின்றி உணரத்தகும் நிலையில், மலபரிபாகம், சத்திநிபாதம் எய்தப்பெறும் அறிகுறி "தோன்றுமாயின்", அம்மாணவர்க்கு தீக்கை கொடுத்து இந்நூலை அளிக்க வேண்டும்" என்று கொடுக்கும் முறையும், கொள்ளும் முறையும் இச் சிவப்பிரகாசத்தால் விளக்கப்பட்டன.

'விளம்பிய ஏது நோக்கி' என்பது அளவையியலில் கருதல் அளவையின் கண் சொல்லப்பட்ட மூன்று ஏதுக்களாகும். அவை, இயல்பு, காரியம், அநுபலத்தி என மூன்று வகையாகும். பொருள்தன்னையே உவமையாக்கி (மா என்பது பல பொருள் ஒரு சொல்), 'மா பூத்தது' என்றால் மாமரமென அறிதல் இயல்பு ஏது ஆகும். புகையைக் கொண்டே இவ்விடத்து நெருப்பு உண்டென அறிதல் காரிய ஏதுவாகும். குளிர் இல்லாததால் பனியில்லை என்று உணர்தல் அநுபலத்தி ஏதுவாகும். (உபலத்தி - விளங்குதல்; அநுபலத்தி - விளங்காமை)

> "ஏது மூன்றாம்; இயல்பு, காரியத்தோடு, அநுபலத்தி; இவை
> ஓதின், இயல்பு மரம்மரத்தைக் காட்டல்; உறுகாரியம் புகைதன்
> ஆதியாய அனல் காட்டல் ஆகும்; அநுபலத்தியது
> சீதமின்மை பனியின்மை காட்டல் போலும், செப்பிடினே"[99]

என்பது சிவஞான சித்தியார்.

> "வினைபயன் மெய்உரு என்ற நான்கே
> வகைபெற வந்த உவமத் தோற்றம்"[100]

என்னும் தொல்காப்பிய நூற்பாவின்படி, வினைஉவமம், பயன் உவமம் வடிவ உவமம், நிற உவமம் ஆகிய நான்காலும் பெறும் பொருள்களிலே கருத்தை நிறுத்தி அறிந்து கொள்ள வேண்டும்.

பதி பசு பாசம் என்னும் திரிபதார்த்தங்களையும் அநுமானித்து நிச்சயித்து அறிதற்கு ஏதுவும், உவமையும் இன்றியமையாதன வாதலால் அவ்விரண்டையும் சிவப்பிரகாசம் விதந்து கூறுகிறது. இதனை வழிமொழிவதாகவே, சங்கற்ப நிராகரணமும்,

> ".... ஏதுவும்
> ஓது நால்வகை உவமையும் திகழ்தர
> அருள்சேர் மாந்தர் வெருள் சேராமல்"[101]

என்று கூறுகிறது.

"சிவன் நகங்கொண்டு அயன்தலை அறுத்தது கருவியால் செய்தது போலும் என்பது வினை உவமத்திற்கும், இந்திரியக் காட்சி போலும் மனக் காட்சி என்பது பயன் உவமத்திற்கும், ஆதித்தன் ஒளிபோலும் உள்ஒளி என்பது மெய் உவமத்திற்கும், மனிதர் வடிவு போலும் குரு வடிவு என்பது உருவ உவமத்திற்கும் உதாரணங்களாக" தத்துவப் பிரகாசம் கூறும்.[102]

திருவருள் கொடுத்து என்பது மாணாக்கருக்கு தீக்கை கொடுத்துச் சொல்ல வேண்டும் என்பதால் பாசம் நாசமுறவும், பதி ஞானம் பெறவும் தீக்கை இன்றியமையாததாகும். குருவால் மாணவர்க்குச் செய்து வைக்கும் முறையினால் தீக்கை எழு வகைப்படும்.

i) நயன தீக்கை : பார்வையால் தீக்கை செய்தல். மீன் தனது சினையைப் பார்த்தல்போல் குரு, மாணவனைத் தம் அருள் நோக்கால் பார்த்தல்.

ii) பரிச தீக்கை : பரிசத்தால் தீக்கை செய்தல். பறவை முட்டையைச் சிறகினால் பரிசித்தல்போல், குரு மாணாக்கனைத் தம் கைகளாலும் திருவடியாலும் பரிசித்தல்.

iii) வாசக தீக்கை : வாசகத்தால் தீக்கை செய்தல். மந்திரம் உபதேசித்தல்.

iv) மானச தீக்கை : மனத்தால் பாவித்து தீக்கை செய்தல். ஆமை கரையிலுள்ள முட்டையைத் தன் மனத்தால் பாவித்தல்போல, குரு மாணாக்கனைத் தம் அருள் உருவாய் பாவித்தல்.

v) சாத்திர தீக்கை : ஆகமப் பொருளை உபதேசித்துத் தீக்கை செய்தல். முப்பொருள் உண்மையினை நூல் வாயிலாகப் போதித்தல்.

vi) யோக தீக்கை : சிவயோகத்தைப் பயில உபதேசித்தல் : சீடனுட்சென்று துவாத சாந்த நிலையில் சிவனோடு கலக்கச் செய்தல்.

vii) ஔத்திரி தீக்கை : குரு மாணவனிடத்தில் ஞானம் விளங்குவதற்குத் தடையாய் உள்ள சஞ்சித வினைகளை அக்கினி காரியத்தால் போக்குதல். அக்கினி காரியமாவது ஓம குண்டத்தில் தீ வளர்த்து அதில் ஆகுதி செய்யும் முறையாகும். ஔத்திரி என்பது ஓமத்தோடு செய்யப்படுவது என்பது பொருள். இது ஞானவதி, கிரியாவதி என இரண்டு வகைப்படும். ஞானவதி ஓமகுண்டம், மண்டலம், சக்கரம் முதலியவற்றை மனத்தாற் கற்பித்துக்கொண்டு ஆகுதி முதலியவற்றை அகத்தே செய்வது; கிரியாவதி புறத்தே செய்வது.[103]

செய்யப்படும் தீக்கை, செய்யப்படுவோரின் அக வளர்ச்சி அடிப்படையில் மூன்றாகப் பாகுபடுத்தப்படும். 1. சமய தீக்கை 2. விசேட தீக்கை 3. நிருவாண தீக்கை

மாணாக்கனைச் சைவ சமயத்துக்கு உரியவனாக்குவது சமய தீக்கை. விசேட தீக்கையால் சிவ புத்திரனாகி சிவபூசை செய்தல், சிவாகமம் பயிலுதல் போன்றவற்றிக்குத் தகுதி பெறுவது.

சிவபூசை செய்வதற்கு விசேட தீக்கை இன்றியமையாதது. சமய தீக்கையின் பின் விசேட தீக்கை பெற்றுக் கிரியை அநுபவமும் யோக அநுபவமும் பெற்று அவற்றின் பயனாக மலபரிபாகம் எய்தி இருவினை யொப்பும் நாலாம் சத்திநிபாதமும் வரப்பெற்று, சிவனை அடையும் அவா நிகழப் பெற்றோர்க்கே முப்பொருளியல்பை உள்ளவாறு உணர்தலாகிய தத்துவ ஞானம் உண்மையான் விளங்கும். இந்நிலையில் உள்ளவரே நிருவாண தீக்கைக்கு உரியவராகிறார்.

அத்தீக்கையும் தீவிரச் செவ்வியர் எனப்படும் விரைவினர், தீவிரதரச் செவ்வியர் எனப்படும் வல்விரைவினர் என இரு வகையினருக்குச் செய்யப்படும். இவை அசத்தியோ நிருவாணம் எனவும், சத்தியோ நிருவாணம் எனவும் இரு வகையாகும். அசத்தியோ நிருவாணம் என்பது அத்தீக்கை பெற்றவர் தம்முடம்பு நீங்குங்காறும், சீவன்முத்தராக நின்று இறைப்பணி புரிந்து உடம்பு நீங்கியதும் திருவடிப் பேறெய்துவர். சத்தியோ நிருவாணம் என்பது வல்விரைவினர், தீக்கை பெற்ற அப்பொழுதே திருவடிப் பேறெய்துவர்.[104] உமாபதி சிவனார் பெற்றான் சாம்பானுக்கும் கள்ளிச் செடிக்கும் வழங்கியது இத்தீக்கையே யாகும்.

இவ்வாறு மாணாக்கர்க்குத் திருவருளாகிய தீக்கை கொடுத்து உண்மை ஞானத்தை அருள வேண்டும். இதனாற் சொல்லியது, சமயாசாரமுஞ் சந்தான ஆசாரமும் உண்டாய் வந்தான் ஒரு சீடனுக்கு ஆசாரியன் திருவடியை வைத்து இச் சிவப்பிரகாசம் என்னும் சிவ சாத்திரத்தை, பக்குவ கிரமத்திலே ஓதியருள வேண்டும் என்பதே கருத்தாகும்.

இவ்வாறு நூல் உபதேச முறைமையினால் கொடுப்பவரின் தகுதியும் கொள்பவரின் தகுதியும் உணர்த்தப்பட்டன. இவ்வாறே ஞான சாத்திர போதத்திற்குத் தகுதியுடையாரை,

> "உற்றசரியை ஒழியாத நற்கிரியை
> குற்றம் இலாக யோகக் குறிநெறியும் - முற்றிப்
> பிறந்தார்கள் தாம்அறியப் பேசுகேன் அன்றிப்
> பிறந்தார் அறியாத பேறு" [105]

என்று துகளறு போதமும் உணர்த்துவதை அறியலாம்.

"குற்றமிலா யோகக் குறிநெறியும் முற்றி" என்பது, ஞானயோகத்தைச் செவ்வனே முடித்துப் பிறந்தவர்களே இந்நூல் கேட்டதற்குரிய அதிகாரிகள் எனவும், "பிறந்தார்கள் தாம் அறியப் பேசுகேன்" என்பது சரியை முதல் மூன்றையும் முடியாது பிறந்தவர்கள் இந்நூல் கேட்டதற்குரிய அதிகாரிகள் அல்லர் எனவும் விளங்கும்.[106]

நிறைவுரை

"சத்திநிபாதம் என்ற தொடரின் பொருள் திருவருள் பதிதல். பக்குவமான ஆன்மாவிடத்துத் திருவருள் பதியவே, அது பாசங்களைத் துறந்து, உண்மைக்குருவை நாடிச் செல்கிறது. நாலுவகைச் சத்திநிபாதம் என்று சிவப்பிரகாசம் கூறுகின்றது. பின்னர் இதைச் சற்று விரித்துக் கூறிய நூல் சம்பந்த முனிவர் செய்த சிவானந்த மாலை; அதன் பின்னர் அவர் மாணாக்கரான அம்பலநாதத் தம்பிரானே சத்திநிபாத அகவல் என்று விரித்துத் தனிநூலாக உணர்த்துகிறார்.

இவ்வகவல் எழுபத்தாறு அடிகள் உடையது. இது மந்தம் முதலான நான்கு நிலைகளில் ஒவ்வொரு நிலையிலும் பொருளை இரு பிரிவாகக் கூறுகிறது. முதல் பிரிவு, சத்திநிபாதம் ஏற்படும் முறைமை, இரண்டாம் பிரிவு முத்தி அருளும் முறைமை.

முதல் பிரிவில் நால்வகைச் சத்திநிபாத நிலையிலும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு மார்க்கங்களிலும் ஆன்மாவானது எவ்வாறு நிற்கும் என்பதைக் கூறுகிறது. நூலாசிரியர் சிவானந்த மாலை செய்த ஆசிரியரின் மாணாக்கரானமையால், அந்நூற் கருத்துகளையே இங்கு விரிவுபடுத்தியிருக்கிறார். சாத்திரக் கருத்துகள் காலமுறையில் எவ்வாறு பலபிரிவாகி வளர்ந்து வந்தன என்பதற்கு இந்நூல் சிறந்த எடுத்துக்காட்டு" என்பார் மு.அருணாசலம்.[107] இவ்வுரையே, "சிவப்பிரகாசம் சைவ சித்தாந்தக் கருத்துகளின் வளர்ச்சியும் தொடர்ச்சியும்" என்னும் இவ்வியலின் நிறைவுரையாக அமையும்.

அடிக்குறிப்புகள்

1. த.ச.மீனாட்சி சுந்தரம் பிள்ளை, சிவப்பிரகாசம், முன்னுரை, ப.7.
2. சிவஞான சித்தியார், சுபக்கம், 267.
3. சோ.ந.கந்தசாமி, இந்தியத் தத்துவக் களஞ்சியம் (தொகுதி-3), ப.20.
4. சிவஞான சித்தியார், பரபக்கம், 295
5. 1:9:2
6. ஸ்ரீசிதம்பர சுவாமிகள், திருப்போரூர்ச் சந்நிதி முறையும் பிற நூல்களும், ப.190.
7. நிரம்ப அழகிய தேசிகர் உரை, திருவருட்பயன் சிறப்புப் பாயிரம், ப.20.
8. சிவஞான சுவாமிகள், சிவஞானபாடியம், ப.7.
9. V.S.George Joseph, Centrality of Self in Saiva Siddhanta, p.50.
10. க.விநாயகம், சிவஞான முனிவர் உரைத்திறன், ப.193.
11. நன்னூல், சூத்திரம்.5.
12. சிவஞானசித்தியார், பரபக்கம், 104.
13. ர.வையாபுரி, புடைநூலும் பன்னிரு சூத்திரங்களும், ப.27.
14. சங்கற்ப நிராகரணம், சித்தாந்த சைவாசாரியார் அனுக்கிரகம், வரி:15-20.
15. மதுரைச் சிவப்பிரகாசர், சிவப்பிரகாசம் மூலமும் உரையும், ப.103.
16. சுவாமிநாததேசிகர், தச காரியம், 20.
17. காஞ்சி ஞானப்ரகாச சுவாமிகள், சிவப்பிரகாசம் மூலமும் உரையும், அணிந்துரை, ப.30.
18. அ) நமச்சிவாயத் தம்பிரான், வினா வெண்பா, ப.58.
    ஆ) It Contains the Core of the teaching of the Sivaprakasa - John.H.Piet, Saiva Siddhanta Philosophy, p.13.
19. பரிமேலழகர் உரை, திருக்குறள், ப.102.
20. முண்டக உபநிடதம், 1:5
21. சிவஞான சித்தியார், சுபக்கம், 274.
22. சிவஞான சுவாமிகள், சிவஞான பாடியம், பக்.12-13.

23. அம்பலவாண தேசிகர், நிட்டை விளக்கம், பா.20.
24. சிவ.சுவாமிநாத சிவாச்சாரியார், காமிகாகமம், வசனம்: 15,16,17.
25. பெரிய புராணம், 1968.
26. தணிகைப் புராணம், அகத்தியன் அருள் பெறுபடலம், 353.
27. சிவதருமோத்தரம், ஐவகையாகவியல், ப.147.
28. சி.கே.சுப்பிரமணிய முதலியார், திருத்தொண்டர் புராணம் (நான்காம் தொகுதி), ப.81.
29. காவை அம்பலநாதத் தம்பிரான், சிவப்பிரகாசம் மூலமும் உரையும், ப.23.
30. ஆ.ஆனந்தராசன், சிவஞானமுனிவர் வாழ்வும் பணியும், சிவஞான மாபாடியம், ப.35.
31. மேலது, ப.34.
32. சிவஞான சுவாமிகள், சிவஞான பாடியம், ப.50.
33. மேலது, ப.139.
34. சிவஞான சுவாமிகள், பொழிப்புரை, சிவஞானசித்தியார் சுபக்கம், ப.10.
35. க.பாஸ்கரன், சைவ சித்தாந்தத்தில் அறிவாராய்ச்சியியல், ப.28.
36. ச.கங்காதரன், சைவ சித்தாந்தத் திறன், ப.116.
37. V.A.Devasenapathi, Saiva Siddhanta, P.16.
38. திருக்குறள் பரிமேலழகர் உரை, ப.75.
39. மணிமேகலை, சமயக் கணக்கர் தம் திறம் கேட்ட காதை, வரி:5-13.
40. சிவஞான சித்தியார் சுபக்கம், 7.
41. திருத்தணிகைப் புராணம், அகத்தியன் அருள்பெறு படலம், பா:355
42. மணிமேகலை, மேலது, வரி.15-25.
43. சிவநெறிப் பிரகாசம், 26.
44. மணிமேகலை, மேலது, வரி:43-44.
45. சிவஞான சுவாமிகள், பொழிப்புரை, சிவஞான சித்தியார் சுபக்கம், ப.14.
46. சு.குஞ்சிதபாதம், சிவஞான முனிவர் காட்டும் சிவப்பிரகாசம், ப.14.
47. சிவநெறிப் பிரகாசம், 20.
48. ச.கங்காதரன், மு.கா.நூ., ப.127.
49. சு.குஞ்சிதபாதம், மு.கா.நூ., ப.15.
50. முத்துராமன், சைவ சித்தாந்தம், ப.49.
51. சோ.ந.கந்தசாமி, தத்துவ நோக்கில் தமிழிலக்கியம், ப.71.
52. ஆ.ஆனந்தராசன், சிவஞான பாடிய நுண்பொருள் விளக்கம், சிறப்புப் பாயிரம், ப.153.

53. சிவ தத்துவ விவேகம், ப.14.
54. சுவேதாச்வதர உபநிஷத்து, 6:8.
55. சிவ தத்துவ விவேகம், பா.30.
56. மேலது, பா.31.
57. தாயுமானவர் பாடல்கள், ஆசார புராணம் - சிதம்பர ரகசியம், பா.5.
58. பெரிய புராணம், 1214.
59. ஆ.ஆனந்தராசன், மு.கா.நூ., ப.79.
60. சாந்தோக்ய உபநிஷதம், 6:2:1
61. மேற்கோள்: பாம்பன் சுவாமிகள், பரிபூரணானந்த போதம், ப.128.
62. ஆ.ஆனந்தராசன், சித்தாந்த விளக்கம் -வினாவிடை, ப.47.
63. மேற்கோள்: பாம்பன் சுவாமிகள், மு.கா.நூ., ப.128.
64. ஆ.ஆனந்தராசன், மு.கா.நூ, ப.51.
65. ச.கங்காதரன், தத்துவ இயல், ப.105.
66. ஆ.ஆனந்தராசன், மு.கா.நூ., ப.53
67. மேலது, ப.54.
68. மேலது, ப.55.
69. சி.அருணைவடிவேலு முதலியார், சிவஞான போத மாபாடியம், பொருள்நிலை விளக்கம், பக்.308-309.
70. 1:11:2
71. ஔவை சு.துரைசாமிப் பிள்ளை, சிவஞான போதச் செம்பொருள், ப.57.
72. சிவஞான போதம், நூற்பா.2
73. சி.அருணைவடிவேலு முதலியார், மு.கா.நூ., ப.132.
74. S.S.Suryanarayana Sastri, The philosophy of Saivism, Indian Philosophical Annual, Vol.XIV, p.151.
75. சு.குஞ்சிதபாதம், மு.கா.நூ., ப.25.
76. D.Gopaul Chetty, Swedenborg and Saiva Siddhanta, p.76.
77. Sarah Manickaraj, Advanced General Psychology, p.108.
78. சு.குஞ்சிதபாதம், மு.கா.நூ., ப.26.
79. ப.இராமன், பரிபூரணானந்த போதம் - ஓர் ஆய்வு, ப.189.
80. பாம்பன் சுவாமிகள், திருப்பா, நூன்முகம், 21
81. நல்.முருகேசமுதலியார், அணிந்துரை, சிவப்பிரகாசம் மூலமும் உரையும், ப.62.
82. 8:36:7
83. சிவஞானசுவாமிகள், சிவஞான பாடியம், பக்.141-142.
84. மேலது., ப.171.

85. சு.குஞ்சிதபாதம், மு.கா.நூ., ப.69.
86. மதுரைச் சிவப்பிரகாசர், சிவப்பிரகாசம் மூலமும் உரையும், ப.6.
87. மேலது, ப.7.
88. மு.அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு, 14ஆம் நூற்றாண்டு, ப.193.
89. காஞ்சி ஞானப்ரகாச சுவாமிகள், சிவப்பிரகாசம் மூலமும் உரையும், ப.60.
90. இலக்கணம் சிதம்பரநாத முனிவர், சிவப்பிரகாசம், ப.15.
91. உலகுடைய நாயனார் கழிநெடில், பா.10.
92. சிவப்பிரகாசம் மூலமும் சிந்தனையுரையும், ப.731.
93. நன்னூல், 47.
94. காஞ்சி ஞானப்ரகாச சுவாமிகள், மு.கா.நூ., ப.23.
95. மு.திருவிளங்கம், புத்துரை, சிவப்பிரகாசம், முகவுரை.
96. மேலது, ப.61.
97. காஞ்சி ஞானப்ரகாச சுவாமிகள், மு.கா.நூ., பக்.123-124.
98. நல்.முருகேசமுதலியார், அணிந்துரை, மு.கா.நூ., ப.63.
99. சிவஞான சித்தியார், சுபக்கம், 16.
100. தொல்காப்பியம், உவமவியல், சூத்திரம்.1
101. சங்கற்ப நிராகரணம், பாயிரம், வரி.45-47.
102. தத்துவப் பிரகாசம், ப.24.
103. ச.கங்காதரன், மு.கா.நூ., ப.341.
104. மதுரைச் சிவப்பிரகாசர், மு.கா.நூ., ப.37.
105. துகளறுபோதம், 2.
106. ஈசான சிவனார், துகளறு போதம், ப.7.
107. மு.அருணாசலம், மு.கா.நூ., ப.183.

4. சிவப்பிரகாசம் காட்டும் பொது அதிகாரம்

முன்னுரை

பொருள்களது பொது இயல்பு அளவை, இலக்கணம் என்னும் இரண்டு வகையாற் கூறப்படும். அளவை வகையாற் கூறுதலாவது, பொருள்களின் உண்மையைக் காட்சி, கருதல் முதலிய அளவைகளால் நிறுவுதல், இலக்கணமாவது, அங்ஙனம் பொருள்கள் உள்ளன என்பதை நிறுவியபின் அப்பொருள்களின் இலக்கணங்களைக் கூறுதல்.[1]

> "பலகலை ஆகம வேதம் யாவையினும் கருத்துப்
> பதிபசு பாசம் தெரித்தல்' (சிவ.13)

என்று சிவப்பிரகாசமும்,

> "பசுபாசத்தோடு பதி ஆய் பெற்றி" [2]

என்று ஞானாமிர்தமும் கூறுகின்றன.

பொருள்களது சிறப்பியல்பு சாதனம், பயன் என்னும் இரண்டு வகையாற் கூறப்படும்.

கடவுள், உலகம், உயிர்கள் ஆகிய மூன்று பொருள்களை உண்டென்றும், அவை உண்டென்பதற்கான ஆதாரங்களைக் கூறுவதும் பொது இயல்பு என்றும், இறைவனை அடைவதற்கு வேண்டிய பயிற்சி பற்றியும் அப்பயிற்சியால் வரும் பயனைப் பற்றியும் கூறுவது சிறப்பு இயல்பு என்றும் கூறுவர் அறிஞர்.[3]

ஆன்மாக்களின் பெத்த நிலை பொது வியல்பு என்றும், அவைகளின் முத்தி நிலை சிறப்பு இயல்பு என்றும் சென்ற இயலில் விளக்கப்பட்டது.

அக்கருத்தின்படி, உயிர்கள் பெத்த நிலையில் நிற்குங் காலத்தில் அவற்றைப் பற்றி அறியப்படுவனவும், அவற்றோடு தொடர்புடைய ஏனைப் பொருள்களைப் பற்றி அறியப்படுவனவும் ஆகிய எல்லாம் பொது வியல்பு எனப்படும். உயிர்கள் முத்தி

நிலையை எய்திய காலத்தில் அவற்றைப் பற்றி அறியப்படுவனவும், அவற்றோடு தொடர்புடைய ஏனைப் பொருள்களைப்பற்றி அறியப்படுவனவும் ஆகிய எல்லாம் சிறப்பு இயல்பு எனப்படும்.

இவற்றால், பெத்த நிலையில் உயிர்கள் பிறப்பு இறப்பில் சுழன்று பலநிலை வேறுபாடுகளை எய்தித் துன்புறும் தன்மை அவற்றிற்குப் பொதுவியல்பு என்பது புலனாகும். அவ்வுயிர்களோடு தொடர்புற்று நிற்கும் பதி அவற்றிற்காகக் கொள்ளும் பல உருவுகளும் தொழில்களும் ஆகியவெல்லாம் அதற்குப் பொது இயல்பாகும். இனி, முத்தி நிலையில், உயிர்கள் சிவத்தைச் சார்ந்து ஒரு நிலையாய் நிற்கும் தன்மையை எய்திச் சிவானந்தத்தில் அழுந்தியிருத்தலே அவற்றிற்குச் சிறப்பு இயல்பு என்பது விளங்கும். அந்நிலையில் பதி தன் தன்மையில் சச்சிதானந்தமாய் நிற்றலே அதற்குச் சிறப்பு இயல்பு என்பது தெளிவாகும்.[4]

சிவப்பிரகாசம் பாயிரம், “பொது உண்மை” என்று வகுத்தோதி, நூற் கருத்து கூறும் முடிவில் ‘பெத்தம் முத்திகள் மதித்தாம் அன்றே” என்று நிறைவு செய்கிறது. அதன்படி, முன்னுள்ள ஐம்பது திருவிருத்தங்களில் (பாயிரம் உட்பட) பொருள்களின் பொது இயல்பையும், பின்னுள்ள ஐம்பது திருவிருத்தங்களில் உண்மையியல்பாகிய சிறப்பு இயல்பையும் கூறுகிறது.

சிவப்பிரகாசம் பொது அதிகாரம், முப்பொருளையும் பதி, பசு, பாசம் என்ற முறையில் விளக்கியருள்கிறது. அவ்வகையில் விளக்கும் செய்திகளை ஒரு சிறிது ஆராய்வதே இவ்வியலின் நோக்கமாகும்.

அடிக்குறிப்புகள்

1. ஆ.ஆனந்தராசன், சிவஞான பாடிய நுண்பொருள்விளக்கம், ப.81.
2. ஞானாமிர்தம், அகவல், 8.
3. அழகரடிகள், சிவஞான போத' விளக்கம், ப.73.
4. ஆ.ஆனந்தராசன், மு.கா.நூ., ப.63.

4.1 பதி இலக்கணம்

'பதி, பசு, பாசம்' என்னும் முப்பொருள்களுள் பதி, ஏனை எல்லாவற்றிலும் பேராற்றல் வாய்ந்தது; அதனால் அது தன்வயம் (சுதந்திரம்) உடையது. பசுவும் பாசமும் சுதந்திரம் என்னும் தன்மையின்றிப் பதியின் விருப்பப்படியே செயற்பட்டுச் செல்வனவாகும்.

பசுவும் பாசமும் மற்றொன்றின் சார்பினால் தம் தன்மை மாறுபடும். பதி அவ்வாறின்றி, எந்தப் பொருளின் சார்பினாலும் மாறுபடாது, என்றும் ஒரு பெற்றியதாய் இருக்கும். இதுபற்றியே பதியை வடமொழியில் 'சத்' என்றும், அருந்தமிழில் 'மெய்ப்பொருள், செம்பொருள்' என்றும் வழங்குவர். 'சிறப்பென்னும் செம்பொருள் காண்பதறிவு'[1] என்னும் மறைமொழி இதனை விளக்கும்.

இவ்வாறு கூறப்படும் பதியாகிய இறைவனுக்கு இரண்டு நிலைகள் உண்டு. ஒன்று பிறிதொன்றை நோக்காது தன்னிலையில் தான் நிற்றலாகும். இந்நிலையில் அவன் வடிவு, பெயர் முதலியன ஒன்றும் இன்றி, எல்லையற்ற ஒரு பொருளாய் நிற்பான்; தொழில் செய்தல் இன்றி வாளா இருப்பான். இதுவே அவனது உண்மை நிலையாகும். இது சிவமாய் நிற்கும் நிலை எனப்படும். மற்றொன்று, ஆன்மாக்களின்மீது எழும் கருணை மேலீட்டால் இறைவன் ஐந்தொழில் செய்யும் நிலையாகும். உலகத்தைத் தொழிற்படுத்தும் இந்நிலையில் அவன் அளவற்ற வடிவும் எண்ணற்ற பெயரும் உடையவனாய் நிற்பான். இது பதியாய் நிற்கும் நிலை எனப்படும்.[2]

பதி என்னும் சொல்லுக்குப் பாலிப்பவன் அல்லது பாதுகாப்பவன் என்று பொருள். மேலும், அனைத்து உயிர்களையும், அனைத்து உலகங்களையும் காத்து ஆளும் 'தலைவன்' என்ற கருத்திலும் இது வழங்கப்படுகிறது.

"தலைவனாய்... நிலவுசீர் அமலன் ஆகி
நின்றனன் நீங்காது எங்கும்"[3]

என்பது சித்தியார்.

"அநாதி முத்த சித்துருவாகிய முதல்வன், ஒன்றினுந்தோய்வின்றித் தானே சுயம்பிரகாசமாய் நிற்குந் தன்னுண்மையிற் சிவமெனவும், உலகெலாமாகி வேறாய் உடனுமாய் ஆருயிர்களின் வழி நிற்குந் தன்மையிற் சத்தியெனவும், தாதான்மியத்தான் இரு திறப்பட்டு, பின் ஐந்தொழில் செய்யுந் தன்மையிற் பதியெனப் பெயர் பெற்று நிற்பன்" என்பார் சிவஞான முனிவர்.[4]

இவ்வாறு உண்மைநிலையில் சிவமாகவும், பொதுநிலையில் பதியாகவும் இருக்கும் 'செம்பொருளே', ஏனை எல்லாவற்றிற்கும் மேலான 'பரம்பொருள்' ஆகும். எனவேதான், சிவப்பிரகாசம் பதி இலக்கணத்தைக் கூறப் புகும்போது, 'பதி பரமே' என்று சொல்லத் தொடங்குகிறது :

"………. பதி பரமே அதுதான்
நிலவும்அரு உருஇன்றிக் குணம்குறிகள் இன்றி
நின்மலமாய் ஏகமாய் நித்தம் ஆகி
அலகில்உயிர்க்கு உணர்வாகி அசலம் ஆகி
அகண்டிதமாய் ஆனந்த உருவாய் அன்றிச்
செலவுஅரிதாய்ச் செல்கதியாய்ச் சிறிதாகிப் பெரிதாய்த்
திகழ்வது தற்சிவம் என்பர் தெளிந்து ளோரே" (சிவ.13)

என்று சிவப்பிரகாசம் இறைவனின் சிவமாம் தன்மையாகிய உண்மை இயல்புகளைக் குறிக்கிறது.

i.பதி பரமே

'பதி பரமே' என்றதனால் 'பதியே பரம்' என்னும் விதிப்பொருளும் (Assertion), 'பிற ஏதும் பரமில்லை' என்னும் விலக்குப் பொருளும் (Negation) உடன் கொள்ளுதல் வேண்டும். 'பரமே' என்பதில் உள்ள ஏகாரம், விதிப்பொருளை முற்படக்கொண்டு விலக்கையும் தெரிவிக்கும் பிரிநிலை ஆகும். இதனை இலக்கண நூலார் இயைபின்மை நீக்குதற்கும் (அயோக வியவச்சேதம்), பிறிதினியைபு நீக்குதற்கும் (அந்யயோக வியவச்சேதம்) பொதுவாய் நின்ற பிரிநிலை என்பர்.[5] இங்ஙனம் கொள்ளவே, 'பதியே மேலான பரம் பொருள்' என்றும், 'பிற ஏதும் மேலான பரம்பொருள் இல்லை' என்றும் இச்சொல் உணர்த்துவதைக் காணலாம்.

"ஏகோ ஹி ருத்ரோ ந த்விதீய:"[6]

எனவரும் சுவேதாச்வதர உபநிடதம், 'ஒருவனே உருத்திரன் இரண்டாவதாக ஒருவன் இலன்' என்று கூறும்.

ii. அரு உரு இன்றி

ஒரு செயலைச் செய்வதற்கு உருவம் இன்றியமையாதது. ஏனெனில் உடம்பில்லாமல் எந்தத் தொழிலும் இயற்ற முடியாது. எனவே, இறைவனுக்கு உருவம் வேண்டும்.

இறைவன் உருவம் உடையவன் என்னில், உருவங்கள் யாவும் காரியப் பொருள்கள். எனவே, அவ்வுருவினைத் தருவதற்கு வேறோர் இறைவன் வேண்டும்; வேண்டவே அவனுக்கும் வேறோர் இறைவன் வேண்டுமென்ற அநவத்தையில் முடியும்.[7] (அநவத்தை என்பது முடிவின்றிச் செல்லும் கருத்து).

உருவம் என்று ஒன்று இருந்தால் அது எல்லாவகைத் தொழில்களையும் செய்யும் ஆற்றலைத் தடுப்பதாக முடியும். எடுத்துக்காட்டாக, நடப்பதற்கும் ஓடுவதற்கும் துணை செய்யும் மனித உருவம் பறப்பதற்குத் தடையாக இருக்கும்.

எனவே, இறைவன் அருவம், உருவம் எனும் இருவகை வடிவுமின்றித் தன் சத்தியால் சுத்தமாயையைச் செயல்படுத்தி நாதம் முதலியவற்றைத் தோற்றுவிப்பான். அதன் பின்னர் தன் இச்சா சத்தியால், வேண்டுமெனில் வடிவத் திருமேனி கொள்வான்.

எந்தச் செயலையும் அவன் சங்கற்ப மாத்திரையான் செய்வான். அதாவது, ‘இஃது இவ்வாறு ஆகுக’ என நினைத்த அளவிலே “அஃது அவ்வாறாகச் செய்தல்.” இதனை, ‘பதியின் சங்கற்பம்’ என்று ஞானாமிர்தம்[8] கூறும்.

காரிய நிலையில் தோன்றுகிற உருவம், காரண நிலையில் கண்ணுக்குப் புலனாகாது நிற்பதே அருவம் எனப்படும். அருவம் என்பது உருவத்திற்கு மாறுபட்டதன்று. உருவத்தின் புலனாகாத நிலையே அருவம் எனப்படும்.[9] எனவே, இறைவனைப்பற்றிக் கூறும்போது அவன் அருவமும் உருவமும் அற்றவன் என்று சிவப்பிரகாசம் கூறும். அருவம் ஒரு வகையான உருவமே; அதாவது கண்ணுக்குத் தெரியாத சூக்கும வடிவமாகும். ஆகையால், பரம்பொருளுக்கு உருவம் கிடையாது. அது ஞானமே வடிவானதாகும்.

iii. குணம் குறிகள் இன்றி

குறி என்பது அறிதற்குரிய அடையாளம். அவை, உருவும் பெயரும் உடையன. அவற்றுள் ஒன்றும் இல்லாதவன் இறைவன்.

குணம் என்பது அக்குறிகளுக்கு அமைந்த இயல்புகள் ஆகும். அவை நிலைபேறில்லாத மாயையின் குணங்களாகிய சத்துவம், இராசதம், தாமசம் ஆகும். இறைவன் மாயா காரியமாகிய ‘இம் முக்குணங்கள் அனைத்தையும் கடந்தவன்’ என்று அழைக்கப்படுகிறான். அதுபற்றியே இறைவனை ‘குணாதீதன்’ என்று நூல்கள் கூறும்.

ஆனால், யாதொரு குணமும் இல்லாத ‘நிர்க்குணன்’ என்று சித்தாந்தம் கூறாது. சித்தாந்தத்தின்படி குணம் இல்லாமல் பொருள் என்பது இல்லை. இது எப்பொருளுக்கும் பொருந்துவதாகும். குணத்தை உடைய பொருள் குணி எனப்படும். எனவே, அறிவாகிய குணத்தை உடையவன் இறைவன் என்றே சித்தாந்தம் கொள்கிறது.

‘மாயையின் குணங்களைக் கடந்தவன்’ ஆயினும், இறைவன் தன் சொரூபத்தில் நிலைபெற்ற அருட்குணங்களை, எண் குணங்களை உடையவன் ஆவான். அவை,

தன்வயம், தூய உடம்பு, இயற்கையுணர்வு, முற்றுணர்வு, இயல்பாகவே பாசமின்மை, பேரருள், முடிவிலாற்றல், வரம்பிலின்பம் என்று கூறப்படும். இதனை,

> "கோளில் பொறியிற் குணம் இலவே எண்குணத்தான்
> தாளை வணங்காத் தலை" [10]

என்று திருக்குறளும்,

> "எட்டுக்கொலாம் அவர் ஈறில் பெருங்குணம்" [11]

என்று திருமுறையும், இவ் எண் குணங்களைக் குறிக்கின்றன.

iv. நின்மலமாய்

இயல்பாகவே, ஆணவம், கன்மம், மாயை முதலிய பாசங்களின் நீங்கி விளங்குகின்றவன் இறைவன். இது அவனுடைய அருட்குணங்களில் ஒன்றாகிய 'இயல்பாகவே பாசமின்மை' என்று கூறப்படும். இதனால், இறைவன் 'நின்மலன்' என்று அழைக்கப் படுகிறான். இந்நிலையை, 'நிறைமலம் அனாதியில் நீங்கி நிற்றல்' என்று காஞ்சிப் புராணமும்,[12] 'புனிதன்'[13] என்று திருமந்திரமும் குறிப்பிடுகின்றன.

இறைவன் எப்போதும் எல்லாப் பொருள்களிலும் தூய்மையாக ஒளிர்வதுபற்றி **"ஞ்ஞானமாபாதி விமலம் ஹ்வதா ஸர்வவஸ்திஷு"** எனவரும் மிருகேந்திரம் 'விமலன்' என்று கூறுவது குறிப்பிடத்தகும்.[14]

"அமலன், விமலன், நிமலன்' என்பன ஒரு பொருட் சொற்களாயினும், சொல்வகையானும் பலவகையாக இறைவனுக்குப் போற்றுதல் செய்யப்படும்.

> "தாயவன் உலகுக்குத் தன்னொப்பில்லாத் தூயவன்" [15]

என்பது ஞானசம்பந்தர் வாக்கு.

v. ஏகமாய்

> 'ஏகன் அநேகன் இறைவனடி வாழ்க' [16]

என்பது சிவ புராணம். இறைவன் ஏகனாய் நிற்றல் தன்னையே தான் நோக்கி நிற்கும் உண்மை நிலையாகும். அநேகனாய் நிற்றல் உலகத்தை நோக்கி நின்று அதனைச் செயற்படுத்தும் பொதுநிலையாகும்.

"பிரபஞ்சத் தோற்றத்திற்கு முன்பு சிவபிரான் ஒருவனே இருந்தான். அவன் பலவாகுவேனாக என விரும்பினான்."

> "ஆத்மா வா இதமேக ஏவாக்ர ஆஸீன்னான்யத்
> கிஞ்சன மிஷத்| ஸ ஈக்ஷத லோகான்னு ஸ்ருஜா இதி||"

"ஆரம்பத்தில் கடவுள் ஒருவர் மட்டுமே இருந்தார். இமைக்கின்ற வேறு எதுவும் இல்லை. அவர் "உலகங்களைப் படைப்போம் என்று சிந்தித்தார்" என்று ஐதரேய உபநிடதம் கூறும்."[17]

மேலும், அவன் ஒருவனே எப்பொருளும் எஞ்சுதல் இல்லையாக, எல்லாவற்றிலும் நிறைந்து நிற்பவன் ஆவான் என்பதாலும், 'ஏகன்' எனப்படுகின்றான். இதனை,

"ஓழிவற நிறைந்த ஒருவ போற்றி" [18]

என்று போற்றித் திருவகவலில் மாணிக்கவாசகர் கூறுவர்.

vi. நித்தமாய்

தோற்றம், இருப்பு, ஒடுக்கம் என்ற மூன்று நிலைகளும் தனக்கு எய்தலின்றித் தான் மாற்றமில்லாது நின்றே இப் பேருலகத்தைத் தோற்றியும் காத்தும் ஒடுக்கியும் வருகின்ற வல்லமை உடையவன் இறைவன். ஆதலால், நித்தமாய் இருப்பவன் இறைவன்.

"நலங்கிளர் தோற்றம் நாசம் தனக்கிலா நாதன்" [19]

என்ற சித்தியாரும் கூறும்.

நித்தமாய், இது தற்பவமான வடசொல். நித்யம் என்னும் சங்கதத்தினின்றும் பிறந்தது. நித்தியம் - நிலையானது. அநித்தியம் - நிலையற்றது. நித்தியா (அ) நித்திய வத்து விவேகம் - நிலை நிலையாப் பொருள் உணர்வு.

"நிலை நிலையாப் பொருளுணர்ந்து" [20]

என்பது திருவிளையாடற் புராணம். பதி பசு பாசம் மூன்றும் நித்தப் பொருளே ஆயினும், பாசம் - அசத்தாகிய நித்தம்; பசு - சதசத்தாகிய நித்தம்; பதி - சத்தாகிய நித்தம் (மூத்த சுத்த சித்து). நித்தத்துள் மூன்றற்கும் இவ்வாறு வேறுபாடு கொள்ளவேண்டும் என்பார் காஞ்சி ஞானப்ரகாச சுவாமிகள்.[21]

vii. அலகில் உயிர்க்கு உணர்வாகி

ஆன்மாக்கள் எல்லாம் அறிவுடைப் பொருள்களே ஆயினும், அவை இறைவன் உணர்த்தினால் அன்றி உணரமாட்டா. எனவே, இறைவன் உயிருக்கு உயிராக நின்று, காணும் உபகாரமும் காட்டும் உபகாரமும் புரிந்து வருகின்றான். இவ்வாறு எண்ணிறந்த உயிர்களின் அறிவுக்கு அறிவாகி நிற்பவன் என்பதால், 'அலகில் உயிர்க்கு உணர்வாகி' என்று கூறப்பட்டது. இங்கு உணர்வு என்பது உயிர்கட்கு அறிவைப் பயப்பது என்று பொருள்தரும். ***'உணர்வே போற்றி'*** [22] என்பது திருவாசகம்.

ஆன்ம அறிவு, புறத்திற் சென்று தனக்கு வேறாய் உள்ள பொருளை அறிதலன்றி அகத்தே நோக்கித் தன்னோடு எக்காலத்தும் ஒன்றாய் உள்ள இறைவனை அறியாமையால், அந்த ஆன்ம அறிவுக்குள்ளே தன்னைக் காணும் அறிவை அறியப் பண்ணும் அறிவாகி நிற்பான் என்பதாம்.

"அற்புதம்போல் ஆனா அறிவாய் அளவிறந்து தோன்றானோ" [23]

என்னும் சிவஞான போதத் தொடர், "இறைவன் அற்புதம்போல் வந்து ஆன்மாவின் அறிவினுள் நீங்காத அறிவாய் விளங்கித் தோன்றுவான்" என்று கூறும்.

viii.அசலமாகி

கண்ணாடியில் தோன்றும் பிரதிபிம்பத்தை இயக்க நினைப்பவன், அதன் பொருட்டுத் தான் அசைந்து இயக்குதல்போல் படைத்தல் முதலியவற்றை இறைவன் செய்வான்.

“ஆடி நிழலசைப்பான்போற் புவனம் ஆக்கி அசைத்தருளும்” [24]

என்பார் குமரகுருபரர். ஆனால் சொரூப நிலையில் அந்த அசைவும் இன்றி அசலமாய் இருப்பான் (அசலம் - அசைவின்மை, செயலின்மை).

“வ்ருக்ஷ இவ ஸ்தப்தோ திவி திஷ்டத்யேகம்” எனவரும் சுவேதாச்வதர உபநிடதம்,[25] இறைவன் ஒருவனாய் மரத்தைப்போல ஊன்றி அசையாமல் நிலைத்து நிற்கின்றான் என்று கூறும்.

இலலிதா சஹஸ்ர நாமம் அம்பிகையை **‘கூடஸ்தா’**[26] என்று சொல்லிப் போற்றும். கூடஸ்தா என்பதற்கு “மலைச் சிகரம் போல் எந்தச் செயலும் இல்லாமல் அசைவில்லாமல் அதாவது அசலமாய் இருப்பவள்” என்பது பொருளாகும்.

ix. அகண்டிதமாய்

எல்லைக்குட்படுவது - பகுக்கப்படுவது கண்டிதம் என்று கூறப்படும். எந்த வரையறைக்கும் உட்படாது, அளவுபடாமல் எங்கும் நிறைந்திருப்பவன் இறைவன். எனவே, இந்நிலை ‘அகண்டிதம்’ எனப்படும்.

எந்த வகையிலும் பகுக்க முடியாதது (பிரிக்க முடியாதது), எப்போதும் எல்லாவிடங்களிலும் நிறைந்திருப்பது என்பதுபற்றி **“அபரிச்சேத்யம்”**[27] என அழைக்கப்படும். (பரிச்சேதம் - பகுக்கப்பட்டது, கண்டம்; அபரிச்சேதம் - பகுக்கப்படாதது, அகண்டம்)

“தண்ட வாளியைத் தக்கன்தன் வேள்வியைச்
செண்டதாடிய தேவர் அகண்டனை” [28]

எனவரும் திருநாவுக்கரசர் தேவாரம், இறைவனை ‘அகண்டன்’ என்று குறிப்பிடும்.

“அகண்டன் - கண்டிக்கப்படாதவன். எவற்றாலும் எல்லை செய்யப்படாதவன். பொருள் அனைத்தையும் தன் பேரருளில் அடங்கக்கொண்டு நிறைநீர்மை உடையவன் ஆகலின் அகண்டன்” என்று விளக்கக் குறிப்புரை தருவர் க.வச்சிரவேல் முதலியார்.[29]

இவ்விரண்டையும் நிஷ்கலம் (அகண்டன்), நிஷ்க்ரியம் (அசலம்) என்று சுவேதாச்வதரம்[30] கூறுகிறது.

x. ஆனந்த உருவாய்

சத் - என்றும் மாறாமல் உள்ள பொருள். சித் - தானே அறிகின்ற அறிவுப் பொருள். சிவம் சத்தாயும் சித்தாயும் நிற்றலே பதியின் சிறப்பு இயல்பு. இதனுடன் ஆனந்தத்தையும் கூட்டிச் **“சச்சிதானந்தம்”** என்று கூறுவது உபநிடத வழக்கு.

உயிர்களிடத்தே தோன்றி அழியும் சிற்றின்பம்போல் அல்லாமல் நிறைந்த பேரின்பமே தன் தன்மையாம் உடைமை. இது எண் குணங்களுள் ஒன்றான 'வரம்பிலா இன்பம் உடைமை' என்று சிவநெறி வழக்காகக் கூறப்படும்.

"சத்தான பொருட்குச் சித்தான குணங்கூறி, மேல் ஆனந்தம் என்பதொன்று கூறுதல் மிகையாம் பிற எனின், அந்தச் சத்சித்தான குணி சுவானுபூதியில் அநுபவிப்பார்க்கு அனுபவப் பொருளாயிருத்தலின் அளவற்ற அவ்வனுபவமே ஆனந்தம் எனப்படுவதாயிற்று. இஃது அக்குணியின்கணுள்ள ஞானச்சுவை யென அறியக் கிடக்கின்றதன்றோ? இஃதில்லையாயின் ஒருயிர்க்கும் இன்பம் இல்லாதொழியும்"[31] என்று பாம்பன் சுவாமிகள் விளக்கம் கூறுவர்.

"பூவின் நிறமும் வாசனையும், அப்பூவை விட்டுப் பிரிதல் இல்லாமல் இருப்பதுபோல் உண்மை (சத்து), அறிவு (சித்து), ஆனந்தம் இம் மூன்றும் (மெய், போதம், இன்பம்) பிரியாது இருப்பவன் இறைவன்" என்று திருவிளையாடற் புராணம் போற்றும்:

"பூவண்ணம் பூவின் மணம் போல மெய் போதம் இன்ப
மாவண்ண மெய் கொண்டவன்" [32]

xi. செலவு அரிதாய், செல்கதியாய்

இவ்வாறு இன்பமே வடிவமாகவும், ஆன்மாக்களின் அறிவுக்கு தூய அறிவாகியும், எங்கும் நிறைந்திருக்கின்ற பெருமானை எவராலும் அறிந்து சென்றடைய முடியாது. எனவேதான், திருஞானசம்பந்தர், 'ஆன்மாக்கள் சென்றடைய முடியாத வீடு பேறாகிய செல்வத்தை உடையவன் இறைவன்' என்றருளிச் செய்தார்:

"சென்றடையாத திருவுடையானை" [33]

ஆயினும் அவனைத் திருவருள் துணையால் அறிந்து அநுபவித்தல் கூடும். அத்திருவருள் துணையே அவனின் பெருங்கருணையாகும்:

"அவன் அருளே கண்ணாகக் காணின் அல்லால்....
காட்டொணாது" [34]

என்று திருநாவுக்கரசர் அருளிச்செய்தமையால், 'அவன் அருளே கண்ணாகக் காணின் இறைவனை ஆன்மா காணலாம் - இறைவன் ஆன்மாவிற்குக் காட்டலாம்' என்பதாகும்.

எனவே, இறைவன் பெறுவதற்கு அரியவனாகவும் (செலவு அரிதாய்) இருக்கின்றான். திருவருள் துணையால் பெறுவதற்கு உரியவனாகவும் (செல்கதியாய்) இருக்கின்றான். இவ்விரு நிலைகளையும்,

"வான நாடரும் அறியொணாத நீ
மறையின் ஈறுமுன் தொடரொணாதநீ
ஏனை நாடருந் தெரியொணாத நீ
என்னை இன்னிதாய் ஆண்டு கொண்டவா" [35]

என்று மாணிக்கவாசகர் திருவாசகத்தில் எடுத்துக்கூறுவர்.

xii. சிறிதாகிப் பெரிதாய்த் திகழ்வது

இறைவன் யாவற்றையும் கடந்து நிற்பவன். யாவற்றினும் பெரியவன்; யாவற்றுள்ளும் நிறைந்து நிற்பவன். அணுவினும் நுண்மைத் தன்மையை உடையவன். அணுவுக்கு அணுவாய் நிற்கின்ற நுட்ப வடிவையும், அப்பாலுக்கு அப்பால் நிற்கின்ற பெருவடிவையும் உணர்த்தி நிற்பதே 'சிறிதாகிப் பெரிதாய்த் திகழ்வது' எனும் தொடர். இதனை,

> "அண்டங்கள் எல்லாம் அணுவாக அணுக்களெல்லாம்
> அண்டங்களாகப் பெரிதாய்ச் சிறிதாயினான்" [36]

என்று திருவிளையாடற் புராணமும்,

> "நுண்ணியான் மிகப்பெரியான்" [37]

என்று முதல் திருமுறையும் கூறுகின்றன.

மஹா நாராயண உபநிஷத் (தைத்திரிய உபநிஷதம் - நாராயணவல்லீ)

> "அணோரணீயான் மஹதோ மஹீயான்"

(அணுவுக்கு அணுவாகவும் பெரிதிற்குப் பெரியதாகவும் உள்ளான்) என்றே கூறுகிறது.[38]

> "...... பெருமைக்கு
> அண்டம் அணுத்தர அணு அண்டத்துடன்
> நின்று நுணங்கிய தண்டாச் சீர்த்தி" [39]

என்பது ஞானாமிர்தம்.

அண்டமாய் நுணுகுமிடத்து அவற்றோடு ஒன்றித் தானும் நுணுகுதல்பற்றி உடனின்று நுணங்கிய என்றும், பெரிதிற் பெரியதாயும் சிறியதிற் சிறியதாயும் பெருகியுஞ் சிறுகியும் தோன்றும் சீர்த்தி இறைவனுக்கு அன்றிப் பிறர்க்கு இன்மையின் அதனைத் **'தண்டாச்சீர்த்தி'** என்று வாகீச முனிவர் கூறுவர்.[40]

xiii. தற்சிவம்

தொன்மையிலேயே பாசமில்லாததாய்ப் பேரறிவாய்ப் புறப்பொருளை நோக்காது ஒன்றிலுந் தோய்வின்றித் தானே இயற்கைப் பேரொளியாய் நிற்கும் நிலை சிவம். இது, தற்சிவம், உண்மைச் சிவம், சொரூப சிவம் எனவும் அழைக்கப்படும்.

> "நிறுத்துவதோர் குணமிலான் தன்னை ஒருவர்க்கும்
> நினைப்ப அரியான் ஒன்றும் இல்லான்" [41]

அநுபவமாய்த் திருவருளாலே அநுபவித்து உணர்வதே அன்றி, உவமித்துக் கூறவொண்ணாத நிலையே தற்சிவம் ஆகும்.

> "சிவன் அரு உருவும் அல்லன் சித்தினோடு அசித்தும் அல்லன்
> பவம் முதல் தொழில்கள் ஒன்றும் பண்ணிடுவானும் அல்லன்

தவம் முதல் யோக போகம் தரிப்பவன் அல்லன் தானே
இவைபெற இயைந்தும் ஒன்றும் இயைந்திடா இயல்பினானே”[42]

என வரும் சித்தியார், சத்தி ரூபம், பதி ரூபம் இவற்றின் தன்மை எய்தலின்றி எங்கும் நிறைந்து நீங்காமல் இருப்பதே ‘சொரூப சிவம்’, ‘தற் சிவம்’ என்று கூறும். **“சத்தியின் செயல்கள் எல்லாம் தற்சிவம் அதனுக்கின்றாய்”**[43] எனும் அம்பாலவாண தேசிகரின் அருள்மொழி இங்குச் சிந்திக்கத்தக்கது.

பதியின் தடத்த நிலை

சொரூப நிலையில்தான் இறைவனை பரமசிவன், சொரூபசிவன், சுத்தசிவன் என்று கூறுவர். இந்நிலையில் அவனது சத்தியைப் ‘பராசத்தி’ என்பர். இந்நிலை யாதொரு வடிவமும் உடையதன்று.

இந்நிலையினின்று நீங்கி, இறைவன் உலகத்தை நோக்குங்கால் ‘சத்தி’ என்றழைக்கப்படுவான். வானத்தில் உள்ள சூரியன் மண்ணில் வியாபிப்பது தன் ஒளிக்கதிர்களினால்தான். அதுபோலவே மிகவும் மேலிடத்துள்ளோனாகிய இறைவன் தனக்குக் கீழேயுள்ள உலகத்தில் வியாபிப்பது அவனது சத்தியினால்தான். அதுபற்றித்தான் இந்த நிலையை ‘சத்தி’ என்றே கூறுகின்றனர்.

முதல்வனாகிய இறைவனும் அவன் சத்தியும் பொருளால் ஒன்றே; செயற்பாட்டில் இரு திறப்பட்டு நிற்கும். தடத்த நிலையில், சிவமும் சத்தியும் உடனியைந்து செயல்களை இயற்றி நிற்றலால், சிவமும் சத்தியுமாய்த் தோற்றம் அளிக்கும். இதுவே இறைவனது இரு திறப்பட்ட, ‘தாதான்மியம்’ (பிரிப்பின்றி நிற்றல்) எனப்படும். இந்நிலையை “ஒன்றில் இரண்டு” என்று குறிப்பர் அறிஞர்.[44]

சத்தி ஒன்றே செயலால் பல வகைப்படும். இது, ஒரே மின்சத்தியே ஒளிர்தல், சுடுதல், குளிர்வித்தல் போன்ற பல செயல்களைச் செய்தல் போன்றதாகும்.

இறைவனது மேலான நிலையில், பராசத்தி என்று சொல்லப்பட்ட அந்த ஒரு சத்தி, அவன் உலகத்தை நோக்கத் தொடங்குங்கால் ‘ஆதிசத்தி’ என்று பெயர் பெறும். ஏனெனில், உலகத்தை இயக்கும் எல்லாச் சத்திகட்கும் இதுவே முதல் மூலம். இதுவே ‘திரோதான சத்தி’ எனப்படும். திரோதானம் - மறைப்பது. ஆன்மாக்களுக்கு இறைவனைக் காட்டாது உலகத்தைக் காட்டுவது. (இது பின்வரும் திரோதானசத்தி எனும் பகுதியில் விளக்கப்படும்)

உலகத்தை யொடுக்குங் காலத்து ஆதிசத்தி அருவநிலையினை அடையும். உலகத்தை தோன்றுவிக்குங்காலத்து உருவநிலையை அடையும். ***“பெண்ணுரு ஒரு திறனாகின்று அவ்வுருத் தன்னுள் அடக்கிக் கரக்கினுங் கரக்கும்”*** என்னும் புறநானூற்று கடவுள் வாழ்த்தாலும், ***“நீலமேனி வாலிழை பாகத்தொருவன் இருதாள் இணைக்கீழ் மூவகை யுலகும் முகிழ்த்தன முறையே”*** என்னும் ஐங்குறுநூற்றுக் கடவுள் வாழ்த்தாலும் இவ்வுண்மையை உணரலாம் என்பார் மதுரைச் சிவப்பிரகாசர்.[45]

இறைவன் உலகத்தை இயக்குவதற்கு அவனது பேராற்றலுள் ஒரு சிறிதே போதுமாகலின், பராசத்தியின் ஒரு சிறு கூறே ஆதிசத்தியாய் நிற்கும். இதனை, பராசத்தியின் ஆயிரத்தில் ஒரு கூறு ஆதிசத்தி என்று கூறுதல் மரபு.

இனி உலகத்தை உய்விக்க விரும்பிய இறைவன், அவ்விருப்பத்தால் முதலில் அதனை உய்விக்குமாற்றை அறிந்து, அறிந்த வண்ணமே பல செயல்களைச் செய்வான். ஆகவே, அவனது சத்தி ஒன்றே இச்சா சத்தி, ஞான சத்தி, கிரியா சத்தி எனப் பெயர் பெறும். அதாவது ஆதிசத்தியின் ஆயிரத்தில் ஓர் கூறாக இச்சாசத்தி, இச்சா சத்தியின் ஆயிரத்தில் ஓர் கூறாக ஞான சத்தி, ஞான சத்தியின் ஆயிரத்தில் ஓர் கூறாக கிரியா சத்தி, இவ்வாறு பரா சத்தி, ஆதி சத்தி, இச்சா சத்தி, ஞான சத்தி, கிரியா சத்தி என நிஷ்களமான பஞ்ச சத்திகளின் தோற்றம் சிவ சிருஷ்டியின்பாற்படும்.[46]

'பரந்த பராபரை'யான பராசத்தியே ஆன்மாக்களுக்கு அருளும் நேசமாய் இச்சா சத்தியாகவும், அதன் பொருட்டு ஆன்மாக்களுக்கு வேண்டியவற்றை அறியும் அறிவாகிய ஞான சத்தியாகவும், அறிந்தவற்றையெல்லாம் சங்கற்பத்தால் நிகழ்த்தும் கிரியா சத்தியாகவும் விளங்கும். இதனை,

> "கிரியை அறிவுஇச்சை கிளர்ந்த சத்தி ஏதோ
> பெரிய பராசத்தி எனப் பேசாய் - தெரியில் அது
> ஆரும் அறியா அகண்ட பரிபூரணமாய்ப்
> பேர் அறிவாய் நிற்கும் பெற" [47]

என்று துகளறு போதம் விளக்கி நிற்கும்.

பராசத்தியின் பேதமாகிய இச்சை ஞானம் கிரியை என்னும் மூன்றை நோக்கியும், கருதியும், பரமானந்தப் பொருள் ஆன்மாக்களுக்கு இச்சாஞானக் கிரியைகளை விளக்கி உதவுகின்ற நிலையில், இலயம், போகம், அதிகாரம் என்னும் மூன்று நிலைகளை அடைகிறது.

i. உலகத்தை ஒடுக்கிய நிலை - இலயம்

இரு வகை மாயைகளிலும் (சுத்தம், அசுத்தம்) இரு வகைப் பிரபஞ்சமும் (சொல் உலகு, பொருள் உலகு) ஒடுங்கியவழி, ஒன்றனையும் குறிக்குமாறின்றி எல்லாவற்றையும் பொதுமையால் நோக்கி நிற்பது பரசிவம். இப் பரசிவமே இலயசிவம் எனப்படும். இலயசிவத்திற்கு அநாகத சிவம், சிவன், சாந்தம், நாதம், வாகீசுவரன், சத்தன், நிட்களன் என்னும் பெயர்கள் வழங்கும். இந்நிலையில் உள்ள சிவசத்திக்கு இலய சத்தி, விந்து சத்தி, பரவாகீசுவரி, நிட்களை என்னும் பெயர்கள் வழங்கும்.

ஒடுங்கிய உலகத்தை மீளவும் தோற்றுவித்து அருள் பாலிக்க வேண்டும் என்ற திருக்குறிப்போடு ஞான சத்தியை மட்டிலும் நோக்கி நிற்கின்ற நிலை 'சூக்கும இலயம்' எனப்படும். சூக்கும லயத்தில் சிவம், பர நாதம் என்றும், சத்தி, பர விந்து என்றும் அழைக்கப்படும்.

அதன்பின்னர் சூக்குமமான இச்சை ஞானம் கிரியை எனும் மூவகைச் சத்திகளோடு கூடி, சுத்த மாயையில் பதிந்து தூல ஐந்தொழில் செய்வதற்குக் காரணமாய் அமைகின்ற சூக்கும ஐந்தொழில் இயற்றுகின்ற நிலை 'தூல இலயம்' எனப்படும். தூல லயத்தில் சிவம் அபர நாதம் என்றும், சத்தி அபர விந்து என்றும் அழைக்கப்படும்.

நாதம் - ஒலி - சொற் பிரபஞ்சம்

விந்து - ஒளி - பொருட் பிரபஞ்சம்

பர நாதம் - சிவம்; அபர நாதம் - நாதம்; பர விந்து - சத்தி; அபர விந்து - விந்து.

பர நாதம், பர விந்து, அபர நாதம், அபர விந்து இந்நான்கும் நிஷ்களம் (அருவம்) என வழங்கப்படும்.

இந்நிலை நம்மனோரால் எட்டிப்பிடிக்க முடியாத நிலை. ஏனெனில் மஹா சங்காரம் முடிந்து புனருற்பவம் நிகழும் முன் அங்கு யாரும் இருக்க மாட்டார்கள். அறிதற்கு நமக்கு இச்சா, ஞான, கிரியைகள், உடல் முதலியன இல்லை.

ii. உலகத்தைத் தோற்றி, காக்கும் நிலை - போகம்

தூல இலய நிலையில் சூக்கும ஐந்தொழில் செய்து நின்ற சிவபெருமான், அதன் பின்னர் ஆன்மாக்களைக் கேவல நிலையிலிருந்து மீட்டு அருள்பாலிப்பதற்குத் திருவுளம் பற்றுவான். அப்போது ஞான சத்தியைச் சிறப்பாக நோக்கி, கிரியா சத்தியால் சிறப்பாகக் கருதி இருவகை மாயைகளிலிருந்து இருவகைப் பிரபஞ்சங்களையும் தோற்றுவித்தற்கு உள்முகமாய் நின்ற அவதரம் போகம். இதுவே பாலனம் (காத்தல்) எனப்படும். இச் செயல் மேற்கொள்ளுவதற்கு முந்திய நிலையில் உத்தியுத்தனாய் இருந்தவன், இப்போக நிலையில் 'சதாசிவம்' என்ற பெயர் பெறுவான். அப்பொழுது அவன் சத்தி மனோன்மணி எனப்படும். சூக்குமம், தூலம் என இருவகை ஐந்தொழில்களுக்கும் பொதுவாய் நடுநிற்றலின், இது நிட்கள சகளம் (அருவுருவம்) ஆயிற்று. இவ்வடிவே ஒளிப் பிழம்பான சிவலிங்கத் திருமேனியாகும்.

ஆன்மாக்கள் கேவலத்தினின்றும் நீங்கி மறுபடியும் பிறவிச் சூழலில் ஈடுபடுதல் குறித்து நின்ற அவதரம், நமக்குப் போகம் அளிக்கவே காப்பாற்றும் நிலை. இது, நாம் எந்த நிலையில் ஒடுங்கினோமோ அங்கிருந்து மேல்நிலைக்குப் போக இறைவன் கருணையால் செய்யும் ஏற்பாடு. ஆகவே, இது பாலனம் - காத்தல் ஆயிற்று.

iii. உயிர்க்குப் போகத்தை ஊட்டும் நிலை - அதிகாரம்

சிறப்பாக நோக்கியும் சிறப்பாகக் கருதியும் நின்ற இறைவன் நோக்குதல் சிறிதாக, கருதுதல் பெரிதாக நின்று எல்லாவற்றையும் கருதிய வண்ணமே செய்வான்.

உத்தியுத்தனாய் போக நிலையில் நின்ற சதாசிவம், சுத்த மாயையிலிருந்து சுத்த உலகங்களைத் தோற்றுவித்து தொழிற்படுத்துகின்ற நிலை 'சூக்கும அதிகாரம்' எனப்படும். இந்நிலையில் சிவம், மகேசன் என்றும், அதன் சத்தி 'மகேசுவரி' என்றும்

அழைக்கப்படும். இங்குத் தூல ஐந்தொழில் செய்வதால் இந்த நிலை சகளம் (உருவம்) எனப்படும்.

சுத்த உலகங்களைத் தோற்றுவித்து நிலைநிறுத்தும் மேற்கூறப்பட்ட எல்லைவரை, சிவபெருமானே அவ்வத் தொழில்களைச் செய்வான். இதன்பின்னர் அசுத்த மாயை, பிரகிருதி மாயை ஆகியவற்றைத் தொழிற்படுத்தும் காலத்துத் தானே செய்யாது அநந்தேசன், உருத்திரன், மால், அயன் ஆகியவர்களை ஏவி ஐந்தொழில் புரிவான். இந்த நிலை 'தூல அதிகார நிலை' எனப்படும்[48] சிவம் - சத்தி, நாதம் - விந்து இந்நான்கும் அருவம்; சதாசிவம் (மனோன்மணி) - அருவுருவம்; மகேசுரன் (மகேசுவரி), உருத்திரன் (உமை), மால் (திருமகள்), அயன் (கலைமகள்) - உருவம்.

இவ்வாறு இறைவன் உலகத்தைப் படைக்கும் நிலையில் அருவம் (நிட்களம்), அருவுருவம் (நிட்களசகளம்), உருவம் (சகளம்) எனும் மூவகைத் திருமேனிகளைக் கொள்வான். இம்மூன்று திருமேனிகளும் ஆன்மாக்களின் கருமேனியைக் கழிக்க வந்த கருணையின் வடிவமாகும்.[49]

வேதம், ஆகமம்

அருவுருவத் திருமேனியாகிய சதாசிவத் திருமேனிக்கு ஐந்து முகங்கள் கூறப்படும். அவை முறையே ஈசானம் (மேல் நோக்கிய முகம்), தத்புருடம் (கிழக்கு), அகோரம் (தெற்கு), வாமதேவம் (வடக்கு), சத்தியோசாதம் (மேற்கு) எனப்படும். இவற்றுள் தத்புருடத்தால் இருக்கு வேதத்தையும், அகோரத்தால் யசுர் வேதத்தையும், வாமதேவத்தால் அதர்வணத்தையும், சத்தியோசாதத்தால் சாமவேதத்தையும், மேல்நோக்கிய முகமாகிய ஈசானத்தால் இருபத்தெட்டு ஆகமங்களையும் சதாசிவர் அருளிச் செய்தார். அவற்றினின்றுதான் புராணங்களும் சாத்திரங்களும் தோன்றின.[50]

மாகேஸ்வர மூர்த்தங்கள்

இறைவன் கொள்ளுகின்ற உருவத் திருமேனிகள் யாவும் மகேசுர நிலையின் வேறுபாடுகளாகும். 'ஏகபாதர், அர்த்தநாரீசுரர், சோமாஸ்கந்தர், சந்திரசேகர் என வரும் இருபத்தைந்து மூர்த்தங்களும் 'மாகேசுவர வடிவங்கள்' எனப்படும். இவற்றை 'லீலா மூர்த்தங்கள்' என்று காரண ஆகமம் கூறும். ஆன்மாக்களுக்கு அருளும்பொருட்டு இவை அனுக்கிரக, சம்மார, ஞான வடிவங்களாகவும், சிவசத்தி வடிவங்களாகவும் காணப்படுகின்றன. இதற்கு மேலும் அடியார்களுக்கு ஆங்காங்குத் தோன்றி அருளும் வடிவங்கள் பலவாகும்.

தன் சொரூப நிலையில், தனக்கென ஓர் உருவும் பெயரும் தொழிலும் இல்லாத இறைவன், தடத்த நிலையில் பலப்பல உருவும் பெயரும் தொழிலும் உடையவனாகிறான்.

இதனையே மாணிக்கவாசகர்,

“ஒரு நாமம் ஒரு உருவம் ஒன்றுமில்லாற்கு ஆயிரம்
திருநாமம் பாடி நாம் தெள்ளேணங் கொட்டோமோ” [51] என்று பாடுவார்.

ஒருநாமம் ஓர் உருவம் ஒன்றுமில்லார் - சொரூபநிலை

ஆயிரம் திருநாமம் - தடத்தநிலை.

இங்ஙனம் விவரிக்கப்பட்ட இறைவனின் தடத்த நிலையை,

"நீடுபரா சத்திநிகழ் இச்சா ஞானம்
நிறைகிரியை தரஅதனை நிமலன் மேவி,
நாடு அரிய கருணைதிரு உருவம் ஆகி
நவின்று பல கலைநாத விந்து ஆதி
கூடும்ஒளி வளர்குடிலை மாயை மேவிக்
கொடுவினைகொள் தனுகரணம் புவனம் போகம்
பீடுபெற நிறுவிஅவை ஒடுக்கும் மேனி
பிறங்கிய நிட்களசகளப் பெற்றி ஆமே" (சிவ.14)

என்று சிவப்பிரகாசம் ஒரு விருத்தத்திலே கூறிற்று.

நினைத்த உரு தானே கொள்வான்

உலகத்தைச் செயற்படுத்தத் தனது சத்தி நிலையில் சிவன் திருமேனிகளைக் கொள்வான். இறைவன் தன் பொருட்டன்றி உயிர்கள் பொருட்டுத்தான் கொள்கிறான் என்று உணர்தல் வேண்டும்.

உயிர்கள் மலமுடையனவாகலின், அவற்றிற்கு மலத்தின் வகையாகிய மாயா உருவம் உளதாகும். இறைவன் நின்மலன் ஆதலால், மலத்தின் வகையாகிய மாயையிடம் யாதும் தொடர்பு உண்டாதல் இல்லை. ஆகவே, அவனுக்கு அவனது சத்தியே உருவமாய் அமையும். அச்சத்தி அவனது அருளேயாதலின் அவனது திருமேனிகள் யாவும் அருட்டிருமேனிகளே யாகும். எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்ட அவன், 'தன் இச்சைப்படி எவ்வாறும் ஆவான்' என்றே உணர்தல் வேண்டும். இதனை,

'காயமோ மாயை அன்று காண்பது சத்தி தன்னால்' [52]

என்று எதிர்மறை முகத்தான் சித்தியார் விளக்கும்.

"விரிகதிர் ஞாயிறல்லர் மதியல்லர் வேத
விதியல்லர் விண்ணு நிலனும்
திரிதரு வாயுவல்லர் செறுதீயு மல்லர்
தெளி நீருமல்லர், தெரியில்
அரிதரு கண்ணியாளை ஒரு பாகமாக
அருள் காரணத்தில் வருவார்" [53]

எனும் திருநாவுக்கரசர் திருமொழி, உடம்பாட்டு முகத்தான் தெளிவுபடக்கூறும்.

மேலும், அவனுடைய திருமேனியில் சிரசு, முகம், இருதயம், திருக்கை, திருவடி முதலிய உறுப்புகளும், உடுத்தியுள்ள ஆடை, மாலை முதலிய அணிகலன்களும், கையில் ஏந்திய சூலம், மழு, வாள் முதலிய படைக்கலங்களும் அருளே வடிவானவை ஆகும். அத் திருவருளில் தோன்றும் ஞானம், அருள் போன்ற குணங்களும் அருளே ஆகும். காட்சி தந்து நிற்கும் இடமும் அருள் வடிவாய் நிற்கும்.[54]

"வ்யோமாகாரம் ஸதாசிவம்"

என்னும் உபநிடத மொழியால், 'ஆகாசம்' என்பது மாயா காரியமான ஆகாயம் அல்ல. சிதாகாசமான சத்தி என்பதே சித்தாந்தம். (வ்யோமம் - ஆகாயம்; ஆகாரம் - உருக் கொள்ளுதல்)[55] மாயா காரியமாகிய உலகப் பொருள்கள் அனைத்திலுமே சிவன் அருள் காரணமாக நிறைந்திருக்கின்றான் என்று கூறுவது, 'அவனது சத்தியே அவ்வாறு நிறைந்துள்ளது' என்பதாம்.

"வெளி, கால், கனல், அப்பு, மேவுமண் நின்ற
வெளியாய சத்தி அவன் வடிவாமே"[56]

என்று திருமந்திரம் கூறுமாற்றால் அறியலாம்.

"ஈங்கு இது என்று அது கடந்த இயல்பினானும்,
ஈறுமுதல் நடுஒன்றும் இலாமையானும்,
ஓங்கிவளர் ஞானமயன் ஆதலானும்,
உண்மைபிறர்க்கு அறிவரிய ஒருமையானும்,
தாங்குஅரிய வெறுப்பினொடு விருப்பும் எல்லாம்
சார்வுஅரிய தனிமுதல்வன் ஆதலானும்,
நீங்கலரும் உயிர்க்கு உயிராய் நிற்றலானும்,
நிறுத்திடுவன் நினைந்தஉரு நிமலன்தானே" *(சிவ.15)*

என்று சிவப்பிரகாசம், நினைத்த வடிவை இறைவன் கொள்வதற்கான ஆறு இலக்கணங்களைக் கூறுகிறது.

i. ஈங்கு இது, அது கடந்த இயல்பு

எல்லா உலகுகளும் பொருள்களும் இறை வியாபகத்துடன் அடங்கிக் கிடப்பனவே யன்றி, இறை எல்லைக்கு அப்பால் உள்ள பொருள் எதுவும் இல்லை.

ஓர் அரசன் தன் ஆட்சியின்கீழ் அடங்கி நடக்காத எந்த ஒரு குடிமகனையும் உடனே தன் எல்லையைவிட்டு வெளிக்கடத்திவிட முடியும். ஆனால், இறைவன் தன் கீழ் அடங்கி நடக்காத எந்த உயிரையும் தன் எல்லை விட்டு வெளிக்கடத்த முடியாது. எல்லாம் அவன் எல்லையே. எங்கும் இருக்கின்ற நிறைவுத் தன்மையால் அவனுக்கு இம்முடியாமை ஏற்படுகிறது. இம் 'முடியாமை' இறைவனின் பெருமையை இன்னும் மிகுதியாக உணரச்செய்யும்.[57]

ஆன்ம போதத்தால் அது இது என்று சுட்டி அறியப்படும் பொருள் எல்லாம் அசத்துப் பொருள்களாகும். எனவே, இறைவன் இது என்று சுட்டிக் காட்டப்படும் பொருள் அல்ல.

ஈங்கு என்பது இடப்பொருளையும், இது என்பது சுட்டிக்காட்டும் எல்லையையும் குறிப்பனவாகும். இறைவன் இட எல்லையைக் கடந்தவன்; சுட்டிறந்து நிற்பவன். எனவே, 'ஈங்கு அது இது கடந்த இயல்பு' என்பது அவனது வியாபகத்தை உணர்த்தி நிற்கும்.

எல்லாப் பொருள்களையும் அறிதல்போல ஆன்மாக்களால் இறைவன் தன்மையை அறிய இயலாது.

"எந்தை யாரவர் எவ்வகை யார்கொலோ" [58]

என்பது திருஞானசம்பந்தர் வாக்கு.

ii. ஈறு முதல் நடு ஒன்றும் இல்லாமை

எல்லாவற்றையும் ஆக்கிக் காத்து, அழித்து, சுழற்றி நிற்பது காலம். 'ஆக்கம் அளவு இறுதி', 'முதல் நடு இறுதி' என்பவை காலம்பற்றி சொல்லப்படுபவையாகும். ஆனால் அக்காலத்தையும் சுழற்றுபவன் இறைவன் ஆவான். காலத்துட்படாதவன் இறைவன் ஒருவனேயன்றி பிறர் இல்லை. அவன் காலனைக் காலால் உதைத்தது, 'அவன் காலத்தைத் தன்வழி நடத்துபவன்' என்பதையும், மார்க்கண்டேயர் வரம் பெற்றது, 'அவனை அடைந்தவரே காலத்தை கடப்பவர் ஆவர்' என்பதையும் விளக்கி நிற்கும்.[59]

கால எல்லையைக் கடந்து, காலத்திற்கு இடமாக விளங்குகின்றபோது அவன் சத்தி 'கலையித்திரி' என்று பெயர்பெறும். எனவே, காலம் தன்வயம் உடையதன்று. இறைவன் ஒருவனே தன்வயம் உடையவன். காலம் அவன் வழிப்பட்டதே. எனவே, காலத்தையும் கடந்து நிற்பவன் என்பதை உணர்த்துவதே 'ஈறு முதல் நடு ஒன்றும் இல்லாமை" எனும் தொடர்.

"அண்டங் கடந்த பொருள், அளவில்லதோர்
ஆனந்த வெள்ளப் பொருள்,
பண்டும் இன்றும் என்றும் உள்ள பொருள் என்றே
பல்லாண்டு கூறுதுமே" [60]

என வரும் திருப்பல்லாண்டில், "கால தேச எல்லைகளைக் கடந்த இறைவனுக்கு"ப் பல்லாண்டு கூறுவர் சேந்தனார்.

"தேசகாலாபரிச்சின்னா"[61] என்னும் அம்பிகையின் நாமம், 'தேசம், காலம் இவைகளால் பிரிக்கமுடியாதவள்' என்று பொருள்படும்.

CENTRE FOR [illegible] STUDIES
Puducherry

iii. ஓங்கி வளர் ஞான மயன்

இறைவனது அறிவு, இயற்கையாக விளங்கி நிற்றலோடு அனைத்துப் பொருள்களையும் ஒரே காலத்தில் அறிந்து நிற்கும் முற்றறிவு உடைமையாகும்.

“பாசமாம் மலம் அநாதியே உற்றிடும் பரிசால்
ஊசல் ஆடு உயிர் சிற்றுணர்வு உடையது என்று உணர்க
ஈசன் ஆகிய சிவன்மலம் அநாதி இன்மையால்
தேசு உலாவுறு முற்றுணர்வு உளன் எனத் தெரிப்பர்” [62]

என்று சதமணிமாலை, கிரண ஆகம சூத்திரப் பொருளைக் கூறும்.

ஆன்மாவின் அறிவு ஓர் எல்லைக்குட்பட்டது. மேலும் படிமுறையாய் வளர்கின்ற அறிவாகும். ஆனால் இறைவனது அறிவு ஓர் எல்லைக்கு உட்படாது என்றும் ஒரே தன்மையதாய் (மிக்கு வளரா நின்ற) இருக்கின்ற வியாபக அறிவாகும். இனிமேல் வளர்தல் இல்லாத ஓங்கி வளர்ந்த ஞானமயன் என்று சிவப்பிரகாசம் கூறும். ‘ஞானமயன்’ என்னாது, ‘ஓங்கி வளர் ஞானமயன்’ என்னும் அடைமொழி, இறைவன் அறிவே உருவாக நிற்றலை உணர்த்தும்.

“ஞானத்திரளாய் நின்ற பெருமான் நல்ல அடியார்மேல்
ஊனத்திரளை நீக்கும் அதுவும் உண்மைப்பொருள் போலும்” [63]

எனவரும் திருஞானசம்பந்தர் தேவாரம், ‘இறைவனின் ‘நித்திய ஞான’த்தை உணர்த்தி நிற்கும்.

iv. உண்மை பிறர்க்கு அறிவரியான்

தான் பிறரால் அறியப்படாமலும் அதே வேளையில் தான் யாவற்றையும் முழுக்க அறிந்தும் நிற்கின்ற இயல்புடையவன் இறைவன். அவ்வியல்பு இல்லாத பிறர் யாவரும் அவனுக்கு ஆட்பட்டவர்கள் ஆகிறார்கள். எனவே, அவனுடைய நிலையை முழுதும் காணுதல் ஆன்மாக்களுக்கு இயலாத ஒன்றாகும்.

“அன்றுந் திருவுருவங் காணாதே ஆட்பட்டேன்;
இன்றுந் திருவுருவங் காண்கிலேன் - என்றுந்தான்
எவ்வுருவோ நும்பிரான் என்பார்கட்கு என்னுரைக்கேன்,
எவ்வுருவோ நின்னுருவம் ஏது?” [64]

என்பது அற்புதத் திருவந்தாதி.

“நடனாம் வணங்கும் தொல்லோன் எல்லை
நான்முகன் மாலறியாக்
கடனாம் உருவத்து அரன்” [65]

என வரும் திருக்கோவையாரும், அரனின் உண்மை வடிவை நாம் அறிய இயலாது என்று கூறும்.

v. வெறுப்பினொடு விருப்பும் எல்லாம் சார்வரிய தனி முதல்வன்

அறியாமையும் ஆசையும் ஆணவ மலத்தினாலே வருவன. அதனாலேயே மாயா உடம்பைப்பெற்ற ஆன்மாக்கள் விருப்பு, வெறுப்புகளால் வரும் இன்ப, துன்பங்களில் அழுந்தும். இவை யாவும் நின்மலனாகிய இறைவனுக்கு இல்லை. எப்போதும் ஆனந்த நிலையையுடையவன். எனவே, ***'வேண்டுதல் வேண்டாமை இலான்'***[66] என்று தமிழ்மறை போற்றும்.

எவ்வாறு சூரியன் விகாரம் அற்று, விருப்பு, வெறுப்பற்று மெழுகை உருக்கவும், மண்ணை உலர வைக்கவும் செய்கின்றானோ அவ்வாறே இறைவனும் விருப்பு வெறுப்பற்று வினையொப்பை அடைந்த ஆன்மாக்களுக்கு மோட்சத்தையும், அதனைப் பெறாத ஆன்மாக்களுக்கு பந்தத்தையும் செய்கின்றான். இக்கருத்தை,

> **"..... வெய்யோன்**
> **இலங்கு கதிர் ஈரமண் திரளை மெழுகை**
> **நலங்கொளக் கரைத்து நவையற வலித்தற்கு"** [67]

என வரும் ஞானாமிர்தத்தால் அறியலாம்.

வெறுப்புத் தாங்குவதற்கு அரிது என்பது உலகம் அறிந்ததே எனினும், விருப்பும் அளவு கடந்து செல்லுமிடத்து தாங்குவதற்கு அரியதாய் விளங்கும். 'தாங்கு அரிய வெறுப்பு, தாங்கு அரிய விருப்பு' எனச் சிவப்பிரகாசம் நுட்பமாக விளக்கும். இறைவன் இந்த இரண்டையும் சாராது, 'வேண்டுதல் வேண்டாமை இலான்' என்பதால், தன் இயல்பில் நிற்கும் 'தனி முதல்வன்' எனப்படுகின்றான்.

அத்தகைய விருப்பு, வெறுப்பு இல்லாத இறைவனின் இயல்பை இன்ன தன்மையுடையது என்று கூறுதல் எவர்க்கும் அரியதாகும் என்பர் பெரியோர்.

> **"பற்றிகல் இல்லதோர் பரமன் நீர்மையை**
> **இற்றென உரைப்பரிது எவர்க்கும் என்பரால்"** [68]

என்று கந்த புராணம் இதனைக் குறிக்கும்.

vi. நீங்கலரும் உயிர்க்கும் உயிராய் நிற்பவன்

"நின்ற நின்தன்மை நினைப்பற நினைந்தேன் நீயலால் பிறிது மற்று இன்மை"[69] எனவரும் திருவாசகம், 'எந்தப் பொருளும் இறைவனை யன்றிப் பொருளால் வேறல்ல' என்று உணர்த்தும். மேலும், 'ஒன்றும் நீயல்லை அன்றி ஒன்று இல்லை' என்றவிடத்தும், 'ஒன்றும் நீயல்லை, நீயன்றி ஒன்றும் இல்லை' என்று கொண்டால், 'நீ இவ்வுலகப் பொருள்களுள் ஒன்றும் அல்லையாயினும், நீ இல்லாத பொருளே இல்லை' என்பதாகும். எனவே, உலகப்பொருள்களிலும், உயிர்களிலும் இறைவன் நிறைந்திருக்கின்றான்.[70]

> "ஒழியாமே எவ்வுருவுமானான்" [71]

"பல்லுயிராய்ப் பார்தோறும் நின்றாய்"[72]

என்பன திருமுறை மொழிகள்.

உயிருக்குத் தோற்றமும் இறுதியும் இல்லை ஆயினும், அவ்வுயிர் பிறப்பால் ஓர் உடலைப்பெற்று, பின் வேறொரு பிறப்பில் இன்னொரு உடலைச் சேரும் இயல்புடையது. எனவே, உயிர் நிலையாகத் தங்க இயலாமல் மாறி மாறிப் புகுந்து வருவதால், உயிர் நீங்கிச் சேரும் இயல்புடையது.

இத்தகைய உயிருக்கு உயிராய் நிற்கின்ற இறைவன் ஒரு போதும் உயிரைவிட்டு நீங்காதவன். ஆகையால் 'நீங்கலரும் உயிர்க்கு உயிராய் நிற்பவன்' என்று சிவப்பிரகாசம் கூறிற்று. நீங்கலரும் என்பது 'என்றும் நீக்கமில்லாத" என்னும் பொருளில் அது உயிருக்கு ஆகாமல், இறைவனுக்கே உரிய அடைமொழிச் சிறப்பாக அமைந்தது.

"ஆவியுள் நீங்கலன் அனாதி மூர்த்தி"[73]

"எல்லா உயிர்கட்கும் உயிராய் உளன்"[74]

"துறவாத யாக்கை துறந்தான் தன்னைச்
சோதி முழுமுதலாய் நின்றான் தன்னைப்
பிறவாதே எவ்வுயிர்க்குந் தானேயாகி"[75]

என வரும் தேவாரத் திருமொழிகளால், இறைவன் 'உயிர்க்கு உயிராய்' நிற்கும் நிலை புலப்படும்.

"ஆறொப்பானை யரத்துறை மேவிய
ஊறொப்பானைக் கண்டீர் நாந்தொழுவதே"[76]

எனத் திருநாவுக்கரசர் தேவாரம், இறைவனை 'ஊறொப்பானை" என்று போற்றும். ஊறு - உயிர்க்கு உறுபொருளாகிய இறைவன்.

"உயிருக்கு உயிராய்த் தான் என்றும் உளன், ஆயினும் அறியாமை நீங்கப்பெற்ற பின்னரே உயிர்கள் தன்னை உணர்தலின், அவ்வுணர்வுக்குப் பின் வந்துள்ள பொருள்போல (ஊறொப்பானை) இறைவன் இருப்பான்" என்பதாகும்.[77]

இவ் ஆறு குணங்களாலும் தான் நினைந்தவாறு நினைந்த உருவினைத் தன் பேரருளால் நிலைத்துக் கொள்வான். ஏனெனில், அவன் நின்மலன் ஆவான்.

"எவ்வுலகத்து மூர்த்தி யேது கொண்டு அவன் இயங்கும்
அவ்வுலகத்து மேனியது கொண்டு அங்கு அமரும் ஈசன்"[78]

என்று பூசாகரணம் கூறும்.

வந்திக்குக் கூலியாளாயும், நாவுக்கரசர்க்கும், சுந்தரருக்கும் பொதிசோறு அளிப்பவனாயும் வந்து உதவியதுபோல, நினைந்தவாறு தன் இச்சைப்படி உருவம் கொள்வான் என்பது இங்குச் சிந்திக்கத்தக்கது.

> **"எவ்வுருவில் யாரொருவர் உள்குவார் உள்ளத்துள்**
> **அவ்வுருவாய்த் தோன்றி அருள்கொடுப்பான் - எவ்வுருவும்**
> **தானேயாய் நின்றளிப்பான்; தன்னிற் பிறிதுருவம்**
> **ஏனோர்க்குக் காண்பரிய எம்பெருமான்"** [79]

என்று திருக்கைலாய ஞான உலாவில், சேரமான் பெருமாளும் அருளிச் செய்தார்.

இறைவனுக்கு உருவம் உளதாயின், இஃது அவன் எங்குமாய் நிற்கின்ற நிலையைத் தடுத்து ஓரிடத்தில் நிற்பனவாகச் செய்துவிடும். ஏனெனில், உருவம் உள்ள இடத்து மட்டும் அறிவும் செயலும் நிகழும். ஏனையிடத்து நிகழ்வது கூடாமையாகும்.

இறைவன் உருவம் கொண்டால் அவன் என்றும் உள்ளவனாகாது, தோன்றி யழிபவனாகி, கால எல்லைக்குள் இருப்பவன் ஆவான். ஆனால் இறைவன் காலங் கடந்தவன். உருவம் எனப்படுவன வெல்லாம் மாயையின் காரியமாவதால், இறைவன் உருவம் கொள்ளும்போது மாயையை உடையவன் ஆகிவிடுவான்.[80] அதனால் "இறைவனை உருவமுடையவனாகக் கூறின், நம் போன்றோர்க்கு உள்ள குற்றங்கள் எல்லாம் அவனுக்கு உள்ளனவாகும்' எனும் கருத்தை மறுத்து, 'அது அறியாமை' என்று சித்தாந்தம் கூறும்.

உலகம் மூவினை உடையது

அவன், அவள் என்று சுட்டிக் குறிப்பிடும் உயர்திணைப் பொருள்களையும், அது என்று சுட்டிக் குறிப்பிடும் அஃறிணைப் பொருள்களையும் தனது பகுதிகளாக உடைய இவவுலகமாகிய தொகுதி, தோன்றி, நின்று, அழியும் தன்மை உடையதாய் இருக்கும்.

> **"அவன் அவள் அதுவெனும் அவை மூவினைமையின்"** [81]

என்று சிவஞான போதமும்.

> **"ஒருவனோடு ஒருத்தி ஒன்று என்று உரைத்திடும் உலகம் எல்லாம்**
> **வருமுறை வந்து நின்று போவதும்"** [82]

என்று சிவஞான சித்தியாரும்,

> **"உலகம் எலாம் ஒருவனோடு ஒருத்தி ஒன்று என்று**
> **உளதாகி நின்று அளவில் ஒடுங்கும்"** *(சிவ.16)*

என்று சிவப்பிரகாசமும் குறிப்பிடுகின்றன.

ஒருவன், ஒருத்தி, ஒன்று எனக் கூறினமையால், உலகங்கள் பலவாயின. இவ்வுலகம் ஒரு தொகுதிப் பொருள். ஒருவன், ஒருத்தி, ஒன்று என்பவற்றின் கூட்டமே உலகம். எனவே, அது பல பகுதிகள் கூடி அமைந்தது என்பது விளங்கும். பல பகுதிகள் இணைத்து உண்டாக்குகின்ற காரியப்பொருள்கள் அவயவப் பகுப்பு உடையனவாகும்.

நம் அறிவினால் சுட்டி அறியப்படும் பொருள்கள் யாவும், எல்லைக்கும், காலவரையறைக்கும் உட்பட்ட பொருள்களாகும். ஈங்கு, அது, இது என்று சுட்டப்படுவன.

இவ்வாறு அவயவப் பகுப்பு உடைய பொருள்களும், சுட்டியறிப்படும் பொருள்களும் தோன்றி, நின்று, அழியும் மூவினைகளை உடையன. நாம் காணும் உலகமும் அவயவப் பகுப்பும், சுட்டியறிப்படுதலும் உடைமையால் உலகமும் தோன்றி, நின்று, அழிதல் எனும் மூவினைகளை உடையதாகும்.

தோற்றமும் ஒடுக்கமும் - (மலத்தால்)

தோற்றம் உடைய பொருள்கள் யாவும் உள்பொருள்கள் என்பதால், அவைகளுக்கு இரு நிலைகள் உண்டு. ஒன்று புலனாகாது நுட்பமாய் நிற்கும் நிலை, காரணநிலை எனப்படும்; மற்றொன்று புலப்படுவதாய்ப் பருமையாய் நிற்கும் நிலை, காரிய நிலை எனப்படும். இவ்விரண்டு நிலைகளிலும் பொருள் உள்ளதேயாகும்.[83]

தோற்றம் என்பது, புலனாகாது உள்ள பொருள் புலப்படும் நிலையை அடைவது. அழிவு என்பது, புலனாகி நின்ற பொருள் புலனாகாத நிலையை அடைவது.

புலப்படாத நுண்ணிலையில் இருந்த உலகம், புலப்படும் இப் பரு நிலையை அடைந்தால் அல்லது, அதனால் பயன் இல்லை. எனவே, நுண்ணிலையில் உள்ளதாகிய உலகம் பருநிலையில் தோன்ற வேண்டுவது இன்றியமையாததாகிறது. மீளத் தோன்ற வேண்டுதல் இன்றியமையாதது ஆயின் முன்பு ஒடுங்கு வேண்டுவதில்லையே எனில், 'மலத்தால்' என்பதாகும். இதனை, ***'பின்னும் மலமதனால் உளது ஆகும்'*** என்று சிவப்பிரகாசம் கூறும்.

ஒரு நாள் கூடிய ஒரு பேரவை மறுநாளும் மீளக் கூடுமாயின், முன்னாள் கூடியதன் நோக்கம் கைகூடாமையால் மறுநாளும் கூடியிருக்கிறதென்றும், கைகூடாமைக்குக் காரணமாயிருந்த தடை முன்னாளே நீங்காது மறுநாள் கூடுவதற்குக் காரணமாயிற்று. அதுபோலவே, ஒரு கால் தோற்றுவிக்கப்பட்ட உலகம், தோன்றியதுகொண்டு பெற்றுக்கொள்ள வேண்டிய பயனைப் பெற்றுக் கொள்ளாமையால், ஒடுங்கி மீளத் தோற்றுவிக்கப்படுவதாயிற்று என்றும், பெற்றுக் கொள்ளாவாறு தடுத்திருந்த தடையினால் மீளத் தோற்றுவிக்கப்படுகிறதென்றும் எண்ண வேண்டும். அந்தத் தடை யாது என்று ஆராய்ந்தால், அஃதாவது அது 'மலம்' எனப் பெறப்படும். உலகமாகிய அவை ஒடுங்கி, மலத்தால் மீள அவ்வொடுங்கியினின்றே உளதாம்.[84]

கன்மமலம் பரிபக்குவம் (பயனாய் வரும் நிலையை) அடைதற்பொருட்டு உலகம் ஒடுங்கும். ஆணவமலம் பரிபக்குவம் (நீங்கும் நிலையை) அடைதற் பொருட்டு உலகம் மீளத் தோன்றும்.[85] ஒடுக்கமும், தோற்றமும் இவ்வாறு இரண்டு மலங்களின் பரிபாகத்திற்காக எனக் கூறவே மூன்றாவதாகிய மாயாமலப் பரிபாகத்திற்காக உலகம் சிலகாலம் நிலை நிறுத்தப்பெறுகிறது என்பதை உய்த்து உணரலாம்.[86]

இறைவனே உலகத்தைத் தோற்றுவிப்பான்

மாயை அசைவற்றதும் அறிவற்றதும் ஆகையினால் அதுவாகவே தோன்றுதலும், நிற்றலும், ஒடுங்குதலும் செய்யவல்லது அன்று. மேலும், அறிவில்லாத பொருள் தானே செயற்படுதல் இல்லை.

காந்தம் இரும்பை ஈர்க்கின்றது; நஞ்சு பற்றிய இடத்தில் மட்டும் நில்லாது பல இடங்களிலும் பரவுகின்றது என்று சொல்லின், காந்தம் இரும்பை ஈர்ப்பது அவ்விரண்டையும் ஒருவன் நேர்முகமாக்கும்பொழுதுதான். நஞ்சு பரவுவதும் உயிர் உள்ள உடம்பில்தான். எனவே, அறிவுடைப் பொருள் இன்றி, அறிவில்லாத பொருள் செயற்படாது.

ஆன்மா அறிவுப்பொருள். அது தனக்கே ஓர் உருவத்தைப் படைத்துக் கொள்ளுமே எனில், அதனால் அஃது இயலாது. ஏனெனில், ***"அணுக்கள் உரு அடையும் அறிவு இலாமையாலும்" (சிவ.16)*** என்பதே விடையாகும். ஆன்மாக்கள் அறிவுடையனவாயினும் அவ்வறிவு உடம்போடு கூடிய பின்பே விளங்கப்பெறும் தன்மையுடையது. அதனால் உடம்பில்லாத உயிர்கள் உடம்பையோ மற்றொன்றையோ தோற்றுவித்தல் இயலாது.

மாயையைப் பற்றிக் கிடக்கிற கன்மம் தேகத்தைப் பொருந்தி நிற்பது. ஆதலின் அதனாலும் உருவத்தைத் தோற்றுவிக்க இயலாது. இவ்விளக்கங்களை,

"....... உருவம் மாறி
வருவது போவது செல்வது ஆதலானும்
அலைவில் அசேதனம் மாயை ஆதலானும்
அணுக்கள் உருஅடையும் அறிவு இலாமையானும்
நிலவுதொழில் மருவியுரு நிற்றலானும்" ***(சிவ.16)***

என்று சிவப்பிரகாசம் கூறும்.

இவ்வாறு கூறப்பட்ட காரணங்களால், ஒரு கால எல்லையில் தோன்றி நின்று ஒடுங்கும் உலகத்தை, மாயை ஆக்காது; ஆன்மா ஆக்காது; கன்மம் ஆக்காது என்பது பெறப்பட்டது.

ஆகவே, முற்றறிவும் முழு முதன்மையும் உடைய நின்மலனாகிய இறைவனே தனு கரண போக வடிவாய் உள்ள உலகங்கள் எல்லாவற்றையும் தோற்று விப்பான். அவனே வினை முதற்காரணன் அதாவது நிமித்த காரணன் என்பதாம்.

'நின்று எவையும் அளித்திடுவன் நிமலன் தானே" ***(சிவ.16)***

இங்கு விவரிக்கப்பட்ட சிவப்பிரகாசத்தையே,

சொல்லும் பொருளும் மாறாமல் திருநெறி விளக்கத்தில் சீகாழி கண்ணுடைய வள்ளலார் போற்றிச் செய்வர்:

"வையமெலாம் ஆண்பெண்அலி என்று தோன்றி
வல்வினையால் உழன்று ஒடுங்கி மலத்தாற் பின்னும்
மெய்யணையும் வெகுவித ரூபங்கள் மாறி
விடுவது பற்றுவதாகி விரிதலானும்
பொய்யமரும் உலகு சடமாதலானும்
போகம் உரு அறிந்து பொருந்தாமையானும்
செய்வினை செய்து உயிர்உருவின் அமைதலானுஞ்
செகமுழுது நின்று சிவன் செய்வன் தானே" [87]

முத்தொழிலுக்கும் உரியவன் முதல்வனே

ஆகையால், இந்த உலகம் ஒப்பற்ற பரம்பொருளாலே, படைக்கப்பட்டு, திதித்தன்மையில் நிலைபெற்று, அந்தப் பரம்பொருளின்கண் ஒடுங்குகின்றது. எனவே, அப்பரம்பொருள், ஒருவனே உலகிற்கு முதற்கடவுள் என்பதாம்.

"தோற்றுவித்து அளித்துப் பின்னும் துடைத்தருள்
தொழில்கள் மூன்றும் போற்றவே உடையன் ஈசன்" [88]

என்று சிவஞான சித்தியார் குறிக்கும்.

"..... உலகமெல்லாம்
பெற்றானைப் பின்னிறக்கஞ் செய்வான் தன்னைப்
பிரான் என்று போற்ற" [89]

எனும் திருநாவுக்கரசர் திருமொழியும்,

"இறைவனே எவ்வுயிருந் தோற்றுவிப்பான்; தோற்றி
இறைவனே ஈண்டிறக்கஞ் செய்வான்" [90]

எனும் அம்மை திருமொழியும் இதனை உணர்த்தி நிற்பன.

தோற்றுவித்தல், காத்தல், ஒடுக்குதல் ஆகிய மூன்று தொழிலுக்கும் அதி தெய்வங்களாக முறையே பிரமன், திருமால், உருத்திரன் ஆகிய மூவரையும் சொல்வதுதான் மரபு. ஆனால், முத்தொழில்களையும் சிவபெருமான் ஒருவனே செய்வான் என்பது எவ்வாறு பொருந்தும்.

மணம் பொருந்திய தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமதேவன் எல்லா உலகங்களையும் படைப்பான்; அவ்வுலகங்களைத் திருமால் காப்பான்; உருத்திரன், தான் செய்த புண்ணியத்தின் மிகுதியால் சிவனுக்குரிய உருவத்தையும் தொழிலையும் பெற்று, சங்காரத் தொழிலான அழித்தல் தொழிலை ஒரு பகுதியளவில் மட்டும் செய்வான். அவன் செய்வது 'ஏகதேச சங்காரம்' எனப்படும். இவனை 'குண ருத்திரன்' என்று அழைப்பர்.

அம்மூவரும் ஒவ்வொரு தொழிலுக்கே உரியவராக, சிவபெருமான் ஒருவனே முத்தொழிலுக்கும் முதல்வனாய் நின்று இறுதிக்காலத்தில் எல்லாவற்றையும் எஞ்சாமல் ஒடுக்குகின்ற முற்றழிப்பைச் செய்வான். முற்றழிப்பு ‘மகா சங்காரம்’ எனப்படும். அதனைச் செய்பவன் ‘மகா சங்கார காரணன்’ எனப்படுகின்றான். எனவே, மகா சங்காரம் ஆகிய முற்றழிப்பைச் செய்யும் சிவபெருமானே முதற் கடவுள் ஆவார்.

“அழித்திடும் அரனே ஆக்கமும் நோக்கமும் ஆக்குவானே” [91]

என்பது சித்தியார்.

முற்றழிப்பைச் செய்யும் மகாசங்காரகாலமான ஊழிக் காலத்தில், சிவபெருமான் ஊழிக் கூத்தாடி, எல்லாப் பொருள்களோடு மற்ற அனைவரையும் அழித்து, தனி ஒருவனாய் நிற்கும் ஒப்பற்றவன் ஆவான். உருத்திரனை, ‘குண ருத்திரன்’ என்றழைப்பது போல், முற்றழிப்புச் செய்யும் முதல்வனை ‘மகா ருத்திரன்’ என்று கூறுவர்.

அம்முழு முதற் கடவுளே தோற்றுவிக்கும் தொழிலுக்கு பிரம்மனையும், காக்கும் தொழிலுக்குத் திருமாலையும் அவர்களின் விசேட புண்ணியத்தால், தனது எல்லையற்ற, அருள்மிகுந்த ஆற்றலினால் அவர்களுக்கு அந்தந்த அதிகாரங்களைக் கொடுத்து முறைமை செய்கிறான். அத்தொழில்கட்கு அவ்விருவரும் சுதந்தரர் அல்லர். முத்தொழிலுஞ் செய்தற்குரிய சுதந்தரம் சிவனுக்கே உண்டாம்.

“கந்தமலர் அயன் படைக்கும் உலகம் எல்லாம்;
கண்ணன் அளித்திடும்; அவை எம் கடவுள்தானே
அந்தம்உற அழித்திடுவன்; ஆதலாலே
அயன்அரியும் அவனது உயர் அதிகாரத்து
வந்தமுறை தன்தொழிலே மன்னுவிப்பான்” (சிவ.17)

என்று சிவப்பிரகாசம் கூறும்.

“மூவர் உருத்தனதாம் மூல முதற் கருவை”[92] - மும்மூர்த்திகளது உருவமும் தன் உருவமேயாகின்ற முதல் முதற் காரணன் என்று சுந்தரர் போற்றுவர்.

சிவபிரான், மூவர் உருவமும் தன்னுருவமேயாக நிற்றல், அவர்களைத் தன் உருவினின்றும் தோற்றுவித்தலாம். அப்பெருமான் தனது வலப்புறத்தினின்றும் அயனையும், இடப்புறத்தினின்றும் அரியையும், இருதயத்தினின்றும் அரனையும் தோற்றுவிப்பான். இதனானே, பரமசிவன் மூவருள் மேலானவன்[93] என்பது விளங்கும்.

“திருவின் நாதனுஞ் செம்மலர் மேலுறை
உருவனாய் உலகத்தின் உயிர்க்கெலாம்
கருவாகி முளைத்தவன் கானூரில்
பரமனாய பரஞ்சுடர் காண்மினே” [94]

எனவரும் தேவாரத் திருமொழியும் எண்ணுதற்குரியது.

"படைக்கப் பங்கயன் துடைக்கச் சங்கரன்
புரக்கக் கஞ்சைமன் பணியாகப்
பணித்துத் தம்பயந் தணித்துச் சந்ததம்
பரத்தைக் கொண்டிடும்" [95]

என்பது அருணகிரியார் வாக்கு.

முத்தொழிலின் முதன்மையை உடைய முதல்வன் அருள் காரணமாக மூவராய் நிற்கும் நிலையில் 'சம்பு பட்சம்' என்றும், புண்ணியம் காரணமாக முதற்கடவுளது தொழில்களுள் ஒன்றைப்பெற்று நின்று நடத்துவது 'அணுபட்சம்' என்றும் ஆகமங்கள் கூறும். கடவுள் ஆன்மாக்களுக்கு அருள்புரிதற்பொருட்டே தெய்வ நிலைக்கு இறங்கி வருதல் சம்பு பட்சம்; பிறந்து கடவுளின் தன்மையைப் பெறுவது அணு பட்சம். இம்மூவரும் (பிரமன், திருமால், உருத்திரன்) அணு பட்சத்தினரே.

"முறையாகத் தோன்றிய ஒவ்வொரு அண்டத்திலும் வேறு வேறு பிரமனும், வேறு வேறு விட்டுணுவும், வேறு வேறு உருத்திரனும் தொழில் செய்து ஒரு கற்பம் முடிந்தபோது அவர்களும் முடிந்து, மற்றொரு கற்பம் தொடங்கும்போது புதிய பிரமன், புதிய விட்டுணு, புதிய உருத்திரர் பிறந்து நின் துணையின்வழி அடங்கி ஒழுகுபவர் ஆவரே" என்று சிவ தத்துவ விவேகம்,

"முறைபெறு மண்டந்தொறும் அயன் அரன்மால்
மூவரும் வேறு வேறாகிப்
பிறமுறுங் கற்பம் தொறும் நவநவமாய்ப் பிறந்து
நின் ஆணையில் அடங்கி
உறைவரே ஆதி அந்தமும் இன்றி ஒழிவற
நிறைந்த வான் பொருளே" [96]

என வரும் விருத்தத்தால் கூறும்.

தனது தொழில்கள் அனைத்தையும் நம்மைப்போலக் கரணத்தாற் செய்யாது, சங்கற்ப (நினைவு) மாத்திரையாற் செய்தலே இறைவனுக்குள்ள தனிச்சிறப்பு. எல்லாவற்றையும் சங்கற்ப மாத்திரத்தாற் செய்தலாலே அவனுக்கு நம்மைப் போன்று, தொழில்களால் வரும் வேறுபாடுகள் இலவாயின.

"நோக்காதே எவ்வளவும் நோக்கினானை....
ஆக்காதே யாதொன்றும் ஆக்கினானை" [97]

என்று திருநாவுக்கரசர் அருளியதால் அறியலாம்.

முத் தொழிலையும் அம் மூவர்பால் வைத்துச் செய்கின்ற முதல்வன், இத் தொழில்களைச் செய்வதால் எவ்வித விகாரமும் அடையமாட்டான். ஆகாயத்தில் விளங்கும் சூரியன் முன் தாமரைப் பூக்கள் சில மலரும்; சில மலர்வதற்குரிய

பக்குவமான அரும்பாய் இருக்கும்; வேறொன்று உலரும். இவ்வாறு தாமரைகள் சூரியன் முன்னிலையில் பல நிலைப்படினும் சூரியன் எவ்வித வேறுபாடும் அடைவதில்லை. அதுபோலச் சிவபெருமான் முன்னிலையில் உலகம் முத்தொழிற்பட்டாலும் அவற்றால் அவன் விகாரம் அடையான்.

"............. எல்லாம்
வருவிப்பான் விகாரங்கள் மருவான் வானின்
முந்து இரவி எதிர்முளரி அலர்வுறும் ஒன்று அலர்வான்
முகையாம் ஒன்று ஒன்று உலரும் முறையின் ஆமே" (சிவ.17)

என்று சிவப்பிரகாசம் கூறும். இவ்வுவமையை,

"அடையான் விகாரம் ஆயினுஞ் சுடரவன்
சுடர்வீழ் தாமரைத்தோடு இனிது அலர்த்தவும்
மற்றவை குவிப்பவும் உலர்த்தவும் கொற்றக்
கிரணத்து அது என" [98]

என்று ஞானாமிர்தமும் கூறுகின்றது.

"செந்தழலே வந்து அழலைச் செய்திடினும் செங்கமலம்
அந்தரம் சேர் வெங்கதிரோற்கு அல்லால் அலராவால்" [99]

என வரும் குலசேகராழ்வார் அருளிய பெருமாள் திருமொழி இங்கு நோக்கத்தகும்.

ஐந்தொழில்

படைத்தல், காத்தல், அழித்தல் என்ற இம்மூன்றோடு மறைத்தல், அருளல் என்ற இரு தொழில்களைச் சேர்த்து இறைவன் செய்வன ஐந்தொழில்களாகக் கூறப்படும்.

இறைவன் செய்யும் தொழில் ஐந்து என்பதைச் சைவ சமயம் ஒன்றே கூறுகிறது. பிற சமயங்கள் இறைவன் செய்யும் தொழில் மூன்று என்றே கூறுகின்றன.[100]

"அளித்திடல் காத்திடல் அடுதல் மெய்யுணர்
ஒளித்திடல் பேரருள் உதவலே எனக்
கிளத்தடு செயல்புரி கின்ற நீலமார்
களத்தினன் பதியது கழறும் வேதமே" [101]

என்பது கந்த புராணம். இறைவனுக்குரிய இவ்வைந்து தொழில்களில் 'அருளல்' நீங்கலாக ஏனைய நான்கும் உருவத் திருமேனி கொண்டே இயற்றுகின்றான். இவ்வுருவ நிலையில் தன் சத்தியுடன் இணைந்திருந்தே செயல்படுவான்.

இந்த ஐந்தொழில்களும் இறைவனுடைய அருள் விளையாட்டென்று பெரியோர்களால் கூறப்பெறும். ஆன்மாக்களைப் பிறவிக் கடலிலிருந்து திருவருளால் எடுத்து இன்பக்கரை சேர்த்தலே இத்திருவிளையாட்டின் நோக்கமாகும்.

“ஏற்ற இவை அரனருளின் திருவிளையாட்டாக
இயம்புவர்கள்; அணுக்கள் இடர்க்கடல் நின்றும் எடுத்தே
ஊற்றமிக அருள்புரிதல் ஏதுவாக
உரை செய்வர்” (சிவ.18)

என்று சிவப்பிரகாசம் கூறும்.

“படைத்து விளையாடும் பண்பினோனும்
துடைத்துத் துயர்தீர் தோற்றத்தோனும்
தன்னில் வேறு, தான்ஒன்று இலோனும்
அன்னோன் இறைவன் ஆகும்” [102]

எனும் மணிமேகலை, ‘இறைவனை, படைத்து விளையாடும் பண்பினன்’ என்று கூறும்.

இறைவன் அவற்றை ஒரு காலத்தில் செய்தலும் பிறிதொரு காலத்தில் ஒழிதலும் இல்லை; எப்போதும் நிகழ்த்துகின்றான்; காலத்தால் இடையீடு இல்லை. எத்தனை முறை செய்திருக்கின்றான் என்று கணக்கீட்டுத் தொகை கண்டும் வரையறுக்க முடியாது. அதனால்தான் இவ்விளையாட்டை, ‘நீங்கலா விளையாட்டு’, ‘அலகிலா விளையாட்டு’ என்று கம்பர் கூறுவர்.

“உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட்டுடையார் அவர் தலைவர்’

நீங்கலா விளையாட்டு என்பது, ‘காலமின்மையையும்’ அலகிலா விளையாட்டு, ‘கணக்கில்லாமையையும்’ உணர்த்தி நிற்கும்.[103] இத்தொழில்களை ஆன்மாக்களின் பொருட்டு இறைவன் இடையறாது செய்து கொண்டிருப்பதால், ‘ஓவற உஞற்றும் ஒருவன்’[104] (ஒழியாது செய்வான்) என்று ஞானாமிர்தம் இறைவனைப் போற்றும்.

“ஐந்தொழில் செய்தல் விளையாட்டு என்றது, ஐங்கலப்பாரம் பொறுத்தல் சாத்தனுக்கு விளையாட்டு என்பதுபோல, அத்துணை எளிதிற் செய்யும் ஆற்றலுடைமை பற்றியே அன்றிப் பிறிதில்லையாகலின், அஃதறியாது விளையாட்டு என்றதே பற்றி வீண்தொழில் என்றல் சிறிதும் ஏலாமை அறிக” என்று சிவஞான முனிவர் மாபாடியத்தில் அருளிச்செய்வர்.[105]

“லோகவத் து லீலா கைவல்யம்”

என்று பிரம்ம சூத்ரம் கூறும்.[106] (லோகவத் - உலகில் காண்பது போல்; லீலா கைவல்யம் - வெறும் திருவிளையாடல்)

இவ்வருள் விளையாட்டே 'கூத்து' என்றும், 'நடனம்' என்றும் சொல்லப்படுகிறது. அவனது திருக்கூத்தினாலேயே அனைத்துப் பொருள்களும் நிலைத்துத் தத்தம் இயல்பிற்கேற்பச் செயற்படுகின்றன. அவை இயங்குங்கால் அவனது கூத்தும் அவற்றோடு உடனாய் இயங்கி நிகழ்கிறது. இதனால் சிவனது திருக்கூத்தே உலகத்தின் செயற்பாடு எல்லாவற்றிற்கும் காரணம் என்பது விளங்கும்.

"அம்பலம் ஆடரங்காக வெளிவளர் தெய்வக்கூத்து" [107]

என்று திருவிசைப்பா கூறும். காட்சிப்புலனாய் இது முடிவின்றி நிகழும் கூத்து என்பது கருத்து.

இத்திருக்கூத்தை உமையம்மை காணுமாறு நின்று ஆடும் திருக்கூத்து என்று தேவாரம் கூறும்:

"அருமான வாண்முகத்தாள் அமர்ந்து காண
அமரர்கணம் முடிவணங்க ஆடுகின்ற பெருமான்" [108]

இவ்வாறு உமையம்மை காணும் இத்திருக்கூத்தை விரும்பித் தொழுபவர்களுக்கு பிறவியில்லை என்று உண்மை விளக்கம் கூறும்:

"…. வரைமகள்தான்
காணும்படியே கருணை உருக்கொண்டு ஆடல்
பேணும் அவர்க்கு உண்டோ பிறப்பு" [109]

சிவன் செய்யும் கூத்தினை உமை காணுதலாவது, சிவனது செயலை ஆன்மாக்களுக்குச் சேர்ப்பித்தல் என்பதாகும். எனவேதான், கூத்தப்பெருமான் பக்கலில் நின்று ஆடல் காணும் அம்மை, திருக்கூத்தை முற்றக்கண்டு அதன் பயனாகிய ஞானத்தை பல்லுயிர்களுக்கும் அவற்றின் பக்குவநிலைகளுக்கு ஏற்றவாறு ஊட்டிவிடும் தாய் ஆவாள் என்பது உளங்கொள்ளத் தக்கதாகும்.[110] அதனால்தான் சிவப்பிரகாசமும்,

"விமலமாய் ஐந்தொழிற்கும் வித்தாய் ஞாலத்து
அரந்தைகெட மணிமன்றுள் ஆடல் காணும்
அன்னை அருட் பாதமலர் சென்னி வைப்பாம்" (சிவ.2)

என்று சிவகாமியம்மையைப் போற்றித் துதி செய்யும்.

'நீங்கலரும் பவத் தொடர்ச்சி நீங்க மன்றுள் நிருத்தம் செய்யும்' இவ்வைந்தொழில் என்பது ஆன்மாக்களுக்கு இறைவன் செய்யும் அருட் செயலாகும். அருட்செயல் என்பது எவ்வாறெனில், பிறப்பு இறப்பினுள் பட்டுத் துன்புறும் ஆன்மாக்களுக்கு இளைப்பு நீக்குதல் அழித்தலாகும். மற்றைய படைத்தல் ஆன்மாக்களைப் பந்தித்து நின்ற மலத்தைப் பக்குவப்படுத்தலாகும். காத்தல் ஆன்மாக்களின் கன்மத்தைத் தொலைத்தல் காரணமாக போகத்தை நுகரச் செய்தலாகும். மறைத்தல் போகத்தை நுகரும் அளவும் அதனிடத்துச் சுவை தோன்றுமாறு நிறுத்தலாகும். புகழ்தற்கு அரிய

அருளல் என்பது முத்தியைத் தரும் அநுக்கிரகமாகும். எனவே இவற்றை இறைவனின் அருட்செயல் என்னாது வேறு வகையில் எவ்வாறு சொல்ல முடியும்?

> "...... ஒடுக்கம் இளைப்பு ஒழித்தல் மற்றைத்
> தோற்றம் மலபாகம் வரக் காத்தல் போகம்
> துய்ப்பித்தல் திரோதாயி நிறுத்தல் ஆகும்
> போற்றலரும் அருள் அருளே அன்றி மற்றுப்
> புகன்றவையும் அருள் ஒழியப் புகல் ஒணாதே" (சிவ.18)

என்று சிவப்பிரகாசம், ஐந்தொழில்களையும் இறைவனின் அருளே என்று கூறும்.

ஐந்தொழில்களுள், படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய மூன்றும் மாயையினிடத்தில் நிகழ்வன; மறைத்தலும், அருளலும் ஆன்மாக்களின் அறிவில் நிகழ்வன. இவ்வாறு இறைவனுடைய தொழில்களின் இயல்பு நன்கு விளங்கும் வகையில் ஐந்தாக விரித்துத் தெளிவுபடுத்திக் கூறுவது சிவாகம வழக்காகும்.[111]

ஆன்மாக்களின் அறிவில் நிகழ்த்தும் மறைத்தல், ஆன்மாக்களுக்கு பந்தத்தையும், அருளல் வீட்டினையும் தருவதாகும். எனவே, ஐந்தொழில்களையும் 'மறைத்தல், அருளல்' எனும் இரு தொழில்களில் அடக்கி, அவற்றைப் 'பந்தம்' என்றும், 'வீடு' என்றும் வழங்குவர். இதுவே சிவநெறி மரபாகக் கொள்ளப்படும்.[112]

> "பந்தமாய் வீடுமாகிப் பரம்பரமாகி நின்று
> சிந்தையுள் தேறல் போலும் திருச்சோற்றுத் துறையனாரே" [113]

என்று அருளிச் செய்வர் திருநாவுக்கரசர்.

> "நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
> நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காஅட்டி" [114]

என வரும் சிவபுராணத்தில், 'நல்கி' என்றது சத்தி திரோதானமாய் மறைத்தலையும், 'காட்டி, என்பது சத்தி அருளிச் செய்யும் அருளையும் குறித்து நின்றது. "நல்கியும், காட்டியும் தயையுடையவனாய் நின்ற தத்துவனே" என்னும் பொருளில், பந்தமாய் நின்று மறைத்து வந்ததை நல்குதல் (இரங்குதல்) மறக்கருணையாய் மறைத்தலையும், வீடு பேற்றிற்குக் கழல்கள் காட்டுதல் அறக்கருணையாய் அருளையும் குறிப்பன என்பது சித்தாந்த விளக்கமாகும்.[115]

அடிக்குறிப்புகள்

1. குறள், 358.
2. ஆ.ஆனந்தராசன், திருவருட்பயன், ப.4
3. சிவஞான சித்தியார், சுபக்கம், 91
4. சிவஞான சுவாமிகள் பொழிப்புரை, சிவஞான சித்தியார் சுபக்கம், ப.92
5. க.வச்சிரவேல் முதலியார், மெய்கண்டான் சித்தாந்த மகாநாடு மலர், ப.83.

6. சுவேதாச்வதர உபநிடதம், 3:2
7. சி.சு.மணி, சிவஞான மாபாடியம், ப.235.
8. ஞானாமிர்தம், அகவல், 60.
9. சி.சு.மணி, மேலது, ப.374.
10. குறள், 9.
11. 4:18:8
12. காஞ்சிப் புராணம், திருநெறிக் காரைக்காட்டுப் படலம், பா.23
13. திருமந்திரம், 79.
14. ஔவை சு.துரைச்சாமிப் பிள்ளை, ஞானாமிர்த மூலமும் பழைய உரையும், ப.459.
15. 1:113:2.
16. 8:1:5
17. ஐதரேய உபநிஷதம், 1:1
18. 8:4:215
19. சிவஞான சித்தியார், சுபக்கம், 24.
20. திருவிளையாடற் புராணம், 1602.
21. காஞ்சி ஞானப்ரகாச சுவாமிகள், கந்தர் கலிவெண்பா, ப.28.
22. சி.அருணைவடிவேலு முதலியார், 8ஆம் திருமுறை, ப.245
23. சிவஞான போத எடுத்துக்காட்டு வெண்பா, 56.
24. கந்தர் கலிவெண்பா, கண்ணி:73.
25. சுவேதாச்வதர உபநிஷத்து, 3:9
26. ஸ்ரீலலிதா சஹஸ்ர நாமம், 896.
27. மேலது, 642.
28. 5:7:7
29. க.வச்சிரவேல் முதலியார், ஐந்தாம் திருமுறை, ப.322.
30. சுவேதாச்வதர உபநிஷத்து, 6:19.
31. பாம்பன் சுவாமிகள், திருப்பா (முதற்புத்தகம்), ப.140.
32. திருவிளையாடற் புராணம், பா.6.
33. 1:98:1
34. 6:97:10.
35. 8:5:95
36. திருவிளையாடற்புராணம், பா.7.
37. 1:61:6

38. மஹாநாராயணோபநிஷத்து, 12:1.1.
39. ஞானாமிர்தம், அகவல்.55.
40. மேலது, ப.346.
41. சிவஞான சித்தியார், சுபக்கம், 297.
42. மேலது., 90.
43. அம்பலவாணதேசிகர், தசகாரியம், பா.34.
44. ஆ.ஆனந்தராசன், சிவஞானபோத வழித்துணை விளக்கம், ப.82.
45. மதுரைச் சிவப்பிரகாசர், சிவப்பிரகாசம் மூலமும் உரையும், ப.51.
46. எஸ்.பி.சபாரத்தினம், குமாரஸ்தவம், ப.155.
47. துகளறுபோதம், 42.
48. காஞ்சி ஞானப்ரகாச சுவாமிகள், கந்தர்கலிவெண்பா, பக்.32-33.
49. சிவஞான சித்தியார், சுபக்கம், 75.
50. கு.சுந்தரமூர்த்தி, சிவப்பிரகாசம், ப.23.
51. 8:11:1
52. சிவஞான சித்தியார், சுபக்கம்,61.
53. 4:8:2
54. சிவஞான சித்தியார், சுபக்கம், 67.
55. யோகதத்வோபநிஷத்து, 99.
56. திருமந்திரம், 2429.
57. முரு.பழ. இரத்தினம் செட்டியார், கடவுளால் முடியாத செயல்கள், ப.1.
58. 3:54:3.
59. சி.அருணைவடிவேலு முதலியார், 8ஆம் திருமுறை, பக்.178-179.
60. 9:29:2
61. ஸ்ரீலலிதா சஹஸ்ரநாமம், 701.
62. சதமணி மாலை, 40.
63. 1:69:3
64. 11:4:61
65. திருக்கோவையார், 77.
66. குறள்.4.
67. ஞானாமிர்தம், அகவல்.63.
68. கந்த புராணம், 1964.
69. 8:22:7.
70. சி.அருணைவடிவேலு முதலியார், மு.கா.நூ., ப.663.

71. 6:11:7
72. 6:55:6
73. 3:105:3
74. 3:109:3
75. 6:68:6
76. 5:3:3
77. க.வச்சிரவேல் முதலியார், ஐந்தாம் திருமுறை, ப.293.
78. மேற்கோள்: மதுரைச் சிவப்பிரகாசர், சிவப்பிரகாசம் மூலமும் உரையும், ப.54.
79. 11:8, கண்ணி, 7,8.
80. சி.அருணைவடிவேல் முதலியார், சிந்தாந்த வினாவிடை, ப.119.
81. சிவஞான போதம், நூற்பா.1.
82. சிவஞான சித்தியார், சுபக்கம், 21.
83. ஆ.ஆனந்தராசன், சிவஞான போதம் வழித்துணை விளக்கவுரை, ப.33.
84. ஔவை சு.துரைசாமிப்பிள்ளை, சிவஞான போத மூலமும் சிற்றுரையும், ப.53.
85. சிவஞான சுவாமிகள் அருளிய சிற்றுரை, ப.21.
86. சி.சு.மணி, சிவப்பிரகாசம், ப.25.
87. திருநெறி விளக்கம், 9.
88. சிவஞான சித்தியார், சுபக்கம், 53.
89. 6:63:3
90. 11:4:5
91. சிவஞான சித்தியார், பரபக்கம், 278.
92. 7:84:7
93. சி.அருணைவடிவேல் முதலியார், சுந்தரர் தேவாரம், ப.1152.
94. 5:76:1
95. திருப்பரங்குன்றம் திருப்புகழ், 16.
96. சிவ தத்துவ விவேகம், ப.51
97. 6:11:5
98. ஞானாமிர்தம், அகவல்.63.
99. குலசேகரஆழ்வார், பெருமாள் திருமொழி, 693.
100. ஆ.ஆனந்தராசன், சித்தாந்த விளக்கம் - வினாவிடை, ப.33.
101. கந்தபுராணம், 1963.
102. மணிமேகலை, சமயக் கணக்கர் திறம் கேட்ட காதை, 92-95.

103. காஞ்சி ஞானப்ரகாச சுவாமிகள், சிதம்பர மும்மணிக் கோவை, ப.135.

104. ஞானாமிர்தம், அகவல்.57.

105. சிவஞான சுவாமிகள், சிவஞான பாடியம், ப.131.

106. பிரம்மசூத்திரம், 2:1:33

107. 9:1:1

108. 6:1:8

109. உண்மை விளக்கம், 38.

110. ஆ.ஆனந்தராசன், உண்மை விளக்கம், ப.162.

111. ஆ.ஆனந்தராசன், சித்தாந்த விளக்கம் - வினாவிடை, ப.39.

112. சி.அருணைஅடிவேல் முதலியார், ஆறாம் திருமுறை, ஆராய்ச்சிக் கட்டுரை - 2, ப.125.

113. 4:41:5

114. 8:1 வரி.59,60.

115. சி.அருணைவடிவேல் முதலியார், எட்டாம் திருமுறை, பக்.125-126.

4.2 பசு இலக்கணம்

“உடல்வரை இன்னுயிர் வாழ்க்கையாய
ஒருவன் கழல்ஏத்த
இடர்தொடரா வினையான சிந்தும்
இறைவன் இன்னருளாமே” [1]

என்பது திருஞானசம்பந்தர் தேவாரம். “உடல் எல்லையில் தங்கும் உயிர் வாழ்வதற்குக் காரணமான இறைவன் திருவடிகளை வணங்கித் துதிக்க, அவன் இன்னருளால் துன்பங்கள் நீங்கும்” என்பது கருத்து.

“அருந்துயர்க் குரம்பையின் ஆன்மா நாடி” என்பது சிவஞான போதத்தின் சிறப்புப் பாயிரம். இத் தொடரில் ‘ஆன்மா’ என்பது பொதுச் சொல்லாய் நின்று, சீவான்மா, பரமான்மா என்னும் இரண்டையும் குறித்தது. சீவான்மா- உயிர்; பரமான்மா - கடவுள்; நாடுதலாவது - ஆராய்தல்.

காணப்பட்ட உடம்பை ஏதுவாக (கருவியாக)க் கொண்டு காணப்படாத ஆன்மா, கடவுள் இரண்டன் இயல்பையும் ஆராயும் முறையை இத்தொடர் உணர்த்தி நிற்கிறது.[2] இதனையே அம்பலவாண தேசிகர் உபாய நிட்டை வெண்பாவில்,

“ஊனைக் குறித்து அறிவை நோக்கி” [3]

என்னும் தொடரால் குறிப்பர்.

“உழிதரல் இயைந்த பழிதரு ஆகத்து
அழியா அறிவன் கழியான் ஒழியாச்
சேதனம் அன்மையின் கடம்போல் ஆகலின்
எய்யாது இயற்றியான் எவன்அவன் பொய்யா
புற்கலன் என்க ஒற்கமில் சேதனம்

அறிவு வறிது அசேதனம் என்ன
நெறியறி புலவர் அறிவு அறிவகை"[4]

என வரும் ஞானாமிர்தம், உயிருண்மையை அந்நுவய வெதிரேக (உடன்பாடு / எதிர்மறை) அநுமானத்தால் நிறுவுகிறது.

போக்குவரவு செய்வதற்காக வந்த உடம்பிலே நீங்காது ஓர் ஆன்மா உண்டு. 1.உடம்பில் ஆன்மாவின் இருப்பைக் கூறுவது (பிரதிஞ்ஞை - மேற்கோள்-proposition). 2.அவ்வுடம்பானது கெடாத சைதன்யம் அல்ல; அதாவது அசேதனமானது - அறிவற்றது (ஏது-reason). 3.அஃது எவ்வாறெனில் அவ்வுடம்பு கடத்தைப் போன்றது - சடத்தன்மையுடையது (திருட்டாந்தம்- உபமானம் - எடுத்துக்காட்டு-example).

4. கடமானது ஒருவன் கொண்டு சென்றால் செல்லும்; அல்லாவிடில் இருக்கும். அதுபோல உடம்பும் தானாகப் போக்குவரவு பண்ண மாட்டாது (உபநயம்-application). இவ்வுபநயத்தால் சடமான அவ்வுடம்பிலிருந்து வேறுபட்ட ஒரு பொருள் அவ்வுடம்பைப் போக்குவரவு புரிய வைக்கிறது என்று அறியலாம்.

5. அப்படிப் போக்குவரவு செய்பவன், தான் வேறு உடம்பு வேறு என்று அறியாத அழிவற்ற ஆன்மா (பசு) ஆவான் (நிகமனம்-conclusion). இதனால் சடமான உடலை இயக்க சைதன்யமான பசு உள்ளது. ஆனால் அப்பசுவோ தான் வேறு, தேகம் வேறு என்று அறியாமல் உள்ளது. அறியக்கூடிய விவேகமான ஞானம் கைகூடினால், அதுவே முத்தி சாதனமாகும் என்று ஞானவான்கள் கூறுவார்கள்.[5]

சேதனன் உடனிருக்கையில் இயக்கம் பெறுகின்ற தேகம், குடம் முதலியன போன்று தானே இயங்க வல்லதன்று; இயக்குகின்றவனே ஆத்மா என்று பௌட்கர ஆகமம் கூறும்.[6] இவ்வுண்மையை, "மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா உளது"[7] எனும் சிவஞான போதத் தொடர் விளக்கி நிற்கும்.

இவ்வாறு, கண்ணுக்குப் புலனாகாது கருத்துக்குப் புலனாகும் ஆன்மாவின் இருப்பு அநுமானப் பிரமாணத்தால் நிலைநாட்டப்பெறுகிறது.

ஆன்மாக்களின் எண்ணிக்கை

ஒரே இறைவன் போன்று ஒரே ஆன்மா என்று சைவ சித்தாந்தம் கூறுவதில்லை. ஒவ்வொரு உடம்பிலும் நின்று, இன்பத் துன்ப அநுபவங்களை அடையும் ஆன்மா வேறு வேறே யாகும். ஆதலால் ஆன்மா ஒன்றல்ல; பல என்று அறியலாம். ஆன்மாக்கள் பல என்பதற்கு அவை எண்ணற்றவை என்பதே பொருளாகும். ஆன்மாக்களின் தொகையைக் கருதும்போது, பிறப்பெடுத்து உழல்கின்ற ஆன்மாக்களை மட்டுமல்லாது, முன்பே முத்தி பெற்றுவிட்ட ஆன்மாக்களையும் கருத்தில் கொள்ளவேண்டும். முத்தி பெற்றுவிட்டாலும் அவ் ஆன்மாக்கள் இல்லாமற் போய்விடவில்லை. அவை முத்தி யின்பத்தை அநுபவித்துக்கொண்டுதான் இருக்கின்றன. எனவே, எல்லா ஆன்மாக்களும் என்றும் உள்ளவையே.[8] இதனால் சிவப்பிரகாசம் 'எண்ணரிதாய்' என்று கூறியதோடு அமையாமல், அடுத்து 'நித்தமாய்' என்றும் கூறுகிறது.

"எத்தகைய போகங்கள் எவற்றினுக்குங் காரணமாய்
வைத்தபடி இடம் போதா வகை நெருங்கு மன்னுயிர்கள்" [9]

எனவரும் கோயிற் புராணம், 'ஆன்மாக்கள் எண்ணற்றவை' என்று கூறும்.

"கரும்பை, தேனை, பாலை, கனியமுதை, கண்டை,
கட்டியை ஒத்து இருப்பான் அந்த முத்தியினில் கலந்தே" [10]

என்று 'முத்தியின்பத்தின் சுவையை'ச் சித்தியார் கூறும்.

கரும்பு, தேன், பால், கனியமுது, கற்கண்டு, சர்க்கரை என அறுவகைத் தித்திப்பும் ஒரு சேரக் கலந்து வரும் சுவையைப் போன்ற பேரின்பத்தை ஆன்மா முத்தியினால் அநுபவித்து வரும். அந்த அநுபவத்தைக் கொண்டே ஆன்மா நித்தியம் என்பதை அறிந்து கொள்ளலாம்" என்பார் மதுரைச் சிவப்பிரகாசர்.[11]

பசுத்துவம்

நித்தியமாகிய ஆன்மாவின் இச்சா, ஞானக் கிரியைகளை அநாதியே தடுத்துநிற்பது ஆணவ மல சத்தியாம். ஆன்மா விடுதலையின்றி அம்மலக் கட்டுக்குள் அகப்பட்டு நிற்கும் இந்நிலையே 'பசுத்துவம்' எனப்படும்.

"பசுவாம் ஒன்று என்றநீ பாசத்தோடு உளை காண்" [12]

என்று சிவஞான போதமும்,

"நசித்திடா ஞானச்செய்தி அநாதியே மறைத்து நிற்கும்
பசுத்துவ முடையனாகிப் பசுவென நிற்கும் ஆன்மா" [13]

என்று சித்தியாரும் இதனை உணர்த்துகின்றன.

ஆன்மாக்களின் பிறவி

ஆணவ மல பந்தம் அநாதியாகவே, அம்மலம் ஏதுவாக வரும் இரு வினைகளும் அநாதியாம். தாம் செய்த வினைகள் காரணமாக உலக போகங்களை அநுபவிக்கும்பொருட்டுப் பல பிறவிகள் எடுக்கின்றன. வினைகள் காரணமாகப் பிறப்பெடுத்த ஆன்மாக்கள் அவ் வினைப்பயனை அநுபவிக்கும்பொழுதே தாம் செய்யும் செயல்கள் காரணமாக மேலும் வினைகளைத் தேடிக்கொள்ளும். இது காரணமாக ஆன்மாக்கள் மீண்டும் பிறக்கும். இவ்வாறு காரண காரியத் தொடர்ச்சியாய் ஆன்மாக்களுக்குப் பிறவி உண்டாகும்.

"வருமுறைப் பிறவி வெள்ளம் வரம்பு காணாது அழுந்தி
உருவெனுந் துயரக் கூட்டில் உணர்வின்றி மயங்குவார்கள்" [14]

என வரும் பெரிய புராணம், 'இடையறாது வரும் பிறவிப் பெருவெள்ளத்தின் எல்லை காணாது அழுந்தி உடல் என்ற துன்பக் கூட்டினுள் உணர்வில்லாது மயங்கும் ஆன்மாக்கள்" என்று கூறும்.

ஆன்மாக்களின் பிறப்பு வகை

பிறவிக் கடலில் விழுந்து வருந்தும் ஆன்மாக்களுக்கு அவை செய்த இரு வினைகளின் தன்மைக்கு ஏற்பவே, போகங்களை நுகரும் உடம்புகளை இறைவன் கொடுப்பான். அவ்வுடம்புகளும் பிறவிக்கேற்ப அவன், அவள் என்னும் உயர்திணைப் பொருள்களாயும், அது என்னும் அஃறிணைப் பொருளாயும் இருக்கும்.

> "தப்பரிய இருவினையின் துய்ப்பதனுக்குக் கிசைந்த
> தனுவாதி விதம் மாயை தர அதனைப் பொருந்தி
> அப்பரிசே உயர்திணையோடு அஃறிணையாய் விரிந்தே" [15]

என்று சிவஞான தீபம் கூறும்.

ஆன்மாக்கள் எடுக்கும் உடம்புகள் நால்வகைத் தோற்றமும், எழுவகைப் பிறப்பும், எண்பத்து நான்கு நூறாயிரம் யோனி பேதமும் உடையனவாகும்.

நால்வகைத் தோற்றம்

ஆன்மாக்கள் அண்டசம், சுவேதசம், உற்பிச்சம், சராயுசம் என்னும் நான்கு வகைகளில் உடம்பெடுக்கின்றன. அவற்றுள் முட்டையில் தோன்றுவனவற்றை அண்டசம் என்றும், வியர்வையில் (அழுக்கில்) தோன்றுவனவற்றை சுவேதசம் என்றும், வித்து, வேர், கிழங்கு இவைகளைப் பிளந்து கொண்டு மேல் நோக்கித் தோன்றுவனவற்றை (இவை தாவரங்களே யாகும்) உற்பிச்சம் என்றும், கருப்பையில் கட்டுண்டு இருந்து குழவியாய்ப் பிறப்பனவற்றை சராயுசம் என்றும் கூறுவர்.

எழுவகைப் பிறப்பும், யோனி பேதங்களும்

தேவர், மக்கள், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் எனப் பிறப்புகள் ஏழு வகைப்படும். அவைகளின் யோனிபேதங்கள் எண்ணிக்கையில் வருமாறு:

தேவர் - பதினொரு நூறாயிரம்

மக்கள் - ஒன்பது நூறாயிரம்

ஊர்வன - பதினைந்து நூறாயிரம்

தாவரம் - பத்தொன்பது நூறாயிரம்

பறவை, விலங்கு, நீர் வாழ்வன - இவை ஒவ்வொன்றிலும் பத்து நூறாயிரம் ஆக முப்பத்து நூறாயிரம்

இங்ஙனம் ஆன்மாக்கள் நால்வகைகளில் உடம்பெடுப்பதையும் அவற்றின் யோனி பேதங்களையும் எண்ணிக்கையையும் குறித்து,

> "தோற்றியிடும் அண்டசங்கள் சுவேதசங்கள் பாரில்
> துதைந்து வரும் உற்பீசம் சராயுசங்கள் நான்கின்
> ஊற்றம்மிகு தாபரங்கள் பத்தொன்பது என்றும்
> ஊர்வ பதினைந்து அமரர் பதி னொன்றோடு உலவா

மால்தரும் நீர் உறைவன நற்பறவைகள் நாற்காலி
மன்னியிடும் பப்பத்து மானிடர் ஒன்பதின்மர்
ஏற்றியொரு தொகையதனில் இயம்புவார்கள் யோனி
எண்பத்து நான்கு நூறாயிரம் என்று எடுத்தே" (சிவ.47)

என்னும் சிவப்பிரகாசப் பாடல் விரிவாகக் கூறும். "எழுபிறப்பும் தீயவை தீண்டா" என்னும் திருக்குறளில் 'எழு பிறப்பு' என்னும் தொடர் ஏழு வகையான பிறப்புகளைக் குறிப்பதைக் காணலாம். இக்குறளுக்கு உரை எழுதிய பரிமேலழகரும் ஏழுவகைப் பிறப்பினைத் தனித்தனியே குறிப்பிட்டு அவற்றின் எண்ணிக்கையையும் எடுத்துரைப்பது, முந்தைய கருத்துகளுக்கு வலுவூட்டுவதைக் காணலாம்:[16]

"ஊர்வ பதினொன்றாம்; ஒன்பது மானுடம்;
நீர் பறவை நாற்கால் ஓர் பப்பத்து; சீரிய
பந்தமமாம் தேவர் பதினான்கு; அயன் படைத்த
அந்தமில் சீர்த் தாவரம்நா லைந்து"

மானுடப் பிறப்பின் மேன்மை

யோநி பேதங்கள் எல்லாவற்றையும் ஒழித்து, இப்பிறப்பில் மானுடப் பிறவியில் பிறத்தல் என்பது, 'கடலைக் கையாலே நீந்திக் கரையேறினவன் செயல்' என்று சித்தியார் மானுடப் பிறவியின் "அருமை"யைச் சொல்கிறது:

"அண்டசம், சுவேதசங்கள், உற்பிச்சம், சராயுசத்தோடு
எண்தரு நால், எண்பத்து நான்கு நூறாயிரத்தாய்
உண்டு பல் யோனி எல்லாம் ஒழித்து மானுடத்து உதித்தல்
கண்டிடில், கடலைக் கையால் நீந்தினன் காரியம்காண்' [17]

ஆன்மாக்கள் இறைவனோடு கூடுதல்

நால்வகைத் தோற்றத்தாலும் எழுவகைப் பிறப்பாலும் பல்வேறு யோனி பேதங்களில் பிறந்து வினைக்கீடாக வரும் எண்ணிறந்த போகங்களை அநுபவித்து வரும் ஆன்மா, 'நானே போகங்களை அநுபவிப்பவன்' என்றும், போகம் நுகர்தற்குத் துணையாக வரும் முயற்சியை 'நானே செய்தே'னென்றும், (இப்படி நானே போக்தா, நானே கர்த்தா என்றும்) விபரீதமாகக் கருதும் கருத்தால், இதம் (நன்மை), அகிதம் (தீமை) வாயிலாகச் செய்யும் அம்முயற்சி புண்ணிய, பாவமாய் முடியும். இத்தகைய புண்ணிய, பாவ வினைப் பயனை அநுபவிக்கும்பொருட்டு ஆன்மாக்கள் பிறப்பு, இறப்புகளை உடையனவாகும்.

இங்ஙனம் ஆன்மா உடலெடுத்துப் பிறந்திறந்து வரும்பொழுது, மலசத்தி தேய்ந்து தேய்ந்து ஒரு காலத்தில் முழுவதும் பக்குவமடையும். மலசத்திகள்யாவும் பரிபாகமடைந்தபின், உடம்பை 'நான்' என்றும், போக்தாவும் கர்த்தாவும் 'நானே' என்றும் எண்ணும் விபரீத உணர்வு உண்டாகமாட்டாது. 'நான்' என்பதும் இல்லாதொழியும். அதுவே ஆன்ம பரிபாக குணமாகும். இந்நிலையில், முதல்வன்

குரு வடிவாய் எழுந்தருளி உபதேசம் செய்வான். இவ்வுபதேசத்தால் அறிவுக்கு அறிவாய் விளங்கும் திருவருளால் ஞானம் பிரகாசிக்கும். அதனால் ஆன்மா ஆணவ இருள் நீங்கப்பெற்று முதல்வன் திருவடி நிழலை யடையும். இதனையே பாச நீக்கமும் சிவப்பேறுமாகிய முத்தி நிலை என்று கூறுவர்.[18]

ஆன்மாக்களினுள்ளத்தே இங்ஙனம் அறிவொளியாகிய ஞானம் பிரகாசிப்பதை,

"உருகுதலைச் சென்ற உள்ளத்தும் அம்பலத்தும் ஒளியே
பெருகுதலைச் சென்று நின்றோன்" [19]

என்று திருக்கோவையார் குறிப்பிடும்.

ஆன்மாக்களின் உருகுதலை யடைந்த உள்ளத்தின் கண்ணும் அம்பலத்தின் கண்ணும் என இரண்டிடத்தும் ஒப்ப இறை ஒளி பெருகுதலை யடைந்து நிற்கும் என்பது பொருளாகும். இதனைச் சிவப்பிரகாசம், 'உள் நிலவும் ஒளி" என்று சொல்லும்.

ஆணவ மலத்தால் மறைப்புண்டு, மாயை கன்மங்களைப் பொருந்தி, போக்கு வரவுறுதலாகிய கேவல, சகல நிலை ஆன்மாவிற்குப் பொது இலக்கணமாகும். ஆணவ இருள் நீங்கி சிவஒளி பெறும் சுத்தநிலை ஆன்மாவிற்குச் சிறப்பு இலக்கணமாகும். இவை அனைத்தையும் கீழ்க்கண்ட சிவப்பிரகாசப் பாடல் பசு இலக்கணமாகத் தொகுத்துக் கூறும்:

"எண்ணரிதாய் நித்தமாய் இருள் மலத்தில் அழுந்தி
இருவினையின் தன்மைகளுக்கு ஈடான யாக்கை
அண்ணலருளால் நண்ணி அவை அவராய் அதனால்
அலகில் நிகழ் போகங்கள் அருந்தும் ஆற்றால்
புண்ணிய பாவம் புரிந்து போக்குவரவு உடைத்தாய்ப்
புணரும்இருள் மலபாகம் பொருந்தியக்கால் அருளால்
உள்நிலவும் ஒளியதனால் இருளகற்றிப் பாதம்
உற்றிடும் நற்பசுவருக்கம் எனவுரைப்பர் உணர்ந்தே" (சிவ.19)

இந்த ஒரே பாடலில் சைவசித்தாந்தத்தில் கூறப்படுகிற பசுவின் இலக்கணம் முற்றுமாக விளக்கப்பட்டது.

பசு இலக்கணத்தை நன்கு உணர, கேவல, சகல, சுத்த பேதங்களின் நிலையை அறிவது இன்றியமையாதது. ஆதலால், இச்சிவப்பிரகாசத் திருவிருத்தம் ஒன்றே விரிந்து, பின்னர்ச் சொல்லப்படும் அந்நிலைகளை விளக்கியமையும். எனவே, அந்நிலைகளை விளக்கும் தோற்றுவாயாகவும் இதனைக் கொள்ளலாம்.

"எண்ணரிதாய் நித்தமாய் இருள்மலத்தில் அழுந்தி"

என்பது வரை இருள் நிலையாகிய கேவல நிலை உணர்த்தப்பட்டது.

“இருவினையின் தன்மைகளுக்கு ஈடான யாக்கை அண்ணருளால் நண்ணி அவைஅவராய் அதனால் அலகில் நிகழ் போகங்கள் அருந்தும் ஆற்றல் புண்ணிய பாவம் புரிந்து போக்குவரத்து உடைத்தாய்ப்புணரம் இருள்மலபாகம் பொருந்தியக்கால்’ என்பது வரை மருள் நிலையாகிய சகலநிலை உயர்த்தப்பட்டது.

“அருளால் உள்நிலவும் ஒளியதனால் இருள்அகற்றிப் பாதம் உற்றிடும்” என்ற பகுதியில் அருள்நிலையாகிய சுத்தநிலை உணர்த்தப்பட்டது.

மேலும், “இச் செய்யுளொன்றே, கேவல சகல சுத்த நிலைகளை விளக்கும் சித்தியாரின் எண்பத்தொரு செய்யுட்கும் ஊடுருவி நின்று, ஒரு பொருள் மேற்கொள்வதை குரு முகமாக அறிதல் வேண்டும்” என்று குறிப்பர் சிவப்பிரகாசச் சிந்தனையுரை ஆசிரியர்.[20]

பாசம் என்பது, பசுவின் அறிவைத் தடை செய்வது என்றும், பதி என்பது பசுவின் அறிவைத் தடை செய்யும் பாசத்தை விலக்கி, ஞானம் பெறுவதற்கு உதவி செய்வது என்றும் சொல்லப்படும். இவ்வாறு பாசம், பதி பற்றி விளக்குமுகமாகப் பசுவும் பெறப்படும். ஆதலால், இவ்விருத்தம் ஒன்றிலே பசுவின் நிலைகளைச் சுருக்கமாகச் சொல்கிறது சிவப்பிரகாசம்.

பாசத்தால் கட்டுண்டு இருக்கும் ஆன்மாவின் நிலையாகிய பொது இலக்கணத்தில் ‘பசு இலக்கணம்’ என்றும், ஆன்மா மலம் நீங்கப்பெற்று இறைவன் திருவருளைப் பெறும் சிறப்பு இலக்கணத்தில் ‘ஆன்ம இலக்கணம்’ என்றும் இருவகையாக இங்குக் குறிக்கப்படுவது நோக்கத்தக்கதாகும்.

அடிக்குறிப்புகள்

1. 3:105:1
2. ஆ.ஆனந்தராசன், சிவஞான பாடிய நுண்பொருள் விளக்கம், ப.22
3. உபாய நிட்டை வெண்பா, 5.
4. ஞானாமிர்தம், அகவல், 11.
5. ஔவை.சு.துரைசாமிப் பிள்ளை, ஞானாமிர்த மூலமும் பழைய உரையும், பக்.57-59
6. மேலது, ப.58
7. சிவஞான போதம், நூற்பா.3
8. ஆ.ஆனந்தராசன், (உ.ஆ) திருவருட்பயன், ப.46
9. மேற்கோள், மதுரைச் சிவப்பிரகாசர், சிவப்பிரகாசம் மூலமும் உரையும், ப.71.
10. சிவஞான சித்தியார், சுபக்கம், 321.
11. மதுரைச் சிவப்பிரகாசர், மே.நூ.ப.72.
12. சிவஞான போதம், எடுத்துக்காட்டு வெண்பா,7.
13. சிவஞான சித்தியார், சுபக்கம், 210.

14. பெரிய புராணம், 3147.
15. சிவஞான தீபம், பா.39.
16. பரிமேலழகர் உரை, திருக்குறள், ப.26.
17. சிவஞான சித்தியார், சுபக்கம், 179.
18. மு.திருவிளங்கம், (புத்துரை), சிவப்பிரகாசம், ப.47-48.
19. திருக்கோவையார், 104.
20. சிவப்பிரகாசம் மூலமும் சிந்தனையுரையும், ப.757.

4.3 பாச இலக்கணம்

பாசம்

ஆன்மாக்கள் இறைவனை உணராவண்ணம் அவற்றைப் பிணைத்துள்ள பொருள்கள் ‘பாசம்’ என்று அழைக்கப்படும். ‘கதிக்கும் பசுபாசம்’[1] என்பர் மாணிக்கவாசகர். “பாச பத்தஸ்ததா ஜீவ: - பாசத்தால் கட்டுப்பட்டவன் ஜீவன்”[2] என்பது ஸ்கந்த உபநிடத வாக்கியம். பாசம் என்பதற்குப் பல பொருள்கள் உண்டு. அவை, தளை, கயிறு, கட்டு, மலம், தடை என்றும் குறிக்கப்பெறும்.

“விளையாததோர் பரிசில் வரு பசுபாச வேதனை ஒண்தளை”[3]

என வரும் திருஞானசம்பந்தர் வாக்கால், ‘தளை’ என்றும்.

“பற்றிக்கயிறு அறுக்கிலேன்”[4]

என வரும் அப்பர் வாக்கால், ‘கயிறு’ என்றும்,

“கட்டு மயக்கமறுத்தவர்”[5]

என வரும் சுந்தரர் வாக்கால், ‘கட்டு’ என்றும்.

“மும்மலங்கள் பாயும் கழுக்கடைக் காண் கைக்கொள் படை” [6]

என வரும் மாணிக்கவாசகர் வாக்கால், ‘மலம்’ என்றும்,

“சத்திதன் வடிவே தன்னில் தடையிலா ஞானமாகும்” [7]

என்று அருள்நந்தி சிவனார் வாக்கால், ‘தடை’ என்றும் அறியலாம்.

சைவ சித்தாந்தம் கூறும் மலங்கள் மூன்று. அவை, ஆணவம், கன்மம், மாயை ஆகும். இவ்வுண்மையை,

“கதிதரு காழிமன் கட்டுமப் பாசங்கள் மூன்றவைதாம்
பொதிதரு மாணவம் போகஞ்செய் கன்மமும் மாயையுமாம்” [8]

என்று தத்துவ விளக்கம் கூறும்.

இம்மலங்கள் மூன்றும் அநாதியாகவே உள்ளன. நெல்லில் உமியும் செம்பிற் களிம்பும் ஆகிய குற்றங்கள் நெல்லும் செம்பும் உள்ள அன்றே அவையும் உள்ளனவாம் என்பதை,

"நெல்லிற்கு உமியும் நிகழ்செம்பினிற் களிம்பும்
சொல்லிற் புதிதன்று தொன்மையே - வல்லி
மலகன்மம் அன்று உளவாம்; வள்ளலால் பொன்வாள்
அலர் சோகம் செய்கமலத்து ஆம்" ,

என்னும் சிவஞான போத வெண்பா வழி அறியலாம்.

"துஷேண பத்தோ வ்ரீஹி : உமியால் கட்டுப்பட்டது நெல்;
ஏவம் பத்தஸ்ததா ஜீவ : அவ்வாறு கட்டுப்பட்டவன் ஜீவன்" [10]

என்று ஸ்கந்த உபநிடதம் கூறும்.

"செம்பிலே களிம்பு வெட்டுவாய்தோறும் தோன்றி அதன் சொரூபம் முழுதையும் மறைத்து நிற்பதுபோல, ஆணவமலம் அறிவின்கண் வியாபித்திருக்கும். அச் செம்பின் வாசனை போலக் காரண தேகத்தினின்று தோன்றி விருத்தியாகி வரும் கன்ம மலம் நிற்கும். அச்செம்பிற் செந்நிற மிருப்பதுபோல மாயா மலம் (காரண தேகம் முதலியனவாய்ச்) சிறப்புற்றிருக்கும்."[11] என்று பரிபூராணானந்த போதத்தில் பாம்பன் சுவாமிகள் குறிப்பர்.

பதி என்பது ஒன்றே. அது 'சத்து' என்று சொல்லப்படும். ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்றும் 'அசத்து' என்று சொல்லப்படும். மாற்றம் இல்லாதது 'சத்து'; மாற்றத்திற்கு உட்பட்டது 'அசத்து'; மும்மலங்களும் மாற்றத்திற்கு உட்பட்டன ஆதலின் 'அசத்து' எனப்படும்.

ஆணவ மலமானது உயிர்களைப் பலவாறு பிணித்துநின்று, பின்னர் தேய்ந்து தேய்ந்து நிற்கும். 'கன்ம மலம்' உயிர்களைச் சார்ந்து, இன்ப துன்பங்களைதந்து, பின்னர் நீங்குவதாகும். 'மாயாமலம்' தனு கரண புவன போகங்களைத் தன்னிடமிருந்து தோற்றுவித்தும், பின்னர் ஒடுக்கியும் இவ்வாறு காரியப்பட்டு, நிலைமாற்றம் அடையும். எனவே, இம் மூன்று மலங்களும் 'அசத்து' என்று கொள்ளப்படும். எது நிலைமாற்றம் உடையதோ அஃது அசத்து என்பதே அசத்துக்குரிய சைவ சித்தாந்த வரையறையாகும்.

ஐவகை மலங்கள்

மலங்கள் மூன்றுடன் மேலும் இரண்டையும் சேர்த்து மலங்கள் ஐந்து என்று கூறுவது உண்டு. (ஐவகை மலங்களாவன, ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதானம்).

"மாறா மலம் ஐந்தால் அவத்தையின்
வேறாய் மாயா தனுகரணாதிக்கிங்கு
ஈறாகாதே எவ் வுயிரும் பிறந்திறந்து
ஆறாத வல்வினையால் அடியுண்ணுமே" [12]

"அனாதி பசுவியாத்தியாகும் இவனை
அனாதியில் வந்த மலம் ஐந்தால் ஆட்டி
அனாதியில் கேவலன் அச்சகலத்திட்டு
அனாதி பிறப்பறச் சுத்தத்துள் சூக்குமே" [13]

என வரும் திருமந்திரங்களும்,

"மலங்களால் ஐந்தாற் சுழல்வன்
தயிரிற் பொரு மத்துறவே" [14]

என்னும் திருவாசகமும் கூறுவதைக் காணலாம்.

ஆணவ மலத்தின் காரண, காரிய நிலைகளில் மிகுந்த வேறுபாடு இல்லை. அதனால் அஃது ஒன்றாகவே எண்ணப்படும். 'கன்மம்' காரண நிலையில் 'மூல கன்மம்' எனப்படும். அஃது உயிர்களைத் தாக்குதல் இல்லை. காரிய கன்மமே 'நல்வினை, தீவினை' என இரண்டாகப் பிரிந்து உயிர்களைத் தாக்கும். அதனால் காரிய கன்மமே, 'கன்ம மலம்' எனப்படுகின்றது.

மாயை காரண நிலையில் இருந்தாலும், சிறப்பாக எண்ணப்படுகிறது. அதனால் காரண மாயையே 'மாயை' என்றும், காரிய மாயை 'மாயேயம்' என்றும் சொல்லப்படுகின்றன. இறைவனது சத்தி, பாசத்தைச் செயற்படுத்துகின்ற நிலையில் 'திரோதான சத்தி' எனப்படும். பாசத்தை நடத்துதலால் இதுவும் ஒரு பாசமாக உபசரித்துக் கூறப்படும்.[15]

"ஒன்றாகி அழிவின்றிப் பல ஆற்றல் உடைத்தாய்ச் செம்புறுமா சென்னத்
தொன்றாகி அருள்விளைவின் நீங்கும் இருள் மலத்துடன் அத்தொடக்கு நீப்ப
மின்றாவும் உடலாதி நல்கும் இருமாயை இருவினைகட் கேது
என்றோது கருமம் இவை நிகழ்த்து திரோதமும் எனும் ஐவகை பாசத்தை" [16]

என்று காஞ்சிப் புராணம் ஐவகை மலங்களை விளக்கிக் கூறும்.

ஐந்து மலங்களையும் வகைப்படுத்தி அவற்றின் இயல்புகளைக் கூற வந்த சிவப்பிரகாசம் 'இந்த ஐந்து மலங்களும் ஆன்மாவைவிட்டு நீங்காமல் அதற்கு இறை அருள் கிட்டுவது அரிது' என்று கூறும்:

"மோகம்மிக உயிர்கள்தொறும் உடனாய் நிற்கும்
மூலஆணவம் ஒன்று முயங்கிநின்று
பாகம்மிக உதவுதிரோ தாயி ஒன்று
பகர்மாயை ஒன்றுபடர் கன்மம் ஒன்று
தேகம்உறு கரணமொடு புவன போகச்
செயலாரும் மாமாயைத் திரட்சி ஒன்று என்று

ஆகமலம் ஐந்து என்பர் ஐந்தும் மாறாது
அருளென்பது அரிது என்பர் அறிந்துளோரே” (சிவ.32)

ஆன்மாக்களின் அறிவை முழுதும் மறைத்து அவ் ஆன்மாவோடு இயைந்து நிற்கும் ஆணவம், அவ்வாணவத்தைப் பாகம் செய்து, ஆன்மா மலபரிபாகம் எய்துவதற்கு உதவி செய்யும் திரோதானம், ஆணவ இருளுக்கு விளக்குப்போல் நின்று ஆன்மாவிற்கு அறிவைச் சற்றே விளக்கும் மாயை, நல்வினை, தீவினை, புண்ணியம், பாவம், இன்பம், துன்பம் என்று பல வகையால் வேறுபட்டு ஆன்மாக்களில் படர்ந்து நிற்கும் கன்மம், மாயையின் காரியங்களாகிய உடல் கருவி உலகு நுகர்ச்சிப் பொருள்களாக விளங்கித் தோன்றும் மாயேயம் என்று சிவப்பிரகாசம் ஐவகை மலங்களை நிரல்படக்கூறும்.

அடிக்குறிப்புகள்

1. 8:40:7
2. ஸ்கந்தோபநிஷத்து, 7.
3. 1:12:3
4. 4:3:9
5. 7:10:7
6. 8:19:7
7. சிவஞான சித்தியார், சுபக்கம், 82.
8. தத்துவ விளக்கம், 19.
9. சிவஞான போதம், எடுத்துக்காட்டு வெண்பா, 12.
10. ஸ்கந்தோபநிஷத்து, 6,7
11. பாம்பன் சுவாமிகள், பரிபூரணானந்த போதம், ப.89.
12. திருமந்திரம், 2128
13. மேலது, 2203.
14. 8:6:29
15. சி.சு.மணி, சிவப்பிரகாசம், ப.52
16. சிவஞான சுவாமிகள், காஞ்சிப் புராணம், தழுவக் குழைந்த படலம், 61.

4.3.1 ஆணவம்

ஆணவம், ஆன்மாவோடு கலந்து அதன் வியாபகத் தன்மையை மறைத்து அணுத்தன்மையை எய்துவிப்பது. அதாவது, ஆன்மாவைச் சிற்றறிவும் சிறுதொழிலும் உடையதாகச் செய்வது. இக்காரணம் பற்றியே ஆணவம் ‘பிரதிபந்தம்’ என்றும், உயிரோடு ஒன்றி இருத்தலின் ‘சகச மலம்’ என்றும் குறிக்கப்பெறும் (சகசம் - இயற்கை, உடன் உள்ளது.) மேலும், ஏனைய மலங்கட்கு இவ்வாணவமே மூலம் ஆதலின் ‘மூல மலம்’ என்றும் அழைக்கப்படும். இவ்வாணவத்தை நீக்குதற் பொருட்டே கன்மமலமும், மாயாமலமும் ஆன்மாக்களுக்கு இறைவனால் கொடுக்கப்படுகின்றன. அதனால் கன்மமும், மாயையும் ‘ஆகந்துக மலம்’ எனப்படும் (ஆகந்துகம் - பின்பு வந்தது)

மற்றச் சமயங்கள் கன்மம், மாயை ஆகியவற்றை ஏற்றுக்கொண்டாலும் ஆணவ மலத்தின் உண்மையை ஏற்றுக் கொள்வதில்லை. சைவ சித்தாந்தம் ஒன்றே ஆணவ மலத்தின் இருப்பையும், இயல்பையும் விரிவாக விளக்குகிறது.

“யான் இதனை அறிந்தேன்; அறிகின்றேன்” என்னும் அநுபவத்தால் ‘ஆன்மாவின் குணம் அறிதலே’ என்பது விளங்கும். ஆன்மா தோற்றக் கேடுகள் இன்றி என்றும் உள்ள நித்தப் பொருள். ஆகையால் அறிதலாகிய அதன் குணமும் தோற்றக் கேடு இன்றி நித்தமாதல் வேண்டும். எனவே, வியாபக அறிவு உடைய ஆன்மாவின் அறிவு, அவ்வாறு நிகழாது ஒரு காலத்து ஓரிடத்தில் நிகழ்ந்தும், மற்றொரு காலத்தில் வேறோர் இடத்தில் நிகழாமலும் உள்ளது. அவ்வாறு ஆதல் அதற்கு இயற்கை யாகாது, செயற்கையே ஆக வேண்டும். எனவே, அறிதல் தன்மையை இயற்கையாகவுடைய ஆன்மா, அறியாமை யுடையதாய் நிற்பதற்குக் காரணம் ஒரு திரவியம் (பொருள்) இருத்தலே ஆகும். அப்பொருளே ஆணவம் என்று சைவ சித்தாந்தம் கூறும். இதனை,

“அதுதான் ஞானதிரோதகமாய் மறைத்துக் கொடு நிற்றலான்” [1]

என்று சிவஞான போதம் கூறும்.

அதாவது, ஆணவமானது ஆன்மாவின் ஞானத் தொழிலை நிகழவொட்டாது செய்வதாய், அந்த ஞானத்தை இல்லையெனும்படி மறைத்துக் கொண்டு நிற்கும்.

இல்லை என்னும்படி மறைத்தலினால், அறிவு நிகழாமையன்றி அறிவு இல்லாமல் போகவில்லை யென்பதும், நிகழாதிருந்த அறிவு பின் கருவிகளோடு கூடி நிகழ்ந்தது என்பதும், சற்காரிய வாதத்திற்கு முரணில்லை யென்பதுங் காண்க.

இவ்வாறு சைவ சித்தாந்தம் கூற, ஆன்மாவின் அறிவை மறைப்பது **'பிராந்தி ஞானமாகிய மயக்க உணர்வு'** என்று ஏகான்மவாதிகளும், **'ஞானத்தின் அபாவமே'** என்று தருக்க மதத்தவர்களும், **'தாமதகுணம்'** என்று பாஞ்சராத்திரிகளும், மூலப் பிரகிருதியில் தோன்றும் **'அவிச்சை'** என்று சாங்கியரும், **'சிவசத்தி'** என்று சிவாத்துவித சைவர்களும், **'அறியாமையே ஆன்மாவின் குணம்'** என்று ஏகான்மாவதிகளுள் ஒருசாராரும், **'மாயை கன்மங்கள்'** என்று ஐக்கியவாத சைவர்களும் வேறுபட்ட பல முடிவுகளைக் கூறுகின்றனர். அவற்றை மறுத்து ஆணவம் ஒன்றே ஆன்மாவின் அறியாமைக்குக் காரணம் என்பதை எடுத்துக்காட்டி நிறுவுகிறது சைவ சித்தாந்தம்.

பிராந்தி ஞானமாகிய மயக்க உணர்வு

கயிற்றைக் 'கயிறு' என உணர்தல் உண்மை ஞானம் அல்லது மெய்யுணர்வு போல்வதே. அவ்வாறின்றிக் கயிற்றைப் பாம்பு என உணர்தல் போல்வது பிராந்தி ஞானம்; அல்லது மயக்க உணர்வு. இவ்வாறான மயக்க உணர்வு அவ்விடத்தில் யாதாயினும் ஒரு குற்றம் இல்லாமல் நிகழாது. அதுபோல, உடம்பு முதலியவற்றை 'ஆன்மாவின் வேறான சடப்பொருள்' என உணராது, 'ஆன்மா' என உணரும் பிராந்தி ஞானமும், அவ்விடத்தில் ஒரு குற்றம் இன்றி நிகழமாட்டாது. ஆகவே, அக்குற்றம் பிராந்தி ஞானத்திற்குக் காரணமாய் அதற்கு வேறாக இருத்தல் வேண்டும் என்பது தெளிவு.

ஞானத்தின் அபாவம்

'ஞானத்தின் அபாவமே' என்று கூறினால், இங்கு அபாவம் என்பது முன் அபாவம், அழிவுபாட்டு அபாவம், என்றும் அபாவம், ஒன்றின் ஒன்று அபாவம் என்னும் நால்வகையுள் எந்த அபாவம் என்ற கேள்வி எழுகிறது.

ஓரிடத்தில் ஒரு காலத்தில் ஒரு குடம் தோன்றிற்று எனில், அங்ஙனம் தோன்றுவதற்கு முன் அஃதில்லாமை 'முன் அபாவம்'; அந்தக்குடம் உடைந்து மண்ணாகிவிட்டபின் உள்ளது 'அழிவுபாட்டு அபாவம்'; 'முயலுக்குக் கொம்பு இல்லை, ஆகாயத்தாமரை இல்லை' என்பது 'என்றும் அபாவம்'; 'குடம் ஆடையன்று; ஆடை குடம் அன்று' என்பது 'ஒன்றின் ஒன்று அபாவம்'.

இங்கு என்றும் அபாவம், அழிவு பாட்டு அபாவம், ஒன்றின் ஒன்று அபாவம் என்ற மூன்றும் ஒருபோதும் அழியாது நிற்கும் இயல்பு உடையன. அஞ்ஞானத்துக்கு அழிவு இல்லை என்று கொண்டால், ஆன்மா ஞானம் பெற்று வீடுபேறு அடையும் என்ற கொள்கையுடன் முரண்படும். வேத ஆகமங்கள் ஆன்மாக்கள் வீடுபேறு அடையும் என்று வலியுறுத்துகின்றன. அவற்றோடு முரணாமல் அபாவத்துக்கு பொருள்கொள்ள வேண்டும் என்றால், 'முன் அபாவமே' இங்குப் பொருந்துவதாகும்

அப்படியெனில் நித்தப் பொருளாய் இருக்கின்ற ஆன்மாவின் ஞானம், முன்பு விளங்காது நின்றதற்கு வேறு காரணம் ஒன்று இருத்தல் வேண்டும் அதுவே, சகச மலம் எனப்பட்ட ஆணவ மலமாகும். ஆகையால் 'ஞானத்தின் அபாவமே அஞ்ஞானம்' எனக் கொண்டபொழுதும், 'அதற்குக் காரணமான சகச மலம் உண்டு' எனக் கொள்ளுதலும் தவிர்க்க முடியாததாகும்.

இங்ஙனம் 'ஞானத்தின் அபாவமே அஞ்ஞானம்' என்று கூறியதுபோல 'ஆலோகத்தின் அபாவமே இருள்' (ஒளியின் இன்மையே இருள்) என்பதும் இங்குச் சிந்திக்கத் தக்கதாகும். ஓரிடத்தில் ஒளி இல்லை என்று உணர்வதைப்போலவே, அங்கு இருள் உள்ளது என்றும் நம்மால் உணர முடிகிறது. எனவே, ஒன்றனது உண்மையை இன்னொன்றினது இன்மையாகக் கூறுதல் பொருந்தாது. இன்பத்தின் இன்மையே துன்பம், தருமத்தின் இன்மையே அதருமம், பொருந்துதலின் இன்மையே பிரிவு என்று கூறுவது எவ்வாறு பொருந்தாதோ அவ்வாறே 'ஒளியின்மையை இருள்' என்று கூறுவதும் பொருந்தாது. மேலே கண்ட மூன்றையும் தருக்கமும் ஏற்றுக் கொள்ளும்.

இருள் உள்ள இடத்தில் கண்ணை எவ்வளவு விழித்துப் பார்த்து முயன்றாலும் உருவம் புலனாகாமையால், அம் முயற்சியைத் தடுத்து நிற்கின்ற இருள் உண்மையாகவே இருத்தல் துணியப்படும். எனவே, 'இருள் கண்ணை மறைக்கின்றது' என்பது வழி. 'இருள் எனப்படுவது இருளைச் செய்யும் பொருள், அதாவது 'இருள் ஒரு பொருளே'யாகும். சைவ சித்தாந்தத்தில் 'இருள் என்பது ஒரு பொருள்' என்றே கொள்ளப்படும். இவ்விளக்கத்தாலே, உயிர்களின் அறிவை மறைத்து அறியாமையைச் செய்கின்றது ஒரு பொருளே என்பது பெறப்படும். ஆகையால் அப்பொருளே 'ஆணவ மலம்' என்று சொல்லப்படும்.

தமோ குணம்

'ஆன்மாவின் ஞானத்தைத் தடுத்து நிற்பது தமோ குணம்' என்றோ, 'பஞ்சக் கிலேசங்களுள் ஒன்றாகிய அவிச்சை' என்றோ கூறினால் அவை இரண்டும் காரியப் பொருளாய் இடையில் தோன்றி இடையிலே அழிவதால் அவை பொருந்தா. ஆதலால் 'தோற்றமில் காலந்தொட்டே' ஆன்மாவை மறைத்துக்கொண்டு நிற்கும் என்று கூறுவது பொருந்தாது. அறிவே வடிவாய் இருக்கும் ஆன்மாவை, அது இடையிலே பற்றும் எனச் சொன்னால் பற்றுவதற்கு ஒரு காரணம் வேண்டும். காரணம் இன்றிப் பற்றும் என்று சொன்னால் அது முத்தி நிலையிலும் பற்றுதல் கூடும் எனப்பட்டு வழுவாய் முடியும். அதனால் அவற்றுக்கு வேறாகிய அநாதி பந்தம் ஒன்று உள்ளதேயாகும்.

சிவசத்தி

ஆன்மாவின் அறிவை மறைப்பது சிவ சத்தி எனில் அஃது அசம்பாவிதமாகும். சிவன் பேரறிவாளன் ஆகிய சித்து, சிவனது சத்தியும் சித்தாகுமே யன்றிச் சடமாகாது. ஒரு சித்துப் பொருள் மற்றொரு சித்துப் பொருளுக்குப் பகையாய் அதற்குக் கேடு சூழ்தல் எக்காலத்தும் நிகழாத ஒன்றாகும். மேலும், அங்ஙனம் கூறுதல், 'இறைவன்

பெருங்கருணையாளன்' என்பதற்கும் மாறாகும். ஆகவே, சித்தாகிய சிவ சத்தியின் வேறாய், ஆன்மாவின் அறிவை மறைக்கின்ற அநாதி சடப்பொருள் ஒன்று உள்ளதேயாம்.

ஆன்மாவின் குணம்

ஆன்மாவின் அறிவை மறைப்பது ஆன்மாவின் குணம் என்று சொன்னால், ஒரு பொருளுக்குக் குணம் என்று சொல்லப்படுவது, அப்பொருளை விட்டு ஒரு காலத்திலும் நீங்குவது இல்லை. ஆகவே, ஆணவ மலம் குணமாயின் ஆன்மாவை விட்டு அஃது எக்காலத்திலும் நீங்காது. ஆணவமலம் ஆன்மாவைவிட்டு ஒரு காலத்தில், நீங்குவதே யாகையால் அஃது ஆன்மாவின் குணமாகாது. எனவே, அது அநாதியே பற்றியுள்ள குற்றமேயாகும்.

மேலும், 'அறிவே ஆன்மாவின் குணம்' என்று ஆன்ம இயலில் விளக்கப்பட்டது. அறியாமை, அறிவுக்கு மறுதலையானது. ஒன்றுக்கொன்று மறுதலைப்பட்ட குணங்கள் ஒரு பொருளிடத்தே இருக்க மாட்டா. அதனால், அறிவுப் பொருளுக்கு அறியாமையைத் தருவதாகிய ஒன்று குணம் ஆகமாட்டாது. அதனால் ஆணவ மலம் ஆன்மாவிற்கு வேறாய் உள்ளதொரு திரவியமே ஆகும்.[2]

ஆணவம் என்பது இல்பொருளே

மாயையும், கன்மமும் ஆன்மாவின் அறிவை மறைக்கின்றன. ஆணவ மலம் என ஒன்றில்லை. இருவினைக்கேற்ப இறைவன் உடல் முதலியவற்றைக் கொடுத்து, இருவினை யொப்பு வந்தபோது இறைவன் அருள் புரிவான். அப்போது உயிர்கள் முன் இருந்தபடியே அதாவது அநாதியில் இருந்தபடியே தமக்குரிய பேரொளியைப் பெற்றுத் திகழும் என்பது ஐக்கிய வாத சைவம் கொண்ட கொள்கையாகும். இதனை,

"இன்மை மலம் மாயைகன்மம் என்றிரண்டே இறைதான்
இலங்குபல உயிர்களும்முன் புரிந்த இருவினையின்
தன்மைகளால் எவர்களுக்கும் தனுகரண புவனம்
தந்திடும்இங்கு அதனாலே இருபயனும் சார்ந்து
கன்மமெலாம் நேராக நேராதல் மருவக்
கடவுள் அருளால் எவையும் கழித்திடுவன் அதனால்
பின்மல மானவை யணுகா பெருகொளி முன்பு உளதே
பெற்றிடும் என்று இத்திறம்என் பேசு மாறே" (சிவ.34)

என்று சிவப்பிரகாசம் இனிது விளக்கும்.

அநாதியில் சுத்தனான ஆன்மாவிடத்தில் மாயை, கன்மங்கள் வந்து சேர்ந்தன என்றால், உடல் கருவி முதலியன வினைக்கு ஈடாக வருவன என்னும்போது, வினை முந்தியதாகிறது. வினை ஆற்றுவதற்குத் தேவைப்படும் உடல் என்னும்போது, மாயையின் காரியமான உடலே முதலாகும். எனவே, மாயை முந்தியதாகிறது. இது

பனை விதை முந்தியதா, பனைமரம் முந்தியதா என்று தாலபீஜ நியாயமாய் வரம்பின்றி ஓடுவதைப் போன்றது (தாலம் - பனை; பீஜம் - விதை). இதனை,

“முட்டை முந்திற்றோ? பனை முந்திற்றோ?
எனக் கட்டுரை செய்
என்றால் ‘எம் முட்டைக்கு எப் பனை?’’ [3]

என எதிர்வினாத் தொடுத்தல், ‘வினாவினால் விடையிறுத்தலாகும்’ என்று மணிமேகலை கூறும்.

மேலும், ஆன்மாவை மாயையும் கன்மமும் எதற்காகப் பொருந்தும் என்ற வினா எழும். ஆதியில் ஆன்மாவிற்கு ஆணவம் உண்டென்பதால் அது காரணமாக வந்து கூடினதென்று சொல்ல வேண்டும். அவைகள் காரணமின்றி ஆன்மாவில் பொருந்துதல் இயல்பு எனில், ஆன்மா முத்தியடைந்த பின்னரும் அதனைப் பற்றுதல் கூடும். அங்ஙனமாயின் முத்தி யென்பதொன்று இல்லையாய் முடியும்.

அன்றியும் கலை முதலிய தத்துவங்கள் ஆன்மாவைப் பொருந்தி நின்று அதற்கு உணர்வைத் தரும்போது, ஆன்மாவின் அறிவு விளங்காதவாறு மறைத்து உலகியல் இயல்பையே காட்டி நிற்கும் என்று சொன்னால், நன்று. இக் கலை முதலிய தத்துவங்கள் நீங்கிய பேருறக்கத்தில் ஆன்மா அறிவு விளங்காமைக்குக் காரணம் என்ன என்ற வினா எழும். அவ்வாறு விளங்காமைக்குக் காரணம் உயிரின் அறியாமை என்று சொன்னால் அவ்வறியாமையே ஆணவ மலம் என்று சொல்வார்கள் உண்மை உணர்ந்தோர் என்று சிவப்பிரகாசம், மாயை கன்மங்களுக்கு முன் ஆணவம் உண்டு எனினும், அது ஆன்மாவிற்கு அறியாமையை விளைவிக்கும் என்றும் ஐக்கிய வாதத்தை மறுத்துக்கூறும்.

“மாயை முதல் எனவினையின் பான்மைமுதல் எனவே
மன்னுபனை விதைமரபின் மயங்கும்மலம் சுத்தற்கு
ஏயுநெறி என்கொல்அதன் இயல்பாயின், முத்தி
என்பதுஎன் மற்றிவைநிற்க இருங்கலாதி உணர்வாய்
மேயபினர்த் தன்னுருவம் விளங்காமை விளக்கும்
மிகும்உலகம் தனில்என்னில்இவை விடுங்கால் உணர்வுள்
தோயுநெறி இலதாதல் அறியாமை எனநீ
சொல்லியது மலமென்பர் துணிந்து ளோரே” (சிவ.35)

இச் சிவப்பிரகாசப் பாடலின் கருத்தையே அடிபெயர்த்து,

“...............சுத்த
அறிவு எனில் பாசம் செறியா மாயை
உரு இரு வினையால் வரும் இருவினையும்

உருவால் அன்றி மருவாது இவற்றின்
முந்தியது ஏதோ வந்து அணைவதற்கு ஓர்
ஏது வேண்டும் தான் இயல்பு என்னில்
வீடு உற்றவரினும் கூடக் கூடும்
ஈங்கு இவை நிற்க....
அறிவிலாமை என்றனை அதுமலமாக
குறிகொளாளர் அறைகுவர் அன்றே" [4]

என்று ஐக்கியவாதி சங்கற்ப நிராகரணத்திலும் உமாபதி சிவம் கூறுவர்.

எனவே, ஆணவம், பிராந்தி ஞானம் முதலியனவாகப் பிறரால் கூறப்படுவனவற்றின் வேறு எனவும், அது ஞான திரோதகமாய் ஆன்மாவின் அறிவை மறைக்கும் ஒரு பொருள் எனவும், அறியாமையையே தன் குணமாக உடையது எனவும், இதுகாறும் விளக்கப்பட்டது.

ஆணவம் - ஒன்று

இங்ஙனம் எண்ணற்ற ஆன்மாக்களின் அறிவைப் பிணித்திருக்கும் ஆணவமலம் ஒன்றே ஒன்றுதான். ஆணவம் ஆன்மாக்கள்தோறும் தனித்தனியே இருப்பதாகக் கொண்டால், ஆணவத்திற்குப் பன்மைத் தன்மை உள்ளதாக அமையும். இது குற்றமாக அமையும். பலவாகவும் சடமாகவும் உள்ளன எவையோ அவையெல்லாம் தோற்றக் கேடுகளை உடைய அதாவது தோன்றி நின்று அழியும் காரியப் பொருள்களாகும். ஆனால், ஆணவம் நித்தப் பொருளாகும். எனவே, அநாதி மறைப்பாக உள்ள ஒரு பொருளைக் காரியப் பொருளாகக் கொள்ள இயலாது.

"மலம் ஒவ்வொரு புருடனிடத்தும் இருப்பதாகக் கூறின்
சடத்தன்மையும் அநேகத்தன்மையும் இருப்பது பற்றி
தோன்றியழிவதாக ஆகிவிடும்" [5]

என்னும் போக காரிகையும்

"சடமாயும் நித்தியமாயும் இருத்தலால் ஆணவமலம்
ஒன்றேயாம். அநேகம் என்று சொல்லின் சடமாயும்
அநேகமாயும் உள்ள கடம் முதலியவைகளுக்கு
அநித்தியத்தன்மை காணப்படுமாறுபோல ஆணவ
மலத்திற்கு அநித்தியத் தன்மை சம்பவிக்கும்; ஆதலால்
அது பொருந்தாது" [6]

என்னும் தத்துவப் பிரகாசிகையும் ஆணவம் ஏகம் என்றே கூறுகின்றன. ஞானாமிர்தமும்.

"ஏகமென அறி பலவாய் ஓவாத்
தோற்றம் உண்மை இன்மையின்" [7]

என்று வழிமொழியும். ஆன்மாக்கள் பல; அவை சித்துப் பொருள்கள் என்பதால் பலவாக இருத்தல் குறித்து எந்தத் தடையும் எழ வாய்ப்பில்லை. பலவாக இருக்கும் பொருள்கள் குறித்து நாம் அறியத் தக்கது என்னவெனில், பலவாக இருக்கும் பொருள்களுக்கிடையே நிச்சயமாக வேற்றுமை இருக்கும். ஏனெனில், முற்றிலும் ஒத்த தன்மைகளோடு பல பொருள்கள் இருத்தல் இயலாது. அதைப்போலவே, பலவகையாக இருக்கும் ஆன்மாக்கள் மலப் பிணிப்பு என்னும் ஒற்றுமையைப் பெற்றிருப்பினும் வேறுபட்ட அறிவு நிலை என்ற வேற்றுமைகொண்டே இருக்கின்றன. அநாதியே உள்ள எண்ணற்ற ஆன்மாக்களும் அறிவுநிலையில் ஒன்றைப்போல ஒன்று இல்லை. எனவே, ஆணவ மலமானது ஒவ்வொரு ஆன்மாவையும் அதனதன் பக்குவத்திற்கு ஏற்ப வன்மையாகவோ, மென்மையாகவோ பிணித்திருக்கும். அதனால் மல சத்திகள் பலவாக உள்ளன. இதன் மூலம் ஆணவம் ஒன்று எனினும் அதன் சத்திகள் பலவாக விளங்குதலைக் காணலாம்.[8]

பொருளை இலக்கியம் என்றும், பண்பினை இலக்கணம் என்றும் தத்துவம் கூறும். "இலக்கண வேறுபாடே இலக்கியத்தின் வேறுபாட்டைத் தெரிவிப்பதாகலானும், இதனானே அது அதுவாய் நின்று அறிதலாகிய பொது இலக்கண மாத்திரையேயன்றி ஆன்மாக்களுக்குத் தனித்தனிச் சிறப்பு இலக்கணங்கள் உள என்பதும் பெறப்படும்; அற்றாகலின் மலசத்திகள் பலவாயின"[9] என்று சிவஞான முனிவர் 'ஆணவ மலம் ஒன்று எனினும் அதன் சத்திகள் பல என்பதற்கு ஆன்மாக்களின் பன்மையே காரணம்' என்பர். 'ஆணவம் ஆயிரம் கோடி யளவினவாகிய தொகை கொண்டு மறைத்தலைச் செய்யும்' என்று தத்துவ விளக்கம் கூறுகிறது :

> "முதியது தான்ஒன்று முன்பின்
> இலாதது சேதனன்கண்
> அதிகம் மறைப்பன ஆயிரம்
> கோடி விருத்திகளே"[10]

பகலவன் ஒரு பொருளே ஆயினும், எண்ணற்ற கதிர்களைக் கொண்டு எண்ணற்ற பொருள்களை விளக்குகின்றான். இது 'விளக்கும் சத்தி' இதைப்போலவே இருளும் ஒன்றாய் இருந்தே எண்ணிலாச் சத்திகளைக் கொண்டு எண்ணிலாத கண்களை மறைக்கின்றது. இது 'மறைக்கும் சக்தி' இவ்வாறே ஆணவ மலம் ஒன்றாயினும் எண்ணற்ற ஆன்மாக்களையும் மறைத்தலால் எண்ணற்ற சத்தியுடையது.

> ".... எண்ணரும் சத்திகள் உடையதாய் விரவிக்
> கோள் உறும் பசு அறிவினைக் கூட்டொடும் மறைக்கும்
> வாள்உறு பல விழியினை மறைத்திடும் இருள் போல்"[11]

என்று கச்சியப்ப முனிவர் குறித்திடுவர். "எண்ணற்ற சத்திகளைக் கொண்டு, ஆணவம் சர்வ ஆன்மாக்களிடத்தும் நின்றதே யாயினும் அந்த ஆன்மாக்களில் ஓர் ஆன்மாவுக்கு பாசச்சேதம் பண்ணும் பக்குவ காலம் வருமானால் அதன் சத்தி கெடும்" இதனை ஞானாமிர்தம்,

“உயிர்தொறும் நின்ற கண்ணும் விளிதரு
தன்னுடைய காலந் துன்னிற் பின்னிடும்
வலியின் தகுதித்து” [12]

என்று கூறும்

எந்த மலச் சத்திக்குப் பரிபாகம் உண்டாகின்றதோ அந்த மலச்சத்தியால் மறைக்கப்பட்டிருந்த ஆன்மாவிற்கு மட்டும் முத்தி உண்டு. அந்நிலையில் சிவசத்தியாகிய ஒளி முன் இருள்போல மீளும். இதனால் எல்லா ஆன்மாக்களுக்கும் முத்தி ஞானம் ஒரு காலத்தில் கூடாதென்பது இனிது விளங்கும். இவ்வாற்றால் ஆணவ மலத்தின் மறைக்கும் சத்திகள் கெடினும் முதலாகிய அவ்வாணவ மலத்துக்கு கேடில்லை என்பதாம். இதனைக் கருத்தில்கொண்டே, மேற்கண்ட ஞானாமிர்தத்தை, சிவஞான முனிவர் ‘சித்தாந்த மரபு கண்டன கண்டன’த்தில் மல வியாபகத்திற்கு எடுத்துக்காட்டுவர்.[13] அதாவது ஆணவம் முத்தான்மாவை விட்டு நீங்கினாலும் பெத்தான்மாக்களிடத்தில் காணப்படுவதால் அழிவு இன்றாம்.

“நல்ல சிவ முத்தியின் கண் பெத்தான்மாவை
நணுகி நிற்கும் ஆதலால் நாசமும் இன்றாமே” [14]

என்று சித்தியார் விளக்கும். எனவே, ‘ஒவ்வொரு புருடனிடத்தும் நியமமாயும், தத்தங்கால எல்லையில் நீங்கும் சத்திகளை யுடையதாய் இருக்கும்.[15] என்று போக காரிகை கூறும்.

ஆணவம் - இருள்

ஆன்மாக்கள் திருவருளை உணராவண்ணம் ஆணவம் மறைக்கின்றது. ஆணவத்தின் இந்த மறைத்தல் தொழில்பற்றியே அஃது ‘இருள்’ என்று சொல்லப்படுகின்றது.

“இருள்தரும் துன்பப் படலம் மறைப்ப மெய்ஞ்
 ஞானமென்னும்
பொருள்தரு கண் இழந்து” [16]

என்னும் திருவையாற்றுத் தேவாரத்தில், ‘மெய்ஞ்ஞானமாகிய கண்ணை அறியாமையாகிய அகவிருள் படலம் மறைத்துள்ளது’ என்பார் திருநாவுக்கரசர்.

உமாபதி சிவம் ஆணவத்தின் இருள் தன்மையை விளக்கிக் காட்டும் வகையில் திருவருட் பயனில் ஓர் அதிகாரம் வகுத்து, அதற்கு ‘இருள்மல நிலை’ என்றே பெயரிடுகிறார்.

பொருள்களையும் அவற்றின் தன்மைகளையும் தோன்ற வொட்டாதபடி அவையாவும் தானே எனத் தோன்றும்படி மறைத்துக் காட்டுவது “புறஇருள்”.

“இருளானது அன்றி இலது எவையும்ஏகப்
பொருளாகி நிற்கும் பொருள்” [17]

என்று ‘புற இருளை’ எடுத்துக்காட்டி, இறை, உயிர், உலகம் ஆகியவற்றின் தன்மையை தெரியவொட்டாதபடி உயிரறிவை மறைத்துநிற்கும் ‘அக இருளாகிய ஆணவத்தின் தன்மையை உணர்த்துகின்றார்.’ மேலும்,

“பன்மொழிகள் ஏன்? உணரும் பான்மை தெரியாத
தன்மை இருளார் தந்தது” [18]

“பலரைப் புணர்ந்தும் இருட்பாவைக்கு உண்டு என்றும்
கணவர்க்கும் தோற்றாத கற்பு” [19]

என வரும் குறள்களில், ஆணவத்தை, **‘இருளார், இருட் பாவை’** என்று உயர்திணையில் வைத்து **‘மரியாதைப் பன்மை இகழ்ச்சிக் குறிப்பாக’**க் கூறுகிறார் உமாபதி சிவம்.

இருள் தன்னிடத்தில் உள்ள பொருளை மறைக்கும்; தன்னை மறைக்காது. ஆனால் ஆணவம் தன் செயலை மறைப்பது மட்டுமன்றித் தன்னையும் மறைத்துக் கொள்ளும்.

“ஒரு பொருளும் காட்டாது இருள் உருவம் காட்டும்
இரு பொருளும் காட்டாது இது” [20]

இதனால் ஒரு விதத்தில் ஆணவம் இருளைவிடக் கொடியது என்றே கூறலாம். உலகில் இருளைவிட இருண்ட பொருள் உண்டா? என்றால் உண்டு. அது ஆன்மாக்களிடத்தில் அஞ்ஞானமாகிய மயக்கத்தைச் செய்கின்ற ஆணவம்தான். அதன் முன்னால் ‘உலகத்து இருளும், ஒளி’ என்று சொல்லப்படும். இதனை, சிவப்பிரகாசத்தில் **‘இருள் ஒளிர இருண்ட மோகம்’** என்று கூறுவர் உமாபதிசிவம். இக்கருத்தை, திருவருட் பயனில் இருள்மலநிலை என்னும் அதிகாரத்தின் தொடர்ச்சியாகவும் நிறைவாகவும் கொள்ளலாம்.

இவ்வாறு, இருளாகிய ஆணவ மலத்தின் உண்மை இயல்பை உமாபதிசிவம் போல் தனிச்சிறப்போடு எடுத்துக்காட்டியவர்கள் யாருமில்லை எனலாம். (Umapati’s significant remark about mala suggesting the existential nature of awarness of mala)[21]

இறுகாறும் கூறப்பட்ட ஆணவத்தின் இயல்புகளைத் தொகுத்து,

“ஏகமாய்த் தம்கால எல்லைகளின் மீளும்
எண்ணரிய சத்தியதாய் இருள்ஒளிர இருண்ட
மோகமாய்ச் செம்பினுறு களிம்பேய்ந்து நித்த
மூலமலமாய் அறிவு முழுதினையும் மறைக்கும்” (சிவ.20)

என்று சிவப்பிரகாசம் கூறும்.

“தத் ஏகம் ஸர்வ பூதானாம் அனாதி நிபிதம் மஹத்|
பிரத்யாத்மஸ்த ஸ்வகாலாந்தாபாயி சக்தி சமூஹவத்||

– ஏகமாய், தோற்றமில்லாததாய், இருளாய், மூலமாய், ஒவ்வொரு ஆன்மாவிலும் இருக்கும் ஆணவம் பல சக்திகளைக் கொண்டிருக்கும். பரிபாக எல்லையில் தன் சக்தி கெடும்”[22] என வரும் மிருகேந்திர ஆகமம் ஒப்புநோக்கத்தக்கது.

ஆணவத்தின் இருநிலைகள்

ஆணவம் இரு நிலைகளில் நின்று உயிருக்கு இடர் செய்கின்றது. தானாகத் தனித்து நின்று இடர் செய்வது ஒரு நிலை; ‘மாயை’, ‘கன்மம்’ ஆகியவற்றின் சேர்க்கையோடு இடர் செய்வது இன்னொரு நிலை.

மாயை, கன்மங்களோடு ஆன்மா கூடாதபோது ஆணவம் உயிரறிவை முழுவதுமாக மறைத்து நிற்கும். அவ்வாறு மறைத்து நிற்றலே ஆணவத்தின் உண்மையியல்பு எனப்படும் சொரூபலக்கணம். இவ்வாறு தனிநிலையில் ‘அறிவை மறைப்பது’ என்னும் மறைத்தலைச் செய்யும்பொழுது அதனது சக்தி ‘ஆவாரக சக்தி’ எனப்படும்.

மாயை கன்மங்களோடு கூடியபோது, ஆணவம் உயிரின் அறிவைத் திரிவுபடுத்தும்; அதாவது அற்பமான பொருளை உயர்ந்த பொருளாகவும் நில்லாத பொருளை நிலைத்த பொருளாகவும் மதிக்கும்படி அறிவை வேறுபடுத்தி நிற்கும். ஒன்றை மற்றொன்றாக உணர்வது விபரீத அறிவு. இவ்வாறு மாறி உணர்தலாகிய திரிபுணர்ச்சியை விபரீத அறிவை உண்டாக்குவது ஆணவத்தின் பொது இயல்பு எனப்படும் தடத்தலக்கணம்.

இவ்வாறு பிற மலங்களோடு கூடிய பொதுநிலையில் பொருள் இயல்பைத் தவறாக உணரச் செய்கின்ற ‘உணர்வை மறைப்பது’ என்னும் மறைத்தலைச் செய்யும்பொழுது அதனது சக்தி ‘அதோநியாமிகா சக்தி’ என்று சொல்லப்படும். ‘எந்நிலையிலும் ஆணவம் அறியாமையை விளைவிப்பதாகவே இருத்தல் அறியத்தக்கது.’

ஆணவ மலமானது ஆன்மாக்களுக்கு வேறாய் நிலைபேறற்ற உலகத்தை நிலைத்தது என்று உணரும்படி செய்தும், ஆன்மாக்கள் தமக்கு வேறின்றிப் பரிபூரணமாய் நிற்கும் தம் அறிவுக்கு அறிவாகிய சிவத்தை அறியாது இருக்கின்ற அறியாமையையும் விளைவிக்கிறது. அதாவது ஆன்மாவிற்கு அந்நியமான வேற்றுமைப் பொருளை உணர்த்தி அதற்கு அநந்நியமான உறவான பொருளை மறைக்கும்.

“அன்னியமானவை உணர்த்தி அநந்நியமாய் நிறைந்த
அறிவு அறியாமையினால்” (சிவ.36)

எனச் சிவப்பிரகாசம் இதனை உணர்த்தும்.

ஆணவம் - குற்றம்

ஆணவ மலம் ஆன்மாவின் குணம் அன்று; குற்றமே என்றாலும் குணமானது குணியிடத்தில் எவ்வாறு அக்குணியின் வியாபகம் முழுக்க நிறைந்திருக்குமோ அதுபோல ஆன்மாவின் வியாபகம் முழுக்க நிறைந்து விளங்கும்.

“ஓதலாம் குணமுமாக உயிரினுள் விரவலாலே” [23]

என்பது சிவஞான சித்தியார். இதற்கு, ‘உயிரோடு வியாபகமாய் விரவிக் குணம் போலத் தோன்றி நிற்பதொன்றாகலானும், ... ஆணவ மலமே உயிருணர்வின் காரியப்பாட்டைத் தடுக்க வல்லதெனத் தெற்றென உணர்க’[24] என்று சிவஞான முனிவர் பொழிப்புரை அருளிச் செய்வர்.

இவ்வாறு ஆன்மாவின் வியாபகம் முழுக்க நிறைந்து விளங்கும் ஆணவ மலம், ஆன்மாவின் அறிவு இச்சை செயல்களை முழுமையாக மறைத்துச் சிறிதும் அவை விளங்கவொட்டாமல் தடுக்கிறது. எனவே, எல்லா ஆன்மாக்களும் இந்த மலத்தினால் பிணிப்புண்டு இருந்தும் இல்லாததுபோன்ற அவல நிலையிலேயே உள்ளன. இதனைச் சிவப்பிரகாசம் ***‘உயிர் தானென ஒன்று இலதாய் மன்னியிடும் மலம்’*** (சிவ.36) என்று கூறும். இதற்கு, ***‘வன்னிதனை தன்னுள் மறைத்து ஒன்றாம் காட்டம்போல்’***[25] என்று சிவஞான போதம் உவமை கூறும். நெருப்பைத் தனக்குள் மறைத்து வைத்து தான் ஒன்றே உள்ளது போல் நிற்கின்ற விறகுபோல், ஆன்மாவினுள் ஆணவமலம் பொதிந்துகொண்டு, ஆன்மா என்பதொன்று இல்லை என்னும்படியாக மறைத்து நிற்கும். இதனையே பாம்பன் சுவாமிகளும்,

“நெகிழியானதை அனாதியே
ஏது மின்னிட விடாது செய்த முருடு
என்ன மாழையும் எண்ணிடின்” [26]

என்று பரிபூரணானந்த போதத்தில் கூறியருள்வர். படிமுறையே திருவருளால் பக்குவப்படுத்தப்பட்டு நிறைந்த ஞானம் விளங்கும் சுத்த நிலையை எய்தியவுடன் அநந்நியமாய் நிறைந்த இறைவனின் பேரருள் ஆன்மாவிற்கு விளங்கும். அப்பரிபூரண ஞானம் விளங்கும் காலத்தில் இறைவனே எல்லாமாய் நின்ற பழைமையை ஆன்மா அறியும். அவ்வருள் தோன்றுமளவும் ஆன்மா தானொரு பொருள் இல்லை என்ற தனித்தன்மை இல்லாததுபோல அவ்வாணவமேயாய் நிலைத்திருக்கும்.

படைப்புக் காலத்தும் ஒடுங்கும் காலத்தும் மாயையும் கன்மமும் ஆன்மாவைப் பற்றியும் விட்டு நீங்கியும் வரும். ஆனால் ஆணவ மலமோ அவ்வாறு பற்றுவதும் நீங்குவதும் இல்லாது சகசமாய் ஆன்மாவோடு பொருந்தி முத்திக் காலம் வரை பற்றியிருக்கும்.

“..... அருள் நிலவும் காலம்
தன்னில்அவனே யாவுமாய் நின்ற தொன்மை
தாம்உணர்த லாலும் உயிர்தான்என ஒன்று இலதாய்

மன்னியிடும் மலம்மாயை கன்மங்கள் மாறி
வந்திடும் இங்கு இது வழுவாது,” (சிவ.36)

என்பது சிவப்பிரகாசம்.

ஆணவத்தின் இருப்பு

ஆணவ மலமானது உயிருக்குப் பிரபஞ்சத்தையே அறிவித்தும், சிவஞானத்தை அறிய விடாது செய்தும், ஆன்மா என ஒரு பொருள் இருப்பதையே உயிருக்குத் தெரியவிடாது செய்தும், சகசமாய் சுத்த நிலையாகிய முத்திக்காலம் வரை பற்றியிருக்கும். இவ்வாறு அதன் தன்மையிலிருந்து ஒரு போதும் குறைவுபடுவதில்லை எனில் அவ்வாணவத்தை எவ்வாறு அறிந்துகொள்வது. இதனையே இருபா இருபஃது,

“அருள் முன்பு நில்லாது அடியேற்குக் கண்ணின்று
இருள் கொண்டவாறு என்கொல் எந்தாய் - மருள்கொண்ட
மாலையாய்! வெண்ணெய்வாழ் மன்னவா! என்னுடைய
மால்ஐயா மாற்ற மதி” [27]

என்று கூறும்.

“இருளாகிய மலங்கள் அறிவே பிழம்பாக விளங்கும் உம்முடைய திருமுன்பு நிற்கமாட்டா. அடியேனுக்கு நீர் காட்டினாலன்றிக் காணுகின்ற இயல்பு இல்லை. அவ்வாறு இருக்க நான் எவ்வாறு மலமாகிய இருளினை அறிவேன். என் மயக்கம் தீருமாறு அருள்கூர்ந்து உணர்த்தி அருள வேண்டுகிறேன்’ என்று ஞானாசிரியராகிய மெய்கண்டாரிடம் அருள்நந்தி சிவம் வேண்டுகிறார்.

இவ்வினாவிற்கு உமாபதி சிவம் விடையளிப்பார்போலச் சிவப்பிரகாசத்தில்,

“.... மனத்தால்
உன்னரிய திருவருளை ஒழிய மலம் உளது என்று
உணர்வு அரிதால் அதன் உண்மை தெரிவு அரிதாம் உனக்கே” (சிவ.36)

என்றருளிச் செய்கிறார்.

தூய நிலையாகிய சுத்த நிலையில் இறைவனின் பேரருள் விளக்க, ஆன்மா, தான் மலத்தால் பற்றப்பட்டிருப்பதையும் இறைவனின் பெருங்கருணையால் விடுதலை பெற்றதையும் அறிகின்ற அறிவைப் பெறும். எனவே, அத் திருவருளால் உணர்த்தப்பட்டால் அன்றி ஆணவமலம் உண்டு என்று உணர்வதும் அதன் உண்மையினைத் தெரிந்து கொள்வதும் அரிதாகும்.”

“ஏனைய பசு பாசங்களும் சிவஞானத்தாலன்றி (திருவருள்)
அறியப்படா” [28]

என்பது சிவஞான மாபாடியம்.

“சுடரால் இருள்தேடச் சொல்லார்கள் எந்தாய்
சுடரால் இருள்தேடச் சொன்னாய்” [29]

எனவரும் சதமணிக் கோவை ‘சிவஞானமாகிய திருவருட் சுடராலன்றி இருளாகிய ஆணவத்தை அறிந்துகொள்ள இயலாது’ என்று கூறும்.

“மலையின் முகட்டில் ஏறி நிற்பவனுக்குத்தான் மலைக்கு அப்பால் உள்ள பிரதேசம் கண்ணிற்படும். அதுபோலத்தான் அருள்வயப்பட்ட பின்னரே ஆணவத்தின் இருப்பு உணரப்படும்”[30] என்பார் தே.ஆ.ஸ்ரீநிவாஸன்.

இந்நிலையை, உணர்வாகிய திருவருள் எழுதலும் மலம் நீங்குதலுமான ***“உணர்வெழு நீக்கம்”*** [31] என்று இருபா இருபஃது கூறும். உணர்தல் என்பது அநுபூதி. தெரிதல் என்பது ஆராய்ச்சி. அதன் உண்மை அநுபூதி யுண்மையாகும். சகலத்தில் அந்நியத்தை உணர்தற்கும், அநந்நியத்தை அறியாமைக்கும் ஏது ஆணவ மல முண்மை. சுத்தத்தில் அநந்நியத்தை உணர்தற்கும் அந்நியத்தை அறியாமைக்கும் ஏது மல நீக்கமும் அருளுணர்ச்சியும் ஆம்.

“மலம் உண்டென்பது, சகலத்தில், தன்னோடு வேறின்றி நிறைந்த அறிவை அறியாமையாகிய எதிர்மறையானும் சுத்தத்தில், எல்லாஞ் சிவமயமாய் நின்ற தொன்மையை உணர்வதாகிய உடம்பாட்டாலும் அறியக்கிடத்தலைத் தெளிய யுணர்த்தியருளிய உமாபதி சிவத்தின் திறம் வாழ்த்தி வணங்கற் சீருடையது”[32] என்று புகழாரம் சூட்டுவர் காஞ்சி ஞானப்ரகாச சுவாமிகள்.

அடிக்குறிப்புகள்

1. சிவஞான போதம், 4ஆம் நூற்பா, ஏது.
2. சி. அருணைவடிவேலு முதலியார், சிவஞானபோத மாபாடியப் பொருள்நிலை விளக்கம், பக்.517, 523.
3. மணிமேகலை, பவத்திறம் அறுகெனப் பாவை நோற்ற காதை, வரி: 244 - 245
4. சங்கற்ப நிராகரணம், ஐக்கியவாதி சங்கற்ப நிராகரணம், 1-8, 23-24.
5. போககாரிகை, ப.68
6. தத்துவப்பிரகாசிகை, ப.20.
7. ஞானாமிர்தம், அகவல், 19.
8. சு.குஞ்சிதபாதம், ஆணவம் - கன்மம் - மாயை பற்றிய விளக்க உரைகள், பக். 4-5.
9. சிவஞான சுவாமிகள், சிவஞான பாடியம், ப.429.
10. தத்துவ விளக்கம், பா.19.
11. திருவானைக்கா புராணம், ஞானஉபதேசப்படலம், பா.10.
12. ஞானாமிர்தம், அகவல்.19

13. மாதவச் சிவஞான முனிவர் நூற்களஞ்சியம், சித்தாந்த மரபு கண்டன கண்டனம். ப.1607
14. சிவஞான சித்தியார், சுபக்கம், 315
15. போக காரிகை, தந்திரம், 136.
16. 4:92:4
17. திருவருட் பயன், 22
18. மேலது, 26.
19. மேலது, 25,
20. மேலது, 23.
21. K.sivaraman, Saivism in philosophical perspective, p.568.
22. ஔவை.சு.துரைசாமிப் பிள்ளை, ஞானாமிர்த மூலமும் பழைய உரையும், ப.122.
23. சிவஞான சித்தியார், சுபக்கம், 174.
24. சிவஞான சுவாமிகள் பொழிப்புரை, சிவஞான சித்தியார் சுபக்கம், ப.155
25. சிவஞான போதம், எடுத்துக்காட்டு வெண்பா, 27.
26. பரிபூரணானந்த போதம், பா.74
27. இருபா இருபஃது, 5
28. சிவஞான சுவாமிகள், சிவஞான பாடியம், ப.390
29. சதமணிக்கோவை, 61.
30. தே.ஆ.ஸ்ரீநிவாஸன், சிவப்பிரகாசம் சீர்மைக் கட்டுரை, ப.185
31. இருபா இருபஃது, 2:27
32. காஞ்சி ஞானப்ரகாச சுவாமிகள், சிவப்பிரகாசம் மூலமும் உரையும், ப.74

4.3.2 கன்மம்

கன்மம் என்பது வினை அல்லது தொழில். ஒரு பொருளின் அசைவே தொழில் என்றாகும். பொருளசைவு இல்லையானால் அதன் தொழிலும் இல்லையாம்.[1] அதனால் கன்மம் ஏதேனும் ஒரு பொருளைப்பற்றி நிற்குமேயன்றித் தனித்து நில்லாது. எனவே, கன்மத்தின் பற்றுக்கோடு மாயை ஆகும்.

“முழுதும் ஆன்மாவின் இச்சை ஞான கிரியைகளுக்குச் சிறிதும் அசைவில்லாமை யான் ஆண்டு ஆன்மாவுக்குக் கன்மம் இல்லையென்பதூஉம் இறைவனது திருவருட் சத்தியான் எடுக்கப்பட்டு மாயையோடு பொருத்தப்பட்ட வழி ஆன்மாக்கள் தம்மாட்டு அவ்விச்சா ஞானக் கிரியைகள் சிறிது விளங்கப் பெற்றமையானே ஆண்டு கன்ம முண்டாயிற்றென்பதூஉம் இதுகொண்டு அறியற்பாலனவாம்.” என்று கன்மம் பற்றிக் கருத்துரைப்பர் மறைமலையடிகள்.[2]

கன்மமும் மாயையும்

ஆன்மாவோடு ஆணவ மலம் அநாதியே அதனோடு பொருந்தியிருக்க அது பொருந்தவே ஏனைய மாயை கன்மமும் அன்றே பொருந்தி உளவாம். இவற்றுள் ஆன்மாவை முன் சூழ்ந்தது வினையோ, மாயையோ என்பதை,

“காயம் தனையன்றிக் கன்மமுள தாகாது
மாயை வினைஇன்றி உடல்வாராதிங்கு - காயுமறிவு
எந்தையே வெண்ணெய் இறையவனே மற்றிவற்றின்
முந்தையது அங்குஏதோ மொழி[3]

என்று சதமணிக் கோவை வினா எழுப்பும்

பின்னர், உடலுக்குக் காரணம் மாயையும் கன்மமும். இவற்றில் எது முந்தியது என்றால், ‘இரண்டும் பசுவின் இரண்டு கொம்புகள் போல இருக்கும்’ என்ற சுவையான விடையைத் தரும்.

கன்மம் தனித்து நில்லாது மாயையைப் பற்றிக்கொண்டே இருப்பதால் இரண்டும் இரட்டைகள். ஒன்றைச் சொன்னால் மற்றொன்றும் பெறப்படும். இரண்டையும் எடுத்துச் சொல்ல வேண்டும் என்பதில்லை. எனவே, முற்பிற்பாடு இன்றி இரண்டும் ஆதார ஆதேயமாக ஏக காலத்தில் ஆன்மாவுடன் கூடியிருக்கும். கன்மமும் மாயையும் ‘துவந்துவம்’ என்று இரத்தினத் திரயம் கூறுகிறது. துவந்துவம் - இரட்டை.[4] இதனை,

“அனாதி பந்தமொடு அநுபந்தமாவது மலமே”[5]

என்று தணிகைப் புராணமும்

“தொடர்ச்சியால் ஒன்றுக்கு ஒன்று தோன்றுதொட்டு அநாதி’[6]

என்று சிவஞானசித்தியாரும்,

“ஒருவாத ஞானத்தே இச்சை தொழில் ஒக்க
உள்ளதால் அநாதியால் உடன் மாயை வினைகள்
கருவாகி அதனாலே சகசமாகிக்
காரியமும் பயன்களுமாங் கருதிக் காணே”[7]

என்று சிவநெறிப் பிரகாசமும் கூறுகின்றன.

அநாதியே உயிர்க் குற்றமாகிய ஆணவ மலமே மற்றைத் தொடக்குகளுக்கும் காரணமாக அமைந்து மாயை, கன்மம் ஆகியன உயிரைப் பற்றுவதற்கு இடம் தருகிறது எனலாம்.

எனவே, ஆன்மா என்றுள்ளதோ அன்றே ஆணவ மலமும் அதனோடு சகசமாய் உள்ளதாம். அது உள்ளதாகவே, கன்மமும் மாயையும் அன்றே உள்ளனவாம். இவை மூன்றும் நெல்லினிடத்துள்ள முளையும் தவிடும் உமியும் போல அநாதியாகவே உள்ளன. இதனை,

“ஆணவம் மாயையும் கன்மமும் ஆம்மலம்
காணும் முளைஅத் தவிடுஉமி; ஆன்மாவும்
தாணுவைப் போலாமல் தண்டுலமாய் நிற்கும்
பேணுவாய் மற்றுநின் பாசம் பிரித்தே”[8]

என்று திருமந்திரமும்,

“மும்மலம் நெல்லினுக்கு முளையோடு தவிடு உமிப்போல்
மம்மர் செய்து, அணுவின் உண்மைவடிவினை மறைத்து நின்று
பொய்ம்மைசெய் போகபந்த போத்திருத்துவங்கள் பண்ணும்”

என்று சிவஞான சித்தியாரும் கூறுகின்றன.

முளை கன்மத்திற்கும், தவிடு மாயைக்கும், உமி ஆணவ மலத்துக்கும் ஒப்பாகும். முளை என்பது முளைத்தற் சத்தியைக் குறிக்கும். நெல்லில் உள்ள முளைத்தற்

சக்தியே முளையைத் தோற்றுவிக்கிறது. அச்சத்தி இல்லையேல் நெல் எக்காலத்திலும் முளைக்காது. எனவே, முளைத்தற் சத்தியே முளை தோன்றுவதற்கு முதற் காரணம் என்பது புலனாகும்.

இம்முளைத்தற் சத்திக்குத் துணைபுரிந்து நிற்பது அரிசியோடு ஒட்டிக் கொண்டுள்ள தவிடு ஆகும். தவிட்டை நீக்கிவிட்டால் முளைத்தற்சத்தி தன் காரியத்தைத் தோற்றுவிக்க மாட்டாது. எனவே, தவிடு, முளை தோன்றுவதற்குத் துணைக்காரணம் என்பது புலனாகும்.

இனி அம்முளைத்தற் சத்தியைக் கெடாது பாதுகாத்து அது முளையைத் தோற்றுவித்தற்கு நிமித்தமாக நிற்பது உமியாகும். இதனால் உமி நிமித்தகாரணம் என்பது புலனாகும். 'பண்டு முளைப்பது அரிசியே யானாலும் விண்டுமி போனால் விளையாதாம்" என்பது மூதுரை.

முளைத்தல் என்னும் காரியத்திற்கு முளைத்தற் சத்தி முதற் காரணமும், தவிடு துணைக் காரணமும், உமி நிமித்த காரணமும் ஆதல் போல, ஆன்மாவின் இன்ப துன்பங்களுக்குக் கன்மம் முதற்காரணமும், மாயை துணைக் காரணமும், ஆணவம் நிமித்த காரணமும் ஆகின்றன. இவ்வாறு, இம் மும்மலங்களும் ஆன்மாவிற்கு நெல்லிலே உண்டான முளை தவிடு உமிபோல அநாதியாகவே உள்ளன.[10]

இக்கருத்துக்களைக் கொண்டே சிவப்பிரகாசம்,

"............. உயிர் உண்டாவே
உளது மலம் மலமுளதாய் ஒழிந்த எல்லாம்
நெல்லின்முளை தவிடுமிபோல் அநாதியாக
நிறுத்திடுவர் இது சைவம் நிகழ்த்து மாறே" (சிவ.25)

என்று கூறும்.

கன்ம வகைகள்

கன்மம், 'காரண கன்மம்', 'காரிய கன்மம்' என இரு வகைப்படும். யாதொரு செயலும் வெளிப்படாது பொருளின்கண் உள்ள நிலையில் உள்ள கன்மம், 'காரண கன்மம்'; செயல் வெளிப்பட்டு நிகழும் நிலையில் உள்ள நிலையில் உள்ள கன்மம், 'காரிய கன்மம்' காரண கன்மமே 'மூலகன்மம்' என்று சொல்லப்படும். காரிய கன்மமே பொதுவாகக் 'கன்மம்' என்று சொல்லப்படும். "மூல கன்மம் ஆன்மாவுக்குச் சகசமாய் அநாதி நித்தியமாய் உள்ளது. இக் கன்மத்தை, 'கார் மணம்' என்றழைப்பார் ஸ்ரீநந்தி சிவாக்கிர யோகிகள்.[11]

காரண நிலையதாகிய இம் மூல கன்மத்தில் 'நன்மை, தீமை' என்ற வேறுபாடு இல்லை. காரிய கன்மத்தில்தான் அவ்வேறுபாடு உள்ளது. சமய நூல்களில், 'இரு வினை' என்றும், 'புண்ணிய பாவங்கள்' என்றும் சொல்லப்படுவன காரிய கன்மங்களையேயாம்.

ஆன்மா தனது செய்வோனாம் தன்மையினால் ஒரு செயலைச் செய்யுங்கால் நிகழ்வது தூல கன்மம். இது, 'புலப்படு வினை' எனப்படும். அச்செயல் முடிந்தபின் அது தூல நிலை நீங்கிச் சூக்கும நிலையை அடைந்து நிற்கும். அது 'புலப்படா வினை' எனப்படும்.

'புலப்படும் வினை', 'நல்வினை, தீவினை' என இரண்டு வகையாய் அமையும். 'புலப்படாத வினை' 'புண்ணியம், பாவம்' எனப் பெயர் பெறும். புலப்படாத வினைகளே இன்பமும், துன்பமும் ஆகித் தம்தம் பயன்களைத் தம்மைச் செய்த ஆன்மாக்களுக்கு கொடுக்கும்.

வினைகள் மூவகையாக வைத்துப் பேசப்படும். அவை, ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்தம் ஆகும்.

வினைகள் யாவர்க்கும் புலப்படும் நிலையில் 'ஆகாமியம்' எனப்படும். ஆகாமியம் என்பதற்கு 'விரும்பிச் செய்யப்படுவது' என்பது பொருள். இது தூல கன்மம். தூல கன்மம் தூல நிலை நீங்கி, சூக்குமமாய்ப் புலப்படா நிலையில் நிலைத்திருக்கும்பொழுது 'சஞ்சிதம்' எனப்படும். சஞ்சிதம் என்பதற்கு 'நன்கு பெறப்பட்டது' என்பது பொருள். இது சூக்கும கன்மம். புலப்படா நிலையிலிருந்து பயனாய் வந்து இன்ப, துன்பங்களைக் கொடுக்கும்பொழுது 'பிராரத்தம்' எனப்படும். பிராரத்தம் என்பதற்கு 'நேர்படுவது' என்பது பொருள். இது அதி சூக்கும கன்மம்.

இம் மூன்றையும் மூன்று பெண்களாக உருவகித்து, அதற்கு 'மொய்ரை' (Moirai) என்று பெயரிட்டனர் கிரேக்கர்கள். இதனை கி.மு. 8ஆம் நூற்றாண்டில் ஹெசியட் (Hesiod) என்பவர் இம்மூன்று பெண் தெய்வங்கள் மூன்று வினைகளைச் செய்வதாகக் குறிப்பிடுகிறார். Zeus ன் மூன்று மகள்களான கிளாத்தோ (Clotho) மனித வாழ்க்கையாகிய நூலை நூற்பதாகவும் (ஆகாமியம்) லாட்சிஸ் (Lachesis) அந்த நூலை அளப்பதாகவும் (சஞ்சிதம்) அட்ரோபஸ் (Atropos) அந்த நூலை அறுப்பதாகவும் (பிராரத்தம்) குறிப்பிடுகிறார்.[12] எனவே, ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்த வினைகள் உலகளாவிய சிந்தனைகளாகத் திகழ்ந்தன என்று கூறலாம். (பிற்சேர்க்கை பார்க்க, ப.387)

பிரவாக நித்தம்

ஆகாமியமே பின் சஞ்சிதமாகிப் பின்பு பிராரத்தமாய் வரும். வினைப் பயன்களை நுகரும் முறையிலேயே புதிய வினைகள் தோன்றி அடுத்த பிறவிக்கு வித்தாய் அமையும். இங்ஙனம் வினையால் பிறப்பும், பிறப்பால் வினையும் சுழற்சியாக வருகின்றன.

கன்மமும் உயிர்களுக்குக் கிடைக்கிற தூல உடல்களுக்குத் துணைக் காரணமாகி, பலவித அநுபவங்களாகி நுகரும் பொழுது, அது அழியும் போது, மற்றொன்று தோன்றி நிற்க, இடையறாது என்றும் உள்ளதாகவே உள்ளது. எப்படியெனில் ஆற்றில் ஓர் வெள்ளப்பெருக்கில் ஒரு வினாடியில் இருக்கும் நீர், மறுவினாடியில் இருப்பதில்லை. இது 'பிரவாக நித்தம்' என்றழைக்கப்படும். ஆற்றில் வரும் நீர்ப்பெருக்குப் போல வினைப் பெருக்கின் தொடர்ச்சி நீளுகிறது. இங்ஙனம்

கன்மமும் முடிவின்றி இருப்பதால் 'நாசோற்பத்தி' அல்லது 'பிரவாக அநாதி' என அழைக்கப்படும். அதாவது 'நாசத்தில் உற்பத்தியாவது' என்பதாம்.

எனவே, கன்மம் எண்ணற்றனவாகி ஒவ்வொரு ஆன்மாவையும் பற்றி (சிருஷ்டி) மனம், வாக்கு, செயல்கள் என்னும் மூன்று முறைமைகளால் செய்யப்படும்பொழுது புத்தி தத்துவத்தைப் பற்றி நிற்கும் (திதி) சங்காரகாலத்தில் ஆன்மாக்கள் மாயையில் ஒடுங்கும்பொழுது கன்மமும் அவ்வுயிர்களை விட்டு நீங்காது அம்மாயையில் ஒடுங்கும் (சங்காரம்). இச்செய்திகளை உள்ளடக்கியே,

"நண்ணியிடும் உருவதனுக்கு ஏது ஆகி
நானா போகங்களாய் நாசோற் பத்தி
பண்ணிவரும் ஆதலால் அனாதி ஆகிப்
பலவாகி அணுக்கள் தொறும்படர்வது ஆகி
எண்ணிவரும் மனவாச கன்மத்தால் இயற்றும்
இயல்பினதாய் மதிகதமாய் இருபயனாம் பாவ
புண்ணியமாய்ப் புலர்காலை மாயை மேவிப்
பொருந்தும் இது கன்ம மலம் புகலும் ஆறே" (சிவ.28)

என்று சிவப்பிரகாசம் கூறும்.

பிராரத்தம், ஆகாமியம்

பிராரத்தம் என்பது சஞ்சிதத்திலே புசிக்கப்பட்டது போக வேறொரு உடலை எடுக்கவைத்துச் 'சாதி, ஆயுள், போகம்' ஆகியவற்றைக் கொடுக்கும் நிலை. இவை தமிழில் 'இனம், வாழ்நாள், துய்த்தல்' எனப்பெயர்பெறும். இதனை,

"கன்மநெறி திரிவிதம் நற்சாதி ஆயுப் போகக்
கடன்அதுஎன வரு மூன்றும்" (சிவ.29)

என்று சிவப்பிரகாசம் கூறும்.

ஆனால் சித்தியார் இதனை 'பேறு, இழவு, இன்பமோடு, பிணி மூப்புச் சாக்காடு என்னும் ஆறும் முன் கருவுள் பட்டது'[13] என்று ஆறாகக் கூறும்.

'பிராரத்தம்' பிறவிக்குத் தொடர்புடையது ஆதலால், இதுவே 'ஊழ்' என்று குறிக்கப்பெறும். ஆன்மாக்கள் தமது வாழ்க்கையில் அடைகின்ற இன்ப துன்பங்கள் அனைத்திற்கும் இந்த ஊழ்வினையே காரணம். இந்த வினை எந்த வரிசையில் செய்யப்பட்டதோ அந்த வரிசையில் வரும் என்பது இல்லை. வினைகளின் 'வன்மை, மென்மை'க்கேற்ப முன்பின்னாக வருதல் உண்டு.

"தொடங்கும் அடைவில் அடையாதே தோன்றும் மாறி" (சிவ.29)

என்பது சிவப்பிரகாசம்.

இவ்வினை, பயன்களைத் தரும் நிலையில் ‘ஆதி யான்மிகம், ஆதி பௌதிகம், ஆதி தைவிகம்’ என மூவகைப்படும். இவை ‘தாபத் திரயம்’ எனப்படும். இதனை,

“மூவகைத் துக்கத்து முடியும்
மாவகை வீழ்த்த மன்னுயிர்ப் பரப்பே” [14]

என்றும்,

“ஆதிதைவிகம் ஆதி பௌதிகம்
ஆதி ஆத்தியான்மிகம் என ஓதிய
துக்கம் மூன்று”[15]

என்றும் ஞானாமிர்தம் கூறும். மேலும், ‘ஆதி தெய்விகம்’ எனப்படுவது கருவினுள்பட்டபோதும், பிறப்பிலும், இறப்பின்போதும் நேர்கின்ற துயரங்கள்; ‘ஆதிஆன்மிகம்’ என்பது பிற உயிர்களாலும் விலங்குகளாலும் பறவைகளாலும் தன்னாலும் வருகின்ற துயரங்கள்; ‘ஆதி பௌதிகம்’ எனப்படுவது ஐம்பூதங்களிலிருந்து தோன்றி விளைகின்ற துன்பங்கள் எனவும் விளக்கிச் சொல்கிறது.[16]

“உடம்பான் மூவகைத் துன்பங்களையும் அநுபவிக்கும் தோறும் அதன் மேற் காதலை உடைத்து உயிர்” என்பார் பரிமேலழகர். ***‘துன்பம் உழத்தொறுஉம் காதற்றுயிர்’*** என்பது குறள்.[17]

தன்னால் பெருந்துன்பம் விளையினும் உயிர் தன்னையே காதலித்து உறையுமாறு செய்து, வித்தும் விளைவுமாய்த் தோன்றி அதனைப் பிணித்து நிற்பது பற்றி, உடல் முதலிய பந்தத்தை **‘வான்பிணி’** என்பார் வாகீசமுனிவர். இக்கருத்துகளை,

“தன்மைதரும் தெய்விகம் முற்பவுதிகம் ஆன்மிகம் ஆம்
தகையில் உறும் அசேதனத்தாலும் சேதனத்தாலும் சாரும்
நன்மையொடு தீமைதரு சேதனனுக்கு இவண்ஊண்
நாடில் அதன் ஊழ்வினையாய் நணுகும் தானே” (சிவ.29)

என்று சிவப்பிரகாசம் விளக்கி நிற்கும்.

புண்ணியமும் பாவமும்

மனத்தாலும் வாக்காலும் காயத்தாலும் நல்வினையும், தீவினையும் செய்யப்படும். ஒரு பாவப் பயன் இன்னொரு புண்ணியத்தைச் செய்வதால் தொலையாது. ஆராய்ந்து பார்த்தால் அந்த பாவப் பயனையும் புண்ணியப் பயனையும் அநுபவித்தல் தவறாது. அப் பாவ புண்ணியங்களின் ஒரு பாவத்துக்கு ஒரு பிராயச்சித்தத்தால் நீக்கம் உண்டு என்று வைதிக சைவப் பிரமாண நூல்கள் சொல்லியுள்ளன. அப் பிராயச்சித்த முறையை நல்லாசிரியன் உடனிருந்து முறைப்படி செய்வான் ஆயின் அவனைப் பற்றிய பாவம் நீங்கும். இப் பாவ நீக்கம் கைம்மாறு கொடுத்தலால் பெறுகிற முறையும் அந்நூல்களில் உண்டு. பிராயச்சித்தம் செய்யாமலிருந்தும் பாவம் நீங்குதல் பலிதமாகும்.

சிவாகம வழி ஒழுகினால் அப் பாவங்கள் குறையும். அப் பிராயச்சித்தம் முதலியன செய்தும் பிறப்பில் குறையாமல் உள்ள வினைகள் பின்வரும் பிறப்பின் புசிப்புக்கு வரும். இதனை,

"உற்றதொழில் நினைவுஉரையின் இருவினையும் உளவாம்
ஒன்றுஒன்றால் அழியாது ஊண் ஒழியாது உன்னில்
மற்றவற்றின் ஒருவினைக்கோர் வினையால் வீடு
வைதிக சைவம் பகரும் மரபில் ஆற்றப்
பற்றியது கழியும் இது விலையால் ஏற்கும்
பான்மையுமாம் பண்ணாது பலிக்கும் முன்னம்
சொல்தரு நூல் வழியின் வரின் மிகுதி சோரும்
சோராது அங்கு அது மேலைத் தொடர்ச்சியாமே" (சிவ.31)

என்று சிவப்பிரகாசம் விளக்கி நிற்கும்.

"உற்றநோய் நீக்கி உறாஅமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல்"

என்னும் குறளுக்கு, 'தெய்வத்தானாக மக்களானாகத் தனக்கு வந்த துன்பங்களை நீக்குமாறு அறிந்து நீக்கி, பின் அப்பெற்றியன வாராவண்ணம் முன் அறிந்து காக்கவல்ல தன்மையினை யுடையாரைப் பேணிக் கொள்ள வேண்டும்" என்று பரிமேலழகர் உரை செய்வர்.[18]

இக் குறளின்படியே, "குருவானவர் சீடனின் பக்குவ நிலைக்கு ஏற்ப தீட்சை செய்து கன்மங்களை நீக்கும் முறையை அறிவித்து அதனால் அதனை நீக்கியருள்வார்" என்பதே இச் சிவப்பிரகாசத்தின் கருத்தாகும்.

இச்சிவப்பிரகாசக் கருத்தையே,

"புரிதரும் முறையில் பிறழ்ந்து உயிர் தெய்வம்
பூதம் என்று இவற்றினுள் ஒன்றால்
மருவுழி விழைந்த விழைந்தில விழைந்தது
அன்றி வேறாவன என்னத்
திரிவிதப் படுவ பயனிழி வினைகள்
தீர்வு செய்யினும் நுகர்ந்தன்றி
இரிதரா முழுதும் இது விலையானும்
இயையும் பண்ணாமையும் பலிக்கும்"[19]

என்று கச்சியப்ப முனிவர் தணிகைப்புராணத்தில் அருளிச்செய்வார்.

பேராமல் ஊட்டும் பிரான்

ஆன்மா தொன்மைக் காலம் தொட்டுத் தொடர்ந்து வருகின்ற இரு வினைப் பயன்களுக்கு ஏற்ப ஓர் உருவத்தைப் பற்றிக்கொண்டு புலன் வழியாக உணர்ந்து வருகின்ற இயல்பு உடையது.

"..... தொல்லை வினையின் தன்மைக்கு
ஒத்ததோர் உருவம் பற்றிப் புலன்வழி உணர்ந்து நிற்கும்"[20]

என்றும்,

"பல்லாவுள் உய்த்துவிடினும் குழக்கன்று
வல்லதாம் தாய்நாடி கோடலைத் - தொல்லைப்
பழவினையும் அன்ன தகைத்தேதற் செய்த
கிழவனை நாடிக் கொளற்கு" [21]

(பலபசுக்கள் நடுவே கன்று தன் தாயைத் தேடி எப்படி அடைகின்றதோ அப்படியே ஒருவன் செய்த வினைகள் அவனை வந்தடையும்) என்றும், பிறசமயங்கள் வினைப்பயனை உயிர்கள் அடையும் முறையைக் கூறுகின்றன.

வினைகள் அறிவில்லாத சடப்பொருள்கள். ஆதலின் அவைகள் தாமாகவே தம்மைச் செய்தவரைச் சென்றடைந்து பயனை அளிக்கமாட்டா. ஆன்மா அறிவுடையதாயினும் அதன் அறிவு அறியாமையால் மூடப்பெற்று விளங்காது கிடத்தலின் அதுவும் தான் செய்த வினையின் பயனை அறிந்து எடுத்துக்கொள்ள மாட்டாது. எனவே, இறைவனே வினைகளின் பயனைக் கூட்டுவிப்பான். வினைகளைச் செய்வதற்கு இடமாகிய உடம்பில் பொருந்தி நின்று வினைகளைச் செய்த ஆன்மாக்கள் அவ் வினைகளின் பயனை இறைவனே கூட்டுவிக்க அவற்றை நுகரும்.

இறைவனே ஆன்மாக்கள் செய்யும் வினைகளை நடுவண் நின்று அவ்வவ் வினைகளுக்கு உரிய பயனை உரிய காலத்தில், உரிய இடத்தில், உரிய உடம்பில் கூட்டுவிப்பான். இவ்வாறு இறைவன் சேர்ப்பிக்கவில்லையென்றால், வினைப் பயன்களை உயிர்களோடு கூட்டுவிப்பதற்கு வேறு யார்தாம் உளர்? ஒருவரும் இல்லை. எனவே, இதுவும் ஆன்மாக்களின்மீது இறைவன் கொண்டுள்ள கருணையாகும்.

".... அவ்வினையைப்
பேராமல் ஊட்டும் பிரானின் நுகராரேல்
ஆர்தாம் அறிந்து அணைப்பார் ஆங்கு'[22]

என்பது சிவஞான போதம்.

"வாக்கும் மனமும் போக்கு உளதனுவும்
சொல்லும் நினைவும் செய்யும் செயலும்
நல்லவும் தீயவும் எல்லாம் அறிந்து

முறைபிறழாமல் குறைவு நிறைவு இன்றாய்க்
காலமும் தேசமும் மால்அற வகுத்து
நடுவுநின்று அருத்தலின் நடுவன் ஆகுதியே”[23]

என்று இருபா இருபஃது கூறும்.

இதனை வழிமொழிவார்போல,

“இன்னவினை இன்னதலத்து இன்னபொழுது இன்னபடி
இன்னதனால் எய்தும்என அறிந்தே - அன்னவினை
அன்னதலத்து அன்னபொழுது அன்னபடி அன்னதனால்
பின்னமறக் கூட்டும் பிரான்”[24]

என்று குருஞான சம்பந்தர் அருளிச் செய்வார்.

“வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்த லரிது”

என்னும் குறளுக்குப் பரிமேலழகர், “ஓர் உயிர் செய்த வினையின் பயன் பிறிதோர் உயிரின்கண் செல்லாமல் அவ் உயிர்க்கே வகுத்தலின், ‘வகுத்தான்’ என்றார்” என்று உரை வகுத்திருப்பது இங்கு ஒப்புநோக்கத் தகும்.[25]

மேலும், இதற்கு “விளக்குத் தானே தோன்றமாட்டாது. விழிகளும் தமக்கின்றிமையாத விளக்கினைப் படைத்துக்கொள்ளும் வழி அறியமாட்டா. அவ் உயிரினை வருத்தும் இருள்கெடும்படி ஒருவன் விளக்கினை உண்டாக்க அவ் விழிகட்கு வழங்கினாற்போன்று ஒவ்வொரு உயிருக்கும் வினைக்கேற்ப உடலை இறைவன் தருவான்” என்று புதிய உவமை கூறி விளக்குகிறது தணிகைப்புராணம்:

“விளக்கது தானே தோன்றுத லில்லை
விழி விளக்காக்கு மாறறியா
துளக்கிருள் இரிய விளக்கினை யொருவன்
ஏற்றியிங்கு அளித்தென யாக்கை
அளக்கரும் பரமன் அளித்தலும் விளக்கின்
அலர்விழி பொருளினுற் றாங்குக்
களக்குறும் வினையிற் கதித்து உடல்ஈட்டிக்
கறங்கெனச் சுழல்வன உயிரே” [26]

அதனாலேயே இறைவன் படைத்த இவ் வுலகம் ஒருவிதமாய் இல்லாமல் பறவை, மிருகம், மனிதர் எனப் பலவிதமாய் இருப்பது அவரவர் செய்த வினைக்கேற்ப முதல்வன் ஆன்மாக்களுக்கு விதித்தனவாகும். இதனை,

“படைத்தது ஒரு படியின்றிப் பறவை பசு நரராய்ப்
பண்ணியது என் முன்னைவினைப் பான்மை என்பர்

அடுத்தவினை உளதாயின் இறைஏன் என்னில்
அசேதனம் மற்று அவை ஆவிக்கு அமைத்ததாகும்
எடுத்தவினை உருஉறுவது உயிரேல் தானே
இருவினைக்குத் தக்கவுடல் எய்தும் என்னில்
சடத்திரளும் அகர்த்தாவாய் அறிவொன்றில்லாத்
தன்மையனும் கூடவொரு சங்கை யின்றே" (சிவ.24)

என்று சிவப்பிரகாசம் கூறும்.

"செய்வினையும் செய்வானும் அதன் பயனுங் கொடுப்பானும்
மெய்வகையால் நான்காகும் விதித்தபொருள் எனக்கொண்டே
இவ்வியல்பு சைவநெறி அல்லவற்றுக் கில்லை என
உய்வகையாற் பொருள்சிவன் என்று அருளாலே உணர்ந்தறிந்தார்" [27]

என்பது சேக்கிழார் அருளிய பெரியபுராணம்.

"ஏனை எச்சமயத்தினுக்கும் இல்லாது சைவத்திற்கு மட்டும் உளதாகிய தனிச்சிறப்பு இலக்கணத்தை எடுத்துக்காட்டிய சிறந்த இடம் இஃதாம். புறச்சமயத்தினின்றவாறே ஒருவர் ஒப்புநோக்கி ஆய்ந்து கண்ட முடிபாவது இஃது; ஆதலின், இது மேலும் சிறந்ததாம்; பர சமய நிராகரணமும் சிவ சமயத் தாபனமும் ஒருங்கே காணப்படும் இச்சிறந்த பொருளை ஈண்டுச் சாக்கியர் வாயிலாக வெளிப்பட வைத்து இப் புராணத்தில் விளக்கிய தகுதியும் பெருமையும் உய்த்துணர்ந்து களிக்கற்பாலது" என்று சி.கே.சுப்பிரமணிய முதலியார் இதற்குக் களிப்புரை அருளினார்.[28]

அதாவது, வினை ஒப்பாத சமயங்கள்; வினை செய்பவனாகிய ஆன்மாவை ஒப்பாத சமயங்கள்; வினைப் பயனை ஒப்பாத சமயங்கள்; வினைப்பயனை அவ்வவ்வுயிர்கள்பாற் சேர்ப்பானாகிய இறைவனை ஒப்பாத சமயங்கள் என எல்லாச் சமயங்களின் கொள்கைகளும் மறுக்கப்பட்டன.

செய்வான், செய்வினை, அதன்பயன், சேர்ப்பவன் என நான்காகிய சைவ நெறியின் பொருட்டுணிபு ஏனைய நெறிகள் எவற்றினுக்கும் இல்லையெனவும், சிவன் பொருள் என்றும், சிவநெறியொன்றே உண்மைநெறி யென்றும் அருளாலே அநுபவமாகப் பெற்றார் சாக்கிய நாயனார்.

இதனைக் கருத்தில் கொண்டே, சேக்கிழாரின் புகழ்பாடிய உமாபதி சிவனாரும், தம் திருவருட் பயனில்,

"செய்வானும் செய்வினையும் சேர்பயனும் சேர்ப்பவனும்
உய்வான் உளன் என்று உணர்" [29]

என்று அருளிச்செய்தார்.

இதன் மூலம் சைவசித்தாந்தத்தின் வினைக்கொள்கை தெளிவாக விளக்கப்பட்டது.

CENTRE FO STUDIES
Puducherry

4.3.2 கன்மம்

1. மறைமலையடிகள், சிவஞான போத ஆராய்ச்சி, ப.31
2. மேலது, ப.31
3. சதமணிக் கோவை, 60
4. ர.வையாபுரி, கச்சியப்ப முனிவரின் சைவ சித்தாந்தம், (2), பக்.533-534
5. தணிகைப்புராணம், நந்திஉபதேசப் படலம், பா.96
6. சிவஞான சித்தியார், சுபக்கம், 100
7. சிவநெறிப் பிரகாசம், 36
8. திருமந்திரம், 2159
9. சிவஞான சித்தியார், சுபக்கம், 176
10. ஆ.ஆனந்தராசன், திருவருட்பயன் : விளக்கஉரை, பக்.143-144
11. ஸ்ரீ நந்திசிவாக்கிரயோகிகள், சிவநெறிப் பிரகாசம், ப.67
12. "Three fates as clotho who spins the thread of life; Lachesis, who measures it; and Atropos, Who serves it; he says they are daughters of zeus" - The Encylopadiea Americana, 1829 Vol, II.P.54
13. சிவஞான சித்தியார், சுபக்கம், 99
14. ஞானாமிர்தம், 25
15. மேலது, 26
16. மேலது, 26
17. பரிமேலழகர் உரை, ப.287, குறள்.940
18. மேலது, ப.140, குறள்.442
19. தணிகைப் புராணம், நந்திஉபதேசப் படலம், 115
20. சிவஞான சித்தியார், பரபக்கம், பட்டாச்சாரியன் மதம், ப.189
21. நாலடியார், 101
22. சிவஞான போதம், எடுத்துக்காட்டு வெண்பா, 11

23. இருபா இருபஃது, 16:10-16

24. ஸ்ரீ குருஞானசம்பந்தர் அட்டகம், சிவபோக சாரம், 94

25. பரிமேலழகர் உரை, ப.120, குறள்.377

26. தணிகைப் புராணம், அகத்தியன் அருள்பெறு படலம், பா.361

27. பெரிய புராணம், 3640

28. சி.கே.சுப்பிரமணிய முதலியார், திருத்தொண்டர் புராணம், 6ஆம் தொகுதி, ப.652

29. திருவருட் பயன், 53

4.3.3 மாயை

மாயா என்னும் சொல்லில், 'மா' என்பது ஒடுங்குதல்; 'யா' என்பது வருதல்; மாயா என்பது 'உலகம் ஒடுங்குதற்கும் திரும்புவதற்கும் இடமாய் உள்ளது' என்பது பொருள். வடமொழியில் ஆகார ஈறாய் உள்ளது. (மாயை - மாயா) தமிழில் ஐகார ஈறாய் வருதலாகிய முறைபற்றி 'மாயா' என்பது தமிழில் 'மாயை' எனப்படுகின்றது.[1]

தூலமாய் நின்ற பொருள்கள் படிமுறையாக, ஒன்றைவிட ஒன்று சூக்குமமாய் மாறிக்கொண்டு போகும்பொழுது முடிந்த சூக்கும நிலையே 'மாயை' எனப்படுகின்றது. எனவே, தூலமாய் நிற்கின்ற காரியப் பொருள்கள் அந்நிலையினின்றும் நீங்கிச் சத்தி மாத்திரமாய் நிற்பதே மாயையாகும். இச்சத்தி, சட சத்தி ஆம். இறைவனது சத்தியும் உயிர்களினுடைய சத்தியும் சிற் சத்தி.

"..... ஓதும் மாயா
காரியம் நிற்பது முடிவிற் சீரிய
சத்திவடிவிற் பொற்பொடு புணரும்
தொடங்கற் காலை இடம்பட விளங்கும்
ஆருயிர் ஏர் இசைப் போகம்
சீரிதின் அருந்தத் திகழ்தனு முதலே" [2]

என்பது ஞானாமிர்தம்

'சங்கார காலத்தில் மாயா காரியம் தத்தம் சத்தி வடிவிலே உபாதானத்திலே யொடுங்கும். மீளத் தோன்றுவதாகிய புனருற்பவ காலத்திலே ஆன்மாக்கள் போகத்தை நன்றாகப் புசித்தற்கு ஏதுவாய், தனு கரண புவன போகங்கள் தோன்றுவதற்கு இடமாகும். மகாபிரளயத்தில் மாயையைப் பற்றுக்கோடாகக்கொண்டு சத்தி ரூபங்களாக நிற்கும் காரியங்கள், சிருட்டிக் காலத்தில் பொருள் ரூபத்தோடு காரியத்தின் பொருட்டுத் தொழிற்படுகின்றன' என கிரணாகமம் கூறுவது இங்குச் சிந்திக்கத் தக்கது.[3]

மாயை - முதற் காரணம்

'வினைக்கு மாயையே பற்றுக்கோடு' என்று கன்ம இயலில் முன்பு சொல்லப்பட்டுள்ளதுபோல், மாயையைப் பற்றுக்கோடாகக்கொண்டு இன்ப துன்பமாகிய வினைப் பயன்கள், மாயா காரியம் ஆகிய உலகத்துப் பொருள்களின் வழியாகவே ஆன்மாவுக்கு வருகின்றன.

வினை யிருத்தற்கும் வினையின் பயனாகப் போக்குவரவு புரிய ஆன்மாவிற்குத் தனு கரண புவன போகங்கள் வேண்டும். தனு - பருவுடம்பு; கரணம் - உடம்பிலுள்ள பொறிகள்; புவனம் - அந்த உடம்புகள் இயங்குவதற்கு அமைந்த இடம்; போகம் - ஆன்மாக்கள் தம் தநு கரணங்களைக் கொண்டு இன்பம் நுகரும் நுகர்ச்சிப் பொருள்கள். இவை அனைத்தும் காரியப் பொருள்களாய் இருத்தலின், இவற்றுக்கு முதற்காரணமாக மாயை வேண்டும்.

காரியப் பொருளுக்கு மூன்று காரணங்கள் இன்றியமையாதன. குடம் வனையப்படுவதற்கு மண் முதற் காரணம். அதனை வனைவதற்கு உதவியாக இருக்கிற சக்கரம் போன்றவை துணைக் காரணம். குடத்தை வனைபவனே நிமித்த காரணன். மற்றவை யெல்லாம் நிரம்ப இருப்பினும் எந்த ஒன்று இல்லாமல் காரியம் தோன்றாதோ அந்த ஒன்றே முதற் காரணம் எனப்படும். குடம் செய்வதற்கு களிமண் என்ற ஒன்று இல்லையேல் குடம் தோன்றாது. அதுபற்றியே களிமண் முதற் காரணம் எனப்படுகிறது. இவ்வுண்மை பிற காரியப் பொருள்களுக்கும் பொருந்தும்.[4] எனவே, உலகிற்கு முதற் காரணம் மாயை; துணைக் காரணம் இறைவனின் சிற் சத்தி; இறைவன் நிமித்த காரணன் ஆவான். இதனை,

> "காரிய காரணங்கள் முதல்துணை நிமித்தம் கண்டாம்
> பாரின்மண் திரிகை பண்ணுமவன் முதல் துணை நிமித்தம்
> தேரின் மண்மாயை ஆக திரிகைதன் சத்தி ஆக
> ஆரியன் குலாலனாய் நின்று ஆக்குவன் அகிலம் எல்லாம்" [5]

என்று சிவஞான சித்தியார் விளக்கும்.

கச்சியப்பரும்,

> "காரணம் மூன்றின் அன்றிக் காரியம் நிகழ்வதின்றாம்
> காரணம் அண்டங்கட்குக் கருதுறின் மாயைசத்தி
> காரணம் இல்லா ஈசன் முதல் துணை நிமித்தம் காண்பர்
> காரணமாயை நல்கும் காரிய தத்துவங்கள்" [6]

என்று பேரூர்ப் புராணத்தில் குறித்திடுவர்.

சூனியமே முதற்காரணம்

'குடத்திற்கு மண்போல உலகத்திற்கு முதற் காரணமாய் உள்ளது மாயை' எனும் சைவ சித்தாந்தக் கருத்தை மறுத்து, புத்தரில் ஒரு சாராராகிய மாத்தியாமிகர்,

“உலகிற்கு முதற் காரணம் யாதொன்று மில்லை; எனவே, வெறும் சூனியத்தில் (பாழில்) இருந்தே உலகம் தோன்றும்” என்பர். வெறும் பாழிலிருந்து யாதொன்றும் தோன்றாது என்றல் பொருந்தாது. ஏனெனில், வானத்திலிருந்து சில வேளைகளில் மண்மாரி பொழிகின்றது. இந்திரசாலம் செய்பவர், முன்பு வெறுமையாக இருந்த இடத்தில் சில பொருள்களை அதிசயமாகக் காட்டுகின்றனர். அதனால், வெறுமையிலிருந்து பொருள்கள் தோன்றுதல் அறியப்படும் என்பர்.

காரியப்பாட்டிற்கு ‘இல்லது தோன்றும்’ எனக் கூறுகின்ற அசற்காரியம் பொருந்தாது. அதனால், வெறுமையிலிருந்து யாதொரு பொருளும் தோன்றுதல் இயலாது. ஆகவே, சூனியம் முதற் காரணம் என்ற வாதம் பொருந்தாது. மேலும், பிருதிவி தத்துவம் எனப்படும் மண் தத்துவத்தின் ஆதாரம், நூறுகோடி யோசனை அளவு வியாபித்து உள்ளது என ஆகமங்களில் சொல்லப்படுவதால், வானில் மண் பருமை வடிவில் இல்லையாயினும் நுண் வடிவில் உள்ளது. எனவே, மண்மாரி பெய்வதற்கு அதுவே முதற் காரணமாகும். இந்திரசாலம் புரிவோர் முதற் காரணப் பொருளை மந்திரவலியால் காண ஒட்டாது மறைத்தலால், அவரால் காட்டப்படும் பொருள்கள் வெற்றிடத்திலிருந்து தோன்றுவனபோலத் தெரிகின்றன. எனவே, இவ்விரண்டும் சற்காரிய அடிப்படையில் காரண காரிய முறையிலேயே அமைந்துள்ளன. எனவே, காரியப் பொருளாய் இருக்கும் உலகத்திற்கு மாயையே முதற் காரணப் பொருளாகும்.[7]

பரமாணு முதற் காரணம்

சூனிய முதற் காரண வாதத்தை மறுத்துத் தார்க்கிகர் “எண்ணிறந்தனவாய் உள்ள பரமாணுக்களே உலகிற்கு முதற் காரணம்’ என்று கூறுவர்.

“பரமாணுக்கள் நம் கண்ணுக்குத் தோன்றமாட்டா. இரண்டு பரமாணுக்கள் ஒன்றுசேர்ந்து இரட்டை அணுக்கள் ஆகும்; இரட்டை அணுக்கள் மூன்று சேர்ந்து மும்மை அணுக்கள் ஆகும்; மும்மை அணுக்கள் நான்கு சேர்ந்து நான்மை அணுக்களாகும். இவ்வாறு அணுக்கள் சேர்ந்து சேர்ந்து வருவதால் பொருள்கள் தோன்றும். அந்த அணுக்கள் சேர்ந்த முறையிலே பிரிந்து போவதால் பொருள்கள் அழியும்” என்பது அவர் கருத்து. மாயை உண்டு என்பவர்களும் பொருள்கள் தூலமாய் நின்ற நிலையினின்றும் நீங்கிச் சூக்குமமாய் நிற்கும் நிலையே ‘மாயை’ என்பர். இதனால் அவர்கள் குறிப்பிடுவதும் பரமாணுவே ஆகிறது. ஆகவே, பரமாணுக்களே முதற் காரணம் என்பதை விடுத்து மாயை முதற் காரணம் என்பதில் பொருள் இல்லை என்பர்.

“அவயவம் உடைய பொருள்கள் யாவும் காரியமே” என்பது தருக்க மதத்தினர் கொள்கை. அணுக்கள் அவயவம் உடையன. ஆயினும், இங்கு அவற்றிற்கு அவயவம் இல்லை என்று கூறுவது அவர் கொள்கைக்கே முரணாய் முடியும். இரண்டு அணுக்கள் ஒட்டிப் பொருந்துதலை சையோகம் - அதாவது அவ்வியாப்பிய விருத்தி (ஏகதேசத்தில் பொருந்துதல்) என்பர். ஏகதேசம் அவயமாதல் விளங்கும். எனவே, சடமாகவும்,

பலவாகவும் உள்ள பரமாணுக்களைக் காரணம் என்றல் பொருந்தாது. எனவே, பரமாணு முதற் காரணம் ஆகாது.[8]

பிரகிருதியே முதற் காரணம்

சாங்கிய மதத்தோர், ‘சாத்துவிகம், இராசதம், தாமதம்’ என்னும் முக்குணங்களையே வடிவாகவுடைய மூல பிரகிருதியே உலகிற்கு முதற் காரணம்’ என்பர். எனவே, அதற்கு வேறாக மாயை என ஒன்றை முதற் காரணமாகக் கூற வேண்டியது ஏன்? என்று வினவுவர்.

“முக்குணங்களும் சமமாய் இருந்த நிலையே மூலப் பிரகிருதி” என்பது சாங்கியர் கொள்கை. மூன்று குணங்களைக் கூறுவதால் அவை சடமும் பலவும் ஆகும். சடமாயும் பலவாயும் இருப்பது காரியம் ஆகுமே யன்றிக் காரணம் ஆகாமையால் சாங்கியர் கூறும் முதற் காரணமும் முதற் காரணம் அன்று.

ஒருவன் தன் மகனை நோக்கத் தந்தையாய் நிற்பினும், தன் தந்தையை நோக்க மகனே யாதல்போல, ‘புத்தி’ முதலியவற்றை நோக்க மூலப் பிரகிருதி காரணமாயினும், ‘கலை’ என்னும் தத்துவத்தை நோக்கக் காரியமே யாதலின் அதனைச் சைவ சித்தாந்தம் அவாந்தர காரணமாக (இடைநிலை காரணமாக)க் கொள்வதல்லது பரம காரணமாக (முடிநிலைக் காரணமாக)க் கொள்வதில்லை.

முக்குணங்களுக்கு மேலாய், அவற்றின் தொடர்பு சிறிதும் இல்லாமல் கலை முதலிய சில தத்துவங்கள் உள என்பது பின்பு விளக்கப்படும். அந்தக் கலை முதலிய தத்துவங்கட்குக் காரணமாய் நிற்பது மாயையே. அதனால், சைவ சித்தாந்தம் அதனையே உலகிற்கு பரமுதற் காரணமாகக் கொள்கிறது.[9]

பிரமமே முதற் காரணம்

“பிரமத்தை உணர்ந்தோன் எல்லாவற்றையும் உணர்ந்தோனாவன்” எனும் வேதப் பிரமாணத்தின்படி உலகிற்கு முதற் காரணம் மெய்ப்பொருளாகிய பிரமமே என ஏகான்ம வாதிகள் கூறுவர்.

“யதோர்ணநாபி : ஸ்ருஜதே க்ருஹ்ணதே ச....
ததா க்ஷராத் ஸம்பவதீஹ விச்வம்” [10]

> “எவ்வாறு சிலந்தி தன்னிடமிருந்து வலைநூலை வெளிப்படுத்தவும் தன்னிடமே அடக்கிக் கொள்ளவும் செய்கிறதோ, அவ்வாறே இறைவனிடமிருந்து இந்தப் பிரபஞ்சம் தோன்றுகிறது”[11]

என்னும் முண்டக உபநிடதத்தின் உவமானத்தை சித்திலிருந்து அசித்து தோன்றுவதற்கு ஆதாரமாகக் கொள்வர். இதனையே,

“தாங்கும் உலகுக்கு உபாதானம் சத்தாம் சிலம்பி நூல்தன்பால்
வாங்கி வைத்துக் காப்பதுபோல் வையம் எல்லாம் தன்பக்கல்

ஓங்க உதிப்பித்து உளதாக்கி நிறுத்தி ஒடுக்கத்து இலதாக்கும்
ஆங்கு வந்தவாறு அதனால் சத்தாம் சகத்தின் அமைவு எல்லாம்”[12]

என ஏகான்ம வாதமாக, சித்தியார் பரபக்கம் கூறும்.

இக்கருத்தை மேற்போக்காகப் பார்த்தால் இக்கூற்றுப் பிரமம் உபாதான காரணம் எனும் கருத்துக்கு அரண் செய்வதுபோல் தோன்றும். ஆனால் ஆழ்ந்து நோக்குங்கால் இவ்வுவமானம் சித்தாந்தக் கருத்தைச் சிறப்புற விளக்குவதாகவே அமைவதைக் காணலாம்.

சிலந்தியின் நூல் அதன் உடம்பின் உள்ளிருந்தே வெளிவருவதால் அந்நூலுக்குரிய முதற் காரணம் சிலந்தியின் (ஊர்ணநாபி) உடம்பே யாகும். அதன்கண் உள்ள உயிரே நூலைத் தோற்றுவிக்கும் நிமித்த காரணம் ஆகும். எனவே, சிலந்தியின் உவமானம் பிரமம் நிமித்த காரணம் என்பதை விளக்குமே யன்றி, அது உபாதான காரணம் என்பதை விளக்காது.[13]

மாயை - அநிர்வசனம்

‘யாமா’ என்பதில் உள்ள எழுத்துகள் முன்பின்னாக மாறி, மாயா - என வந்தது என்றும், ‘யா - எது; மா - ஆராய்ந்தால் இல்லையாகின்றதோ அதுவே ‘மாயை’ என்பர். “மாயையாவது - மெய்ப்பொருள் (சத்து) என்றும் சொல்லப்படாது; பொய்ப்பொருள் (அசத்து) என்றும் சொல்லப்படாது. ஆகவே, அஃது அநிர்வசனப் பொருளாகும். அநிர்வசனம் என்பது “இஃது இன்னது என்று வரையறுத்துக் கூறப்படாதது; சொல்லொணாதது.” இதுபற்றியே அது ‘மாயை’ எனப்பெயர் பெற்றது.

‘இத்தன்மைத்தாகிய மாயையில், சித்தாகிய பரப்பிரமம் கண்ணாடியில் இல்லாத உருவம் இருப்பதாய்த் தோன்றுவதுபோல உலகமாய், அத்தியாசமாய் (போலியாய்த்) தோன்றும். சட, சித்துக்களாகிய உலகம் அனைத்தும் சித்தாகிய பரப்பிரமத்தின் விவர்த்தனமே” என மாயா வாதிகள் விளக்கம் கூறுவர்.[14]

“மெய்ப்பொருளும் ஆகாது, பொய்ப்பொருளும் ஆகாது வேறொன்றாய் நிற்பது” என்பதற்கு எடுத்துக்காட்டுகள் இல்லை. “கானல்” நீர் போலத் தோன்றுமிடத்து, நீர் மட்டுமே பொய்யாவதல்லது, கானல் பொய்யன்று. அதனால் அதுபோன்றவை அநிர்வசனப் பொருளுக்கு எடுத்துக்காட்டாகமாட்டா. மேலும் யாதொரு சமயமும் மாயையை ‘அநிர்வசனம்’ எனக் கூறவில்லை. அதனால் மாயையை அங்ஙனம் கூறுதல் பொருந்தாது. விவர்த்தனமாவது, ஒரு பொருள் மற்றொரு பொருள் போலத் தோன்றுதல். அங்ஙனம் தோன்றுதல் பொய்த்தோற்றமே ஆகும். உலகம் உண்மைத் தோற்றமாதல் எல்லாப் பிரமாணங்களினாலும் விளங்கிக் கிடப்பது. ஆகவே, அதனைப் பொய்த்தோற்றம் என்றல் அல்லாத வழக்கு ஆகும்.[15] இதனால், காட்சி அளவையால் உலகம் உள்ளது என்பதும் அத்தகைய உலகம் உளதாதற்கு முதற்காரணமாய் உள்ளது மாயை என்பதும் பெறப்படும். எனவே, உலகிற்கு முதற் காரணமாகிய மாயையை ‘அநிர்வசனம்’ என்றலும் பொருந்தாது.

மாயை - உள்பொருள்

ஏனையோர் கொள்ளும் முதற் காரணங்கள் யாவும் செயப்படுபொருளைச் செய்கின்ற அவரின் வேறாய் ஒரு காலத்திலே ஓரிடத்திலே பெறத் தக்கனவாகும்.

சைவ சித்தாந்தத்தின்படி இறைவன் கொள்கின்ற முதற் காரணமாகிய மாயை அவனைப்போலவே எங்கும் வியாபகமாகவும் நித்தமாயும் இருப்பது. அஃது அவனையே தாரகமாகக் கொண்டு அவனுக்குள் வியாப்பியமாய் அடங்கிநிற்கும்.

"வித்து உண்டாமூலம் முளைத்தவா தாரகமாம்;
அத்தன்தாள் நிற்றல் அவர்வினையால் வித்தகமாம்" [16]

என்று சிவஞான போதம் கூறும். அதாவது, விதையானது நிலத்தினுட் பொருந்திக் கிடப்பதுபோல முதற் காரணமாகிய மாயை தனக்கு நிலைக்களமான (தாரகம்) சிவனது சத்திக்குள் பொருந்தி நிற்கிறது. நிலம் குளிர்ந்தபொழுது அவ்விதையினின்றும் முளை தோன்றுவதுபோல அச் சிவசத்தி விரும்பியபொழுது அம் மாயையினின்றும் உலகம் தோன்றும்.

மாயை - பரிக்கிரக சத்தி

இறைவனின் வேறாகாது இறைவனைப் பிரியாது நீக்கமின்றி அவனுடன் இருக்கும் சத்தி தாதான்மிய சத்தி எனப்படும். இச் சத்தியை நங்கை என்றும், இறைவனை நாயகன் என்றும் நூல்கள் கூறும்.

ஆனால், மாயை அச் சத்தியைப்போல் அன்றி இறைவனுக்கு பரிக்கிரக சத்தியாய் அமையும் (இது தமிழில் 'வைப்பு ஆற்றல்' எனப்படும்). அஃதாவது ஊர்தி, படைக்கலம் முதலியவற்றை வேண்டுங்காலத்தில் எடுத்துப் பயன்படுத்துகிறோம்; வேண்டாதபோது உரிய இடத்தில் வைத்துவிடுகிறோம். வங்கியில் இருக்கும் பணத்தைத் தேவையான நேரத்தில் எடுத்துப் பயன்படுத்துவது யாவரும் அறிந்ததாகும். அதுபோலவே, இறைவன் படைத்தலை மேற்கொள்ளும் காலத்தில் மாயையைப் பயன்படுத்துவான். தன்னிடத்தில் அடங்கியுள்ள மாயையை நோக்கி அதனை உலகமாக விரியச் செய்வான்; அழிப்புக் காலத்தில் அம் மாயையைத் தன்பால் ஒடுக்கி நிற்பான். ஆகவே, மாயை அவனுக்குப் 'பரிக்கிரக சத்தி' எனப்படுகிறது.[17] இதுபற்றியே, சிவஞான சித்தியார் மாயையை 'விமலனுக்கோர் சத்தி' என்று குறிப்பிடும்.[18]

"ஆசான்முன்னே துயில் மாணவகரைத்
தேசாய தண்டால் எழுப்பும் செயல்போல்
நேசாய ஈசனும் நீடாணவத்தரை
ஏசாத மாயாள் தன்னாலே எழுப்புமே" [19]

"நல்லாசிரியர் ஒருவர் முன்னிலையில் சோம்பலால் உறங்கிவிடும் மாணவனை அவ்வாசிரியர் கையில் கொண்டுள்ள பிரம்பால் தட்டி எழுப்புதல்போல, அறிவை மறைக்கும் ஆணவ உறக்கத்தில் இருக்கும் ஆன்மாக்களை முதல்வன், மாயையாகிய

பணிப்பெண்ணை விட்டுத் தட்டி எழுப்பும்படி செய்வான்" என்று திருமந்திரம் கூறும். இம்மந்திரப் பொருளை உமாபதி சிவம் தனது சதரத்ன சங்கிரகத்துள்,

"குரு யதாக்ரதா சிஷ்யாந் ஸுப்தாந் தண்டேந போதயேத்|
சர்வோபி மோஹநித்ரயாம் ஸுப்தாந் சக்த்யோ போதயேத்||"

என்று பொன்னேபோல் போற்றிச் செய்தார்.[20] இக்கருத்தைத் துறைமங்கலம் சிவப்பிரகாசர் தமது சதமணி மாலையில்,

"குரவன் முன்துயில் கொள்ளும் மாணாக்கனை
உரிய கோல் கொண்டுணர்த்துவான் ஈசனும்
துரிய போகத் துயில் பெறுவான் தனை
அரிய சத்தியினால் அறிவிப்பனால்" [21]

என மொழிபெயர்த்தார்.

மாயையை ஆசானது கையில் உள்ள பிரம்போடு உவமித்தமையால், 'அது முதல்வனுக்கு பரிக்கிரக சத்தியே யன்றி தாதான்மிய சத்தியன்று' என்பது விளங்கும்.

சதரத்ன சங்கிரகத்தின் மூலத்திலும் அதன் மொழிபெயர்ப்பிலும் 'சத்தி' எனப் பொதுவாகக் கூறப்பட்டதனை இத்திருமந்திரத்தில் 'மாயாள்' எனச் சிறப்பாகத் திருமூலர் விளக்கினமை அறியத்தக்கது.

மேலும், 'ஆணவம் சோம்பல்போல உறக்கத்தை விளைவிக்கும்' என்பதும் 'மாயை ஆசான் கைப்பிரம்புபோல உறக்கத்தினின்றும் விழிப்பிக்கும்' என்பதும் பெறப்பட்டன. எனவே, மாயை ஆணவ நீக்கத்திற்கு உதவி செய்கிறது எனலாம். எனவே, மாயை உலகிற்கு முதற் காரணமாய் - நித்தமாய் - சடமாய் - முதல்வனின் வியாப்பியமாய் - முதல்வனுக்குப் பரிக்கிரக சத்தியாய் - மெய்ப்பொருளாய் உள்ளது என்பது விளங்கும்.

இவ்வாறு சைவ சித்தாந்தம், உலகத்தோற்றத்திற்கு ஏனையோர் கூறும் முதற் காரணங்களை மறுத்து, உலகத்தின் தோற்ற ஒடுக்கங்களுக்கு மாயையே முதற் காரணம் என்று நிறுவுகிறது. ஆயினும் அதன் அடிப்படையிலேயே பல வினாக்கள் எழுந்தன. அவ் வினாக்களுக்கான விடையை,

"என்னை இது எனில், உலகுக்கு உபாதானம் இல்லை
இறைவன் அலது எனில், அசித்துச் சித்தினிடத்து உதியா
மன்னி உளதேல் முதல்வன் என்கொல் என்னின்
மாயைதான் அசித்து உருவமாய் மருவ மாட்டாது
அன்னவனும் இது ஒழிய ஆக்கமாட்டான்
அசத்தனாம் எனில் அதுவும் அவன்போல் நித்தம்

முன்னவன் அவ்அசித்தை விரித்து எவையும் ஆக்கும்
முதன்மை அது கொடுத்தது என மொழிந்திடாரே" (சிவ.23)

என்னும் பாடல்வழி சிவப்பிரகாசம் உணர்த்தும்.

i. உலகத் தோற்றத்திற்கு மாயை முதற் காரணம். இறைவன் சித்துப் (அறிவுடைய) பொருள். உலகம் அசித்துப் (அறிவற்ற) பொருள். ஆதலால் அறிவுடைய பொருளிலிருந்து அறிவற்ற பொருள் தோன்றாது. எனவே, அறிவற்ற பொருள் தோன்ற அறிவற்ற பிறிதொரு பொருளே வேண்டும். எனவே, உலகத் தோற்றத்திற்கு மாயை முதற் காரணமாயிற்று.

ii. மாயை முதற் காரணம் என்றால், இறைவன் வேண்டுவதில்லையே. மாயை அசித்துப்பொருள். அதற்குத் தானே உடல் உலகு முதலியனவாகச் செயற்படுதற்கு உரிய ஆற்றல் இல்லை. எனவே, அதன் செயல்பாட்டிற்குச் சித்தாகிய முதல்வன் ஒருவன் வேண்டும். முதல்வனும் இம் மாயையின்றி உடல் உலகு முதலியவற்றைத் தோற்றுவிக்கமாட்டான்.

iii. முதல்வன் மாயையின்றிச் செயல்படமாட்டான் எனில் அவன் ஆற்றல் குறைபாடு உள்ளவன் ஆகான்.

மாயை அம் முதல்வனைப்போல அநாதி நித்தப்பொருள். அதனால் புதிதாக எதையும் ஆக்கிக்கோடல் வேண்டாம். முதல்வன் அவ் வசித்தாகிய மாயையைக் காரியப்படுத்தி எவற்றையும் ஆக்குவான். அக் காரியப்படுத்தும் முதன்மையை அம் மாயை கொடுத்தது என உண்மை உணர்ந்தோர் கூறமாட்டார்கள். எனவே, முதற் காரணமாகிய மாயையை காரியப்படுத்தும் முதல்வனே முதன்மையானவன்.

அசித்தாய காரியத்திற்கு அசித்தாய காரணம் வேண்டும் என்னும் உண்மைபற்றி மாயையும், அவ் வசித்துத் தானே தன்பாலிருந்து தன் காரியங்களைத் தோற்றுதலின்மையால் அக் காரியத் தோற்றத்திற்குச் சித்தாகிய முதல்வன் வேண்டும் எனும் உண்மைபற்றி இறைவனும் இருத்தல் நியாயமாதலை தருக்கமுகத்தான் உணர்த்துவதே இச் சிவப்பிரகாசத்தின் நுண்பொருளாகும்.[22] அதாவது நிமித்த காரணப் பொருள், முதற்காரணப் பொருள் இரண்டனுள் ஒன்றே அமையும் என்பார்க்கு இரண்டும் வேண்டும் என்பதே முறைமையாகும்.

மாயையின் வகைகள்

உயிர்கள் விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்னும் மூவகையினர் ஆவர். மலப்பிணிப்பில் தம்முள் வேறுபாடுடைய இவ் உயிர்களின் பொருட்டு மூன்று வகையான மாயைகள் அமையும். அம்மூவகை மாயைகளும் மூவகை உயிர்களுக்கேற்ப முறையே சுத்த மாயை, அசுத்த மாயை, பிரகிருதி மாயை எனப்படும். இதனை,

"விந்துவின் மாயை ஆகி, மாயையின் அவ்வியத்தம்
வந்திடும்" [23]

என வரும் சித்தியார், "முதற் காரணம் எனப்பட்ட சுத்த மாயையினின்றும் அசுத்த மாயை விருத்தியாகி, அவ்வசுத்த மாயையினின்றும் பிரகிருதி மாயை தோன்றும்" என்று கூறுகிறது.

ஒரு மாயையே சுத்தம், அசுத்தம் என இரு கூறுபட்டு நிற்கும். ஒரு பொருள் இரண்டு தன்மை பெற்று நிற்பதற்கு உவமையாகக் குன்றிமணி கூறப்படும். குன்றிமணி ஒன்றே எனினும் ஒரு பகுதி சிவந்த நிறத்துடனும், மற்றொரு பகுதி கறுத்த நிறத்துடனும் விளங்கும். அதுபோல, ஒரு பகுதியில் அசுத்தத்தோடு கலந்து அசுத்த மாயையாகியும், மற்றொரு பகுதியில் அசுத்தத்தோடு கலவாது தூயதாய் சுத்த மாயையாகியும் நிற்பதாகும்.

மல, கன்மங்களோடு விரவாது தூய்மையாய் இருந்து இன்பத்தை மட்டுமே தருவது சுத்த மாயை. இதற்கு மாறான தன்மையுடையதாய் மல, கன்மங்களோடு விரவி மயக்கத்தைச் செய்வது அசுத்த மாயை என்பது விளங்கும். மயக்கம் இல்லாமல் அறிவிப்பது சுத்த மாயை. மயக்கி அறிவிப்பது அசுத்த மாயை என்று கூறும்போது, அறிவித்தல் என்னும் பயன்பாட்டு அளவில் இரண்டும் ஒன்றே.[24]

சுத்த மாயையே எல்லாவற்றிற்கும் மேலாகப் பரந்து விரிந்து நிற்பது; அசுத்த மாயை அதனுள் அடங்கி நிற்பது. எனவே, சுத்தமாயை வியாபகம்; அதனுள் அடங்கிய அசுத்த மாயை வியாப்பியம்.

சுத்தமாயை வியாபகமாய் இருத்தலின் 'மகாமாயை' என்றும், 'ஊர்த்துவ மாயை' என்றும் கூறப்படும். ஊர்த்துவம் என்றால் மேல் என்று பொருள்படும். மேல் என்பது இங்கு வியாபகம் என்னும் பொருளில் குறிக்கப்படும். 'விந்து', 'குடிலை', 'குண்டலி', என்பன இம் மாயைக்குரிய வேறு பெயர்கள்.

அசுத்த மாயை, ''அதோ மாயை', 'மாயை', 'மோகினி' என்று வெவ்வேறு பெயர்களால் குறிக்கப்படும். அதோ - கீழ். கீழ் என்பதை இங்கு வியாப்பியம் என்று கொள்ளவேண்டும். மயக்கத்தைச் செய்வதுபற்றி இது 'மோகினி' எனப்பட்டது. வியாபக மாயை, மகாமாயை எனப்படுதலின், வியாப்பிய மாயை, மாயை என்று சொல்லப்பட்டது.

"பிரகிருதி மாயை என்பது தனித்த ஒரு மாயை யன்று. அஃது அசுத்த மாயையினின்றும் தோன்றிய ஒரு காரியப் பொருளேயாகும். இது 'மான்', 'அவ்வியத்தம்' எனவும் அழைக்கப்படும். நம்முடைய உலகம் தோன்றுவது இம் மாயையில்தான்.[25]

சுத்த மாயையின் வியாபகத்தில், வியாப்பியமாய் அடங்கி நிற்பது அசுத்த மாயை. அசுத்த மாயையின்கீழ் வியாப்பியமாய் அடங்கி நிற்பது பிரகிருதி மாயை என அறிதல் வேண்டும்.

மாயை பல என்று கொண்டால், சடமாயும் பலவாயும் இருப்பன வெல்லாம் தோன்றி நின்று அழியும் அநித்தியப் பொருளாகும். ஆனால், மாயை நித்தப் பொருள்தான். சுத்த மாயையும் அசுத்தமாயையும் ஒரே மாயையின் இரு பகுதிகளாகும்.

பிரகிருதி மாயை தனி மாயை ஆகாமல் அசுத்த மாயையின் காரியமேயாகும். ஆதலால், மாயை இவ்வாறு மூன்றாகச் சொல்லப்படினும் உண்மையில் அது பொருளால் ஒன்றே என்பதுதான் சைவ சித்தாந்தத் துணிபாகும்.

உலகிற்கு பரம நிமித்த காரணம் (இறைவன்) ஒன்றேயானாற் போலப் பரம முதற் காரணம் (மாயை) ஒன்றாக இருத்தலே பொருத்தமுடையது. ஆகையால், அம்முறையில் நோக்கினாலும் மாயை ஒன்றேயாதல் விளங்கும்.

மாயையின் காரியங்கள்

சுத்த மாயையின் காரியம் 'சொல்லுலகம், பொருளுலகம்' என இரு வகைப்படும். 'சொல் உலகம்', 'சத்தப் பிரபஞ்சம்' எனவும், 'பொருள் உலகம்', 'அர்த்தப் பிரபஞ்சம்' எனவும் கூறப்படும். 'எழுத்தோசை' அல்லது 'வாக்குகள்' சொல்லுலகம் எனப்படும். 'தத்துவம், கலை' ஆகியன பொருளுலகம் எனப்படும். அசுத்த மாயையின் காரியங்கள் அனைத்தும் 'பொருட் பிரபஞ்சங்களே' யாகும்.

சுத்த மாயா காரியம்

சுத்தம், அசுத்தம், பிரகிருதி என்னும் மும் மாயைகளில் மிகவும் நுண்ணியதாய் மேலே உள்ளது சுத்த மாயை. இம் மாயையின் காரியங்கள் 'வைந்தவம்' என்றழைக்கப்படும். சுத்த மாயையில் தோன்றும் பொருட் பிரபஞ்சங்கள், ஐந்து சிவ தத்துவங்களாகும். அவை, 'சிவம், சத்தி, சதாசிவம், ஈசுரம், சுத்தவித்தை என்பன. இவை உலகத்தைத் தொழிற்படுத்தக் கருதும் இறைவனுக்கு அந்நிலையில் இடமாய் நிற்பன வன்றி, வினைவயத்தாற் பிறந்து இறக்கும் உயிர்களுக்குத் தனு கரண புவன போகங்களாய் வந்து பொருந்தா.

சிவப்பிரகாசம் இத் தத்துவங்களின் தோற்ற முறைபற்றிக் கூறும்போது, இத் தத்துவங்களின் தத்துவ கர்த்தாக்களைக் குறிப்பிட்டுச் சொல்லும். ஏனெனில், "தத்துவங்கள் உடம்பும் தத்துவக் கர்த்தாக்கள் உயிருமாய் நிற்கையாலே, உடம்பினிடத்தில் பேர் உயிர் நின்றாற் போலத் தத்துவங்களின் பேர் தத்துவக் கர்த்தாக்கள் நிற்குமென அறிக" என்பர் மதுரை சிவப்பிரகாசர்.

"உன்னல்அரும் பரசிவன்தன் அருளாலே நாதம்
உதிக்கும் மிகும் குடிலைதனில் விந்துவரும் நாதம்
தன்னில் அதன் ஒளிவளரும் சதாசிவராம் அவரில்
தயங்கவரும் ஈசர் வித்தைதனை அளிப்பர் அதனால்
மன்னுவர் இவ்வகை ஐவர்" (சிவ.21)

என்பது சிவப் பிரகாசம். இவ்வைந்து தத்துவங்களுக்கும் முறையே 'சிவம், சத்தி, சதாசிவர், ஈசுரர், உருத்திரர்' என ஐவரும் தத்துவ கர்த்தாக்கள் ஆவர்.

i. சிவம்

எல்லா உலகங்களும் ஒடுங்கிய காலம் முற்றழிப்புக் காலம் அதாவது மகா சங்கார காலம் எனப்படும். அப்போது காரியப்பட்டு நின்ற உலகங்கள் எல்லாம் காரணத்துள் ஒடுங்கி நிற்கும். உலகிற்கு முதற் காரணம் மாயை என்று முன்பே கூறப்பட்டது. அப்போது சுத்த மாயை காரணப் பொருளாய் நிற்கும். இறைவனும் தனது ஆற்றல் தொழில் யாவற்றையும் விடுத்துத் தானேயாய் நிற்பான்.

ஒடுங்கிய உலகம் மீளவும் தோன்றுவதற்கு இறைவன் திருவுளம் பற்றுவான். இது அவனது சங்கற்பம் எனப்பெறும். அவனது இச்சை, ஞானம், கிரியை (விழைவு, அறிவு, செயல்) என்னும் மூன்று சத்திகளுள் இச்சை எஞ்ஞான்றும் ஒரு நிலையிலேயே நிற்கும். ஏனை ஞானமும், கிரியையும் ஒன்றின்ஒன்று மிகுந்தும், குறைந்தும், சமமாய் நின்றும் தொழிற்படும். அவ்விடத்து இறைவன் தனது ஞான சத்தியால் சுத்த மாயையைப் பொதுமையில் நோக்கி நிற்பான். அவனுடைய திருக்கண் நோக்கம் பிறந்த சுத்த மாயையின் பகுதி செயல்படத் தொடங்கும். இவ்வாறு செயல்படத் தொடங்கியது ஞானவடிவாய் நின்ற சிவனால் ஆதலின், அது ‘சிவ தத்துவம்’ எனப்படும். காரியப்படுவதற்கு உரிய பக்குவம் பெற்றது ஆதலின் ‘சக்திமான்’ என்றும் பெயர்பெறும். இதுவே, நால்வகை வாக்குகளின் சூக்கும வாக்காகிய நாதத்திற்குப் பற்றுக்கோடு ஆதல் பற்றி இத் தத்துவம் ‘நாத தத்துவம்’ என்றும் பெயர்பெறும்.

இச் சிவ தத்துவம் சுத்த மாயையின் முதல் விருத்தி. இது ஞான சத்திக்கும் அதன் பாகுபாடுகளாகச் சொல்லப்படும் ‘இந்திகை, தீபிகை, உரோசிகை, மோசிகை, ஊர்த்துவ காமினி, வியாபினி, வியோம ரூபை, அநந்தை, அநாதை, அநாசிருதை ஆகிய பத்துக் கலைகளுக்கும் இடமாகும்.[26]

ii. சத்தி

முதற்கண் ஞான சத்தியால் சுத்த மாயையைப் பொதுமையில் நோக்கிய இறைவன், கிரியாசத்தி ஒன்றானே அதனைப் பொதுமையில் காரியப்படுத்தச் சங்கற்பித்து ‘சத்தி’ என்று பெயர்பெற்று நிற்பன். அந்நிலையில் அச் சுத்த மாயை இரண்டாம் விருத்திப்பட்டுச் ‘சத்தி தத்துவம்’ தோன்றும். இது நால்வகை வாக்குகளுள் ‘பைசந்தி’ வாக்குக்குப் பற்றுக்கோடாவதால், பைசந்திக்குரிய விந்துவின் பெயரால் ‘விந்து தத்துவம்’ என்றும் அழைக்கப்படும்.

இத் தத்துவத்தில் இறைவனது கிரியா சத்தி இடம்பெறும். அதன் பாகுபாடுகளான சாந்தி அதீதை, சாந்தி, வித்தை, பிரதிட்டை, நிவர்த்தி ஆகிய ஐந்து கலைகளும் இடம்பெறும்.

iii. சதாசிவம்

ஞான சத்தியால் பொதுமையில் நோக்கி, கிரியா சத்தியால் பொதுமையில் சங்கற்பித்த இறைவன், பின் அவ் விரண்டினாலும் சுத்தமாயையைச் சிறப்பு வகையால் நோக்கிச் சிறப்பு வகையால் சங்கற்பித்து, ஞானசத்தியும், கிரியா சத்தியும் சமமாய்த்

தொழிற்பட ‘சதாசிவன்’ எனப்பெயர் பெற்று நிற்பன். அந் நிலையில் அச் சுத்த மாயை மூன்றாம் விருத்திப்பட்டு அவனுக்கு இடமாகும். சதாசிவனுக்கு இடமாதல்பற்றி அம்மூன்றாம் விருத்தி ‘சதாசிவ தத்துவம்’ என்று பெயர்பெறும். இது ‘சாதாக்கியம்’ என்றும், ‘உத்தியுத்த தத்துவம்’ (முயற்சி உள்முகமாய் நிற்றல் பற்றி) என்றும் அழைக்கப்படும். இது மத்திமை வாக்கிற்குப் பற்றுக்கோடாகும். இறைவன் வேதாகமங்களைச் சொல் வடிவில் தோற்றுவிக்கும் நிலை இதுவேயாகும்.

சதாசிவ தத்துவம் சதாசிவ மூர்த்திக்கும் அம்மூர்த்திக்கு முடி முதலிய உறுப்புகளாக விளங்கும் ஈசானம் (தலை), தத்புருடம் (முகம்), அகோரம் (இருதயம்), வாமதேவம் (குஹ்யம்), சத்யோஜாதம் (பாதம்) ஆகிய பஞ்ச சத்திகளுக்கும் இடமாகும்.

iv. ஈசுரம்

ஞான சத்தி, கிரியா சத்தி இரண்டையும் சமமாகத் தொழிற்படுத்தி, சுத்த மாயையைச் சிறப்பு வகையால் நோக்கியும், சங்கற்பித்தும் நின்ற இறைவன், பின் ஞானசத்தியை மிகையாகச் செலுத்தாது, கிரியா சத்தியை மிகுதியாகச் செலுத்தி சுத்த மாயையைச் சூக்குமமாகக் காரியப்படுத்தி ‘ஈசுரன்’ எனப்பெயர் பெற்று நிற்பான். அந்நிலையில் சுத்த மாயை நான்காம் விருத்திப்பட்டு ‘ஈசுர தத்துவம்’ தோன்றுகிறது. இந்நிலையில் நிற்கும் இறைவன் ‘மகேசுரன்’ என்றும், இத் தத்துவம் ‘மகேசுவர தத்துவம்’ என்றும் சொல்லப்படுதலும் உண்டு. அதிகார மல வாசனை உடையவராய் அசுத்த மாயையைக் காரியப்படுத்தும் அநந்ததேவர் முதலிய வித்தியேசுவரர் எண்மருக்கும் இத் தத்துவம் இடமாகும். அநந்தர், சூக்குமர், சிவோத்தமர், ஏகநேத்திரர், ஏகஉருத்திரர், திரிமூர்த்தி, சீகண்டர், சிகண்டி, என்று எண்மர். இவர்களை ‘அட்ட வித்தியேசுவரர்’ என்று குறிப்பிடுவர்.

v. சுத்த வித்தை

கிரியா சத்தியை மிகச் செலுத்தி சுத்த மாயையைச் சூக்குமமாய்க் காரியப்படச் செய்த இறைவன், பின் ஞானசத்தியை மிகச் செலுத்தி அதனைத் தூலமாய்க் காரியப்படச் செய்து, ‘வித்தியேசுரன்’ எனப் பெயர் பெற்று நிற்பான். இந்நிலையில் அச் சுத்த மாயை ஐந்தாம் விருத்திப்பட்டு ‘வித்தை’ என்னும் பெயருடைய தத்துவமாய் நிற்கும். அசுத்த மாயையில் தோன்றும் ‘வித்தை’ என்பதும் உளதாகலின் அதனின் வேறுபடுத்தற்கு இது ‘சுத்த வித்தை’ என்று சொல்லப்படும்.

சிவப்பிரகாசத்தில் சிவ தத்துவத்தில் சத்தி தத்துவமும் சத்தி தத்துவத்தில் சதாசிவ தத்துவமும் என இவ்வாறு முறையே ஒன்றிலிருந்து ஒன்றாகத் தோன்றும் எனக் கூறப்பட்டுள்ளது.[27]

சிவ தத்துவத்திற் சத்தி தத்துவம் தோன்றும் எனும்போது சிவதத்துவம் என்றது ஆகுபெயராய் சிவ தத்துவத்தோடு விளங்கும் சுத்த மாயையைக் குறிக்கும். இதுபோல ஒவ்வொரு தத்துவத்திற்கும் கூறிக்கொள்ள வேண்டும். படம் குடிலாக விளங்குவதுபோல சுத்த மாயையே இத்தத்துவங்களாய் விளங்குகிறது. இங்ஙனம் விளங்குதலை ‘விருத்தி’ என்பர். அதாவது சுருங்கியிருந்த காரணப்பொருள் விரிந்து காரியமாவதற்கு ‘விருத்தி’

என்பது பெயர். (படம் - துணி, குடில் - குடிசை). இது ‘சூக்குமப் பரிணாமம்’ என்று கூறப்படும் (பிற்சேர்க்கை, ப.383).

நால்வகை வாக்குகள்

ஆன்மாக்களின் அறிவுக்குக் காரணமாய் நிற்பது ‘சொல் உலகம்’ எனப்படும் மொழியாகும். மொழியாகிய சொல்லுலகம் முழுவதும் தோன்றுவது சுத்த மாயையிலிருந்தேயாம். அசுத்த மாயையிலிருந்து பொருளுலகம் தோன்றுமேயன்றிச் சொல்லுலகம் தோன்றுவதில்லை.

சுத்த மாயையில் தோன்றும் வாக்கு, சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என்னும் நான்கு நிலைகளை உடையதாகும். இவை முறையே ஒன்றைவிட மற்றொன்று தூலமாய், வளர்ச்சியுற்று நிற்கும்.

“...... வாய்மையினால் முன்னே
வந்திடும் என்று உரைசெய்த விந்து வழாவகையே
முன்உதவும் சூக்குமாதி ஒரு நான்கும் என்று
மொழிந்திடுவர் அரும் கலைகள் முதிர்ந்து ளோரே” (சிவ.21)

என்று சிவப்பிரகாசம் கூறும்.

பரமசிவனது சத்தி ரூப சந்நிதியில் காரியப்படும் சுத்த மாயையினின்று வைகரி முதலிய நான்கு வாக்குகளும் தோன்றும் என்று,

“விந்துதன்பால் வைகரியாதி ..... சிவனவன்தன்
சந்நிதிதன்னில் நின்றே” [28]

என வரும் சித்தியார் குறிப்பிடும்.

i. சூக்குமை வாக்கு

நால்வகை வாக்குகளுள் சுத்த மாயையின் முதல் விருத்தியாகி நிற்பது சூக்குமை வாக்கு. இதற்கும் காரண நிலைக்கும் வேறுபாடு மிகுதியாக இல்லை. காரண நிலையில் உள்ள சுத்த மாயை ஏனை மூவகை வாக்குகளால் விருத்திபடுவதற்குத் தகுதிபெறும் நிலையே சூக்குமை வாக்காகும். இதுவே, ‘நாதம்’ என்றும், ‘பரை’ என்றும் சொல்லப்படும். இதனை, விந்து தத்துவத்தினின்றும் சொல்லுதற்குரிய உணர்வாகவும் ஒளியாகவும் ஆன்மா அறியும் அறிவுக்கு ஈடாக ஒரு நாதம் (சூக்குமை) மூலாதாரத்திலிருந்து மேல்நோக்கி எழுந்து உந்தித்தானத்தில் படரும் என்று சிவப்பிரகாசம் கூறும்.

“..... இலங்கும் விந்துப்
பகர்வு அரிய உணர்வாகி ஒளியாய் உள்ளப்
பான்மையினால் ஒரு நாதம் படரும் தானே” (சிவ.37)

ii.பைசந்தி வாக்கு

சூக்குமை வாக்கு உந்தித்தானத்தை அடைந்துபின் இதயத்தானத்திற்குச் செல்லும். இந்த இடத்தில் மயில் முட்டையின் நீர் பஞ்ச வண்ணங்களையும் சூக்கும ரூபமாக அடக்கியிருப்பதுபோல, எழுத்துகள் பிரிந்து தோன்றாது மிகவும் சூக்கும ரூபமாய் இருக்கும். இந்நிலையில் அவ் வாக்கு ‘பைசந்தி’ எனப்படும்.

“வந்தடைந்து பின்னமாய் வன்னங்கள் தோற்றம்
வரும் அடைவுபட ஒடுக்கி, மயில் அண்டசலம் நேர்
சிந்தைதனில் உணர்வாகும் பைசந்தி” (சிவ.38)

என்பது சிவப்பிரகாசம்.

சூக்குமை வாக்குப்போல அறவே விளங்காது நிற்றல் இன்றி, ஒருவாறு விளங்கி நிற்பதால் இதற்குப் ‘பைசந்தி’ என்று பெயராயிற்று. பைசந்தி – பஸ்யந்தி ‘விளங்குவது’ சூக்குமை, பைசந்தி இருவகை வாக்கிலும் மொழி வேறுபாடு இல்லை.

iii. மத்திமை வாக்கு

பைசந்தி வாக்கு உதான வாயுவால் உந்தப்பட்டு, கூடி வருகின்ற எழுத்துக்கள் பொருந்த, சூக்கும ரூபங்கள் எல்லாவற்றையும் வேறுவேறாகப் பிரித்து, செவிக்குக் கேளாமல் மெல்லோசையாய் கண்டத்திலே தொனிக்கும். அந்நிலையில் அது ‘மத்திமை வாக்கு’ எனப்படும்.

“..... உயிரில்
சேர்ந்துவரும் அவை மருவும் உரு எவையும் தெரித்து
முந்தியிடும் செவியில் உறாது உள் உணர்வாய் ஓசை
முழங்கியிடும் மத்திமைதான்.” (சிவ.38)

இவ்வாக்கினால் பேசுபவனுக்கு மட்டும் தன்னால் பேசப்படும் பொருள் இனிது விளங்கி நிற்கும். இது பிறர் செவிக்குக் கேளாது. பைசந்தி, வைகரி இவை இரண்டிற்கும் இடையே நிற்பதால் இது ‘மத்திமை வாக்கு’ எனப்படுகிறது.

iv. வைகரி வாக்கு

கண்டத்தில் ‘உதானன்’ என்னும் காற்றோடு மட்டும் மெல்ல முழங்கிய சொல், பின், தன் செவிக்கும், பிறர் செவிக்கும் கேட்கும் வகையில் பிராணன் என்னும் காற்றோடு கூடி மனத்தில் நினைந்த ஒரு பொருளைப் பகரும். இதுவே ‘வைகரி’ வாக்காகும்.

“...... வைகரியில் உதானன்
பந்தம் உறும் உயிர் அணைந்து வந்தமொழி செவியின்
பால் அணைய நினைந்த பொருள் பகரும் தானே” (சிவ.38)

(வைகரி – விகாரம் உடையது; பல், நா, இதழ் முதலிய உறுப்புகளின் தொழிற்பாட்டால்

பல வேறுபாடுகளை அடைதல்) இங்ஙனம் சுத்த மாயை ஒன்றே நால்வகை வாக்குகளாக விருத்திப்பட்டு நிற்கும். இவ்வாறு, 'வாக்குகளுக்கும் சுத்த மாயையே முதற் காரணம்' என்பது புலனாகும்.

தன் செவிக்கு மட்டும் கேட்பது 'சூக்கும வைகரி' என்றும், பிறர் செவிக்குக் கேட்பது 'தூல வைகரி' என்றும் சொல்லப்படும். இதனால் வாக்குகள் ஐந்தாக அமையும்.

வைகரியை இவ்வாறு பகுத்துக் கூறாமல், சூக்கும வாக்கையே சூக்குமை, அதி சூக்குமை எனப் பிரித்து ஐந்தாகக் கூறுதலும் உண்டு. நால்வகை வாக்குகளும் ஐந்தாகி, நிவர்த்தி முதலிய ஐந்து கலைகளிலும் நிற்கும்.

"இந்த வாக்குகள் நாலுந் தோன்றுகைக்குக் காரணமாகப் பஞ்சமை யென்றொரு வாக்குண் டென்றும், அதற்குத் தானம் மூலாதார மென்றும் அது பிரணவ சொரூபமாய் இருக்கு மென்றும் சொல்வாருமுளர்" என்று ஐந்து வாக்குகளை மதுரைச் சிவப்பிரகாசர் குறிப்பிடுவர்.[29]

சூக்குமை நுண்ஒலி என்றும், பைசந்தி நினைவொலி என்றும், மத்திமை மிடற்றொலி என்றும், வைகரி செவியொலி என்றும் கூறப்படும். இதில் நுண்ணொலி யாகிய சூக்குமை அழிவற்றது; மற்றவை அழியும் இயல்புடையவை என்றும் கொள்ளப்படும்.

சுத்த மாயையின் காரியமாகிய மொழி (வாக்குகள்) தனித்து நிற்கின்ற தன் இயற்கை நிலையில் அசுத்த மாயையில் உள்ளவர்கட்கும், பிரகிருதி மாயையில் உள்ளவர்கட்கும் புலனாகாது என்பது உண்மை. ஆயின் அது பிரகிருதி மாயா உலகமாகிய இவ்வுலகின் தன்மையால் செயற்கை நிலையை - பருமை நிலையை அடைகிறது. அஃதாவது பல், நா, இதழ் முதலிய உறுப்புகளின் தொழிற்பாட்டோடு, உதானன், பிராணன் என்றும் காற்றுகளோடு சேர்ந்து செயற்கையாகிப் பருநிலையை அடைந்து இவ்வுலகில் வாழ்வார்க்குப் புலனாகிறது.

இந் நால்வகை வாக்குகளாலேயே எவ்வகை உயிர்க்கும் சவிகற்ப ஞானம் எனப்படும் சிறப்பு உணர்வு உண்டாகும். இவை இல்லையேல் நிருவிகற்ப உணர்வாகிய பொது உணர்வே உண்டாகும். சிறப்புணர்வு உண்டாகாது. 'இஃது ஒரு பொருள்' என்ற அளவில் உள்ளது பொதுவுணர்வு. ஒரு பொருளைப்பற்றி அதன் பெயர், இனம், குணம், தொழில் முதலியவற்றை உணரும் திட்டமான உணர்வு சிறப்புணர்வாகும்.

இவ் வாக்குகளே உயிர்களுக்குப் பரமபந்தம் (நீங்குதற்கரிய மேலான கட்டு) எனப்படுகின்றன. இவ்வாக்குகள் வழியாக வரும் அறிவு உலகத்துப் பொருள்களை அறிவதற்கே துணையாக நின்று, அவற்றைப் பற்றிய சிறப்புணர்வை உண்டாக்கி அதன்மூலம் உலகப்பற்றை விளைத்து நிற்பன. எனவே, ஏனை உலகப் பொருள்களைத் தன்னின் வேறாகக் காணுதல்போல, இவ் வாக்குகளைத் தன்னின் வேறாகக் கண்டு அதனை நீங்கிய அறிவு, பேரின்பத்தை நல்கி இறைவன் திருவடியில் சேர்க்கும்.[30]

“ஓவிட விந்து ஞானம் உதிப்பது ஓர் ஞானம் உண்டேல்
சேவுயர் கொடியினான் தன் சேவடி சேரலாமே” [31]

என்பது சித்தியார் வாக்கு.

திருவிளையாடற் புராணத்தில் பரஞ்சோதி முனிவர் இறைவனை,

“வாக்கிறந்த பூரணமாய்” [32]

என்று கூறியிருப்பது இங்கு நினைக்கத் தகும்.

பஞ்ச கலைகள்

சுத்த மாயையின் காரியமாகிய பொருட் பிரபஞ்சத்தில் தத்துவங்கள் மேலே சொல்லப்பட்டன. இனி கலைகள் பற்றிக் காண்போம்.

ஆன்மாக்களைப் பந்தத்தினின்றும் நிவர்த்தி செய்யும் சிவசத்தி, ‘நிவர்த்தி’ எனப் பெயர்பெறும். அச் சத்திக்கு இடமாய் நிற்கும் சுத்த மாயையின் விருத்தியே நிவர்த்தி கலையாகும். பந்தத்தினின்றும் நிவர்த்தி பெற்ற ஆன்மாக்கள் மீண்டும் பந்தத்திற் செல்லாதபடி பிரதிட்டை செய்யும் (நிலைபெறுத்துகின்ற) சிவசத்தி ‘பிரதிட்டை’ எனவும், அங்ஙனம் நிலைபெற்ற ஆன்மாக்கட்கு உண்மை ஞானத்தைத் தருகின்ற சிவசத்தி ‘வித்தை’ எனவும், அங்ஙனம் அநுபவ ஞானத்தைப் பெற்ற ஆன்மாக்கட்கு விருப்பு, வெறுப்பு, கவலை முதலிய துன்பங்கள் யாவும் நீங்க அமைதியைத் தரும் சிவசத்தி ‘சாந்தி’ எனவும், பின்னர் அச் சாந்த நிலையும் ஒழியச் சிவத்தில் அழுந்தச் செய்யும் சிவசத்தி ‘சாந்தி அதீதை’ எனவும் பெயர்பெறும். இச் சத்திகட்கு இடமாய் நிற்கும் சுத்த மாயையின் விருத்திகளே அவ்வப் பெயரையுடைய கலைகளாகும்.

நிவர்த்தி முதலிய ஐந்து பெயர்களைப் பெற்று நிற்பதும் ஒரு சத்தியே ஆகும். அது செயல்பற்றி, இவ்வாறு ஐந்தாகச் சொல்லப்படுகின்றது. சுத்த மாயையின் முதல் விருத்தியே சாந்தி அதீத கலை என்பதும், அதன் ஐந்தாம் விருத்தியே நிவர்த்தி கலை என்பதும் பிறவும் விளங்கும்.

எல்லா மதங்களிலும் சிறப்பாகச் சொல்லப்படுவன பஞ்ச பூதங்கள். சைவ சமயம் அவ்வாறின்றிச் சுத்த மாயையின் காரியமாகிய இந்தப் பஞ்ச கலைகளையே முதன்மையாகக் கொள்கிறது.

இப் பஞ்ச கலைகள் பஞ்ச பூதங்களோடு ஒருபுடை ஒத்திருத்தலால், இவற்றைத் தியானித்தல், வழிபடுதல் முதலிய முறைகளைப் பஞ்ச பூதங்கட்கு உரியனவாக்கிச் செய்யின் அவ் வழிபாடு பயனுடையதாகும்.[33]

அடிக்குறிப்புகள்

1. சி.அருணை வடிவேலு முதலியார், சிவஞான போத மாபாடியம் பொருள்நிலை விளக்கம், ப.339
2. ஞானாமிர்தம், அகவல்.21
3. ஔவை சு.துரைசாமிப் பிள்ளை, ஞானாமிர்த மூலமும் பழைய உரையும், ப.140

4. ஆ.ஆனந்தராசன், உண்மை விளக்கம், ப.34
5. சிவஞான சித்தியார், சுபக்கம், 38.
6. பேரூர்ப் புராணம், காலவன் வழிபடு படலம், பா.5
7. சி.சு.மணி, சிவஞான மாபாடியம், ப.323
8. சி.அருணை வடிவேலு முதலியார், மு.கா.நூ. ப.338
9. மேலது, 338, 339
10. முண்டக உபநிடதம், 1:1:7
11. சுவாமி ஆசு தோஷானந்தர், முண்டக உபநிஷதம், ப.14
12. சிவஞான சித்தியார், பரபக்கம், 225.
13. ப.இராமன், பரிபூரணானந்த போதம் (ஓர் ஆய்வு), ப.187
14. சி.அருணை வடிவேலு முதலியார், மு.கா.நூ. ப.348
15. மேலது, ப.348
16. சிவஞான போதம், வெண்பா, 3
17. ஆ.ஆனந்தராசன், சிவஞான போதம் வழித்துணை விளக்கம், ப.72
18. சிவஞான சித்தியார் 143.
19. திருமந்திரம், 213.
20. i) ஸதரத்ன சங்க்ரஹம், சூத்திரம். 59
    ii) சி.அருணைவடிவேல் முதலியார், திருமந்திரம் 7,8,9 ப.396
21. சிவப்பிரகாசர் செந்தமிழ் நூல்கள், சதமணிமாலை, பா.69
22. காஞ்சி ஞானப்ரகாச சுவாமிகள், சிவப்பிரகாசம் மூலமும் உரையும், ப.53
23. சிவஞான சித்தியார், சுபக்கம், 39.
24. சி.அருணை வடிவேல் முதலியார், சிவஞான போத மாபாடியப் பொருள்நிலை விளக்கம், ப.358
25. ஆ.ஆனந்தராசன், உண்மை விளக்கம், ப.36
26. சி.சு.மணி, சிவஞான மாபாடியம், ப.364
27. சிவஞான முனிவர், சிவஞான பாடியம், ப.191
28. சிவஞான சித்தியார், சுபக்கம், 39.
29. மதுரைச் சிவப்பிரகாசர், சிவப்பிரகாசம் மூலமும் உரையும், ப.139
30. ஆ.ஆனந்தராசன், சித்தாந்த விளக்கம் வினாவிடை, ப.188
31. சிவஞான சித்தியார், சுபக்கம், 46
32. திருவிளையாடற்புராணம், 14
33. சி.அருணை வடிவேலு முதலியார், மு.கா.நூ., ப.366

4.3.4 மாயேயம்

மிகப்பெரிய இம் மண்ணுலகில் ஒரு சிறு பகுதியாகிய மண் எடுக்கப்பட்டு, குடம் முதலியன செய்வதற்குப் பயன்படுத்தப்படுகிறது. அதுபோல, அசுத்த மாயையின் ஒரு சிறு பகுதியே தனு கரண புவன தத்துவங்கள் தோன்றுவதற்குத் தகுதியுடையதாய்ப் பதப்படுத்தப்படுகிறது. இவ்வாறு தத்துவங்கள் தோன்றுவதற்குரிய அசுத்த மாயையின் இலக்கணத்தை,

உருவாதி சதுர்விதமாய், ஒன்றுஒன்று ஒவ்வா
உண்மையதாய் நித்தமாய் ஒன்றாய் என்றும்
அருவாகிக் கன்மாந்தம் அணுக்கள் யார்க்கும்
ஆவாரமாய் அசித்தாய் அசலமாகி
விரிவாய தன் செயலின் வியாபியாய் எல்லாம்
விரிந்தவகை புரிந்து அடைவின் மேவியவை ஒடுங்க
வருகாலம் உயிர்களெல்லாம் மருவிடமாய் மலமாய்
மன்னியிடும் அரனருளால் மாயை தானே (சிவ.22)

என்று சிவப்பிரகாசம் குறிக்கும்.

அசுத்த மாயை தனு, கரண, புவன, போகம் என்ற நான்கு வகையாகி, அந்நான்கும் ஒன்றைப்போல் மற்றொன்று ஒத்திராத தன்மையாய், அழியாததாய், ஆனால் அடிப்படையில் ஒன்றாய், அவ் வடிப்படை அருவமாய், சகலராகிய ஆன்மாக்களுக்கு வினைப் பயன்கள் விட்டு நீங்குமளவும் மயக்கம் செய்வதாய், அறிவற்றதாய், சலனமற்றதாய், தன்னிடமிருந்து விரிந்த பொருள்களில் எங்கும் நீக்கமற நிற்பதாய், தன் செயல்கள் விரித்துத் தோன்றிய நிலையில் மீண்டும் ஒடுங்க வரும் சங்கார காலத்தில் எல்லா ஆன்மாக்களும் தங்கும் இடமாய்ப் போகத்தில் செலுத்துவதால் மலங்களுள் ஒன்றாய், சிவபெருமானின் திரோதான சத்தியால் செயல்படுவதாய் நிலைபெற்றிருக்கும். இச் சிவப்பிரகாசக் கருத்தையே, பொழிப்புரை செய்தாற்போல் சீகாழி கண்ணுடைய வள்ளலார்,

“மெய்யாதி நால்வகையால் ஒன்றுக்கொன்று ஒவ்வா
வெகுவிதமாய் ஏகமாய விதவிதன் றருவாய்
எய்யாமல் வினையில் உழல ஆருயிர்கள் எவைக்கும்
இருப்பாகி அசேதனமாய்ச் சலிப்பிலதாய்த் தனது
பொய்யாய நிலையளவும் பூரணமாய் யாவும்
போந்த அடைவேபுரிந்து பொருந்தி வினையென்றும்
செய்யாத ஈறுகாலைச் சேதனங்கட்கு எல்லாம்
சேர்விடமாம் மாயையெனச் செப்பு நூலே” [1]

என்று திருநெறி விளக்கத்தில் அருளிச்செய்வர்.

மாயேயம்

சுத்த மாயையின் காரியம் ‘வைந்தவம்’ எனப்படுவதுபோல அசுத்த மாயையின் காரியம் ‘மாயேயம்’ எனப்படும். ***“மாயையின் காரியத்தை மாயேய மலமது”***[2] எனவரும் சித்தியாருக்கு, ‘வியாபகமாகிய ஆன்மாவின் அறிவு இச்சை செயல்களை ஏகதேசப் படுத்தும் மாயா காரியம்’ எனக் கூறி மாயா காரியம் மாயையுள் அடங்குமாயினும் பந்தித்தற்கட்படும் வேற்றுமைபற்றி மாயேய மலமென வேறு வைத்து எண்ணப்படும்” என்று சிவஞான முனிவர் மாயேயத்திற்கு விளக்கம் தருவர்.[3]

காரியப்படும் வகை

மண் குடமாகவும், பொன் பணியாகவும், பால் தயிராகவும், நெல் பொரியாகவும் உருமாறுதல் ‘பரிணாமம்’ எனப்படும். பரிணாமம், பூரண பரிணாமம், ஏகதேசப் பரிணாமம் என இரு வகையாகக் கூறப்படும்.

பூரண பரிணாமம் என்பது ஒரு பொருள் மற்றொன்றாக முழுவதும் மாறுதல். அதாவது ஒரு குடப்பாலில் சிறிது மோர் சேருமாயின் அக் குடத்தில் உள்ள பால் முழுவதும் தயிராகிவிடும்,

அவ்வாறின்றி வெண்ணெய்த் திரளும் சாணமும் சிலநாள் இருந்தால் காற்று, வெப்பம் என்ற இவற்றால் புழுவாக மாறுகின்றன. ஆயினும் அவை சிறிது சிறிதாக அவ்வாறு ஆவதன்றி, முழுதும் ஒருங்கே அவ்வாறு மாறுவது இல்லை. அதனால், அவை ஏகதேசப் பரிணாமம் எனப்படும்.

அசுத்த மாயையில் ஒரு தத்துவம் இன்னொரு தத்துவமாகப் பரிணமித்தபின், முன் நின்ற தத்துவம் அதற்குரிய செயலை எவ்வாறு செய்யும் என்ற ஐயம் எழும். ஒரு தத்துவத்தின் ஒரு பகுதி வேறொரு தத்துவமாய்ப் பரிணமித்தாலும் எஞ்சிய பகுதி அத் தத்துவமாகவே தனக்குரிய செயலைச் செய்வதால் அசுத்த மாயைக்குக் கூறப்படும் பரிணாமம், ஏகதேச பரிணாமமாகும்.[4]

அதிகார மூர்த்திகள்

ஈசுர தத்துவத்தில் இருக்கும் அட்ட வித்தியேசுரருள் அனந்த தேவர் ஏனை வித்தியேசுரருக்கும் சுத்த வித்யா தத்துவ வாசிகளுக்கும் மற்றையவர்களுக்கும் தலைவராய்ச் சுத்த மாயையின் கீழ் உள்ள அசுத்த மாயையைத் தொழிற்படுத்தி மாயா புவன தத்துவங்களை உண்டாக்குவர். எனவே, அசுத்தமாயைக்கு அதிகார மூர்த்தி அனந்த தேவர் ஆவார். வித்தியேசுரரால் தொழிற்படுத்தப்படுவதால் அசுத்த மாயா காரியங்கள் 'வித்தியா தத்துவங்கள்' எனப் பெயர்பெறும் (பிற்சேர்க்கை, ப.384).

பிரளயாகலருள் மலபரிபாக முடையோராய்ப் பரமசிவனால் அநுக்கிரகஞ் செய்யப் பெற்றவர் நூற்றுப் பதினெட்டு உருத்திரர். இவருள்ளே சகலராகிய ஆன்மாக்களுக்குத் தலைவரான சீகண்ட ருத்திரர் மத்தியப் பிரளய முடிவில் பிரகிருதி தத்துவத்திற்குக் கீழ்ப்பட்ட தத்துவங்களையும் புவனங்களையும் உண்டாக்கிச் சகலருள்ளே சிறந்தவரை பிரம பத, விட்ணு பதங்களில் இருத்துவர்.[5] இவரால் செயல்படுத்தப்படும் தத்துவங்கள் 'ஆன்ம தத்துவங்கள்' எனப்படும் (பிற்சேர்க்கை, ப.385).

தத்துவங்கள் தோன்றும் முறை

அனந்த தேவரின் அருளால் அதோமாயை எனப்பட்ட அசுத்த மாயையிலிருந்து உயிர்களுக்குப் போகத்தில் இச்சையை மிகுதியாக உண்டாக்கும் கலை (1), காலம் (2), நியதி (3) யும், அக்கலையிலிருந்து வித்தை (4), அராகம் (5) ஆகிய இவ்வைந்தும் தோன்றும்.

சீகண்ட ருத்திரரின் செயலால் முற்கூறிய கலையிலிருந்து மூலப் பிரகிருதி (6) தோன்றும். அதிலிருந்து குண தத்துவம் (7) தோன்றும். அக் குண தத்துவத்தில் சாத்விகம் மிகுந்து மற்ற தாமச, இராசதங்கள் குறைந்து காணப்படும் புத்தி (8) தத்துவத்திலிருந்து அகங்கார (9) தத்துவம் தோன்றும். புத்தியின் வேறாகத் தெரிவிக்கப்பட்ட இவ் வகங்கார தத்துவம் தைசத அகங்காரம், வைகாரி அகங்காரம், பூதாதி அகங்காரம், என மூன்று விதமாகும். இவற்றுள் தைசத அகங்காரத்தில் சத்துவ குணத் தொடர்புடைய மன தத்துவமும் (10), ஞானேந்திரியங்களான செவி (11), மெய் (12), கண் (13), நாக்கு (14), மூக்கு (15) முதலிய ஐந்து தத்துவங்களும் விரிந்து காணப்படும்.

வைகாரி அகங்கார தத்துவத்தில் இராசத குணம் நிலைபெற்ற கன்மேந்திரியங்களான வாக்கு (16), கால் (17), கை (18), எருவாய் (19), கருவாய் (20) முதலிய ஐந்தும் காரியப்பட்டு வரும். இறுதியாகிய பூதாதி அகங்காரம் தாமத குணம் மிகுந்த ஓசை (21), ஊறு (22), ஒளி (23), சுவை (24), மணம் (25) எனப்படும் தன்மாத்திரைகளைத் தரும். அந்தத் தன்மாத்திரைகளிலிருந்து முறையே ஆகாயம் (26), காற்று (27), தீ (28), நீர் (29), நிலம் (30) ஆகிய பூதங்கள் தோன்றும். அவ் வாகாயம் முதலிய பூதங்கள் ஓசை முதலிய குணங்களில் ஒவ்வொரு குணத்தை ஏற்றமாக முறைப்படி பொருந்தும். அப் பூதங்களுக்கு முறையே சதாசிவர், மகேசுரன், உருத்திரன், திருமால், பிரமன் ஆகியோர் கடவுள் ஆவர்.

ஆகாயம் - ஓசை, காற்று - ஓசை, ஊறு, தீ - ஓசை, ஊறு, ஒளி, நீர் - ஓசை, ஊறு, ஒளி, சுவை, நிலம் - ஓசை, ஊறு, ஒளி, சுவை, மணம் என்ற வகையில் ஐம்பூதங்களின் குணங்கள் ஏற்றம் உடையன.

"வெளியிடை ஒன்றாய் நின்ற வெளிமுதல் வெளியே போற்றி
வளியிடை இரண்டாய் நின்ற வளிமுதல் வளியே போற்றி
ஒளியிடை மூன்றாய் நின்ற ஒளிமுதல் ஒளியே போற்றி
தெளிபுனல் நான்காய் நின்ற தெளிபுனல் முதலே போற்றி
படியிடை ஐந்தாய் நின்ற படிமுதல் படியே போற்றி" [6]

என வரும் தணிகைப் புராணம் இதனை விளக்கி நிற்கும். இவ்வாறு தத்துவங்கள் தோன்றும் முறையை,

"அருத்திமிகும் கலை காலம் நியதியுடன் வித்தை
அராகம் இவை அனந்தரால் மாயைதனில் ஆகும்
உருத்திரரால் கலையதனில் பிரகிருதி குணங்கள்
உளவாகும் ஆங்காரம் புந்திதனில் உதிக்கும்
தெரித்தவிது திரிவிதம் ஆம் தைசத வைகாரி
திகழ்தரு பூதாதியென திருந்திய சாத்துவிகம்
விரித்தகுணம் மனம் புத்தி இந்திரியம் என்று
விளம்பிய சோத்திராதி முதல், விளங்கியிடும் விரிந்தே" (சிவ.26)

மன்னிய கன் மேந்திரியமான இராசதம் சேர்
வாக்கு ஆதி வைகாரி மருவிவரும் சத்தம்
தன்னை முதலாகிய தாமதம் மிகும் மாத்திரைபின்
தரும் இதனில் வான் அநிலம் அனல்புனல் மண் சத்தம்
முன் அதனில் வெளியாதி ஒன்று ஒன்று ஆகும்
முறையில் உறும் இருமை அயன் முடிவாம் முன்னே
உன்னு சதாசிவர் ஆதி அதிபதிகள் ஒடுக்கம்
உதித்த அடைவு எனவுரைப்பர் உணர்ந்துளோரே" (சிவ.27)

என இரு விருத்தங்களில் சிவப்பிரகாசம் எடுத்துக் காட்டும்.

தத்துவங்களைச் சொல்லுமிடத்து அவை தோன்றும் முறையில் வைத்துச் சொல்லுதலும், ஒடுங்கும் முறையில் வைத்துச் சொல்லுதலும் ஆகிய இரு முறைகள் சொல்லப்படும். அவற்றுள் முன்னது, 'தோற்றமுறை' என்றும், பின்னது 'ஒடுக்கமுறை' என்றும் கூறப்படும். தோற்றமுறை 'உற்பத்திக் கிரமம்' எனவும், ஒடுக்கமுறை 'சங்காரக் கிரமம்' எனவும் அழைக்கப்படும்.

தோற்றமுறையில் முன்னிற்பது மேலே உள்ளதாகவும், பின் நிற்பது கீழே உள்ளதாகவும் சொல்லப்படும். மேலே உள்ளது வியாபகம், கீழே உள்ளது அதனின் வியாப்பியம் என்று கொள்ளவேண்டும்.

தத்துவங்கள் மாயையிலிருந்து தோன்றுவதைச் சித்தியாரில் காலம் முதலாகச் சொல்லியிருக்க, சிவப்பிரகாசத்தில் கலை முதலாகக் கூறப்பட்டது. சித்தியார் பிரபஞ்சத் தோற்றம் சொல்லுகையால் கால முண்டாகவே பிரபஞ்சம் தோன்றுகையால், காலம் முதலாகச் சொல்லப்பட்டது. இது தோற்றமுறைமை. சிவப்பிரகாசத்தில் ஆன்மாக்களுக்கு உணர்த்தும் முறையைச் சொல்லுகையாலே உணர்த்துவதற்கு கலை முந்தி எழுப்ப வேண்டுமாகையால் கலை முதலாகச் சொல்லப்பட்டது. இது தொழிற்பாட்டு முறைமை ஆகும்.[7]

மாயா காரியமான தத்துவங்கள் முப்பத்தொன்றில் மேலே கண்ட இரு திருவிருத்தங் களிலும் புருட தத்துவம் நீங்கலாக முப்பது தத்துவங்கள் மட்டுமே சொல்லப்பட்டன. புருட தத்துவம், தத்துவம் என்று கூறப்படினும் இஃது ஏனையவைபோல ஒரு தனித் தத்துவம் அன்று. எனவே, தத்துவ சமூகத்தில் புருட தத்துவம் சொல்லாமல் தத்துவங்களின் தொழில்பற்றிக் கூறும்போது அத் தத்துவத்தின் தன்மை தெரிவிக்கப்படும்.

இங்ஙனம் சொல்லப்பட்ட மாயா காரியங்களால் உண்டான தேகத்தைப் பிறவிதொறும் ஆன்மாக்கள் பொருந்தி நின்று கன்மத்தைப் புசித்துவரும்.

“கருமத்து அதிகாரந்தத் தளவும்
விதி முறை கொடுக்கும் வியப்பிற்று அஃது அறி” [8]

என வரும் ஞானாமிர்தத்தில், “ஆன்மாக்கள் கன்ம பலம் புசித்து அறுமளவும் தனுகரணாதிகள் வேண்டியிருத்தலின், அவ் வெல்லைகாறும் பிராரத்துவமான தேகத்தை நியதிப்படி முறையாகச் சலிப்பின்றிக் கொடுக்கும் மாயையின் செயல் ஆச்சரியத்தை உடையது என அறிந்து கொள்ள வேண்டும்” என்பார் வாகீச முனிவர்.

இருள் வெளியாம் தன்மை

உயிரைத் தோற்றமில் காலந்தொட்டே பற்றிநிற்கும் ஆணவத்தை நீக்கும்பொருட்டு இறைவன் திருவருளால் தூய மாயையின் காரியமான வாக்குகளும், கலை முதலிய தத்துவங்களும் ஆன்மாவை வந்து பொருந்தும். விளக்கு ஒளியானது அதைச் சேர்ந்த தண்டு, தகழி, நெய், திரி முதலிய பொருள்களுடன் கூடி ஒளிதருமாறுபோல, ஆன்மாவும் வாக்குகளையும் தத்துவங்களையும் கொண்டு விளக்கம் பெறும். இவ்வாறு வாக்கு கலை ஆகியவற்றால் ஞானத்தைத் தருகின்ற திருவருளை ஆன்மாக்கள் உணர்ந்து சாராமல் ஆணவம் தடுத்து நிற்கும். இவ்வாறு மாறுபட்டு வரும் மலம், மாயைகளின் இயல்பை உணருமிடத்து இருளும் ஒளியும் போல்வதொரு தன்மையாய் இருக்கும். இந்நிலையை,

“புகலும் மலம் ஒழித்தற்குக் கலாதிமுதல் மாயை
பொருந்தியிடும் அரன் அருளால் போதம் தீபம்
சகலம்எலாம் உடன் ஆயவாறு போலத்
தரும் அருளைமலம் உயிர்கள் சாராமல் மறைக்கும்
இகலிவரும் இவையுணரின் இருள்வெளியாம் தன்மை
எய்தும் இவை தன் செய்தி” (சிவ.37)

என்று சிவப்பிரகாசம் விளக்கும்.

ஆணவம் இருள் போன்றது; மாயை ஒளி போன்றது. இந்த ஒளி பகற்காலத்தில் விளங்கும் கதிரொளியைப்போல அல்லாமல் இருளைச் சற்றே நீக்கும் கைவிளக்குப் போன்றது. விளக்கு என்பது ஒளியாகிய சுடரை மட்டும் குறியாமல் தகழி, திரி, நெய், ஆகியன சேர்ந்து அமைந்தது. அதுபோல மாயையின் காரியங்கள் என்பது சுத்த மாயை, அசுத்த மாயை, பிரகிருதி மாயை ஆகியவற்றின் காரியங்களையும் ஒரு சேரக் குறிப்பதாகும்.

சிவஞான மாபாடியத்தில் ‘மாயா தனு விளக்காம்’ என்னும் பாடலுக்கு உரை வகுத்த சிவஞான முனிவர், “காட்டாகி நின்று விடயங்களை யறியுமாறு ஆன்ம ஞானத்தை விளக்குதல் மாயையின் செய்தி; அவ்வறிவைத் தடுத்து நிற்றல் மலத்தின் செய்தி. இவை யிரண்டும் இங்ஙனம் ஒளியும் இருளும் போல இகலி நிற்றலின் அத் தன்மைத்தாகிய மாயை இத் தன்மைத்தாகிய மலமாறு யாண்டையது? (மாயையை மலம் என்று கொள்வது எவ்வாறு)” என்று ‘இகலிவரும் இருள்வெளியாம் தன்மை’ பற்றிக் கூறுவர்.⁹

எனவே, ஆணவம் உயிரோடு கலந்து நின்று அதன் அறிவு இச்சை செயல்களை மறைக்கும். மாயையின் காரியங்கள் உயிருக்கு வேறாய் நின்று அதன் அறிவு இச்சை செயல்களை விளக்கும் என்பது விளங்கும். மேலும், இவ் விருத்தம் ஆன்மா கேவல நிலையிலிருந்து சகல நிலையை அடையும் நிலையைக் குறிக்கும்.

தத்துவங்கள் தொழிற்படும் முறை

இதுவரை கலை தொடங்கி பூதங்கள் இறுதியாக உள்ள தத்துவங்கள் முப்பதின் தோற்றம்பற்றி விளக்கிய சிவப்பிரகாசம், ஆன்மா ஆண்வ மலத்திலிருந்து நீங்கி அதன் அறிவு (ஞானம்), விழைவு (இச்சை), செயல்கள் (கிரியை) நன்கு செயல்படுவதற்கான இத்தத்துவங்களின் தொழில்பற்றியும் அவை எவ்வாறு ஆன்மாவின் அறிவுக்கு உதவுகின்றன என்றும் கூறத் தொடங்குகிறது.

ஒன்றினை அறிதல், அதனை விரும்புதல், அதற்காக முயலுதல் என்னும் முத்திறனும் ஆன்மாவிற்கு இயல்பாக உள்ளன. இம் மூன்றனுள் அறியும் திறம் ஞானசத்தி எனப்படும்; விழையும் திறன் இச்சா சத்தி எனப்படும்; செயல்திறன் கிரியா சத்தி எனப்படும். இந்த ஞானம், இச்சை, கிரியை என்னும் மூன்றும் செயற்படும்போதே ஆன்மாவிற்கு உலக போகமாகிய நுகர்ச்சிப் பொருள்களிடத்தில் நாட்டம் உண்டாகும்.

அவற்றை அநுபவிக்கப் புகும் முயற்சி உண்டாகும்.[10] இம் மூன்றிலும், ஆன்மாவின் ஞானத்தையும், இச்சையையும் செயல்படுத்த கிரியாசத்தி முதலில் வேண்டும்.

கலை

ஆணவ மலத்தினால் மேலே சொன்ன மூன்று சத்திகள் (ஆற்றல்கள்) மறைக்கப்பட்டுச் சடம்போலக் கிடக்கும் ஆன்மாவிற்கு இந்தக் 'கலை' என்னும் தத்துவம் அந்த ஆணவ மறைப்பைச் சிறிது நீக்கிக் கிரியா சத்தியை (செயலாற்றலை) எழுப்பும். 'கலித்தல்' என்பது 'நீக்குதல், செலுத்துதல்' என்னும் பொருள்களைத் தரும்.[11] ஆதலால் மலத்தை நீக்கிச் செயலை எழுப்புகின்ற இத் தத்துவம் 'கலை' எனப் பெயர் பெற்றது.

ஆணவ மலம், எங்குமாய் நிற்பதொரு பொருள். ஆகையால் அதனை 'நீக்குதல்' என்பது 'வேறிடத்தில் பெயர்ந்து செல்லச் செய்தல்' எனப் பொருள்படாது. மற்று, 'நெருப்பினது சுடும் சத்தியைச் செயற்பட ஒட்டாது தடுத்து நிற்கின்ற தடை மந்திரம் போல, ஆணவ மலத்தினது சத்தியைச் செயற்பட ஒட்டாது தடுத்து நிற்றல்' என்றே பொருள்படும்.

'சிறிது நீக்குதல்' என்பது வினைக்கு ஈடாக ஆன்மாவிற்கு விளங்குதற்குரிய பொருள்களை மட்டும் ஆணவ மல சத்தி சென்று மறைக்க ஒட்டாது தடுத்தலாகும்.[12]

வித்தை

மேற்கூறிய 'கலை' என்னும் தத்துவத்திலிருந்து 'வித்தை' என்னும் தத்துவம் தோன்றும். இது கலையைப் போன்றே ஆணவத்தைச் சிறிது நீக்கி, அதனுடைய ஞான சத்தியை (அறிவாற்றலை) எழுப்பும். இதுவே, பொறிகளின் வாயிலாகப் பொருந்தும் பொருளைப் புத்தி உறுதிப்படுத்தித் தன்னிடத்துக் கொடுக்க ஆன்மாவிற்கும் இப்புத்திக்கும் இடையில் நின்று பொருளுணர்வை ஆன்மா பொருந்துமாறு ஆன்மாவிற்கு அறிவைச் சுட்டி நிற்கும்.

> "............வாயில்களின் பயனைப்
> புத்திதர வித்தை யிடை நின்று அறிவை உயிர்க்குப்
> பொருத்தியிடும் வகை புணரும் புனிதசத்தி புணர்ந்தே" (சிவ.39)

என்பது சிவப்பிரகாசம். அதாவது அறியப்படும் பொருளில் உணர்வு அழுந்தி, இன்பமோ, துன்பமோ அநுபவிக்கும் நுகர்ச்சி உணர்வு. இது 'தன்வேதனைக் காட்சி' எனப்படும். இதற்கு முன், ஐம்பொறிகள் பொதுவாக அறியும் வாயிற் காட்சியும், புத்தி நிச்சயித்து அறியும் 'மானதக் காட்சியும்' நிகழும்.

இவ்வாறு கலை, வித்தைகளின் வழியாக ஆன்மா அறியும் அறிவுக்குத் தக்கவாறு சுத்த வித்தை நால்வகை வாக்குகளினாலும், ஐந்து தத்துவ கர்த்தாக்களினாலும் விளங்குகின்ற பொருளை அறியும் அறிவு அந்த ஆன்மாக்களிடத்துப் பொருந்தும்.

> "இத்தகைமை இறையருளால் உயிரறியும் அறிவுக்கு
> ஈடாக வாடாதே ஈரிரண்டின் உரைத்த

வித்தை முதல் ஐவரான் விளங்கும் ஞானம்
மேவியிடும் எனவுரைப்பர்" (சிவ.39)

'கலை' என்னும் தத்துவத்தில் மல சத்தி நீங்கியவுடன் கிரியா சத்தியோடு ஞான சத்தியும் எழுப்புதல் கூடாதோ? ஞான சத்தியை எழுப்புதற்கு வேறு சத்தி வேண்டுமோ? எனின், மல சத்தி சிறிது நீங்கியவிடத்து அறியாமை நீங்கி அறிய முயலும் முயற்சி உண்டாகுமே அன்றி, அறிவு தெளிவாக நிகழமாட்டாது. ஆகவே, அறிவை அங்ஙனம் விளக்குவதற்கு 'வித்தை' என்னும் தத்துவம் இன்றியமையாததாகும்.

அறிய முயலாமையை நீக்குதல், அறிவிலுள்ள கலக்கத்தை நீக்குதல் இவை இரண்டும் ஒன்றுக்கொன்று மாறுபட்டன அல்ல. ஆகையால், அவ்விரண்டிற்கும் ஒரு கருவியே போதும் எனின், ஒரு கருவி ஒரு பொழுது ஒரு தொழிலைச் செய்யுமன்றி இரு தொழிலை ஒருங்கு செய்யாது. எனவே, இவ்விரு தொழில்களும் தம்முள் மாறுபட்டன அல்ல என்பதுபற்றியே 'கலை' என்னும் தத்துவமே ஒரு கூற்றில் 'வித்தை' எனப் பரிணமிக்கும் என்று கூறப்பட்டது. வித்தை 'நேரே மாயையினின்று தோன்றும்' என்றும் கூறாது, 'கலையினின்றும் தோன்றும்' என்று கூறப்பட்டது.[13]

ஏனைய தத்துவங்களும் இவ்வாறு காரண காரியங்களால் ஒன்றிலிருந்து மற்றொன்று தோன்றுதலாகிய உற்பத்திக் கிரமத்தை ஆகம அளவையான நூல்களின் வழி மட்டுமன்றி, இவ்வகையால் அனுமான அளவையாலும் உய்த்துணர்ந்து கொள்ளலாம்.

அராகம்

வித்தையிலிருந்து 'அராகம்' தோன்றி ஆன்மாவின் இச்சா சத்தியை (விழைவாற்றலை) எழுப்பும். இச்சையாவது ஞானத்தின் வேறுபாடேயாகையால் இது ஞான சத்தியை விளக்குவதாகிய வித்தையினின்றும் தோன்றுதல் பொருத்த முடையதே.

"பெற்றது கொண்டு பிழையே பெருக்கிச்
சுருக்கும் அன்பின் வெற்றடியேன்"

என வரும் திருவாசகத்தில் மாணிக்கவாசகர் பெற்றவற்றிலேயே பேராசைமிகும் என்பார். இத் திருமுறைக் கருத்தையே,

"தன் கன்மத்துக்கு ஈடாய் பெற்றதனில்
ஆசைதனைப் பெருகுவிக்கும் அராகம்"

என்று சிவப்பிரகாசம் கூறும்[14]

'அருத்தி மிகும் கலை காலம் நியதியுடன் வித்தை
அராகம் இவை அனந்தரால் மாயைதனில் ஆகும்" (சிவ.26)

என்று முன்னர் சிவப்பிரகாசத்தில் தோற்றமுறை சொல்லப்பட்டது, மாயையே இவை அனைத்திற்கும் பரம்பரையாய்க் காரணமாதல்பற்றி யாகும்.

நியதி

கலை முதலிய தத்துவங்களால் கிரியை, ஞானம், இச்சைகள் விளங்கப்பெற்றுப் போகத்தை நுகரும் ஆன்மாக்கள், இன்பத்தில் விருப்பமும், துன்பத்தில் வெறுப்பும் கொள்வன. அதனால் அவை தமக்கு வருகின்ற துன்பங்களை விலக்கிவிடவும், பிறர்க்கு வரும் இன்பங்களைக் கைக்கொள்ளவும் முயலும். அவை அவ்வாறு செய்யாமல் அவையவை செய்த வினையின் பயன்களை அவையவையே அநுபவிக்குமாறு வரையறுத்து நிறுத்துவது ‘நியதி’ என்னும் தத்துவமாகும்.

நாட்டை ஆளும் அரசர் தமது ஆணையின் வலிமையினால் நல்லது செய்தார்க்கு நன்மையும் தீயது செய்தார்க்கு ஒறுத்தலும் இயற்றுவதுபோல, ஆன்மாக்களின் முன்னை வினை செய்தவர்க்கன்றி மற்றவர்க்குச் சேராவாறு நியதி வரையறை செய்யும்.

“தேசம்மிகும் அரசர்தரும் ஆணை செய்தி
செய்தவரைத் துய்ப்பிக்கும் செய்கை போல,
நேசம் உறும் தம்கன்மம் நிச்சயித்து நிறுத்தும்” (சிவ.40)

எனச் சிவப்பிரகாசம், நியதிபற்றிக்கூறும்.

காலம்

மண்ணாகிய முதற் காரணமும், குயவனாகிய நிமித்தகாரணமும், சக்கரம் முதலிய துணைக் காரணங்களும் எப்பொழுதும் ஒன்றுகூடியிருக்க, குடம் முதலிய காரியங்கள் தோன்றிக்கொண்டே இருக்கவில்லை. ஏகதேசமாக அவை தோன்றுகின்றன. எல்லாக் காரணங்களும் ஒன்று கூடியிருக்கவும், ‘காரியம் தோன்றாமைக்குக் காரணம், இன்றியமையாத ஒரு காரணம் ஏனைக் காரணங்களோடு ஒன்று சேராதிருத்தலே’ என்பது விளங்கும். அந்த ஒன்றே ‘காலம்’ ஆகும்.[15]

பழ மரங்கள் எல்லாக் காலத்திலும் பூத்துக் காய்த்து கனிகளைத் தருவதில்லை. அவ்வக் காலம் வந்தால் மட்டுமே காய்த்துப் பழுத்துப் பயன் தருவதைக் காண்கிறோம். அதுபோல ஒருவர் எவ்வளவுதான் முயன்றாலும், அதற்குரிய காலம் வரும்பொழுதுதான் அந்த முயற்சிக்குப் பயன் கிடைக்கும்.

‘அடுத்து முயன்றாலும் ஆகும்நாள் அன்றி
எடுத்த கருமங்கள் ஆகா; - தொடுத்த
உருவத்தால் நீண்ட உயர் மரங்கள் எல்லாம்
பருவத்தால் அன்றிப் பழா”

என்னும் முதுரையை எடுத்துக்காட்டி, கால தத்துவத்தின் இன்றியமையாமையை விளக்குவர் ஆ.ஆனந்தராசன்.[16] நியதி தரும் நுகர்ச்சியை இத்தனை காலம் நுகர வேண்டும் என்பதைக் காலம் தீர்மானிக்கும். அநுபவித்த இன்ப துன்ப நுகர்ச்சியினால் வினைகளைக் கழியச் செய்து அவ் வினையினின்று பிரிப்பது இறந்த காலம்; வினையினால் விளையும் பயனை உரிய பருவம் வந்தவுடன் ஆன்மாக்களிடம் சேர்த்து, அநுபவிக்கின்ற பலத்தையும் பயனையும் தருவது நிகழ்காலம்; எதிர் காலம் என்பது

ஆன்மாக்கள் அறிய முடியாதபடி மறைக்கப்பட்டு இருப்பதனாலே புதுமையான நுகர்ச்சிகளை ஆன்மா எதிர்நோக்கும்படி விளைவித்து நிற்பதாகும். இதனை,

> “நிகழ்காலம் கழிகாலம் எதிர்காலம் என்றே
> ஓசைதர வரும் காலம் எல்லை பலம் புதுமை
> உறுவிக்கும் இறைசத்தி உடனாய் நின்றே” (சிவ.40)

எனச் சிவப்பிரகாசம் கூறும். உண்மை விளக்கம் நூல் கால தத்துவத்தைப் பற்றிக்கூறும் பொழுது ‘எல்லை பலம் புதுமை’ என்று கூறியிருப்பது இங்கு நினையத் தக்கது.

பஞ்ச கஞ்சுகம்

இதுகாறும் கூறி வந்த தத்துவங்களில் அராகம் ஆன்மாவின் இச்சா சத்தியையும், வித்தை ஞான சத்தியையும், கலை கிரியா சத்தியையும் விளக்கி, ஆன்மாவைப் போகங்களை நுகருமாறு புத்தி தத்துவத்தில் செலுத்தி நிற்கும். நியதி இதனை நுகர வேண்டும் என்று வரையறுக்கும். காலம் அந்நுகர்ச்சிக்கான காலத்தை எல்லைப்படுத்தும். இவ் வைந்து கருவிகளும் ஆன்மாவுக்கு இன்றியமையாதனவாய் ஆன்மாவோடு பொருந்தி எப்பொழுதும் நீங்காமல் சட்டைபோல ஒன்றாய் ஒட்டியே யிருக்கும். அதனால் அவை **‘பஞ்ச கஞ்சுகம்’** என்னும் பெயர்பெறும் - (கஞ்சுகம் - சட்டை).

புருடன்

மேலே கூறிய பஞ்ச கஞ்சுகத்துடன் கூடி நிற்றலால் ஆன்மா பொதுவகையால் போகத்தை நுகரும் தகுதியைப் பெறும். அதாவது, போகங்களை நுகர்வோனாம் தன்மையாகிய போத்திருத்துவத்தைப் பெறும். ஆன்மா சிறப்பு வகையால் போத்திருத்துவத்தை எய்தாதபோது போகங்களை நுகர இயலாது. பின்னர் பிரகிருதியோடு தொடர்பு கொள்ளும்போதே அத் தகுதியைச் சிறப்பு வகையால் பெறும். பிரகிருதியே உலக அநுபவத்தைத் தருவது ஆதலால் அதனோடு பொருந்தும்போதே ஆன்மா புருடனாம் நிலையைச் சிறப்பாகப் பெறுகிறது. அப்பொழுது மூலப் பிரகிருதியிலுள்ள பஞ்ச கிலேசங்களைப் பொருந்தி நிற்கும். இதனால், காலம் முதலிய ஐந்தினாலே வரும் தகுதி, பொதுத் தகுதி என்றும், பிரகிருதியினாலே வரும் தகுதி சிறப்புத் தகுதி என்பதும் விளங்கும்.

பஞ்சகிலேசங்கள் ஆன்மாவிற்குப் ‘புருடன்’ என்னும் நிலையைத் தருவதனால், **‘பும்ஸ்துவ மலம்’** எனப்படும்.[17] (பும்ஸ்துவம் - புருடனாகும் தன்மை) பஞ்சகிலேசமானது அவிச்சை, அகங்காரம், அவா, ஆசை, கோபம் என்ற ஐந்தாகும்.

வியாபகம் உடைய ஆன்மா, புருடன் என்று கூறப்படுவதற்கு அடிப்படையாக நின்ற தத்துவங்கள் சடப் பொருள்களேயாகும். புருட தத்துவம் சடம். இது உபசார வழக்காகும். ஆன்மா என்பது உண்மையில் சித்தாகவும், உபசாரத்தால் சடமாகவும் உள்ளது. ஆதலால், சித்தியாரில் ‘சித்து அசித்து ஆன்மா ஒன்று’ என்று கூறும்.[18] இது

ஆன்மாவின் ‘சார்ந்ததன் வண்ணமாய் நிற்கும்’ தன்மையாகும். இத்தன்மை பின்னர் உண்மை அதிகாரத்தில் விளக்கப்படும்.

தீக்கையில் ‘தத்துவ சுத்தி’ என்பது தத்துவங்களின்றும் ஆன்மாவை விடுவித்தலே யாகையால், கீழ்ப்படியினின்று சிறிது சிறிதாக மிகுந்து வந்து, இறுதியில் ‘மூலப் பிரகிருதி’, ‘சீகண்ட ருத்திர புவனம்’ என்பனவற்றின் நீக்கத்தால் முற்றுப்பெறுவதாகும். இது கருதியே சிவப்பிரகாசத்தில்,

> “மெய் வகைய கலாசுத்திதனில் இதற்கும்சுத்தி
> மேவியிடும் வகைதானும் விரும்பிய நூல் விளம்பும்” (சிவ.41)

எனக் கூறப்பட்டது (பிற்சேர்க்கை, ப.381).

பிரகிருதி

இதுவரை ஆன்மா, கலை முதலிய பஞ்ச கஞ்சுகம் உடையவனாகிப் போகங்களை நுகர்வதற்குரிய பக்குவத்தை எய்தியது விளக்கப்பட்டது. இதன் பின்னர்க் கூறப்படும் குணம் முதல் நிலம் ஈறாகிய யாவும் ஆன்மாவுக்குப் போக்கியங்கள் என்று கூறப்படும். போக்கியங்கள் என்பது நுகரப்படுவன என்று பொருள்தரும். இவை தோன்றுவதற்குக் காரணமாவது மூலப்பகுதி என்னும் தத்துவமாகும். இது கலையிலிருந்து தோன்றுவது. அதனால்தான், சிவப்பிரகாசம்

> “செய்வகையின் தொடர்ச்சி இங்கு தோற்றுவிக்கும் குணத்தின்
> சேர்வு புரி பிரகிருதி” (சிவ.41)

என்று கூறும்.

பிரகிருதி முக்குண வடிவாய் இருக்கும். அவை, சாத்துவிகம், இராசதம், தாமதம் என்பன. மணத்தினைத் தன்னுள்ளே நுட்பமாய் அடக்கி நிற்கும் அரும்பு நிலைபோல அம் முக்குணங்களையும் வெளிப்படாது சூக்குமமாய் அடக்கி நிற்கும் நிலையே ‘பிரகிருதி’ ஆகும். ‘பிரகிருதி’ என்ற சொல்லுக்குக் ‘காரணம்’ என்பது பொருள். மேற்கூறிய முக்குணங்களுக்கும் காரணமாதல்பற்றி ‘பிரகிருதி’ எனப்பட்டது. தமிழில் அது ‘மூலப் பகுதி’ என்றழைக்கப்படும்.[19] பும்ஸ்துவ மலம் என்று அழைக்கப்படும் ‘பஞ்ச கிலேசங்கள்’ விளைவதற்கும் இம் மூலப்பகுதியே காரணமாகும்.

குணம்

முக்குணங்களும் வெளிப்படாத காரண நிலையில் நின்ற பிரகிருதி பின்பு அக் குணங்கள் வெளிப்பட்டுத் தம்முள் சமமாய் நிற்கும் நிலையினதாய் இருக்கும். அந் நிலையில் அது ‘குண தத்துவம்’ எனப்படும். வெளிப்பட்டதனை ‘வியத்தம்’ என்றும், வெளிப்படாது நிற்பதனை ‘அவ்வியத்தம்’ என்றும் கூறுவர். எனவே, பிரகிருதி ‘அவ்வியத்தம்’ என்றும் கூறப்படும்.

குணங்கள் மூன்றும் விரவி நின்றே தொழிற்படுவதால் மூன்று தனித்தனித் தத்துவங்களாகக் கொள்ளப்படாமல் குண தத்துவம் ஒன்றே எனப்படும். இங்கு, மூலப்

பகுதியான பிரகிருதியிலிருந்து குண தத்துவம் துணி கூடாரம் ஆவதுபோல் விருத்தியாகத் தோன்றும் என்பது குறிக்கத்தக்கது. மூலப் பகுதியின் விருத்தியாதலால் அதனோடு ஒன்றாகவும் வைத்து எண்ணப்படும்.

சாத்துவிகம் ஏனைய இரண்டு குணங்களை அடக்கித் தான் மேம்பட்டிருக்கும்போது அறிவும் (பிரகாசம்) மெத்தென்ற தன்மையும் (லகுதை) தோன்றும்.

இராசதம் ஏனைய இரண்டு குணங்களை அடக்கித் தாம் மேம்பட்டிருக்கும்போது ஒன்றுவிட்டு ஒன்றுபட்டும் அசைவும் (வியாவிருதி), கொடிய செயற்பாடும் (அடர்ச்சி) தோன்றும்.

தாமதம் ஏனைய இரண்டு குணங்களை அடக்கித் தான் மேம்பட்டிருக்கும்பொழுது தன்னைத்தான் மதித்தலும் (மிகும் கௌரவம்) தகாத செயல்களில் ஈடுபடுதலும் (அநியமம்) தோன்றும்.

இவ்வாறு சாத்துவிகத்தில் சாத்துவிகம், இராசதம், தாமதம்; இராசதத்தில் இராசதம், தாமதம், சாத்துவிகம்; தாமதத்தில் தாமதம், சாத்துவிகம், இராசதம் என ஒன்பது வகையாகக் கூறப்படும்.

முக்குணங்களுக்கும் மேற்சொல்லிய விருத்திகளின்றி வேறு விருத்திகளும் உண்டு. அவையாவன: சாத்துவிக குண விருத்திகள் பதினாறு, இராசத குண விருத்திகள் ஒன்பது; தாமத குண விருத்திகள் ஒன்பது. முன் சொல்லிய ஒன்பது குணங்களும் இம் முப்பத்து நான்கு விகற்பங்களுக்குள் அடங்கும். இவ்வாறு இன்னும் பலவாறாகப் பெருகும் என்பதால் 'அலகில் குணம்' என்று சிவப்பிரகாசம் கூறும். இம் மூன்று குணங்களும் ஆன்மாதோறும் கலந்து நிற்கும். தாமதம், பொறிவழி வரும் புலன்களை நுகர்ந்து ஆசையை உண்டாக்கும். இராசதம் கொண்டாடப்பட்டு வரும் போகங்கள் பலவற்றையும் பற்றச் செய்யும்; சாத்துவிகம் எப்பொழுதும் நீங்காத நிறையான ஒளியாய் இருக்கும். இதுவரை சொல்லப்பட்ட குண தத்துவத்தில் முக்குணங்களின் தொழிலை சிவப்பிரகாசம் பின்வருமாறு விளக்கி நிற்கும்:

"சேர்வுபுரி பிரகிருதி திரிகுணமாம் அவைதாம்
இவ்வகையால் சாத்துவிக ராசத தாமதமாய்
இயம்புவர்கள் ஒன்றிரண்டு குணம் ஏற்கை உடைத்தே" (சிவ.41)

"அலகில் குணம் பிரகாசம் லகுதை, வியாவிருதி
அடர்ச்சி மிகும் கௌரவம் அநியமம் இவை அடைவே
நிலவியிடும் மும்மூன்றும் உயிர் ஒன்றில் கலந்தே
நிற்கும் இவை நிறைபுலனின் பயன் எவையும் கவரும்
குலவிவரு போகங்கள் இடமாம் மாறாக்
குறைவில் ஒளியாம்" (சிவ.42)

புத்தி

முக்குணங்கள் சமமாய் நின்ற குண தத்துவத்திலிருந்து சாத்துவிக குணம் மிகுந்தும் ஏனை இரண்டு குணங்களும் குறைந்தும் நிற்க, அவ்வாற்றால் பரிணமித்துத் தோன்றுவது 'புத்தி' என்னும் தத்துவமாகும். இது வித்தையினால் பொதுவாக விளங்கிய ஞானத்தைப் பொருள்கள்தோறும் சிறப்பு வகையால் விளக்கி அவற்றின் பெயர், இனம் முதலியவற்றை இன்னது என உறுதிப்படுத்தும் கருவி. அதன்பின் அவ்வப் பொருள்களில் தோய்ந்து ஆன்மாவை நுகர்விக்கும்.

புத்தி குணங்களில் அராகம் என்பதொன்றுண்டு. அது ஆன்மாவின் இச்சா சத்தி, புத்தி தத்துவத்தை அதிட்டித்தபொழுது புத்தியின்கண் நிகழ்ந்து, சிறப்பு வகையால் விடயங்களை அநுபவிப்பதற்குத் துணை செய்யும். இது புத்தியின் அராகம் எனப்படும். இது **ஞான ரூப அராகம்** எனப்படும். இஃது உள்ளபொழுது பொருள்களின்மேல் சிறப்பு இச்சை தோன்றும். இது இல்லாதபொழுது அந்த இச்சை தோன்றாது.

அராக தத்துவம் ஆன்மாவைவிட்டு எப்போதும் நீங்காது உடன் இருக்கவே செய்யும். இது இல்லை யெனின் ஒரு விடயத்திலும் விருப்புத் தோன்றாது. எனவே, இது **வாசனா ரூப அராகம்** எனப்படும். இஃது எப்பொழுதும் இருப்பினும் சிறப்பு அராகம் இல்லாதபோது பொருள்களின்மேல் சிறப்பான இச்சையோ வெறுப்போ உண்டாகாது.

ஞானாசிரியரின் ஞான தீக்கையில் அத்துவ சுத்தியில் இது நீங்கும். அப்பொழுது ஆன்மாவுக்கு விடயங்களின்மேல் சிறப்பு வகையால் ஆசை நிகழாது. வித்தையின் அராகத்தால் பொதுவகையாக நிகழும் கன்மத்தில் ஆசை நிகழாது. திருவருளால் சிவத்தின்மேல் ஆசை நிகழும். அப்போது சிவனது இச்சையே ஆன்மாவில் பதிந்து, **'சிவ ராகம்'** தோன்றி, ஆன்மாவை முத்திக்கு ஏதுவாகிய சாதகங்களில் செலுத்தும்.[20]

எனவே, புத்தி தத்துவத்தில் உள்ள அராக பாவம் வேறு; அராக தத்துவம் வேறு.

இப் புத்தி தத்துவம் புலன்களோடு பலவாறாகத் தொடர்பு கொண்டு விளங்குவதாகி ஐம்பது வகையான பாவகங்களையும் உண்டாக்கும். இது சிவ சங்கற்பத்தால் நிகழும்.

> **"..... அலகில் புலனிடத்தின் ஒருமை**
> **பலவகையும் உடையதாய்ப் பரன்அருளால் புந்தி**
> **பஞ்சாசற் பாவகமும் பண்ணுவிக்கும் தானே"** (சிவ.42)

புத்தி தத்துவமே, முக்குணங்களில் ஒவ்வொன்றை மிகுதியாக உடைய புறப்பொருள் பற்றிய உணர்வில் அழுந்தி, நன்மையும், தீமையும் ஆகிய நினைவுகட்கும், அந் நினைவு காரணமாக உண்டாகிற புண்ணிய பாவங்கட்கும் பற்றுக்கோடாகும். நன்மையும் தீமையுமாகிய நினைவுகள் 'பாவகங்கள்' எனப்படும். இப் பாவகங்கள், எட்டாக வகுக்கப்படுகின்றன. அவை, தருமம் (அறம்), ஞானம்

(அறிவு), வைராக்கியம் (பற்றின்மை), ஐசுவரியம் (செல்வம்) என்னும் நல்லவை நான்கும், அவற்றின் மறுதலையாகிய அதருமம் (மறம்), அஞ்ஞானம் (அறியாமை அவைராக்கியம் (பற்று), அனைசுவரியம் (வறுமை) என்னும் தீயவை நான்குமாகும். இவற்றை சுவேதாச்வதர உபநிடதம், 'பாவாஷ்டகம்' என்று கூறும்.[21] இதில் முதல் நான்கும் சாத்துவிக குண பாவகம். அவைராக்கியம் இராசத குணம் பற்றி வருவது. ஏனைய மூன்றும் தாமத குண பாவகங்கள். இவை புத்தியில் வாசனை வடிவாய் இருக்கும். (வாசனை – பயிற்சி)

தருமம் முதலியன மிகுந்து தூல ரூபமாய் அநுபவிக்கப்படும் நிலையை அடையும்பொழுது 'பிரத்தியயம்' எனப்படும். ஆன்மாவுக்கு அறிவை வருவிக்கின்றமையால் பிரத்தியயங்கள் எனப்படும் (பிரத்தியயம் – அறிவு). இது சித்தி, துஷ்டி, அசத்தி, விபர்யயம் என நான்கு வகைப்படும். சித்தியாவது புருடனறிய பிரகிருதி முதலியவைகளை அறிவிக்கும் புத்தியாகும். துஷ்டியாவது தான் பயன் பெறாது இருக்கையிலும் பெற்றதாக ஆன்மாவிற்குத் தோன்றும் புத்தியாகும். அசத்தியாவது அகக் கரணங்கள், புறக் கரணங்கள் இல்லாவிடில் விஷயமிருந்தும் அறிய இயலாத புத்தி. விபர்யயமாவது அற்பமாகத் தோன்றும் பொதுமை கொண்டு ஒன்றை வேறொன்றாக அறியும் விபரீதபுத்தி. (சித்தி – அறிவு ; துஷ்டி – மகிழ்வு; அசத்தி – வலியின்மை; விபர்யயம்- விபரீதம்) சித்தி எட்டு, துஷ்டி ஒன்பது, அசத்தி இருபத்தெட்டு, விபர்யயம் ஐந்து ஆகப் பிரத்தியயம் ஐம்பது. இவ் வைம்பதைத்தான் 'பஞ்சாசற்பாவகம்' என்று சிவப்பிரகாசம் கூறும். (பஞ்சாசத் – ஐம்பது)[22]

உலகத்தை பிரம்ம சக்கரமாகக்கொண்டு, இந்த பிரத்தியயங்களை 'சதார்த்தாரம்' (ஐம்பது ஆரங்கள்) என்று சுவேதாச்வதர உபநிடதம் கூறும். (சதம் – நூறு; அர்த்தம் – பாதி; ஆரம்) [23]

தர்மம் முதலிய பாவகங்கள் ஒன்றுக்கொன்று காரண காரியமாய்த் தோன்றி இறுதியில் அனைசுவரியம் தோன்றும். இது தோன்றுவதால் மீண்டும் தருமத்தில் புத்தி செல்லும்போது முன்போலவே தருமம் முதலிய பாவகங்கள் முறையே தோன்றும். வினை உள்ளளவும் இச்சுழற்சி நிகழ்ந்து கொண்டே இருக்கும். அதனால் ஆன்மா அப் பாவகங்களில் அழுந்துவதாகும். அதனால்தான் மாணிக்கவாசகர் ***'அளவிலாப் பாவகத்தால் அமுக்குண்டு'*** என்றருளிச் செய்தார்.[24]

அகங்காரம்

புத்தி தத்துவத்திலிருந்து இராசத குணம் மிகுந்தும் ஏனைய இரண்டு குணங்கள் குறைந்தும் நிற்க 'அகங்கார தத்துவம்' தோன்றும்.

உடலில் உள்ள பத்து வாயுக்களில் பிராண வாயு, அபான வாயு, வியான வாயு, சமான வாயு, உதான வாயு ஆகிய ஐந்து வாயுக்களையும் இந்த அகங்கார தத்துவம் தான் இயக்குகிறது. சித்தம் சிந்தித்ததனை 'இதனை நான் நிச்சயிப்பேன்' என்று ஒருப்பட்டு எழும் கருவியாகும். அதனால் 'என்னை ஒப்பார் இவ்வுலகில் என்னைத் தவிர வேறு யாரும் இலர்' என்றும் நீங்காத அகந்தைக்கு அகங்காரமே

வித்தாகும். உலகில் பொருள்களை ஆன்மா நுகரும்பொழுது அப் புலன்களிலே முந்திப் பொருந்தும் இயல்பினை உடையது இத்தத்துவம். எனவே, இக்கருவி இல்லையாயின், ஆன்மா எந்த ஒரு செயலிலும் செல்லுதற்கு எழுச்சியற்றதாய் விடும்.

ஆனதனு அதனில் உறும் அநிலனையும் இயக்கி
ஆங்காரம் நீங்காத அகந்தைக்கு வித்தாய்
யான் அலது பிறர்ஒருவர் எனை ஒப்பார் புவியில்
இல்லைஎனும் இயல்பினதாய் இந்திரியம் புலன்கள்
தான் நுகரும் அளவில் முந்தி உறும் இச்சை
தான் உருவாய்" (சிவ.43)

என்று ஆங்காரத்தின் இயல்பைப் பற்றி சிவப்பிரகாசம் உரைக்கும். வீடுபேற்று நிலையிலும் நான் என்னும் அகந்தையை ஆன்மாவிற்குத் தோற்றுவித்தலின் '**நீங்காத அகந்தைக்கு ஆங்காரம் வித்து**' எனப்பட்டது.

"அகங்காரமானது சீவனம், சங்கற்பம், கருவம் என மூன்றாம். அவற்றுள் சீவனமாவது பிராணாதி வாயுவினாலே அன்னபானாதிகளைக் கிருகிக்கை. சங்கற்பமாவது எவற்றினும் பிரவர்த்திப்பிக்கை. கருவமாவது யானல்லதில்லை என்கை" என்று இலக்கண சிதம்பரநாத முனிவர் கூறுவர்.[25]

மனம், சித்தம்

அகங்காரத்தின் குண இயல்பில் சாத்துவிக குணக்கூறாகிய தைசத அகங்காரத்திலிருந்து மனம் தோன்றும்.

"..... சங்கற்ப சதாகதியும் தந்து
மானதமானது நிற்கும் சிந்தை நினைவு ஐயம்
வந்துதரும் மனமொழிய வகுப்பொணாதே" (சிவ.43)

"மனதத்துவமானது ஒன்றை நீள நினைதலையும் ஓயாத சஞ்சலத்தையும் தந்து நிற்கும். சித்த தத்துவமானது நினைவு மாத்திரமா யிருக்கும். இதனை, ஐயத்தை உண்டாக்குகிற மனத்தைவிட்டுப் பிரித்துச் சொல்ல முடியாது" என்று சிவப்பிரகாசம் கூறும்.

சித்தாந்தப் பிரகாசிகை "மனம் ஒன்றுதானே சிந்திக்கும் அவஸ்தையிற் சித்தமாய் நிற்குமாதலின் மனத்தின் விருத்தியே சித்தம்" என்று கூறுவது இங்கு ஒப்புநோக்கத்தகும்.

ஐம்பொறிகளின் வாயிலாகப் பொதுமையில் அறியப்பட்ட பொருளில் சங்கற்பம், விகற்பம் என்ற இரண்டும் நிகழ்வதற்குக் கருவியாய் அமைந்தது மனம். (சங்கற்பம் - நினைவு; விகற்பம் - வேறுபாடு (ஐயம்)).

சங்கற்பம் என்பது எதிர்ப்பட்ட பொருளை 'இது யாதாகும்?' என்று எண்ணிப்பார்த்து, அதன்பின்னர் ஏற்கெனவே அறிந்து அநுபவித்த நினைவின் அடிப்படையில், 'இது இன்ன பொருளாகத்தான் இருக்க வேண்டும்' என்னும் நினைவு.

விகற்பம் என்பது, அவ்வாறு நினைத்த பின்னர் இது இன்னதுதானோ அன்றோ என எழுகின்ற ஐயம். ஐயம் நிகழ்ந்தாலன்றி நிச்சயித்தல் கூடாமையினால் சங்கற்பத்தைத் தொடர்ந்து விகற்பமாகிய ஐயம் கட்டாயமாக நிகழ்தல் வேண்டும். அதாவது, சங்கற்பமாகிய நினைவு மாத்திரை நிச்சயம் பிறவாது விகற்பமாகிய ஐயத்திற்குப் பின்புதான் நிச்சயம் நிகழும். எதிரே தோன்றும் பொருள் யாது என்ற நினைவிற்கு நிருவிகற்பக் காட்சி மட்டிலுமே காரணமாகும். அதன்பின்னர் இது இன்னதாகும் என்ற சவிகற்ப நினைவிற்கு, ஒருவன் முன்னரே அறிந்து வைத்திருந்த நினைவினால் தோன்றும் வாதனை காரணமாகும். ஆதலால் சங்கற்பம், விகற்பம் என்ற இரு வகை நினைவும் காலத்தால் மட்டுமன்றிக் காரணத்தாலும் தம்மிடையே வேறுபாடு உடையன. ஆதலால் இரண்டிற்கும் மனம் ஒன்றே கருவியாகும் என்பது பொருந்தாது அன்றோ?

ஆயினும் பயனால் வேறுபாடு இல்லை என்பது மறுக்க முடியாதது. மனம் ஒன்றே நிலை வேறுபாட்டால் சித்தம் என்று விருத்திப்பட்டு அவ்வாறு சிந்திக்கும் என்று கொள்ளுதல் வேண்டும். மேற்கூறிய காரணத்தால் மனத்தின் விருத்தி ஆகிய சித்தம் என்ற ஒன்று உண்டு என்பது தெளிவாயிற்று. மற்றைய தத்துவங்கள் எல்லாம் பரிணாமம் ஆதலால், தனித்தனியாக வைத்து எண்ணப்பட்டன. சித்தம் மனத்தின் விருத்தி ஆதலால் அவ்வாறு கொள்ளப்படவில்லை. ***"சிந்தை நினைவு ஐயம் வந்து தரும் மனம்"*** என்னும் சிவப்பிரகாசத் தொடரை, "சிந்தை நினைவு வந்து ஐயம் தரும்" என்று மாற்றிப் பொருள் கொள்ள வேண்டும். முதற்கண் சித்தத்தின் தொழிற்பாடாகிய சங்கற்பம் நிகழ்ந்து முன்னைப் பயிற்சி வாசனையை வெளிப்படுத்தும் முகத்தான் விகற்ப நிலையைத் தோற்றுவிக்கும் என்பது இதன் பொருளாகும்.[26]

மூலப் பிரகிருதிக்கும் கீழ்உள்ள தத்துவம் இருபத்து நான்கு என்பதில் ஒருவருக்கும் கருத்து வேறுபாடு இல்லை. ஆயினும், சித்தத்தை மனத்துள் அடக்கி, 'அந்தக் கரணம் மூன்று' எனக்கொண்டு குண தத்துவத்தை ஒரு தத்துவமாக எண்ணி இருபத்து நான்கு என்பர்.

குண தத்துவத்தை மூலப் பிரகிருதியுள் அடக்கி சித்தத்தைத் தனியாக எடுத்து எண்ணி 'இருபத்து நான்கு' என்பர். (மனம், சித்தம், அகங்காரம், புத்தி)

இனி சித்தம் குணம் இரண்டையும் நீக்கி, மூலப் பிரகிருதியைச் சேர்த்து 'இருபத்து நான்கு' என்பர்.

சித்தம் என்பது இல்லையாயின், ஐம்பொறிகளாற் கவரப்பட்ட எல்லாப் பொருள்பற்றியும் சங்கற்ப விகற்பங்கள் நிகழ்தல் வேண்டும். அங்ஙனம் அன்றிச் சிலவற்றைப் பற்றி அவை நிகழ்வதற்கும், சிலவற்றைப் பற்றி அவை நிகழாமைக்கும் காரணம் சித்தத்தின் தொழிற்பாடு நிகழ்தலும், நிகழாமையுமே ஆகும். அதனால் சித்தம் உண்மை தெளிவு. ஆகவே, நிருவிகற்பமாய்க் காட்சியில் புலப்பட்ட பொருள்கள் பலவற்றிலிருந்தும் ஒன்றைத் தெரிந்து மனத்திற்குக் கொடுக்கும் சித்தம் என்பது உண்டு எனத் தெளியலாம்.

மனம் ஒரு பொருளைப் பற்றுவதற்குக் காரணம் அதனைப்பற்றி அறிய வேண்டும் என்னும் வேட்கையே யன்றிப் பிறிதன்று என்பர். வேட்கை இல்லாத பிற பொருள்மீதும் அவனது அறிவு பதிகிறது. எனவே, அறிய வேண்டிய வேட்கை என்பது பொருந்தாது.

இவ்வாறு அறிவதற்குக் கன்மமே காரணம் என்றால், யாதானும் ஒரு கருவி வழியாக அன்றிக் கன்மம் நிகழாது. ஆதலின், கன்மங் காரணமாகச் சித்தம் கருவியாய் நின்று சங்கற்ப விகற்பங்களைச் செய்யும்.

சிவஞான சித்தியாரில் 'சித்தமாம் அவ்வியத்தம் சிந்தனை அதுவும் செய்யும்' என்று தொடங்கும் பாடலில் (148) சித்தத்தை அவ்வியத்தமாகிய பிரகிருதியின் விருத்தியாகக் கூறியிருப்பது, சிவப்பிரகாசத்தில் 'மனம் ஒழிய வகுப்ப ஒணாதே' (43) என்று கூறியதற்கு முரணாகும் அன்றே எனில், அது முரண்பாடு அன்று. அவ்வியத்தத்தின் காரியமாகிய அந்தக் கரணங்களும் அவ்வியத்தம் என்றே உபசரித்துக் கூறப்படும்.

மனம் சித்தம் ஆகிய இரண்டின் தொழிற்பாடாகிய **சங்கற்ப, விகற்பங்களும்** (நினைவும், ஐய நினைவும்) பொருளைப்பற்றி நிகழ்கின்றன. அவற்றுக்குள் எழும் வேறுபாடு ஒன்று முதலில் நிகழ்தலும் மற்றது அதன்பின்னர் நிகழ்தலும் என்பது மட்டிலுமே. ஆகவே, அங்குச் சித்தம் மனத்தின் விருத்தியாய் அதனுள் அடங்கும் என்பது பொருத்தமே.

இது சிவஞான மாபாடியத்தில் மனத் தத்துவத்தைப் பற்றிய பேருரையாகும். அடுத்து, சிவஞான சித்தியாரில் மனத் தத்துவத்தைப் பற்றி சிவஞான முனிவர் பொழிப்புரை வருமாறு: "சித்தமாம் அவ்வியத்தம் சிந்தனையதுவும் செய்யும்" எனும் சிவஞான சித்தியாருக்கு, 'குணதத்துவத்திற்குக் காரணமெனச் சித்திக்கப்பட்ட மூலப்பகுதி, அக்குணதத்துவத்தைத் தோற்றுவித்தலேயன்றி, விபரீதவுணர்வுடையதாகிய அவிச்சையினைத் தோற்றுவிக்கும். மேலும், இத் தொடரைச் சித்தத்தில் வைத்து உரைப்பாரும் உளர். 'சிந்தை நினைவு ஐயம் வந்து தரு மனமொழிய வகுப்பொணாதே' எனப்புடைநூல் ஆசிரியர் ஓதுதலின் மனத்தின் பின்னதா யதன்கண் அடங்குஞ் சித்தத்தை ஈண்டுக் கூறுதற்கோர் இயைபின்மையானும், புடைநூலாசிரியர் அவ்வாறு ஓதாமையினும், சிவாகமங்களோடு முரணுதலானும் அவ்வுரை போலியென்றொழிக."

மேலும்,

"மனமது தைசதத்தின் வந்து ஒரு பொருளை முந்தி
நினைவதும் செய்து அங்கு ஐய நிலைமையின் நிற்கும்"

'தைசத அகங்காரத்தினின்றும் மனந்தோன்றி எதிர்ப்பட்டதொரு விடயத்தை இஃது யாது ஆகற்பாற்றெனச் சித்த ரூபமாய் நின்று சிந்தித்தும்' என்று பொழிப்புரை செய்வார்.[27]

CENTRE FOR SHAIVA STUDIES
Puducherry

“மூலப்பகுதி, விபரீதவுணர்வுடையதாகிய அவிச்சையைத் தோற்றுவிக்கும்” என்பது பஞ்சக்கிலேசத்தை தோற்றுவித்து, பும்சத்துவமலம் என்னும் நிலையைத் தருவதாகும் என்பது சிவஞானமுனிவர் கருத்தாகும்.[28]

இவ்வாறு சிவஞான மாபாடியப் பேருரையிலும், சித்தியார் பொழிப்புரையிலும் சிவஞான முனிவர் சிவப்பிரகாசத்தின் கருத்தை அடிப்படையாகக்கொண்டே மனம் மற்றும் சித்த தத்துவத்தை இனிது விளக்குகிறார். இதுவே, சிவப்பிரகாசத்தின்மீது அவர் கொண்ட மதிப்பை எடுத்துக்காட்டுகிறது எனலாம்.

‘சிந்தித்ததாய் சித்தம்’ என சிவஞானபோதமும், **‘சித்தமாம் அவ்வியத்தம் சிந்தனையதுவும் செய்யும்’**, **‘புத்தி அவ்விடத்தில் தோன்றி’** என்று சிவஞான சித்தியாரும் குறிப்பிடுகின்றன.

மனத்திற்கு மேலே ‘அகங்காரம்’ என்றும் ஒன்றை இடையிட்டு அதற்கு மேலே உள்ள புத்திக்கும் காரணமாய், அதற்கு முன்னே தோன்றி நிற்பது சித்தம். எனவே, சித்தம் தோற்றத்தாலும், செயலாலும், விளைவாலும் மனதிற்கு சிறிதும் இயைபின்றி அதற்குப் பெரிதும் வேறுபட்டதால் விளங்க வைத்துக் கூறப்படுகின்றன.

“. . . . . . நால் அந்தக்கரணமும்
ஒருநெறியாய்
சித்திக்கே உய்த்திட்டுத் திகழ்ந்த மெய்ப்பரம்பொருள்
சேர்வார்”

“ஐம்புலன், நாலாம் அந்தக்கரணம்
முக்குணம் இருவளி ஒருங்கிய வானோர்
ஒத்த நின்றனை”

“சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்”

“ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையேயாக”

என்றாற்போலத் திருமுறைகளுள் ‘அந்தக் காரணம் நான்கு’ என்பதனோடு அவற்றுள் சித்தமே மேம்பட்டதாகவும் அருளிச் செய்யப்படுதாலும் சித்தத்தை மனத்தினுள் அடக்கி அந்தக் கரணங்கட்குத் தொகை கொள்ளாமல், குணதத்துவமே - சித்தம் - என்னும் அந்தக் கரணமாம் எனக் கொள்ளுதலே தக்கது என்பர் அறிஞர்.

ஞானேந்திரியங்கள், கன்மேந்திரியங்கள்

தைசத அகங்காரத்திலிருந்து மனம் தோன்றியபின், ஞானேந்திரியங்களான செவி, மெய், கண், நாக்கு, மூக்கு ஆகிய ஐந்தும் தோன்றும். இவை புறத்தே உள்ள ஓசை, ஊறு, ஒளி, சுவை, மணம் என்னும் புலன்களை (விடயங்கள்) ஆன்மா அறிவதற்குக்

கருவிகளாகப் பயன்படும். தமிழில் அறிகருவிகள் என்றும், ஐம்பொறிகள் என்றும் கூறப்படும். சத்தாதி விடயங்களை அறிவதே ஞானேந்திரியங்களின் தொழிலாகும்.

இராசத வைகாரிக அகங்காரத்திலிருந்து வாக்கு, பாதம், கை, எருவாய், கருவாய் என்னும் ஐந்து கன்மேந்திரியங்கள் தோன்றும். இவற்றால் நிகழும் தொழில்கள் முறையே பேசுதல், நடத்தல், இடுதல் ஏற்றல், கழித்தல், இன்புறல் என்பன. இவை தொழிற்கருவிகள் என்று அழைக்கப்படும். கருவிகள் உடலிடத்துள்ள கருவிகளைக் குறியா. அவற்றின் இடமாக நின்று அவ்வப் புலன்களை அறிவனவாகிய ஆற்றல்களைக் குறிக்கும்.

ஞானேந்திரியங்கள் கன்மேந்திரியங்களுக்குத் துணையாகும்; கன்மேந்திரியங்கள் ஞானேந்திரியங்களுக்குத் துணையாகா.

“சொன்னமுறை, செவிதுவக்கு நோக்கு நாக்குத்
துண்டம் இவை ஐந்திற்கும் தொகுவிடயம் ஆக,
மன்னிய சத்தப் பரிச ரூப ரச கந்தம்,
மருவியிடும் இவை அடைவே வாக்குப்பாதம்
பின்னர்வரு பாணி மிகு பாயுவினோடு உபத்தம்
பேசலுறும் ஐந்திற்கும் பிறங்கொலிகொள் வசனம்
உன்னரிய கமனதான விசர்க்கா னந்தம்
உற்ற தொழில் பெற்றிடுவது உண்மையாமே” (சிவ.44)

என்பது சிவப்பிரகாசம்.

தன்மாத்திரைகள்

சத்தம் முதலிய ஐந்தும் விடய தன் மாத்திரைகள் எனவும், காரிய தன் மாத்திரைகள் எனவும், பூத குணங்கள் எனவும் சொல்லப்படும். காரண தன் மாத்திரைகள் ஐந்தும் ஐம்பூதங்களுக்குக் காரணமாயும் இந்திரியங்கள் புலன்களைக் கொள்ளுதற்குத் துணையாயும் நிற்பதன்றி அவற்றிற்கு வேறு தொழில் இன்மையால் அவற்றை இங்கே சிவப்பிரகாசம் குறிக்கவில்லை.

ஐம் பூதங்கள்

தோற்றமுறையில் கூறப்பெற்ற ஆகாயம் முதலிய ஐம்பெரும் பூதங்களை இடமாகக் கொண்டு உடலோடு பொருந்தியிருக்கும் செவி. மெய், கண், நாக்கு, மூக்கு என்ற இடங்களில் நின்று பொறிவழியாக வருகின்ற ஓசை, ஊறு, ஒளி, சுவை, மணம் ஆகிய புலன்கள் ஐந்தையும் ஆன்மா அறியும் முறைக்குத் தக்கவாறு தத்தம் வடிவத்தோடு விளங்கி நிற்கும்.

ஆகாயம் புறத்திலே உள்ள மற்றைய பூதங்கள் எல்லாம் தன்னிடத்தே வந்து அடையப் பெருவெளியாய் இடம் கொடுக்கும்.

‘அகலிரு விசும்பிற் பாயிருள் பருகி’ (பெரும்பாண்.1) என வரும் தொடரில், அகலிரு விசும்பு என்றதற்கு ஆசிரியர் நச்சினார்க்கினியர், ‘தன்னையொழிந்த நான்கு பூதமும் தன்னிடத்தே அகன்று விரிதற்குக் காரணமாகிய பெரிய ஆகாயம்’ என்று உரை கூறுகின்றார்.[29]

காற்று மிகவும் அசைவுடையதாய் எல்லாவற்றையும் திரட்டும். தீ வெப்பத்தைக் கொடுத்துப் பொருள்களைச் சுட்டு ஒன்றுவிக்கும். நீர் குளிர்ந்து பக்குவம் செய்து நிற்கும். முன் தோன்றிய நிலம் கடினமாய் எல்லாவற்றையும் தாங்கும். இவையே ஐம்பூதங்களின் குணமும் தொழிலுமாம்.

“முந்திய ஐம்பூதங்கள் வான் ஆதி ஆக
முயங்கிய நற் செவிநாசி கண்நா மெய்ம் முறையால்
இந்தவயின் நின்றுவரும் ஐம்புலனும் உயிர்தாம்
எய்தும்வகை தம்உருவில் இலங்கியிடும் புறத்தும்
வந்தடைய இடம்கொடுக்கும் நிரந்தரமாய் வானும்
வாயுமிகச் சலித்து எவையும் திரட்டும் தீவெம்மை
தந்து அவை சுட்டு ஒன்றுவிக்கும் நீர்குளிர்ந்து பதமே
தரும் உரத்துத் தரிக்கும் மிகு தரணி தானே” (சிவ.45)

எனச் சிவப்பிரகாசம் ஐம்பெரும் பூதங்களின் தொழில்களை விளக்கி நிற்கும்.

இந்திரியம் - தத்துவம்; அதற்குரிய அறிவு - புலன்; அப் புலனால் அறியப்படுவது - விடயம்; விடயமாவது மண் நீர் முதலிய தூல பூதங்கள். பூதங்கள் மூவகைப்படும். அவை அகப் பூதம், அகப்புறப் பூதம், புறப் பூதம் என்பன. பொறிகளுக்குப் பற்றுக்கோடாக உள்ளவை அகப்பூதங்களாகும். உடல் உறுப்புகளாய் நின்று ஆன்மாவிற்குக் கருவிகளாக உள்ளவை அகப்புறப் பூதங்களாகும். புறத்தே காணப்படுவன புறப் பூதங்களாம். எனவே, ஆன்மா ஐம்பொறிகளுக்குப் பற்றுக்கோடாக உள்ள அகப் பூதங்கள் வழியாக, அகப்புறப் பூதங்களை இடமாகக்கொண்டு புறப்பூதங்களின் நுகர்வைப் பெறும். வானம் செவி என்னும் அறிவுக் கருவிக்குப் பற்றுக்கோடாகச் செவிகளில் நின்று ஆன்மா ஒலியை அறியுமாறு செய்யும். வாக்காதிகளும் ஐம் பூதங்களைப் பற்றுக்கோடாகக் கொண்டு தொழில்களைச் செய்யும். இதுபோல ஒவ்வொரு பூதத்தின் தொழில் அமையும். ‘நிலம் நீர் தீ வளி விசும்போடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம்’ என்று தொல்காப்பியம் கூறும்.[30]

தத்துவங்களின் வகை

நிலம் முதல் கலை ஈறாகிய முப்பத்தொரு தத்துவங்களும் ‘புறப்புறக் கருவி, புறக் கருவி, அகப்புறக் கருவி, அகக் கருவி’ என நான்காக வகுத்துக் கூறப்படும்.

பூதம் ஐந்து, தன்மாத்திரை ஐந்து இவை பத்தும் புறப்புறக் கருவிகளாகும். ஞானேந்திரியம் ஐந்து, கன்மேந்திரியம் ஐந்து இவை பத்தும் புறக் கருவிகள். அந்தக்

கரணம் நான்கும் அகப்புறக் கருவி. அராகம் முதலிய வித்தியா தத்துவங்கள் அகக் கருவி.

உடம்பின் வகைகள்

தத்துவங்கள் முப்பத்தாறும் ஆன்மாக்கட்கு 'தூல சரீரம்', 'சூக்கும சரீரம்', "பர சரீரம்" என்னும் மூவகை உடம்புகளாய் பொருந்தி நிற்கும்.

பூதங்கள் ஐந்து, கன்மேந்திரியம் ஐந்து, ஞானேந்திரியம் ஐந்து ஆக பதினைந்து தத்துவங்கள் 'தூல சரீரம்' (பருவுடம்பு); தன்மாத்திரை ஐந்து, அந்தக்கரணம் நான்கனுள் சித்தம் ஒழிந்த மூன்று ஆக எட்டுத் தத்துவங்களும் சூக்கும சரீரம் (நுண்ணுடம்பு). எட்டுத் தத்துவங்கள் ஆவது பற்றிச் சூக்கும சரீரம் 'புரியட்டக சரீரம்' என்றும் சொல்லப்படும்.

இப் புரியட்டக சரீரத்தை,

'அத்தன் அமைத்த உடல்இரு கூற்றினில்
சுத்தமதாகிய சூக்குமம் சொல்லுங்கால்
சத்த பரிச ரூப ரச கந்தம்
புத்திமன் ஆங்காரம் புரியட்ட காயமே" [31]

என்று திருமந்திரம் சொல்லும்.

அந்தக் கரணங்களுள் சித்தமாய் நிற்கும் குண தத்துவம் ஒன்று. வித்தியா தத்துவங்கள் ஏழு ஆக எட்டுத் தத்துவங்களும் 'பர சரீரம்' (மிகு நுண்ணுடம்பு) மூலப் பிரகிருதி குண தத்துவத்தின் வேறாகாமையறிய வேண்டும்.

பரசரீரத்துள் குண தத்துவம் முக்குணமயமாய் நிற்றலின் 'குண சரீரம்' (பண்புடம்பு) என்றும், காலம் முதலிய ஐந்தும் ஆன்மாவிற்குச் சட்டைபோல் அமைதலின் 'கஞ்சுக சரீரம்' (போர்ப்புடம்பு) என்றும், மாயா தத்துவமே ஏனைய தத்துவங்களுக்குக் காரண மாதலின் அது காரண சரீரம் (முதலுடம்பு) என்றும் சொல்லப்படும். இவ் ஐவகையான உடம்புகளை,

"மாயையின் வயிற்றுள் மன்னி வரும்செயல் ஞானம் இச்சை
ஏயும் அக்கலாதி மூன்றால் ஏக தேசத்தில் ஏய்ந்து இங்கு
ஆயும் முக்குணங்கள் அந்தக் கரணங்கள் ஆதி எல்லாம்
காயம் பெத்தங்கள் ஆகிக் கலந்து உடன்நிற்கும் ஆன்மா" [32]

என்று சிவஞான சித்தியார் குறிப்பிடும்.

இந்த ஐந்து சரீரங்களைத் தவிர நரகத்தில் துன்பம் அநுபவிக்கும் உடம்பு யாதனா சரீரம்; சொர்க்கத்தில் இன்பம் அநுபவிக்கும் உடம்பு பூதசார சரீரம்; பூமிக்கு வரும் உடம்பு பூதனா சரீரம் என வழங்கப்படும்.

தத்துவ நிலைகள்

முப்பத்தாறு தத்துவங்களில் சிவ தத்துவம் ஐந்தும் சுத்தம். கீழே உள்ள ஆன்ம தத்துவம் இருபத்து நான்கும் அசுத்தம். இடையே உள்ள வித்தியா தத்துவம் ஏழும் சுத்தாசுத்தம். **‘ஐந்து சுத்தம்; ஏழ் சுத்தாசுத்தம்; எண்மூன்று அசுத்தம் எனும் இவை முப்பத்தாறாம்’** (சிவ.46) என்பது சிவப்பிரகாசம். சுத்த தத்துவமான சிவ தத்துவம் ஐந்தும் ஏனைய தத்துவங்களைச் செலுத்துதலால் அவை **‘பிரேரக காண்டம்’** எனப்படும். வித்தியா தத்துவங்கள் ஏழும் ஆன்மாவிற்குப் போத்திருத்துவத்தை (நுகர்வோனாம் தன்மை) உண்டாக்குவதால் அவை, **‘போசயித்திருகாண்டம்’** எனப்படும். ஆன்ம தத்துவம் இருபத்து நான்கும் போகத்தைத் தருவதால் **‘போக்கிய காண்டம்’** எனப்படும்.[33] (பிரேரகம் - செலுத்துதல்; போசயித்திரு - நுகர்பவன்; போக்கியம் - நுகரப்படுவது)

தத்துவங்களுடன் கூடி ஆன்மா அவற்றை நுகரும் முறை

இம் முப்பத்தாறு தத்துவங்களின் வழியே உயிர் மயங்கிப்பெரும் துன்பத்தைப் பொருந்தும். உடம்பு அழியும்போது பாம்பு தோலை விடுத்துப் போதல் போலவும், முட்டையில் தோன்றிய உயிரினங்கள் தம் முட்டையை விட்டுப்போதல் போலவும், கனவில் கண்டவற்றைக் நனவில் மறந்து அறிவு வேறுபட்டாற் போலவும் முன்னே சொல்லி விளக்கப்பட்ட கலை முதலிய தத்துவங்களோடு கூடிய புரியட்டக உடலோடு சென்று, சொர்க்க நரகத்தில் இன்ப துன்பங்களை அநுபவித்து இறைவன் அருளால் நிலவுலகில் மீண்டும் வந்து பிறக்கும் என ஞான நூல்கள் சொல்லும்.

“மன்னிய தத்தவங்களிடை மயங்கி நெடும் துயர்தாம்
மருவும் உருநிலை அழிய வரும் பொழுது வரியார்
பன்னகம் அண்டசம் கனவு படர்வகையே முன்னம்
பகரவரும் கலாதிநிலை பரவிய சூக்குமம்ஆம்
தன்னுருவில் அணைந்துபயன் அருந்தி அரன் அருளால்
தரையினிடை வரும் என்று சாற்றும் நூலே” **(சிவ.46)**

என்று சிவப்பிரகாசம், ஆன்மா தத்துவங்களோடுகூடி சேர்ந்து பிறந்திறந்து வினைப்பயனை அநுபவிக்கும் முறையைக் கூறுகிறது.

ஆன்மாக்கள் உடல்பெறுதல்

பருவுடம்பு அழியும்போது நுண்ணுடம்பு சொர்க்கத்திற்கு, நரகத்திற்கு ஏற்ற வேறொரு உடம்பைத் தன்னிடமிருந்து தோற்றுவிக்கும். ஆன்மா அவ்வேறு உடம்போடு அவ் வுலகங்களில் இன்ப, துன்பங்களை வினை உள்ள அளவும் நுகரும்.

வினை தீர்ந்தபின் அந்த உலகத்திற்கான அவ்வுடம்பு நீங்கும். மீண்டும் நுண்ணுடம்பையே வடிவமாகக் கொண்டு நிலவுலகிற்கு வந்து, இனி அநுபவிக்கப்போகும் வினைக்கு ஏற்ற பிறப்பில் ஆசை உண்டாகி மனம் செலுத்திய

அப் பிறப்பிற்குரிய கருவில் சேரும். அவ்வாறு பிறக்கும்பொழுது முந்தைய பிறப்பில் நுகர்ந்த எல்லா அநுபவத்தையும் அறவே மறந்துவிடும்.

"கண்ட நனவைக் கனவுணர்வின் தான்மறந்து
விண் படர்ந்து அத்தூடு வினையினால் - கண்செவி கெட்டு
உள்ளதே தோற்ற உளம் அணுவாய்ச் சென்று மனம்
தள்ள விழும்கருவில் தான்" [34]

என வரும் சிவஞான போத வெண்பா, ஆன்மாக்கள் பிறவிதோறும் உடல் பெறுதலை விளக்கி நிற்கும்.

"கண் செவி என்ற சொற்கள் இப் பாடலில் உறுப்புகளைக் குறிக்காமல் அவற்றினை உடைய உடம்பைக் குறித்தது. 'பரு உடம்பு அழிந்து போனபோது' என்பது "கெட்டு" என்ற சொல்லால் உணர்த்தப்பட்டது. "உள்ளது" என்ற சொல் "புரியட்ட தேக"த்தைக் குறித்தது. புரியட்ட தேகம் ஒரு பிறவிக்கு மட்டும் பயன்படும் பரு உடம்பைப் போன்றது அன்று. அது படைப்புக் காலம் தொடங்கி முற்றழிப்புக் காலம்வரை நிலைபெற்றிருப்பது. ஆதலால் "உள்ளது" எனப்பட்டது. "தோன்றுதல்" என்பது துறக்க நிரயங்களில் (சொர்க்க நரகம்) சென்று புண்ணிய, பாவங்களை நுகர்வதற்குரிய 'பூதசார உடம்பு, யாதனா உடம்பு' ஆகியவற்றைக் குறித்தது" என்று இவ் வெண்பாவிற்கு சிவஞான முனிவர் விளக்கம் தருவர். [35]

படைப்பின் தொடக்கத்தில் முதன்முதலாகப் படைக்கப்பட்டது நுண்ணுடம்பே ஆகும். எனவே, புரியட்ட சரீரமாகிய நுண்ணுடம்பு என்றும் ஒரு தன்மையாய் இருக்க, அதிலிருந்து தோன்றும் பரு வுடம்புகளே ஒவ்வொரு பிறவியிலும் வெவ்வேறு வடிவினதாய் மாறி அமையும். அவ்வாறு அமைவதற்குச் சிவஞான சித்தியார் மூன்று உவமைகள் கூறி விளக்குகிறது. முதிர்ந்த ஒரு மரத்தை வெட்டிய பிறகு அதன் வேரிலிருந்து மற்றொரு மரம் துளிர்ப்பதுபோல, திங்களின் கலைகள் தேய்ந்து மீண்டும் வளர்வதுபோல, பொன் ஒன்றே பலவகை அணிகலன்கள் ஆவதுபோல என்பன அந்த உவமைகள். அவை, வருமாறு:

"காலம் முற்று நீக்கிட மரம் பின் வேரோர் நீள்மரம்
நிகழ்த்து மாபோல்" [36]

"மதிக்கெழு கலைகள் போல வருவது போவதாமே" [37]

"வேறொரு குறியாம் ஆரம் வீரசங்கிலியுமாகும்" [38]

இதன்படி ஒரு பிறப்பில் பெற்ற பருவுடம்பு மற்றொரு பிறப்பில் வேறாக அமைதல் கூடும். மனிதனாகப் பிறப்பு எய்தினோர் பறவை, விலங்குகளாய் மாறிப் பிறத்தலும், பறவை விலங்குகள் மனிதனாக உயர் பிறப்பு எய்துதலும் கூடும். ஒரு பிறப்பில் ஆண் உடம்பைப் பெற்ற ஆன்மா மற்றொரு பிறப்பில் பெண் உடம்பைப் பெறலாம். இவ்வாறு மாறிப் பிறத்தல், 'பிறப்பின் அச்சு' எனப்படும். இந்த அச்சுகள் தூல

உடம்பில் உள்ளனவே யன்றி நுண்ணுடம்பில் இல்லை. மேலும், மேலே காட்டப்பெற்ற சிவஞான போத வெண்பாவில் ‘உள்ளதே தோற்ற’ என்பதால் உடல் வேறுபாடும், ‘விண் படர்ந்து’ என்றதனால் இட வேறுபாடும், ‘கனவு உணர்வில் தான் மறந்து’ என்றதனால் அறிவு வேறுபாடும் உணர்த்தப்பட்டன. இவ்வாறு ஆன்மா ஒரு பிறவியிலிருந்து மற்றொரு பிறவியை அடையும்போது மூன்று வகை வேறுபாடுகளுக்கு உட்படுகிறது என்று சிவஞான முனிவர் பேருரை செய்வர்.[39]

மறு பிறப்பில் முன் இருந்த உடம்பு போய் வேறோர் உடம்பு வரும் என்பது உடல் வேறுபாடாகும். மண்ணிற்கு வேறான உலகங்களில் வாழ்வதற்குரிய உடம்புகளைப் பெறும் என்பது இடவேறுபாடாகும். முற்பிறப்பை மறந்து இப் பிறப்பில் எடுத்த உடம்பின் அறிவுக்குத் தக்கபடியே அறிவும் அமையும் என்பது அறிவு வேறுபாடு ஆகும்.

இதனை அடியொற்றியே, ***“வரியார் பன்னகம் அண்டசம் கனவு படர் வகையே”*** என வரும் சிவப்பிரகாசத்தில் பன்னகம் (பாம்பு) முந்திய தோலை விடுத்து வேறு ஒரு தோலைப் பற்றுவது உடல் வேறுபாட்டிற்கும், முட்டையில் பிறக்கும் உயிர் வகைகள் முட்டையை விடுத்து வேறு இடங்களில் வாழ்வது இட வேறுபாட்டிற்கும், கனவில் கண்டது நனவில் வருவதில்லை ஆதலால் ஒன்று நிகழும்போது முன் நிகழ்ந்ததனை மறத்தலாவது அறிவு வேறுபாட்டிற்கும் உவமைகளாகக் கூறப்பட்டன.

சிவன் ஆன்மாக்களை உய்விக்க வேண்டும் எனக் கருதி, ஆன்மாக்களில் எல்லாம், தானும் நல் உயிராய்க் கலந்து, முதல் மலமாகிய ஆணவத்தோடு மற்றைய நான்கு மலங்களைக் கூட்டி, அம் முதல் மலம் முற்றும் அற்று ஒழிதற்பொருட்டுத் தத்துவங்கள் முப்பத்தாறினையும் தோற்றுவித்து வைத்தான்.

> “சத்தி யிராகத்தில் தான்நல் உயிராகி
> ஒத்துரு பாசமலம் ஐந்தோடு ஆறாறு
> தத்துவ பேதம் சமைத்துக் கருவியும்
> வைத்தனன் ஈசன், மலம் அறுமாறே” [40]

என்று திருமந்திரம் கூறும்.

ஆன்மாக்களின் ஆணவ மலம் முற்றும் நீங்கிப் பேரின்பத்தை அடையவே தத்துவங்கள் வைத்தான் என்று இம் மந்திரம் சைவ சித்தாந்தத்தை சுருக்கமாகக் கூறிற்று.

அடிக்குறிப்புகள்

1. திருநெறி விளக்கம், பா.15
2. சிவஞான சித்தியார், சுபக்கம், 177.
3. சிவஞான சுவாமிகள் பொழிப்புரை, சிவஞான சித்தியார் சுபக்கம், ப.157
4. சி.அருணை வடிவேல் முதலியார், சித்தாந்த வினாவிடை, பக்.262, 263.

5. மு.திருவிளங்கம் (புத்துரை), சிவப்பிரகாசம், ப.70
6. தணிகைப்புராணம், நந்தி உபதேசப் படலம், பா.52, 53
7. மதுரைச் சிவப்பிரகாசர், சிவப்பிரகாசம் மூலமும் உரையும், ப.103
8. ஞானாமிர்தம், அகவல்.21
9. சிவஞான சுவாமிகள், சிவஞான பாடியம், ப.350
10. ஆ.ஆனந்தராசன், உண்மை விளக்கம், ப.87
11. மேலது, ப.92.
12. சி.அருணை வடிவேலு முதலியார், சிவஞான போத மாபாடியப் பொருள்நிலை விளக்கம், பக்.373, 374
13. மேலது, ப.375
14. சி.சு.மணி (உ.ஆ), சிவப்பிரகாசம், ப.61
15. சி.அருணை வடிவேலு முதலியார், மு.கா.நூ. ப.368
16. ஆ.ஆனந்தராசன், உண்மை விளக்கம், ப.89
17. சி.அருணை வடிவேலு முதலியார், மு.கா.நூ. ப.381
18. சி.சு.மணி, சிவஞான மாபாடியம், ப.408.
19. ஆ.ஆனந்தராசன், மு.கா.நூ. ப.37
20. சி.அருணை வடிவேலு முதலியார், மு.கா.நூ. ப.379
21. அண்ணா, 108 உபநிஷத்ஸாரம், ப.57
22. மு.திருவிளங்கம், மு.கா.நூ. பக். 114-115
23. அண்ணா, மு.கா.நூ. ப.56
24. 8:31:8
25. இலக்கண சிதம்பரநாத முனிவர், சிவப்பிரகாசம், ப.85.
26. சிவஞான சுவாமிகள், சிவஞான பாடியம், பக். 232, 233.
27. சிவஞான சுவாமிகள், பொழிப்புரை, சிவஞான சித்தியார், பக். 136, 138.
28. ர.வையாபுரி, கச்சியப்ப முனிவரின் சைவ சித்தாந்தம் (பாசம் - 2) பக்.611-612
29. மேற்கோள்: ஔவை.சு.துரைசாமிப் பிள்ளை, ஞானாமிர்த மூலமும் பழைய உரையும், ப.419
30. தொல்காப்பியம், மரபியல், 90.
31. திருமந்திரம், 2090
32. சிவஞான சித்தியார், சுபக்கம், 211
33. சி.அருணை வடிவேல் முதலியார், சித்தாந்த வினாவிடை, ப.301
34. சிவஞான போதம், எடுத்துக்காட்டு வெண்பா, 13.

35. சி.சு.மணி, சிவஞான மாபாடியம், ப.493.
36. சிவஞான சித்தியார், சுபக்கம், 138
37. மேலது, 139
38. மேலது, 137
39. சிவஞான சுவாமிகள், சிவஞான பாடியம், ப.272
40. திருமந்திரம், 2178.

4.3.5 திரோதானம்

“அருளுண்டாம் ஈசற்கு அது சத்தி அன்றே” [1]

“உயிர்களுக்கு பசுத்துவத்தை நீக்கிச் சிவத்துவத்தை அளித்தல் வேண்டும்” என்பதே இறைவனுக்கு உள்ள இரக்கம். அவ் இரக்கம் அவனது சத்தியேயன்றி வேறன்று. அச்,

“சத்திதன் வடிவு ஏதென்னில்
தடையிலா ஞானமாகும்” [2]

‘தடையிலா ஞானம்’ என்பது ‘உயிர்களின் அறிவைத் தடுத்தல் செய்யாது விளக்கி நிற்கும் ஞானம். இது அருட் சத்தியாகிய பரா சத்தியைக் குறிக்கும். இதுவே, ‘சத்தியின் சொரூபம்’ என்பதாகும்.

‘தடையிலா ஞானம்’ என்றதனால் ‘தடுத்தலை’ச் (அஃதாவது மறைத்தலை) செய்யும் ஞானமும் உளது என்பது விளங்கும். அதுவே ‘திரோதான சத்தி’ ஆகும்.

திரோதான சத்தி

இறைவனது அருளாகிய திரோதான சத்தியே மும் மலங்களின் வழி நின்று, ஆன்மாவிற்கு மறைத்தலைச் செய்யும். இச் சத்தி இல்லையேல், பாசங்களின் செயல்களாகிய மறைத்தல் தொழில்கள் நிகழா.

மூல மலமாகிய ஆணவ மலத்துடன் கலந்து, கன்மமலம், மாயாமலம் ஆகியவற்றின் காரியப்பாடுகளைத் தோற்றுவித்து, பெருக்கி, ஆன்மா மோகத்தின் வயப்பட்டு, கன்மபலனை அநுபவிக்கச் செய்து முறைப்படி மல பரிபாகத்தை உண்டாக்கி வைக்கும்.

“மூல ஆணவ மலத்துடன் கலந்து ஓர்
மூன்றுவினை மலத்தோடு மற்றதுமாய்

மொழியும் மலங்களின் காரியம் பெருக்கி
மோகமாய் அணுவினையுணவியக்கிச்
சீலமாய் மலபாகம் உண்டாக்குந் திரோதை” [3]

என்று திருப்பா கூறும்.

“அருளான சத்தி அனல்வெம்மை போலப்
பொருள் அவனாகத் தான் போதம் புணரும்
இருள் ஒளியாய் ஈண்டும் மும்மலம் ஆகும்
திருவருளாக நந்தி செம்பொருள் ஆகுமே” [4]

என்னும் திருமந்திரத்தில், ‘இருள் ஒளியாய் ஈண்டும் மும்மலம் ஆகும்’ என்றது, ‘இருளுக்கு ஒளிவந்து பொருந்துதலால் அதற்குமேலும் கூடுகின்ற மும்மலங்களாய் நிற்கும் திரோதானம்’ என்பதாகும். (இருள் - ஆணவம்; ஒளி - மாயை என்பது வெளிப்படை.)

திரோதான சத்தி சங்கற்பித்த வழியே மாயை காரியப்படும். அதுபோல, வினைகளைச் செய்விப்பதும், வினைப்பலன்களைக் கூட்டுவிப்பதும் திரோதான சத்தியே ஆகும். ஆகையால், கன்ம மாயைகள் திரோதான சத்திக்குக் கீழ்ப்பட்டு அதன்வழியே நடப்பனவாகும்.

திருவைந்தெழுத்தின் உட்பொருளைக் கூறுமிடத்து ‘நகாரம்’ திரோதான சத்தி, ‘மகாரம்’ ஆணவ மலம் என்னும் அளவே நூல்களிற் கூறப்படுதலன்றி, மாயை, கன்மங்களுக்கு வேறு எழுத்துக் கூறப்படாமையால் இது விளங்கும்.

“திருவெழுத்து ஐந்தில் ஆன்மா
திரோதம் மாசு அருள் சிவம் சூழ் தர நடுநின்றது” (சிவ.91)

என ‘நகாரம்’ திரோதான சத்தியைக் குறிக்கும் என்று சிவப்பிரகாசம் கூறும்.

“இறை சத்தி பாசம் எழில் மாயை ஆவியுற நிற்கும்’ [5]

என வரும் திருவருட்பயன், ‘நகாரம்’ மாயையைக் குறிக்கும் என்று கூறுவது இங்கு நோக்கத்தக்கது.

இதில் மாறுபாடு ஏதும் இல்லை. மாயை கன்மங்கள் திரோதான சத்திக்குக் கருவியாய் அமைதலின், திரோதான சத்தியைக் கூறவே மாயை கன்மங்களையும் கூறியதாகக் கொள்ளுதல் வேண்டும். அவ்வாறே, மாயையைக் கூறவே, அதனைக் கூட்டுவிக்கின்ற திரோதான சத்தியையும் கூறியதாகக் கொள்ளுதல் வேண்டும்.

திரோதான சத்தியின் செயல்கள்

வினைப்பயன்களை அனுபவித்துக் கழிப்பதற்காக, ஆன்மாக்களைக் கலை முதலான தத்துவங்களோடு கூட்டிச் செயற்படுத்தலும், ஆன்மாவின் அறிவை விளக்கம் செய்யும் இறைவனின் அருட் சத்தியான தன் இயல்பை ஆன்மா அறியாத வண்ணம்

மறைத்தலும், சட மயமான உலகத்தை ஆன்மா மெய்யெனக் கருதுமாறு செய்தலும், நிலைத்துள்ள சிவ சைதன்னியத்தைப் பொய்யெனக் காட்டலும், வினைப்பயனை இன்சுவை பொருந்த ஆன்மாவுக்கு ஊட்டுதலும் ஆகிய ஐந்து தன்மைகளாகத் திரோதானம் செயல்பட்டு நிற்கும். இதனை,

“அடைத்தவினை நுகர்ந்தொழிக்கவென்று
உயிரை அவிர்கலாதி தத்துவங்களிற் செலுத்தல்
அஙன மறிவினை விளக்கிய அருளை
அறியொணாவணம் மறைத்திடல் உலகாஞ்
சடத்தை மெய்யெனக் காட்டுதல் சிவ சைதன்னியந்
தனை பொய் செயல் கருமந்தனையின்
சுவையுற ஊட்டுதல் எனும் ஐந்தன்மையாய்
இருந்திடும் நெறியுடையோய்” [6]

எனத் திருப்பா விளக்கி நிற்கும்.

திரோதானம் - மலம் (உபசாரம்)

மலங்கள் பக்குவம் பெறும்வரை இச் செயல்களைத் திரோதான சத்தி அம்மலங்களின் வழியாகவே ஆன்மாவைச் செலுத்துதலால் இதுவும் ‘மலம்’ (பாசம்) என்றும் கூறப்படும்.

தாஸாம் மாஹேச்வரி சக்தி: ஸர்வா நுக்ராஹிகா சிவா|
தர்மாநு வர்த்தநாத் ஏவ பாச இதி உபசர்யதோ||[7]

(அனைவரையும் அநுக்ரகிக்கும் சிவசக்தி திரோதானசக்தி என்ற நிலையில் பாசதருமத்தை அநுசரிப்பதால் மலம் என்று உபசாரமாக அழைக்கப்படும்) எனவரும் மிருகேந்திர சூத்திரத்தில் மொழிபெயர்ப்பாக,

“இறைவன் உயர் சத்தியாய் எவ்வுயிர்க்கும் அருள்செய்யப்
பெறுசிவை தான் மலதருமம் பின்தொடரும் செயல் அதனை
உறுதலினால் பாசம் என உபசரிக்கப்படும் எனவே
அறைதருவர் அமலன் அருள் ஆகமநூல் நெறிகண்டார்” [8]

என்று சதமணி மாலை கூறுகிறது. இக்கருத்தை,

“பாகமாம் வகை நின்று திரோதாயி சத்தி
பண்ணுதலால் மலமெனவும் பகர்வர்” (சிவ.20)

என்று சிவப்பிரகாசம் குறிக்கும். ‘மல மெனவும்’ உம்மையால் இவ் வழைப்பு உபசார வழக்காகும் என்று தெளியலாம்.

மலங்கள் தத்தம் தொழிலினைச் செய்யுமாறு தூண்டி, ஆன்மாக்களை உலக வாழ்வில் பிணித்து, இறைவனை உணரவொட்டாது செய்வது இத் திரோதான சத்தியே ஆகும்.

“நெஞ்சினைத் தூய்மை செய்து
நினைக்குமா நினைப்பியாதே
வஞ்சமே செய்தி யாலோ
வானவர் தலைவனே”[9]

என வரும் தேவாரத்தில் “அடியேனுடைய நெஞ்சினைத் தூய்மை செய்து உன்னை எப்பொழுதும் அடியேன் நினைக்குமாறு திருவுள்ளம் பற்றாமல் வஞ்சனை செய்கின்றாயே” என்று அப்பர் பெருமான் அருளிச்செய்வர். இதில், “நினைப்பியாதே வஞ்சம் செய்தியாலோ” என்பது திரோதான சத்தியின் செயலாகிய மறைத்தலைக் குறித்தது.

“வேண்டத் தக்கது அறிவோய் நீ
வேண்ட முழுதுந் தருவோய் நீ
வேண்டும் அயன்மாற் கரியோய் நீ
வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயாது அருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசொன்று உண்டு என்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே”[10]

என்பது மாணிக்கவாசகர் அருளிச் செய்த திருவாசகம். இத் திருவாசகத்தில் “வேண்டும் பரிசு உண்டு என்னில் அதுவும் உன்தன் விருப்பன்றே’ என்பது, ‘வேண்டத்தக்கது அறிவோய் நீ’ என்பது முதலியவற்றை யான் அறிந்து உன் அருள்வழியே நிற்பேனாயினும் ஒரோவொருகால் பயிற்சி வசத்தால் அந்நிலையினின்றும் பிறழ்தலும் உனது திரோதான சத்தியின் செயலே’ என்பதை விண்ணப்பித்து, ‘அக்குற்றத்தைப் பொறுத்து என்னை நின்பால் வருவித்துக் கொள்ளுதல் வேண்டும்’ என வேண்டியதாம்” என்று குறிப்புரையில் குறிப்பிடுகிறார் அருணைவடிவேல் முதலியார்.[11]

மேலும், “வாட்டமின்றி யிருந்திடவும் வருஞ்செயல்கள் உண்டேல் முந்தனுடைய செயல் என்று முடித்து ஒழுகுதல்” (அடியார்கள் திருவருளின் வழி நின்று ஐம்பொறிகளின் வலிமையை வாட்டுவர். எப்போதேனும் நன்மை தீமைகள் வருமேனும் அதுவும் சிவன் செயலே என்றிருப்பர். முந்தன் - இறைவன்) என்னும் சித்தியார் தொடருக்கு, **“யானும் அதுவே வேண்டின் அல்லால் வேண்டும் பரிசொன்று உண்டு என்னில் அதுவும் உன்றன் விருப்பன்றே”** இத் திருவாசகப் பகுதியை எடுத்துக்காட்டி விளக்குவர் சிவஞான முனிவர்.[12]

அருட்கருணை

திரோதான சத்தி இயல்பாகச் சினம் உடையதன்று. ஆன்மாக்களைப் பக்குவப் படுத்தும் பொருட்டே சினத்தை மருவி, மறக்கருணையாகச் செயல்படும். இதுபற்றியே ‘சினக்கும் மலம்’[13] அதாவது ‘செருமலம்’ என்று திருமந்திரம் கூறும். சிவப்பிரகாசமும் ‘சினமருவு திரோதாயி’ (சிவ.48) என்றே குறிக்கும்.

ஆணவ மலத்தின் இருளிலிருந்து ஆன்மாவை விடுபடச் செய்து, அறிவு விளக்கம் தந்து, அருளாகிய ஒளியைப் பெறுவதற்கு உதவும். ஆன்மாக்களின் அறிவு தூல அறிவு ஆதலின், அநாதியே விளங்கி நில்லாது அதனதன் இயல்புக்குத் தக்கபடி படிப்படியாக (படிமுறையில்) சிறிது சிறிதாக விளங்கியே முடிவில் நிறைவாக விளங்குவதாகும். (The Individual selves may grow in nature and stature and be rid of its imperfection).[14] ஆணவம் பற்பல சத்திகளையுடையதாய் அந்தத் தூல அறிவையும் மறைத்து அறியாமையை விளைவித்து நிற்கும். எனவே, திரோதான சத்தி ஆன்மாவின் அறிவை வளர்பிறைத் திங்கள்போல் மேன்மேலும் விளக்கி நிற்கும். இவ் வுதவியால் ஆணவமலம் வளர்பிறைக் காலத்து இருள்போலச் சிறிது சிறிதாய் நீங்கும். இவற்றால் ஆணவத்தின் பரிபாகம் சிறிது சிறிதாக நிகழ்ந்து, ஆன்மா உலகத்தை நோக்கி நின்ற நிலைமாறி இறைவனை நோக்கித் தலைப்படும் பக்குவநிலை எய்தும். அக்காலத்தில் திரோதான சத்தி மறமாகிய செய்கை மாறி கருணை எனப்படும் முன்னைப் பராசத்தி ரூபமாய் அருட்சத்தியாக ஆன்மாக்கள் மாட்டுப் பதிவதாகிய சத்திநிபாதம் ஏற்படும். இதனை,

“முற்சினம் மருவும் திரோதாயி கருணை ஆகித்
திருந்திய சத்திநிபாதம் திகழும் அன்றே” (சிவ.48)

என்று சிவப்பிரகாசம் குறிப்பிடும்.

“ஆயவேலையில் மலம் என அறை திரோதாயி
மாயிருள் பொருள் யாவையும் மாறவே மாறித்
தூய இன்னருள் ஆகியே நின்றிடும் தோகாய்
ஏயும் இவ்வருளால் அல்லது இறாது உயிர்க்கு இருளே” [15]

என வரும் திருவானைக்கா புராணம்,

‘திரோதான சத்தியே அருட்சத்தியாய் மாறி அருள்புரியும். இவ் வருட்சத்தியால் ஆன்மாவிற்குள்ள மல இருள் நீங்கும்; வேறு எதனாலும் நீங்காது” என்று கூறும்.

“திங்கள்சேர் சடையார் தம்மைச் சென்றவர் காணா முன்னே
அங்கணர் கருணைகூர்ந்த அருட்டிரு நோக்கம் எய்த
தங்கிய பவத்தின் முன்னைச் சார்பு விட்டகல நீங்கிப்
பொங்கிய ஒளியின் நீழல் பொருவில் அன்புருவம் ஆனார்” [16]

என்னும் பெரிய புராணத்தில், 'கண்ணப்பர், பவத்தின் முன்னைச்சார்பு விட்டுச், சிவச்சார்பு பெறுவதற்கு இறைவனின் கருணைகூர்ந்த அருள் திருநோக்கம் பெற்றார்' என்று சேக்கிழார் பாடுவார்.

கருணைகூர்ந்த அருள்திரு நோக்கம், கருணைகூர்ந்த நோக்கம்- அருள்திரு நோக்கம் எனும் இரு வகையில் நிற்கும். கருணைகூர்ந்த நோக்கமாவது இருவினைப் பயனை ஊட்டித் திரோதானமாய் நின்ற மறக்கருணை மாறி, அருள்திரு நோக்கமாகி, அறக்கருணையாய் அருட்சத்தியின் சிறந்த நோக்கமாக அமைந்தது என்பதாம்.

வடமொழியில் சொல்லப்படும் 'கருணை', தமிழில் 'அருள்' என்று குறிக்கப்படும். ஆனால் இரண்டையும் இணைத்து, "அருட் கருணை தானாய திருவுள்ளம்", "அருட்கருணைத் திருவாளன் நாமம்", "திருவருட்கருணை வெள்ளத்திறம்" என வரும் தொடர்களில் 'அருட்கருணை' என்றே சேக்கிழார் குறிப்பர். அதற்கு, "சிவனது திருவருட்பெருமையைத் தமிழ்மொழி வழக்குப்பற்றி விளக்குவார் அருள் என்றும், வடமொழி வழக்குப்பற்றி விளக்குவார் கருணை என்றும் கூறினார். "ஒருபொருட் பன்மொழி சிறப்பினின் வழா" என்ற தொல்காப்பிய விதிப்படி மிக்க பேரருள் குறித்தது என்றலுமாம். இங்கு, "அருள் வித்திட்டுக் கருணைநீர் பாய்ச்சி" என்னும் குமரகுருபரர் அருள்மொழியின்படி, 'கருணை' பாச நீக்கமும், 'அருள்' சிவப்பேறும் தருவன" என்று சித்தாந்த விசேடவுரை வரைவார் சி.கே.சுப்பிரமணிய முதலியார்.[17]

சைவ சித்தாந்தத்தில் கருணை, அருள் என்ற இரண்டு சொற்களுக்கும் உள்ள வேறுபாடு மிக நுட்பமாக பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பார் தாஸ்குப்தா.[18]

இவ்வாறு இரக்கமாகிய அச் சத்தியே சிவபெருமானின் திருவடிகளை அடைவதற்குத் துணைநிற்கும். ஆதலால், அச் சத்தி 'பரிந்து நாகம் மாநதி மதியும் பொதிசடையான் அடிகள் நணுகும் வகை கருணை மிக நயக்கும்" என்று சிறப்பாக சிவப்பிரகாசம் ஓதிற்று. இச் சிவப்பிரகாசத் தொடரில் 'பரிந்து' என்னும் சொல் திரோதான சத்தியின் பெருமையை விளக்குவதாக அமையும்.

அடிக்குறிப்புகள்

1. சிவஞான போதம், எடுத்துக்காட்டு வெண்பா, 33.
2. சிவஞான சித்தியார் சுபக்கம், 82
3. பாம்பன் சுவாமிகள், கனகம், திருப்பா, ப.691
4. திருமந்திரம், 2307
5. திருவருட்பயன், 82
6. பாம்பன் சுவாமிகள், மேலது, ப.693
7. ஸதரத்ன சங்க்ரஹம், சூத்திரம்.21
8. ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள், சதமணி மாலை, சிவப்பிரகாசர் செந்தமிழ் நூல்கள் ப.415
9. 4:23:9

10. 8:33:6
11. சி.அருணைவடிவேல் முதலியார், எட்டாம் திருமுறை - 1, பக்.760-761
12. சிவஞான சுவாமிகள் பொழிப்புரை, சிவஞான சித்தியார் சுபக்கம், ப.301
13. திருமந்திரம், 2606.
14. K. Vajravelu Mudaliar, Sivajnana Mapadiyam, p.148.
15. திருவானைக்கா புராணம், ஞான உபதேசப் படலம், பா.26.
16. பெரியபுராணம், 753
17. C.K.சுப்பிரமணிய முதலியார், திருத்தொண்டர்புராணம் (இரண்டாம் பகுதி) பக். 949 & 1235
18. Surendranath Dasgupta, A History of Indian philosophy, p.4

4.4 சுத்த நிலை

இறைவன் திருவருளால் ஆன்மா, பல்வேறு பிறவிகளிலே பிறந்தும் இறந்தும், இரு வினைகளைப் புரிந்தும், அவ் வினைகளின் பயன்களை அநுபவித்து வருகின்ற சகல நிலை நீங்குவதற்கு, இருவினை ஒப்பு, மல பரிபாகம், சத்தி நிபாதம் இவற்றின் வழி முதல்வனது ஞானம் இனிது விளங்க, அந்த ஞானத்தின் முன் மாயா கருவிகளும் மாயா உலகமும் புலனாகாது முதல்வனது நிறைவில் தோய்ந்து நிற்பது ‘சுத்த நிலை’ எனப்படும்.

“இருவினைச் செயல்கள் ஒப்பில் ஈசன் தன் சத்தி தோய
குருஅருள் பெற்று ஞான யோகத்தைக் குறுகி முன்னைத்
திரிமலம் அறுத்துப் பண்டைச் சிற்றறிவு ஒழிந்து ஞானம்
பெருகி நாயகன்தன் பாதம் பெறுவது சுத்தமாமே” [1]

என்பது சிவஞான சித்தியார்.

இருவினை ஒப்பு, மல பரிபாகம்

பாசப்பற்று விடுதற்பொருட்டும், முதல்வன் பேரருளை அடைதற்பொருட்டும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நால்வகை நெறிகள் துணைபுரிகின்றன. உலகப் பயன் நோக்கிச் சிவனை வழிபடுதல் உபாயம் என்றும், அப் பயன்கள் யாதொன்றையும் விரும்பாது அன்பே காரணமாகச் சிவனை வழிபடுதல் உண்மை என்றும் கூறப்படும். மேலே சொன்ன சரியை முதலியவற்றை உண்மைக் காரணம் பற்றிச் செய்வதே சிவ புண்ணியத்தை விளைவிக்கும். இச் சிவ புண்ணியங்களால் இருவினை யொப்பும், இருவினை யொப்பால் மலபரிபாகமும், சத்திநிபாதமும் நிகழும். இம்மூன்றும் ஒன்று முன்னும் மற்றொன்று பின்னும் அல்லாது ஏக காலத்தில் நிகழும். இதுவே ஞானம் பெறுவதற்குரிய பக்குவ நிலையாகும்.

“தன்னைநிகர் இல்லாத சத்திநிபா தம்தானோ
மன்னுமல பாகமோ மாந்தர்க்கு - முன்னமே

உண்டானது ஏது என்றுரையாய் எனையடிமை
கொண்டாய் மெய் கண்டாய் குறித்து”[2]

என வரும் சதமணிக் கோவை, ‘இம் மூன்றும் முற்பிற்பாடு இல்லை’ என்று கூறும்.

சரியை முதலிய தவங்களின் வழி, நல்வினைப் பயனாகிய இன்பத்தில் விருப்பும், தீவினையின் பயனாகிய துன்பத்தில் வெறுப்பும் கொள்ளாது, அவற்றால் உள்ளம் வேறுபடாது இரண்டையும் ஒன்றுபோலக் கருதி, அவற்றின் மேல் பற்றுச் செய்யாது இருக்கும் மனநிலை உண்டாகும். அதுவே ‘இருவினை யொப்பு’ ஆகும். இதனால் ஞானத்தில் வேட்கை உண்டாகும்.

“............... அகலா
முனம் மருவும் இரு பயனும் ஒரு காலத்து அருந்த
முந்து நுகருந்து பயன் அந்தமுறவந்த
வினையும் எதிர்வினையும் முடிவினை உதவுபயனால்
நேராக நேராதல் மேவுங்கால்” (சிவ.48)

என்று ‘இருவினை யொப்பை’ விரிவாக விளக்குகிறது சிவப்பிரகாசம்.

“முன்வினைப்பயனால் வரும் இரு பயனும் (புண்ணியம், பாவம்), முன்னே நுகர்ந்த நுகர்(வுகள்) தருகின்ற வினைப்பயன் எடுத்த உடம்பினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிராரத்தமும் (இன்பம், துன்பம்), முன்வினையை நுகரும்போது அதன் எதிர் விளைவாக வருகின்ற ஆகாமிய வினையும் (நன்மை, தீமை) இந்த இரண்டையும் இந்த ஒரு பிறப்பிலேயே நுகர்ந்து கழித்துவிடும்படி, முன்வினையால் மூள்வினையும் மூள்வினையால் முன்வினையும் தொடரா வண்ணம் முடிவை உதவுகின்ற சிவ புண்ணியப் பயனால் (சிவ புண்ணியமே எல்லா வினைகட்கும் முடிவுபோல தலைமையுடையது) கூடுதல் குறைவின்றி (துலையொத்து) சரியாக ஒப்பாதல் ஏற்படும் காலம் இருவினை யொப்பு எனப்படும்.

சிவப்பிரகாசத்தில் கூறப்படும் இச்செய்தி, திருவருட்பயனில் ஏழு சீர்களில் சுருக்கமாகக் கூறப்படுகிறது:

“நீடும் இருவினைகள் நேராக நேராதல்
கூடும் இறைசத்தி கொளல்”

சிவப்பிரகாசத்தில் மூன்று கழிநெடிலடிகளில் கூறும்பொழுது சொற்கள் மிகவே செய்யும். மேலும், நேராக நேராதலில் முதல் நேர் ‘சரியாக’ என்றும், அடுத்தது ‘பொருந்துதல்’ என்றும் பொருள் தருவது. ‘இறைசத்திகொளல்’ என்பது சத்திநிபாதத்தைக் குறிக்கும்” என்று இச்சிவப்பிரகாசத்திற்கு நீண்ட விளக்கம் தருவர் மா.அமிர்தலிங்கம்.[3]

ஞானம் பெறுவதற்கான நிகழ்ச்சிகள் அதாவது இருவினை யொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் எல்லாம் ஆன்மாவின் அறிவினில் விளங்குதல் வேண்டும். அவ்வகையில் மலபரிபாகக் குறியும், சத்திநிபாதக் குறியும் அறிவினில் விளங்கி நிற்றல்போல,

இருவினையொப்புக் குறியும் அறிவினில் விளங்கித் தோன்றும்.[4] இன்பத்தில் விருப்பமும், துன்பத்தில் வெறுப்பும் இன்றி இரண்டையும் சமமாகக் கருதும் உண்மையான இருவினை யொப்பே 'ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குதல்' முதலாகச் சொல்லப்படுகின்றது. பிக்ஷுகோபநிடதம் "ஸம லோஷ்டாச்ம காஞ்சனா:" என்று கூறும். (ஸமம் - ஒன்று; லோஷ்டம் - பார்த்தல்; ஆச்மம் - கல்; காஞ்சனம் - பொன். கல்லையும் பொன்னையும் ஒன்றாகப் பார்த்தல்) [5]

"To see life steadily and see it whole" எனும், கவிஞர் மேத்யூ அர்னால்டின் (Mathew Arnold) இத் தொடரும் இருவினை யொப்பை உணர்த்தி நிற்கும்.[6]

"முற்பிற்பாடு இன்றி முளையாது இருவினையும்
அற்பமணர் கூடலிலே ஆராய்ந்த - நற்செழியன்
இன்பதுன்பங்கள் இரண்டுமொரு காலத்தே
முன்புற்றது எந்தாய் மொழி" [7]

என்பது சதமணிக் கோவை.

மதுரைப் பாண்டிய மன்னனின் வெப்பு நோயைத் தீர்ப்பதற்காகத் திருஞானசம்பந்தர் "மந்திரமாவது நீறு" என்ற பதிகம் பாடித் திருநீற்றை அவன் வலப்பக்கத்தில் தடவினார். அப்போது, வலப்பக்கத்தில் உள்ள நோய் நீங்கி, குளிர்ச்சியையும் சமணர்கள் சரி செய்ய இயலாத மறுபாதியில் வெப்பத்தையும் அனுபவித்தான். இக்குறிப்பே இருவினை யொப்பு நிகழ்ந்து, மலபரிபாகம் விளைந்த போதுதான், சத்திநிபாதமாகிய பரமாசாரியன் திருஞானசம்பந்தர் எழுந்தருள்கை நிகழ்கின்றது" என்று இருவினை யொப்பிற்கு பாண்டியன் வரலாற்றை எடுத்துக்காட்டி விளக்குகிறது சதமணிக் கோவை.[8]

அவ்வாறு வலப்பக்கத்தில் குளிர்ந்தும், இடப்பக்கத்தில் வெப்பமும் ஆகி, பாண்டியன் அநுபவித்த நிலையை,

"மன்னவன் மொழிவான் என்னே மதித்த இக்காலம் ஒன்றில்
வெந்நரகு ஒருபாலாகும் வீட்டின்பம் ஒருபாலாகும்
துன்னு நஞ்சு ஒருபாலாகும் சுவையமுது ஒருபாலாகும்
என் வடிவு ஒன்றில் உற்றேன் இருதிறத்து இயல்பும்" [9]

என்று பெரிய புராணம் குறிப்பிடும்.

"ஒரு பக்கம் நரகமும், மறுபக்கம் முத்தியின்பமும்; ஒரு பாதியில் நஞ்சின் நுகர்ச்சியும், மறுபாதியில் அமுத நுகர்ச்சியும் ஆகிய இருவேறு தன்மைகளை உடம்பிலே அடையப் பெற்றான்" என்பதாம்.

இருவினை யொப்பாவது அனுக்கிரக காரணமன்று. மலபரிபாகம் படுவதற்கே துணையாகும் என்று பௌட்கர ஆகமம் கூறுவதாக ஔவை.சு.துரைசாமிப் பிள்ளை குறிப்பர்.[10]

இருவினை யொப்பு நிகழவே, ஆணவத்தின் சத்தி மெலிந்து, ஆன்மாவின் அறிவைத் தடுத்து வைத்திருந்த அதன் பிணிப்பு நெகிழ்ந்து நீங்கும் நிலையை அடையும். அந்நிலை ‘மல பரிபாகம்’ எனப்படும். ‘பரிபாகம்’ என்பதற்குப் ‘பக்குவம்’ என்று பொருள். மலசத்தி நீங்கக்கூடிய பக்குவத்தை - தகுதியை அடைந்துள்ளது என்பதைக் குறிக்கும்.[11]

சத்திநிபாதம்

மலபரிபாகம் சிறிது சிறிதாக நிகழ நிகழ அதற்கேற்ப அதுவரை ஆன்மாவில் மறைந்திருந்து பக்குவப்படுத்தி வந்த திரோதான சத்தி சிறிது சிறிதாகத் தன் தன்மை மாறி அருட்சத்தியாய் மாறும். மலசத்தி தேய்ந்துவரும் நிலையை மலபரிபாகம் என்றாற்போல, அருட்சத்தி விளங்கி வரும் நிலையைச் ‘சத்திநிபாதம்’ என்பர். மலபரிபாகத்தின் தன்மையைப் பொறுத்துத்தான் சத்திநிபாதம் நிகழும்.

‘பாதம்’ என்னும் வடசொல்லுக்கு ‘வீழ்ச்சி’ என்பது பொருள். ‘நி’ என்பது மிகுதி யுணர்த்துவதோர் இடைச்சொல். எனவே, சத்தி நிபாதம் என்பதற்கு ‘மிகுதியாக’ அல்லது ‘விரைவாக’ச் ‘சத்தி வீழ்தல்’ என்பது பொருளாகும். (சத்தி - சிவசத்தி, நி - உபசர்க்கம், பாதம் - விழுதல்)[12]

இதனைச் ‘சத்திபதிதல்’ என்றோ, ‘சத்திதோன்றுதல்’ என்றோ கூறாது ‘சத்தி வீழ்தல்’ எனக் கூறுவதற்குக் காரணம், மக்கள் பலர் கூடியுள்ள ஒரு கூட்டத்தினிடையிலே எதிர்பாராத வகையில் ஒரு கல் வந்து விழுமாயின், அவ்வீழ்ச்சி அங்குள்ளவரை அஞ்சி அகலச் செய்யும். அதுபோல, சத்திநிபாதம் ஒருவருக்கு நிகழுமாயின், உலகியல் உணர்வில் ஓர் அதிர்ச்சியுண்டாக, உலகியலில் இருந்து நீங்குவதாகும். எனவே, சத்தி பதிதல் என்று கூறாது ‘சத்தி வீழ்ச்சி’ என்றே கூறப்படுகிறது. இந்நிலையை எய்திய ஆன்மாக்கள் ‘சத்திநிபாதர்’ என அழைக்கப்படுவர்.

இதனை,

“...... சத்திநிபாத
நிபாதமென்றது யாவன் ஒருவன்
இடைக் கடி தொருபொருள் அடுத்துறவீழின்
வெரீஇ அந்நிலை யொரீஇ வேறிடம்
மருவும் மற்றென நிருமலன் பெருவலி
பதிப்ப அறிவன் பவபயம் கதுவ
மதித்தனன் தேசிகன் மலரடி யடையும்” [13]

என்று ஞானாமிர்தம் கூறும்.

சத்திநிபாத வகைகள்

இச் சத்திநிபாதம் ஆன்மாவின் பக்குவநிலைக்கு ஏற்ப மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரம் எனப் படிமுறையில் உயர்ந்து நிற்கும். ‘தீவிரதரம்’ என்பது ‘அதிதீவிரம்’ என்றும் சொல்லப்படும்.

சத்திநிபாதத்தில் ஆன்மா திருவருளைப் பற்றி நின்று, அதனை இடமாகக் கொள்ளும் ஆதலால், **'தலமொரு நான்கும் தந்தெனக்கு அருளி'**[14] எனும் ஔவையார் வாக்கு சத்திநிபாதத்தின் நான்கு வகைகளைக் குறிக்கும் எனலாம்.

'மந்ததரம்' முதலிய நால்வகை சத்திநிபாதங்களும், 'மந்ததரத்தில் மந்ததரம்', 'மந்ததரத்தில் மந்தம்', 'மந்ததரத்தில் தீவிரம்', 'மந்ததரத்தில் தீவிரதரம்' என்பன முதலாக ஒவ்வொன்றும் நந்நான்காய்ப் பதினாறாகிப் பின் அவற்றுள்ளும் அவ்வாறாய் மிகப் பலவாய் விரியும்.

இச் சத்திநிபாதம் காரணமாகவே சிவ புண்ணியங்களான 'சரியை' முதலியவை நான்காகவும், அவற்றுள்ளும் 'சரியையில் சரியை' முதல் பதினாறாகவும் மேலும் அவற்றுள்ளும் பலவாகவும் நிகழும்.

வடமொழியில் 'தரம்' என்னும் விகுதி ஒன்றின் ஒன்று மிகுதலைக் குறிக்கும். 'தீவிரதரம்' என்றால், தீவிரம் அதிகம், அதிக தீவிரம் என்பதும், 'மந்ததரம்' என்றால் மந்தம் அதிகம் என்பதும் பொருளாகும்.

மந்ததரம் வாழைத்தண்டில் நெருப்பு பற்றுவதைப் போன்றது. மந்தம் பச்சைவிறகில் நெருப்புப் பற்றுவதைப் போன்றது. தீவிரம் உலர்ந்த விறகிலும், தீவிரதரம் கரியிலும் நெருப்புப் பற்றுவதைப் போன்றதாகும். இதனை,

"நாலுவகைச் சத்தி நிபாதத்து நற்பருவ
மூல குருவே மொழியெனக்கு - கோல
அரம்பைத் தண்டு ஒண்பச்சைக் காட்டம் உலர்காட்டம்
நிரம்புகரி நேரா நினை" [15]

என்று சிவானந்த மாலை கூறும்.

முதற் சத்திநிபாதமாவது நமக்குப் பேறாய் உள்ள கர்த்தா உண்டென்று அறிவு எழுதல். இரண்டாம் சத்திநிபாதமாவது அந்தக் கர்த்தாவைப் பெறுவதற்கு வழி எப்படி என்று ஆராய்தல். மூன்றாம் சத்திநிபாதமாவது பிரபஞ்சத்தை உவர்த்துப் புளியம்பழமும் அதன் ஓடும்போல நிற்றல். நான்காம் சத்திநிபாதமாவது பிரபஞ்சத்தை முற்றத் துறந்து ஆசாரியனே பொருளென்று கொண்டு தானற நின்று வழிபடுதல். இந்நிலையை,

"ஆசைதரும் உலகம் எலாம் அலகைத் தேராம் என்று
அறிந்து அகல அந்நிலையே ஆகும்"

என்று சித்தியார் விளக்கும்.[16] "உலகியல் உணர்வை வெறும் கானல்நீர், நொடிப்பொழுதில் மறையும் தன்மை உடையது என்று உணர்ந்து அதனை விட்டு நீங்குவது" என்பதாம்.

இச் சத்திநிபாத விளக்கத்தைச் சிவானந்த மாலையும் சிவநெறிப் பிரகாசமும் வேறுவிதமாகக் கூறுகின்றன என்பதும் இங்கு நோக்கத்தகும்.

"மந்ததரம் மெய்யாதி பொய்தோன்றல் மந்தம்கேள்
அந்தமிலா அச்சம் அவையறுத்தல் - பந்தமிகு
தீவ்ரங்கேள் மெய்ஞ்ஞானம் முன்னிரண்டுந் தீர்த்தெழுந்த
தீவ்ரதரம் மெய்வினையாத் தேர்" [17]

என்று சிவானந்த மாலையும்,

"சத்திதான் நிவர்த்தி பதிந்திட்ட போது
தகும் விரத்தி பொய்வாழ்வில் சாற்றில் அதேமந்தம்
முத்திதனை இச்சித்து விரத்தி நிலை செய்யும்
மொழி பதிட்டா சத்தி அது முன்னில் மந்த தரமாம்
சுத்தம்ஆம் விஞ்ஞானம் விளக்கும் வித்தை
தோய்ந்ததனால் சத்திபெயர் தீவிரமாச் சொல்வார்
சித்திக்க உபசாந்தி செறிசத்தி சாந்தி
சேர்ந்திடில் தீவிரதரமாச் செப்பும் இதன் பெயரே" [18]

என்று சிவநெறிப்பிரகாசமும் அதனை விளக்கி நிற்பன.

இத்தகைய தீவிரதரம் சத்திநிபாதம் நிகழப்பெற்ற ஆன்மாக்களுக்கு ஞானத்தைப் பெறுதலில் வேட்கை உண்டாகும். அந்நிலையில் இதுகாறும் அறிவுக்கு அறிவாய் உள்நின்று உணர்த்திவந்த முதல்வன் ஒப்பற்ற குருநாதன் வடிவம் கொண்டு எழுந்தருள்வான்.

குருவருள்

"இறைவனது அருளே உயிர்க்கு அருளவேண்டி வடிவு கொள்கிறது." "நிர்க்குணனாய் நின்மலனாய் நித்தியாநந்தனாய்த் தற்பரமாய் நின்ற தனிமுதல்வன்" உயிர்கட்கு அருள் செய்ய வேண்டிய காலத்தில் நிர்க்குணம், நின்மலம், நித்தியானந்தம், தற்பரம் என்னும் அந்நிலையே நின்றால் அவனால் உயிர்கட்கு ஒரு பயனுமில்லை அன்றோ? பெத்தத்தில் திரோதான சத்தியையும், முத்தியில் தடையில்லாச் சிவஞானச் சத்தியையும் உருவாகக்கொண்டு உயிர்கட்கு அருள்புரிகின்றான். ஆதலின், அவனுக்கு அவ்வருள் உருவம் இருவேறு திறத்தில் இன்றியமையாதது ஆயிற்று. ஆகவே முத்தி நிலையில் மண்முதலா நாதாந்தமாய் வந்து தத்துவங்களை நீக்கிய உயிர்கட்கு இறைவன் அற்புதம் போல் ஆனா அறிவாய் அளவிறந்து தோன்றுவான் ஆவான். இவ்வுண்மையைத் தெளிவாக,

"நாடிய சத்திநிபாதம் நாலு பாதம்
நண்ணும் வகை எண்ணரிய ஞானபாதம்
கூடுமவர் தமக்கு உணர்வாய் நின்ற ஞானக்
கூத்தன் ஒரு மூர்த்திகொடு குறுகி மோக

நீடிய கேவலசகலம் நிகழா வாறு
நிறுத்தி மலம்அறுக்கும் அது நிலையார் சுத்தம்” (சிவ.49)

என்னும் சிவப்பிரகாசத் திருவிருத்தப் பகுதியால் அறியலாம் என்பார் காஞ்சி ஞானப்ரகாச சுவாமிகள்.[19]

குருவாக வந்தவர் இறைவனே யன்றி வேறொருவரு மல்லர். குருவாக என்றும் உள்ளவன் சிவனே. இதனைச் சுவேதாசுவதரம்,

“அஜாத இத்யேவம் கச்சித்பீரு; ப்ரபத்யதே|
ருத்ர யத்தே தக்ஷிணம் முகம் தேனமாம் பாஹி நித்யம்||” [20]

என்று கூறுகின்றது.

“மீண்டும் பிறவாமல் இருக்க, தட்சிணாமூர்த்தியாகிய உன் குருமுகத்தை நான் எப்பொழுதும் துதித்துச் சரணடைகிறேன்” என்பது பொருளாகும். இவ்வுபநிடதத்தை ஸ்ரீசங்கரர் பிரம்ம சூத்திர பாடியத்தில் சுமார் நாற்பது இடங்களிலும், லலிதா திரிசதி பாடியத்தில் சுமார் முப்பது இடங்களிலும் பயன்படுத்தி இருக்கிறார். இராமாநுசர், மத்துவர் முதலியோர் இதனைப் பரமப் பிரமாணமாக எடுத்தாள்கின்றனர்.[21]

“கர்த்தா ஆசாரிய மூர்த்தமாய்த் திருமேனி கொண்டு வருதல் ஆவது மலம் நீங்கின உயிரிலே சிவஞானம் வெளிப்பட்டு விளங்கித் தோன்றுதல்” என்று சித்தாந்த மரபு கூறுகின்றது.[22]

“ஈட்டுவார் வினை ஒத்தபோது இருள்மலங் கருக
வாட்டுவார் அவர் சென்னிமேல் மலரடிக் கமலஞ்
சூட்டுவார் மறைகடந்த தம் தொல்உரு விளங்கக்
காட்டுவார்” [23]

என்று திருவிளையாடற் புராணம் கூறுவதும் இங்குக் குறிக்கத்தகும்.

இங்ஙனம் ஞானக்கூத்தன் ஒப்பற்ற குருவாய் எழுந்தருளி, மயக்கமாய் வந்து தடுக்கும் கேவலம், விகற்பமாய் வந்து தடுக்கும் சகலம் ஆகிய நிலைகள் சேராதவாறு அருளில் நிறுத்தி மலங்களைப் போக்கியருள்வான். அதனால் ஆன்மா தன்னுடைய சிற்றறிவினை ஒழித்து மெய்ஞ்ஞானம் பெறும். பெருகிய ஞானத்தால் பெருமானின் திருவடியை அடைந்து பேரின்பத்தில் திளைக்கும். சுத்தநிலையாகிய இந்நிலையே பிறவி ஒழிந்து இறைவனோடு கலந்திருக்கும் அருள்நிலையாகும்.

இச் சுத்தாவத்தையானது சீவன்முத்தி, பரமுத்தி பேதத்தினால் சீவன்முத்தி சுத்தாவத்தை என்றும், பரமுத்தி சுத்தாவத்தை என்னும் இரு வகைப்படும். இங்கே கூறப்பட்டது பரமுத்தி சுத்தாவத்தையாம். இது காரண சுத்தம்.[24]

இவ்வருள்நிலை, சரியை, கிரியை, யோக நிலைகளில் நின்று முதிர்ச்சி பெற்ற கேண்மையாளருக்கே வாய்க்கும் என்று சிவ ஆகமங்கள் சொல்லும்.

> "கேடில் புகழ் தரும் சரியை கிரியா யோகக்
> கேண்மையரேல் இவை உணர்த்தக் கிளக்கும் நூலே" (சிவ.49)

என்பது சிவப்பிரகாசம்.

இதில் கூறிய ஞானபாதம், அதனைக் கூடுதல், கூடுவோர், அவருணர்வு, அவ்வுணர்வாய் நின்ற சிவநிலை, இறைவன் குருமூர்த்தியாய் அருளல், சுத்தாவத்தை (காரியம்) அனைத்தும் இனிவரும் சிறப்பிலக்கணத்தில் இனிது விளக்கப்படும்.

அடிக்குறிப்புகள்

1. சிவஞான சித்தியார் சுபக்கம், 230
2. சதமணிக்கோவை, 68
3. நேர்காணல் : மா.அமிர்தலிங்கம், காஞ்சிபுரம், 10-05-2008.
4. சி.அருணைவடிவேலு முதலியார், சிவஞான போத மாபாடிய பொருள்நிலை விளக்கம், ப.659
5. அண்ணா, (உ.ஆ), 108 உபநிஷத்சாரம் (மூன்றாம் பாகம்), ப.55
6. Ref : K.M. BalaSubramanian, Special lectures on saiva siddhanta, p.131
7. சதமணிக் கோவை, 65
8. மு.அருணாசலம், (கு.ஆ), சதமணிக்கோவை, ப.52
9. பெரிய புராணம், 2665
10. ஔவை.சு.துரைசாமிப் பிள்ளை, ஞானாமிர்த மூலமும் பழைய உரையும், ப.46
11. ஆ.ஆனந்தராசன், சிவஞான போதம் வழித்துணை விளக்கம், ப.220
12. சிவஞானமுனிவர், மாதவச் சிவஞான முனிவர் நூற்களஞ்சியம், ப.1589
13. ஞானாமிர்தம் அகவல், 69
14. விநாயகர் அகவல், வரி.31.
15. மேற்கோள், மதுரைச் சிவப்பிரகாசர், சிவப்பிரகாசம் மூலமும் உரையும், பக்.167-168
16. மேலது, 168
17. மு.அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு, பதினான்காம் நூற்றாண்டு, ப.173
18. சிவநெறிப் பிரகாசம், 156
19. காஞ்சி ஞானப்ரகாச சுவாமிகள், கந்தர் கலிவெண்பா, பக்.30-31
20. சுவேதாச்சுவதர உபநிஷதம், 4-21.
21. அரங்கசாமி அய்யர், மெய்கண்டான் சித்தாந்த மகாநாடு மலர், ப.133
22. சிவஞான முனிவர், மு.கா.நூ. ப.1592
23. திருவிளையாடற் புராணம், 488
24. மு.திருவிளங்கம் (புத்துரை), சிவப்பிரகாசம், ப.136

4.5 சைவ சித்தாந்த முத்தி

இவ்வுலகில் வாழ்கின்ற உயிர்கள் இன்பத்திலும் துன்பத்திலும் மாறி மாறி உழன்று வருவதால், இவ்வுலக வாழ்வு குறை உடையது என்பதை எல்லாச் சமயங்களும் சுட்டிக்காட்டுகின்றன. எனவே, இவ்வுலக வாழ்வின் கட்டுகளிலிருந்து விடுபட்டு நீங்கிப் பேரின்ப வாழ்வெனும் வீடுபேற்றை உயிர்கள் எய்த வேண்டும் என்னும் பொதுமைக் கொள்கையில் எல்லாச் சமயங்களும் ஒன்றுபடுகின்றன.

ஒவ்வொரு சமயமும் அதன் கொள்கைகளை விளக்கி ‘அவற்றை உள்ளவாறு உணர்தலே ஞானம்’ என்றும், ‘அந்த ஞானத்தை அடைவிக்கும் செயல்களே தவம்’ என்றும், ‘அத்தகைய தவத்தை மேற்கொண்டால்தான் வீடுபேறு அல்லது முத்தி அடைய முடியும்’ என்றும் கூறுகின்றது. அம்முத்திநிலை, எத்தகைய தன்மையுடையது என்று விளக்குவதில்தான் சமயங்கள் வேறுபடுகின்றன.

இங்ஙனம் பல்வகையிலும் வேறுபட்ட கொள்கைகளை உடைய சமயங்கள் கூறுகின்ற முத்தி நிலைகளைக் கூறி, அவற்றினும் மேம்பட்ட சைவ சித்தாந்தத்தின் முத்தி நிலைக் கொள்கையே சிறந்தது என்று சிவப்பிரகாசம் எடுத்துக்காட்டுகிறது.

சிவப்பிரகாசம் கூறும் முத்திவகைகள்

அரிவையர் இன்புறு முத்தி கந்தம் ஐந்தும்
    அறுமுத்தி திரிகுணமும் அடங்கும் முத்தி
விரவுவினை கெடுமுத்தி மலம் போம் முத்தி
    விக்கிரக நித்த முத்தி விவேக முத்தி
பரவுமுயிர் கெடுமுத்தி சித்தி முத்தி
    பாடாண முத்தி இவை பழிசேர் முத்தி
திரிமலமும் அகல உயிர் அருள்சேர் முத்தி
    திகழ்முத்தி இதுமுத்தித் திறத்தது ஆமே” (சிவ.50)

மகளிரிடத்துத் துய்க்கும் இன்பமே முத்தி என்பது உலகாயதர் கொள்கை. உருவம் முதலிய ஐந்து கந்தங்களும் கெடுவதே முத்தி என்பது நான்குவகை பௌத்தர்களில் சௌந்திராந்திகர் கொள்கை. முக்குணங்களும் கெடுவதே முத்தி என்பது சமணரில் நிகண்டவாதியும், நிரீசுர சாங்கியமும் கொண்ட கொள்கை. வினைகள் கெடுவதே முத்தி என்பது பிராபகர சமயத்தின் கொள்கை. ஆணவ மலம் முற்றும் அழிந்து போவதே முத்தி என்பது அகச் சமயமான பேதவாதம் கூறும் கொள்கை. இவ்வுடல் முத்தி நிலையிலும் அழியாது நிலை பெற்றிருக்கும் என்பது சிவசமவாதிகளின் கொள்கை. ஆன்மா என்ற ஒன்றே அழிந்து போவது முத்தியாகும் என்பது பாற்கரியவாதத்தின் கொள்கை. உயிர் பசு கரணம் கெட்டுச் சிவ கரணம் பெறுவதே முத்தி என்பது அகச் சமயமான சிவ சங்கிராந்த வாதிகளின் கொள்கை. அட்டமா சித்திகள் பெறுவதே முத்தி என்பது யோக மதத்தின் கொள்கை. உயிர் ஒன்றையும் அறியாமல் கல்லைப்போல் கிடக்கும் நிலையே முத்தி என்பது பாடாணவாதத்தின் கொள்கை. இவ்வாறு பத்து வகையாகச் சொல்லப்பட்ட முத்திகள் குற்றமுடையன.

ஆணவம் கன்மம் மாயை ஆகிய மும்மலங்களிலிருந்தும் விடுதலை பெற்று உயிர் அருளோடும் கூடி, சிவ பரம்பொருளோடு பேரின்பத்தை எய்துவதே சித்தாந்தத்தின் முத்திக் கொள்கையாகும். இதுவே, முத்தி பற்றிய சிறந்த கொள்கையாகும்.

உலகாயத முத்தி

இது மக்கள் அடையத்தக்க பொருள், காணப்படுகின்ற இவ்வுலகமே; இதற்குமேல் வேறொன்றில்லை எனக் கொள்வது. ஆயதம் - அடையத்தக்க பொருள் என்று பொருள்படும். இவ்வுலகத்தில் உள்ள சிறந்த இன்பம் எதுவோ அதுவே பெறுதற்கரிய முடிந்த பேறாகக் கொள்ளப்படும். அவ்வகையில் ‘கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் ஐம்புலனும் ஒண்டொடி கண்ணே உள’ என்று கூறியவாறு இம்மை யிலேயே எழில் மிக்க மங்கையரோடு கூடி இன்புறுவதே முத்தி இன்பமாகும் என்று எடுத்துரைக்கும். இதுவே, **‘அரிவையர் இன்புறும் முத்தி’** எனப்படும்.

> “ஊடுவது உணர்வது உற்ற கலவிமங் கையரை உள்கி
> வாடுவது அடியில் வீழ்ந்து வருந்துவது அருந்தவம் பின்
> கூடுவது உணர்வு கெட்டுக் குணமெலாம் வேட்கை யேயாய்
> நீடுவது இன்ப முத்தி இத்தில் நின்றார்கள் முத்தர்” [1]

வீட்டின்பம் உண்டு என்று கருதி இந்த உலகத்தில் உள்ள இன்பங்களை விடுத்து, தவத்தால் உடலை வருத்தி மெலிவது ஏன்? பெண்களோடு ஊடுவது, ஊடலை உணர்த்துவது, அவர்களோடு சேர்வது, அவர்களைப் பிரிந்தபோது வாடுவது, அவர்கள் காலடியில் வீழ்வது இவையே அரிய தவம் என்று கொள்ளத் தக்கன. ஊடல் தீர்ந்த நிறைவில் அவர் மீது வேட்கையோடு கூடி இன்பம் அநுபவிப்பவர்களே முத்தி பெற்றவர்கள் ஆவர்.

"ஆசையுற்று உழல் சூகரங்கள் அசுத்த மேவி அளைந்துதின்றே
சுகித்தனவாயிடும் சுகம் ஏழையோடு உறும் இன்பம்"[2]

தோல், இரத்தம், மாமிசம், நரம்பு ஆகியவற்றால் ஆன பெண்ணின் உடல் தன்நிலை மாறி அழியக்கூடியது. எனவே, அதனால்பெறும் இன்பமும் நிலையற்றதே. ஆகவே, இந்த இன்பமே முத்தி என்பது பொருந்தாது.

"பூசிமுடித்து உண்டு உடுத்துப் பூங்குழலார் தங்கலவி
ஆசைதனிற் பட்டின்ப வார்கலிக்கு - நேசமுற
நின்று திளைக்கும் இது முத்தி அல்லது வேறு
ஒன்று திளைக்கும் அது முத்தி - அன்று என்று
இலகா இருளலகை போல் இகலே பேசும்
உலகாயதன்"[3]

என்று நெஞ்சுவிடு தூது உலகாயதரின் முத்தி சிறந்ததன்று என்று கூறும்.

புத்தரில் சௌந்திராந்திகர் கூறும் முத்தி

பிற உயிர்கட்குச் சிறிதும் துன்பம் செய்யாது, அவற்றிற்கு நலம் செய்தல் வேண்டும் என்பதே பௌத்த மதத்தின் சிறந்த கொள்கை. 'எல்லாப் பொருளும் சூனியமே. ஆதலின் பொய்யாக அறிவில் பதிகின்ற பிற பொருள் வடிவங்களுள் ஒன்றேனும் அறிவில் பதியாதவாறு அவற்றைப் பற்றாது விடுத்தலே முத்தி' என்று கூறும். அம் மதம் பொருள்களை ஐந்து கந்தங்களாக வகுக்கின்றது. அவை, உருவம், வேதனை, குறிப்பு, பாவனை, விஞ்ஞானம் எனப்படும். 'கந்தம்' என்பதற்குத் 'தொகுதி' என்பது பொருள். இந்த ஐந்து தொகுதியும் அறவே எல்லாப் பற்றும் அறும். இப் பற்றறுதியே வீடு அதாவது முத்தியின்பம் என்று கூறப்படும். இதுவே, **"கந்தம் ஐந்தும் அறுமுத்தி"** எனப்படும்.

"நின்றவுரு வேதனையே குறிப்புச் செய்கை
நேர்நின்ற ஞானமென நிகழ்ந்த வைந்தும்
ஒன்றிய கந்தத்து அவிவே முத்தியென்ன
உரைசெய்தான் பிடகத்தின் உணர்வு மிக்கான்"[4]

என்பது பெரிய புராணம். 1. உருவ கந்தம் - உருவங்களுக்கெல்லாம் காரணமாகிய பொருளை உணர்த்துவது. 2. வேதனைக் கந்தம் - இந்திரியங்களுக்கும் புலன்களுக்கும் உள்ள பொருத்தத்தின் உளதாகும் உணர்வு. 3. குறிக் கந்தம் - மெய் வாய் முதலிய ஐந்தும் மனமும் கூடி ஆறு இந்திரியங்களினால் வரும் அறுவகை உணர்வினால் உளதாகும் பொது - சிறப்பு என்ற இரு வகையானும் பொருள்களைப் பெயர்க் குறியிட்டறிதற் கருவியாகிய ஞானம். 4. செய்கைக் கந்தம் - மனம் வாக்குக் காயம் என்னும் முக்கரணங்களால் வரும் தொழில் வேறுபாட்டால் அவற்றுக்கு உளதாகும் பக்குவம். 5. ஞானக் கந்தம் - துயில்வோனுடைய உணர்வானது, செய்கையும்

நுகர்வுமின்றிச் சான்று மாத்திரையாய் நிற்பதுபோல அறிவுடையார்களுக்குள் நின்று அவ்வறிவு காரணமாய் நிற்கும் அறிவுச்சத்தி.[5]

மணிமேகலை, பவத்திறம் அறுகெனப் பாவை நோற்ற காதையில்,

"உணர்வு எனப்படுவது உறங்குவோர் உணர்வின்
புரிவு இன்றாகிப் புலன் கொளாததுவே" [6]

என்று ஞானக் கந்தம் பற்றி உரைக்கும். இக் கந்தம் சவிகற்பமாய் (வேறுபடுத்தி உணர்வது) விரியும் ஞானமாகிய பிரவிருத்தி ஞானம், அங்ஙனம் விரியாது ஒடுங்கும் ஞானமாகிய ஆலய விஞ்ஞானம் என்று இரண்டாகப் பகுத்துக் கூறப்படும் (ஆ - முழுதும்; லயம் - ஒடுங்குதல்)

"முந்தும் பிடகம் மூன்று உணர்ந்து
செயிர் நான்கு ஒழிந்து முதுசீலம்
ஐந்தும் புனைந்து பாரமிதை
ஆறைந்து அடக்கும் இயல்புடையோன்
கந்தங் கெடுதல் முத்தி எனக்
காட்டும் குரவன்" [7]

என்பது திருவாதவூரடிகள் புராணம்.

'ஐந்து கந்தமாகிய தத்துவங்களின் இயல்பை நன்குணர்தலே ஞானம்' என்பதும், இதை உணர்த்த 'ஆதி புத்தர் செய்த பிடக ஆகமத்தின் அதாவது விம்மாய பிடகம், அபிதன்மபிடகம், சூத்திரபிடகம் வழிநடத்தலே தவம்' என்பதும் இம் மதத்தின் கொள்கைகள்.

"ஐந்து கந்தம் சந்தானத்து அழிதல் பந்த துக்கம்
அறக்கெடுகை முத்தியின்பம் என்று அறைந்தாய் கந்தம்
ஐந்தும் அழிந்தால் முத்தி அணைபவர் யார் என்ன
அணைபவர் வேறு இல்லை என்றாய் ஆர்க்குமுத்தி இன்பம்
ஐந்தின் உணர்வினுக்கு என்னில் அழியாத அவ்வுணர்வு உண்டு
ஆகவே எவ்விடத்தும் உருவாதி கந்தம்
ஐந்தும் உளவாம் அதுவும் பந்தமாகி
அரந்தைதரு முத்தியின்பம் அறிந்திலை காண் நீயே" [8]

என வரும் சிவஞான சித்தியார்.

"ஐந்து கந்தங்களும் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்து வருவதினாலே கட்டும் துயரமும் உள்ளன என்றும், அவை ஐந்தும் முற்றும் கெடுவதே முத்தி என்றும் கூறப்படும். ஐந்து கந்தங்களும் கெட்டபிறகு முத்தியினை அடைபவர் யார் என்று

கேட்பின், ஒருவரும் இல்லை என்றும் கூறப்படும். அப்போது முத்தி இன்பத்தை நுகர்வது யார் என்ற கேள்வி பெறப்படும். ஐந்து கந்தங்களும் கூடியபோது தோன்றும் அறிவிற்கே முத்தி என்றால், ஐந்தும் கெடவில்லை என்றாகும். அவை கெடாதபோது மீண்டும் கட்டும் துயரமும் உள்ளன என்பது வழுவாக முடியும். எனவே 'ஐந்து கந்தங்களும் கெடுவதே முத்தி இன்பம் என்பது பொருந்தாது" என்று மறுதலையாய் எடுத்துரைக்கும்.

சமண நிகண்டவாதிகள் கூறும் முத்தி

அருகனை முதல்வனாக உடைய மதம் ஆருகதம் எனப்படும். அவன் இருக்குமிடம் பொன்னெயில் வட்டம். அவன் வடிவு பொன்மலையிற் பொன்னால் எழுதினாற்போல ஆயிரத்தெட்டு மனுவுடைத்தாய், அனந்த ஞானம், அனந்த தரிசனம், அனந்தானந்தம், அனந்த வீரியம், நாம மின்மை, கோத்திர மின்மை, ஆயுள் இன்மை, அழியா வியல்பு என்னும் எண் குணங்களை உடையவன்.

கண்டம் என்றால் உடை. நிகண்டவாதிகள் என்போர் உடையில்லாத திகம்பரர் ஆவர். இவர்கள்,

"ஈறிலாதன அனந்த ஞான முதல் எண்குணங்கள் எனும் ஒண்குணம்
மாறிலாத மதிமேவு சீதம் என மன்னிவானவர் வணங்கவே
வேறுலாவு குண ஞான ஆவரணி ஆதி எட்டினையும் விட்ட சீர்
ஏறு பான்மையுடை நீடுவாழ் அருகன் எங்களுக்கு இறைவன்"[9]

என்பர்.

ஞானாவரணீயம் (அறிவுதடைப்படுதல்), தரிசனாவரணீயம் (காட்சி தடைபடுதல்), வேதனீயம் (ஆற்றல் குறைதல்), மோகனீயம் (சிற்றின்பம்), ஆயுடிய நாமம் (இப்பிறப்பில் இடப்படுகின்ற பெயரை உடைமை), கோத்திரநாமம் (கோத்திரப் பெயர் உடைமை), ஆய வந்தராயம் (பிறப்பும் இறப்பும் உடைமை), காய வந்தராயம் (அழிவுடைமை) என்னும் எட்டும், பசி, தாகம், பயம், செற்றம், உவகை, மோகம், சிந்தனை, பழித்தல், நோய், நசித்தல், வேர்வை, கேதம், மதம், வேண்டல், அதிசயத்தல், புசிப்பு, பிறப்பு, உறக்கம் என்னும் பதினெட்டும், கந்தம், ரசம், ரூபம், பரிசம், சத்தம், பரிணாமம் முதலிய ஆறும் ஆகிய மூவகைத் தீக்குணங்களையும், உடலை வருத்துதல் முதலியவற்றால் அடக்கி, பின் விட்டு, பூர்வ கன்மத்தில் உண்டாக்கிய கன்மங்கள் புசித்துத் தொலைந்த அவதரம்தானே வீட்டின்பமாகிய முத்தியாகும். இதுவே 'திரிகுணம் அடங்கும் முத்தி'யாகும்.

"பூர்வ கன்மம் அற்றிடப் புசித்த பின்பு பொன்னெயில்
நேர்வது என்னின் அக்கன்மத்து நிச்சயம் இலாமையில்
தீர்வது இன்மை தீரின்வாயில் சேர்வது இன்மைதெண்கடல்
நீர்வறந்த போது பூளை மீன் அருந்த நின்றதே"[10]

எனச் சிவஞான சித்தியார், நிகண்டவாதிக்கு மறுதலை கூறும்.

முந்தைய பிறப்புகளிலே செய்த வினைப் பயன்கள் எல்லாம் இந்தப்பிறப்பில் ஆன்மா நுகர்ந்து கழித்த பின்பு பொன்னெயில் வட்டத்தில் பொருந்தும். இதுவே முத்தியாகும். எல்லை யில்லாத வினைப் பயன்களை ஒரே பிறவியில் நுகர்ந்து கழிக்க முடியாது. அப்படி நுகர்ந்து கழித்தபின் ஆன்மா பொறிகளோடு கூடிப் பொருள்களை அறிவதில்லை. எனவே, வீடு பேற்றிற்கு உரிய தவத்தினை மேற்கொள்ளுதலும் இயலாது. அதனால் முத்தி யடையவும் இயலாது. எனவே, இம் முத்திக் கொள்கையும் பொருந்தாத நிலையில் உள்ளதாகும்.

நிரீச்சுர சாங்கியர் கூறும் முத்தி

சாங்கியம் இரு வகைப்படும். நிரீச்சுர சாங்கியம் என்பது கடவுள் கொள்கையை ஏற்றுக்கொள்ளாத நெறியாகும். கடவுள் உண்டு என்று ஏற்றுக்கொள்கிற நெறி சேச்சுர சாங்கியம் எனப்படும்.

புருடன், பிரகிருதி என்று உலகத்தில் பொருள்கள் இரண்டே உள்ளன. புருடன் பிரகிருதியோடு கூடியபோது அஞ்ஞானம் தோன்றும். புருடன் ஊனம் அடைந்த முடவன்; பிரகிருதி கண்ணில்லாத குருடன் எனச் சொல்லப்படும். புருடனாகிய முடவன் பிரகிருதியாகிய குருடனின் தோளில் அமர்ந்துகொண்டு அவனை வழி நடத்த இருவரும் இயங்குவதைப்போல இவ் வுலக நிகழ்ச்சிகளைக் கொள்ளுதல் வேண்டும்.

புருடன் பிரகிருதியின் முன்னிலையில் ஓர் குழந்தைபோல அறியாமையோடு விளங்குபவன். உலகில் உள்ள எல்லாப் பொருள்களும் தன்னுடையன என்றே கருதி நிற்பான். இவ்வாறு தவறாகக் கருதுவதை ஒழித்துத் தான் வேறு, பிரகிருதி வேறு என்று உணர்ந்து அதனை விட்டு நீங்கி நின்றபோது, உண்மை ஞானம் பிறக்கும். இந்த ஞானம் பெற்ற உயிர்களே வீடுபேற்றை அடையும். பிரகிருதி வேறு எனப் புருடன் உணர்ந்து கொள்வதாவது பிரகிருதியின் குணங்களான மூலம், புரியட்டகம், விகிருதி என்ற மூன்றும் தமக்கு இல்லை எனத் தெரிந்து கொள்ளுதல் ஆகும். இதனைத் **‘திரிகுணம் அடங்கும் முத்தி’** என்று அழைப்பர்.

> “மூலம் புரியட்டகம் விகர்தி ஆகி மூன்றாய்ப் பிரகிருதி
> தூலம் சூக்கம் பரமாய் அச்சுத்த புருடன் சன்னிதியில்
> பாலன் சேட்டை புரிந்து உலகம்யோனி பலவாய்ப் பரந்து ஒடுங்கும்
> சால என்று நிரீச்சுவர சாங்கியன் தான் சாற்றிடுமே.”[11]

தன்னுடைய வினைப் பயன்களுக்கு ஈடாகப் பிரகிருதியோடு சேர்ந்து புருடன் நுகர்ந்து வருவான். வினைப் பயன்களுக்கு உட்பட்டு வருபவனை ஆன்மா என்று கூறுவது அல்லாது அவனே முதல்வன் என்று கூறுவது பொருந்தாது. முத்திப்பேறு என்பது புருடன் பிரகிருதியை விட்டு விலகி நிற்பதே. இந்நிலையில் இந்த இரண்டையும் தவிர மூன்றாவதாக அறிவே வடிவான இறைவன். அவனே இரண்டையும் கூட்டுவித்து வினைப் பயனை நுகர்வித்து வினையின் பயனை ஊட்டுபவன். அவனருளாலே தளை நீங்குதல் வேண்டுமே யன்றித் தானாக நீங்காது. எனவே, தானாக புருடன்

பிரகிருதியை விட்டு விலகி நிற்க இயலாது. இதுவும் முத்திப் பதம் அல்ல என்று அருள்நந்தி சிவம்,

> “அறியான் புருடன் பிரகிருதி அசேதனம் காரியத்தினுக்குக்
> குறியாய் நாதன் உளன் என்று கூறும் முத்தி விவேகம் எனில்
> செறிவாம் தளைபோகாது அறியில் சேர்த்தோன் வேண்டும்”[12]

என்று அருளிச்செய்வர்.

பிரபாகரர் கூறும் முத்தி

புறச் சமயத்தவருள் மீமாம்சப் பிரிவினர், வேதம் ஒருவரால் சொல்லப்பட்டது அன்று; சுயம்பு என்பர். மீமாம்சகருள் பட்டர்மீமாம்சம், பிரபாகரர் மீமாம்சம் என இருவகை உண்டு.

ஒரு பிறவியில் ஓர் ஆன்மா இரு வினைகளையும் இயற்றுகிறது. இயற்றிய வினைகளின் பயன்கள் அபூர்வம் என்னும் நிலையை அடைகின்றன. அபூர்வம் என்றால் முன்பு இல்லாதது அல்லது புலப்படாதது என்று பொருள் தரும். இங்கு கூறப்பட்ட அபூர்வமே நல்வினை, தீவினைகளின் பயன்களை உயிர்களுக்கு ஊட்டுகின்றது. அந்தக் கன்மங்கள் கெட்டு, வீடுபேறு என்பது ஆன்மா மண்ணைப் போலவும் கல்லைப்போலவும் அறிவும் தொழிலும் அற்றுக் கிடப்பதாகும். இதுவே, **‘விரவு வினை கெடும் முத்தி’** என்றழைக்கப்படும்.

> “அருஞ்செயலின் அபாவத்தே அபூர்வம் எனும் அதுதோன்றித்
> தருஞ்செயல் நின்று அழியில் பின் பலிப்பிப்பது ஆகுமது
> வருஞ்செயல் ஒன்று இன்றியே மண்சிலை போலாம் முத்தித்
> தருஞ்செயல் ஈது என வுணர்ந்து தாரணிமேல் அவன் சாற்றும்”[13]

வேதங்கள் முத்தி நிலை என்பது பேரின்பம் என்றே கூறுகின்றன. ஆன்மா தன்னுடைய அறிவும் தொழிலும் கெட்டு மண்ணைப்போலவும் கல்லைப்போலவும் கிடப்பது முத்தி நிலை என்றால், அறிவும் செயலும் அற்ற மயக்கமான நிலையையே முத்தி யென்று கொள்ளலாம். நெருப்பின் நிறம் சிவப்பு. அந்த நிறம்அழிந்து போகுமானால் நெருப்பும் அணைந்துவிட்டது என்பதே உண்மை. சிவப்பு நிறம் அழிந்து நெருப்பு மட்டும் இருக்கிறது என்று கூறுதல் பொருந்தாது. ஆன்மாவின் இயல்பு அறிவு. அந்த அறிவும் அழிந்தபின் ஆன்மா மட்டிலும் தனித்து இருந்து வீட்டு இன்பத்தை நுகர்கிறது என்பது பொருந்தாது. எனவே, முத்தி பற்றிய இக் கொள்கையும் குற்றமுடையது.

> “ஆனந்தம் கதியென்ன அறிவு அழிகை வீடு என்கை
> ஊனம்பின் உணர்வழிந்தோர்க்கு உளதாகும் உயர்முத்தி

தானிங்குச் சிவப்பொழியத் தழல்நிற்கும் ஆறில்லை
ஞானங்கெட்டு உயிர்நிற்கும் எனும் உரைதான் நண்ணாதால்" 14

எனச் சைவ சித்தாந்தம் பிரபாகரன் முத்திக் கொள்கையை மறுத்துக்கூறும்.

பேதவாதம் கூறும் முத்தி

அகச் சமயத்துள் ஒன்று பேத வாதம். இரச குளிகையால் களிம்பு அழிந்தொழியச் செம்பு பொன்னாதல் போல, இறைவனது திருவருளால் பாசம் அழிந்தொழிய, உயிர் சிவமாய் நிற்றலே முத்தி எனப்படும். இதுவே, **'மலம்போம் முத்தி'** என்றழைக்கப்படும்.

"ஈசனது அருளால் பாசத் தொகுதி செறிவுறு செம்பில் கறையுறு களிம்பு குளிகை தாக்க ஒளிபெற்று ஆங்கு, நித்த சுத்த முத்தர் ஆக, வைத்தனர் உலகில் மறை வல்லோரே"[15] என்பது பேத வாத சைவம்.

உள்ளது போகாது என்பதால் முத்தியிலும் முப்பொருள்களும் உள்ளன என்பது சித்தாந்தமாதலின், மலம் அழிந்து ஒழியும் என்றல் தகாது. உயிர் பதியோடும், பாசத்தோடும் சார்ந்து அதுவாய் நிற்றல் அன்றித் தனித்து நிற்றல் இன்மையாகும். அதற்கு களிம்பு நீங்கப் பெற்ற செம்பு உவமையாதல் கூடாது. எனவே, பேத வாதம் கூறும் ஆணவ மல நீக்கமே முத்தி என்பது பொருந்தாது.

"மறைகள் ஆகமத் துறைகள் மற்று எவையும்
நாசமில் பதி பசு பாசம் என்று உரைத்தல்
அயர்த்து ஓர் குளிகைச் சயத்தால் தாமிரக்
காளித நாசம் பாசத்து ஏய்த்தல்
கூடாது அன்றியும் குளிகை சீருணம்
நீடாது அழித்தநிலை நிலை இலை ஆதலின்
பேத வாதம் ஓதுதல் பிழையே
இன்னும் இன்உயிர் ஏமம் குளிகை
தன்னில் அன்னியம் தருவது திடமே
வீடு இத் திறத்தினில் கூடக் கூடா" 16

என்பது பேதவாதி சங்கற்ப நிராகரணம்.

செம்பு என்கிற பொருள் ஒழிந்து பொன்னாகிய புதிய பொருள் ஒன்று அங்கே தோன்றுகிறது என்றால், உயிரும் இல்லாமல் போய் அதனின்றும் மாறுபட்ட ஒரு பொருள் தோன்றிற்று என்பதாகும். செம்பும், இரத குளிகையும் தமக்குள் அந்நியமானவை என்பது தெளிவு. எனவே, அந்நியப் பொருள் ஒன்று உயிரைச் சார்ந்து அதற்கு முத்தி நிலையைத் தரும் என்பது பிழை யுடையதாகும்.

சிவசமவாதம் கூறும் முத்தி

பதி, பசு, பாசம் மூன்றிற்கும் அறிவுண்டு. அவற்றுள் பாச அறிவானது ஒன்றைப்பற்றி எழுந்திருந்து, சிந்தித்துப் பொறிவழியில் ஓடும். பசு அறிவானது அறிவிக்கும் கருவிகளைக் கொண்டு அணைந்து பயன் கருதி அநுபவிக்கும். பதி அறிவானது இவ்வாறு திரியும் ஆன்மாக்களைப் பக்குவப்படுத்தும்.

பச்சை நிறமுடைய சிறு புழுவைக் குளவி ஒன்று எடுத்துச் செல்வதுபோல, இறைவனும் உயிரை எடுத்துக்கொள்வான். அந்தப் புழு அந்தக் குளவியையே நினைத்துக் கொண்டிருந்து சில நாள்களில் குளவியின் வடிவத்தோடே அதன் தன்மை யெல்லாம் பெற்று, அதனோடு ஒரு நிகர்த்தாய் நின்று அதன் செயல்களைச் செய்யும். அதுபோல, ஆன்மா சிவ தியானத்தால் சிவனுடைய எண் குணங்களைப்பெற்று அவனோடு ஒருநிகர்த்தாய் நின்று அவனுடைய ஐந்தொழில்களையும் செய்தலே முத்தி ஆகும். ஆன்மாவின் உடம்பு இம் முத்தியிலும் அழியாது நித்தமாய் இருக்கும். இதுவே, **'விக்கிரக நித்த முத்தி'** எனப்படும்.

"முன்னோன் தனது முதிர்ஒளி ஞானம்
அறியாப் பச்சைச்சிறு புழுக் கவர்ந்த
வண்டுஎன உயிரைக் கொண்டிடும் உயிர் அது
தன்னை நோக்கித் தான் அது வாகி
ஐவகைத் தொழிலும் மெய்வகை உணர்வும்
பிரியா வாறு பெற்றுத்
திரியாப் பெரியோர் திரட்சி சேர்ந்திடுமே" [17]

ஆன்மாக்களுடைய மாயா தேகம்தானே நித்தியத்துவத்தைப் பெற்றிருக்கிறது. இது சித்தாந்தம் கூறும் பத முத்தியாகிய சாரூபம் ஒழிய சாயுச்சியம் ஆகாது. அன்றியும் யாதொரு சரீரம் உள்ள மட்டும் மூன்று மலமும் போகா. எனவே இந் நிலையும் முத்தி நிலைக்கு ஏற்ற நிலையல்ல.

"முத்தி உற்ற நற்றவர் அவையிடைச்
சேர்வர் என்றனை சார்தரு முத்தி
சாலோக்கியமோ சாயுச்சியம் எனில்
பந்தம் உற்ற கந்துஅல கழித்த
அறிவினோடு அறிவு பிரியாப் பெற்றி
வேண்டும் என்றதற்கு ஈண்டு இவர் இவ்வாறு
இருப்பர் என்பதற்கு உருத்தான் வேண்டும்
அண்ணலது அருளில் நண்ணினார் இருப்பினும்
சீவன் முத்தர் என்று ஓதினர் அகன்று

நீங்கியும் உருவம் நீங்காது ஆயின்
ஓங்கிய முத்தியாவது என் உரைக்க...[18]

என சிவசம வாதி சங்கற்ப நிராகரணம் கூறும்.

மாயா வாதம் கூறும் முத்தி

"ஒன்றே உள்ளது" எனக்கூறிய ஆன்மா பரமான்மாவே. அது 'பரப் பிரமம்' எனப்படும். உண்மையில் அஃது ஒன்றே உள்ளது. அந்தப் பரப் பிரமத்திற்கு வேறாக - உலகம், உயிர் என இருவகைப்பட்டு எண்ணிறந்தனவாய்க் காணப்படுகின்ற பொருள்கள் எல்லாம் பொய்யாயினும், மாயை அவற்றை மெய்போலத் தோற்றுவிக்கின்றது. அஃது எதுபோல எனின், 'இப்பியில் வெள்ளி உள்ளது' என்பது பொய்யாயினும் சில வேளைகளில் அது மெய்யாகவே தோன்றுதல் போல்வது. இன்னும் கயிற்றில் அரவு முதலியனவும் இதற்கு உவமானமாகச் சொல்லப்படும்.

கயிற்றில் இல்லாத பாம்பை உள்ளதுபோல தோற்றுவிப்பது அந்தக் கயிற்றில் உள்ள ஒரு சத்தி. அதுபோலப் பரப் பிரமத்தில் இல்லாத சீவர்களையும், உலகங்களையும் உள்ளன போலத் தோற்றுவிப்பது அப் பரப் பிரமத்தில் உள்ள ஒரு சத்தி. அந்தச் சத்தியே மாயை. அஃது அறிவை மறைத்தலால் அவிச்சை - அஞ்ஞானம் எனப்படும்.

நிர்மலமாய் இருக்கின்ற ஆகாயத்தை மேகம் மறைத்த தன்மைபோல், சுத்தமாய் இருக்கிற பரப் பிரமம் மாயா உபாதிகளினால் வாதிக்கப்பட்டு இந்த உடலிலே மயங்கி நிற்கிற சீவான்மா, அந்த ஆகாசத்திலே ஒரு காற்று தோன்றி அந்த மேகத்தை நீக்கின தன்மைபோல, சீவான்மாவினிடத்திலே ஒரு விவேக ஞானம் தோன்றி அந்த மாயா அவிச்சையை நீக்குவதே முத்தி யெனப்படும். இதுவே, **'விவேக முத்தி'** எனப்படும்.

"இவ்வியல் பந்தப் பவ்வம் அது அகல
விண்முதல் தந்த கொண்மூப் படலத்து
இருள் அற உதித்தகால் தக விவேகம்
தன்னில் தோன்றி..."[19]

என்பது மாயா வாத சங்கற்பம்.

பிரமப் பொருள் உடலில் கட்டுண்டு கிடக்கும் நிலையில், வானத்தில் தோன்றிய மேகத்தை வானத்திலேயே தோன்றிய காற்று விலக்குவதுபோல, அப்பிரமத்திலிருந்தே வெளிப்படுகிற விவேகம் கட்டினை விலக்கும் என்றால், தன்னில் தானே தோன்றிய அந்த விவேக அறிவு முன்பே உள்ளதா? முன்பு உள்ளதாயின் மயக்கம் இல்லை. முன்பு இல்லை எனில் பின்பு அத்தகைய ஞானம் உண்டாகாது. முன்பு இல்லாதது ஒன்று பின்பு தோன்றும் எனல் ஆகாயத்திலே தாமரை மலர் பூக்கும் என்பது போன்ற பொருந்தாக் கொள்கையாகும். எனவே, இந்த விவேக ஞானம் முத்தியைத் தரும் என்ற கொள்கை பொருந்தாதாகும்.

“பந்தம் அது அகல முந்து விவேகம்
வான்வளி எனத் தனில் தானே தோன்றின்
முன்பு உளதாயின் மயங்காது இலது எனின்
பின்பு உளது ஆகாது இலது உளது எனில் வெளி
மலரது தரும்” [20]

என்று உமாபதி சிவம் மாயா வாதத்தின் விவேக ஞானம் குறித்து மறுதலை செய்வர்.

பாற்கரியர் கூறும் முத்தி

பாற்கரர் என்னும் ஆசிரியரால் உரைக்கப்பட்டது. எனவே, இது ‘பாற்கரியம்’ அல்லது ‘பாற்கரிய வாதம்’ எனப்படுகின்றது.

இவ் வாதம் உலகம் அநிர்வசனீய மாகிய - மாயை - என்ற ஒன்றின் தோற்ற மாகாது. பரப் பிரமத்தின் பரிணாமமேயாகும் என்கின்றது. அதனால், இது, பிரம பரிணாம வாதம் என்றும் அழைக்கப்படும்.

ஒரு மூலப் பொருளின் பரிணாமப் பொருள்கள் அந்த மூலப்பொருளின் வேறாகாமை தெளிவு. அதனால், பரப் பிரமத்தின் பரிணாமமாகிய சீவகோடிகளும், பல்வேறான உலகங்களும் பரப் பிரமத்திற்கு வேறாய் நிற்கும் பொருள்களாக மயங்குகின்ற மயக்கமே அவிச்சை, அஞ்ஞானம். அந்த அஞ்ஞானமே பந்தம். வேதாந்த விசாரத்தால் அந்த அஞ்ஞானம் நீங்க, ‘எல்லாப் பொருள்களும் பரப் பிரமமே; அதனால் யானும் பரப் பிரமமே’ என்னும் மெய்ஞ்ஞானம் விளங்கப் பெறுவதே முத்தி எனப்படும். இது, பிரமத்தோடு கூடி ஆன்மா அழிந்து போவதால் **‘பரவு முயிர் கெடு முத்தி’** எனப்படும்.

“சித்தே உலகாய்ப் பரிணமித்துச் சீவனாகித் திகழ்ந்தமையால்
சத்தே எல்லாம் முத்தியினைச் சாரக் கண்ட ஞானங்கள்
வைத்தே மொழியும் மாமறைகள் சொன்ன மரபே வந்தக்கால்
ஒத்தே கெட்டுப் பிரமத்தோடு ஒன்றாய்ப் போம் என்று உரைத்தனனே” [21]

பரப் பிரமம் பிரபஞ்சமாகவோ, ஆன்மாவாகவோ ஆவதில்லை. ஆன்மா பரப்பிரமத்தோடு கூடித் தம் தனித்தன்மையை இழந்து அழியும் எனில், முத்தி பெறுவான் ஒருவன் இல்லை என்றாகிறது. எனவே, இம் முத்தி நிலையும் பொருந்தாது.

சங்கிராந்த வாதம் கூறும் முத்தி

அகச் சமயங்களுள் ஒன்றான சங்கிராந்த வாதம், மலம் நீங்கிய காலத்தில் பளிங்கை அடுத்த பொருளின் நிழல் பளிங்கிற் பற்றுதல்போல, சிவனது திருவருள் ஆன்மாவில் பற்றும். அப்பொழுது தீப்பற்றிய விறகு தீயாதல் போலவும், உப்பளத்தில் இட்ட புல் வைக்கோல் முதலியனவும் உப்பாகி விடுதல் போலவும் சிவனது அருளில் மூழ்கிய ஆன்மாவின் பசுகரணங்கள் சிவ கரணங்களாகும் நிலையே முத்தி நிலை யாகும் என்று கூறும்.

“பழமலம் நீங்க நிகழும் காலை
ஏற்றோர் முகஒளி தோற்றும் கலன் எனத்
தலைவனது அருள் உயிர் நிலவிடும் நிலவக்
காட்டத்து அங்கி மாட்டத் தங்கிய
தன்மையும் அளத்துப் புல்வையின் நீப்பும்
போன்றது வாகித் தோன்றிடும் அதனால்
பசுகரணங்கள் சிவ கரணங்கள்
ஆக மாறி அறிவும்
ஏகமாம் உயிர் யான் எனது இன்றே” [22]

இதில் விறகு, புல், வைக்கோல் முதலிய அழிதல் பெறப்படுதலால், அம் முத்தியில் ஆன்மாவும் அழியும் என்பதாகின்றது. ஆகவே, இம் முத்தி **‘உயிர் கெடும் முத்தி’** எனப்படும் என்று அருணைவடிவேல் முதலியார் குறிப்பிடுவார்.

கண்ணாடியில் பார்த்தவர்களின் முகம்தான் எதிரொளிக்கும். ஆனால் உயிருக்கோ திருவருளை முற்றும் வாங்கிக்கொள்ளும் ஆற்றல் இல்லை. ஏனெனில் உயிர் தளைப்பட்டிருப்பது. அது பக்குவப்படும் அளவும் திருவருளை ஏற்காது. விறகில் பற்றிக்கொண்ட தீ அதனை எரித்துவிடுவது போல உயிரைத் திருவருள் அழித்துவிடும் எனில் அது பொருந்தாது. உயிர்க்குப் பேரின்பப் பேற்றினை நல்கும் திருவருளுக்கு விறகில் பற்றிய தீ உவமையாகாது. உப்பளத்தில் விழுந்த புல்லும் வைக்கோலும் அறிவற்ற பொருள்களே ஆயினும், அவை உப்பளத்தில் உவர்த்தன்மையை அது கொடுத்தது போலவே பெற்றுக்கொள்ளும் இவ்வியல்பு உயிர்களுக்கு இல்லை.

“நோக்கும் முகஒளி நீக்கா தான் எனக்
கவரும் தன்மை முகுரம் போலக்
கொடுத்தது கோடற்கு அடுத்தது உண்டு அன்றே
காட்டத்து அங்கி கூட்டக்கூடும்
இந்தனத்து இயற்கை வெந்தழல் தாங்கா
உப்பளத்து அடுத்த புற்பலா லங்கள்
சடத்தவேனும் கொடுத்தது கொள்ளும்
தன்மை உண்டு உனக்கு இன்மையது அன்றே” [23]

இம் முத்தியிலும் ஆன்மா அழிந்தொழியுமாயின், அநுபவம் என்பது இல்லையாய்விடும் என்பதால் இம் முத்தி நிலையும் பொருந்துமாறில்லை.

யோகம் கூறும் முத்தி

யோக மதத்தினர் தம் அட்டாங்க யோக சாதனையின் மூலம் பெறும் அணிமாதி, **“அட்டமா சித்திகளைப் பெறுவதே முத்தி”** என்பர்.

ததோ அணிமாதி - ப்ராதுர்பாவ:
காய - ஸம்பத் தத்தர்ம - அனபிகாத: ச||[24]

என்னும் பதஞ்சலி யோக சூத்திரம், நுண்ணிய தன்மை, பிற சித்திகள், 'மகிமை பெற்ற உடல்', உடலின் குணங்கள் அழியாமை எல்லாம் உண்டாகின்றன என யோக சித்திகளைக் குறிப்பிடுகிறது. அணிமா என்பது அணுவைவிடச் சிறியதானது; மகிமா - மிகப்பெரிய உருவை எடுப்பது; லகிமா - பஞ்சைவிட இலகுவாய் இருப்பது; கரிமா - யானையைவிடக் கனம் பொருந்தியது; பிராப்தி - நினைத்த மாத்திரத்தில் எதையும் செய்வது; பிராகாமியம் - ஒரே நேரத்தில் பல உருவிலோ அல்லது ஒரே உருவிலோ பல இடங்களில் தோன்றுவது; ஈசத்துவம் - ஈசனைப்போல் அனைத்தும் செய்வது; வசித்துவம் - அனைத்து உயிரற்ற - உயிருள்ள பொருள்களையும் தம் வசமாக்கிக் கொள்வது. இவற்றை யறிந்து அறிவு வடிவான புருடன் தன் சொந்த இயல்பில் நிலைபெறுவது கைவல்யம் எனப்படும்.

திருமந்திரம் மூன்றாம் தந்திரத்தில் அட்டமா சித்தி என்னும் தலைப்பில், பரகாயப் பிரவேசம் தொடங்கி பர வசித்துவம் வரையிலும், ஈறாகத் திருவருட் சிறப்பும் கூறி, இத்தகைய அட்டமா சித்திகளை எழுபத்தொரு பாடல்களில் விளக்கிக் காட்டுகிறது. இது யோகத்தின் சிறப்புப் பயனேயாதல் யன்றி முத்தியாகக் கொள்ள முடியாது.

"இங்குக் கூறப்படும் எல்லாப் பேறுகளும் பிறந்து இறந்து உழலும் துன்பமாகிய நிலைகளைத் தருமே யன்றி, அவற்றிற்கு மேலான நிலையை அடையச் செய்யா. எங்கும் நிறைந்ததாயும் அறிவாயும் எளிதில் அடைதற்கு முடியாததாயும் உள்ள முத்தியை இவற்றால் அடைய முடியாது" என,

"அட்டமா சித்தி முதலனைத்துள்ள பேறுகளும்
கட்டமாங் கதி கடரும் பரகதி காணக் கொடா
மட்டுலா மாலையாய் வியாபகமாய் அறிவாகிக்
கிட்டலாகா முத்தி மற்றுஇவற்றாற் கிடையாதே"[25]

என்று தேவிகாலோத்தர ஆகமம் கூறும்.

பாடாண வாதம் கூறும் முத்தி

அகச் சமயங்களுள் ஒன்றானது பாடாண வாதம். இது தார்க்கிகருள் வைசேடிகரும், மீமாஞ்சகருள் பட்டாச்சாரிய மதத்தினரும் கூறுதல்போல, மலம் நீங்கிய ஆன்மா இன்பம் துன்பம் எனப்படும் இரு வகை அநுபவங்கள் ஒன்றுமின்றி பாடாணம்போல் அதாவது கல்போல் கிடப்பதே முத்தி எனக் கூறும். இதுவே 'பாடாண முத்தி' எனப்படும்.

"கொத்தை மாந்தர் உய்த்துஉறும் துயில்போல்
காட்சி என்னக் காணாத் துயர
மாட்சியை முத்தி என வகுத்தனரே" [26]

“இங்ஙனம் சொல்லப்பட்ட முத்தி ஆன்மா கருவி கரணங்கள் இல்லாது கேவலப்பட்டுக் கிடக்கும் தன்மையைப்போல் முத்தியிலும் ஒன்று மறியாது கிடக்கும் என்பதாகும். ஆன்மாவிற்குச் சிவாநுபோகம் இல்லாதபடி யாகும். கல் போலக் கிடக்கும் என்பதால் இறந்தவர்களும், நிறைவடையாத கருவும், மரங்களும் முத்தி பெற்ற நிலையில் இருப்பதாகக் கொள்ள வேண்டும். இம் முத்தி துயரமே அன்றி வீடுபேறு அன்று.” என்று சித்தாந்தம் பாடாண வாதம் கூறும் முத்தியை இகழ்ந்துரைக்கும்.

“காட்சி என்னக் காணாத் துயரக்
காட்சியை முத்தி என வகுத்து உரைக்கில்
கரணாபாவம் மரணம் கருமரம்
ஏய்ந்தவர் முத்தி சேர்ந்தவர் அன்றே
இனையகதிக்கு ஓர் முனைவரும் வேண்டா
தனிதரு துயரம் எனும் இது திடனே
பாடா ணத்தில் கூடாமுத்தி” [27]

என்பது சங்கற்ப நிராகரணம்.

திரி மலமும் அகல உயிர் அருள் சேர் முத்தி

இன்பமாயும் துன்பமாயும் வந்து பொருந்துகின்ற கன்மமும், நிலம் முதல் மாயா தத்துவம் ஈறாகக் காணப்படுகின்ற முப்பத்தொரு தத்துவங்களாகிய மாயா மலமும் திரிபுணர்வைத் தருவதற்கு எழும் ஆணவ மலமும் நீங்கின இடமே சிவஞானத்தைப் பெற்ற இடமாகும்.

புண்ணிய பாவமும் பொருந்தும் இக்கான்மியமும்
மண்முதல் மாயை காண் மாயையும் - கண்ணிய
அஞ்ஞானம் காட்டும் இவ்வாணவமும் இம்மூன்றும்
மெய்ஞ்ஞானிக்கு ஆகாவிடு [28]

என்பது சிவஞான போத வெண்பா.

மூன்று மலங்களையும் விடுதல் என்பது அந்த அந்த மலத்தின் குண பேதமான காரியங்களை விடுதல் ஆகும். இதனை,

“கூறிய மூன்று மலத்தின் குணக்குறி
வேறு கிளக்கில் விகற்பம் கற்பம்
குரோதம் மோகம் கொலை அஞர் மதம் நகை
விராய் எண் குணனும் ஆணவம் என விளம்பினை
அஞ்ஞானம் பொய் அயர்வே போகம்
பைசா சூனியம் மாச்சரியம் பயம்
ஆய ஏழ் குணனும் மாயைக்கு அருளினை

இருத்தலும் கிடத்தலும் இருவினை இயற்றலும்
விடுத்தலும் பரநிந்தை மேவல் என்று எடுத்த
அறுவகைக் குணனும் கருமத்து அருளினை
ஆங்குஅவை தாமும் நீங்காது நின்று
தம் வழிச் செலுத்தித் தானே தானாய்" [29]

என்று இருபா இருபஃது கூறும்.

1. விகற்பம் - மற்ற பொருள்களிலிருந்து வேறுபடுத்திக்கொண்டு தனக்கு ஒப்பார் யாருமில்லை என்று கருதும் இயல்பு 2. கற்பம் - தன்னிடம் இல்லாத உயர்வுகளைத் தனக்கு உண்டு என்று கற்பனை செய்து கொள்ளுதல் 3. குரோதம் - பிறர்மீது சினம் கொள்ளுதல் 4. மோகம் - ஒரு பொருளின்மேல் எல்லையற்ற விருப்பம் காட்டுவது 5. கொலை - பிற உயிர்களுக்கு ஊறு செய்வது. 6. அஞர் - சிறுதுன்பம் நேரினும் அதுபற்றி எல்லை யற்ற கவலைக்கு உள்ளாதல் 7. மதம் - மனம் மொழி மெய்களால் செருக்கித் திரிதல் 8. நகை - பிறரை எள்ளி இகழ்தல் என்பவை ஆணவ மலத்தின் காரியங்களாகும்.

1. அஞ்ஞானம் - பொருள் அல்லவற்றைப் பொருள் என்று கொள்ளுதல் 2. பொய் - உண்மைக்கு மாறானவற்றைப் பேசுதல் 3. அயர்வு - அறிந்ததை மறந்தும் மயங்கியும் வருந்துதல் 4. மோகம் - எல்லை யற்ற வேட்கையினால் துன்புறுதல் 5. பைசா சூனியம் - தனக்குள் எழுந்த தீய வேட்கையை மற்றவர் அறியாமல் ஒளித்தல் 6. மாச்சரியம் - பிறரிடத்து பகைமை பாராட்டுதல் 7. பயம் - தம் உயிருக்கு ஊறு வரும் எனக் கருதி அச்சம் கொள்ளல் முதலியவை மாயையின் காரியங்களாகும்.

1. இருத்தல் - ஓர் இடத்தைப் பற்றி இருத்தல் 2. கிடத்தல் - செயலற்றுக் கிடத்தல் 3. இரு வினை இயற்றல் - தனது செயலினால் அறம் பாவம் ஆகியவற்றை ஈட்டுதல் 4. விடுத்தல் - பற்றியிருந்த ஒன்றினை விட்டு நீங்குதல் 5. பர நிந்தை - மற்றவரை இகழ்தல் 6. மேவல் - இழிந்தவற்றோடு பொருந்துதல் ஆகியவை கன்மத்தின் காரியங்களாகும்.[30]

"ஆணவம் ஒன்றே என்றாலும் தனது காரியத்தைச் செய்யும்போது மோகம், மதம், அராகம், கவலை, தாபம், வாட்டம், விசித்திரம் என்ற ஏழு நிலைகளை யுடையதாகும். கன்மம், இன்பம், துன்பம் என இரண்டு காரியங்களையும், மாயை, தனு, கரணம், புவனம், போகம் என நான்கு காரியங்களையும் உடையதாகவும் விளங்கும். இங்ஙனம் மும் மலங்களின் காரியங்களையும் குறித்து இவை ஆன்மா வீடு பெறுங்காறும் அதனை விட்டு நீங்காது சகசமாய் நிற்கும்" என்று சிவஞான மாபாடியத்தில் மும் மல காரியத்தை வேறு வகையாக சிவஞான முனிவர் குறித்தருளினார்.[31]

"காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமங் கெடக்கெடு நோய்"

என்னும் குறளுக்கு உரை கூற வந்த பரிமேலழகர், 'அநாதியாய அவிச்சையும், அதுபற்றி 'யான்' என மதிக்கும் அகங்காரமும் அதுபற்றி 'எனக்கு இது வேண்டும்' என்னும் அவாவும், அதுபற்றி அப்பொருட்கண் செல்லும் ஆசையும், அதுபற்றி அதன் மறுதலைக்கண் செல்லும் கோபமும் என வடநூலார் குற்றம் ஐந்து என்றார். இவர் அவற்றுள் 'அகங்காரம் அவிச்சைக்கண்ணும் அவாவுதல் ஆசைக்கண்ணும் அடங்குதலான்', 'காமம், வெகுளி, மயக்கம் என்ற மூன்று என்றார்' என்று விளக்கம் தருவர்.[32] எனவே, ஆணவத்தின் காரியமாகச் சொல்லப்படுகின்ற ஏனைய வெல்லாம் இம் மூன்றினுள் அடங்கும் என்பர் அறிஞர்.[33]

மும் மலங்களோடு அவற்றின் விளைவுகளாகக் கூறப்பட்ட ஏனைய காரியங்களோடு பொருந்துவதனால் ஆன்மா தனக்கென ஒரு செயல் இன்றிப் பாசத்தினால் ஈர்க்கப்பட்டுப் பாச மயமாய் நிற்கும். ஆன்மா மேற்கொள்ளும் இடையறாத உண்மை ஞான யோகங்களின் முன்னர் இம் மும் மலங்களின் குண பேதமான காரியங்கள் தீ முன்னர் பஞ்சுத் துய்ப் போலும் ஆகும். காரணமாய அக் குற்றங்களைச் செருத்தார்க்கு காரியமாகிய முன் கிடந்த துன்பங்களும் மேல்வரவக் கடவ துன்பங்களும் இல்லை என்பதாகும். இந் நிலையே **"திரி மலம் அகலும் நிலை"** யாகும்.

இவ்வாறு திரி மலமும் அகன்ற நிலையில் ஆன்மா அருளோடுங் கூடின இடமே விளங்குதலை யுடைய முத்தி யாகும். அதாவது ஆன்மாக்கள் சிவனைப் பெறுமிடத்துச் சிவனுடைய அருட்சத்தியினிடமாகச் சென்று பெற வேண்டும். இதுபற்றியே திருவாசகம் சிவ புராணம், ***"அவனருளாலே அவன்தாள் வணங்கி"***[34] என்று கூறும். மேலும்,

"பவமேவிய நெறிப் பந்திக்கும்
ஈசன் பசுக்கள் தம்மை
அவமேவிய நெறி போகங்க
ளான் முற்ற அந்நிலையே
தவமேவிய நெறி சத்திக்கண்
ணாச் சென்று சார்ந்து பின்னைச்
சிவமேவுவர் என்று காண் கொச்சைக்
காவலன் சித்தரிப்பே" [35]

என்று தத்துவ விளக்கமும் விளக்கும்.

"பிறவிப் பிணியைத் தருவதாகிய வினைப் போகங்கள் அறவே அழியுமாறு அவச் செயலைப் போக்கும் தவச் செயல்களை மேற்கொண்டு, அருட் சத்தியை வழியினிடமாகக் கொண்டு, சிவமாம் தன்மைப் பேற்றைச் சார்ந்து சிவபோகமாகிய முத்திப் பேற்றை அடைவர்' என்பது பொருளாகும். இதுவே **"அருள்சேர் முத்தி"** எனப்படும்.

திகழ் முத்தி - முத்தித்திறம்

கட்டு நிலையையும் அதிலிருந்து விடுதலை பெற்று வீட்டுநிலையையும் கூறுகின்ற தத்துவ சாத்திரங்கள் கொண்ட அகப்புறச் சமயங்கள் கூறும் அனைத்து முத்தி நிலைகளின் பயன் முப்பத்தாறு தத்துவங்களுக்கு உட்பட்டவையாகும். அவை எல்லாம் அச் சமயங்கள் கொண்டு ஒழுகும் புண்ணியங்களுக்கேற்ப சுவர்க்காதி போகங்களாகிய இன்பங்களை அநுபவிக்கும் புவன தத்துவங்களில் நின்று பின் அழிவன. அதனால் மீண்டும் பிறப்பிற்குக் காரணமாதலின் அவை குற்றமுடைய முத்திகளாகும் என்று சிவப்பிரகாசம் கூறும்.

ஆன்மா பாசத்தில் அழுந்தியிருக்கும் நிலை கட்டு நிலை. பதியில் அழுந்தியிருக்கும் நிலை வீட்டு நிலை அல்லது முத்தி எனப்படும். கட்டுநிலையில் பாசமே தானாய் நின்ற ஆன்மா, முத்தியில் பாசத்திற்குச் செல்லாது பதியே தானாய் நிற்கும். அதாவது வீட்டு நிலையில் ஆன்மா திரி மலம் ஆகிய பாசத்தினின்று அகன்று, திருவருள் பெற்று, அறிபவனாகிய தன்னையும், தனது அறிவையும் அறியாது சிவம் ஒன்றையே அறிந்து அதனுடன் இரண்டறக் கலந்து நிற்கும் நிலையே சித்தாந்தம் கூறும் முத்தி நிலையாகும்.

இறைவனின் திருவருள் வியாபகத்தில் ஆன்மா அடங்கி நிற்கும் இம் முத்தி நிலை, குளிர்ந்த நிழல்போல் அமைந்து ஆன்மாவின் பிறவி வெப்பத்தை நீக்கிப் பேரின்பத்தை அளிக்கும். மெய்யுணர்வின்கண் எய்திய இந்த இன்ப நிலையாகிய முத்தி நிலை பெற்றவர்கள் 'மீண்டும் இப் பிறப்பின்கண் வாராத நெறியை' எய்துவர். **'மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர் மற்றீண்டு வாரா நெறி'**[36] என்பது திருக்குறள். அதனால்தான் அப்பேரின்பத்தை நல்கும் இறைவனை' **"மீண்டு வாரா வழியருள் புரிவான்"** [37] என்று திருவாசகம் போற்றுகிறது.

"பிறிவுறாத எம் அருளினால் எம்மையும் பெயரா
மறிவின் நீங்கிய தன்னையும் மலைவு அறத்தெரிந்த
அறிவு பானுவின் விழி என எம்முளே அடங்கி
செறியும் ஆனந்தம் ஒன்றுமே திளைக்கும் தேமொழியாய்"[38]

என வரும் திருவானைக்காப் புராணம், 'எம்மை விட்டுப் பிரியாத அருளினால் எம்மையும் ஆணவத்தின் நீங்கிய தன்னையும் முன்பின் மாறுகோளின்றி அறிந்த ஆன்மா எம்முள் அடங்கி நின்று, எமது ஆனந்தத்தை மட்டுமே அநுபவித்துக் கொண்டிருக்கும்" என்று இப் பேரின்பத்தை இறைவன் வாக்காகவே கூறுகிறது.

"தான்அந்தம் இல்லான் தனையடைந்த நாயேனை
ஆனந்த வெள்ளத்து அழுத்து வித்தான் காணேடீ"[39]

என வரும் திருவாசகத் திருச்சாழல் இதற்குச் சான்றாக அமையும்.

இம் முத்தி நிலையே இவ் வுலகத்திற்கு மீண்டும் வாராத நிலை என்றும் இன்பத்தில் இருக்கும் நிலை - எல்லாப் பேறுகளிலும் மேலான பேறுபெற்ற நிலையாகும்.

சித்தாந்த முத்தியே நன் முத்தி; ஏனைய முத்தி யெல்லாம் முத்தியல்ல என்பதனை சிவப்பிரகாசத்திற்கு முந்தைய நூலான சிவஞானசித்தியார்,

"இம்மையே ஈரெட்டு ஆண்டு எய்தி எழிலாரும்
ஏந்திழையார் முத்தி என்றும் இரும்சுவர்க்கமுத்தி
அம்மையே என்றும் முத்தி ஐந்து கந்தம்
அறக்கெடுகை என்றும் அட்டகுணம் முத்தி என்றும்
மெய்ம்மையே பாடாணம் போல்கை முத்தி என்றும்
விவேகமுத்தி என்றும் தன்மெய்வடிவாம் சிவத்தைச்
செம்மையே பெறுகைமுத்தி என்றும் செப்புவர்கள்
சிவன்அடியைச் சேரும் முத்தி செப்புவது இங்குயாமே"[40]

என்றுரைக்கும்.

சிவனது திருவருளே திருவடியாகச் சொல்லப்படுமாதலால் **'அடிசேர் முத்தி'** என்று சித்தியார் குறிப்பிடும்.

"நண்ணரிய சிவானந்த ஞான வடிவேயாகி
அண்ணலார் சேவடிக்கீழ் ஆண்ட அரசு அமர்ந்திருந்தார்"[41]

என்று திருநாவுக்கரசர் சிவத்துவம் பெற்றதைச் சேக்கிழார் பெருமான் அருளிச்செய்வர்.

"இருந்தார் என்பதனால் தன் முதலுண்மையும், சிவானந்த ஞானப்பேற்றால் பேரறிவுடைமையும், ஞான வடிவேயாகி என்றதனால் சிவாகார வடிவும் பெற்றார் என்பதைச் சான்றோர் குறிப்பர்" என ஔவை.சு.துரைசாமி பிள்ளை இதற்கு விளக்கம் தருவர்.[42]

மேலே கண்ட சித்தியாரையும், சிவப்பிரகாசத்தையும் அடியொற்றியே அகிலாண்டேசுவரி பதிகத்தில், சிவஞான முனிவர்,

"மங்கையர்கள் இன்பமே முத்தி என்றும், கந்தம்
மடிவதே முத்தி என்றும்,
வருமுக் குணங்கெடுதல் முத்தி, வினை மாய்வதே
வளர்முத்தி, மூன்று மலமும்
பங்கமுறலே முத்தி என்றும், நித்திய தேகம்
பற்றுவது முத்தி என்றும்,

பலவும் பகுத்தறிதல் முத்தி, உயிர் கெடுவதே
　　படர்முத்தி, சித்திகளெல்லாம்
தங்குவது முத்தி, பாடாண மொத்திடுவதே
　　தகுமுத்தி என்றும், உயிர்கள்
தடுமாற மலமறுத்து அகலாத திருவடித்
　　தாமரை என் முடியில் ஊன்றி
அங்குமுயிர் பொருளெலாம் கைக்கொண்டு நாயினேற்கு
　　ஆநந்தமுத்தி தந்த
அருள் ஞான வாரியே ராசை மேவிய செல்வ
　　அகிலாண்டம் என்னும் அரசே"[43]

என்று பாடியருளினார். பின் வந்த மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களும், தம் சேக்கிழார் பிள்ளைத் தமிழில்,

"நீடு இன்பு அரிவையர் புணர்ப்பு என்பரும், ஐந்து
　　நிகழ் கந்தமுங் கெடுதலே
நிலவுஇன் பென்பரும், அருங்குண மூன்றும் ஒழிதலே
　　நிரம்பலுறும் இன்பென்மரும்
நாடும் இன்பு இருவினைக்கேடு என்மரும், மல
　　நசித்தலே இன்பென்மரும்,
நவில் விக்கிரக முத்தி மின்பென்மருந், தோன்று
　　ஞானமே யின்பென்மரும்,
பாடுமின் புயிர்கெடுதல் என்மரும், பகுதிமேற்
　　கெடுதலே யின்பென்மரும்,
படுசித்தியின்பென்மரும், பிறரும் வாதம்
　　படர்ந்துவரு திறனறவளங்
கூடுசெந் தமிழருமை யறிபெருஞ் சேவையார்
　　குலசிகாமணி வருகவே

கொன்றைச் சடாடவியர் மன்றைப் பராவியெழு

குன்றைப் பிரான் வருகவே”[44]

என்று முன்னோர் மொழியைப் பின்பற்றிப் பாடுவார்.

பரமோட்ச நிராச காரிகை

சத்தியோசோதி சிவாச்சாரியரால் அறுபது சுலோகங்களால் செய்யப்பெற்ற அஷ்டப்பிரகரணத்தில் ஒன்றான பரமோட்ச நிராச காரிகை[45] பிற சமயங்களின் முத்தி வேறுபாடுகளை எடுத்துக்காட்டி, அவற்றின் பொருந்தாத தன்மையை விளக்கி, முடிவில் சித்தாந்த முத்தியே முத்தி என்று தெளிவுபட உரைக்கும்.

சத்வ புத்தி வாத முத்தி, பாஞ்சராத்திகர் முத்தி (வைணவம்), பிரமத கணங்களுள் முதன்மையா யிருத்தலே முத்தி, நட்சத்திரப் புவனங்களில் இருத்தலே முத்தி, பிரவாக நித்தியேஸ்வர வாதிகள் சொல்லும் கருத்தாவாய் இருக்கும் முத்தி, பிரதீப நிர்வாண வாதிகளது அனைத்தும் நாசமடைதலே முத்தி, பதஞ்சலி யோக முத்தி, நையாயிக வாதிகளின் பரமான்ம லயமே முத்தி, சிவசாங்கிரந்த வாத முத்தி, சாக்தர்களின் முத்தி, சர்வக்ஞத் தன்மை முதலிய குணங்களின் விளக்க ரூபமான காமியமே முத்தி, குணங்களின் சாங்கிராந்தியே முத்தி, பௌத்த முத்தி, ஆவேச முத்தி, சித்தர் பதமே முத்தி. சாங்கியரின் கைவல்யமே முத்தி, பரமாத்மாவில் ஒடுக்கமே முத்தி என பதினேழு வகையான முத்தி வேறுபாடுகளை எடுத்துக்காட்டி விளக்குகிறது.

பிற சமயவாதிகள் மாயா தத்துவத்திற்குக் கீழே இருப்பதால் அந்தச் சமயத்தைச் சார்ந்த முத்தர்கள் ஆற்றிய புண்ணியங்களுக்கு ஏற்பப் பதமுத்தி எனப்படும் புவனக் கூட்டங்களில் ஒடுக்கமடைகின்றனர். ஆதலால், சைவ சித்தாந்தம் கூறும் சிவ சாயுச்சியம் என்னும் பர முத்தி நிலையை அவர்கள் அடைவதில்லை என்று கூறுகிறது.

முத்தி நிச்சயம்

சைவ சித்தாந்தத்தை விளக்கிய சந்தானாச்சாரியர்களுக்குப் பின்னே ‘ஆன்மானந்த வாதம்’ தமிழ்நாட்டில் தோன்றியது. அது ‘முத்தியில் ஆன்மாவால் அநுபவிக்கப்படுவது அதன் இன்பமே; சிவனது இன்பம் அன்று’ என்று கூறியது.[46] இதனை மறுத்து சைவ சித்தாந்த முத்தியே சிறந்த முத்தி என்று தருமையாதீன குரு முதல்வர் ஸ்ரீகுருஞான சம்பந்தர் ‘முத்தி நிச்சயம்’ என்ற பண்டார சாத்திரத்தை அருளிச் செய்தார்கள். இந்நூலை சைவ சித்தாந்த வளர்ச்சியின் தொடர்ச்சியாகக் கொள்ளலாம்.

“சந்தான நற்குரவர் தக்கோர் பிறர்சமயம்
நந்தாது தோற்றுவித்த நற்குரவர் - முந்தவே
எந்தமுத்தி சித்தாந்தம் என்றார்கள் சைவத்தில்
அந்தமுத்தி நிச்சயிப்பேம் யாம்” [47]

என்று முதலில் கூறி, ஆன்மானந்த வாதத்தையும், சிவசம வாதத்தையும் மறுத்துரைத்து முடிவில் சித்தாந்த முத்தியை அருளிச்செய்தார்:

“உள்ளமலம் நீங்கி ஓங்கு சிவானந்த
வெள்ளந் திளைத்ததுவாய் மேவுதலே - கள்ளவிழ்பூங்
கொத்தார் விரிசடையார் கூறு சிவாகமத்திற்
சித்தாந்த முத்திஎனத் தேறு” [48]

இதற்கு “ஆன்மாவானவன் தனது சத்தி நிரோதமான ஆணவ மல முதலானவற்றை நீங்கி, ஒரு காலமுங் குறைவுபடாத சிவாநந்தமாகிய பெருங்கடலிற் றிளைத்து, அச் சிவனும் ஆன்மாவும் ஒன்றுமன்றி இரண்டு மன்றி நின்ற அத்துவித நிலையைப் பெறுதலே சித்தாந்த முத்தியாகும்” என்று ஸ்ரீ வெள்ளியம்பலவாண முனிவர் பொழிப்புரை தருவர்.

எனவே, சித்தாந்த முத்தி, சிவத்தோடு அத்துவிதமாய்க் கலந்து, ஆன்மா சிவனது இன்பத்தில் திளைத்திருத்தலே ஆகும். இதற்கு,

“திரிமலமும் அகல உயிர் அருள் சேர்முத்தி” [49]

என்னும் சிவப்பிரகாசத்தின் சாத்திர வாக்கையும்,

“நின் அருட்பெருங்கடலில்
திளைத்துந் தேக்கியும் பருகியும்” [50]

“செங்கையோடு லகில் அரசு வீற்றிருந்து
திளைப்பதும் அருட் கடலே” [51]

எனவரும் திருமுறைகளின் தோத்திர திருவாக்குகளையும்,

“அரும்பும் தனிப்பரமானந்தம் தித்தித்து அறிந்த அன்றே
கரும்பும் துவர்த்துச் செந்தேனும் புளித்து அறக் கைத்ததுவே” [52]

“வரைவில் அரிவையர் தரு சுகசலதியில்
அலையும் எனது உயிர் அநுதினம் நெறிதரு
மவுன சிவ சுக சலதியில் முழுகுவது ஒருநாளே” [53]

என வரும் திருப்புகழ் வாக்குகளையும் சான்றாக எடுத்துக் காட்டுவர் “முத்தி நிச்சயம்” உரையாசிரியர் ஸ்ரீ வெள்ளியம்பலவாண முனிவர்.

நிறைவுரை

இங்ஙனம் முப்பொருள்களான பதி, பசு, பாசம் பற்றிய இருப்பையும், அவைகளின் இலக்கணங்களையும் சிவப்பிரகாசம் விரிவாக விளக்கிக் காட்டுகிறது. ஆன்மா அடையும் கேவல, சகல நிலைகளையும் பின் திரிமலம் அறுத்து ஞானம் பெற்று, இறைவன் திருவடி அடையும் சுத்தநிலையையும் அவத்தைகள் மூலமாக எடுத்துரைக்கிறது. பிற

சமயங்கள் கொண்டுள்ள முத்திநிலைகளைக் கூறி அவற்றில் மேம்பட்ட சைவ சித்தாந்த முத்திநிலையை தடை விடைகளால் எடுத்துக்காட்டி விளக்குகிறது.

அடிக்குறிப்புகள்

1. சித்தியார், பரபக்கம், 31
2. மேலது, 60:1,2
3. நெஞ்சுவிடு தூது, 217-223
4. பெரிய புராணம், 2814:
5. சி.கே.சுப்பிரமணிய முதலியார், திருத்தொண்டர் புராணம், ஐந்தாம் பகுதி, ப.1167
6. மணிமேகலை, பவத்திற மறுகெனப் பாவை நோற்றகாதை, 82-83.
7. திருவாதவூரடிகள் புராணம், புத்தரை வாதில் வென்ற சருக்கம், 7
8. சித்தியார், பரபக்கம், 133
9. மேலது, 144.
10. மேலது, 163
11. மேலது, 260
12. மேலது, 263.
13. மேலது, 205.
14. மேலது, 207
15. சங்கற்ப நிராகரணம், பேதவாதி சங்கற்பம், வரி: 1-5
16. மேலது, பேதவாதி சங்கற்ப நிராகரணம், வரி: 1-10
17. மேலது, சிவசமவாதி சங்கற்பம், வரி : 9-15
18. மேலது, சிவசமவாதி சங்கற்ப நிராகரணம், வரி : 73-83
19. மேலது, மாயாவாதி சங்கற்பம், வரி : 37-40
20. மேலது, மாயாவாதி சங்கற்ப நிராகரணம், வரி : 173-178
21. சித்தியார், பரபக்கம், 254
22. சங்கற்ப நிராகரணம், சங்கிராந்தவாதி சங்கற்பம், வரி:103-111
23. மேலது, சங்கிராந்தவாதி சங்கற்ப நிராகரணம், வரி: 22-29
24. பதஞ்சலி யோக சூத்திரங்கள், விபூதி பாதம், சூத்திரம், 46.
25. தேவி காலோத்தர ஆகமம், 54
26. சங்கற்ப நிராகரணம், பாடாணவாதி சங்கற்பம், வரி:6-8
27. மேலது, பாடாணவாதி சங்கற்ப நிராகரணம், வரி: 9-15

28. சிவஞான போதம், உதாரண வெண்பா, 74.
29. இருபா இருபஃது, 4:1-12
30. சி.சு.மணி, மெய்கண்ட நூல்களுள் ஏழு, இருபா இருபஃது, பக்.11-12
31. சி.அருணைவடிவேலு முதலியார், சிவஞான போத மாபாடியப் பொருள் நிலை விளக்கம், பக்: 326-327
32. திருக்குறள், பரிமேலழகர் உரை, ப.113.
33. மு.திருவிளங்கம் (புத்துரை), சிவப்பிரகாசம், ப.141
34. திருவாசகம், சிவ புராணம், வரி:18
35. தத்துவ விளக்கம், 51
36. திருக்குறள், 356.
37. திருவாசகம், கீர்த்தித் திருவகவல், 117.
38. திருவானைக்காப் புராணம், ஞான உபதேசப் படலம், 28
39. திருவாசகம், திருச்சாழல், 10:1,2
40. சித்தியார், 264
41. பெரிய புராணம், 1692:
42. ஔவை.சு.துரைசாமிப் பிள்ளை, ஞானாமிர்த மூலமும் பழைய உரையும், ப.493
43. சிவஞான முனிவர், அகிலாண்டேசுவரி பதிகம், 9.
44. மீனாட்சி சுந்தரம்பிள்ளை, சேக்கிழார் பிள்ளைத் தமிழ், வாரானைப்பருவம், 3.
45. ஸ்ரீ ஸத்யோஜ்யோதி சிவாசாரியார், பரமோட்ச நிராச காரிகை.
46. சி.அருணைவடிவேல் முதலியார், சித்தாந்த வினா விடை, ப.366
47. முத்தி நிச்சயம், 2.
48. மேலது, 22.
49. சிவப்பிரகாசம், 50
50. திருவாசகம், செத்திலாப்பத்து, 10 (8:23:10:1,2)
51. திருவிசைப்பா, கங்கைகொண்ட, பா.11
52. கந்தரலங்காரம், பா:6
53. திருவருணைத் திருப்புகழ்

5. சிவப்பிரகாசம் காட்டும் உண்மை அதிகாரம்

முன்னுரை

"முப்பொருட்கும் இலக்கணங்கள் பிரமாணங்கள்
மொழிந்திடுவாம் உத்தேசம் இலக்கணம் பின்
தப்பறவே சோதித்தல் என்று மூன்றாம்.[1]

என்பது சிவநெறிப் பிரகாசம்.

உத்தேசம் என்பது பொருட் பாகுபாடுகளை (Categories) தொகுத்துக் கூறுதல். இலக்கணம் என்பது இப் பொருள் கூறுபாடுகள் ஒவ்வொன்றின் பொதுவியல்புகளையும் சிறப்பியல்புகளையும் வேறு பிரித்துக் கூறுதல். பரீட்சை என்பது ஒவ்வொரு பொருளுக்குரிய இலக்கணமும் இருப்பும் பற்றி அளவை முறையினால் தீர்க்கமாக ஆராய்தல்.[2]

"சிவப்பிரகாசம், 48ஆவது திருவிருத்தத்துள் 'அகலாமுனம்' என்பது முதல் 49ஆவது திருவிருத்தத்துள், 'இதுநிலையார் சுத்தம்' என்பது முடியவுள்ள பகுதியால் இவ்வுண்மை, உத்தேசமாயும் சுருங்கிய இலக்கணமாயும் தோற்றுவாயாயும் நின்று, பரீட்சை இவ்விரிந்த பகுதியால் (உண்மை அதிகாரத்தால்) அறிக" என்பார் காஞ்சி ஞானப்ரகாச சுவாமிகள்.[3]

"இங்கிவை பொது இயம்பும் என்பார்கள்"

என வரும் திருவிருத்தத்தால், பொதுவியல்பு கூறப்பட்டு இதற்கு மேல் உள்ள செய்யுள்களில் 1) ஆன்ம இலக்கணம் 2) அவ் வான்மா பொருந்திய ஐந்து அவத்தைகளின் இயல்பு 3) ஆன்ம சுபாவ முணர்த்தும் தன்மை 4) திருஞான வாய்மை 5) அதன் பயனாகிய ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி, ஆன்ம லாபம் ஆகிய தசகாரியம் 6) புனிதன் நாமமாகிய ஐந்தெழுத்து 7) சிவானந்த நினைவில் அணைந்த சீவன் முத்தரியல்பு என வகுத்துத் திருவருள் துணையால் உண்மை அதிகாரம் கூறப்படும்.

“இங்கிவை பொது இயம்பும்
என்பர்கள் இதன்மேல் ஆன்மாத்
தங்கிய அஞ்சவத்தை
தன்னுண்மை உணர்த்துந்தன்மை
பொங்கொளி ஞானவாய்மை
அதன்பயன் புனிதன் நாமம்
அங்கதில் அணைந்தோர் தன்மை
அறைகுவன் அருளினாலே” (சிவ.51)

இப்பாகுபாடுகளை பொன்னேபோல் போற்றி, கச்சியப்ப முனிவரும் திருத்தணிகையாற்றுப்படையில்,

“உயிரே அவத்தை உணர்த்தும் தன்மை
அருளின் இயல்பே ஆங்கதன் பயனே
பெரும்பெயர்த்திறமே பெற்றவர்முறை என்று
அனைவகை ஏழும் அரில்தபத் தெரிப்ப”

என்றருளிச் செய்வர்.

இங்கு சிவப்பிரகாசம் கூறும் ‘ஞான வாய்மை’யை ‘அருளின் இயல்பு’ என்றும், ‘புனிதன் நாமத்தை’, ‘பெரும்பெயர்த் திறம்’ என்றும், ‘அணைந்தோர் தன்மை’யை ‘பெற்றவர் முறை’ என்றும் கூறுவர் கச்சியப்ப முனிவர்.[4]

“சார்ந்ததன் வண்ணமாம் தன்மை உடையது ஆன்மா என்று தொகுத்துக் கூறிய சர்வஞ்ஞானோத்தரம், பின்னர் ஆன்மா அறியும் ஆன்ம ஞானத்தின் பெருமையையும், அந்த ஞானத்தினால் விளையும் பேற்றையும், ஞானத்தை அறிவதற்கான உபாயத்தையும், ஞானத்தை அறிந்தவனது பெருமையையும் கூறுகிறது” என்று சிவஞான மாபாடியத்தில் சிவஞான முனிவர் கூறுவது இங்குக் குறிக்கத் தக்கதாகும்.[5]

இங்ஙனம், சிவப்பிரகாசம் உண்மை யதிகாரம் வகுத்துக் கூறும் கருத்துகள் இவ் வியலில் ஒரு சிறிது ஆராயப்படுகின்றன.

அடிக்குறிப்புகள்

1. சிவநெறிப் பிரகாசம், 17
2. சோ.ந.கந்தசாமி, தத்துவ நோக்கில் தமிழிலக்கியம், ப.25
3. காஞ்சி ஞானப்ரகாச சுவாமிகள், சிவப்பிரகாசம், ப.103
4. மேலது, ப.104
5. சி.சு.மணி, சிவஞான மாபாடியம், ப.715

5.1 ஆன்ம இலக்கணம்

'உயிர் என்பது அறிவுடையது; ஆயினும் இறைவனைப் போல பேரறிவுடையதாகாது; அது சிற்றறிவுடையதாய் உள்ள பொருள்' இதுவே சைவ சித்தாந்தம் கூறும் உயிரைப்பற்றிய சுருக்கமான கொள்கையாகும்.

"சிவன் சீவன் என்ற இரண்டும் சித்து ஒன்றாம் என்னின்
சிவன் அருள்சித்து இவன் அருளைச்சேரும் சித்து அவன்தான்
பவம்கேடு புத்திமுத்தி பண்ணும் சித்து அவற்றில்
படியும் சித்து அறிவிக்கப்படும் சித்தும் இவன்தான்" [1]

என்று சித்தியார் விளக்கும்

பதியின் அறிவு, பொருள்களை ஒவ்வொன்றாய் அறியாது, எல்லாவற்றையும் ஒருங்கே அறிவது. மேலும், அவற்றை இடைவிடாது அறிந்தவாறே அறிந்து நிற்பது. அதனால், அது பேரறிவு - முற்றறிவு - வியாபக அறிவு என்று சொல்லப்படும்.

பசுவின் அறிவு அவ்வாறன்றி ஒரு காலத்து, ஒரு பொருளை யன்றிப் பிறிதொன்றை அறியமாட்டாது; ஒவ்வொன்றாகவே அறிவது; விட்டுவிட்டு அறிவது. அதனால், அது சிற்றறிவு - சிற்றுணர்வு - சுட்டறிவு என்று சொல்லப்படும்.

"அறிவனே அமுதே அடிநாயினேன்
அறிவன் ஆகக் கொண்டோ எனை ஆண்டது
அறிவிலாமை அன்றே கண்டு ஆண்ட நாள்
அறிவனோ அல்லனோ அருள் ஈசனே" [2]

எனும் திருவாசகத்தில், 'அறிவுச் சொரூபியே!' என்று இறைவனை விளித்து, சிற்றறிவுடைமையே என் இயல்பாதல்' என்பார் மாணிக்கவாசகர்.

பிற சமயிகளும் அறிவைத்தான் உயிர் என்கின்றனர். ஆயினும் அவர்கள் அறிவு பற்றிப் பலவிதமாகக் கூறுகின்றனர். அவர்கள் கூறும் கருத்துகளைச் சைவ சித்தாந்தம்

பொறுமையுடன் கேட்டு, உரிய மதிப்புத் தந்து, நன்கு சிந்தித்துப் பார்த்து ஆராய்ந்து, பொருந்தாதவற்றைக் காரணம் காட்டி விலக்குகிறது. பின்னர் அதைப்பற்றிய பொருத்தமான கொள்கையை அறிவு நெறிக்கு இணங்க ஆராய்ந்து எடுத்துக் காட்டி நிறுவுகிறது.[3]

உயிர், அறிவிக்க அறியும் தன்மையுடையது

'அறிவுளதாகும் உருஉறும் உயிர்கள்'' [4]

என்பது ஈசுவர அவிகார வாதி சங்கற்பம். உயிர் தானே எல்லாவற்றையும் அறியும் என்று ஈசுவர அவிகார வாதமும் சிவசம வாதமும் கூறுகின்றன. மேலும், இந்திரியங்கள் உயிருக்கு அறிவைக் கொடுக்கும் என்பது சிவசங்கிராந்த வாதம்.

உயிர் தானே அறியும் என்றால், அறிகருவிகளான ஞானேந்திரியங்கள் அதற்கு வேண்டுவதில்லை. இந்திரியங்கள் உயிருக்கு அறிவைக் கொடுக்கும் என்றால், இந்திரியங்கள் அறிவற்ற சடமாதலால் உயிருக்கு அவை அறிவைக் கொடுக்க மாட்டா.

"அறிவெனில் வாயில் வேண்டா
அன்றெனில், அவைதாம் என்னை
அறிவதை உதவும் என்னில்
அசேதனம் அவைதாம்" (சிவ.54)

என்று சிவப்பிரகாசம் விளக்கும். இறைவன் அறியும் தன்மையை அருள்வான் எனில், ஆன்மா அறிவிலாதது ஆகும். எனவே, அறிவிலாத சடத்துக்கு அறிவைக் கொடுக்க மாட்டான்.

"...... எல்லாம்
அறிபவன் அறியும் தன்மை
அருளுவன் என்னில் ஆன்மா
அறிவுஇலது ஆகும் ஈசன்
அசேதனத்து அளித்தி டானே" (சிவ.54)

எனவே, உயிர் அறிவுடையது என்பது விளங்கும். அவ் அறிவை விளக்கம் செய்வதே இறைவனின் உபகாரமாகும்.

உயிரின் இயல்பான அறிவு, மலத்தால் பற்றப்பட்டு, மறைக்கப்பட்டு இருப்பதால், அஃது ஒவ்வொரு பொறியின் துணையுடனேயே ஒவ்வொரு பொருளை அறியும். அறிந்த பொருளை மறந்தும் போகும். உயிர் தானாகப் பொருள்களை அறியாது; அறிவித்தபோதே அறியும் இயல்புடையது. பிற பொருள்களை அறிகின்ற உயிர்; தன்னைத் தானே அறியாது. எனவே, தானே அறியும் இயல்புடைய முதல்வன் அறிவிக்கவே உயிர்கள் அறிந்து வருகின்றன.

'தானே அறிந்திடுவன் அறிவன் அன்றாம்
அறிவிக்க அறிவன் அன்றே'' [5] என்பது சித்தியார்.

உயிர்களின் சுட்டறிவினால் அறியப்படும் பொருள்கள் எல்லாம் நிலையில்லாத பொருள்களாகும். சுட்டறிவு என்பது, இது குடம், இஃது ஆடை யென்றும் பொறி முதலிய கருவிகளுடன் கூடி நின்று அறியும் அளவை யறிவாகும். இதனை 'ஆன்ம போதம்' என்றும் கூறுவர். இவ்வறிவால் அறியப்படுவன வெல்லாம் அழியும் இயல்பின வாகும். இவ் வுண்மையை, "ஈண்டு அறிவினால் அறியப்பட்ட சுட்டு அசத்து" என மெய்கண்டாரும், 'சுட்டறிவினால் அறியப்பட்ட பொருள் எல்லாம் அசத்து' என மாதவச் சிவஞான முனிவரும் கூறியவற்றால் தெளியலாம். எங்கும் நிறைபொருளாகிய இறைவனை அறிவதற்கு இவ் வறிவு கருவி யாகாது என உணர்ந்து மாணிக்கவாசகர், 'சுட்டறிவை யொழித்தல்' என்பது பற்றி 'சுட்டறுத்தல்' என்று திருச்சதகத்தில் கூறி அருளினார்.[6]

இறைவனை அறிதல் மெய்யுணர்வினால் அன்றி சுட்டறிவினால் இயலாது என்பதை,

> "நினைப்பதாக சிந்தை செல்லும்
> எல்லை ஏய வாக்கினால்
> தினைத்தனையும் ஆவதில்லை
> சொல்ல லாவ கேட்பவே
> அனைத்து உலகும் ஆய நின்னை
> ஐம்புலன்கள் காண்கிலா
> எனைத்து எனைத்தது எப்புறத்தது
> எந்தை பாதம் எய்தவே" [7]

(மனம், வாக்கு, ஐம்பொறிகள், அந்தக் கரணங்கள் யாவும் பிரபஞ்சத்தை நுகர்வதற்கே உதவுகின்றன; பஞ்சபூதப் பொருளாகிய பரமனை வழிபடுவதற்குச் சிறிதேனும் அவைகள் பயன்படா)

என்று மாணிக்கவாசகரும்,

> "நிறைந்தெங்கும் நீயேயாய் நின்றாலும், ஒன்றின்
> மறைந்து ஐம் புலன்காண வாராய்" [8]

என்று நக்கீர தேவ நாயனாரும்,

> "பூண்ட ஐம்புலனிற் புலப்படா இன்பம்
> புணர்ந்து மெய்யுணர்வினிற் பொங்க" [9]

என்று சேக்கிழாரும் குறித்தருளினர்.

இதனை,

> "தன்அறிவு அதனால் காணும் தகைமையன் அல்லன்; ஈசன்" [10]

என்று சித்தியாரும்.

"அறிவினால் அறிந்த யாவும்
அசத்து ஆதல் அறிதி...
..... மற்று அது
அறிவினுக்கு அறியொண்ணாதே" (சிவ.55)

என்று சிவப்பிரகாசமும் கூறும்.

உயிர், சத்தையும், அசத்தையும் அறியும்

சத்து என்பது என்றும் மாறாத பொருள். சித்து என்பது அறிவுடைய பொருள். எனவே, இறைவன் சித்தாகிய சத்து. அசத்து என்பது சடம்; அறிவில்லாத பொருள். அசத்தாகிய பாசம் சடமாகையால் சிவத்தை அறியமாட்டாது. சித்தாகிய சிவம் வியாபக அறிவு (எங்கும் நிறைந்த பரந்த) உடையது.

பிரபஞ்சம் என்ற அசத்தை, உயிர் எவ்வாறு அறிகிறது என்னும் அகச் சமயக் கருத்துகளும் அதற்குச் சைவ சித்தாந்தம் கூறும் மறுப்பும் பின்வருமாறு:

i. பிரபஞ்சம் என்ற அசத்துப் பொருளை உயிர் அறியும் என்று ஈசுவர அவிகார வாதமும், சிவசம வாதமும், ஐக்கிய வாதமும் கூறும்.

ஆன்மா சிற்றறிவு உடையதாகையால் தானாக ஒன்றை அறியாது. அறிவித்தால் அன்றி அறியாது. எனவே, ஆன்மா பிரபஞ்சத்தை அசத்து என்று அறியமாட்டாது.

ii. ஈசன் அறியும் என்பது சிவாத்துவித சைவம்.

ஈசன் முற்றறிவு உடையவன். ஏகதேசமாய்ச் சுட்டி ஒன்றை அறியுமாறு இல்லை. சுட்டி அறிவது இது, இது என்று சுட்டியறிதல்.

iii. இந்திரியங்கள் அறியும் என்பது சிவசம வாதம். ஏற்கெனவே சொல்லியபடி இந்திரியங்கள் சடம். ஆதலால் தாமாக அறியமாட்டா.

iv. உயிரும் கருவியும் கூடி அறியும் என்பது சங்கிராந்த வாதம்.

கருவிகள் சடமாதலாலும், உயிர்கள் அறிவித்தால் அறியும் இயல்புடைமையாலும் இரண்டும் கூடி அறிவது இல்லை.

v. உயிரும் அருளும்கூடி அசத்தை அறியும் என்பது சைவம்.

பெத்தத்தில் உயிரும் அருளும் கூடாது.

vi. பதியும் கருவியும் கூடி அறியும் என்பது ஐக்கிய வாதம்.

ஒளியின் முன் இருள் நில்லாததுபோல அருளின் முன் கருவிகள் முளைத்து நில்லா.[11]

"முரண்தரல் இயைவ இரண்டொரு வழியின்
அடையா ஆதபம் சாயை போல"[12]

எனவரும் ஞானாமிர்தம், 'மாறுபாடான இரண்டு எக்காலத்தும் ஒன்றாகா. வெயிலும் இருளும் போல' என்று உரைப்பது இங்கு நோக்கத்தகும்.

இவ்வாறு அகச் சமயக் கருத்துகளை வினாக்களாக அமைத்து, ஒரே பாடலில் அவற்றிற்குத் தெளிவாக விடையைத் தருகிறது சிவப்பிரகாசம்.

"எவ்அறிவு அசத்து அறிந்தது
எனில் உயிர் அறியாது, ஈசன்
அவ் அறிவு அறியான் அல்லது
அசேதனம் அறியாது ஆவி
செவ்வியகருவி கூடித்
தெரிவுறாது அருளில் சேராது
உவ்இரு வகையது என்னில்
ஒளி இருள் ஒருங்கு உறாவே" (சிவ.56)

பாசமாகிய அசித்து பதியாகிய சித்தை அறியாது. சத்துப்பொருளாகிய பதி, பாசத்தை அறிந்து அதை நீக்க வேண்டியதில்லை.

"சத்து இது என்று அசத்துத்
தான் அறியாது அசத்தைச்
சத்து அறிந்து அகல வேண்டா" (சிவ.57)

என்று சிவப்பிரகாசமும்,

"தனை நிகர்ப்ப அருஞ்சத்து அசத்துறாது அசத்தறியாது
அனையதாகலின் அதற்கொன்றும் வேண்டுவதில்லை"[13]

என்று தணிகைப் புராணமும் கூறும்.

எனவே, பதியாகிய சத்தை ஓர்ந்து தெளிந்து, பாசமாகிய அசத்தை விட்டு நீங்கிப் பதியினைச் சார்ந்து பயன்பெற வேண்டிய பொருள் உயிராகும் என்பது விளங்கும். இதனை உண்மை விளக்கம்,

"நன்றா உரைக்கக்கேள் நல்லசித்தின் முன் அசித்து இங்கு
ஒன்றாது சித்து அசித்தை ஓராது - நின்று இவற்றை
அன்றே பகுத்து அறிவது ஆன்மாவே என்று மறை
குன்றாமல் ஓதும் குறித்து"[14]

என்று கூறும்.

இஃது எவ்வாறு எனின், இருளில் இருளாகவும் ஒளியில் ஒளியாகவும் இருப்பதன்றி இருளென்றும் ஒளியென்றும் சொல்ல முடியாத கண்ணினது காணும் தன்மையுடையதாகும்.

“அசத்து இது, சத்து இது என்று ஓர் சத்து
இருள் ஒளி அலாக் கண் தன்மையதாம்” (சிவ.57)

என்று சிவப்பிரகாசம் கூறும். இதற்கு, “ஆன்மாவை இருளும் ஒளியும் அல்லாத கண்ணின் தன்மைபோல என்றது தானாக அறிகிறவனும் அல்ல, அறிவித்தால் அறியாமல் இருக்கிறவனும் அல்ல என்று அறிக” என்று மதுரைச் சிவப்பிரகாசர் உரை கூறுவர்.

காஞ்சிப் புராணத்தில், மாதவச் சிவஞான முனிவரும்,

“சத்தசத்தும் பகுத்துணர்சத்தாய்
இருளும் ஒளியும் அல்லாக் கண்ணியல்பாய்” [15]

என்று பசு இலக்கணத்தில் பாடியருளினார்.

உயிர் சதசத்து

உயிர் கட்டு நிலையில் அசத்தாகிய பாசத்தை அழுந்துதல் பற்றி அசத்தென்றும், முத்தி நிலையில் பாசம் நீங்கப்பெற்று சிவத்தின் அழுந்துதலால் சத்தென்றும் கூறப்படுவதால் ஆன்மா சத்து, அசத்து என்னும் இரண்டும் ஆகாமல், ஒருவகையில் அவ் விரண்டின் தன்மையையும் உடையதாகின்றது என்பது புலனாகும். அதுபற்றியே உயிர் ‘சதசத்து’ எனத் தனிப்பொருளாய்க் கொள்ளப்படுகிறது.

“அசத்தைச் சத்துடன் நின்று நீக்கும் தன்மையில் சதசத்து ஆமே” (சிவ.57)

என்பது சிவப்பிரகாசம்.

“சதசத்து என்பதற்குச் சத்தும் ஆகாது, அசத்தும் ஆகாது, சத்தோடு கூடிய பொழுது சத்தாயும், அசத்தோடு கூடியபொழுது அசத்தாயும் நிற்பதொரு தன்மை என்பது பொருளாகும்.

“சதசத்து என்பது சத்துத் தன்மை, அசத்துத் தன்மை ஆகிய இருதன்மையும் உடையது என்பது பொருளன்று. இரண்டிற்கும் பொதுவாகிய வேறொரு தன்மை உடையது என்பதே பொருளாகும்” எனச் சதசத்திற்கு விளக்கம் தருவர் ஆ.ஆனந்தராசன்.[16]

சதசத்திற்குக் கண்ணும், கண்ணொளியும், விளக்கொளியும் உவமையாகக் கூறப்படுகின்றன.

"கண்ணொளி விளக்கு அளித்து
காட்டிடும் என்னில் முன்னம்
கண்ணொளி ஒன்றும் இன்றாம்
விளக்கொளி கலந்து அவற்றைக்
கண்ணொளி அகல நின்றே
கண்டிடும் வேறு காணா
கண்ணொளி விளக்கின் சோதி
கலந்திடும் கருத்து ஒன்று அன்றே" (சிவ.58)

i. கண்ணுக்குத் தனக்கென ஒளியுண்டு.

- உயிர் தனக்கென அறிவுண்டு.

ii. கண், ஒளி மற்றும் இருளைப் பற்றும்.

- உயிர் மலத்தைச் சார்ந்து அறியாமை

இருளையும், சிவத்தைச் சார்ந்து பேரின்ப ஒளியையும் பெறும்.

iii. விளக்கொளி இன்றிக் கண் காணாது

- திருவருள் இன்றி உயிர் உலகப் பொருள்களையும் சிவத்தையு மறியாது.

iv. விளக்கொளி கலந்து இருளை விலக்குதல்

- சிவத்துடன் பொருந்தி மலத்தை விலக்குதல்.[17]

கண்ணொளி இருளோடு கூடியவழி இருளேயாயும், ஞாயிற்றின் ஒளி, விளக்கின் ஒளி முதலிய ஒளிகளுள் எதனோடு கூடினும் அந்த ஒளியேயாயும் நிற்கும். இதுவே ஆன்மாவின் சதசத்துக்கு உவமானம் ஆகும்.

கண்ணுக்குக் காட்சி நிகழுமிடத்து, காட்டும் ஒளியே மேம்பட்டு நிற்கக், காணும் ஒளியாகிய கண்ணொளி அவற்றின் வேறாகாது அவற்றில் அடங்கியே நிற்கும்.

ஆன்மா ஒன்றை அறியுமிடத்து, ஆன்மாவின் அறிவும் சிவனது அறிவும் கலந்து நின்றே அறியும். ஆயினும் அறிவிக்கும் அறிவாகிய சிவனது அறிவு, ஆன்மாவின் அறிவாகாது, தானேயாய் நிற்கும். அறியும் அறிவாகிய ஆன்மாவின் அறிவு, அவ்வாறு இன்றி சிவனது அறிவோடு கூடி அதுவேயாய் அதனுள் அடங்கி நிற்கும்.[18]

விளக்கின் ஒளிக்கு வேறாய்க் கண்ணுக்கு ஓர் ஒளி உண்டு. எவ்வாறு எனில் காணும் ஒளி இன்றிக் காட்டும் ஒளி ஒன்றானே காட்சி நிகழாது. கண்ணொளியும் தனித்து நின்று காணாது. கண்ணொளியும் விளக்கொளியும் இரண்டறக் கலந்து நின்று, ஒளியைக் காணும்.

கண்ணொளியும் விளக்கொளியும் கூடும் என்றபோது, இரண்டும் வெவ்வேறு பொருள்களே யன்றி, ஒன்று அன்று என்பதன் மூலம், 'பரப் பிரம்மமே உயிர்' என்ற ஏகான்ம வாதத்தின் கொள்கை மறுக்கப்பட்டது.

"ஒத்து அறிந்தவும் கனவு அவத்தில் கலங்கும் ஊக்கத்த
சத்து அசத்தையும் அறிதலில் சதசத்து ஆவனவே" [19]

என்று தணிகைப் புராணம், உயிரைச் 'சதசத்து' என்று கூறுகிறது.;

'உயிரைச் சதசத்து என்று நிலைபேறாய் உள்ள சிவாகமங்கள் கூறும். அக்கூற்றின் ஆதாரத்தால் உயிர் அறிவுடையது என்றும், முத்தி ஞானம் பெறுவதற்கு அது உரியதென்றும் கூறலாம்' என்னும் பொருளில்,

"அறிவித்திடினும் அறியும் பரிசால்
உறுகட் பெறலில் சதசத்து உயிரென்று
உறுதிப் பவநூல் சொலும் அவ்வுரையால்
அறிவுக் குரியோன் அணு என்றிடலாம்" [20]

என்று பரிபூரணானந்த போதத்தில் பாம்பன் சுவாமிகள் குறிப்பர்.

'உயிர் சதசத்து இலக்கணம் உடையது - ஸதந்யத் அஸதந்யச்ச ததேவம்'

என்ற மிருகேந்திர ஆகமத்தையும்,

"அசத்தை சத்துடன் நின்று நீங்கும் தன்மையாற்
சதசத்தாமே" (சிவ.57)

என்ற சிவப்பிரகாசத்தையும் இச்செய்யுளுக்கு ஆதாரமாகப் பாம்பன் சுவாமிகள் கொள்வர்.[21]

உயிர் சார்ந்ததன் வண்ணமாகும்

உயிர் ஒருபொருளை அறியும் முறையையும், அறிவுபெறும் முறையையும் பிற சமயங்கள் பலவாறாகக் கூறுகின்றன. அதற்குச் சித்தாந்தம் விளக்கம் கூறி உயிர் அறியும் முறையைத் தெளிவுபடுத்துகிறது. உயிர், புல் நுனியில் தங்கும் பனித்துளிபோல் இதயத்தில், அணுவளவாய் நிற்கும். அதன் அறிவு உடலெங்கும் வியாபித்திருக்கும் என்பது யோக நூலாரின் உயிர்க் கொள்கை. அதாவது உயிர் தேகத்தில் ஏகதேசமாய் நின்று அறியும். இதற்குச் சித்தாந்தம் ஆன்மா ஓரிடத்தில் இருக்குமாயின் அது வடிவுடையதாகிவிடும். மேலும், தேகத்தில் மற்ற இடங்கள் எல்லாம் அழியும் என்று கூறும்.

"உடலின் ஏகதேசி உயிர் எனின் உருவாய் மாயும்" [22]

என்பது சித்தியார்.

உடம்பின் அளவுக்கு ஏற்ப அதனுள் நிறைந்துநின்று அறியும் என்று சமணர்கள் கூறுவர். 'உடல் முழுக்க உயிர் நிறைந்திடும் எனில், அதற்கு உறக்கம் என்ற ஒரு நிலை பொருந்துதல் கூடாது. உடலின் சிறுமை, பெருமைகளுக்கேற்ப உயிர் வடிவு பெற்றிருக்க வேண்டும். உடம்பில் ஓர் உறுப்புக் குறையும்போது, உயிர் அறிவு குறைய வேண்டும். உடல் அழியும்போது உயிர் அழிதல் வேண்டும்'', என்று சித்தியார் விளக்கம் தரும்.

> **"உருவினில் நிறைந்து நின்று, அங்கு உணர்ந்திடும் உயிரது என்னின்**
> **மருவிடாது உறக்கம் வாயில் அறிவு ஒக்க வழங்க வேண்டும்**
> **பெருகிடும் சுருங்கும் போதம் பேர் உடல் சிற்றுடற்கண்**
> **வரும் உடல் குறைக்க ஒக்கக் குறைந்து பின் மாயும் அன்றே"** [23]

உயிர் எங்கும் வியாபகமாகி நிறைந்த அறிவாகும் என்று மாயாவாதிகள் சொல்வர். இதற்குச் சித்தியார்,

> **"எங்கும் தான் வியாபியாய் நின்று உணரும் இவ் ஆன்மா என்னின்**
> **தங்கிடும் அவத்தை போக்கு வரவுகள் சாற்றல் வேண்டும்**
> **பங்கம் ஆர் புலன் ஒன்று ஒன்றாப் பார்த்திடல் பகரல் வேண்டும்**
> **இங்கு எலாம் ஒழிந்தால் நிற்பது எங்ஙனம் இயம்பல் வேண்டும்"** [24]

என்று மறுப்புக் கூறும். உயிர் வியாபகமாகி நிறைந்த அறிவாகும் எனில், அவத்தைப்படவும், பிறப்பு, இறப்புகளில் பொருந்தவும் வேண்டாம். ஐம்பொறிகள்வழி நுகரும் புலன்களை ஒவ்வொன்றாக அறிதல் வேண்டாம். அவத்தை, பிறப்பு, இறப்பு, முதலியவை புலன்வழி ஒவ்வொன்றாய் அறிதல் உள்ளதால், ஆன்மாவின் அறிவு எங்கும் பூரணமாய் நின்று அறியும் என்பது வழக்கில்லை.

உயிர் ஒரு பொருளை அறிவதற்கு ஒரு கர்த்தா வேண்டுவதில்லை என்று சாங்கியம், ஐக்கிய வாத சைவம், சிவசம வாதம் கூறும். ஆனால், உயிர் பொறிகளின் துணையோடும் கருவிகளின் துணையோடும் அறிகின்றதே அன்றித் தனித்து நின்று அறியாது. எனவே, கருவி கரணங்கள் மூலம் உயிர் அறிவு கொள்ள வேண்டுமோ? (வேண்டாம்) என்று சித்தியார் கேள்வியையே பதிலாகத் தருகிறது:

> **"நிகழ்புலன் கரணம் எல்லாம்**
> **செறிவுற்று, அங்கு அறிவுகொள்ள**
> **வேண்டுமோ, சீவனார்க்கே"** [25]

அறிவில்லாத சடப் பொருள்களாகிய மனம் முதலிய கருவிகள் அறிவைக் கொடுக்க, அறிவிலாத உயிர் அதனால் அறியும் என்பர் வைசேடிகர். ஏற்கெனவே சுட்டிக் காட்டப்பட்டதுபோல உயிருக்குக் கருவிகள் அறிவைக் கொடுக்கா என்பதையும், உயிர் அறிவில்லாத பொருள் இல்லை; அறிவுடைப்பொருள் என்பதையும் அறியலாம்.

"அசித்தெனின் உணராது ஆன்மா அசித்துச் சித்து ஆகும் என்னின்
அசித்து சித்து ஆகாதாகும் சித்தசித்து ஆவது இல்லை
அசித்து ஒரு புறமாய் ஒன்றில் சித்து ஒரு புறமாய் நில்லாது
அசித்து உறாச் சித்தே என்னின் அசித்து அடைந்து அறிவது இன்றாம்' 26

என்பது சித்தியார்.

இக்கருத்துகளை உள்ளடக்கி,

"ஓர்இடத்து இருத்தல் மாயா
உருநிறைந்திடுதல் ஒன்றாம்
பேர் இடத்து உறைதல் தானே
பிறங்கு அறிவாகி நிற்றல்
சோர்வுடைச் சடம் நிகழ்த்தல்
எனும் இவை சொல்லார் நல்லோர்" (சிவ.59)

எனச் சிவப்பிரகாசம் கூறும். உயிரின் அறியும் தன்மை குற்றப்படுவதால் இவற்றை நல்லோர் சொல்லார் என்று சித்தாந்த நூல்கள் உரைக்கும். "சிவஞான சித்தியார் சுபக்கத்தில் உள்ள 40 (191-230) பாடல்களின் கருத்துகளை இந்த ஒரே பாடலில் உமாபதி சிவம் தொகுத்துக் கூறுகிறார்" என்று டி.பி.சித்தலிங்கையா குறிப்பிடுவார்[27] (In one stanza (59) Umapathi sums up forty verses of supakkam (191-230)).

உயிரின் அறியும் தன்மை எப்படி யெனின், தன்னை அடுத்துள்ள பொருள்களின் நிறத்தைத் தன்னிறமாகக் காட்டும் படிகம் போலச் 'சார்ந்ததன் வண்ணமாய்' நின்று அறியும். அதாவது, உயிர் தான் சார்ந்த பொருளின் தன்மையைத் தன் தன்மையாய்க் கொண்டிருக்கும். இதனை,

"ஓரிடத்து உணரும் உண்மை,
ஒளிதரும் உபலம் போலும்" (சிவ.59)

என்று சிவப்பிரகாசம் ஓர் உவமையைச் சொல்லி விளங்க வைக்கிறது. இவ் உவமையை மேலும் விளக்கும் வகையில்,

"யாதொன்று பற்றின் அதன் இயல்பாய் நின்று
பந்தமறும் பளிங்கனைய சித்து" 28

என்று தாயுமானவரும் முந்தைய உவமையைப் பொன்னேபோல் போற்றிச் சொல்வார்.

ஆன்மா, சார்ந்ததன் வண்ணமாய் நிற்றலை, 'தற்றருமதருமி' என்னும் சொல்லால் ஆகமங்கள் கூறும். தத் - அது; தருமம் - குணம்; தருமி - குணத்தையுடையது. எனவே, 'தற்றரும தருமி' என்பதற்கு 'அதன் குணத்தைத் தன் குணமாக உடையது' என்பது பொருளாகும். 'அது' என்பது ஆன்மாவால் சாரப்படும் பொருள். 'தற்றருமத்தால் தருமி'

என்று மட்டும் பொருள்படாது, 'தற்றருமத்தோடு ஒத்த தருமத்தை யுடையன்' எனவும் பொருள் கொள்ளல் வேண்டும். இங்ஙனமாகவே, தற்றரும தருமி என்பதற்கு மிருகேந்திர ஆகமத்தில் சொல்லப்பட்ட 'சிற்சங்க சித்து' என்பதற்கு, 'சிற்சங்கத்தால் ஆகின்ற சித்து' என்பது பொருள்.[29]

"ஆன்மாவிற்கு எல்லாப் பொருள்களின் இயல்புகளு முளவாம்; ஆன்மா எதெதெனைச் சார்ந்து உள்ளதோ அதனதன் வண்ணமாந் தன்மைத்து' என்னும் பொருளில்,

"ஸர்வேதர்மாத்மந: ஸந்தி யதேவபரிகல்பயேத்

தத்தத்பவது"

என்று ஸர்வஜ்ஞானோத்தர ஆகமம் கூறுவது இங்கு நினைக்கத்தக்கது[30] மேலும், அவ் வாகமத்தில் 'ஆன்மா சார்ந்ததன் வண்ணமாய் இயல்புடையது' என்பதை இனிது விளக்குதற்பொருட்டு, ஆன்மாவை ஆறு வகைகளாகப் பிரித்துக் கூறினார் சீகண்டருத்திரர். அவையாவன : i) பூதான்மா ii) அந்தரான்மா iii) தத்துவான்மா iv) சீவான்மா v) மந்திரான்மா vi) பரமான்மா இந்த ஆறுவகை ஆன்மாக்களைத் தனித்தனியே அறிந்து கொள்வது ஆன்மா பற்றிய அறிவை விரிவுபடுத்தும்.

i) பூத பரிணாமமாகிய உடம்புகளைப் பெற்று, அவை தானாய் நிற்குமிடத்து 'பூதான்மா' எனப்படும்.

ii) சூக்குமை முதலிய நால்வகை வாக்குகளாகிய சத்த பிரபஞ்சத்தைப் பற்றி நிற்கும் பொழுது 'அந்தரான்மா' எனப்படும்.

iii) தூல பூதம் அல்லாத ஏனைய தத்துவங்களைப் பற்றி நிற்குமிடத்து 'தத்துவான்மா' எனப்படும். ஆன்மா, எந்த எந்தத் தத்துவத்தைப் பற்றி நிற்கிறதோ, அந்தந்தத் தத்துவமே ஆன்மாவாகி நிற்கும்.

iv) புருட தத்துவத்தைப் பற்றி பிரகிருதி குணங்களின் வழி இன்ப துன்பங்களை அநுபவிக்கும் காலத்து 'சீவான்மா' எனப்படும்.

v) மந்திரங்களைக் கணிக்குமிடத்து அம் மந்திரமயமாய் நிற்கும் இடத்து 'மந்திரான்மா' எனப்படும்.

vi) இவை எல்லாவற்றினின்றும் நீங்கிப் பரம்பொருளை அத்துவித பாவனை செய்து நிற்கும் காலத்தில் 'பரமான்மா' எனப்படும்.[31]

மேலே கூறிய ஆறு நிலைகளுள், ஐந்து நிலைகள் பாசமாகிய சடப்பொருள்களின் சேர்க்கையால் உண்டாகும் செயற்கை நிலைகளாம். அத்துவித பாவனையால் பரமான்மா என ஆன்மா நிற்றலே, 'சித்து' என்னும் சாதிப் பொதுமையால் அதன் இயற்கை நிலையாகும். ஆன்மா பெத்த நிலையில் சாரப்படும் பொருள்கள் பாசம் எனப்படும். அப்பொழுது ஆன்மா பாசத்தைச் சார்ந்து பாசத்தின் தன்மையே தன்

தன்மையாய்க்கொண்டு நிற்கும். முத்தி நிலையில் ஆன்மா சிவனைச் சார்ந்து சிவனது எண் குணங்களைப் பெற்றிருக்கும்.

ஆன்மா அறிவுடைப் பொருளாய் இருப்பினும், எதைப்பற்றி நிற்குமோ அதன் அதன் இயல்பாய் நிற்கும் தன்மையை,

"அறியாமை சாரின் அதுவாய், அறிவாம்
நெறியானபோது அதுவாய் நிற்கும்" [32]

என்று தாயுமானவர் தெளிவாக உணர்த்துவர்.

எனவே ஆன்மாக்கள் பெத்த நிலையில் பாசத்தோடும், முத்தி நிலையில் பதியோடும் வைத்தே அறியப்படுவன. இதற்கு, பொன்மலையைச் சார்ந்த சாரசரங்கள் யாவும் பொன்னிறமாய் விளங்கும் என்பதை,

சயிலலோகத்தினைச் சார்ந்த பொழுதே
சயிலமதாகும் சராசரம் போல [33]

என்று திருமூலர் அருளிச் செய்வர்.

"பொற்குன்றம் சேர்ந்ததொர் காக்கை
பொன்னாம் அதுவே" [34]

என்று சுந்தரரும்,

"கனகமலையருகே போயின காக்கையும்
அன்றே படைத்தது பொன் வண்ணமே" [35]

என்று சேரமான் பெருமாள் நாயனாரும் கருநிறக் காக்கை பொன்மலையைச் சேர்ந்து பொன்னிறம் பெற்றதுபோல் ஆகும் என்று கூறுதல் இங்கு ஒப்புநோக்கத்தகும்.

அடிக்குறிப்புகள்

1. சிவஞானசித்தியார், சுபக்கம், 320
2. 8:5:50
3. ந.சுப்பு ரெட்டியார், சைவ சித்தாந்தம் ஓர் அறிமுகம், ப.122
4. சங்கற்ப நிராகரணம், ஈசுவர அவிகார வாதி சங்கற்பம், வரி.2
5. சிவஞான சித்தியார், சுபக்கம், 233
6. கதிர்மணி விளக்கம், திருவாசகம் (திருச்சதகம்), ப.112
7. 8:5:76
8. நக்கீர தேவ நாயனார், கயிலைபாதி காளத்திபாதி யந்தாதி, 48:1,2
9. பெரிய புராணம், 3242:2
10. சிவஞான சித்தியார், சுபக்கம், 247:4

11. ஆ.ஈசுரமூர்த்திப் பிள்ளை, சிவப்பிரகாசம், பதவுரை, பக்.108-109.
12. ஞானாமிர்தம், அகவல், 70:8,9
13. தணிகைப் புராணம், நந்தி யுபதேசப் படலம், 102
14. உண்மை விளக்கம், 24
15. காஞ்சிப் புராணம், தழுவக் குழைந்த படலம், 60
16. ஆ.ஆனந்தராசன், சிவஞான போதம் வழித்துணை விளக்கம், ப.204
17. காஞ்சி ஞானப்ரகாச சுவாமிகள் (உ.ஆ), சிவப்பிரகாசம், ப.116
18. சிவஞான முனிவர், சிவஞான போதச் சிற்றுரை விளக்கம், ப.318
19. தணிகைப் புராணம், நந்தி யுபதேசப் படலம், 100
20. பாம்பன் சுவாமிகள், பரிபூரணானந்த போதம், பா:101
21. மேலது, ப.135
22. சிவஞான சித்தியார், சுபக்கம், 206
23. மேலது, 207
24. மேலது, 208
25. மேலது, 196
26. மேலது, 204
27. T.B.Siddalingaiah, Saiva Siddhanta is Historical Perspective, p.333
28. தாயுமானவர், ஆகாரபுவனம், 18
29. சி.அருணைவடிவேலு முதலியார், சிவஞான போத மாபாடிய பொருள்நிலை விளக்கம், பக்.595 & 599
30. மேற்கோள். பாம்பன் சுவாமிகள், பரிபூரணானந்த போதம், அனுபந்தம்
31. காசிவாசி செந்திநாதையர், சிவஞான போத வசனஅலங்கார தீபம், ப.132
32. தாயுமானவர், உடல் பொய்யுறவு, 22
33. திருமந்திரம், 1491
34. சுந்தரர் தேவாரம், 7:50:4
35. 11:6:100

5.2 அவத்தை இலக்கணம்

ஓர் உடல் பல கருவிகளின் சேர்க்கைகளால் ஆனது. அவ்வுடல் வருதலும் நிற்றலும், அழிதலும் அதில் பொருந்தியுள்ள உயிரின் வினைக்கீடாக அமைதல் போல உடல்கள் நிற்கின்ற காலத்திலும் கருவிகளில் சிலவும் பலவும் வினைக்கீடாகச் செயல்படாது ஓய்ந்து நிற்கும். அப்போது அவை நீங்கலாகச் செயற்படும் கருவிகளின் ஏற்றக் குறைவால் உயிரின் அறிவு வேறு வேறு நிலைகளை அடையும். அவையே, ‘அவத்தைகள்’ எனப்படுகின்றன. அந்த அவத்தைகள் சாத்திர நூல்களில், சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்று ஐந்தாகக் கூறப்படுகின்றன. இவை தமிழில் முறையே நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படங்கல் எனப்படுகின்றன. இங்குச் சொல்லப்படும் இவ்வைந்தும் ‘காரிய அவத்தைகள்’ எனப்படும்.[1]

ஆணவம் மட்டும் இருந்த நிலை கேவலம்; மும் மலங்களும் கூடிய நிலை சகலம்; மும் மலங்களும் நீங்கப் பெற்றுப் பிறவி ஒழிந்து இறைவனோடு கலந்திருக்கும் நிலை சுத்தம் ஆகும். கேவலம், சகலம், சுத்தம் என்னும் மூன்றும் காரண அவத்தைகள் ஆகும். காரண அவத்தைகள் மூன்றும் காரிய அவத்தைகள் ஐந்தும் ஒன்று சேர்ந்து (மூவைந்து) பதினைந்து அவத்தைகளாய் விரியும். அவை கேவல ஐந்தவத்தை, சகல ஐந்தவத்தை, சுத்த ஐந்தவத்தை எனப் பெயர்பெறும். ஒவ்வொரு ஐந்தவத்தையிலும் சாக்கிரம் முதலிய ஐந்து நிலைகள் உண்டு. இந்த மூவகை ஐந்தவத்தைகளும் உண்மையில் சகல நிலையாகிய ஒன்றில் நிகழ்வனவே யாகும்.[2]

இங்குச் சுட்டிக்காட்டிய காரண அவத்தைகளும், காரிய அவத்தைகளும் முதற் காரணமும் அதன் பரிமாணங்களும் என்னும் பொருளில் வரவில்லை. அவை, முன்னே இருந்ததனால் இவை பின்னே நிகழ்வனவாயின என்னும் பொருளில் வருகின்றன. முன்னிருந்த நிலை கேவலம்; பின்னர் உள்ள நிலை சகலம்; அதன்பின் வருகின்ற நிலை சுத்தம் என வருவன வாகும்.[3]

உயிரின் அறிவு விளங்குவதற்கு தத்துவம் 36, தாத்துவிகங்கள் 60 ஆக 96 கருவிகள் துணையாக உள்ளன. இதில் ஒரு கருவியேனும் குறையாது அனைத்தும்

செயல்பட்டு நிற்கும் நிலையே 'மகா சகலம்', 'பிரேரக அவத்தை', 'உணர்த்தும் முறைமைச் சகலம்' என்று வெவ்வேறு பெயர்களாகக் கூறப்படும். இந் நிலையில் உயிர் புருவமத்தியான இலலாடத் தானத்தில் நின்று விளக்கமான அறிவையும், செயலையும் உடையதாய் இருக்கும்.[4] 96 தத்துவங்களை உணர்ந்த ஆன்மா என்னும் பொருளில், ஆன்மாவை, 'ஷண்ணவதி தத்வஜ்ஞா' என்று உபநிடதம் குறிப்பிடும்.[5]

கேவல ஐந்தவத்தை

உடம்போடு கூடி வாழ்வதாகிய சகல நிலையில் ஆன்மாவில் அன்றாடம் கேவலம் (அறியாமை) வந்து பொருந்தும். விழிப்புநிலையாகிய சாக்கிரத்தில் சில கருவிகள் செயல்படாததனால், கண்டும் காணாது, கேட்டும் கேளாது, உணர்ந்தும் உணராதது போல அறிவு மந்தமாய் நிகழும். மேலும், சில கருவிகள் ஒடுங்குதலினால் கனவு ஆகிய சொப்பனம், உறக்கம் ஆகிய சுழுத்தி, பேருறக்கம் ஆகிய துரியம் ஆகிய நிலைகள் உண்டாகும். இந் நிலைகளிலெல்லாம் ஆன்மாவுக்குப் படிப்படியே அறியாமை மிகுந்து வரும். துரியாதீத நிலையில் ஆன்மா முழு அறியாமையில் மூழ்கியிருக்கும். இவ்வைந்து நிலைகளிலும் அறியாமை குறைந்தும், மிகுந்தும் நிகழ்தலின், இவை கேவல சாக்கிரம், கேவல சொப்பனம், கேவல சுழுத்தி, கேவல துரியம், கேவல துரியாதீதம் எனச் சொல்லப்பெறும். இவற்றைத் தொகுத்து 'கேவல ஐந்தவத்தைகள்' என்பர். 'சகலத்தில் கேவலம்' என்றும் சொல்லப்படும்.[6]

உயிருக்குக் கனவோ, உறக்கமோ இல்லாவிடினும் விழிப்பு நிலையிலேயே அறிவு மந்தமாய் நிகழும். **புருவ நடுவில்,** ஞானேந்திரியங்கள் ஆகிய அறிகருவிகள் (செவி, தோல், கண், நாக்கு, மூக்கு) ஐந்தும், கன்மேந்திரியங்கள் ஆகிய தொழிற் கருவிகள் (வாய், கால், கை, எருவாய், கருவாய்) ஐந்தும், ஞானேந்திரியங்களின் விடயங்கள் (ஓசை, ஊறு, ஒளி, சுவை, மணம்) ஐந்தும், கன்மேந்திரியங்களின் விடயங்கள் (பேச்சு, நடை, கொடை, போக்கு, இன்பம்) ஐந்தும், வாயுக்கள் (பிராணன், அபானன், உதானன், சமானன். வியானன், நாகன், கூர்மன், கிருககரன், தேவதத்தன், தனஞ்செயன்) பத்தும், அந்தக்கரணங்கள் (மனம், புத்தி, அகங்காரம், சித்தம்) நான்கும், புருடன் ஒன்றும் சேர்ந்து ஆக மொத்தம் 35 கருவிகள் செயல்படும். இது **'கேவல சாக்கிரம்'** எனப்படும்.

பின் ஆன்மா புருவ நடுவினின்றும் இறங்கிக் **கழுத்தை** அடையும். அங்கு ஞானேந்திரியங்கள் ஐந்தும், கன்மேந்திரியங்கள் ஐந்தும் செயற்படாது ஒடுங்க, ஏனைய இருபத்தைந்து கருவிகள் தொழிற்படும். ஆன்மா இவ்விடத்துக் கனவு நிலையை எய்தி நிற்கும். இது **'கேவல சொப்பனம்'** என்னும் அவத்தையாகும்.

அதன்பின் ஆன்மா கழுத்தினின்றும் இறங்கி **இதயத்தை** அடையும். அங்கு அந்தக்கரணங்களுள் சித்தமும், பிராணவாயும், புருடனும் ஆகிய மூன்று கருவிகளே தொழிற்படும். உயிர் இவ்விடத்து உறக்கத்தை எய்தி நிற்கும். இது **'கேவல சுழுத்தி'** எனப்படும். பின் ஆன்மா இதயத் தானத்திலிருந்து இறங்கி **உந்தியை** அடையும். அங்கு பிராண வாயுவும், புருடனும் ஆகிய இரண்டு கருவிகளே உளவாகும். இது ஆன்மா பேருறக்கத்தில் ஆழ்ந்துவிடும் நிலையாகும்; **'கேவல துரியம்'** என்னும் அவத்தையாகும்.

இறுதியாக, ஆன்மா உந்தியினின்றும் இறங்கி **மூலாதாரத்தை** அடையும். அங்கு பிராண வாயுவும் ஒடுங்கப் புருடன் என்னும் ஒரு கருவியே உள்ளதாகும். இங்கு மூச்சும் ஒடுங்கி ஆன்மா முழு அறியாமையில் கிடக்கும். இது **'கேவல துரியாதீதம்'** என்னும் அவத்தையாகும். இவற்றை அட்டவணையின் மூலம் எளிமையாக்கலாம்:

அவத்தைகள்	**இடங்கள்/செயற்படும் கருவிகள்**	**உணர்வுகள்**
1. கேவல சாக்கிரம்	புருவ நடு / 35	மந்தமாய் நிகழும் பொறியுணர்வு
2. கேவல சொப்பனம்	கழுத்து / 25	கனவுணர்வு
3. கேவல சுழுத்தி	இதயம் / 3	உறக்கம்
4. கேவல துரியம்	உந்தி / 2	பேருறக்கம்
5. கேவல துரியாதீதம்	மூலாதாரம் / 1	முழு அறியாமையில் அழுந்துதல்

(ஐந்தவத்தையும் செயல்படும் கருவிகளும் பிற்சேர்க்கை ப.386)

"சாக்கிரமா நுதலினில் இந்திரியம் பத்துஞ்
சத்தாதி வசனாதி வாயு பத்தும்
நீக்கமில் அந்தக்கரணம் புருட னோடு
நின்ற முப்பான் ஐந்தும் நிலவும் கண்டத்து
ஆக்கிய சொப்பனம் அதனில் வாயு பத்தும்
அடுத்தன சத்தாதி வசனாதியாக
நோக்கு கரணம் புருடன் உடனே கூட
நுவல்வர் இருபத்தைந்தாம் நுண்ணி யோரே."

"சுழுத்தி இதயந்தனில் பிராணஞ் சித்தஞ்
சொல்லரிய புருடனுடன் மூன்ற தாகும்;
வழுத்திய நாபியில் துரியம் பிராணனோடு
மன்னு புருடனுங் கூட வயங்கா நிற்கும்;
அழுத்திடு மூலந்தன்னில் துரியா தீதம்
அதனிடையே புருடன் ஒன்றி அமரும் ஞானம்
பழுத்திடும் பக்குவரறிவர் அவத்தை ஐந்திற்
பாங்குபெறக் கருவிநிற்கும் பரிசு தானே"[7]

என்று தாயுமானவர் கேவல ஐந்தவத்தை நிலைகளில் செயல்படும் கருவிகளைப் பட்டியல் இடுகிறார்.

அரசன் உலா மேற்கொள்ளும்போது அமைச்சர், படைத் தலைவர் முதலிய பரிவாரங்களுடன் அரண்மனையைவிட்டுச் செல்லுவான். அவன் மீண்டும் அரண்மனைக்குத் திரும்பும்போது ஒவ்வோரிடத்தினில் ஒவ்வொரு தகுதி உடையவர்களை நிறுத்திப் பிறர் யாரும் புகாவண்ணம் காவலும் இடுவான். இறுதியாக அரசன் தான்மட்டும் அந்தப்புரத்துக்குள் செல்வான். அதுபோலவே, உடல் கருவிகளுடன் கூடிப் பொருள்களை அறிந்து நுகரும் ஆன்மா, உடலுக்குள்ளே ஒடுங்கும்போது தனக்குத் துணையாக நின்ற கருவிகளை விட்டு, உந்தியில் உயிர்க்காற்றைக் காவலாக நிறுத்தி, மூலாதாரமாகிய அந்தப்புரத்துள் தான் சென்று தனியாய் விடும்."[8] என்று சித்தியார் உவமை கூறி விளக்கும்:

"படைகொடு பவனி போதும் பார்மன்னன் புகும்போது இல்லில்
கடைதொறும் விட்டுவிட்டு காவலும் இட்டுப் பின்னர்
அடைதரும் தனியே அந்தப்புரத்தினில் அது போல் ஆன்மா
உடலினில் அஞ்சு அவத்தை உறும் உயிர் காவலாக" [9]

என்பது சிவஞான சித்தியார்.

"தத்துவங்கள் சற்றும் சலியா அதீதத்தே
ஒத்தறியா ஆன்மா ஒடுங்கிடவும் - ஒத்த
சகல அவத்தைப்போல பிராணன் சலித்த
திகலறமெய்த் தேவே இயம்பு" [10]

என வரும் சதமணிக் கோவை, "பிராண வாயு உடலுக்குக் காவல்' என்று கூறும். இந்த ஐந்து உணர்வு நிலைகளையும், சூடு செய்யப்பட்ட இரும்பு உருண்டையின் நிலைக்கு ஒப்பிடுகிறார் இலக்கணம் சிதம்பரநாத முனிவர்.[11]

i. எரியும் நெருப்பில் மிகச் சிவந்து பிரகாசத்துடன் காணப்படும் இரும்பு உருண்டை. முழு உணர்வு நிலையுள்ள **விழிப்பு** நிலைக்கு உவமையாகும்.

ii. நெருப்பிலிருந்து நீக்கப்பட்டவுடன் சிவந்து கொதிக்கும் இரும்பு உருண்டை, **கனவு** காணும் உணர்வு நிலையாகும். அது யானையைக் கண்டவன் ஓடிப்போய் மீண்டும் வந்து பார்த்தபோது அவ் யானை அங்கு இல்லாதிருக்கும் நிலையை ஒத்ததாகும்.

iii. சூடு தணிந்துகொண்டிருக்கும்போது சிவப்பு நிறம் நின்றாற்போல் காணப்படும் இரும்பு உருண்டை, **உறக்க** உணர்வு நிலையாகும். அது மின்னல் வந்தவுடன் கண்ணால் பார்க்க இயலாத நிலையை ஒத்ததாகும்.

iv. எல்லாச் சூடும் இழந்து **சிவப்பு வெம்மையாக** மாறும் (பிரகாசமும் இல்லை) இரும்பு உருண்டை, துரிய நிலையாகும். அது மின்னல் மறைந்தவிடத்து இருளில் கூடிய கண்ணின் நிலையை ஒத்ததாகும்.

v. சூடு இல்லாத வெம்மையான இரும்பு உருண்டை, **துரியாதீத** நிலையாகும். அது பிறவிக்குருடன் அந்தகாரத்தில் விழித்திருக்கும் நிலையை ஒத்ததாகும்.

மூலாதாரத்தில் கிடக்கும் புருடன் என்பது உயிர் அன்று; அது புருடத் தத்துவம் என்று கூறப்படும். புருடன் ஒரு கருவியாகக் கூறப்படினும் மற்ற கருவிகள்போல இது மாயையினின்றும் தோன்றிய சடமாகிய தனித்ததொரு கருவி என்று கருதுதல் கூடாது.[12]

காலம், நியதி, கலை, வித்தை, அராகம் என்னும் ஐந்தும் மிகு நுண்கருவிகள், இவை ஆன்மாவைப் பொருந்திச் சட்டை (கஞ்சுகம்) போல் ஒட்டி யிருப்பவை. எனவே, இவை 'பஞ்ச கஞ்சுகம்' எனப்படும். புருடன் என்று குறிக்கும் இடங்களில் காலம், நியதி முதலிய நுண்கருவிகள் செயல்படுகின்றன என்று அறிய வேண்டும். மூலாதாரத்தில் முழு அறியாமையில் ஆன்மா கிடக்கும் பொழுதுகூட இக்கருவிகள் இயங்கிக் கொண்டிருக்கும்.

மேலும், 'புருடன்' என்று பெயர்பெற்ற சகலர்க்கு 'பஞ்ச கிலேசங்கள்' உளவாகும். அவை, அவிச்சை, அகங்காரம், அவா, ஆசை, கோபம் ஆம். ஏனைய பிரளயாகலர், விஞ்ஞானகலர்களுக்கு இந்நிலை இல்லை.[13]

பஞ்சகஞ்சுகஸம்யுக்த : ப்ரக்ருதி போக்துமுதத :|
அவித்யாதிஸமாயுக்த : புருஷ : பரிகீர்த்தித :||

என வரும் பௌஷ்கர ஆகம ஸ்லோகத்திற்கு, "கலை முதலிய ஐந்து சட்டைகளைக் கொண்டும் அவித்யை முதலியவைகளைக் கொண்டும் ப்ரக்ருதியை அநுபவிக்க முனைவதே புருஷன் என்பது. ப்ரக்ருதியுடன் இணைந்திருக்கும் தன்மை யுடையவன் (ப்ரக்ருதியாலிங்கித: புருஷ:) எனும் 'புருஷன்' ஸகல பசுவே. விஞானகலரும், ப்ரளாயகலரும் இத்தத்வத்தில் சேர்த்தியல்ல" என்று உமாபதி சிவம் பௌஷ்கர பாஷ்ய ஸங்கிரஹத்தில் குறிப்பிடுவது இங்கு நோக்கத்தக்கது.[14]

இவ்வாறு புருவ நடுவினின்றும் இறங்கி மூலாதாரத்தில் ஒடுங்கிக்கிடக்கும் ஆன்மா மீண்டும் மேலேறிச் சென்று அந்த அந்த இடங்களுக்கேற்ப அவத்தைகளைப் பெற்றுப் புருவ நிலையை அடையும். கீழிறங்கிச் செல்லுதல், 'கீழாலவத்தை' என்றும் மேலேறிச் செல்லுதல் 'மேலாலவத்தை' என்றும் சொல்லப்பெறும். இறங்குதல், மேற்செல்லுதல் என்பது தவிர இவ் விரண்டிடையே வேறுபாடு யாதும் இல்லை. சிவப்பிரகாசத்தில் துரியாதீதத்தில் இருந்து சாக்கிரம் வரை கீழேயிருந்து மேலே வரும் முறையில் அவத்தைகள் கூறப்படுகின்றன:

"எண்ண ஒன்று இலாது அதீதம்
  எய்திய துரியத்து ஒன்று
நண்ணிடும் சுழுத்தி தன்னில்
  நயந்துளது ஒன்று பின்னும்
அண்ணிடும் கனவு தன்னில்
  ஆறேழாம் சாக்கிரத்தில்

கண்ணுறு அஞ்ச ஆறாய
கருவிகள் மருவுந் தானே" (சிவ.60)

போற்றிப் பஃறொடையிலும் உமாபதி சிவம் இந்த முறையிலேயே,

"மூல அருங்கட்டில் உயிர் மூடமாய் உள்கிடப்பக்
காலம் நியதி அது காட்டி - மேல் ஓங்கும்
முந்திவியன் கட்டில் உயிர் சேர்த்துக் கலைவித்தை....
ஓங்கு நுதலாய ஓலக்க மண்டபத்தில்
போங்கருவி யெல்லாம் புகுந்து ஈண்டி..." [15]

என்று மூலாதாரத்திலிருந்து தொழிற்படும் கருவிகளைக் கூறுகிறார்.

ஆன்மா நனவு நிலையின்கண் தத்துவ, தாத்துவிகங்களுடன் கூடி யான், எனது என்றும் செருக்கோடு வினைப்பயனை நுகர்ந்து வருவதை, ஓர் அரசன் திருவோலக்க மண்டபத்துள் தன் பரிவாரங்களுடன் வீற்றிருப்பதற்கு உவமித்தார் உமாபதி சிவம்.

'மூல அருங்கட்டில் உயிர் மூடமாய் உட்கிடப்ப' என்பது ஆன்மா மூலாதாரத்தை அடைந்து துரியாதீத நிலையை எய்தியபொழுது மூலப்பிரகிருதியில் உள்ள பஞ்சக் கிலேசங்களுள் அவிச்சையை மட்டும் அறிந்து நிற்கும் என்பது பெறப்படுகின்றது. அந்த அவிச்சை அநுபவமே விழித்து எழுந்தபின் 'யான் சுகமாய்த் துயின்றேன்' என உணரவும், உணர்ந்து சொல்லவும் படுகின்றது. இத்தொடருடன், 'அடைதரும் தனியே அந்தப் புரத்தினில்' எனும் சித்தியார் தொடரையும் இணைத்து நோக்கினால், "மூலாதாரத்தில் ஆன்மா மூலப் பிரகிருதியைப் பற்றுதலை, அரசன் அந்தப்புரத்தில் தன் மனையாளைத் தழுவிக் கிடத்தற்கும், அது அந்தப் பிரகிருதியில் உள்ள அவிச்சையை நுகர்தற்கு, அரசன் தன் மனையாளிடம் இன்பத்தை நுகர்தற்கும் ஒப்பிடலாம்" என்று சிவஞான முனிவர் குறிப்பால் உணர்த்தியுள்ளார்.[16]

மூலாதாரத்தில், ஆன்மா உயிர் நிலையைவிடக் கீழான சட நிலையை அடைகிறது. பிரகிருதியின் அவித்தையோடு புருஷன் கூடி அறியாமையில் ஆழ்ந்தநிலை ஓர் ஆனந்த நிலை என்றே சொல்லலாம். "We can only say that it is below even the level of the biological on par with the non-living material object. It is however, a state of nascent bliss, the bliss of the purusa is embrace with the avidya of prakriti." என்பர் டி.பி.சித்தலிங்கையா.[17]

காலம், நியதி என்பனவற்றின் செயல்பாடுகள் சூக்குமமாய் மூலாதாரத்தில் இருந்து பின் மேல் நிலையாகிய துரியநிலையில் ஐம்புலன்களை அறியத் தொடங்குவதால், தூலமாய் நிகழ்கின்றன என்பதை, 'காலம் நியதி அது காட்டி' என்று போற்றிப் பஃறொடை குறிப்பிடும்.[18]

'நனவு எனக்கனவின் நன்னடை வழா அது' என வரும் ஞானாமிர்தத் தொடர், ஆன்மா கீழாலவத்தையில் மட்டுமே கண்ட (கழுத்து) தானத்தில் கனவு காணும்

என்று குறிப்பிடும். “இரு வினையால் முன்புள்ள இன்ப, துன்பங்கள் மருவும் வகை அங்கே மருவி” எனவரும் போற்றிப் பஃறொடைத் தொடர், மேல் நோக்கும் அவத்தையில் கனவு காணும் என்று சொல்லும். இரு முறைகளிலும் செயற்படும் கருவிகளின் இயல்பு ஒரே வகையாய் இருத்தலால் அவற்றால் நிகழும் நிகழ்ச்சிகளிலும் வேற்றுமை இருத்தல் இயலாது. ஆகவே, ‘இரு முறையிலும் ஆன்மா கனவு காணும்’ என்பதே உண்மையாகும்.[19]

கனவு சில சமயம் நினைவில் இருக்கும்; சில சமயம் நினைவில் இருப்பதில்லை. ஏன் என்பதற்குச் சதமணிக் கோவை விடை தருகிறது:

“கண்ட கனாவை மறந்தும் மறவாதும்
கண்டபடியே உரைக்கக் காரணமென் - கொண்டலணி
தேமாம் பொழில் வெண்ணெய் தேசிகா நேசியாய்
ஆமாறு அடியேற்கு அருள்” [20]

சொப்பனத்திலிருந்து சுழுத்தி போகையாலும் (கீழிறங்குதல்) சொப்பனத்திலிருந்து சாக்கிரத்திற்கு வருகையாலும் (மேலேறிச்செல்லுதல்) சில சமயம் கனவு மறந்து போகும். சில சமயம் நினைவில் வரும்.

ஐந்தவத்தையில் ஆன்மா இலலாடம், கண்டம் முதலிய ஓரோர் இடத்தில் மட்டும் இருப்பதாகக் கூறப்படுகிறது. வியாபகப் பொருளாகிய ஆன்மா ஓரோர் இடத்தில் ஏகதேசியாய் நின்று அவத்தை அடைவது எங்ஙனம் கூடும். ஆன்மா வியாபகப் பொருளாயினும், அதனை ஆணவ மலம் மறைத்து நிற்றலால், அந்த ஆணவத்திற்குப் பகையாகிய கருவி கரணங்கள் எவ்விடத்திற் செயற்படுகின்றனவோ அவ்விடத்தில் மட்டும் ஆன்மாவின் இருப்பு விளங்குவதாகும். அம் முறையில்தான் அவத்தைகளுக்குரிய இடங்களில் மட்டுமே ஆன்மா இருப்பதாகச் சொல்லப்படுகின்றது. இவ் விளக்கத்திற்கு மேற்கோளாகச் சிவஞான முனிவர், உலகுடைய நாயனாரின் பாடல் ஒன்றைக் காட்டுகிறார்.[21]

“சீவனோ வியாபி அவத்தையால் இழிந்து
திரும்புதல் குற்றமாம் கருவி
சேருதல் பிரிதல் இல்லையாம் முறையில்
செயற்படும் கருவியே தெரியும்
தாவிலா அறிவு தங்கின இடமே
தகும் உயிர்க்கு இருப்பிடம்.”

ஆன்ம அறிவு எந்த எந்தக் கருவியைப் பற்றி நிற்கின்றதோ, அந்தக் கருவியே ஆன்மா இருக்கும் இடம் என்று சொல்லப்படும். இக் காரணத்தினாலோ ஆன்மாவிற்கு இறங்குதலும், ஏறுதலும் நிகழ்கின்றன. ஆன்மா வியாபகமாயினும் தத்துவங்களையே வடிவாகக் கொண்டு நிற்றலால் பல அவத்தைகளை அது எய்துவதாயிற்று.

இங்குக் கூறிய கருத்தை நாம் ஓர் உவமையில் வைத்துத் தெளியலாம். அஃதாவது குளத்தின் நீர் குளப் பரப்பு முழுவதிலும் நிரம்பி இருப்பினும், அதனை முழுவதுமாகப் பாசி மூடி இருக்குமாயின், அந் நீரின் இருப்புச் சிறிதும் தோன்றாது. அந் நிலையில் அதனை மூடியுள்ள பாசி எந்த இடத்தில் விலக்கப்படுகின்றதோ, அந்த இடத்தின் அளவிற்கு அந்த நீரின் இருப்புப் புலப்படும். இதுபோலவே ஆணவ மலத்தால் மறைக்கப்பட்டுள்ள ஆன்மா கருவிகளைக் கொண்டு அறிவு விளக்கம் பெறுவதை அறியலாம்.[22]

சகல ஐந்தவத்தை

ஆன்மா சகல நிலையில், ஐம்பொறிகளால் பொருள்களை ஒரே தொடர்ச்சியாய் அறிய இயலாமல் விட்டுவிட்டே அறியும். இதனை நம் அநுபவத்தில் வைத்தே உணர்தல் வேண்டும். நாம் ஒரு பொருளை அறியும் காலத்தில் அதனைப் பற்றியும் விட்டும் மீண்டும் பற்றியும் விட்டும் மாறிமாறியே உணர்கிறோம். ஆன்மா பொருளைப் பற்றுதலும் விடுதலும் மிக விரைவாக நிகழ்வதால் அவை நமக்குப் புலனாவதில்லை. தொடர்ச்சியாய் அறிந்து கொண்டிருப்பது போலத் தோன்றுகிறது. அஃது உண்மையன்று. இங்ஙனம் பொருள்களை அறிவதாகிய விழிப்பு நிலையிலேயே ஆன்மாவால் சாக்கிரம், சொப்பனம் முதலிய ஐந்தவத்தைகள் நுட்பமாய் நிகழ்கின்றன என்று கொள்ளப்படுகிறது. இவற்றைத் தனித்தனியே பிரித்துக் காட்டல் இயலாது. இந்த ஐந்தவத்தைகள் காற்றாடியில் உள்ள ஓலைகள் விரைவாகச் சுழல்வது போல மிக விரைவாக மாறி மாறி நிகழும். இவற்றை விளங்க உரைத்தல் இயலாமை பற்றி. நினைப்பும், மறப்பும் எனச் சுருங்கச் சொல்லுவர்.[23] நினைப்பைச் 'சகலம்' என்றும், மறப்பைக் 'கேவலம்' என்றும் கூறுவர். மற்றும் சகலம் 'பகல்' என்றும், கேவலம், 'இரவு' என்றும் கூறப்படும்.[24]

நன்கு விழித்திருக்கும் சகல நிலையில் இடையறாது நிகழ்வனவாகிய இவ் அவத்தைகள் சகல சாக்கிரம், சகல சொப்பனம், சகல சுழுத்தி, சகல துரியம், சகல துரியாதீதம் எனச் சொல்லப்பெறும். இவற்றைத் தொகுத்துச் 'சகல ஐந்தவத்தைகள்' என்பர். இது 'மத்தியாலவத்தை'. சகல சாக்கிரம் அல்லது சாக்கிர சாக்கிரம் என்னும் நிலையில் சிவ தத்துவம், சத்தி தத்துவம், சாதாக்கிய தத்துவம், ஈசுவர தத்துவம், சுத்தவித்தை ஆகிய ஐந்து தத்துவங்களும் தொழிற்படும். சாக்கிர சொப்பனத்தில் சிவ தத்துவம் முதல் ஈசுவர தத்துவம் வரை நான்கு தத்துவங்கள் தொழிற்படும்.

சாக்கிர சுழுத்தியில் சிவ தத்துவம் முதல் சாதாக்கிய தத்துவம் வரையிலும், சாக்கிர துரியத்தில் சிவ தத்துவமும், சத்தி தத்துவம் என இரண்டு தத்துவங்கள் மட்டும் செயல்படும். சாக்கிர துரியாதீதத்தில் சிவ தத்துவம் மட்டும் தொழிற்படும்.

ஐந்து முகமுள்ள திருவிளக்கு ஒவ்வொன்றாய்ப் பொருத்தப்படுவது இதற்கு ஒப்பாகும் என்பார் மதுரை சிவப்பிரகாசர்.[25] சகல கேவலத்தில் அதாவது கேவல சாக்கிரத்தில் கூறியதைப் போல அசுத்த மாயா கருவிகள் கூடுதல், பிரிதல் இங்கு இல்லை. சுத்த தத்துவங்கள் கலை முதலியவற்றைச் செயல்படுத்தும்போது சத்தி மடங்குவதே காரணமாகும்.

"வைத்த பண்டத்தை மறந்தவன் அது காணாதபோது பிராண வாயு இயங்காமல் மூர்ச்சித்த அவதரம் சாக்கிர துரியாதீதம்; பிராண வாயு இயங்கத் தக்கதாகப் பெருமூச்செறிந்து விசாரித்தறிவோம் என நின்ற அவதரம் துரியம்; அவ்விடத்திற்குச் சென்றோம் என்ற நினைவு எழுந்த அவதரம் சுழுத்தி; அவ்விடத்தில் அன்றோ வைத்தோம் என விசாரப்பட்டு அறிந்த அவதரம் சொப்பனம்; அப் பண்டம் வைத்த இடத்திலே சென்று கண்டது சாக்கிரமாகும்" என சாக்கிர அவத்தை நிலைக்கு உதாரணம் கூறி விளக்குவார் மதுரை சிவப்பிரகாசர்[26] இதற்கு ஓர் வெண்பாவைத் தனது உரையில் எடுத்துக் காட்டுகின்றார் இலக்கண சிதம்பரநாத முனிவர்:

"விரும்பும் அரும்பொருளை வீழ்ந்து மயங்கல்,
இரிந்த அனிலன் பெறுகை, - வருந்தறிவு
தோன்றுதல், ஐயம், விழுந்தலிடம் தோன்றுதல், என்று
ஆன்ற ஐந்தும் சாக்கிரத்தின் ஆம்" [27]

சுத்த ஐந்தவத்தை

சாக்கிராதி அவத்தையில் ஆன்மா கீழ் நோக்கி ஒடுங்கும் முறை பிறவிக்கு வித்தாகும். மேல் நோக்கிச் செல்லும் முறை பிறப்பினை அறுத்திடும்.

"இருவகை சாக்கிராதி அவத்தைகள் இயல்புதானும்
ஒருவகை கீழே நூக்கி உற்பவம் காட்டும்; ஒன்று
பெருகமேல் நோக்கித் தீய பிறப்பு அறுத்திடும்!" [28]

என்பது சிவஞான சித்தியார்.

"இவ்வகை அவத்தை தன்னில்
எய்திடும் கரணம் எல்லாம்
மெய்வகை இடத்தில் உற்று
மேவுமா கண்டு மிக்க
பொய்வகைப் பவம் அகற்றப்
புரிந்திடில் அருளால் ஆங்கே
ஐவகை அவத்தை உய்க்கும்
அறிவினால் அறிந்து கொள்ளே" *(சிவ.61)*

"அவத்தைகளில் பொருந்திய கருவிகள் கூடிக் குறைந்து பொருந்தும் விதத்தை அநுபவித்துப் பார்த்து, பிறவியைப் போக்க அருளை முன்னிட்டுச் சாதனம் செய்தால், அவ் வருள் ஆன்மாவை மேலாலவத்தையாகிய சுத்த அவத்தைகளில் செலுத்தும். இதனை உபதேசத்தால் அறிந்து கொள்ள வேண்டும்" என்று சிவப்பிரகாசம் சாக்கிர அவத்தையிலிருந்து சுத்த அவத்தைக்குச் செல்லும் நிலையைக் குறிக்கிறது.

“நதிநே பூஜயேத் தேவம் ராத்ரௌ நைவச நைவச|
சந்ததம் பூஜயேத் தேவம் திவாராத்ரௌச வர்ஜயேத்||”

“பகல் எனப்படும் சகலா அவத்தையில் சிவனை வழிபடற்க; இரவு எனப்படும் கேவல அவத்தையில் அவரை வழிபடற்க; பின் கேவல, சகலமொழிந்து எஞ்ஞான்றும் சுத்தாவத்தையில் அவரை வழிபடுக” என்று சிவாகமம் கூறும்.[29]

கருவிகளும் புலன்களும் ஆன்மாவை மயக்காவண்ணம் ஒழித்து, மெய்யுணர்வில் செலுத்த வேண்டும். அதாவது நினைப்பு மறப்பு என்னும் சகல, கேவலம் தாக்காது சுத்த நிலையில் சிவனருட் சார்பில் ஆன்மாநிலைபெற்று நிற்றல் வேண்டும். இந்த சுத்தநிலையை விடாது பற்றிக் கொள்ள வேண்டும். அந் நிலையே முத்திக்கு வழியாகும் என்று வேதங்களும் ஆகமங்களும் உபதேசிக்கும்.

“நித்திரையும் பராக்கினையும் நீக்கிச் சுத்தம்
ஒரு நிலையும் நீங்காமல் நிறுத்திக் கொண்டால்,
சித்தமொரு பொருளினையுஞ் சேரா தாகிச்
சேரும்வகை சேராமற் செல்ல நின்று
மத்தமன முதலான அவத்தை ஒன்று
மருவாத வகைநிற்கும் அதுவே யாகும்
முத்திநெறி என்று மறை இடைவிடாது
முறையிடவும் ஆக ஆகமங்கள் மொழியுங்காணே”

என்று தேவி காலோத்தர ஆகமம் கூறும். இங்கு நித்திரை என்பது சகலத்தில் கேவலமாகும்; பராக்கு என்பது சகலத்தில் சாக்கிரமாகும்.[30]

“பிறிவிலா ஞானத்தோரும் பிறப்புஅற அருளால் ஆங்கே
குறியொடும் அஞ்சு அவத்தை கூடுவர் வீடு கூட” [31]

என வரும் சித்தியார், ‘கேவலம், சகலம் நீங்கிய மெய்ஞ்ஞானத்தை அறிந்தோரும் வீடு பெறற்பொருட்டு சுத்த அவத்தைகளைக் கூடுவர்’ என்று உரைக்கும்.

பக்குவ ஆன்மாக்கள் சகல நிலையில் வாழும்போதே கருவிகளின் தொடர்பு நீங்கித் திருவருளோடு ஒன்றியிருப்பார்கள். அவரெல்லாம் சகலநிலையில் உள்ளபோதே சுத்த நிலை எய்தினோர் ஆவர்.

திருவருளைச் சிறிது சிறிதாக உணர்ந்து அதில் அழுந்துதலும் முடிவில் சிவத்தின்கண் அழுந்துதலுமே சுத்த அவத்தை நிலையாகும்.

இது சுத்த சாக்கிரம், சுத்த சொப்பனம், சுத்த சுழுத்தி, சுத்த துரியம், சுத்த துரியாதீதம் என ஐவகையாய்க் கூறப்பெறும். நின்மலம் என்று அடைகொடுத்து இவற்றை வழங்குதலும் உண்டு.

அருளால் தன்னை அறிவது நின்மல சாக்கிரம்; அருளால் தன்னை அறிந்தபின், தனக்கொரு தொழிலின்றி அவ்வருளே தனக்கு நிலைக்களமாய் அதிலே தான் அசைவற நின்று அதனைக் காண்பது நின்மல சொப்பனம்; ஆருயிரின் அன்பு, அறிவு, ஆள்வினைகள் தோன்றாது, அவ்வருளே தானாகி எதிரீடு சிறிதுமின்றி யிருக்கும் நிலையே நின்மல சுழுத்தி; திருவருளில் அழுந்தும் நிலை நின்மல துரியம்; சிவத்தில் அழுந்தும் நிலை நின்மல துரியாதீதம்.[32] இதில் தத்துவக் கருவிகள் கூடுதல், பிரிதல் இல்லை. ஆன்மாவின் அறிவு, அருளுடன் கூடுவதால் நிகழ்வது. இவையனைத்தும் தசகாரியத்துள் வைத்து விளக்கப்படும்.

இச் சுத்தநிலை, மலையின்கண் ஞாயிறு வீழும் அந்திக் காலத்துச் செவ்வொளி போலவும், அருணோதயம் போலவும் தோன்றும். இதனைப் பெரியோர் இராப்பகலற்ற இடம் என்றும், நினைப்பும் மறப்பும் இல்லா இடம் என்றும், இறப்பும் பிறப்பும் இல்லாத இடம் என்றும் புகல்வர் என்பதை,

"............................ சுத்தம்
அதனை உரைத்திடின் மலைவாய்க் கதிர்வீழ் காலம்போல்
தூய அருணோதயம் போல் தோன்றுமிதைப் பெரியோர்
துன்னும் இராப்பகலற்ற இடமென்றும் மறப்பும்
மேயநினைப்பும் இல்லா இடமென்றும் இறப்பும்
மிகுபிறப்பும் இல்லாத இடமென்றும் புகல்வார்" [33]

என்று பஞ்சதிகார விளக்கத்தில், போரூர் சிதம்பர சுவாமிகள் குறித்திடுவர்.

அடிக்குறிப்புகள்

1. சி.அருணை வடிவேலு முதலியார், 8ஆம் தந்திரம், பக்.371, 372
2. ஆ.ஆனந்தராசன், சிவஞான போத வழித்துணை விளக்கம், ப.135
3. ர.வையாபுரி, கச்சியப்ப முனிவரின் சைவ சித்தாந்தம், பாகம் - 2, ப.632
4. சி.அருணை வடிவேலு முதலியார், சிவஞான மாபாடிய பொருள்நிலை விளக்கம், பக்.534, 535
5. வராஹோபநிஷத்து, 1:2
6. ஆ.ஆனந்தராசன், மு.கா.நூ., ப.133
7. தாயுமானவர், ஆசையெனும் 24, பா.25, 26
8. சி.சு.மணி (உ.ஆ) சிவஞான சித்தியார், ப.243
9. சிவஞான சித்தியார், 222
10. சதமணிக் கோவை, 72.
11. இலக்கணம் சிதம்பரநாத முனிவர், (உ.ஆ) சிவப்பிரகாசம், பக்.116, 117
12. ஆ.ஆனந்தராசன், மு.கா.நூ., ப.140

13. சி.அருணைவடிவேல் முதலியார், மு.கா.நூ., பக். 380, 381
14. K.Balasubramania Sastrigal. Pauskaragambhasya - Sangraha, Umapathi contribution to Saivism, p.p. 129, 130
15. போற்றிப் பஃறொடை, வரி: 53-65
16. சிவஞான முனிவர், சிவஞான பாடியம், ப.370
17. T.B. Siddalingaiah, Saiva Siddhanta, p.335
18. சிவஞான முனிவர், மு.கா.நூ., ப.369
19. சி.அருணை வடிவேலு முதலியார், மு.கா.நூ., ப.537
20. சதமணிக் கோவை, 73
21. சிவஞான முனிவர், மு.கா.நூ., ப.366
22. சி.அருணை வடிவேலு முதலியார், மு.கா.நூ., ப.539
23. ஆ.ஆனந்தராசன், மு.கா.நூ., ப.134
24. சி.அருணைவடிவேலு முதலியார், மு.கா.நூ., ப.541
25. மதுரைச் சிவப்பிரகாசர் (உ.ஆ.), சிவப்பிரகாசம், ப.218.
26. மேலது, ப.216.
27. இலக்கணம் சிதம்பரநாத முனிவர், மு.கா.நூ., ப.118.
28. சிவஞான சித்தியார், 224.
29. காசிவாசி செந்திநாதையர், சிவஞானபோத வசனாலங்கார தீபம், ப.139.
30. தேவி காலோத்தர ஆகமம், 31.
31. சிவஞான சித்தியார், 225:3,4.
32. மதுரைச் சிவப்பிரகாசர், மு.கா.நூ., ப.218.
33. போரூர் சிதம்பர சுவாமிகள், பஞ்சதிகாரவிளக்கம், 37.

5.3 உணர்த்தும் முறைமை

அவத்தைகளைப் பற்றி விரிவாகக் கூறிய சிவப்பிரகாசம் சிவத்தின் சித்சத்தி எவ்வாறு ஆன்மாவிற்கு உதவுகிறது என்பதைப்பற்றி விளக்குகிறது.

'உணர்த்தும் முறைமை சகலம்' என்ற "மாசகல"த்தில் தொண்ணூற்று ஆறு கருவிகளும் செயல்படும். எனினும் அதில் எந்த எந்த விடயம் பற்றி அறிவும் அநுபவமும் நிகழ வேண்டுமோ அதற்குத் தேவையான கருவிகள் மட்டுமே செயல்படும்.[1]

இன்றியமையாத கருவிகள்

ஆன்மா ஒரு விடயத்தை அறிய வேண்டுமானால் பொறி, பூதம், அந்தக்கரணம், கலாதிகள் ஆகியவற்றோடு கூடியே அறிதல் இயலும். ஐம்பொறிகளுள் ஒன்றும், அதற்குத் துணையாக நிற்கும் பூதம் ஒன்றும், மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்னும் அந்தக் கரணங்கள் நான்கும், எப்பொழுதும் ஆன்மாவை விட்டுப் பிரியாத காலம், நியதி, கலை, வித்தை, அராகம் என்ற கலாதிகள் ஐந்தும் ஆகப் பதினொன்றும் கூடியே ஆன்மா பொருள்களை அறிவதற்கும் அவற்றை நுகர்வதற்கும் துணை செய்யும். தனியே இப் பதினொரு கருவிகளுள் ஒரு கருவி குறைந்தாலும் ஆன்மா பொருளை அறிவதில்லை. மேலும், இறைவனின் சித்சத்தி இக் கருவிகளுடன் இணைந்து செயல்படாமல் ஆன்மா ஒரு பொருளையும் அறிய இயலாது என்பதை,

"மருவிய பொறியில் ஒன்றும்
 மாபூதம் ஐந்தில் ஒன்றும்
கருவிகள் நான்கும் நீங்காக்
 கலாதிகள் ஐந்தும் கூடி
ஒருபுலன் நுகரும் இந்த
 ஒழுங்கு ஒழிந்து உயிரும் ஒன்றைத்
தெரிவுறாது அவன் ஒழிந்துஅத்
 திரள்களும் செயல் இலாவே" (சிவ.63)

என்னும் சிவப்பிரகாசப் பாடல் மூலம் அறியலாம். இதனைப் பின்வருமாறு விளக்கலாம்:

காலம், நியதி, கலை, வித்தை, அராகம் (நீங்காக் கலாதிகள்)
+
மனம், புத்தி, அகங்காரம், சித்தம் (அந்தக்கரணங்கள்)
+
செவி, மெய், கண், நாக்கு, மூக்கு (ஞானேந்திரியங்கள்)
↓ ↓ ↓ ↓ ↓
ஆகாயம், வாயு, தீ, நீர், நிலம் (ஐம்பூதங்கள்)
+
இறைவனின் சித்சத்தி.

ஞானேந்திரியமான கண் என்ற பொறி ஒன்றும், அதற்குரிய ஐம்பூதமான நெருப்பு என்ற பூதம் ஒன்றும், அந்தக்கரணங்கள் நான்கும், நீங்காக் கலாதிகள் ஐந்தும் இணைந்து பதினொரு கருவிகள் செயல்படுகின்றன. இதைப்போலவே ஒவ்வொரு இந்திரியமும் அதற்குரிய பூதமும் என்ற வகையில் கணக்கிட்டுக் கொள்ள வேண்டும். ஒரு புலனின் நுகர்வுக்கு இந்த ஒழுங்கே துணையாகும்.

அறிவுக்கு வாயிலாக இருக்கின்ற இந்திரியங்கள் அறிவற்ற சடப் பொருள்கள். ஆன்மா சிற்றறிவு உடையது. அது தானாகவே சென்று கருவிகளைச் சேராது என்றும், ஆன்மா உணர்கின்ற தன்மை - சார்ந்ததன் வண்ணமாம் தன்மை உடையது என்றும் ஆன்ம இலக்கணத்திலும், கருவிகள் கூடுவதாலும், குறைவதாலும் ஆன்மா அறிவு பெறுகிறது என்று அவத்தை நிலையிலும் சொல்லப்பட்டன.

தத்துவ வன்ன ரூபன்

மிகவும் நுண்ணியனவாய் உள்ள கலை முதலிய தத்துவங்க ('பர சரீரம்' எனப்படுவதால்) ளைச் சார்ந்து நிற்கின்ற ஆன்மாவை, **'அரூப சொரூபி'** என்று சிவஞான போதம் சொல்லும்.[2] 'அரூபம்' என்றது இங்கு தத்துவங்களைக் குறிக்கும். இதனை, தான் சார்ந்த தத்துவ வன்னத்தை ஆன்மா தன் வண்ணமாகக் கொண்டு நிற்பதால் ***'தத்துவ வன்ன ரூபன்'*** (சிவ.64) என்று சிவப்பிரகாசம் குறிப்பிடும்.

ஆன்மாவின் அறிவு, பிறிதொரு சித்துப் பொருள் (சிவன்) அறிவிக்க அறியும் அறிவு ஆகும். அவ்வாறு அறியுங்கால் அறியப்படும் பொருளில் ஆன்மா அழுந்தி, அதன் தன்மையதாகி அறிவது. அதனால், ஆன்மாவின் அறிவு, தன்னியல்பில் நின்று அறிகின்ற இறைவனின் **'சுதந்தர அறிவு'** அன்று; **'பரதந்திர அறிவு'** ஆகும்.

தனக்கென்று சுதந்தர அறிவு இல்லாத ஆன்மா, தானாகவே தத்துவங்களை அறிந்து அவற்றோடு சேராது. அதுபோலவே அறிவில்லாத (சடமான) தத்துவங்கள் தாமாகவே ஆன்மாவிடம் சென்று சேரமாட்டா. எனவே, தத்துவ வன்ன ரூபமான ஆன்மா, தனக்கென்று சுதந்தர அறிவு கொண்ட சிவனால்தான் இவ் வெல்லாத் தத்துவங்களையும் அறிந்து அனுபவிக்க இயலும்.

“தனக்கென அறிவு இலாதான்,
தான் இவை அறிந்து சாரான்;
தனக்கென அறிவு இலாத
வாயில்தான் அறியாது சாரா
தனக்கென அறிவிலாதான்
தத்துவ வன்ன ரூபன்
தனக்கென அறிவானால்இச்
சகலமும் நுகரும் தானே (சிவ.64)

இச் சிவப்பிரகாசத்தில் காணப்படும் ‘தனக்கென அறிவிலாதான்’, ‘தத்துவ வன்ன ரூபன்’ என்னும் இரண்டு தொடர்கள் ஆன்மாவையும், ‘தனக்கென அறிவிலாத வாயில்’ என்பது பாச தத்துவங்களையும், ‘தனக்கென அறிவான்’ என்பது இறைவனையும் குறிக்கின்றன. ‘தனக்கென அறிவானால்’ என்பது தனக்கு ஒருவர் அறிவிக்காமல் தானே அறிவானாகிய இறைவன் என்றும், ‘தனக்கென அறியானால்’ என்று பாடபேதமாகக் கொண்டால், முற்றறிவுடைய இறைவன் தனக்கென அறிய வேண்டுவது ஒன்றும் இல்லாத, பதிப் பொருள் என்று பொருள் கொள்ளலாம்.[3]

“அறிவிப்பவன் ஒருவன் இருந்து அறிவித்தால் அன்றி, அறிபவன் தானே அறிந்து பெற்ற அறிவாக எந்த அறிவையும் அறிகின்றிலம்” என்பதை,

“அறிவான் இருந்து அங்கு அறிவிக்கினல்லால்
அறிவான் அறிந்த அறிவு அறியோமே” [4]

என்று திருமந்திரம் கூறும்.

“நீயுணர்த்த நான் உணரும் நேசத்தாலோ அறிவென்றே
எனக்கோர் நாமம் இட்டதே” [5]

என்று தாயுமானவரும்,

“எந்தை நீ அருளிச் செய்யாது
நான் செய்வதென்னே” [6]

என்று திருநாவுக்கரசரும்,

“பதியறிவித்தால் அறிந்து நிற்பது பசுவது[7]

என்று கச்சியப்பரும், ‘ஆன்மாவின் அறிவை அறிவித்து நிற்பது இறைவன்தான்’ என்று போற்றுகின்றனர்.

“அறியும் அறிவே அறிவு அறிய நிற்கும்
பொறியும் பொருளும் பொருந்தச் - செறியுமரன்

காட்டிய வாறென்னக் கருதி அறிவதனை
ஈட்டிய வாறன்றோ இயல்பு"[8]

என்று 'உபாய நிட்டை'யில் அம்பலவாண தேசிகர் குறிப்பர்.

ஆன்மா கருத்தா அல்ல

'விடயங்களை அறிய விழையும் ஆன்மா ஞானேந்திரியங்களைப் பொருந்தும் வண்ணம் அதனோடு பொருந்தி விளங்குவான் சிவபெருமான். எனவே, ஆன்மா பொறிகளின் துணைக்கொண்டு எந்த ஒரு விடயத்தையும் குறித்துப் பெற்ற அறிவானது, சிவபெருமான் உணர்த்திய கருணையால் கிடைத்ததாகும் என உணர்ந்து அவனை வழிபட்டு இருப்பதே ஆன்மாவுக்குரிய இயல்பாகும்" என்பர்.[9]

ஆன்மா பொறிகளைச் சார்ந்து விடய அறிவைப் பெறும்பொருட்டு, இறைவன் ஆன்ம அறிவிலும், பொறிகள் மற்றும் விடயங்களிலும் கலந்து விளங்குவான். இதனை,

". . . . . ஈசன்தானும்
செவ்விதினில் உளம்புகுந்து செய்தியெலாம் உணர்ந்து
சேட்டிப்பித்து எங்குமாய்ச் செறிந்து நிற்பன்"[10]

என்பது சிவஞான சித்தியாரில், அருள் நந்தி சிவம் தரும் விளக்கமாகும்.

ஆன்மா, சிவஞானத்தைக் கொண்டு விடயங்களை அறியும் என்று சொன்னால் அங்ஙனம் கொண்டு அறிகின்ற ஆன்மாவே கருத்தா (முதன்மை) ஆகும். ஆன்மாவுக்காக சிவஞானம் தங்கி அறியும் என்று சொன்னால் பசியால் உண்ண விரும்பியவனுக்காக இன்னொருவர் உண்பது போலாகும்.

"கண்டறி புலன்கள் காணும்
கருத்தினால் ஒருத்தன் ஞர்னம்
கொண்டு உளம் அறியும் என்னில்
கொள்பவன் முதலி யாகும்
மண்டிய உணர்வு உயிர்க்கா
மன்னி நின்றறியும் என்னில்
உண்டிட வேண்டு வானுக்கு
ஒருவன் வேறுஉண்ட லாமே." (சிவ.65)

ஐம்புலன்களையும் கருவிகளாகப் பயன்படுத்தி அவற்றின் மூலம் உலகியல் பொருள்களை ஆன்மா அறிந்தும் துய்த்தும் வருகிறது. இந்நிலையில் ஆன்மாவிற்கே முதன்மை உள்ளது. சிவஞானம் என்ற பேரறிவைக் கொண்டு ஆன்மா அறிகிறது என்றால், இங்கேயும் முதன்மை ஆன்மாவிற்கே உரியதாகிறது. இஃது உலகியல் ஆகும். என்றாலும் இக் கருத்துகள் பொருந்தா. பேரறிவாளனாகிய இறைவன் அறிவிக்க அந்த அருட்கொடையினாலே சிற்றறிவு உடைய ஆன்மா அறிகிறது என்று

கொள்ளுவதே பொருந்தும். இவ்வாறு கொள்ளும்போது முதன்மை இறைவனுக்கும், சார்பு நிலைமை ஆன்மாவிற்கும் உள்ளதாகும்.

மேலும், இறைவன் ஆன்மாவின் பொருட்டு அறிகிறான் என்று சொன்னால், பசித்தவன் ஒருவன் இருக்க அவன் பசியை ஆற்றும் பொருட்டு மற்றொருவன் உண்பான் என்பது போன்றதாகும். அறியாமையிலிருந்து படிமுறையிலே அறிந்தும் துய்த்தும் வீடுபேறு அடைய வேண்டிய ஆன்மா அழுந்தி அறியாது எனில், அதனால் வரும் பயனைப் பெறுவதில்லை. சிற்றறிவுடைய ஆன்மா, முற்றறிவுடைய இறைவன் அறிவிக்க அறியும். இறைவனின் அறிவைத் தனக்கென ஆன்மா பயன்படுத்தும் என்பதும், அறிவற்ற ஆன்மாவிற்காக இறைவன் அறிவான் என்பதும் இங்கு மறுக்கப்பட்டன.

"அவனரு ளாலே அவன்தாள் வணங்கி" [11]

எனவரும் திருவாசகமும்,

"காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக் காலே" [12]

எனவரும் திருநாவுக்கரசர் தேவாரமும் இங்கு நினைவில் கொள்ளத்தக்கன.

"அறிவானும் தானே; அறிவிப்பான் தானே;
அறிவாய் அறிகின்றான் தானே"

"அறிவான் - உயிர்களுக்கு அறிவிக்கப்பாலனவற்றை அறிபவன்; அறிவிப்பான் - அறிந்தாவாறே அறிவிப்பவன்; அறிவாய் அறிகின்றான் - அறிவித்தபின் அவ்வாற்றால் உயிர்கள் அறியும்பொழுது தானும் அவற்றது அறிவோடு உடன் நின்று அறிகின்றவன்" என்பது காரைக்காலம்மையாரின் அற்புதத் திருவந்தாதி.[13]

இறைவன் செய்வதை ஆன்மா அறியாது

சிவன் சீவனுக்கு அறிவிக்கச் செய்வதை அறியாமல் ஆன்மாக்கள், 'நான் செய்தேன்', 'பிறர் செய்தார்' என்று பிதற்றுகின்றன. சூரியன் உதித்து இருளை அறவே ஓட்டலும், இரவில் தேடிய பொருளின் இருப்பை மனிதர் சூரியன் உதவியால் கண்டும் அவ் வுதவியை மறந்து இருப்பதுபோல, ஆன்மா, ஆணவம் முதலியவற்றால் தனக்குள் செயல்படும் திருவருளை அறியாமல் தானாக அறிவதுபோல மயங்கிக் கிடக்கின்றன.

"இருள்நனி இரவி தான்வந்து
இரித்தலும் இரவில் எண்ணும்
பொருள்நிலை கண்டு மாந்தர்
பொருந்திடு மாறு போல
மருள்நிலை எங்கும் நீங்க
மகிழ்ந்து உயிர் தன்னுள் மன்னும்

அருளையும் ஒழிய ஞாலத்து
அறிந்தவாறு அறியும் அன்றே" (சிவ.66)

"உலகவர் கதிரவன் துணையால் அறிதலும் செய்தலும் உடையரேனும் யாமே அறிந்தோம் யாமே செய்தோம் என்றிருப்பர். அவ்வாறே உயிர்களும் இறைவனது சிற்சத்தி சகாயத்தால் அறிதலும் செய்தலும் உடையரேனும் 'யாமே அறிந்தோம்', 'யாமே செய்தோம்' என்று அவ் வினைகளின் பயனை நுகரும்'' என்னும் காஞ்சி ஞானப்ரகாச சுவாமிகளின் உரை இங்கு நினைக்கத்தக்கதாம்.[14]

இவ் உவமையால் ஞாயிற்றின் வரவால், இருள் நீங்குவதும், இருள் நீக்கத்தால் பொருள்களின் காட்சியும், அக்காட்சியால் மாந்தர் அவற்றைக் கண்டு வாழ்வதும் முறையே அருளின் துணையால் அறியாமை நீக்கமும், அதனால் உலகத்துப் பொருள்கள்மீது கொண்ட ஆன்மாவின் விருப்பமும், அதனால் உபகரிக்கும் திருவருளை மறந்து தான் என மயங்குதலும் பொருத்திக் காட்டப்பட்டன.

ஞாயிற்றின் ஒளிபோல இறைவனின் திருவருள் ஆன்மாவிற்கு உதவும் தன்மையும், தான் மாறுதல் அடையாது (அவிகாரி) நின்றே ஆன்மாக்களையும் உலகத்தையும் செயல்படுத்தும் ஆற்றலும் குறிப்பாக உணர்த்தப்பட்டன. அவன் அருளையன்றித் தனக்கெனச் சுதந்தரமான அறிவும் விருப்பும் செயலும் இல்லையென்றும் உண்மையை அறியாத ஆன்மா, சிவனை இழந்து நிற்கும் முறைமையை இன்னொரு எடுத்துக்காட்டால் விளக்குகிறது சிவப்பிரகாசம் :

"அறிந்திடும் மனாதி வாயில்
ஆனவை அவன் தனாலே
அறிந்திடும் என்றும் ஒன்றும்
அறிந்திடா அவைபோல் யாவும்
அறிந்திடும் அறியும் தன்மை
அறிந்திடா கன்மத் தொன்மை
அறிந்து அவைநுகரு மாறும்
அருளுவன் அமலன் தானே" (சிவ.67)

மனம் முதலிய அந்தக்கரணங்களும், மெய்முதலிய ஐம்பொறிகளும் ஆன்ம சிற்சத்தி சேர்தலாலே பொருள்களை அறிந்திடுகின்றன. அறிந்தும் நாம் ஆன்மாவால் அறிகின்றோம் என எதுவும் எப்பொழுதும் அறிந்திடுவதில்லை; தம்மையும் அறிவதில்லை. அவ்வாறே ஆன்மாக்களும் பெத்தம், முத்தி இரண்டிலும் சிவ சிற்சத்தி உபகாரத்தாலேயே அறிந்து வருகின்றன. ஆனால் அவ் வான்மாக்கள் தாம் அறிந்து வரும் முறைமையையும், தாமே அறியும் சுதந்திரம் இல்லாமையையும் அறியமாட்டா. இறைவன் பழவினைகளை அறிந்து அறிவித்தலாலும், மலபரிபாகம் வரும்பொருட்டு நுகர்வித்தலாலும் ஆன்மாக்கள் அவ் வினைப்பயன்களை நுகர்கின்றன.

“பொறிபுலன் கரணம் எல்லாம் புருடனால் அறிந்தான்மாவை
அறிதரா அவையேபோல ஆன்மாக்கள் அனைத்தும் எங்கும்
செறிதரும் சிவன்தனாலே அறிந்திடும் சிவனைக் காணா
அறிதரும் சிவனே எல்லாம் அறிந்து அறிவித்தும் நிற்பன்” [15]

என்னும் சித்தியார் பாடலோடு, மேற்கண்ட சிவப்பிரகாசம் வரியடையளவில் ஒப்பு நோக்கத்தகும். இப் பாடலுக்குப் பொழிப்புரையாக மாதவச் சிவஞான முனிவர், “தன்னை அறியமாட்டாத பொறி முதலியவற்றைத் தானறிந்து அறிவித்து உடன் நிற்கும் புருடன்; அதுபோலத் தன்னை அறியமாட்டாத அப் புருடனை அறிந்து அறிவித்து உடன் நிற்பது சிவம்” என்றருளிச் செய்தார்.[16]

“விளம்பிய உள்ளத்து மெய் வாய் கண் மூக்கு
அளந்தறிந்து அறியா; ஆங்கு அவை போலத்
தாம் தம் உணர்வின் தமியருள்” [17]

என வரும் சிவஞான போதம் ஐந்தாம் நூற்பாவும் குறிக்கத்தக்கது.

ஆன்மாவின் அறிவு வேறுபாடு

இறைவனே உணர்த்துவான் எனில் ஈண்டு அறிவுகள் யாவர்க்கும் ஒரு பெற்றியவாம். ஆனால், ஒவ்வொரு ஆன்மாவிற்கும் ஏற்றத் தாழ்வுகளாய் அறிவு நிகழ்வதற்குக் காரணம் அந்த அந்த ஆன்மாக்களின் கன்ம பக்குவத்திற்கு ஈடான பலனைத் தருதலாகும்,

“இறைவனே அறிவிப்பானேல் ஈண்டு அறிவு எவர்க்கும் ஒக்கும்
குறைவு அதிகங்கள்....
அறைதரு தத்தம் கன்மத்து அளவனுக்கு அளிப்பன் ஆதி” [18]

என்று சித்தியார் உரைக்கும்.

எனவே, ஆன்மாக்களின் பக்குவ நிலைகள் அவ்வவற்றின் கன்மங்களுக்கேற்ப வேறுபடும்.

இறைவன்தான் தத்துவங்களை ஆன்மாக்களின் பொருட்டுச் சேர்த்து நுகர்வைச் செய்விப்பான் என்னும் பேருண்மை இதனால் புலனாகிறது.

உலகப் படைப்பின் தொடக்கத்தில் இருந்து, ஆன்மா செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் இறைவனின் உதவி தேவைப்படுகிறது. ஆகையால் இறைவன் (சிவன்) கொடுப்பவன்; ஆன்மா பெறுபவன் என்னும் நிலையை நன்குணரலாம்.

அடிக்குறிப்புகள்

1. ர.வையாபுரி, கச்சியப்ப முனிவரின் சைவ சித்தாந்தம், பாகம் –3, ப.658.
2. சிவஞான போதம், நான்காம் நூற்பா, மூன்றாம் அதிகரணம், ஏது.

3. சி.சு.மணி (உ.ஆ.), சிவப்பிரகாசம், ப.90.
4. திருமந்திரம், 2542.
5. தாயுமானவர், உடல் பொய்யுறவு, 4
6. திருநாவுக்கரசர், 4:23:4
7. தணிகைப்புராணம், நந்தி உபதேசப்படலம், 91
8. அம்பலவாணதேசிகர், உபாயநிட்டை, 20.
9. குஞ்சிதபாதம் (உ.ஆ.), உபாயநிட்டை, ப.18.
10. சிவஞான சித்தியார், 316
11. திருவாசகம், 8:1:18
12. திருநாவுக்கரசர், 6:95:3
13. சி.அருணைவடிவேல் முதலியார், அற்புதத் திருவந்தாதி, 11ஆம் திருமுறை, ப.40.
14. காஞ்சி ஞானப்ரகாச சுவாமிகள் (உ.ஆ.), சிவப்பிரகாசம், ப.130.
15. சிவஞான சித்தியார், 231.
16. சிவஞான சுவாமிகள், சிவஞான சித்தியார் சுபக்கம், ப.203.
17. சிவஞான போதம், நூற்பா.5.
18. சிவஞான சித்தியார், 232

5.4 ஞான வாய்மை

ஆணவ மலச் சார்பினால் ஆன்மாவின் அறிவு பொருள்களின் உண்மை இயல்பை உள்ளவாறு உணரவொட்டாது தவறாகவும், ஐயமாகவும் உணரும். இவ்வாறு ஒரு பொருள் இயல்பை உணர்தல் அஞ்ஞானமாகும். அஞ்ஞானத்தின் வசப்பட்டிருக்கும் கட்டு நிலையிலிருந்து விடுபடுவதற்கு வழி, அப் பொருள் இயல்பை உணர்வதற்குரிய, மெய்யுணர்வாகிய ஞானத்தைப் பெறுதலேயாகும். பசுவாகிய ஆன்மா தன்னியல்பையும், தனக்கு வேறாகிய பாசத்தின் இயல்பையும், தனக்கு உறவாகிய பதியின் இயல்பையும் உள்ளவாறு உணரும்போதே அது பாசத்தை விட்டுப் பதியினைச் சேரும். அந் நிலையே முத்திநிலை ஆகும்.[1] ஆகையால் ஆன்மா இம் முத்திநிலை அடைவதற்கு உதவும் ஒப்பற்ற சாதனம் ஞானமே யாகும்.

ஞானமாவது, ஞானாசிரியர் உணர்த்தியதை உணர்த்தியவாறே உணரும் அறிவு. “பொருளல்லவற்றைப் பொருள் என்று உணரும்” திரிபுணர்வும், “கூறுகின்ற பொருள்களுள் யாது மெய் என நிகழும்” ஐயவுணர்வும் இன்றித் தெற்றென விளங்கும் உணர்வே ஞானமாகும். எனவே, இத்தகைய ஞானம் மெய்ப்பொருளாகிய இறைவனை அறியும் அறிவு என்பதால் ‘மெய்யுணர்வு’ என்றும், இறைவனைச் சைவம் ‘சிவம்’ எனக் கூறுவதால், ‘சிவ ஞானம்’ என்றும் அழைக்கப்படும்.

ஞானம் வரும் முறைமை

ஆன்மா உலகியல் பொருள்களை அறிவதற்கு உதவும் கருவி, கரணங்கள் இல்லையானால், அது கேவல நிலை அடைந்து விடயங்களைக் காண இயலாது. இறைவன் ஆன்மாக்களுக்குக் கருவி, கரணங்களைத் தந்த சகல நிலையில், ஆன்மா அவற்றின் உதவியால் உலகத்துப் பொருள்களை அறியமுடியுமே தவிர, மெய்ப்பொருளாகிய இறைவனை அறியும் சிவ ஞானத்தை அறிய இயலாது.

இந்த இரு நிலைகளிலும் ஆன்மாக்களால் இறைவனை அறிய முடியாது எனின், அவனை அறிவது எப்படி? முன்னைப் பிறவிகளிலே ஆன்மா செய்த தவத்தின் பயன் வந்து கூடும்போது, இறைவனே அருள்மேனி தாங்கி, இருவினை யொப்பு, மலபரிபாகம்

எய்திய பக்குவ ஆன்மாவின் முன் எழுந்தருளி வந்து கருவி, கரணங்களை நீக்கி, தன் திருவடியை அடையுமாறு ஞானத்தை வழங்கியருள்வான் என்று,

> "காட்டிடும் கரணம் ஒன்றும்
> இல்லையேல் காண ஒணாதாம்
> நாட்டிய இவற்றால் ஞானம்
> நணுகவும் ஒண்ணா முன்னம்
> ஈட்டிய தவத்தினாலே
> இறைஅருள் உருவாய் வந்து
> கூட்டிடும் இவற்றை நீக்கிக்
> குரைகழல் குறுகு மாறே" *(சிவ.68)*

என்னும் சிவப்பிரகாசப் பாடல் கூறும்.

இதனையே அருணகிரிநாதர்,

> "பகலிரவினில் தடுமாறா பதிகுருவெனத் தெளிபோத
> ரகசிய முரைத்து அநுபூதி ரதநிலை தனைத் தருவாயே"[2]

என்று திருப்புகழில் கூறுவர்.

முன்னம் ஈட்டிய தவம் என்பது முற் பிறவிகளிலே உண்மைச் சரியா, கிரியா, யோகங்களின் மூலமாக எய்திய தவமாகும்.

> "முன்புசெய்தவத்தின் ஈட்டம் முடிவிலா இன்பமான
> அன்பினை எடுத்துக்காட்ட அளவிலா ஆர்வம் பொங்கி"

என்று பெரிய புராணம், கண்ணப்ப நாயனார் வரலாற்றில் கூறுவது இதுவேயாகும்.

ஞானமே நன்னெறி

முற் பிறப்புகளில் சரியை, கிரியா, யோகங்களை முறையே செய்து முடித்தலால், அவை ஞானத்தைக் காட்டுமே அன்றி, நேரடியாக வீடுபேற்றைத் தருவன அல்ல.

> "கிரியை என மருவும் அவை யாவும் ஞானம்
> கிடைத்தற்கு நிமித்தம்" *(சிவ.10)*

எனச் சிவப்பிரகாசம் கூறும்.

ஞானமே வீடுபேற்றிற்கு ஏதுவாக அமையும். எனவே ஞானத்தை, 'நன்னெறி' என்று சிவஞான போதம் குறிப்பிடும். "நன்மை எனப்படுவனவற்றுள் எல்லாம் சிறந்த நன்மை எனப்படுவது வீடுபேறு என்ப. அதனைத் தலைப்படுவதற்கு ஏதுவாய்ச் சிறந்த நெறி ஆதலின், ஞானம் நன்னெறி எனப்பட்டது" என்று நன்னெறி எனப் பெயர் வழங்கிய காரணத்தைச் சிவஞான மாபாடியத்துள் மாதவச் சிவஞான முனிவர் குறித்திடுவார்.[3]

ஞானாசிரியர் தோன்றுதல்

சரியை, கிரியா, யோகங்களாகிய தவத்தைச் செய்து முடித்த முதிர்ச்சியினால் ஆன்மா பக்குவ நிலையடைய இருவினை ஒப்பும். சத்திநிபாதமும், மலபரிபாகமும் நிகழும். இம் மூன்றும் ஒருங்கே நிகழும் நிலையில் ஆன்மா பக்குவத்தை அடையும். இறைவன் தனக்கு உணர்த்தியதனை உணர்த்தியவாறு உணரும் தன்மையை ஆன்மா பெறும். இதுவே ஞானத்தை உணர்தற்கு ஏற்ற பருவம். இதனால் ஆன்மா ஞானத்தைப் பெறுதலில் வேட்கை கொண்டிருக்கும். அந்த ஆன்மாவிற்கு இதுகாறும் உள்நின்று பக்குவப்படுத்தி வந்த இறைவனே குருவாய் எழுந்தருளி வந்து உண்மை ஞானத்தை உணர்த்துவான். இதனை மெய்கண்ட தேவர்,

> **“இவ்வான்மாக்களுக்கு தமது முதல்தானே குருவுமாய் உணர்த்தும்”** [4]

என்று சிவஞான போதத்தில் அருளிச்செய்தார்.

பக்குவம் வராத பொழுது ஞானத்தை உணர்த்திடின் **‘மழக்கையிலங்கு பொற்கிண்ணம் போல’**[5] (மழவு - பசுங்குழவி) அது பயனில்லாமல் போகும். இனிப் பக்குவம் வந்தவுடன் ஞானத்தை உணர்த்தாதுவிடின் மீண்டும் பந்தத்திற்கு ஏதுவாகும். எனவே, ‘பக்குவத்தை அறிந்து வந்து ஞானத்தை உணர்த்துபவன் சிவனன்றிப் பிறர் அல்லர்’ என்பதை, உமாபதி சிவம்.

> **“அகத்துறு நோய்க்கு உள்ளினர் அன்றி அதனைச்**
> **சகத்தவரும் காண்பரோ தான்”** [6]

என்று திருவருட்பயனில் ‘அருளுரு நிலை’யாக விளக்கினார். அதாவது வீட்டில் உள்ளார்க்கு உற்ற நோயினது நிலையை அவ் வீட்டினுள் இருப்பவரே அறிவர்; மற்றவர் அறியமாட்டார். அதைப்போல உயிரின் அகத்துப் பொருந்திய அறியாமை நோயை இறைவனே அறிவான் என்பதாகும்.

இறைவன் ஞானத்தை உணர்த்துவான் என்றால், அவன் தன் இயற்கை வடிவில் தோன்றி அருளாது, நம்மனோர் போல மானுட வடிவில் தோன்றி அருள்வான். எனவே, இறைவனை, ‘அருளா வகையால் அருள் புரிய வந்த பொருள்’[7] என்று திருவருட்பயன் கூறுவது, “நேரே வந்து அருளாமல் குரு வடிவில் மறைந்து நின்று அருள் புரிவதற்கு வந்திருக்கின்ற சிவமாகிய முதற் பொருள்” என்னும் பொருளில் ஆகும்.

ஞானாசிரியரை ஆவேசித்து நிற்றல்

சிவன் குருவாக வந்து அருளும் நிலைகள் இரண்டு என்று சிவாகமங்கள் சொல்லும். ஒன்று, அதிட்டான பட்சம்; மற்றொன்று ஆவேச பட்சம்.

இறைவன் ஞான குரு அல்லாத ஏனைய உயிர்களிடத்து மறைந்து வேறாய் நிற்றல் பொதுவான அதிட்டான பட்சம். ஞான குருவினிடத்து விளங்கி ஒன்றாயும், பொருளின் தன்மையால் வேறாயும் நிற்றல் சிறப்பான அதிட்டான பட்சம். இந்தச் சிறப்பான அதிட்டானபட்சமே ஆவேச பட்சமாகக் கொள்ளப்படும்.[8]

பொதுவாக அதிட்டானபட்சம் பிறவற்றுக்குப் பொருந்தும்; ஞானத்திற்குப் பொருந்தாது. ஞான குருவின் உடல், உயிர் அனைத்திலும் சிவன் அவையேயாய் ஆவேசித்து நின்று ஞான தீக்கையைச் செய்வன்.

குரு என்பவர் மல மாசு தீர்ந்த தூய அறிவாகிய சுத்தான்மா ஆவார். அவர் 'நான்' என்னும் தற்போதம் சிறிதும் இல்லாதவர்; 'என் செயலென எதுவும் இல்லை; எல்லாம் அவன் செயலே' எனத் தெளிந்து தம்மை யிழந்து நிற்பவர். அத்தகைய சுத்தான்மாவிடத்தில் முதல்வன் தயிரில் நெய்போல் விளங்கி நின்று, அவரைத் தன்னுள் அடக்கித் தானேயாய் மேம்பட்டு நிற்பான்.[9]

பேய் பிடித்த ஒருவரது செயலெல்லாம் அவர் செயல் ஆகாது பேயின் செயலேயாதல் போல, சுத்தான்மாவாகிய குருவினிடத்தில் சிவன் ஆவேசித்து நின்று ஞானத்தை உணர்த்துதலாகிய செயலும், அவர் செயல் ஆகாது சிவன் செயலே ஆகின்றது.

"நஞ்செயலற்றிந்த நாமற்றபின் நாதன்
தன்செயல் தானே என்று உந்தீபற" [10]

என்றது திருவுந்தியார்.

பேய் எல்லாவற்றையும் பிடியாததுபோலச் சிவனும் எல்லா ஆன்மாக்களிடத்திலும் ஆவேசியான்; மலம் நீங்கிய சுத்தரிடத்திலேதான் ஆவேசிப்பான். 'சுத்தான்மா சைதன்னியம்' எனப்படும். இந்த ஆவேச பட்சத்தைக் குருஞான சம்பந்தர், தம் சொக்கநாத வெண்பாவில்,

"எரிசுடுவதல்லால் இரும்பு சுடுமோ" [11]

என்னும் உவமையால் விளக்கினார்.

பழுக்கக் காய்ந்த இரும்பை எடுத்து வைக்கோலின்மேல் வைத்தால் அந்த வைக்கோல் எரிந்து விடுகிறது. அப்போது வைக்கோலை எரித்தது இரும்பா, நெருப்பா என்பதுதான் கேள்வி. அதுபோலத்தான் 'ஞானகுரு ஒருவரால் மாணாக்கனது அறிவில் ஞானம் உதயமாயிற்று என்றால், அதனை உதிப்பித்தவர் நாம் நினைக்கின்ற மனிதரா சிவனா' என இங்கு ஆராய்ந்து உணர வேண்டும்.

'குருஞான சம்பந்தரது செய்கையால் ஆனந்த பரவசர் அப்பொழுதே இவ் வுலகத்தை மறந்துவிட்டார்' - என்றால் அவ்வாறு செய்தவர் குருஞான சம்பந்தரா? சிவனா? இதனின்றும் ஞான குருவின் அதீத நிலையை ஒருவாறு உணரமுடியும்.[12]

தாய்க்குத் தன் குழவியைக் கண்ட காலத்தில், தோன்றுகின்ற முலைப்பாலும் கண்ணீரும் அவள் அன்பேயாதல் போல, பக்குவத்தை உணர்ந்து ஞானத்தை உபதேசிக்கின்ற குரு சிவனே ஆவார்.

சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர் என்னும் மூவகை ஆன்மாக்களுள், சகலருக்கு ஞானத்தை உணர்த்தி அருள் செய்யும் முறையே, 'ஈட்டிய தவத்தினாலே

இறை அருள் உருவாய் வந்து... குரை கழல் குறுகுமாறே' என்று இச் சிவப்பிரகாசத்தால் குறிக்கப்பட்டது.

சகலருக்கு அருள் செய்யும் குருமூர்த்தியை, 'குறைவு இல் சகன்"[13] என்று சிவஞான போதம் போற்றும். "சகன் - உலகில் தோன்றி நிற்கும் உருவுடைய கடவுள்" என்பது பொருளாகும். எனவே, சகலர்க்குச் சகனாக அருள்புரிகின்றான் என்பதாம்.

ஞான குருவான மறைஞான சம்பந்தரை இறைவனாகப் போற்றிப் பாடும் போற்றிப் பஃறொடையில் உமாபதிசிவம்,

"இறவாத இன்பத்து எமை இருத்த வேண்டிப்
பிறவா முதல்வன் பிறந்து"[14]

என்று கூறுவர். பிறவா முதல்வன் பிறத்தலாவது, "பிறவாத பெரியோனாகிய இறைவனே, ஞான குருவை ஆவேசித்து எம் (உயிர்கள்) பொருட்டு பிறந்து வந்தான்" என்பதாகும்.

இச் செய்திகளை உள்ளடக்கி,

"..... பெத்த
மலபரிபாகம் வருமளவில் பன்னாள்
அலமருதல் கண்ணுற்று அருளி - உலவாது
அறிவுக்கு அறிவாகி அவ்வறிவுக்கு எட்டா
நெறியிற் செறிந்தநிலை நீங்கிப் - பிறியாக்
கருணை திருவுருவாய்க் காசினிக்கே தோன்றிக்
குருபரன் என்றுஓர் திருப்பேர் கொண்டு[15]

என்று குமரகுருபரர் கந்தர் கலிவெண்பாவில் பாடியருள்வார்.

ஞானாசிரியர் உபதேசம்

இறைவனே ஆன்மாவுக்கு ஞானாசிரியராக எழுந்தருளி முப்பொருள் இயல்புகளை அறிவுறுத்தி உபதேசம் செய்வான். இதனை,

"பத்தி பணித்துப் பரவும் அடிநல்கிச்
சுத்த உரையில் துரிசறச் சோதித்துச்
சத்தும் அசத்தும் சதசத்தும் காட்டலால்
சித்தம் இறையே சிவகுருவாமே"[16]

என வரும் திருமந்திரம், ஞானாசிரியர் பதி (சத்து), பசு (சதசத்து), பாசம் (அசத்து) என்னும் முப்பொருள் பற்றி ஆன்மாவுக்கு ஞான உபதேசம் செய்வதைக் குறிக்கும்.

ஞானத்தின் படிநிலைகள்

இங்ஙனம் குருவால் உபதேசிக்கப்படும் ஞானம், மாணவனின் ஆணவ மலப் பிணிப்புக் காரணமாக, பக்குவ உயர்ச்சி, தாழ்ச்சிகளுக்கு ஏற்ப, ஒரே வகையாக இல்லாமல் வெவ்வேறு வகையால் நிகழும். பக்குவ வேறுபாட்டால் அந்த ஞானம் கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை என நான்கு வகையாய் இருக்கும். இதனையே ஞானத்தின் படிநிலைகளாகக் கூறுவர்.

இவை முறையே ஞானத்திற் சரியை (கேட்டல்), ஞானத்தில் கிரியை (சிந்தித்தல்), ஞானத்தில் யோகம் (தெளிதல்), ஞானத்தில் ஞானம் (நிட்டை) என்று பகுத்துக் கூறப்படும். இவை ஞானத்தை ஆதியாக உடையவை ஆகையால் ‘ஞானாதி’ என்றும்[17] பெயர்பெறும்.

எத்துணைப் பேரறிஞர்கட்கும் ஆசான் இன்றி அருள் ஞானம் விளங்காது. கேட்டலே ஞானத்தின் தொடக்கமாகும். கேட்டலாவது ஞானாசிரியரிடம் உண்மைப் பொருள்களை உணர்ந்து கேட்டலாகும். இதனால் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களின் இயல்பு பொதுவாகவே அறிவில் விளங்கும். கேட்ட பொருளைக் காரண, காரிய இயைபுபடுத்தி ஆராய்தல் சிந்தித்தலாகும். சிந்தித்த முப்பொருள்களை ஐயம், திரிபு இன்றித் தெளிந்து, முப்பொருள்களில் ஆன்மா பாசத்தின் நீங்கி, பதியை உணர்ந்து (திருவருளில் நிற்றலே) தெளிதலே ஞானமாகும். அங்ஙனம் தெளியப்பட்ட மெய்ப்பொருளில் அழுந்தி நிற்றலே நிட்டையாகும்.

இதனைச் சிவப்பிரகாசம்,

“முந்திய வொருமை யாலே
 மொழிந்தவை கேட்டல் கேட்டல்
சிந்தனை செய்தல் உண்மை
 தெளிந்திடல் அது தானாக
வந்தவாறு எய்த நிட்டை
 மருவுதல் என்று நான்காம்
இந்தவா றடைந்தோர் முத்தி
 எய்திய இயல்பி னோரே” (சிவ.83)

என்று குறிப்பிடும். இப் பாடலில், ‘ஒருமையால் மொழிந்தவை’ என்னும் தொடர் குருவின் மொழியையும், ‘ஒருமையால் கேட்டல்’ என்பது சீடனின் பக்குவ நிலையையும் குறிக்கும் என்பார் காஞ்சி ஞானப்ரகாச சுவாமிகள்.[18] காஞ்சிப் புராணத்தில் சிவஞான முனிவரும் இந் நிலைகளை,

“ஐந்தவித்து உயர்ந்த ஆசான்தன் அன்புடை அருள்நூல் கேட்டு
சிந்தனை செய்து மாணத்தெளிந்து பின் நிட்டைமேவும்
இந்த வாறடைவின் எய்தும் இயல்பினைத் தலைநின்றே” [19]

என்று குறித்திடுவர்.

கேட்டல் என்பது பொதுவான காட்சியாகவும் (நிருவிகற்பம்), சிந்தித்தல் என்பது ஐயக் காட்சியாகவும், தெளிதல் என்பது தெளிந்த காட்சியாகவும் (சவிகற்பம்) அமையும்.

முப்பொருள்களின் இயல்பைப் பொதுவாக அறிந்துகொண்டு, தன்னைத் தத்துவங்களின் வேறெனக் கண்டும் தன் உண்மை நிலையை அறியாமல் இருப்பது நிருவிகற்பக் காட்சி ஆம். தன் உண்மை நிலை, அருளொடு பிரிப்பின்றி நிற்றல் என அறிந்தும், ஆன்மா அவ் வருளில் அடங்காமல் அருளிலும் கருவியிலும் (ஐம்புலன்) மாறி மாறி நிற்றல் ஐயக் காட்சி ஆம். அருளில் அடங்கி அடிமையாய் நிற்றல் தெளிவுக் காட்சியாகும்.[20]

தீவிரதர சத்திநிபாதம் வாய்க்கப் பெற்றவர்களுக்கு இம் மூவகைக் காட்சியும் நிகழ்ந்தது தெரியாமல் நிகழ்ந்து மிக விரைவில் முற்றுப்பெறும். அங்ஙனம் முற்றுப்பெற்ற நிலையே ‘நிட்டை’ எனப்படும்.[21]

தீவிரதர சத்திநிபாதம் இல்லாது, மந்த சத்திநிபாதம் உடையவர்க்கு அக்காட்சி, ‘கேட்டல், சிந்தித்தல், தெளிதல்’ என்னும் வகையில் படிமுறையாக நிகழும்.

குரு முப்பொருள்களின் இயல்பையும் உணர்த்தியபொழுது உயிர், சார்ந்ததன் வண்ணமாகின்ற தன் இயல்பையும், அவ்வியல்பானே தான் இந்திரியங்களாய் நிற்கின்ற செயற்கை நிலையினையும் உணரும். ஆதலால், ஐம்பொறிகள் உளவாயினும் பக்குவம் எய்திய ஆன்மா, குரு உபதேசத்தால் உலகப் பொருள்கள்மேல் செல்லாது அவர் வழிப்பட்டுச் சிவனிடத்துச் செல்லும்.

“தானே புலன்ஐந்தும் தன்வசமாயிடும்
தானே புலன் ஐந்தும் தன்வசம் போயிடும்
தானே புலன் ஐந்தும் தன்னில் மடைமாறும்
தானே தனித்தெம் பிரான்தனைச் சந்தித்தே” [22]

என்பது திருமந்திரம்.

கருவிகளால் வரும் மயக்கத்தினின்று ஆன்மா நீங்கித் திருவருளை உணர்ந்து அதன் வசப்பட்டு அதில் அழுந்தும். அப்போது புலன் உணர்விற்கு அப்பாற்பட்ட உண்மை ஞானத்தை ஆன்மா உணர்தல் கூடும். ஆன்மாவிடம் நிகழும் இஞ் ஞானப் படிநிலைகள் நான்கும் தச காரியத்துள் வைத்துச் சொல்லப்படும்.

CENTRE FOR SHAIVA STUDIES
Puducherry

பாச ஞானமும், பசு ஞானமும்

பாசத்துள் ஒன்றாகிய மாயையே காரியப்பட்டு இவ் வுலகமாகவும், உலகப் பொருள்களாகவும், உடம்புகளாகவும் உடம்பில் அமைந்த கருவிகளாகவும் உருமாறி நிற்கின்றது. இக் காரியப் பொருள்கள் உயிரறிவைப் பிணித்துத் தம் வசப்படுத்தி நிற்றல் வெளிப்படை. இதனால் உலகப் பொருள்களும் அவற்றை அறிவதற்குத் துணைசெய்யும் ஐம்பொறி, மனம் முதலிய கருவிகளும் பாசமே என்பது நன்கு விளங்கும். பாசமாகிய கருவிகளைக் கொண்டு பாசமாகிய உலகப் பொருள்களை அறியும் அறிவு பாச அறிவு அல்லது பாச ஞானம் என்று சொல்லப்படும்.[23]

பாசமாகிய கருவிகளின் வழியாக உலக விடயங்களை அறியும் ஆன்மா, அக்கருவிகளின் நீங்கித் தன்னையறிவும் அறிவு 'பசுஞானம்' என்று சொல்லப்படும். அஃதாவது 'இக் கருவிகள் யாவும் கண்ணுக்கு விளக்குப்போல யான் அறிவதற்குத் துணை செய்வனவே யன்றி, இவை தாமே அறிவன அல்ல; அதனால் இவை யான் அல்ல; யான் இவற்றின் வேறாய் - அறிவாய் உள்ளேன்' என உயிர் தன்னை அறிவது பசு ஞானமாகும். இந் நிலையில் உயிர் தன் முனைப்போடு 'நானே பிரம்மம்" என்று கூறிக்கொள்ளும். கருவிகள் சார்பாகத் தன்னை அறியும் இப் பசு ஞானம் பொது அறிவே அன்றித் தன் இயல்பை உள்ளவாறு அறிந்த உண்மை யறிவு ஆகாது.

"மாயையால் அறிவதெல்லாம் மட்டிடாப் பாச ஞானம்
ஓய்விலா மலங்கள் எல்லாம் ஒழித்தறிவோடு இருத்தலே
இருட் பசுஞானந்தான்' [24]

என்பது சுவாமிநாத தேசிகர் கூறும் தச காரியம் ஆம்.

எனவே, பாச ஞானம் என்பது உலகத்துப் பொருள்களைப் பற்றிய அறிவு என்றும், பசு ஞானம் என்பது உயிர் கருவிகளினின்று பிரிந்து தன்னை வேறாக அறியும் அறிவு தனி அறிவாகும் என்றும் அறிந்துகொள்ளலாம்.

நன்னலம் நிறைந்த ஞானம்

ஞானாசிரியரது உபதேச மொழியால், கேட்டல், சிந்தித்தல் என்னும் ஞான வேள்வியைச் சார்ந்து உயிர் பாசங்களைச் சடப்பொருள் என்றும் தான் அறிவதற்கு உதவிய கருவிகள் தான் அல்ல என்றும் அறிந்தவுடன், பாச, பசு ஞானங்களைவிட்டு நீங்கி, தன்னைத் தான் அறியும் நிலை உண்டாகிறது. அதற்குக் காரணம் தன் அறிவுக்கு அறிவாய் நிற்கும் பதிப் பொருளின் அறிவே என்பது புலனாகும். இதுவே பதி ஞானம் - திருவருள் ஞானம் - சிவ ஞானம் எனப்படும்.

பாச ஞானம், பசு ஞானம் ஆகிய இரண்டின் இயல்பைப் பற்றாமல், உயர்ந்த நலத்தை ஆன்மா பெறுமாறு வழங்கும் திருவருள் ஞானமே மெய்ஞ்ஞானமாகும்.

"பல்நிறம் கவரும் தொன்மைப்
படிகநீடு ஒளியும் பன்மை
மன்இலங்கு இயல்பும் தந்த
வளர்ஒளி போல வையம்
தன்னகம் பயிலும் நற்சிற்
சடங்களின் தன்மை தாவா
நன்னலம் பெற நிறைந்த
ஞானமே ஞானம் என்பர்" (சிவ.69)

என்று பாச ஞானம், பசு ஞானம் என்னும் இரு ஞானங்களைவிட, திருவருள் ஞானமே, நிறைவான ஞானமாகும் என்று சிவப்பிரகாசம் கூறும்.

"பசு ஞான, பாச ஞானங்களின் இயல்பு அவற்றின் குணிகளாகிய 'சிற்சடங்களின் தன்மை' கூறுமுகத்தான் உணர்த்தி, "நன்னலம் பெற நிறைந்த ஞானமே ஞானம்' என்றதனை வலியுறுத்தி, பதி ஞான இயல்பு கூறும் "மாயை மாமாயை" என்னும் செய்யுளையும் அருளினர் என்றறிக" என்று சிவஞான மாபாடியத்துள் மாதவச் சிவஞான முனிவர் குறித்திடுவர்.[25]

பளிங்கு காலை நேரத்தில் சூரியனது ஒளியைக் கிழக்குப் பக்கத்தில் மட்டும் கவர்ந்து நிற்கும்; பிற பக்கத்தில் வேறு பொருள்களின் நிழலைத் தன்னிடத்தில் கொண்டு நிற்கும். மாலைப் பொழுதிலும் அவ்வாறே சூரிய வொளியை மேற்குப் பக்கத்தே மட்டும் கவர்ந்து, பிறபகுதிகளில் வேறு பொருள்களின் நிழலைக் கொண்டிருக்கும். உச்சி வேளையில் சூரிய வொளியைத் தன்னிடத்தில் முழுவதுமாகக் கவர்ந்து நிற்கும்; பிற பொருள்களின் நிழல்களைச் சிறிதும் கவராது விடும்.

"படிகம் உச்சிக் காலத்து ஒரு வண்ணத்தையும் பற்றாது முன்பற்றிய வண்ணத்தையும் இழந்து ஒளியேயாய் நிற்பினும் எக்காலத்தும் தனது ஒளி கெடாது நிற்றல்பற்றி பேரொளியென விசேடித்தார். இதனை உவமைப் பொருட்கண்ணுமோதி ஆன்ம ரூபம் இனிது விளங்கியமை அறிக" என்பது சிந்தனையுரை.[26]

உச்சியில் பிரகாசிக்கும் அச் சூரியப் பிரகாசமானது அந்நிறங்களையும், படிகத்தின் ஒளியையும் பற்றாது. அதுபோலச் சிவஞானம் ஆன்மக் கருவிகளின் பாச ஞானத்தையும், கருவிகள் நீங்க ஆன்மாவின் பசு ஞானத்தையும், விளங்கச் செய்வதற்கு அது உபகாரம் செய்யும். ஆனால் அப் பாச ஞானம், பசு ஞானங்களைத் திருவருள் ஞானம் பற்றாது. ஆகலின், திருவருள் ஞானமே, மிக மேலான நிரதிசய இன்பத்தைத் தருகின்ற 'நன்னலம் பெற நிறைந்த ஞானம்' என்று கூறப்படும். இத்தகைய ஞானத்தைத்தான் உண்மை ஞானம் என்று சொல்வர் பெரியோர்:

"பற்றிய நிறங்க ளாகும்
பளிங்கின தொளியும் பற்றி
நிற்றலைப் பளிங்கும் வெய்யோன்
நீடொளி யதுவும் போல
முற்றுலக தற்குச் சார்வாய்
முற்றிலும் முந்நீர் விண்யோற்
சிற்றினிற் சடங்கள் தோயாது
என்பர் சிற்சத்தி தேர்ந்தோர்" [27]

என்று திருநெறிவிளக்கம், மேற்கண்ட சிவப்பிரகாசத்திற்கு எதிரிடை விருத்தமாக சிவப்பிரகாசத்தின் பின்சென்றே கூறுகிறது.

"பளிங்கு பல வண்ணங்களைச் சேர்ந்தவழி அவ் வண்ணங்களின் மயமாயும், கதிரவன் ஒளியை நேரடியாகச் சேர்ந்தவழி தூய்மையாகவும் விளங்குதல் போல, பெத்தத்துள் கருவி கரண அறிவாகவும் முத்தியில் சிவஞான மயமாகவும் விளங்கி எந் நிலையிலும் அப் பளிங்கினைப்போல், ஆன்மாவாகிய தான் தனித்து விளங்குதல் இல்லாத வியத்தற்குரிய பண்பினால் ஆகும்" என்று ஆன்மாவிற்குப் பளிங்கு உவமையையும் அதன் இயைபையும் அம்பலவாண தேசிகர் சித்தாந்த பஃறொடையில் விளக்குகிறார்:

"பளிங்குவமை பெத்தமுத்தி பண்புற்று அங்கு ஆவி
விளங்குதலின் றாகா வியப்பால்" [28]

இப் பளிங்கு உவமையைத் திருவருட்பயன், 'பளிங்கிற்குப் பகலவன்போல் ஆன்மாவிற்குத் திருவருள்' என்று அறியும் நெறியிலும், 'உச்சி வேளையில் சூரிய வொளி ஒன்றையே கவர்ந்து நிற்பதுபோல ஆன்மா திருவருள் ஞானத்தைப் பற்றி நிற்கும்' என்று திருவருளைச் சேரும் உயிர் விளக்கத்திலும் எடுத்துக்காட்டி விளக்கும்.

"தன்னிறமும் பன்னிறமும்தான் ஆம் கல் தன்மைதரும்
பொன்னிறம் போல் மன்னிறம் இப்பூ" [29]

"தனக்கு நிழல் இன்றாம் ஒளிகவரும் தம்பம்
எனக்கவர நில்லாது இருள்" [30]

சுந்தரர் தன்னைத் தடுத்தாட்கொண்ட இறைவனை,

'ஒட்டி ஆட்கொண்டு போயொளித்திட்ட உச்சிப்போதன்' [31]

என்று தம் திருப்பாட்டில் குறிப்பிடுவார்.

"சிறுபொழுதுகளுள் நண்பகல் பேரொளியுடையது. ஆதலால், 'ஆட்கொண்டு ஒளித்தபின் இனிது வெளிப்பட்டு' நின்றமையின் 'ஒளித்திட்ட உச்சிப்போதன்' என்று சுந்தரர் அருளினார்" என்பார் அருணைவடிவேலு முதலியார்.[32]

திருவருள் ஞானம் பெற்ற ஆன்மாவின் நிலை பற்றிச் சிவப்பிரகாசம்,

“மாயை மாமாயை மாயா
வரும் இருவினையின் வாய்மை
ஆய ஆருயிரின் மேவும்
மருளெனில் இருளாய் நிற்கும்
மாயை மாமாயை மாயா
வரும் இருவினையின் வாய்மை
ஆய ஆருயிரின் மேவும்
அருளெனில் ஒளியாய் நிற்கும்” (சிவ.70)

என்று உரைக்கும். “மாயையும் மாயையின் காரியங்களும் இருவினையின் பயன்களும், ஆன்மா எந் நிலையில் நின்றதோ அதற்கு ஏற்றபடி நிற்கும். ஆன்மா மலத்தால் கட்டப்பட்ட ‘பசு’ எனப்பெயர் பெற்று நிற்கும்பொழுது, மாயை முதலியன அதனைக் கட்டுவதாகி மலமாகி நிற்கும். ஆன்மா கட்டுக்களை விட்டு நீங்கி அருளோடும் கூடியபோது முற்கூறப்பட்ட மாயை முதலியனவும், பாசம் என்னும் பெயரை நீங்கி அருளேயாக நிற்கும்’ என்று திருவருள் ஞானம் பெற்ற ஆன்மாவின் நிலையைப் பெத்த நிலை கொண்டு எடுத்துக்காட்டுகிறது சிவப்பிரகாசம்.

இச் சிவப்பிரகாசத்தில் குறிப்பிடப்படும் ‘மாமாயை’, ‘மாயேயம்’ எனப்படும். சிவஞான மாபாடியப் பொருள்நிலை விளக்கத்தில் அறிஞர் அருணைவடிவேலு முதலியார், இப் பாடலின் முதல் அடியையும், மூன்றாவது அடியையும்,

‘மாயை மா மாயேயம் மாயாவரும் இருவினை’

என்றே மாற்றியமைத்துள்ளார்.[33]

வச்சிரவேல் முதலியாரும் இக் கருத்தையே கொண்டு, “மாயேயம் என்னும் சொல் மாமாயை என இரண்டிடத்துச் சிவப்பிரகாசத்தில் மாற்றிக் கொள்ளப் பட்டுள்ளது. மாமாயை என்பது ஆகம மரபு பற்றிச் சுத்த மாயையே குறிக்கும் என்பதும் அது இங்குப் பொருந்தாமையும் நுண் உணர்வாற் கண்டுகொள்க” என்பார்.[34]

கவிராட்சச கச்சியப்ப முனிவரும் தாம் அருளிய திருவானைக்கா புராணம், ஞான உபதேசப் படலத்தில், மாயையைக் காரணமாகவும் மாமாயையைக் காரியமாகவும் கொண்டு ‘மாயேயம்’ என்றே குறித்தார்.

“மாயை காரியமான மாமாயையும் நமது
தூயசீர் அருள்பெறும் பொருட்டுத் திரோதாயியும் தொகுத்திட்டு
ஆயும் நூல் மலம் ஐந்து என அறைவது உண்டால்”[35]

என்பது திருவானைக்காப் புராணம்.

வியாபகம், வியாப்பியம் - ஆன்மாவும், மாயையும், இறைவனும்

ஆன்மா தன் வியாபகத்தின் வியாப்பியமான மாயை, கன்ம மாயேயங்களோடும் நிற்கும். அவ் வான்மாவோடு முதல்வனும் நிற்பான். முதல்வனது வியாபகத்தில் ஆன்மா வியாப்பியமாய் உள்ளது.

மூல மலமான ஆணவம் வியாப்பிய மாயினும் அது, முதல்வனுக்கு மறுதலைப் பொருளாயிற்று. இதற்கு, இருள், ஒளியை அடர்த்து எழுகின்ற ஆற்றலை உடையதன்று என்று கூறப்படும். இக்கருத்தை,

> **'ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே இடம் ஒன்று மேலிடில் ஒன்று**
> **ஒளிக்கும் எனினும் இருள் அடராது"** [36]

என்று கொடிக் கவி சுட்டும்.

மாயை மூல மலம் போல முதல்வனுக்கு மறுதலைப் பொருள் ஆகாது. 'இகலிவரும் இவை உணரின் இருள் வெளியாம் தன்மை" [37] எனவும் (சிவப்பிரகாசம்), 'விமலனுக்கோர் சத்தியாய்" [38] எனவும் (சித்தியார்), "தாரகமாம் அத்தன் தாள் நிற்றல்" [39] எனவும் (சிவஞான போதம்) சிவாகமங்களின் வசனங்கள் உணர்த்தும்.

> **"நிலம் நீர் நெருப்பு உயிர் நீள் விசும்பு நிலாப்பகலோன்**
> **புலன் ஆய மைந்தனொடு எண்வகையாய்ப் புணர்ந்து நின்றான்"** [40]

என்ற எட்டு உருவங்களுள் முதல் ஏழும் மாயேயமாதல் (சடமாதல்) ஆன்மாவோடு ஒப்பிட்டுக் காட்டப்படுகிறது. ஏனெனில், 'சித்து' எனும் ஆன்மாவிற்கு அந்த 'விசேட உரிமை' உண்டு.

'தண்கடல் நீர் உப்புப்போல்'[41] என்னும் உவமை மூலம் வியாபக, வியாப்பிய, வியாத்தியை விளக்கிக் காட்டுவார் மெய்கண்டார்.

கடல் - ஆழமான இடம் - வியாபகம் - பெருநிறைவு

நீர் - அந்த இடம் முழுவதிலும் உள்ளடங்கி இருத்தல் - வியாப்பியம் உள்ளடங்கிய நிறைவு

உப்பு - நீர் முழுவதும் கலந்திருத்தலால் - வியாத்தி - சமநிறைவு

எனவே, கடல் போன்றது - பதி; அதில் உள்ள நீர் போன்றது - உயிர்; உப்புப் போன்றது பாசம்.

இறைவனோடு ஆன்மாவுக்கு எந்த வகையான சம்பந்தம் உண்டோ அந்த வகையான தொடர்பு மாயைக்கும் உண்டு. ஆயினும் ஏனைப் பொருள்கள் சடமாயும், ஆன்மா சித்தாயும் இருத்தலால் ஆன்மாவிற்கு இறைவனோடு உள்ள சம்பந்தத்தில் சிறப்பு உண்டு.[42]

ஈசனாகிய சிவபெருமான் குருவாக எழுந்தருளி ஆணவத்தை நீக்கியருள, பின் மற்ற மலங்களாகிய கன்மமும், மாயையும் பாசத் தன்மையினின்றும் நீங்கித் திருவருள் மயமாக மிக விளக்கமுற்று நிற்கும்.

"மலமொன்று அகற்றப்பின் மற்றதெல்லாம் ஈசன்
நிலையொன்ற தாகமிக நிற்கும் - மலைவின்றி
ஈட்டியவாறு ஆகும் இறையெவர்க்கும் தீயமலம்
வாட்டியவாறு ஆகும் மதி" [43]

என்று அம்பலவாண தேசிகர் மாயையும் கன்மமும் திருவருள் மயமாகும் என்று அருளிச் செய்தார்.

மாயை, கன்மம், மாயேயம் என்பன ஆன்மாவில் வியாப்பியமே. ஆகையால் ஆன்மாவோடு இறைவன் இயைந்து நிற்கும் முறை கூறவே, ஏனை மாயை, கன்மம், மாயேயம் என்பவற்றோடும் அவ்வாறு நிற்பன் இறைவன் என்பதும் உடன் பெறப்படுவதாகும்.

இதுபற்றியே,

"ஞானம் விளக்கிய நாதன் என்னுள் புகுந்து
ஊனை விளக்கி உடனிருந் தானே" [44]

எனவரும் திருமந்திரப் பாடலில், கன்மமும் மாயையும் ஆன்மா அருள்நிலையை எய்தியபொழுது அருளாயும் நிற்கும் இயல்புடையன என்பதை 'ஊனை விளக்கி" என்ற தொடர் விளக்கி நிற்கும்.

திரோதான சத்தி

'மருள் எனில் இருளாய் நிற்கும், அருள் எனில் ஒளியாய் நிற்கும்' என்னும் சொற்றொடருக்கு விளக்கமாக திரோதான சத்தியை எடுத்துக்காட்டுவர். ஏனெனில், மருட்காலத்தில் மறைப்புச் சத்தியான திரோதான சத்தி, அருட்காலத்தில் அருளோடு கூடி ஒளியாய் நிற்கும்.

"பாகமாய் வகை நின்று திரோதாயி சத்தி பண்ணுதலால் மலம் எனப் பகர்வர்[45] என்றும், 'முற்சினமருவும் திரோதாயி கருணையாகி'[46] என்றும் சிவப்பிரகாசத்தில் முன்னர் கூறப்பட்டு விட்டதால், மீளவும் கூறல், கூறியது கூறலாக முடியும் என்பதற்கேற்ப, இப் பாடலில் 'திரோதான சத்தி' சொல்லப்படவில்லை என்று மாதவச் சிவஞான முனிவர் குறித்திடுவார்.

பெத்த நிலையும் முத்தி நிலையும்

பளிங்கனாது தன்னை உற்ற வண்ணங்களைத்தான் காட்டி நிற்றல்போல, அதாவது தன் வண்ணமாகக் காட்டி நிற்றல்போல, ஆன்மாவும் பாசத்தைச் சார்ந்து பாசமாயும், பதியைச் சார்ந்த நிலையில், பாசம் நீங்கப்பெற்று பதியாகவும் நிற்கும்.

'பளிங்கின் நிழலுட்பதித்த சோதியான்" [47]

என்பார் திருநாவுக்கரசர்.

'அருள் செய்யாதபோது எனக்கு இருளாய் இருந்தவை எல்லாம் அவர் அருளியபோது வெளியாய் (ஞானம்) இருந்தன' என்று தம் ஞானகுரு மாசிலாமணி தேசிகர் அருளும் நிலையை பண்டார மும்மணிக்கோவையில் குறிப்பிட்டு அருள்வார் குமரகுருபரர்.

"அருளாத போது வெளியாய் இருந்த எல்லாம்
இருளாய் இருந்த எனக்கு" [48]

சுத்த அவத்தை வந்தால் ஆன்மா ஞான மயமாக (ஒளியாய்) விளங்கும். அந் நிலை வராதபோது அது அறியாமையே (இருளாய்) வடிவமாக நிற்கும்.

"....... சுத்தம்
வரிற்போது ஒளியாகும் வாராத போதிங்கு
இருட்போதம் ஆகுமென எண்" [49]

என்பது சித்தாந்த சிகாமணி. சுத்தம் என்பது சத்திநிபாதம் எய்திய ஆன்மாவின் நிலை. இந் நிலையில் ஞானாசிரியன் அருளால் ஆன்மா ஞான மயமாகும். இல்லையெனில் ஆன்மாவின் அறியாமை நீங்காது.

ஆன்மா மாயா கன்ம மலங்களுடன் சார்ந்து இருப்பது பொது இயல்பு. சிவத்தைச் சார்ந்து இருப்பது உண்மை யியல்பு. உண்மை அதிகாரத்தில் பொதுவியல்பைக் கூறியது எடுத்துக்காட்டாக வைத்து விளக்குவதற்காகும். இது 'அநுவாதம்' எனக் கூறப்படும். 'அநுவாதம்' என்பது கூறிய கருத்தையே வேறொரு பயன்கருதி மீண்டும் கூறுதலாகும்.

பசு கரணம், சிவ கரணம்

இறைவனுக்குத் திருமேனியாகிய ஆன்மா, இறைவனைச் சார்ந்து அவன் வண்ணமானபொழுது ஆன்மாவின் உடம்பும் அருள் மயமாகும்.

"அவன் அந்நியமின்றி சைதன்னிய சொரூபமாய்
நிற்றலான்" [50]

என்பது சிவஞான போதம்.

"வெளியாய் அருளில் விரவும் அன்பர்தேகம்
ஒளியாய் பிறங்கினும் உண்டோ பராபரமே" [51]

என்று தாயுமானவரும் இந்நிலையைப் போற்றுகின்றார்.

எனவே, ஆன்மா, பசுத்துவம் நீங்கிச் சிவத்துவம் பெற்ற வழி பசுகரணம், சிவ கரணம் ஆகும்.

"மன்னு சிவன்தனை அடைந்து நின்று அவன்தனாலே
மருவு பசுகரணங்கள் சிவகரணம் ஆக [52]

என்று சித்தியார் விளக்கும்.

இதனைச் சன்மார்க்க சித்தியார், **'இகத்து அதனைப் பெற்றார் தம் காயமதும் பேரறிவாம்"** [53] என்று கூறும். அதாவது, இம்மையில் அரனைப் பெற்ற ஆன்மாக்களே அன்றி அவ் வான்மாக்களின் உடம்பும் பேரறிவு (சிவஞானம்) மயமாகும். அதாவது பசு கரணங்கள் சிவ கரணங்களாய் விளங்கும் என்பது பொருளாகும்.

திருமூலரும் 'சிறந்த ஞானிகளின் உடம்பு சிவனது திருமேனியாகும்' என்னும் பொருளில்' ***'திண்மையின் ஞானி சிவகாயம்"*** [54] என்று உரைப்பர்.

சிவபெருமானின் திருமலர்க்கை தீண்டப் பெற்றதால் விசார சருமருடைய மாயையால் ஆன யாக்கையே அதற்கு மேம்பட்ட அளவில்லா உயர்வுடைய சிவ மயமான யாக்கையாக மாறியது. அப்பொழுதே அவர் சண்டீசப் பதம் பெற்றார்:

"செங்கண் விடையார் திருமலர்க்கை தீண்டப்பெற்ற சிறுவனாம்
அங்கண் மாயை யாக்கையின் மேலளவின்றுயர்ந்த சிவமயமாய்ப்
பொங்கி எழுந்த திருவருளின் மூழ்கிப் பூ மேல் அயன் முதலாம்
துங்க அமரர் துதிசெய்யச் சூழ்ந்த வொளியிற் றோன்றினார்" [55]

என்று சேக்கிழார் சண்டேசருடைய மாய வுடம்பு சிவ உடம்பாய் (ஞானத் தனு) விளங்கிய அன்பின் அருள்திறத்தை வியந்து குறிப்பிடுகிறார்.

"வினைபடும் உடல்நீ புகுந்து நின்றமையால்
விழுமிய விமானம் ஆயினதே" [56]

என்று கருவூர்த் தேவரும் வினைபடும் உடலை விழுமிய விமானமாக மாற்றிய இறைவனின் திருவருட் டிறத்தைப் போற்றுகிறார்.

இறைவனின் இத்தகைய திருவருளுக்கு 'நான் கைம்மாறு செய்ய இயலாதவன் ஆயினேன்' என்று மாணிக்கவாசகர் தம் ஆற்றாமையை வெளிப்படுத்துகிறார்:

"எந்தையே ஈசா உடல்இடம் கொண்டாய் யான்
இதற்கிலன் ஓர் கைம்மாறே" [57]

இத்தகைய திருவருளின் தன்மையைத் தம் அநுபவமாகப் பெற்ற அருமையால் திருநாவுக்கரசரும்,

"நிலாவாத புலால் உடம்பே புகுந்து நின்ற
கற்பகமே யான் உன்னை விடுவேன் அல்லேன்" [58]

என்று இறைவனின் திருவடிகளைப் பற்றுகிறார்.

அடிக்குறிப்புகள்

1. ஆ.ஆனந்தராசன், சிவஞான போதம் வழித்துணை விளக்கம், ப.218.
2. சென்னிமலைத் திருப்புகழ், திருப்புகழ் ஆறாம்தொகுதி, ப.223.
3. சிவஞான சுவாமிகள், சிவஞான பாடியம், ப.463.
4. சிவஞான போதம், 8ஆம் நூற்பா, இரண்டாம் கூறு, மேற்கோள்:
5. 8:5:92.
6. திருவருட்பயன், 42
7. மேலது, 43.
8. பொ.முத்தையா பிள்ளை, சிவஞான போதச் சிற்றுரை விளக்கம், பக்.399,400.
9. ஆ.ஆனந்தராசன், மே.கா.நூ., 235.
10. திருவுந்தியார், 6.
11. மேற்கோள்: அருணைவடிவேல் முதலியார், கந்தர் கலிவெண்பா, ப.73.
12. மேலது, ப.73.
13. சிவஞான போதம், வெண்பா:48:4
14. போற்றிப் பஃறொடை, வரி:137,138.
15. கந்தர் கலிவெண்பா, அடி:43-48.
16. திருமந்திரம், 1553,
17. தண்டபாணி தேசிகர், திருமந்திரம் ஐந்து ஆறு தந்திரங்கள், ப.192.
18. காஞ்சி ஞானப்ரகாச சுவாமிகள், சித்தாந்தக் கட்டுரைகள், ப.224.
19. காஞ்சிப் புராணம், ஒழுக்கப் படலம், பா.56.
20. பொ.முத்தையாபிள்ளை, மு.கா.நூ., ப.438.
21. சி.அருணை வடிவேலு முதலியார், சிவஞான போத மாபாடியப் பொருள்நிலை விளக்கம், ப.685.
22. திருமந்திரம், 139.
23. ஆ.ஆனந்தராசன் மு.கா.நூ., ப.169.
24. சுவாமிநாதர் தசகாரியம், பா.5.
25. சிவஞான சுவாமிகள், மு.கா.நூ., ப.171.
26. சிவப்பிரகாசம் மூலமும் சிந்தனையுரையும், ப.830.
27. திருநெறி விளக்கம், பா:67
28. சித்தாந்தப் பஃறொடை, 518.
29. திருவருட்பயன், 55.

30. மேலது, 67.
31. 7:59:10
32. அருணை வடிவேலு முதலியார், ஏழாம் திருமுறை, ப.930.
33. அருணை வடிவேல் முதலியார், மு.கா.நூ., ப.343.
34. வச்சிரவேல் முதலியார், 8ஆம் தந்திரம், ப.711.
35. திருவானைக்காப் புராணம், ஞான உபதேசப் படலம், பா.18.
36. கொடிக்கவி, 1.
37. சிவப்பிரகாசம் 37:3
38. சிவஞான சித்தியார், சுபக்கம், 143:2
39. சிவஞான போதம், வெண்பா.2
40. 8:15:5:1,2
41. சிவஞானபோதம், வெண்பா, 7.
42. அருணைவடிவேல் முதலியார், சிவஞான போத மாபாடியப் பொருள் நிலை விளக்கம், ப.344.
43. அம்பலவாணதேசிகர், சித்தாந்த சிகாமணி,42.
44. திருமந்திரம், 1509
45. சிவப்பிரகாசம், 20:3
46. மேலது, 48:4
47. 6:91:2
48. குமரகுருபரர், குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத் திரட்டு, பண்டார மும்மணிக் கோவை, பா.18.
49. அம்பலவாண தேசிகர், மு.கா.நூ.,43.
50. சிவஞான போதம், நூற்பா:8, அதிகரணம் 2.
51. தாயுமானவர், பராபரக் கண்ணி, 190.
52. சிவஞான சித்தியார், 286
53. சன்மார்க்கச் சித்தியார், பா.21
54. திருமந்திரம், 2578.
55. சேக்கிழார், பெரிய புராணம், 1260.
56. 9:11:6
57. 8:22:10.
58. 6:95:4.

5.5 தச காரியம்

ஆன்மா மெய்யுணர்வாகிய ஞானத்தை எய்துதற்கண் நிகழும் மெய்ப்பாடுகளை (உணர்வு நிலைகளை) படிநிலைகளாக வைத்துக் கூறும் முறை ‘தச காரியம்’ எனப்படும்.

“ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு
அந்நியமின்மையின் அரன்கழல் செலுமே” [1]

“சிவன் குருவாய் வந்து உணர்த்த, உயிர் ஞானத்தினை உணரும்” என்பது சிவஞான போதம் எட்டாம் நூற்பா. இந் நூற்பாவில், ‘விட்டு’, ‘செல்லும்’ என்று கூறிய இரு செயல்களே தசகாரியமாக விரிவுபடுகின்றன. அவற்றுள் ‘விடுதல்’ என்பது பாசக் கூட்டத்தையும், தற்போதத்தையும் குறிக்கும். ‘செல்லும்’ என்பது சிவன் திருவடியை நோக்கிச் (அரன் கழல் செல்லுதல்) செல்லுதலைக் குறிக்கும்.[2] இதுவே, சைவ சித்தாந்தத்தில் உயிர் அடைவதற்குரிய முடிநிலைப் பெரும் பயனாகிய பாச நீக்கமும், சிவப் பேறும் ஆகும்.

நங்குலத் தலைமை விட்டான்; நலப்பட்டான் தேவர்க்கு

“காளத்தி மலையில் குடுமித் தேவரைப் பார்த்த கண்ணப்பர் அன்பு பெருக ஓடிச் சென்று அவரை இறுகத் தழுவிக் கொண்டார். நெடுநாள் பிரிந்திருந்த தன் கன்றைத் தேடிய தாய்ப் பசுவைப் போல கசிந்துருகினார்; உச்சிமோந்தார்; முத்தமிட்டார்; வெயிலிடைப்பட்ட மெழுகுபோல் உருகினார்; பிரிந்து சிறிது தூரம் போவார்; மீண்டும் வருவார்; தழுவிக்கொண்டு ஆசையோடு பார்த்து நிற்பார்; பிரிய மனமில்லாது அவரை வலிய உடும்பைப்போல பிடித்துக் கொண்டார். கண்ணப்பருடன் சென்ற காடனும் நாணனும் இந்நிலையைக் கண்டு திகைத்து நின்றனர். அப்பொழுது நாணன் காடனிடம், **‘நங்குலத் தலைமை விட்டான்; நலப்பட்டான் தேவர்க்கு’**[3] என்றான்” என்று குடுமித் தேவரைக் கண்ட கண்ணப்பரின் நிலையைப் பெரிய புராணம் கூறும்.

இங்குப் பெரிய புராணம் காட்டும், **'நங்குலத்தலைமை விட்டான்'** என்பது தத்துவச் சார்பாகிய பாச நீக்கத்தையும், **'நலப்பட்டான் தேவர்க்கு'** என்பது சிவப் பேறாகிய அரன் கழல் செல்லுதலையும் குறிக்கும். உலகத் தொடர்பு விட்ட உயிர் இறைவனைப் பற்றுதல் உண்மை. பற்றுக்கோடினின்றி உயிர்கள் நில்லாது, உயிர் பாசச் சார்பினைப் பற்றி, அசத்தாகிய அச் சார்புவிட சத்தாகிய இறைச் சார்பினைப் பற்றி நிற்கும் சார்ந்ததன் வண்ணமாம் தன்மையுடையது. எனவே, பாச நீக்கமே சிவப் பேற்றினைப் பயக்கும். இதனை,

'அற்றது என்பாசம் உற்றது உன்கழல்' [4]

என்று இருபா இருபஃது குறிக்கும்.

உடம்பு சிறியதொரு இடத்தைத் தனக்கு இடமாகக் கொண்டு நிற்கக் கூடிய ஏகதேசப் பொருளாகும். அதனால் அஃது ஓர் இடத்தை விட்டுப் பெயர்தலும், மற்றோர் இடத்தை அடைதலும் கூடும். ஆனால் உயிரோ எங்கும் நிறைந்து நிற்கின்ற வியாபகப் பொருள். அதனால் அஃது ஒன்றைவிட்டு நீங்குதலும் மற்றொன்றைச் சென்றடைதலும் இல்லை. உயிர் ஒன்றை நீங்குதல் என்பது, அதனைத் தன்னின் வேறு என உணர்தலாகிய அவ் வளவேயாகும். உயிர் ஒன்றை அடைதல் என்பது அப் பொருளைத் தான் உணர்ந்து அதில் அழுந்துதலே யாகும்."[5]

ஞானத்தைப் பெறும் வழிகளாக இருக்கின்ற சரியை, கிரியை, யோகம் என்னும் தவச் செயல்கள் உடம்பின் செயல்கள் ஆகும். ஆனால் ஞானம் பெற்றபின் பாசத்தை விடுதலும், சிவத்தை அடைதலும் உடம்பின் செயல்கள் அல்ல; அறிவின் செயல்களே யாகும். இதுபற்றியே 'தச காரியம்', 'ஞானச் செய்தி' என்று சொல்லப்படும். இங்குச் 'செய்தி' என்பது 'செயல்' என்பதைக் குறிக்கும். மேலும், இது 'தத்வ-தாத்விக ஞானம்' என்றும் பெயர் பெறும்.[6] இந்த ஞானத்தால் தான் 'ஆத்ம போதம்' ஏற்படும்.

தச காரிய படிநிலைகள்

இஞ் ஞானச் செய்தியைப் பத்துப் படிநிலைகளாக வைத்து உணர்த்துவர். அவையாவன: தத்துவ ரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி, ஆன்ம ரூபம், ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி, சிவ ரூபம், சிவ தரிசனம், சிவ யோகம், சிவ போகம். இப்பத்து நிலைகளும் மெய்யுணர்வை எய்தும் முறையையும், அப்போது அறிவில் நிகழும் மாற்றங்களையும் தெரிவிப்பனவாகும்.

ரூபம் - தரிசனம் - சுத்தி

உலகப் பொருள் பற்றிய காட்சி மூன்று நிலைகளில் நிகழ்கிறது. அதாவது உயிர்களின் உணர்வு பொருள்களை முன்னர்ப் பொதுவாகப் பருநிலையில் கண்டு, அவற்றைச் சிறப்பாக நுணுகி ஆராய்ந்து, பின் உணர்ந்து அவற்றின் பொருண்மையைப் பற்றும். இதனை நூல் உணர்ந்தோர் கண்டதைக் கொண்டு காணாததறிற் செல்வது (From the known to unkown) என்றும், படிமுறையால் அறிவு நுணுகி வருதல் என்றும் குறிப்பர்.[7]

தச காரியத்துள் தத்துவம், ஆன்மா, சிவம் என்னும் மூன்றும் முறையே பாசம், பசு, பதி என்னும் முப் பொருள்களே யாகும். இம் முப் பொருள்களை அறிவதில் பொதுவாகக் காணுதல், ஐயமாகக் காணுதல், தெளிவாகக் காணுதல் என்னும் மூன்றும் ‘ஞான வாய்மை’யில் முன்பே விளக்கப்பட்டுள்ளன. அதனால், பொதுக்காட்சி ரூபம் எனப்படும். ஐயக்காட்சி தரிசனம் எனப்படும். தெளிவுக் காட்சி சுத்தி எனப்படும்.

தச காரியப் படிநிலைகள் விளக்கம்

தத்துவம், ஆன்மா ஆகியவற்றின் ரூபம், தரிசனம், சுத்தி ஆகியவற்றையும், சிவத்தின் ரூபம், தரிசனம், யோகம், போகம் ஆகியவற்றையும் விரிவாகப் பார்க்கலாம்.

நிலம் முதல் நாதம் வரை உள்ள முப்பத்தாறு தத்துவங்களையும் கண்டு அவற்றின் தொழிற்பாட்டினை அறிதல் தத்துவ ரூபமாகும்.

இத் தத்துவங்கள் இவ்வாறு தொழிற்படினும் தமக்கென அறிவின்றி ஒன்றையொன்று அறியமாட்டாது சடமாய் விளங்குவன என அறிதல் தத்துவ தரிசனமாகும்.

இவை நித்தப் பொருள்கள் அல்ல; சிலகாலம் கழித்து நீங்குவனவே என்று உணர்ந்து அவற்றில் பற்றுவிடுதல் தத்துவ சுத்தியாகும்.

தத்துவம் அனைத்தும் நோக்கித் தனித்தனிச் செயல்கள் காண்டல்
ஒத்ததன் உருவமாகும் ஒன்றை ஒன்று உணராது ஈது
சத்தியம் சடமே என்னத் தானறிந்திடுதல் காட்சி
நித்தியம் அன்று சின்னாள் நீங்குதல் என்றல் சுத்தி [8]

தத்துவங்கள் அனைத்தையும் நீக்கினோம்; நாம் இப்பொழுது யாவர்க்கும் மேலானோம் என்று எண்ணுதல் ஆன்ம ரூபம். பிறந்தும், இறந்தும் செய்த வினைக்கு ஈடாக நரகில் கிடந்தும், தன்னை எண்ணிப் பார்க்காத ஆன்மா இப்பொழுது தன் செயல்கள் அனைத்தும் திருவருட் செயல்கள் என்று அறிந்து கொள்வது இந்நிலையாகும்.

அனைத்தையும் துறந்தோம் இந்நாளில் யாவர்க்கும் மேல்நாம் என்ன
நினைத்திடல் உயிர்க்கு ரூபம் நீநெடு நாளதாகச்
செனித்தனை நரகினின்றும் திளைத்தனை தெளிந்து சற்றும்
உனைத்தனி நினைந்த தில்லை உறுஞ்செயல் அருளது என்று ஓர்.[9]

ஆன்மாவை மறைத்த அகவிருளாகிய அறியாமை கெடும்படியாக எழுந்திடும் அறிவு இச்சை செயல்கள் மூன்றும் நீங்க ஆன்ம அறிவினுள் அழுந்தி யறிவதும், அங்ஙனம் காணும் தன்மையை, தன்னை அறியும் தன்மையை திருவருளே அறியத் தந்தது என ஆராய்வதும் ஆன்ம தரிசனமாகும்.

அழுந்திட நினைமறைத்த அகவிருள் இரிய மேலே
எழுந்திடும் இச்சை மூன்றும் இரிந்திட நின்பால் ஒத்துஉள்
அழுந்திடல் காட்சியாகும் சொப்பனம் அருள தெங்கே
எழுந்திடும் நினைவடக்கி இசைந்து உனைத்தந்த தோரே[10]

சூரிய வொளியைப் பெற்ற கண் காணுதலை யன்றித் தானும் அவ் வொளியைப் போல காட்டுதலைச் செய்யாது. அதுபோல திருவருள் விளக்கம் பெற்ற உயிர் அவ்வருள் செய்யும் செயலைச் செய்யாது அவ்வருளோடு ஒன்றி அதுவாக விளங்குதலே ஆன்ம சுத்தி யாகும்.

உலகினை விளக்கா நிற்கும் உயர்கதிர் ஒளியதாகி
இலகிய கண் அச்செய்தி விளக்கிடாபோல ஞானம்
நிலவிடும் உயிர் அச்செய்தி நிறுத்திடா அதுவே யாகக்
குலவிடல் துரியம் சுத்திகொள்ளுமேல் சிவமதமாகும்.[11]

ஆன்மாவின் மல இருள் நீங்க சிவனருளை விரும்புதல் சிவ ரூபம். எல்லாவற்றையும் திருவருளின் செயலாகக் காணுதல் சிவ தரிசனம். திருவருட் சத்தியின் வழி ஞானம் பெறுதலும், தானும் தன் செயலற்று நிற்பதும், சத்தியின் செயல்கள் சிவத்திற்கு இல்லை என உணர்ந்தும் நிற்கின்ற நிலை சிவ யோகம். சிறிதும் பிரியாமல் சிவத்தை உயிர்க்குயிராக வைத்து அனுபவித்தலே தெவிட்டாத சிவ போகமாம்.

பித்ததாய் உளத்தின் நின்ற பிரிவிருள் அகல ஞான
வித்ததாய் நிற்கும் வீரம் விட்டுஅருள் இச்சை மேவ
வைத்தது ரூபமாகும் வரும் அருட் செயலதாக
ஒத்தது காட்சியாகும் உயர்சிவம் அதற்குத்தானே[12]

சத்தியின் செயல்க ளெல்லாம் தற்சிவம் அதனுக்கு இன்றாய்
ஒத்திடல் உணர்வளித்தல் உயர் சிவயோக மாகும்
பித்ததுவாகிச் சற்றும் பின்னமது அற்றுத் தன்னுள்
வைத்து உயிர் போகமாக வளர்தல் ஆராமை தானே[13]

தச காரியம் நிகழும் முறை

இவ்வாறு நிகழும் தச காரியம் ஒன்றன்பின் ஒன்றாய் வரிசையாக நிகழாமல் தம்முட் கலந்தும் ஒன்றன்கண் ஒன்று உடனாயும் நிகழ்வனவாம்.

ஆன்ம ரூபத்தில் தத்துவ ரூபம், தத்துவ தரிசனம் இரண்டும் உடன் நிகழும். தத்துவ தரிசனம் ஆன்ம தரிசனத்தை அடைந்தே முற்றுப்பெறும். சிவ ரூபத்தில் ஆன்ம தரிசனமும் தத்துவ சுத்தியும் முற்றுப்பெறும். ஆன்ம தரிசனம் சிவ தரிசனத்தை

அடையும். சிவ தரிசனத்தில் ஆன்ம சுத்தி உடன் நிகழ்வதாகும். அது சிவ யோகத்தை அடைந்து முற்றுப்பெறும். சிவ யோகம் சிவ போகத்தில் சென்று நிறைவு பெறும்.

சிவ ரூபம், சிவ தரிசனம், சிவ யோகம் என மூன்றும் ‘யுகபத் அவஸ்தாத் திரயம்’ என்று ஸித்தம் என்னும் ஆகமம் கூறும். யுகபத் என்பது ஒரே நேரத்தில் நிகழ்வதைக் குறிக்கும்.[14]

தச காரியமும் கேட்டல் முதலியனவும்

ஞான வாய்மையில் ஞானப் படிநிலைகளாகச் சொல்லப்பட்ட கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல் என்னும் நான்கு படிநிலைகளுள் தசகாரியம் பத்தும் அடங்கி நிற்கும். கேட்டலில் நிகழும் பொதுக்காட்சி தச காரியத்தில் ரூபமாக அமையும். சிந்தித்தலின் ஐயக் காட்சி தரிசனமாகும். தெளிவுக் காட்சி சுத்தி என்றும் சொல்லப்படும்.

எனவே, கேட்டலில் தத்துவ ரூபம், ஆன்ம ரூபம், சிவ ரூபம் என மூன்றும், சிந்தித்தலில் தத்துவ தரிசனம், ஆன்ம தரிசனம், சிவ தரிசனம் என மூன்றும், தெளிதலில் தத்துவ சுத்தி, ஆன்ம சுத்தி, சிவ யோகம் என மூன்றும், நிட்டையில் சிவ போகம் ஒன்றுமட்டும் ஆக தச காரியங்கள் பத்தாக அமைந்து நிற்கும்.

தச காரியமும் நின்மல அவத்தையும்

கேவலம், சகலம் என்னும் இரண்டிலும் நில்லாது திருவருட் சார்பில் நிலைபெற்று நிற்பது சுத்த அவத்தை யாகும். அஃதாவது அறியாமையும் உண்டாகாமல், புலனறிவும் பொருந்தாமல் சிவானுபவம் நிகழ்தலாகும். இதுவே சுத்த நிலையாகும். இதுவே ‘நின் மலம்’ எனவும் வழங்கப்படும்.

1. நின் மல சாக்கிரம் (நனவு)	தத்துவ ரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி, ஆன்ம ரூபம், **நானே முதல் என்றல்.**
2. நின் மல சொப்பனம் (கனவு)	ஆன்ம தரிசனம், சிவ ரூபம், **அருளே முதல் என்றல்,** பேதாத்துவிதம், கண்ணொளியும் கதிரோனும்போல
3. நின் மல சுழுத்தி (உறக்கம்)	தச காரியம் இல்லை, **ஐந்தொழிலும் முற்றுணர்வும் உடையேன் எனல்** அருட்செயலைப் பெறவே எண்ணுதல் பின் அதை நீக்கல்
4. நின் மல துரியம் (பேருறக்கம்)	ஆன்மசுத்தி, சிவதரிசனம், சிவயோகம், **அருளே யாதல்,** பேதா பேதாத்துவிதம் உடலும் உயிரும்போல

5. நின் மல துரியாதீதம் (உயிர்ப்படங்கல்)	ஆன்மலாபம், சிவ போகம், பெருநிலை, **சிவமேயாதல்**, சிவத்தை உயிர்க்கு உயிராய் உணர்தல் அபேதாத்துவிதம் ஆன்ம ஞானமும் ஆன்மாவும்போல[15]

இந் நிலைகளை ‘செப்பரிய தசகாரியங்கள் என்னும் அஞ்சவத்தைத் தெளிவுண்டாமே’[16] என்று சுவாமிநாதர் தச காரியம் சொல்லும்.

இவற்றுள் நின்மல சாக்கிரம் தற்போதம் அறா நிலை. தத்துவங்களின் நீங்கியதால் தன்னை மேல் என்று கருதிய நிலை. ‘அத்தினால் நான் மேல் என்றல்.’[17] அதாவது தத்துவங்கள் சடம், ஏகதேசம்; நானோ சித்து, வியாபகம். எனவே, நான் மேலான பிரம்மம் என நிற்கும் ஆன்ம ரூப நிலை. இவ்வறிவோடு, இந்திரியங்களால் வரும் போகத்தை அதுஅதுவாய்த் தேய்ந்து நுகர்ந்து இடர்ப்படுதலால் சாக்கிரத்தும் ஆன்மா சுத்தன் அல்ல என்று எளிதில் காட்டிவிடும்.

நின்மல சுழுத்தியில் அறியாமையாகிய நிலை என்பதால் ‘இருள் சுழுத்தி’ என்றும், தச காரியம் எதுவும் இல்லை யாதலால் ‘நீக்கும் சுழுத்தி’[18] என்றும் பஞ்சாக்கர பஃறொடையில் குறிப்பிடப்பெறும். அருள் தன்னிடம் நிறைவாக விளங்கும் நிலையில் தன்னிடத்து திருவருள் உள்ளதால் அருள் எனக்கு கருவியாகும் என்று அகந்தை யுறுவதும், அருள் செய்யும் தொழிலாகிய ஐந்தொழிலை தானும் செய்யலாம் என்று மருளினால் எண்ணுதலாகும். இதனை, ‘மருளினால் எண்ணல்’ என்று சுவாமிநாதர் தச காரியம் குறிப்பிடும். இந்நிலை குருவருளால் உடனடியாக நீக்கப் பெறுவதாகும்.[19]

“நான் சிவ ரூபமாய் அடங்கினதால் (நின்மல சொப்பனத்தில் சிவ ரூபம்) எனக்குச் சிவனோடு ஒப்ப பஞ்ச கிருத்தியமும் சர்வஞ்ஞத்துவமும் உண்டாக வேண்டுமென்று உணர்ந்த மயக்கம் ஒன்றுமே ஆம். ஆனதினாலே, இந்த சுழுத்தி அவத்தைக்குச் சூத்திரமும் இல்லை; தச காரியங்களுள் அதில் அடங்கும் ஞானச் செய்தியும் இல்லை என்று ஸ்ரீஅம்பலவாண தேசிகர் அருளிய சிவஞான போதச் சிந்தனையின் திருவாக்கால் அறியலாம்” என்று குஞ்சிதபாதம் குறிப்பர்.[20]

எனவே, இவ் வைந்தனுள் முதலாகிய நின்மலசாக்கிரம், மூன்றாவதாகிய நின்மல சுழுத்தியும் நீத்து, எஞ்சிய நிலைகளான நின்மல சொப்பனம், நின்மல துரியம், நின்மல துரியாதீதம் என்ற மூன்று மட்டும் எடுத்துக் கொள்ளப்படும். இவையே சிவ போகத்திற்கு இட்டுச் செல்லும் நிலைகளாகும்.

சிவப்பிரகாசம் காட்டும் தசகாரியம்

ஐந்தவத்தை நிலைகளில் நின்மல சொப்பன நிலையில் சிவரூபத்துள் நிகழும் ஆன்ம தரிசனத்தையும், நின்மல துரிய நிலையில் சிவதரிசனத்தின் பின் நிகழும் ஆன்ம சுத்தியையும் எடுத்துக்கொண்டு, துரியாதீத நிலையில் சிவ போகம் அநுபவிக்கும் நிட்டை நிலையை ஆன்ம லாபமாகவும் வைத்து சிவப்பிரகாசம் தசகாரியத்தை ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி, ஆன்ம லாபம் என மூன்றாக வைத்துப் பேசும்.

"தேசுற மருவும் ஆன்ம
 தெரிசனம் ஆன்ம சுத்தி
ஆசிலா ஆன்ம லாபம்
 ஆக மூன்றாகும் மூன்றும்
பாசமது அகல ஞானம்
 பற்றல்தான் பணியை நீத்தல்
ஏசில் நேயத்து அழுந்தல்
 எனும் இவற்று அடங்குமன்றே" (சிவ.71)

'பாசமது அகல ஞானம் பற்றல்' என்பது ஆன்ம தரிசனத்தையும், 'தன் பணி நீத்து இறைபணி நிற்றல்' என்பது ஆன்ம சுத்தியையும், 'ஏசில் நேயத்து அழுந்துதல்' என்பது ஆன்ம லாபத்தையும் குறிக்கும். இம் மூன்றையும்,

"மன்னருள் தன்னின் மன்னுயிர் மன்னுதல்
இன்னுயிர்த் தரிசனம் என்பர் நல்லோர்
சுத்தி தன் போதம் தோன்றாது இருக்கை
அத்தமிகு லாபம் நேயத்து அழுந்துதல்"[21]

என்று உரூப சொரூப அகவல் கூறுவதாக மதுரைச் சிவப்பிரகாசர் எடுத்துக்காட்டுவர்.

ஆன்ம தரிசனம்

ஆன்மா எதையும் தன் அறிவினாலே தானே அறிகின்ற ஆற்றல் உடையது அல்ல. அறிவிக்கும் துணையின்றித் தானே ஒன்றை அறியாது. முதல்வனது திருவருள் உடனாக நின்று உணர்த்த அது கருவிகளின் துணையால் அறிந்து வரும். ஆயின் அதனை உணராமல் 'என்னறிவால் யான் அறிகிறேன்' என்று எண்ணி வரும்.

பக்குவ முதிர்வால் தன்னுடைய கருவி கரணங்கள் சடப் பொருள் எனவும் அவை தன்னின் வேறாவன என்றும், தனக்கு அறிவித்து வழிநடத்துவது திருவருளே என்றும் தெளிந்து தன் முனைப்பற்று தனது உண்மையான இயல்பை திருவருளால் உணர்ந்து நிற்றலே ஆன்ம தரிசனம் ஆகும்.

"தன்னறிவு அதனால் ஏதும்
 தனக்கு அறிவு இல்லையேனும்
தன்னறி வாக எல்லாம்
 தனித்தனிப் பயன் அருந்தும்
தன்னறிவு அறியும் தன்மை
 தன்னாலே தனை அறிந்தால்

தன்னையும் தானே காணும்
தானது வாகி நின்றே" (சிவ.72)

என்பது சிவப்பிரகாசம். இப் பாடலுக்கு, 'அருளாலே அருளைத் தரிசித்த பின் தன்னைத் தரிசிக்கலாம்' என்று விளக்கம் கூறுவர் ஆ.ஈசுரமூர்த்திப் பிள்ளை.[22]

ஆன்மாவானது தன்னை ஆன்மா என்று திருவருளால் உணரப்பெறுதலை 'தன்னையே தானே காணும்' எனச் சிவப்பிரகாசம் உணர்த்தும். இதனை, 'ஆவிதான் சங்கமே ஆகத் தகும்' என்று உபாய நிட்டை வெண்பா கூறும். 'தன் உயிரைத் தான் தனக்கு உரித்தாகப் பெற்றவனை' என்னும் பொருளில் 'தன்னுயிர் தானறப் பெற்றானை' என்று திருவள்ளுவர் அருளிச் செய்தார். இங்கு அறப்பெறுதல் என்பது முழுமையாகப் பெறுதலைக் குறிக்கும்.[23]

'தன்னை அறியும் அறிவை அறிந்தபின்
தன்னையே அர்ச்சிக்கத் தானிருந் தானே" [24]

என வரும் திருமந்திரமும் இங்கு நோக்கத்தக்கது. இதனை 'மெய்யறிவில் தன்னை அறிதலாகிய முதற்படி' என்பர் அறிஞர்.[25]

ஆன்ம சுத்தி

ஆன்மா தத்துவங்களுடைய தன்மைகளை உணரத்தொடங்கும்போது ஒவ்வொன்றையும் உய்த்துணர்ந்து வரும். அவை தன்னின் வேறான சடம் என்று அறிகின்றபோது அங்கே உதிப்பது ஒளி மிகுந்த ஞானமாகிய பதி ஞானம், இந்த ஞானமே திருவருள். அங்ஙனம் வெளிப்பட்ட திருவருளையே உண்மையாகக் கொண்டு அவ் வருளில் அடங்கி அவ் வருளே தானாகி நிற்றல் ஆன்ம சுத்தி யாகும். இந் நிலையை,

"தத்துவ மான வற்றின்
தன்மைகள் உணருங் காலை
உய்த்து உணர்ந்திட உதிப்பது
ஒளிவளர் ஞான மாகும்
அத்தன்மை அறியு மாறும்
அகன்றிட அதுவாய் ஆன்மா
சுத்தமாம் சுத்த ஞானத்து
ஒருமுதல் தோன்று மன்றே" (சிவ.73)

என்று சிவப்பிரகாசம் உணர்த்தும்,

இச் சிவப்பிரகாசத்தில், 'அத்தன்மை அறியுமாறும் அகன்றிட' என்பது தற் போதம் நீங்குதலையும், 'அதுவாய்' என்பது அருளேயாய் நிற்றலையும் குறிக்கும். 'ஆன்மா சுத்தமாம்' என்பது ஆன்மாவின் சுத்த நிலையைக் குறிக்கும். 'சுத்தஞானத்து ஒரு

முதல் தோன்றும்' என்பது அந்த சுத்த ஞானத்தில் (திருவருளாகிய சத்தி) ஒப்பற்ற முதலாகிய சிவ ஞேயம் (சிவ தரிசனம்) விளங்கித் தோன்றும்.

"மின்னுற்ற சிந்தை விழித்தேன்; விழித்தலும்
தன்னுற்ற சோதித் தலைவன் இணையிலி
பொன்னுற்ற மேனிப் புரிசடை நந்தியும்
என்னுற்று அறிவானான் என் விழித்தானே" [26]

என வரும் திருமந்திரம், திருவருள் மிக்கு விளங்க அதனால் ஆன்மா பெற்ற சிவதரிசனத்தைக் கூறும். உயிர் திருவருளாகிய சத்தியின் அருள் ஒளியால் சிவத்தை உணரும் நிலை சிவ தரிசனம். அதில் கிடைக்கும் 'அருள் அநுபவ நிலை' சிவயோகம். அதன்பின் சிவத்தை ஆன்மா அநுபவிக்கும் 'ஆனந்த அநுபவம்' சிவபோகம்.

"என்செயல் அழிந்து அழிந்து அழிய மெய்ச்
சிந்தைவர என்று நின் தெரிசனப்படுவேனோ"

என வரும் திருப்புகழ் தற்போதம் நீங்க, அருள் கூட்ட, சிவ தரிசனம் பெறும் நிலையைக் கூறுகிறது.

சிவ தரிசனமாவது சிவனுடைய திருவடி, திருமுகம், திருமுடிகளினுடைய உண்மையை ஐயந்திரிபற அருளால் அறிந்து தெளிந்து சகல கேவலங்களில் பொருந்தாமல் தன் செயலற்று எல்லாம் திருவருளாகிய ஞானத்தின் செயலேயாய் அந்த ஞானத்தை எங்கும், கண்டும் நுகர்வதாகும். திருவருள் உயிரிடத்தில் யான் எனது என்னும் தற்போதம் நீங்கும்படி நிலைபெற்றது சிவன் திருவடியாகும்.

எங்கும் சிவமாகத் தோன்றுவது திருமுகமாகும். அஃதாவது தன் புலன் நுகர்வுகளை அவன் அவள் அதுவாய் நோக்குமிடம் எல்லாம் சிவன் பேரருட் செல்வத்தைக் கண்டு திளைப்பதாம்.

சிவானந்தத்தில் பரவசப்படுதல் திருமுடியாகும். 'எல்லாம் ஈசனிடத்திலும் ஈசன் எல்லா இடத்திலும் நின்ற அந்நிலை அறிதல்' என்பது சித்தியார்.

"பரை உயிரில் யான் எனது என்று அறநின்றது அடியாம்
பார்ப்பிடமெங்கும் சிவமாய்த் தோன்றுவது முகமாம்
உரையிறந்த சுகமதுவே முடியாகும்." [27]

என வரும் உண்மை நெறி விளக்கம் சிவ தரிசனத்தைக் கூறும்.

சிவஞான போத மங்கல வாழ்த்துரையில் 'பொல்லார் இணைமலர்' என்பதற்கு பொல்லாத பிள்ளையாருடைய ஞான சத்தி, கிரியா சத்தி என்றும் திருவடிகள் என்று சிவஞான போதச் சிற்றுரையில் எழுதியுள்ளமையும்,

திரோதாயியும் கிரியா சத்தியும் திருவடிகள், ஞான சத்தி திருமுகம் என்று இச்சா சத்தி சொன்னது அறிக என்று ஞான பூசா விதி யுரையில் எழுதியுள்ளமையையும் காஞ்சி ஞானப்ரகாச சுவாமிகள் எடுத்துக் காட்டுவர்.[28]

"ஏதடி என்றிடில் அடியான்எனது அற நின்றதுதான்
எங்கணுமாம் அருள்முகஞ் செய்இயல்பு திருமுகமாம்
மூதுயிர் மேல் ஏதாகும் அது முடியாம்"

என்பது ஞான பூசா விதி.

"யான் எனது என்று அற்ற இடமே திருவடியா
மோன பரானந்தம் முடியாக - ஞானம்
திருவுருவா இச்சை செயல் அறிவு கண்ணா
அருளதுவே செங்கை அலரா - இருநிலமே
சந்நிதியா நிற்கும் தனிச்சுடரே எவ்வுயிர்க்கும்
பின்னமற நின்ற பெருமானே" [29]

என்று குமரகுருபரர் சிவ தரிசனத்தை விளக்கிக் காட்டுவர்.

ஆன்மாவினிடத்தில் பொருந்திய ஞானமே முதல்வனுடைய அருள் என்றும், சிவத்தினது சிற்சத்தி என்றும் கூறப்படும். அருளாகிய சத்தி, சிவம் பொருளாய் இருக்க, தான் அதன் பண்பாய் அதன்கண் வேற்றுமையின்றி இருக்கும். அங்ஙனம் இருக்கும்பொழுது அது ஞான மயமாய் இருக்கும்.

சூரியன் இல்லாமல் ஒளி தோன்றாததுபோல, ஒளியின் துணையின்றி சூரியனை அறிந்துகொள்ள இயலாததுபோல சிவமும் சத்தியும் பிரிப்பின்றி நின்று உயிர்களுக்கு பெருங்கருணை பாலிக்கும்.

"உறைதரும் உணர்வும் அன்றி
  அதன்முதல் உள்ளது என்று இங்கு
அறைவது என்னின்இல் அண்ணல்
  அருள் எனும் அதுவே அன்றி
நிறைஒளி முதல்அது அன்றி
  நின்றிடா நிமல னாகும்
இறைவன் முதல் அவன்தன்
  இலங்கருள் சத்தி யாமே" (சிவ.74)

என வரும் சிவப்பிரகாசம், சிவம் முதல் என்றும், அவனிடத்து விளங்கும் அருள் அவனது சத்தியாகும் என்று உரைக்கும். சிவனிடத்துப் பிரியாது நிற்கும் திருவருளாகிய

அச் சத்தியே ஆன்மாக்களின் மலங்களைப் பாகம் வருத்தித் தனக்கு முதலாகிய சிவத்துடன் கூட்டும்.

“சுத்தமாம் சத்தி ஞானச்
 சுடராகும் சிவம்ஒழிந்து அச்
சத்திதான் இன்றாம் முன்னைத்
 தகவிலா மலங்கள் வாட்டி
அத்தனை அருளும் எங்கும்
 அடைந்திடும் இருள் அகற்றி
வைத்திடும் இரவி காட்டும்
 வளர்ஒளி போல் மகிழ்ந்தே” (சிவ.75)

எனவரும் சிவப்பிரகாசம். ‘உலகத்தின் புற இருளை நீக்குகின்ற சூரியனின் ஒளி சூரியனைக் காட்டுவதுபோல சத்தியாகிய பேரொளி ஆன்மாவை அநாதியே பந்தித்து உள்ள அக இருளாகிய தகவிலா மும்மலங்களையும் வாட்டித் தன் முதலாகிய சிவத்தைக் காட்டியருளும்’ என்று கூறும்.

“அருளது சத்தியாகும் அரன்தனக்கு அருளை இன்றித்
தெருள்சிவம் இல்லை அந்தச்சிவம் இன்றிச் சத்தி இல்லை
மருளினை அருளினால் வாட்டி மன் உயிர்க்கு அளிப்பான் கண்கட்கு
இருளினை ஒளியால் ஓட்டும் இரவியைப் போல ஈசன்” [30]

என வரும் சித்தியார் இச் சிவப்பிரகாசத்தோடு ஒப்பிட்டுச் சிந்திக்கத் தக்கதாம்.

இதனை,

“அவனிஞாயிறு போன்று அருள்புரிந்து” [31]

என்று திருவிசைப்பாவில் கருவூர்த் தேவர் குறிப்பர்.

முன்னர்ச் சத்தியை அறிந்து பின் அதன் வழியாகச் சிவத்தை அறிதல் வேண்டும். இதைக் கேன உபநிடதமும் கூறும். இங்ஙனம் சத்தியைத் தெளிவாக அறியும் நிலையே யோகம் எனப்பட்டது. ‘இவ்வாறு நிகழ்வது எவ்வாறாம் எனின் உலகில் அன்னை முலைப்பாலதனைப் புதல்வர் அனுபவிக்குமாறு நிகழ்வதென்று அறிவாயாக’ என்று முத்தி நிச்சயத்தில் குருஞான சம்பந்தர் அருளிச் செய்வர்.[32]

“தாயுந் தந்தை பல்லுயிர்க்குந்
 தாமே யாய தலைவனார்” [33]

என வரும் சுந்தரர் வாக்கும்,

“தாயாய் முலையைத் தருவானே
தாரா தொழிந்தாற் சவலையாய்
நாயேன் கழிந்து போவேனோ
நம்பி யினித்தான் நல்குதியே
தாயே என்று உன் தாளடைந்தேன்
தயாநீ என்பால் இல்லையே
நாயேன் அடிமை உடனாக
ஆண்டாய் நான்தான் வேண்டாவோ” [34]

என வரும் மாணிக்கவாசகர் வாக்கும் இங்கு ஆழ்ந்து சிந்திக்கும் திறன் தருவன.

முத்திக்கு முடிநிலை வழியாகிய ஞானம் சத்தியே ஆகும். ‘ஞேயமாகிய சிவத்தில் ஆன்மாவைச் சேர்ப்பதே அச் சத்தியின் வேலை’ என்பார் அம்பலவாண தேசிகர்.

“வாங்கியே சிவத்தில் உன்னை வைத்தது மதியதாகும்” [35]

என்பது அம்பலவாணர் தச காரியம்.

“சிவார்க்க சத்திதீதித்யாஸமாத்ததீ க்ருதசித த்ருசா
சிவம் சக்தியா திஸ்ஸார்த்தம் பச்ய யாத்மா கதாவிருதி’

எனவரும் ஆகம வசனம், “ஆன்மா சிவ சூரியனது சத்தியாகிய ஒளியால் ஆற்றலுடையதாகச் செய்யப்பட்ட ஞானக் கண்ணால் சத்தி முதலியவற்றோடு கூடச் சிவனைக் காண்கிறது” என்று உரைக்கும்.[36]

ஆன்ம சுத்தியின் பயன்

மலங்கள் நீங்கிய சுத்த நிலையில் ஆன்மா கரணங்கள் ஏதும் கொள்ளாது திருவருள் வெளிக்குள் அடங்கி நிற்கும். அப்போது அதன் வியாபக அறிவு விளங்கித் தோன்றும். இதுவே ஆன்மா பெறும் மேலான பயனாகும்.

“தகவிலா மலங்கள் நீத்த
அந்நிலை கரண மாகா
வகை அதில் அறிவடங்கி
மன்னிட வியாபி யாய
வான்பயன் தோன்றும் அன்றே” (சிவ.78)

பெத்த நிலையில் ஆன்மா மலச் சார்பினால் தனது சொரூபத்தை அறியாது இருந்தது. சுத்த நிலையில் அருட்சார்பால் தனது இயல்பாகிய வியாபக அறிவை அறிந்துகொள்ளவில்லை எனில் பேரின்பத்திற்கு ஏதுவாகிய திருவருளை உணர்தலும் இல்லை; அச் சிவானந்தப் பெருவாழ்வைப் பெறுதலும் இல்லையாய் முடியும். எனவேதான் இதனை **‘வான் பயன்’** என்று உமாபதி சிவம் சிறப்பித்தார்.

இந் நிலையை, ‘கண் பிற பொருள்களைக் காணும்; தன்னைக் காணாது. காரணம் அப்பொருள்களுக்குக் கண்ணைக் காட்டும் வலிமையில்லை. கண்ணைக் கண்ணுக்குக் காட்டுவது கண்ணாடி. அக் கண்ணாடி போல்வது அருள். அவ்வருள் சுத்தத்தில் ஆன்மாவிற்கு அவ்வான்மாவைக் காட்டும். காட்டாதெனின் அவ்வான்மா அருளைக் காணவில்லையென்பதாம். காணவில்லையெனின் அவ்வான்மா திருவடியைக் கூடவுமில்லை யென்பதாம்’ என்று விளக்கிக் காட்டுவர் ஆ.ஈசுரமூர்த்திப் பிள்ளை.[37]

ஆன்ம சுத்தியில், வியாபக ஞானமாகிய மேலான பயன் ஆன்மாவிற்குத் தோன்றும் என்னும் முதன்மையான கருத்தை சிவப்பிரகாசம் இதன்மூலம் வலியுறுத்தும்.

சிவனின் அருளை இடமாகக்கொண்டு ஆன்ம சுத்தியில் நிற்கும் ஆன்மா கேவல சகல மிரண்டும் நீங்கி சுத்த நிலையில் அருளின் முதலாகிய சிவத்தோடு கூடி ஞேயத்தழுந்துதலை,

“பொற்புறு கருவி யாவும்
புணராமே அறிவி லாமற்
சொற்பெறு அதீதம் வந்து
தோன்றாமே தோன்றி நின்ற
சிற்பரம் அதனால் உள்ளச்
செயல் அறுத்திட உதிக்கும்
தற்பரமாகி நிற்றல்
சாக்கிர அதீதம் தானே” *(சிவ.80)*

என்று சிவப்பிரகாசம் கூறும்.

பொலிவுமிக்க கருவிகள் யாவும் பொருந்தும் சகல நிலைக்கு வேறுபடாமலும், அறிவின்றி இருக்கும் எனச் சொல்லப்படும் கேவல நிலை வந்து கூடாமலும் ஆகிய இரண்டையும் கடந்த நிலையில் ஆன்மாவினிடத்திலே மேலான சிற்பரம் (சிவஞானம்) தோன்றும். அதன் துணைகொண்டு தன்முனைப் பற்று அதாவது தன் பணியை நீத்து இறைபணி நின்று ஞானவடிவாய் நிற்கவே உதிக்கும் தற்பரம் ஆகிய சிவத்துடன் ஏகனாகி நிற்றலே சாக்கிர அதீதமாகும்.

தோன்றி நின்ற சிற்பரம் (மேலான சிவஞானம்), அதனால் உள்ளச் செயல் அறுத்தல் (தன்பணி நீத்தல்), செயல்அற்றபோது உதிக்கும் தற்பரம் (மேலான சிவம்), அத் தற்பரம் ஆகி நிற்றல் (ஏகனாகி நிற்றல்) என்று ஒன்றன்பின் ஒன்றாக நிகழும் முறைப்படி சிவப்பிரகாசம் கூறுகிறது. இவ் வுண்மையை அம் முறையிலேயே எய்துதல் (நிட்டைக் கிரமம்) நிற்கும் முறையாகும். இந்த ஆக்கம் சிவப்பேறு. சிவத்தைப் பெறுந் திறத்துள் நிகழ்வன எல்லாம் சிவப்பேற்றில் அடங்கும்.

ஆக்கத்தின் முன்னரே நீக்கம் உண்டு. அந் நீக்கம் சகல நீக்கமும், கேவல நீக்கமும் என்ற இரு நீக்கமாகும். 1) பொற்புறு கருவி யாவும் புணராமே நீக்குவது ஒன்று. 2) அறிவிலாமைச் சொற்பெறும் அதீதம் வந்து தோன்றாமே நீக்குவது ஒன்று. அப் புணராமையும், தோன்றாமையும் பாச வீடு என அடங்கும். 'வீடு பேறு' என்பதில் விடுவது பாசத்தை, பெறுவது சிவத்தை.

பொற்புறு கருவி யாவும் புணர்ந்த நிலை சகல சாக்கிரம். அறியாமையாகிய நிலைஉற அக் கருவிகளின் நீக்கமே கேவலாதீதம். (சகல) சாக்கிரமும் (கேவலத்தில்) அதீதமும் சாக்கிராதீதம் எனத் துவந்துவ சமாசம் ஆகலாம்.[38]

சகலாவத்தையின் நீங்கிச் சுத்தாவத்தை அடைவதற்கு இடையே கேவலாவத்தை அடைந்தே நீங்கும் என்பார் காஞ்சி ஞானப்ரகாச சுவாமிகள்.[39] எனவேதான் சகலம் சொல்லி, பின் கேவலம் சொல்லப்பட்டது.

இச் சாக்கிராதீத நிலையை ஞானாமிர்தம் 'இருள்தீர் காட்சி அருளோடு புணர்தல்'[40] என்று கூறும்.

'தற்பரமாகி நிற்றல் சாக்கிர அதீதந் தானே' என்பதற்குப் பிரபஞ்ச ரூபத்தைப் பற்றி நின்ற கண்ணானது திரும்பிச் சூரியனை நோக்குமளவில் அந்தப் பிரபஞ்ச ரூபங்கள் தெரியாதது போல' என்று பொருள் கொள்வர் மதுரை சிவப்பிரகாசர். மேலும், ஆன்மா தற்போதமாய் நிற்பதும் செய்யாமல், தான் என்கிற முதல் கெடுவதுஞ் செய்யாமல், தற்போதம் கெட்டு அந்த சிவத்தோடும் கூடி இரண்டற நின்று அனுபவிப்பதை,

'அவமாய தேவர் அவகதியில் அழுந்தாமே
பவமாயங் காத்தென்னை ஆண்டு கொண்ட பரஞ்சோதி
நவமாய செஞ்சுடர் நல்குதலும் நாம்ஒழிந்து
சிவமானவா பாடித் தெள்ளேணம் கொட்டாமோ'

எனும் திருவாசகத்தில், 'சிவமானவா' என்னும் சொல் உணர்த்துவதாகவும் கூறுவர்.[41]

இத்தகைய சாக்கிராதீத நிலையில் பொற்புறு கருவி யாவும் புணராமைக்கு உபாயமாக,

'ஒடுங்கிடா கரணந் தாமே
    ஒடுங்குமாறு உணர்ந்து ஒடுக்க
ஒடுங்கிடும் என்னில் நின்றது
    ஒடுங்கிடா கரணம் எல்லாம்
ஒடுங்கிடா ஒடுங்கா உள்ள
    உணர்வுதான் ஒழியும் வேறாய்

ஒடுங்கிடின் அன்றி மற்ற
உண்மையை உணர ஒணாதே" (சிவ.81)

என்று சிவப்பிரகாசம் காட்டும்.

உயிர்களைச் சார்ந்து நிற்கும் கருவிகள் தாமாகவே அடங்கமாட்டா. தற்போதம் எனப்படும் ஆன்மாவின் சிற்றறிவால் அடக்கலாம் எனில், சிற்றறிவு அடங்காது நிற்கும். கருவிகள் அடங்கவே சிற்றறிவும் அடங்குமெனின் அச் சிற்றறிவுங் கெட்டு கேவலம் வந்து மூளும். ஆகையால், கருவிகளை திருவருளில் ஒடுக்கி தன்முனைப்பும் அற்று நிற்றலே கருவிகள் புணராத உண்மையான ஒடுக்கமாகும்.

உயிரைப்பற்றி நிற்கும் கருவிகள் யாவும் புறத்தே சென்று உயிர்க்கு அறிவைக் கொடுக்கும்பொழுது அந்த அந்தப் பொருள்களில் பொருந்தி நின்று அதனைச் சுட்டியறிவது ஆன்ம போதத்தின் இயல்பு ஆகும். சூரியனின் ஒளி விளங்கித் தோன்றும் பகலில் ஏற்றி வைக்கப்பட்ட விளக்கு எவ்வாறு ஒளி மங்கி நிற்கிறதோ அதுபோல இறைவனின் பேரொளியில் உயிரின் தற்போதம் தன்முனைப்பற்று நிற்குமாயின் ஆன்மா சிவத்தை யடையும். அதுவே மாயப் பிறப்பினை அறுப்பதற்கு வழியாகும்.

"பற்றிடும் கருவி யாவும்
படர்ந்து உணர்வளிக்கும் காலை
உற்று அறிந்திடுவது ஒன்றின்
உணர்வினின் உண்மை ஆகும்
மற்றது பகல் விளக்கின்
மாய்ந்திட வருவது உண்டேல்
பெற்றிடும் அதனை மாயப்
பிறப்பினை அறுக்க லாமே" (சிவ.82)

CENTRE FOR SHAIVA STUDIES
Puducherry

இதுவே, 'அறிவிலாமைச் சொற்பெறும் அதீதம் வந்து தோன்றாமை' ஆகும். கருவிகள் ஒடுங்குதல் பாச ஞானம் போதலையும், தற்போதம் இன்றி நிற்றல் பசு ஞானம் போதலையும் குறிப்பிடும்.

ஆன்ம லாபம்

பாச ஞானத்தாலும் பசு ஞானத்தாலும் சிவனை அறியாத ஆன்மா பதி ஞானத்தால் விளக்கமுற்ற தன்மையில் தனது சிற்றறிவு ஒழிந்து பதியாகிய சிவ மொன்றையே அறிந்து அதில் அழுந்துவதே 'ஞான நிட்டை' எனப்படும். இதுவே முடிந்த பயனாகிய 'ஆன்ம லாபம்' என்றும் சொல்லப்படும்.

"பாசமா ஞானத் தாலும்
படர்பசு ஞானத் தாலும்

ஈசனை உணர வொண்ணாது
    இறையருள் ஞானம் நண்ணித்
தேசுறும் அதனால் முன்னைச்
    சிற்றறிவு ஒழிந்து சேர்ந்து
நேசமொடு உயர் பரத்து
    நிற்பது ஞான நிட்டை" (சிவ.84)

இச் சிவப்பிரகாசப் பாடலுக்கு,

"உரை உணர்வு இறந்து நின்று உணர்வது ஓர் உணர்வே" [42]

என்னும் திருவாசகத்தின் வாசகமும்,

"உணர்ந்தார்க்கு உணர்வரியோன்" [43]

என்னும் திருக்கோவையார் வாக்கும் ஈண்டுச் சிந்திக்கத்தக்கன.

'இறைவன் வாக்கு மனாதீதன்' என்பதில் 'வாக்கு' என்பது பாசஞானத்தையும், 'மனம்' என்பது பசு ஞானத்தையும் குறிக்கும் என்று சிவஞான சுவாமிகள் மாபாடியத்தில் குறிப்பர். அதனால் திருவாசகத்தில் வரும் 'உரை' என்பது பாச ஞானத்தையும், 'உணர்வு' என்பது பசுஞானத்தையும் குறிக்கும். இறத்தல் - கடந்து நிற்றல். 'உரை உணர்வுக்கு எட்டா ஒருவன்' என்பது உண்மை விளக்கம். இவ்விரு ஞானத்தாலும் இறைவன் உணரப்படான் ஆதலின் 'உரையுணர்வு இறந்து நின்று' எனவும், இவற்றான் உணரப்படாதவன் ஆயினும் பதி ஞானத்தால் உணரப்படுதலின் 'உணர்வது' எனவும், அவன் இங்ஙனம் நிற்றல், சூக்கும சித்தாய் நிற்கும் தனித் தன்மை யாதலின் 'ஓர் உணர்வே' என்று அருளிச் செய்தார்.

இங்ஙனம் பதி ஞானத்தால் 'உணர்ந்தார்க்கு உணர் வரியோன்' இறைவன் ஆவான். "உணர்ந்தார்" என்பதற்கு 'அருள் நிலையில் நின்று வேறாக உணர்ந்தார்க்கு' என்பதும், "உணர் வரியோன்" என்பதற்கு 'அங்ஙனம் வேறு நில்லாது அவரைத் தன் திருவடி வியாபகத்துள் அடக்கி ஆனந்தத்துள் திளைத்திருக்கச் செய்பவன்' [44] என்பதும் ஆகிய இச் செய்திகளை விளக்கி யமைவதே 'பாசமா ஞானத்தாலும் படர்பசு ஞானத்தாலும் ஈசனை அறியவொண்ணா இறையருள் ஞானம் நண்ணி.... நேசமொடு உயர்பரத்து நிற்பது ஞான நிட்டை' என்னும் சிவப்பிரகாசம்.

ஆன்மா - ஞாதிரு (அறிபவன்), ஞானம் (அறிவு), சிவம்-ஞேயம் (அறியப்படும் பொருள்) என்னும் திரிபுடி உண்டெனினும் அவை வேறு வேறாய் உள்ள தன்மை தோன்றாமல் ஞேயமாகிய சிவம் ஒன்றே தோன்ற அதில் ஆன்மா அழுந்தி நுகரும். இந்நிட்டை நிலையே 'ஏசில் நேயத்தழுந்தல்' என்னும் நிலையாகும்.

'அறிவே அறியில் அறிவனு போகம் அறிவுளருள்
உறவே அறியில் உறவனுபோகம் உயர்சிவத்தின்

நிறைவே அறியின் இறையனுபோகம் நிலைமையொன்றாய்ச்
செறிவே இது நிட்டை என்றான் சிவாயமெய்த் தேசிகனே"[45]

என்னும் நிட்டை விளக்கப் பாடலில், "அறிவின் வடிவாய் ஆன்மா உணர்தல் அறிவு அனுபோகம். தன் அறிவில் திருவருள் கலந்திருக்கும் முறைமையினை அறிதல் உறவு அனுபோகம். காண்பான், காட்சி, காணப்படும் பொருள் என்னும் திரிபுடி நிலை கடந்து எங்கும் சிவமே செறிவு ஒழியாது நிற்கும் நிறைவினை அறிந்தால் அது இறை யனுபோகம். இவ் இறையனுபோகத்தில் மற்ற யாவும் அடங்கிச் செறிந்திடும் வண்ணம் நிலைபெற்று நிற்றலே உண்மை நிட்டை" என்று அம்பலவாண தேசிகர் விளக்கிக் காட்டுவர்.

ஆன்ம சுத்தியே அறிவு அனுபோகம். தாயாகிய சத்தியை அறிந்து நிற்கும் சிவ யோகம் உறவு அனுபோகம். நிட்டையாகிய சிவ போகமே இறை அனுபோகம் என ஒவ்வொன்றையும் அனுபோகமாக சொல்லிய பாங்கு தனித்துவம் உடையது.

பெத்தத்தில் உயிர்க்குயிராய் நின்று உலக போகத்தை நுகர்வித்து வளர்த்த சிவனது கைம்மாறு கருதாத பேருதவியையும், நிட்டை கூடுகின்ற முத்தி நிலையில் உடனாயிருந்து செய்து வரும் பேருதவியையும் நினைத்து அவனிடத்து இடையறாப் பேரன்பு மேன்மேலும் வளரும். அந்த அன்பில் அவனின் கருணையை உணர்ந்து தைலதாரையாய் கண்ணீர் மல்கும் நிலை உண்டாகும்.

"ஆய நான் மறையவனும் நீயே ஆதல்
அறிந்துயான் யாவரினும் கடைய னாய
நாயினேன் ஆதலையும் நோக்கிக் கண்டு
நாதனே நான்உனக்கோர் அன்பன் என்பேன்
ஆயினேன் ஆதலால் ஆண்டு கொண்டாய்
அடியார்தாம் இல்லையே அன்றி மற்றோர்
பேயனேன் இதுதான்நின் பெருமை அன்றே
எம்பெருமான் என்சொல்லிப் பேசு கேனே"[46]

என வரும் திருவாசகத்தில், 'ஆன்மாவிற்கு சிவம் செய்யும் பேருதவியைக் கண்டு சிவனின் கருணையைச் சொல்லி 'இதுதான் நின் பெருமை அன்றே, எம்பெருமான் என் சொல்லிப் பேசுகேனே" என்று மாணிக்கவாசகப் பெருமான், பெருமானின் இயல்பு கண்டு மனம் மெய் மொழிகளால் பரவுகிறார். இங்ஙனம் ஆன்மா சிவத்தைக் கண்டு உருகும்; ஆன்மாவை சிவம் உருக்கும்.

இவ்வாறு உருகிப் பெருகும் அன்பினால் சிவத்தின்கண் அழுந்தியிருக்கும் நிலையே 'அயரா அன்பின் அரன் கழல் செலுமே' என்று குறிப்பிடப்படும். அயராமை - மறவாமை. இறைவனது உதவியை மறவாமையால் தோன்றுகின்ற அன்பில் சிவமாகிய ஒரு பொருளையே பற்றாகப் பற்றி அழுந்தி நிற்றலைக் குறிக்கும். அயராமை

RRN_0651-Sivappirakasam-22

(மறவா திருத்தல்) - அறிவு; அன்பு செய்தல் - இச்சை; அரன் கழல் செல்லுதல் - செயல். இவ்வாறு ஆன்மாவின் அறிவு, இச்சை, செயல் மூன்றும் சிவமாகிய ஒரு பொருளிடத்திலேயே நிகழும். அந் நிலையில் மிக்கு எழும் சிவானந்தம் அவ் வான்மாவைத் தன்னுட்படுத்தி விடும். அச் சிவானந்த நுகர்ச்சியில் அழுந்திய ஆன்மா தன்னை மறந்து திளைத்திருக்கும். இதுவே துரியாதீதம் என்னும் இன்புறு நிலையாகும்.[47]

நிட்டை நிலையை 'மறவா நிலை' என்று திருமுறைகள் கூறுவதாக அருணை வடிவேல் முதலியார் குறிப்பிடுவர்.[48]

"மறக்கு மாறிலாதவென்னை மையல் செய்துஇம்
மண்ணின்மேல் பிறக்குமாறு காட்டினாய்"

என்ற திருஞானசம்பந்தர் வாக்கில், 'மறக்குமாறிலாத' என்றது இந் நிலையையேயாம்.

இறைவனை என்றும் 'மறக்குமாறிலாத' திருஞானசம்பந்தர் மெய்ஞ்ஞானமேயான திருவம்பலத்தையும் ஆனந்தக் கூத்தான ஞான நடனத்தையும் கும்பிட்டு ஆனந்தக் கண்ணீர் மழை பொழிந்தார். உயிரை உருக்கும் அக் கூத்தின் திருவமுதைக் கண்களால் உண்டருளினார். அந் நிலையை,

"உணர்வின் நேர்பெற வரும் சிவபோகத்தை
ஒழிவின்றி உருவின்கண்
அணையும் ஐம்பொறி அளவினும்
எளிவர அருளினை"[49]

என்று திருஞானசம்பந்தர் இறைவனின் கருணையை வியப்பதாய்ப் போற்றுகிறார் சேக்கிழார். அஃதாவது சிவசக்தியால் விரிந்து விளங்கிய ஆன்ம ஞான சத்தியினால் அக நோக்கில் அநுபவிக்கப் பெறுவதாகிய சிவானந்த அனுபவத்தை (சிவ போகத்தை) புற நோக்கில் மாயா கரணங்களாகிய ஐம்பொறி அளவில் எளிதாக அருளுமாறு செய்தான் இறைவன் என்பதாம்.

"அற்பன்என் உள்ளத்து அளவிலா
உன்னைத்தந்த பொன்னம்பலத் தரசே"[50]

"என் சிறிய உள்ளத்தில் எல்லை காண முடியாத உன்னைத் தங்கச் செய்துள்ள பொன்னம்பலத்தரசே" என்று திருமாளிகைத் தேவரும்,

"அடியேன் அறிவு அளவிற்கு
அளவானது அதிசயமே"[51]

"அளவுக்கு அடங்காத உன்னை என் அறிவு அளவுக்கு அகப்படும்படி செய்து கொண்டது அதிசயமே" என்று அபிராமி பட்டரும் கூறுவது இங்கு ஒப்புநோக்கத்தகும்.

நிட்டையாக அதீத நிலையினின்றும் மீளும் தன்மை இல்லாத பெருமக்களையும் உலகத்தை உய்வித்தற்பொருட்டு இறைவன் துரிய நிலைக்கண் மீள்வித்தல் உண்டு. அதாவது அந் நிலை 'சாக்கிரத்தில் அதீதத்தைப் புரிதல்' எனப்படும்.[52]

“இந் நிலையில் இருப்பவர்கள் இவ் வுலகத்தில் யாவற்றையும் பற்றறத் துறந்த பெருந்தவத்தோர் ஆவர். இவர்கள் பெற்ற பெரும் பேற்றினை எவ்வாறு கூற முடியும். இம்மையிலேயே சிவபெருமானோடு கலந்து நிற்கின்ற இவர்கள் நம்மால் வணங்கத் தகுந்த சிவனே ஆவார்கள்” என்று சித்தியார் போற்றும்:

“சாக்கிரத்தே அதீதத்தைப் புரிந்தவர்கள் உலகில்
சருவசங்க நிவிர்த்திவந்த தபோதனர்கள்; இவர்கள்
பாக்கியத்தைப் பகர்வது என் இம்மையிலே உயிரின்
பற்றுஅறுத்து பரத்தை அடை பராவுசிவர் அன்றோ” [53]

சிவபெருமான் தாம் புரியும் திருவருட் செயல்களை அவர்களின் செயலாகவே வழங்கி அருள்புரிகின்றான்.

“...... துரியத்தைச்
சாக்கிரத்தே செய்தருளித் தான் செய்யும் தன்மைகளும்
ஆக்கியிடும் அன்பர்க் கவன்.” [54]

என்று திருக்களிற்றுப்படியார் சொல்லும். மேலும், இத்தகைய மெய்யடியார்கள் இறைவன் திருவருளால் நிகழ்த்திய அற்புதச் செயல்களை நால்வர் பெருமக்களின் வாழ்க்கையில் நிகழ்ந்தவற்றை எடுத்துக்காட்டி விளக்கும். இதனால் நால்வரும் இந்நிலையில் நின்றவர்கள் என்பது புலனாகும்.

சிவஞான சுவாமிகள் சிவஞான போதச் சிற்றுரையில் மெய்கண்டாரை 'சாக்கிரத்தே அதீதத்தைப் புரிந்தவர்' என்று கூறுவர். இந்நிலைக்கண் நிற்போரது சுத்தான்ம சைதன்னியத்தை இறைவன் தானாகக்கொண்டு வேறற நிற்பான். அவர்கள் ஞான குரவராய் விளங்கி தம்மை அடைந்த பக்குவர்களுக்கு உபதேசம் வாயிலாகவும், நூல்கள் வாயிலாகவும், பிறவற்றாலும் உண்மை ஞானத்தை வழங்குவர்.

மெய்கண்டாரிடம் அருள்நந்தி சிவம் உண்மை ஞானம் கைவரப்பெற்று மெய்கண்டாரையே சிவமாகக் காணும் நிலையையும், உமாபதி சிவனார் பெத்தான் சாம்பானுக்கும், முள்ளிச்செடிக்கும் முத்தி கொடுத்த நிலையையும் கொண்டு இந் நிலையை இனிது உணரலாம்.[55]

தச காரிய வளர்ச்சி நிலைகள்

சிவஞான போதம் தச காரியத்தைப் பாச நீக்கம், சிவப் பேறு என இரண்டாகத் தொகுத்துக் கூறும்.

தத்துவ ரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி என்னும் மூன்றும் தத்துவச் சார்பில் மயக்க வுணர்வு நீங்குதலில் உள்ள படிநிலைகளாகும். ஆன்ம ரூபம், ஆன்ம

தரிசனம், ஆன்ம சுத்தி என்னும் மூன்றும் தற்போதமாகிய மயக்கஅறிவு நீங்குதலில் உள்ள படி நிலைகளாகும். எனவே, இவ் ஆறு நிலைகளும் பாச நீக்கம் என்பதனுள் அடங்குவதாகும்.

எஞ்சிய சிவ ரூபம், சிவ தரிசனம், சிவ யோகம், சிவ போகம் என்னும் நான்கும் சிவப் பேறு என்பதனுள் அடங்கி நிற்றலைக் குறிக்கும்.

'ஏகனாகி இறை பணி நிற்க மலம் மாயை தன்னொடு வல்வினை இன்றே' என வரும் பத்தாம் நூற்பா பாசநீக்கத்தையும், 'அயரா அன்பின் அரன்கழல் செலுமே' என வரும் பதினோராம் நூற்பா சிவப்பேற்றையும் குறிக்கும். ஒளிவந்த இடத்து இருள் நீங்குதலும், பொருள்கள் விளங்குதலும் ஒருகாலத்தே நிகழ்தல் அல்லது இரண்டிற்கும் வேறுவேறு காலம் வேண்டியதில்லை. அதுபோலப் பாசம் நீங்கிய பொழுதே ஆன்மா சிவனை அடைவதன்றிப் பிறிதொரு நிலை இல்லை. அதனால் பாச நீக்கத்தையும், சிவப்பேற்றையும் ஒருங்கே ஒரு நூற்பாவில் கூறுதலே முறையாகும். வடமொழி சிவஞான போதத்தில், 'மலமாயாத்ய ஸம்ஸ்ப்ருஷ்டோ பவதி ஸ்வானு பூதிமாந்' என்று இரண்டும் பத்தாம் நூற்பாவிலேயே கூறப்பட்டிருக்கிறது. மெய்கண்டாரின் சிவஞான போதத்தில் இரண்டையும் இரண்டு பொருளாக வைத்து வேறு வேறு நூற்பாக்களில் ஏன் கூறவேண்டும்?

அநுபவ நிலை, 'துரியம்' என்றும், 'துரியாதீதம்' என்றும் இருவகைப்படும். துரியத்தில் அனுபவிப்பவன் அநுபவிக்கப்படும் பொருளில் தன்னை இழந்து தான் அதுவாய் நிற்றல் கூறுவதில்லை. அந் நிலை கூடுவது 'அதீதம்' அல்லது 'துரியாதீதம்' எனப்படும்.

இருள் நீங்கியவுடன் பொருள்கள் விளங்குவதும், கண்ணொளி அப் பொருளைக் கண்டு அக் காட்சியில் ஒன்றுபட்டு நிற்கும் என்றல் இயலாது. பொருள்கள் விளங்குவது போல்வது 'துரிய நிலை.' கண்ணொளி அப்பொருட் காட்சியின் வடிவாய் அதில் ஒன்றுபட்டு நிற்றல் போல்வது 'துரியாதீத நிலை'.

ஆன்மா சிவனோடு ஏகனாகி அவனது பணியில் நிற்குமாயின் அப்பொழுது அவனது அருள் விளக்கம் நன்கு நிகழப் பாசங்கள் நீங்கி ஆன்மா சிவனோடு பொருந்துவதாகும் (தச காரியத்தில் இது ஒன்பதாவதாகிய சிவ யோகம்).

இந் நிலை அருள் விளக்கமே யன்றி, ஆனந்த விளக்கம் அன்று. ஏனெனில் ஆனந்தம் அநுபவத்திலே தோன்றுவதாகும். எனினும் ஆனந்தத்தின் தோற்றம் நிகழ்தலால் அதனை 'சுக பிரபை' (பிரபை-ஒளி) என்பர். இது சூரியன் உதிப்பதற்கு முன் அருணோதயம் தோன்றுதல் போல்வதாகும். ஆகவே, பாச நீக்கம், சிவப் பேறு இரண்டும் இரண்டு பயன்கள் அல்லது ஒன்றல்ல.

ஒவ்வொரு பயனுக்கும் ஒவ்வொரு சாதகம் இன்றியமையாததாகிறது. அவற்றுள் 'ஏகனாகி இறைபணி நிற்றல்' என்னும் சாதகத்தால் பாச நீக்கம் பத்தாம் நூற்பாவிலும், 'அயரா அன்பு' என்னும் சாதகத்தால் சிவப் பேறு பதினோராம் நூற்பாவிலும்

மெய்கண்டார் கூறியதே முறையாகும்' என சிவஞான பாடிய பொருள் நிலை விளக்கம் தருவார் சி.அருணை வடிவலே முதலியார்.[56]

சிவஞான போதம், பாச நீக்கம், சிவப் பேறு என இரண்டு வகையாக தச காரியம் கூறுகிறது எனினும் பண்டார சாத்திரமான சுவாமிநாத தேசிகர் தச காரியம் சிவஞான போதத்தில் உள்ள நூற்பாக்கள் தச காரியத்திற்குப் பொருந்தும் முறையை எடுத்துக்காட்டி விளக்கும்.

"இரண்டினில் ஐந்தில் ஆறில் ஏழினில் எட்டுத் தன்னில்
திரண்டிரண்டு ஒன்ற தான திகழொன்பான் பத்துத்தன்னில்
இரண்டிலாப் பேறு தன்னில் இருத்திய பத்தோ டொன்றில்
திரண்டெழும் உபதேசங்கள் சிவஞான போதஞ் சித்தி." [57]

"இரண்டு - இரண்டாம் சூத்திரம் தத்துவ ரூபத்தைக் காட்டுவது. ஐந்து - ஐந்தாம் சூத்திரம் தத்துவ தரிசனத்தைக் காட்டுவது. ஆறு - ஆறாம் சூத்திரம் தத்துவ சுத்தியைக் காட்டுவது. ஏழு - ஏழாம் சூத்திரம் ஆன்மரூபத்தைக் காட்டுவது. எட்டு - எட்டாம் சூத்திரம் சிவ ரூபம், ஆன்ம தரிசனம் இரண்டையும் காட்டுவது. திரண்டு இரண்டு ஒன்பான் - காண்பான் காணப்படும் பொருள் இரண்டாகக் காட்டும் ஒன்பதாம் சூத்திரம் சிவ தரிசனத்தைக் காட்டுவது. இரண்டு ஒன்றதான பத்து - காண்பானும் காணப்படுவதும் இணைந்த ஒன்றாகக் காட்டும் பத்தாம் சூத்திரம் சிவ யோகம் ஆன்ம சுத்தி எனும் இரண்டையும் காட்டுவது. இரண்டிலாப் பேறு தன்னில் இருத்திய பத்தோடு ஒன்று - அத்துவிதமான சிவானந்தப் பேற்றில் இருத்தும் பதினொன்றாம் சூத்திரம் சிவ போகத்தைக் காட்டுவது" என்று பொருள் கூறுவர் சபாரத்தின சிவாச்சாரியார்.[58]

மூன்றாகத் தொகுத்துக் கூறுதல்

சிவப்பிரகாசம் தச காரியத்தை ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி, ஆன்ம லாபம் என மூன்றாகத் தொகுத்துக் கூறும். இம் மூன்றும் அவத்தை நிலைகள் வழியாக முன்னரே இப் பகுதியில் விளக்கிக் கூறப்பட்டுள்ளன.

ஏழு, ஐந்து நிலைகளாகக் கூறுதல்

தச காரியங்களைத் தத்துவ ரூபம் முதல் ஆன்மசுத்தி வரை ஆறுடன் ஆன்ம லாபம் சேர்த்து ஏழு நிலைகளாக வைத்தும் உணர்த்தப்படும்.

தச காரியத்தின் நிலைகள், கரும்பை நுனியினின்றும் நுகர்வோனுக்கு இன்பம் பெருகுதல் போல, மேன்மேலும் இன்பத்தைப் பெருக்கி முடிவில் வரம்பிலா இன்பத்தில் உய்ப்பன. எனவே, அந் நிலைகளைப் பத்து முழம் உள்ள கரும்பாகவும், ஏழு முழம் உள்ள கரும்பாகவும், ஐந்து முழம் உள்ள கரும்பாகவும் உருவகித்து ஒவ்வொரு கணுவுக்கும் ஒவ்வொரு நிலை சொல்வதும் மரபு. இம் மரபு பேரூர் வேலப்ப தேசிகர் அருளிய பஞ்சாக்கரப் பஃறொடையில் காணப்படுகிறது.

"பிரியாத ஐந்தவத்தைப் பேற்றிற்-சரியாய்த்
தெசகாரியம் ஏழாய்ச் சேரும் உவமை
வசமாம் கரும்பின் வகைகேள் - நிசமான
சுத்தவத்தை யாங்கரும்பின் தொல்கணு ஐந்தாகும் முறை
முத்திவரு சாக்கிர முதலாம் - பத்து
முழம் காரியம்"[59]

என்பது பஞ்சாக்கர பஃறொடை. இதுபற்றியே பட்டினத்தார் கையில் உள்ள கரும்பும் தசகாரிய நிலையைக் குறிப்பதாகக் கூறப்படும்.

ஏழு பங்கில் முதல் தத்துவ ரூபம், இரண்டில் தத்துவ தரிசனம் மூன்றில் தத்துவ சுத்தி, நான்கில் ஆன்ம ரூபம், ஐந்தில் ஆன்ம தரிசனம், சிவ ரூபம், ஆறில் ஆன்ம சுத்தி, சிவ தரிசனம், சிவ யோகம், ஏழில் ஆன்ம லாபமாகிய சிவ போகம் எனக் கணக்கிடப்படும்.

ஐந்து கணுவில் ஐந்தவத்தை நிலைகளில் நிகழும் தச காரியமாகக் கொள்ளப்படும். மேலும், ஐந்து கணுக்களில் ஐந்தெழுத்தை வைத்து, ஐந்தெழுத்தின் தச காரிய நிலைகளும் விளக்கப்படுகின்றன.

முப்பது நிலைகளாக விரித்துக் கூறல்

தச காரியத்தை முப்பது அவதரமாக (நிலைகளாக) அமைத்துக் கூறும் நெறியை முதன்முதலாக துகளறு போதத்தில் வெளியிட்டவர் சீகாழிச் சிற்றம்பல நாடிகளே ஆவர். அவர்தம் மாணாக்கராகிய தத்துவப்பிரகாசர் துகளறு போதத்தின் வழியே தத்துவ பிரகாசத்தில் அதனையே பின்பற்றினார். முப்பது அவதரத்திற்கும் தச காரியத்திற்கும் தொடர்பு கற்பிக்கும் முயற்சி உண்மைநெறி விளக்கம் சிந்தனை உரையாசிரியராலும், சிவானந்த போத சார ஆசிரியராலும் மேற்கொள்ளப்பட்டன.[60]

"முப்பது வகைப்படும் முத்தி நன்னெறியினைச்
செப்புவன் அமைத்துத் தெசகாரியத்தில்'

என்பது சிவானந்த போத சாரத்தின் தொடக்கமாகும்.

முப்பதவரங்களின் முறை வைப்பில் சில வேறுபாடுகள் உள்ளன. "அருளில் உயிர் கூடும் நெறி முப்பதவதரம்' என்பது சித்தாந்த சாரம். துகளறு போதத்தில் 28 என்றும், 30 என்றும் இரு வகையாகக் கணக்கிடப்படுவதுண்டு.

"முப்பான் சரிஇத் துகளறு போதம்"

"நாலேழ் தருமே துகளறு போதம் தான்"

என இரு வகை உண்டு.

1.பூதப் பழிப்பு, 2.பொறியற உணர்தல், 3.அந்தக்கரண சுத்தி, 4.கலாதி ஞான நிராகரணம், 5.சுத்த தத்துவ தூடணம், 6.தத்துவாதீதம், 7.சகலதரிசனம், 8.கேவலம்,

9.கேவல தரிசனம், 10.கேவலாதீதம், 11.தன்னுண்மை, 12.சைதன்னிய தரிசனம், 13.ஞான தரிசனம், 14.பரை தரிசனம், 15.பரையில் வியாத்தம், 16.பரையில் யோகம், 17.பரையில் போகம், 18.சுத்த பராயோகம், 19.சுத்த பராபோகம்; முத்தி சாக்கிரம், 20.சாக்கிராதீதம், 21.பரையில் அதீதம், 22.சுத்தாவத்தை (முத்தி) துரியம், 23.சுக ரூபம், 24.சுகாதீதம், 25.சிவப் பேறு, 26.பரமானந்த தரிசனம், 27.பரமானந்த யோகம், 28.பரமானந்த போகம், 29.பரமானந்த மேலீடு, 30.பரமானந்த அவசம் (முத்தி) துரியாதீதம் எனத் துகளறு போதப் பொருள் அடைவு தச காரியத்தை முப்பது நிலைகளாகக் கூறும்.

இம்முப்பது நிலைகளில் தத்துவப் பிரகாசமும், சிவானந்த போத சாரமும் சிறிது வேறுபடுகின்றன. இரண்டிலும் முப்பதாவது அவதரமாக 'உலகப் பழிப்பு' என்ற அவதரம் இடம்பெறுகிறது.

முப்பத்திரண்டு நிலைகளாக விரித்துக் கூறல்

தருமை ஆதீன குரு முதல்வரான ஸ்ரீகுருஞான சம்பந்தர் இயற்றியருளிய திரிபதார்த்த ரூபாதி தச காரிய அகவலில், தச காரியத்தை பாச தசகாரியம், ஆன்ம தசகாரியம், சிவ தசகாரியம் என மூன்றாகப் பிரித்து பாச தசகாரியத்தில் பத்தும், ஆன்ம தசகாரியத்தில் பதினொன்றும், சிவ தசகாரியத்தில் பதினொன்றும் ஆக 32 படிநிலைகள் கூறுப்பட்டுள்ளன.

பாச தசகாரியத்தில் பாச சுபாவம், பாச வியாத்தி, பாச வியாபகம், பாச குணம், பாச விசேடம், பாச ரூபகம், பாச ரூபம், பாச சொரூபம், பாச தரிசனம், பாச சுத்தி என்னும் பத்து படிநிலைகள். ஆன்ம தச காரியத்தில் சுபாவம் முதல் சுத்தி என்னும் பத்துடன் ஆன்ம லாபம் சேர்த்துப் பதினொரு படிநிலைகள். சிவ தசகாரியத்தில் சுபாவம் முதல் தரிசனம் வரை ஒன்பதுடன் சிவ யோகம், சிவ போகம் என்ற இரண்டையும் சேர்த்துப் பதினொரு படிநிலைகள். இங்ஙனம் தசகாரியத்தை 32 படிநிலைகளாகத் திரிபதார்த்த ரூபாதித் தச காரிய அகவல் விரித்துக் கூறுகிறது.[௬௧]

உபநிடதத்தில் தச காரியம்

யதைவ பிம்பம் ம்ருதயோபலிப்தம்
　தேஜோமயம் ப்ராஜதே தத் ஸுதாந்தம்|
தத்வாத்மதத்வம். ப்ரஸமீக்ஷ்ய தேஹீ ஏக:
　க்ருதார்த்தோ பவதே வீதசோக:|| [௬௨]

மண்ணால் மூடப்பட்டிருந்த ஒரு விக்ரஹம் தேய்த்துச் சுத்தமாக்கப்பட்டபின் எங்ஙனம் ஒளிவிட்டுப் பிரகாசிக்குமோ அங்ஙனமே ஆன்ம தத்துவத்தைக் கண்டு கொண்டதும் ஆன்மா பரமாத்மாவுடன் ஒன்றுபட்டவனாய் சித்தி எய்தியவனாய்த் துன்பம் நீங்கியவனாய் ஆகிறான்.

யதாத்ம - தத்வே து ப்ரஹ்மதத்வம் தீபோப
　மேனேஹ யுக்த: ப்ரபச்யேத்|

அஜம் த்ருவம் ஸர்வ - தத்வைர் விசுத்தம் ஜ்ஞாத்வா
தேவம் முச்யதே ஸர்வ பாபை:|| [63]

தீபத்தைப் போல ஒளிவீசும் ஆன்ம தத்துவத்தால் எப்பொழுது யோகியானவன் பிரம்மத்தை அறிகின்றானோ அப்பொழுதே பிறப்பற்றவனும், மாறுபாடு அற்றவனும், பிரகிருதி தத்துவங்களால் பற்றப்படாமல் சுத்தமாய் இருப்பவனும் ஆகிய பகவானை உணர்ந்து எல்லாப் பாவங்களினின்றும் விடுபடுகிறான் என்று ஆன்மா தன் ஆத்ம ஞானத்தால் பிரம்ம ஞானத்தை அறிந்து பிரம்மத்தை அடையும் நிலையைக் குறிக்கிறது சுவேதாசுவதர உபநிடதம்.

ஆலயத் திருவிழாவும் தச காரியங்களும்

சிவாகம முறையில் சிவ ஆலயங்களில் நடைபெறும் பத்து தின உற்சவங்கள் (ப்ரம்மோத்ஸவம்) தச காரியம் எனப்படுகின்றன. கொடியேற்றம் முதல் திருவூடல் வரை நடைபெறும் உற்சவங்கள் பதி-பசு-பாச ஞானத்தை உணர்த்துவனவாக உள்ளன.

யோகஜ தந்த்ரம் என்னும் ஆகமத்தில் 'ஸங்கல்ப நிராகரணம்' என்னும் நூலில் உள்ளபடி உற்சவமும் தச காரியமும் ஒப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளன.[64]

த்வஜாரோஹணம் (கொடியேற்றம்)
பீஜாங்குரார்ப்பணம் (முளை இடுதல்) - தத்துவ ரூபம்
வாகனத்தில் சிவன் பவனிவருதல் - தத்துவ தரிசனம்
யாக சாலை - தத்துவ சுத்தி
வ்ருஷப வாகனத்தில் சிவ தரிசனம் - ஆத்ம ரூபம்
தேரில் வலம் வருதல் - ஆத்ம தரிசனம்
சாந்து சேவை என்ற கிருஷ்ண கந்த ஸமர்ப்பணம் - ஆத்ம சுத்தி
தீபாவலோகனம் (விளக்கிடுதல்) - சிவ ரூபம்
தீர்த்தவாரி க்ருத்யம் - சிவ தரிசனம்
த்வஜாவரோஹணம் (கொடிஇறக்கம்)
அத் தினத்தில் கும்பாபிஷேகம் - சிவ யோகம்
சிவ சத்தி ப்ரணய கலஹம் என்ற திருவூடல் - சிவ போகம்

ஸ்வீடன்பெர்க் தத்துவமும் தசகாரியமும்

ஸ்வீடனைச் சேர்ந்த ஸ்வீடன்பெர்க் (Swedenborg)கின் தத்துவக் கோட்பாடும் சைவ சித்தாந்தத்தின் கோட்பாடுகளும் பலவகையில் ஒற்றுமைப்பட்டு விளங்குவதை 'New Light upon Indian Philosophy' என்னும் நூலில் கோபால் செட்டி ஆராய்ந்துள்ளார்.

அதிலும் குறிப்பாக ஸ்வீடன்பெர்க், ஆன்மா கடவுளை நோக்கிச் செல்வதற்கான ஏழு படிநிலைகளை (Seven Stages) குறிப்பிடுகிறார். அது, Arcena Coelestia என்றழைக்கப் படும். இவ் வேழு நிலைகளும் சித்தாந்தம் கூறும் தச காரியப் படிநிலைகளோடு உளவியல் வழியாக ஒப்புநோக்கத் தக்கவையாகும்.

ஸ்வீடன்பெர்க்கின் இவ் வேழு படிநிலைகளும் ஏறக்குறைய உளவியல் முறையிலேயே அமைந்துள்ளன. முதல் நிலை ஏதுமற்ற ஒரு வெற்றிடம் (void) ஆகும். இரண்டாம் நிலையில் ஆன்மா இறைவனையும் உலகையும் பிரித்தறிகிறது. மூன்றாம் நிலையில் அது தன்னிலை குறித்து வருந்துகிறது. நான்காம் நிலையில் அவ் வருத்தம் இறைவன் மேல் அன்பாக, பக்தியாக மலர்ந்து நம்பிக்கையால் அது வளர்க்கப்படுகிறது. ஐந்தாம் நிலையில் ஆன்மாவானது தன்னைத்தானே உண்மையிலும் நன்மையிலும் நிலைபெறச் செய்துகொள்கிறது. ஆறாவது நிலையில் உண்மையை பேசி நன்மையே செய்கிறது. ஏழாவது நிலையில் தான் இறைவன்மீது கொண்ட பக்தியால் தெய்வீகத் தன்மை பெற்று 'Image' என்றழைக்கப்படுகிறது. அந் நிலையில் அன்பெனும் உருப்பெற்று தெய்வீக மனிதனாக (Love gaineth his dimension and he becomes a celestial man) உயர்கிறது. இதுவே ஸ்வீடன்பெர்க்கின் ஏழு படிநிலைத் தத்துவக் கோட்பாடாகும்.

"ஸ்வீடன்பெர்க்கின் ஏழு நிலைகளில் 1) முதல் நிலையான சூன்ய நிலையை, சித்தாந்தம் கூறும் கேவல நிலைக்கு ஒப்பாகக் கூறலாம். அங்கு ஆணவமாகிய இருளே மேலோங்கி நிற்கிறது. அறியாமையின் வடிவாய் இருக்கும் இந் நிலையிலிருந்தே சகல நிலைக்கு ஆன்மா வருகிறது என்றாலும், சகல நிலையிலேயே அறியாமையின் வடிவாய் இருக்கும் கேவல நிலையையே குறிக்கும் எனலாம்.

2) இரண்டாம் நிலையில் ஆன்மா இறைவனைப் பற்றியும் உலகைப் பற்றியும் அறிந்துகொண்டு, உலகமும் உடலும் உண்மையல்ல என்று உணர்கின்றது. உள்ளிருக்கும் ஆன்மாவின் உண்மை நிலை உணரப்படுகிறது.

3) மூன்றாவது நிலையில் ஆன்மா தன் செயல்களுக்காக வருந்தி நற்செயல்களைச் செய்யத் தொடங்குகிறது. எனினும் நான் செய்கிறேன் என்ற தன்முனைப்பால் (ஆன்மபோதம்) அச் செயல்கள் பயனற்றவைகளாகின்றன.

4) நான்காம் நிலையில் ஆன்மாவுக்குள் நம்பிக்கையும் அன்பும் தூண்டப்பெறுகின்றன.

5) ஐந்தாம் நிலையில் ஆன்மா இறைவன் மேலுள்ள நம்பிக்கையால் தன்னை உண்மையிலும் நன்மையிலும் நிலைபெறச் செய்து தன்முனைப்பிலிருந்து (ஆன்மபோதம்) நீங்குகிறது. இப்பொழுது அதன் செயல் இறைவனின் செயல்களாவதால் அவை பயனளிக்கக் கூடியவைகளாகின்றன. இந்நிலை தன் பணி நீத்தல், இறைபணி நிற்றலாகும்.

6) ஆறாம் நிலையில் அன்பும் நம்பிக்கையும் மேன்மேலும் வளர்ந்து இறைவனின் அருளில் பொருந்துகிறது.

7) ஏழாம் நிலையில் ஆன்மா முற்றும் உலகியலிலிருந்து விலகி இறைவனோடு கலந்து தெய்வீகத் தன்மை அடைகிறது. சித்தாந்தத்தில் கூறப்படும் சீவன் முத்தி நிலையே 'Image' என்று ஸ்வீடன்பெர்க் தத்துவத்தில் அழைக்கப்படுகிறது எனலாம்" என்று சித்தாந்தத்திற்கும் ஸ்வீடன்பெர்க்கின் தத்துவ கோட்பாட்டிற்கும் உள்ள ஒப்புமைபற்றி விளக்கி இவ் விரு தத்துவங்களும் உளவியல் முறையில் மிக நுணுக்கமாக அமைந்துள்ளன என்று கூறுவர் கோபால் செட்டி.[65]

இவ் வகையான ஒப்பீடுகள் இந்தியத் தத்துவத்தில் அமைந்துள்ள சைவ சித்தாந்தத்திற்குப் புதிய ஒளியைப் பிரகாசிக்கச் செய்யும் முயற்சி எனலாம்.

அடிக்குறிப்புகள்

1. சிவஞான போதம், நூற்பா.8
2. சி.அருணை வடிவேல் முதலியார், சித்தாந்த வினாவிடை, ப.381
3. பெரிய புராணம், 765
4. இருபா இருபஃது, 14:1
5. ஆ.ஆனந்தராசன், தசகாரியம், ப.1
6. கே.ஏ.ஸபாரத்தினம் சிவாசாரியார், உண்மைநெறிவிளக்கம், Sri Umapati Sivacharya His Life works and contribution to Saivism, p.50.
7. க.வச்சிரவேல் முதலியார், சைவ சித்தாந்தத் திறவு, ப.86
8. அம்பலவாணர் தச காரியம், 25.
9. மேலது, 26.
10. மேலது, 27.
11. மேலது, 29.
12. மேலது, 33.
13. மேலது, 34.
14. சபாரத்தின சிவாசாரியார், தம்முதல் குருவுமாய்..., சிவஞான போத ஆய்வுக் களஞ்சியம், ப.87.
15. காஞ்சி ஞானப்ரகாச சுவாமிகள், சிவப்பிரகாசம் மூலமும் உரையும், அவத்தை இலக்கண அட்டவணை, ப.199.
16. சுவாமிநாத தேசிகர், தசகாரியம், 7.
17. மேலது, 14.
18. வேலப்ப தேசிகர், பஞ்சாக்கரப் பஃறொடை, கண்ணி:39.
19. சுவாமிநாத தேசிகர், தச காரியம், ப.85.
20. மேலது, ப.86.
21. மேற்கோள்: மதுரைச் சிவப்பிரகாசர், சிவப்பிரகாசம் மூலமும் உரையும், ப.241.

22. ஆ.ஈசுரமூர்த்திப் பிள்ளை, சிவப்பிரகாசம், ப.135.
23. சு.குஞ்சிதபாதம், உபாய நிட்டை வெண்பா, ப.10.
24. திருமந்திரம், 2321.
25. சி.அருணை வடிவேல் முதலியார், திருமந்திரம் (ஏழு, எட்டு, ஒன்பது தந்திரங்கள்), ப.587.
26. திருமந்திரம், 2814.
27. உண்மைநெறி விளக்கம், பா.4.
28. காஞ்சி ஞானப்ரகாச சுவாமிகள், கந்தர்கலிவெண்பா, பக்.52-53.
29. குமரகுருபரர் கந்தர் கலிவெண்பா, கண்ணி :34-36.
30. சிவஞான சித்தியார் சுபக்கம், 239.
31. 9:11:1
32. i) கேன உபநிடதம், 3:12, 4:1, ii) வெள்ளி யம்பலவாண முனிவர் (பேருரை), முத்தி நிச்சயம், ப.190.
33. 7:53:3.
34. 8:50:5
35. அம்பலவாண தேசிகர், தச காரியம், பா.30.
36. மேற்கோள்: சி.கே.சுப்பிரமணிய முதலியார், திருத்தொண்டர் புராணம், 948.
37. ஆ.ஈசுரமூர்த்திப்பிள்ளை, சிவப்பிரகாசம், ப.146.
38. காஞ்சி ஞானப்ரகாச சுவாமிகள், சித்தாந்தக் கட்டுரைகள், பக்.54-55.
39. காஞ்சி ஞானப்ரகாச சுவாமிகள், சிவப்பிரகாச மூலமும் உரையும், ப.154.
40. ஞானாமிர்தம், அகவல். 24, வரி:3.
41. மதுரைச் சிவப்பிரகாசர், சிவப்பிரகாசம் மூலமும் உரையும், பக்.256-257.
42. 8:22:3.
43. திருக்கோவையார், 9.
44. சி.அருணை வடிவேல் முதலியார், எட்டாம் திருமுறை-1, ப.656.
45. நிட்டை விளக்கம், பா.24.
46. 8:5:23.
47. ஆ.ஆனந்தராசன், சிவஞான போதம் வழித்துணை விளக்கம், ப.338.
48. i) சி.அருணைவடிவேல் முதலியார், சித்தாந்த வினாவிடை, ப.364,
    ii) 2:98:5
49. பெரிய புராணம், 2059.

50. 9:1:3
51. அபிராமி அந்தாதி, 16.
52. சி.அருணை வடிவேல் முதலியார், சித்தாந்த வினாவிடை, ப.338.
53. சிவஞான சித்தியார் சுபக்கம், 287.
54. திருக்களிற்றுப்படியார், 69.
55. சி.அருணை வடிவேல் முதலியார், மு.கா.நூ., பக.389-90.
56. சி.அருணை வடிவேல் முதலியார், சிவஞான போத மாபாடியப் பொருள்நிலை விளக்கம், பக்.733-734.
57. சுவாமிநாத தேசிகர், தச காரியம், 21.
58. சபாரத்தின சிவாசாரியார், தம்முதல் குருவுமாய்... சிவஞானபோத ஆய்வுக் களஞ்சியம், ப.88.
59. வேலப்ப தேசிகர், பஞ்சாக்கரப் பஃறொடை, கண்ணி:32-34.
60. சொ.சிங்காரவேலன், சித்தர் காட்டில் மலர்ந்த சிவஞானம், ப.xvii
61. ஸ்ரீ குருஞானசம்பந்தர் அட்டகம், திரிபதார்த்த ரூபாதி தச காரிய அகவல்.
62. சுவேதாசுவதர உபநிஷத்து, 2:14
63. மேலது, 2:15
64. கே.ஏ.ஸபாரத்தின சிவாச்சாரியார், உண்மை நெறிவிளக்கம், Sri Umapati Sivacharya His Life Works and Contribution to Saivism, v.51.
65. i) D.Gopaul Chetty, New Light Upon Indian philosophy or Swedenborg and Saiva Siddhanta, Pp.190-191.

    ii) N.Murugesa mudaliar, The Relevance of Saiva Siddhanta Philophy, Pp.180-181.

5.6 ஒன்றி நின்று உணரும் உண்மை

முத்தி நிலையில் உயிரும் சிவமும் பிரித்தறிய வாராது ஒன்றாய் உள்ளன. உயிர் சிவனது திருவருள் வியாபகத்துள் தனித்த ஒரு முதலாய்க் காணப்படாது அடங்கி நிற்றலே, உயிர் சிவத்தோடு ஒன்றாதல் அல்லது இரண்டறக் கலத்தல் ஆகும். உயிரானது சிவத்தோடு ஒன்றாகி, இல்லாமற் போய்விடவில்லை. உயிர் சிவத்தோடு ஒன்றி நின்று அதனையே இடையறாது உணர்ந்து அநுபவிக்கின்றது. இவ்வாறு உயிர் சிவத்தோடு கூடி நின்று பேரின்பம் அநுபவிக்கும் முத்தி நிலையை, 'ஒன்றி நின்று உணரும் உண்மை' என்று சிவப்பிரகாசம் குறிப்பிடுகிறது.

> "ஒன்று இரண்டாகி ஒன்றின்
> ஒருமையாம் இருமை ஆகி
> ஒன்றில் ஒன்று அழியும் ஒன்றாது
> என்னின் ஒன்றாகா தீயில்
> ஒன்று இரும்பு உறழின் அன்றாம்
> உயிரின் ஐந்தொழிலும் வேண்டும்
> ஒன்றிநின்று உணரும் உண்மைக்கு
> உவமை ஆணவத்தொடு ஒன்றே" (சிவ.87)

i) பிரமமாகிய ஒரு பொருளே, பிரமம், சீவன் என இரண்டாகி முத்தியில் ஒன்றாகிவிடும்.

ii) அநாதியே சிவனும் உயிரும் வேறு வேறு பொருளாய் இருந்து, முத்தியில் ஒரு பொருளாய் விடும்.

iii) சிவனும், உயிரும் முத்தியில் ஒன்றாமல் பேதமாய் இருக்கும்.

iv) தீயிற் சேர்ந்த இரும்பு தீயானாற்போலச் சிவனைச் சேர்ந்த உயிரும் சிவனாகி, சிவன் செய்யும் ஐந்தொழில்களைப் பெறும்.

v) உயிர் சிவத்தோடு கூடிப் பேரின்பம் அநுபவிக்கும் முத்தி நிலைக்கு, உயிர் ஆணவத்தோடு கூடி ஒன்றுபட்டு இருந்த ‘கேவல நிலை’யே ஏற்ற உவமையாகும்.

இப் பாடலில் முத்தி நிலை பற்றிய மாயா வாதம், ஐக்கிய வாதம், பேத வாதம், சிவசம வாதம், சிவசங்கிராந்த வாதம் ஆகிய கொள்கைகள் எடுத்துக் காட்டப்பட்டு மறுக்கப்படுகின்றன. எனவே இப் பாடலை, ‘குற்றமருவும் கோட்பாடு அகற்றி, முற்றிய கதியின் முறைமையைச் சொல்லுவது’[1] என்பர் அறிஞர்.

“அந்நியம் என்றும், அநந்நியம் என்றும்
இந்நிலை இரண்டும் எய்திற்று என்றும்
பல்வேறு உரைக்குநர் சொல்வழிப் படாது
திவ்வியம் பழுத்த சைவ சித்தாந்தத்து
இறவா நிலைமை பெற்று இன்பம் ஆர்ந்து இருக்கும்
பிறவா நன்னெறி பெறப் புரிவதுவே” [2]

என்று குமரகுருபரர், தம் குரு மாசிலாமணி தேசிகரிடம் ‘பேதம் என்றும், பேதம் அற்றது என்றும் இந்த இரண்டு நிலையை எய்திற்று என்றும் பலவகையாகச் சொல்பவர் சொல்லின் வழிப்படாது, சைவ சித்தாந்தத்தின் இறவா நிலையைப் பெற்றுப் பிறவா நன்னெறி பெறவேண்டும்’ என்று வேண்டிக் கொள்கிறார்.

i) ஒன்று, இரண்டாகி, ஒன்றின் ஒருமையாம்

ஒரே பரம்பொருள் ‘தானே பரமான்மா’ என்றும், ‘சீவான்மா’ என்றும் இரண்டாகப் பிரிந்து தோன்றும். சீவான்மா என்பது பிறப்பு, இறப்புகளிலே உழன்று இன்ப, துன்பம் அநுபவித்துக் குரு உபதேசத்தால் தானும் பரம்பொருளும் ஒன்று என்பதை அறிந்து மீளவும் பரமான்மாவோடு கூடி ஒன்றுபட்டுப் போகும்.

இதற்கு கடாகாச மஹாகாசம், ஜலசந்திரன் உவமைகளாகக் கூறப்படும். கடம் உடைந்தால் அதனுள் இருந்த ஆகாசம் மஹாகாசமாய் மாறிவிடும். தண்ணீரில் தெரியும் ஜலசந்திரன், தண்ணீர் வற்றினால் ஜலசந்திரன் போய் சந்திரனே மிஞ்சும். அதுபோல், முத்தியில் சிவான்மா போய்ப் பரமான்மா மட்டுமே மிஞ்சும். இக் கருத்து ‘மாயாவாத’த்தின் முத்திக் கொள்கையாகும்.

“தானே தானாய்த் தன்னில் தன்னைத்
தானே கண்டு தன்னலம் முற்று
வசையில் தத்தவமசிபதத் தெளிவால்
அகமே பிரமம் ஆயினன் எனஅறிந்து
அசலன் ஆகி நற்சல சல மதியெனக்
கண்டிடும் உடலம் விண்டுஅகல் கடத்து
மங்கு லதுஉடைதர எங்குமாம் தகைத்தே” [3]

என மாயா வாதம் கூறும்.

'ஒரு பொருள் இரண்டாயிற்று' எனில், இரண்டிற்கும் குணம் ஒரே தன்மையில் இருத்தல் வேண்டும். பரமான்மாவின் குணம் சீவான்மாவில் காணப்படுவது இல்லை. எனவே, இது பொருந்தாது.

'உயிரும் சிவமும் ஒன்று' என்னும் இக் கொள்கையைச் சைவ சித்தாந்தம் ஏற்பதில்லை. உயிர் பாசத்துள்பட்டு பிணிப்புண்டு நிற்பது. சிவம் அப் பிணிப்பின்றித் தனியே நிற்பது. இவ் விரண்டும் பொருளால் ஒன்று எனல் எவ்வாறு பொருந்தும்? இரண்டும் இரு வேறு முதல்களேயாகும்.

> "கடைப்பட்டேனை ஆண்டு கொண்ட
> கருணாலயன்" [4]

என்று குறிப்பர் மாணிக்கவாசகர். இங்குக் 'கடைப்பட்டேன்' என்பது 'உயிரையும்', 'கருணாலயன்' என்பது சிவத்தையும் குறிக்கும்.

ii) இருமை ஆகி, ஒன்றின் ஒன்று அழியும்

சிவமும் உயிரும் வேறு வேறு. உயிர் மாயா, கன்மங்களை உடையது. இரு வினை நல்வினை, தீவினைகள் ஒத்தபோது மாயை நீங்கிச் சிவத்தோடு ஐக்கியமாகும். எனவே, முத்தி நிலையடைந்த ஆன்மா சிவத்தோடு ஒன்றாகிவிடும் என்பது ஐக்கிய வாதத்தின் முத்திக் கொள்கை.

> "நீரும் நீரும் சேரும் தகைமையில்
> அறிவினோடு அறிவு செறிவுறப் பொருந்தி
> ஒன்று ஆம் என்பதை உலகோர்
> நன்றாம் முத்தி என நவிற்றினரே" [5]

எனச் சொல்வது ஐக்கிய வாதம்.

சிவமும் உயிரும் நீரும் நீரும் கலந்ததுபோலச் சிவஞானத்தோடு ஆன்ம ஞானம் செறிவுற்றுக் கலந்து ஒன்றாகும். இதுவே உயிருக்கு இன்பம் விளைவிக்கும் முத்தி நிலை யாகும்.

இக்கொள்கைப்படி முத்தி நிலையில் ஆன்மா அழிந்துபோகும். எனவே, பெறுவான் ஒருவன் இல்லை; பேறும் இல்லை. ஈவான் இல்லை; ஏற்பான் இல்லை. எனவே, இந்த முத்தி நிலை பயனற்ற நிலையாகும்.

> "ஒன்றியிடும் நீரொடுநீர் சேர்ந்தாற்போல் என்னின்,
> ஒருபொருளாம் அதிபதியோடு உயிர் பொருள்ஒன்று அன்றே" [6]

என சித்தியார் விளக்கும்.

முத்தியில் உயிரும் சிவமும் பிரிந்து வேறு நில்லாது ஒரு பொருள்போல நிற்கும். உயிர் தான் வேறு எனத் தோன்றாது நிற்க, சிவமாகிய ஒரு பொருளே உள்ளதுபோலத் தோன்றும். இதற்கு 'உப்பானது நீரில் கலந்து அந்நீரோடு ஒன்றாய்க் கலந்து நிற்றல்'

உவமையாகக் கூறப்படும். "அப்பு அணைந்த உப்பின் உளம் அணைந்து சேடமாம்" என்பது சிவஞான போதம். இதனை, "அப்பு அணைந்த உப்பேபோல் அணைந்து"[7] என்று சித்தியாரும் வழிமொழியும்.

உப்பும் நீரும் இயைந்துள்ள நிலையில் அதனை ஒன்று என்றும் இரண்டு என்றும் கூறமுடியாது. அதுபோல உயிரும் சிவமும் இணைந்த அத்துவித முத்தி நிலையை ஒன்று என்றோ இரண்டு என்றோ கூறமுடியாத நிலை என்பதை உணரலாம்.

நீரைச்சேர்ந்த உப்புத் தான் கெடாது தனது கடினத் தன்மை மட்டும் நீங்கி அந் நீரோடு ஒன்றாகிறது. அதுபோல, ஆன்மா தான் கெடாது ஆணவ மலம் மட்டும் கெட, அம் மலத்தால் சிவத்திற்கு வேறாய் நின்ற நிலை நீங்கிச் சிவத்தோடு ஒன்றாய் அணைந்து அதன்கண் அடங்கி நிற்கும். அங்ஙனம் அடங்கிய பின் அதற்குப் பிரிதல் இல்லை.

திருவாசகத்தில், அத்துவித இலக்கணம் கூறும் புணர்ச்சிப் பத்தில்,

"நெல்லிக்கனியைத் தேனைப் பாலை
நிறைஇன் அமுதை அமுதின் சுவையைப்
புல்லிப் புணர்வது என்று கொல்லோ
என்பொல்லா மணியைப் புணர்ந்தே" [8]

என்று மாணிக்கவாசகர் அருளிச் செல்வர்.

இங்கு, 'புல்லிப் புணர்வது' என்று உலகியல் வாய்பாட்டான் அருளிச் செய்தார் ஆயினும் 'அப்பு அணைந்த உப்பே போல்' என்னும் சித்தியார் வாக்கின்படி 'அவனாகி நிற்கும் அத்துவித நிலையைப் பெறுவது' என்பதைக் கொள்ள வேண்டும்.[9]

iii) ஒன்றாது என்னின், ஒன்றாகா

சிவமும், உயிரும் என்றுமே வேறுவேறு பொருள்கள்தாம். முத்தியிலும் உயிர் நித்த சுத்த சரீரத்தைப் பெற்று வேறாயிருக்கும். முத்தி நிலையிலும் அதே இரண்டு பொருள்கள் தாம் தனித்தனியாக முன் இருந்தபடியே உள்ளன என்று சிவ சமவாதம் கூறும். பேத வாதமும் ஆன்மா எப்பொழுதும் சிவத்தின் வேறு, வீடுபேற்றில் தூய அழியா உடம்பினைப் பெற்று வேறாக விளங்கும் என்பர்.

'நித்த சுத்த முத்தர் ஆக
வைத்தனர் உலகில் மறைவல்லாரே' [10]

என பேத வாதம் கூறும்.

முத்தியில் இரண்டும் தனித்தனியே நிற்கும் என்று சொன்னால், அங்கே வீடுபேறு (சாயுச்சியம்) இல்லை; பரமுத்தி யில்லை அது பதமுத்தி யாகும்.

இதனை,

'இரண்டாலும் ஓசை எழாது' [11]

என்று திருவருட்பயனும்,

"\. . . . வெவ்வேறு மொழியின்
சென்று வருகின்ற பதமுத்தி நல்ல
ஐக்கியம் செப்ப இயலாது" [12]

என்று பரிபூரணானந்த போதமும் குறிப்பிடும்.

iv. உயிரின் ஐந்தொழிலும் வேண்டும்

தீயிற் சேர்ந்த இரும்பு, தீயின் செம்மை நிறத்தையும் வெப்பத்தையும் பெற்றுத் தீக்கங்குபோல ஆகிவிடும். தீயின் தன்மையை இரும்பு எய்துகிறது. அந்த நிலையில் தீயும் உண்டு; இரும்பும் உண்டு. அதுபோல, உயிரும் சிவத்தோடு கூடிய நிலையில் சிவமாகவே மாறிவிடும். இது, 'சிவசங்கிராந்த வாதம்' எனப்படும். சங்கிராந்தம் என்றால் 'கலப்பு' என்பது பொருள்.

இரும்பு, தீ செய்யும் தொழிலைச் செய்வதில்லை. தீ வெப்பத்தைக் கொடுக்கும்; இரும்பு அதனை ஏற்கும்; இரும்பே வெப்பம் தருகின்ற செயலைச் செய்யாது. உயிர் சிவத்தின் குணங்களைப் பொருந்தும் எனின், ஒரு பொருளின் குணம் மற்றொரு பொருளுக்கு வராது. மேலும், முதல்வன் உயிர்கள் பொருட்டே ஐந்தொழில்கள் செய்கின்றான். உயிர்களுக்கு ஐந்துதொழில் நடத்தும் வல்லமை வருவதில்லை. உயிர்களுக்கு அந்த வல்லமை உண்டு என்றால், சிவத்தின் முதன்மை கெடும். எனவே, இக் கொள்கையும் முத்தி நிலைக்கு ஒத்துவராத தன்மையில் உள்ளது.

"சித்திக்கே உய்த்திட்டுத் திகழ்ந்த மெய்ப் பரம்பொருள்
சேர்வார்தாமே தாமாகச் செய்யும் அவன்" [13]

என்பது திருஞானசம்பந்தப் பெருமான் வாக்கு. இப்பாடலில்,

"தாமே எனும் இத்தனி ஏகாரம்
அழிந்திலர் அதுவே ஆய்த்திலர் அதுவிட்டு
ஒழிந்திலர் பிரிவிலர் எனும் இவை உணர்த்தும்" [14]

என்று சங்கற்ப நிராகரணம் கூறும்.

'தாமே தாமாகச் செய்யுமவன்' என்னும் திருஞானசம்பந்தப் பெருமானின் பாடலில், 'தாமே' என்பதில் உள்ள ஏகாரம் ஆழ்ந்த பொருளுடையது. இந்த ஓர் எழுத்து இறைவனைச் சார்ந்தும் உயிர்கள் அழிந்தில என்பதனையும், சிவ பரம்பொருளே ஆகிலர் என்பதனையும், சிவனை விட்டு நீங்கிலர் என்பதனையும், அச் சிவனை விட்டுத் தமக்கெனச் செயல் இலர் என்பதனையும் உணர்த்துவதாகும்' என்று உமாபதி சிவம் எடுத்துரைப்பர்.[15]

உயிர், இறைவன் அறிவிக்கவே பொருள்களை அறியும். அவ்வாறே இறைவன் செலுத்தவே அது செயற்படும். எனவே, உயிரினது அறிவும் செயலும் இறைவனைச் சார்ந்து நிற்பனவாகும்.

ஆன்மா, முத்தி நிலையில் பேரின்பத்தை அநுபவித்தல் என்ற செயலுக்கு மட்டும் உரியதாய் நிற்குமே யன்றி, இறைவனைப் போலப் படைத்தல் முதலிய தொழில்களைச் செய்வதற்கு அதற்கு உரிமை யில்லை. எனவே, எல்லா வகையிலும் உயிர் இறைவனுக்கு அடிமையாய் நிற்கும் என்பதே பொருளாகும். இதனை,

"அதனின் ஈறலா ஒன்று பலவாறே தொழும்பாகும்" [16]

"மெய்ப்பொருட்குத் தைவம்" [17]

"முன்னவனே தானே தானாச் செய்தும்
தைவம் என்றும் தைவமே" [18]

என்பார் மெய்கண்டார். (தொழும்பு, தைவம் - அடிமை).

"மீளா அடிமை உனக்கே" [19]

என்ற சுந்தரர் வாக்கும்,

"இருந்து என்னை ஆண்டுகொள் விற்றுக்கொள் ஒற்றிவை
என்னின் அல்லால்
விருந்தினன் ஏனை விடுதி கண்டாய்" [20]

என்ற மாணிக்கவாசகர் வாக்கும், 'உயிர்கள் இறைவனுக்கு அடிமை' என்பதை உணர்த்துகின்றன.

"உம்பர்பிரான் உற்பத்தி ஆதிகளுக் குரியன்
உயிர்தானும் சிவானுபவம் ஒன்றினுக்கும் உரித்தே" [21]

என்னும் அடியில், தேவாதி தேவனாகும் முதல்வன் சிருட்டியாதி தொழில்களைச் செய்து உயிர்களின் மலத்தை நீக்கும் அதிகாரமுடையவன் ஆவான். முத்தி நிலையில் முதல்வனோடு அத்துவிதமாய்க் கலந்த உயிருமே சிவானுபவமாய முத்தி இன்பத்தைத் துய்த்திருக்கும் அதிகாரம் ஒன்றற்கே உரித்தாம்" என்று சித்தியார் உரைக்கும். முத்திக் காலத்தில் உயிர் இறைவனது தன்மை கைவரப்பெற்றாலும் அதனிடத்தில் இயல்பிலே இல்லாத புது ஆற்றல் தோன்றிவிட முடியாது. இதற்கு,

"இன்றுநோக்கு உரை நடக்கும்
  இயல்பு இலோர்க்கு இனைய வாய்ந்து
நின்றதோர் அலகை நேர்ந்தால்
  நிகழ்வதுஎன் அதுபோல் உள்ளத்து
ஒன்றிய உணர்வு தம்பால்
  உள்ளது நிகழ்த்தும் ஈசன்
தன்தொழில் நடத்தும் மேனி
  தனக்கெனக் கொண்டு தானே" (சிவ.77)

என்ற சிவப்பிரகாசப் பாடலை, சிவஞான மாபாடியத்தில் சிவஞான முனிவர் எடுத்துக்காட்டுவர்.[22]

"பார்வை, பேச்சு, நடை இல்லாத ஒருவனை இம் மூன்றும் உள்ள பேய் பிடித்தால் அவன் பார்ப்பானா? பேசுவானா? நடப்பானா? பேய்த்தன்மை, பிடியுண்டவனுக்கு வந்திடாது. அவனிடம் உள்ளதைத்தான் விளக்கும். அதுபோல உயிர்களில் பொருந்திய திருவருள் அவ் வுயிர்களிடத்து உள்ள சத்தியைச் செயற்படுத்தும் (ஒன்றிய உணர்வு தம்பால் உள்ளது நிகழ்த்தும்). சிவன் தனக்கென திருமேனி கொண்டு ஐந்தொழில் செய்வான்' என்பது பொருளாகும்.

முத்தி பெற்ற ஆன்மா, முற்றறிவும் ஐந்தொழில் செய்யும் ஆற்றலும் உடையது அல்ல. ஏனெனில், நாழி அளவை கடல்நீர் முழுவதையும் முகந்து கொள்ளும் ஆற்றல் உடையதாக ஆவதில்லை. இதனை,

'அருள் எடுத்தலும் மெய்வகை உணர்வும் ஐந்தொழிலும்
பெரிது எடுத்திடும் உயிர் எனல் பிழை மறைபேசாது
இருள் அடுத்த சிற்றறிவினுக்கு ஐந்தொழில் எடாதால்
பொருள் அடுத்த தண்புணரிநீர் முழுவதும் நாழி' [23]

என்று கச்சியப்ப முனிவர் பேரூர்ப்புராணத்தில் குறித்திடுவார்.

v. முத்திக்கு உவமை

முதல்வனாகிய இறைவன் (சிவன்), முன்பு பெத்த காலத்தில் உயிரோடு உடனாய் நின்றும், அவ் வுண்மை தோன்றாது, உயிர் ஒன்றே உள்ளது எனும்படி, உயிரோடு ஒன்றாகி நின்ற முறைமை போல, முத்திக் காலத்தில் உயிர் அம்முதல்வனாகிய இறைவனோடு உடனாய் இருந்தும், தான் காணப்படாமல் முதல்வன் ஒருவனே உள்ளான் என்னும்படி அவனுள் அடங்கி ஒன்றாகி நிற்கும். இதனை,

'அவனே தானே ஆகிய அந்நெறி ஏகன் ஆகி' [24]

எனச் சிவஞான போதத்தில், மெய்கண்டார்.

'முத்தி நிலைக்கு பெத்த நிலை'யை உவமை காட்டி விளக்குவர்.

பெத்த நிலையில் உயிர் தோன்றச் சிவம் தோன்றாது நின்றாற்போல, முத்திக் காலத்தில் சிவமே தோன்ற உயிர் தோன்றாது நிற்கும். எனவே, பெத்தத்தில் உயிர் தன் செயலாகக் கருதியதுபோல, முத்தியில் சிவன் செயலாகவே கருதும். மெய்கண்டார் கூறும் இவ் வுவமையை, குரு முதல்வர் தட்சிணாமூர்த்தி தேசிகர்,

"ஒன்றாக யானே பரமென்று அயராது உரைத்தநிலை
தானே உவமையெனத் தந்ததற்பின்" [25]

என்று, உபதேசப் பஃறொடையில் அருளிச் செய்வர்.

"தத்துவங்கள் எல்லாம் சகசமாய் ஆன்மாவில்
பெத்தத்தில் நிற்கின்ற பெற்றிபோல் - முத்திதனில்
சித்தமலம் அற்றார் செறிந்திடுவர் என்றுமறை
சத்தியமா ஓதியிடும் தான்" [26]

என வரும் உண்மை விளக்கத்தில், 'பெத்த நிலையில் உயிருக்குக் கருவி கரணங்களாய் அமைந்த எல்லாத் தத்துவங்களும் அவ் வுயிரிடத்தில் இயல்பாய் இயைந்து நிற்கின்ற தன்மைபோல, முத்தியில் உயிர் சிவத்திற் பொருந்திச் சிவமாய் நிற்கும்' என்று மனவாசகங் கடந்தார் அருளிச் செய்வர்.

மெய்கண்டார் முத்தி நிலைக்குப் பெத்த நிலையைக் கூற, அவரது மாணாக்கராகிய மனவாசகங் கடந்தார் பெத்த நிலையில் தத்துவங்களை உவமை காட்டி விளங்க வைக்கிறார்.

போதமும், உண்மை விளக்கமும் முத்தி நிலைக்குப் பெத்த நிலையை உவமையாகக் கூற சிவப்பிரகாசம், உயிருக்கும் ஆணவத்திற்கும் வேறுபாடு தெரியாத அளவிற்கு உயிரே ஆணவமாகியும், ஆணவமே உயிராகி நிற்கும் கேவல நிலையை முத்தி நிலைக்கு உவமையாகக் கூறும்.

'ஒன்றிநின்று உணரும் உண்மைக்கு
உவமை ஆணவத்தொடு ஒன்றே" (சிவ.87)

கேவல நிலையில் ஆணவத்திற்கும், உயிருக்கும் உள்ள தொடர்பே முத்தி நிலையில் உயிருக்கும் சிவத்துக்கும் உள்ள தொடர்பாகும். இதுபற்றியே,

"ஆணவத்தோடு அத்துவிதமானபடி மெய்ஞ்ஞானத்
தாணுவினோடு அத்துவிதம் சாரும் நாள் எந்நாளோ" [27]

என்று தாயுமானவர் குறிப்பர். "உயிர் பசுத்துவத்தோடு கூடிப் பசுவெனவும், சிவத்தோடு கூடிச் சிவன் எனவும் நிற்றலே சார்ந்ததன் வண்ணமாய் நிற்றல் எனக் கொண்டு, பெத்த நிலை அத்வைதமும் முத்தி நிலை அத்வைதமும் சித்தித்தது இப்பாடல்' எனச் சுத்தாத்வைத நிர்ணயத்தில் புதிய விளக்கம் தருகிறார் பாம்பன் சுவாமிகள்.[28]

திருவானைக்காப் புராணத்தில், இறைவன் இறைவிக்கு ஞான உபதேசம் செய்யும் படலத்தில், உயிரின் முத்திநிலை பற்றிக் கூறும்பொழுது', எம்மோடு அறிவாய், இருள் செய் கேவலம்போல் கலந்திருப்பதே முத்தி' என்று கச்சியப்ப முனிவர் இறைவன் வாக்காகவே சிவப்பிரகாச உவமையை வழிமொழிவார்.[29]

"ஆணவம் அடைந்த ஆன்மா ஆணவமாய் மறைந்து
காணுறும் கருணை மேனி காணுறாப் போல ஞானத்
தாணுவை அடைந்த ஆன்மா தாணுவாய் மறைந்து ஞேயம்
பூணுறுங் கருணை மேனி போற்றி ஒன்றாயே நிற்கும்" [30]

"ஆணவத்துள் ஆணவமாய் மறைந்து, கருணைத் திருமேனியாம் அருளைக் காணாது இருத்தல்போல, ஞான மயமான சிவத்தை அடைந்த ஆன்மா அச் சிவமாகவே மறைந்து தானும் சிவத்துக்கு அங்கமாக விளங்கும்" என்பார் அம்பலவாண தேசிகர்.

ஆணவத்தோடு மட்டும் உயிர் பொருந்தி நிற்கின்ற கேவலநிலைபோல, சிவத்தோடு மட்டுமே பொருந்துகின்ற பர முத்தியாகிய அந்தத் தனிநிலையை ***"தற்கேவல முத்தி; தானே தனிமையாம்"*** என்று திருமந்திரம் கூறும்.[31] இதனைச் 'சிவ கேவலம்', 'பர கேவலம்' என்பர் அறிஞர். துகளறு போதம் இதனை ***'வாடாத முத்தியினில் வாய்த்த அருட் கேவலம்'*** என்று கூறும்.[32]

முத்தியில் ஆணவத்தின் நிலை

உயிர் சிவத்தோடு ஒன்றாய் நிற்கும் முத்தி நிலையில், அதனைப் பற்றியிருந்த ஆணவம் அழிந்திடும் எனவும், அழிந்திடாது எனவும் இரு வேறு கருத்துகளை நூல்கள் கூறும்.

ஆணவம் அழிந்திடும் என்றால், அழிந்திடும் என்பதன் பொருள் அடியோடு இல்லாதொழிதல் ஆகும்.

> "ஈசனது அருளால் பாசத் தொகுதி
> செறிவுறு செம்பில் கறையுறு களிம்பு
> குளிகை தாக்க ஒளிபெற்று"[33]

என்று பேத வாத சைவம் கூறும். செம்பின் களிம்பு, குளிகையினால் அழிந்து செம்பு பொன்னானதுபோல் ஆணவம் அருளால் அழிந்து உயிர் தூய்மை உடையதாகி முத்தி யடையும்.

'இல்லது வாராது; உள்ளது போகாது' என்பது சைவ சித்தாந்தத்தின் முடிபு. ஆகவே, 'உள்ளது எனக் கூறப்படும் எந்தப் பொருளும் உள்ளபொருள் ஆகும். அதனால், பதி, பசுவைப்போல ஆணவ மலமும் என்றும் உள்ள பொருளாகும். ஆணவம் ஒரு காலத்தில் இருந்து, மற்றொரு காலத்தில் இல்லாமல் அழிந்து விடுவதன்று. ஆதலால், அதற்கு அழிவு கூறுதல் பொருந்தாது. ஆணவம் நாசம் என்றால் அம் மலத்தை 'நித்தப்பொருள்' என்று சித்தாந்தம் சொல்ல வேண்டுவதில்லை.

முத்தியிலும் ஆணவ மலம் உயிரினிடத்தினின்றும் நீங்குவதில்லை என்பது பாடாண வாத சைவம். அப்படியானால் ஆணவத்தினால் உயிருக்கு ஏற்படும் அறியாமை நீங்குமாறில்லை; அருள் பிரகாசிக்குமாறும் இல்லை. எனவே, உயிர் ஞானம் பெறுவதை நினைக்க வேண்டாம் என்னும் இக் கருத்துகளை,

> "அழிந்திடும் பாசம் என்னில்
> நித்தமென்று உரைத்தல் வேண்டா
> அழிந்திடாது என்னில் ஞானம்
> அடைவது கருத வேண்டா"

என்று சிவப்பிரகாசம் வினாக்களாகத் தொடுத்து,

"அழிந்திடும் சத்தி நித்தம்
அழிந்திடாது ஒளியின் முன்னர்
அழிந்திடும் இருளும் நாசம்
அடைந்திடா மிடைந்திடாவே" (சிவ.88)

என்று விடையையும் தருகிறது.

உயிரின் அறிவை மறைத்திருக்கின்ற ஆணவத்தின் சத்தியே அழியும். எனவே, பாசத்தின் அநாதித் தன்மைக்கு அழிவில்லை. எப்படி யெனின் சூரியன் முன் நில்லாத இருளானது அழிந்ததும் இல்லை; முனைத்து நின்றதும் இல்லை. அதுபோலவே, ஞானப் பேரொளி உயிரின் மீது படியும்போது ஆணவ மலம் தன் ஆற்றலை இழக்கிறது. அழிவுறுவதில்லை. எனவே, ஆணவம் அழியா தழியும்.

இதனையே போற்றிப் பஃறொடையிலும் உமாபதி சிவம்,

"...இருள்வடிவும் செங்கதிரோன் பால்நிற்பக்
காணாது ஒழியும் கணக்கேபோல் - ஆணவத்தின்
ஆதிகுறையாமல் என்பால் அணுகாமல்
நீதிநிறுத்தும் நிலை போற்றி" [34]

என்றருளிச் செய்தார்.

"மூலமலம் என்றும் அழியா முதலாம் என்று
ஆலநிழற் கடவுள் அன்றுஅறைய - ஞாலத்தே
ஆதித்தன் சந்நிதியில் அந்தகாரம் போல
ஓதிற்று என் மெய்கண்டாய் உற்று" [35]

என வரும் சதமணிக் கோவை, 'இருள் ஆதித்தன் சந்நிதியில் இராது என்பதே ஒழிய, இருள் அழிந்துவிட்டது என்பது பொருளல்ல' என்று விளக்கம் தரும்.

சிவஞான போதத்தில் முத்தி அளிக்கும் முறையினை அறியவே, பற்றும் மலம் கெடும் எனில், அவ்வாறு கெட்டால் மலம் நித்தம் என்றது பொருந்தாமல் போகும். அதுபற்றிக் கெடாது நிற்கும் எனின் ஆன்மாவுக்கு மெய்ஞ்ஞானச் சார்பு இல்லாது போகும். ஆணவ மலம் முத்தியில் ஆதவன்முன் இருள்போல் மறைப்பு என்னும் ஆற்றலாகிய தன் சத்தி கெட்டு ஆன்மாவிடத்து எந்தக் குறையையும் ஏற்படுத்த இயலாமல் அடங்கி நிற்கும்' என்று மேற்கண்ட சிவப்பிரகாசத்தை அடியொற்றி, அதற்குப் பொழிப்புரை செய்தாற்போல் அம்பலவாண தேசிகர் தம் சித்தாந்தப் பஃறொடையில் குறிப்பிடுகிறார்:

"சித்தந் தெளிய சிவஞான போதத்தின்
முத்தி அளிக்கும் முறையறியத் - தொத்துமல
நட்டமெனின் நித்தியமோ நண்ணாது நட்டமற

ஒட்டுமெனின் மெய்ஞ்ஞானத்து ஒன்றாவாம் - கெட்டதுகேள்
ஞான! மலம் நித்திலமே நள்ளிருள்தான் ஆதவன்முன்
ஊனமற நின்றாங்கு ஒளித்தென்ன- ஈனமுறச்
செய்யாதிருக்கும் அதன் செய்கையதாம்" [36]

சிவத்தை இனிதுணர்ந்து நிற்றலால் சிறிதும் குறைவில்லாத இன்பமே உயிருக்கு உளதாவதன்றித் துன்பம் சிறிதும் உண்டாகாமையால், பிறிதொரு பொருளையும் உணரமாட்டாமை பற்றி உயிருக்கு உண்டாவதொரு குறையில்லை. பெத்த நிலையில் சிவனை அறியவொட்டாது மறைத்திருந்த ஆணவ மலம், முத்தி நிலையில் சிவனைத் தவிர உயிர் பிற பொருளை அறியவொட்டாது அதனை மறைத்து நிற்கும். ஆகவே, முத்தி நிலையில் ஆணவத்தின் மறைப்பு உயிரின் இன்பத்திற்கு ஏதுவாகும். இதுபற்றியே, "ஈனமுறச் செய்யாதிருக்கும் அதன் செய்கையதாம்" என்றார். இக் கருத்து, 'இன்பம் கொடுத்தல் இறை இத்தை விளைவித்தல் மலம்'[37] எனும் உண்மை விளக்கத்துடனும் ஒப்பு நோக்கத்தக்கதாகும்.

முத்தியில் கன்மத்தின் நிலை

எண்ணற்ற பிறவிகளைத் தரும் இரு வினைகளின் தொகுதியாகிய சஞ்சித கன்மம் ஞானாசிரியர் திருநோக்கால் தீக்கை கொடுத்தபொழுது அத்துவ சுத்தியினால் அழிந்தொழியும்:

". . . . . . ஆசானாகித்
தோன்றி நுகராதவகை முற்செய் கன்மத்
துகளறுத்து அங்கு அத்துவாத்துடக்கு அறவே சோதித்து" [38]

என்பது சித்தியாரில் அருள்நந்தி சிவத்தின் வாக்கு.

ஞானாசிரியர் அருளினாலே அத்துவா சோதனை செய்து நீக்கப்பட்ட சஞ்சித கன்மம், தீயிலே இட்டு வறுத்த வித்துப்போல் அழியும். வறுத்தெடுத்த வித்து வித்தாகவே இருந்தாலும் அதன் தோற்றமும் உள்ளீடும் மாறாதிருந்தாலும் முளைக்கும் தன்மை அதற்கு இராது. அதைப்போலவே சஞ்சிதவினை கெடும்.

"பார்த்த பார்வையால் இரும்புண்ட நீரெனப் பருகுந்
தீர்த்தன் தன்னையும் குருமொழி செய்ததும் தம்மைப்
போர்த்த பாசமும் தம்மையும் மறந்து மெய்ப்போத
மூர்த்தியாய் ஒன்றும் அறிந்திலர் வாதவூர் முனிவர்" [39]

"இறைவனின் அருள்திரு நோக்கினாலே சஞ்சித வினை கழிந்து பாசத்தையும் தம்மையும் மறந்து மெய்ஞ்ஞான வடிவினர் ஆனார்" என்று மாணிக்கவாசகரை திருவிளையாடற் புராணம் போற்றும்.

இப் பிறவியில் அனுபவிப்பதற்கு ஏற்றுகொண்ட பிராரத்த வினை, ஞானம் கூடாமுன் ஆகாமியத்தையும் ஏற்றி அனுபவப்பட்டு வந்ததுபோல் அன்றி, ஞானப்பேறு எய்திய பின்னர் ஆகாமியத்தை ஏற்றாது அனுபவத்திற்கு வரும். அதுவும் அதன் வலிமை கெட்டு வாதனை அளவாய் நின்று சிறிதளவே பற்றும். இது எவ்வாறு எனில் குயவன் கலங்கள் வனைதற்காகச் சுழற்றிவிட்ட சக்கரம் வனைந்து முடிந்த பின்னரும் சிறிது நேரம் சுழன்று அதன்பின் நிற்பதைப்போலாகும்.

"குலாலன் வினை தவிர்ந்த
சக்கரமும் கந்தித்து சுழலுமாப் போல்" [40]

என்று சித்தியாரும்,

". . . ஊங்குகடனறி
மண்வினை மாக்கள் தம்வினை முடிமார்
திகிரி உருட்டி ஒருவி யாங்கும்
வருதல் ஓவாமாறும்" [41]

என்று ஞானாமிர்தமும் கூறுகின்றன.

ஞானம் பெற்ற பின்பும் இறை பணியில் நிற்பார்க்கு பிராரத்தத் தாக்குதல் உண்டு என்பதை,

'ஆனை வெம்போரில் குறுந்தூறு எனப் புலனால்
அலைப்புண்டேன்' [42]

என்றும்,

'எறும்பிடை நாங்கூழ் எனப் புலனால்
அரிப்புண்டலந்த வெறுந்தமியேன்' [43]

என்றும்,

'தினைத்துணையேனும் பொறேன் துயர் ஆக்கையின்
திண்வலையே' [44]

என்றும் மாணிக்கவாசகர் திருமொழிகளால் அறியலாம்.

பிராரத்தம் இவ்வளவில் அநுபவிப்பதற்கு ஏற்றபடி உடல் ஊழாய்க் கழியும். அதாவது உடம்பு உள்ளவரையில் வருவனவாக உள்ள பிராரத்தவினைப் பயன்கள் உயிரைத் தாக்காது உடல் அளவாய்க் கழியும். உடல் அளவாய்க் கழிதலாவது, உடலின்கண் நோய், புண் முதலியவற்றைத் தோற்றுவித்து நீங்குதல். உடலின் தொடர்பை விட்டொழித்தவர்கள் தம் உடலுக்கு வரும் நோய் முதலியவற்றைத் தம்மின் வேறாகக் கண்டு நிற்பர். அவை அவரைச் சிறிதும் பாதிக்க மாட்டா. இதனையே, 'உடல் ஊழாய்க் கழிதல்' என்பர் அறிஞர்.[45]

“ஏன்றவினை உடலோடு ஏகும்’ [46]

என்பது திருவருட்பயன்.

பிராரத்த வினையை நுகரும்பொழுது ஈட்டுவதாகிய ஆகாமிய வினை ஒளிமுன்பு இருள் நீங்குவதுபோல ஞானாசிரியர் ஞானத்தீ பொருந்துதலால் அழிந்துபோகும். இதனை,

‘இனிச்செய் கன்மம்... ஞானத்தால் இடிப்பன்’ [47]

எனவரும் சித்தியாரும்,

‘இடையேறும் வினை தோன்றில் அருளே சுடும்’ [48]

எனவரும் திருவருட்பயனும் கூறுகின்றன.

இவ்வாறு, மும்மை (சஞ்சிதம், பிராரத்தம், ஆகாமியம்) தரும் வினைகள் மூதறிவார்க்கு மூளாவாம்.” [49]

“சஞ்சிதத்தினின்று பிராரத்தம்; பிராரத்தத்தினின்று ஆகாமியம் என்று ஆகி, மீளவும் ஆகாமியம் சஞ்சிதமாய் வளர்தலாகிய தொடர்ச்சி அற்றொழிதலால் ***‘வினைகெடக் கைதர வல்ல கடவுள்’*** என்று போற்றுவார் மாணிக்கவாசகர். உற்றுழி உதவுதலை, கைகொடுத்தல் என்னும் வழக்குப்பற்றி ‘கைதரவல்ல’ என்றார். ‘பிறவிக் கடலின் ஆழாது, கைகொடுத்து ஏற்றவல்ல’ என்பதாம். “இறைவற்கு கையாவது திருவருளேயாகும்” என்னும் கருத்து இங்கு நினைக்கத் தக்கதாம்.[50]

“எல்லைஇல் பிறவி நல்கும்
இருவினை எரிசேர் வித்தின்
ஒல்லையில் அகலும் ஏன்ற
உடற்பழ வினையது ஊட்டும்
தொல்லையில் வருதல் போலத்
தோன்றிரு வினையது உண்டேல்
அல்லொளி புரையும் ஞானத்
தழல்உற அழிந்து போமே (சிவ.89)

என்று மூன்று வகையாகக் கூறப்பட்ட வினைகள் அகலும் முறையைச் சிவப்பிரகாசம் இனிது விளக்குகிறது.

இதனையே பேரூர்ப் புராணம்,

“சஞ்சிதம் முன்பே அழிந்தது; ஏறும் வினை உளதேல்
தயங்கு அருளின் இரியும்; மலம் அழியாது; சத்தி
செஞ்சுடர் முன்இருள்போலத் தேயும்” [51]

என விளக்கி,

‘முத்தி பெற்ற ஆன்மா உடம்புடன் கூடி உலகில் வாழும் பொழுது வாசனா மலம் காரணமாக மீண்டும் பந்தப்பட நேரும். அப்பொழுது திருவைந்தெழுத்தை விதிப்படி செபிப்பதனால் பந்தம் வாராமல் நீங்கும்’ என்பதையும் இணைத்துக் காட்டும்:

> “. . . . . உடல் உலகில்
> திரிதருகால் வாதனையால் திறம்புவதும் உளதாம்
> அஞ்செழுத்தை விதிப்படி உச்சரிக்கின் அது விலகும்.” [52]

இது பின்வரும் ‘புனிதன் நாமம்’ என்னும் பகுதிக்குத் தோற்றுவாயாக அமைகிறது.

அடிக்குறிப்புகள்

1. காவை அம்பலநாதத் தம்பிரான் கொளு, மதுரைச் சிவப்பிரகாசர் உரை, ப.269
2. குமரகுருபரர், பண்டார மும்மணிக்கோவை, 5.
3. சங்கற்ப நிராகரணம், மாயாவாதி சங்கற்பம், வரி : 43-49.
4. 8:27:1
5. சங்கற்ப நிராகரணம், ஐக்கியவாதி சங்கற்பம், வரி: 16-19.
6. சிவஞான சித்தியார் சுபக்கம், 318.
7. i. சிவஞான போதம், எடுத்துக்காட்டு வெண்பா, 72
   ii. சிவஞான சித்தியார் சுபக்கம், 321.
8. 8:27:4
9. சி.அருணை வடிவேல் முதலியார், எட்டாம் திருமுறை - 1, பக். 705-706.
10. சங்கற்ப நிராகரணம், பேத வாதி சங்கற்பம், வரி: 4-5
11. திருவருட்பயன், 75
12. பாம்பன் சுவாமிகள், பரிபூரணானந்த போதம், ப.137
13. 1:126:7
14. சங்கற்ப நிராகரணம், நிமித்த காரண பரிணாமவாதி சங்கற்ப நிராகரணம், வரி:82-84
15. சி.சு.மணி, மெய்கண்ட நூல்களுள் ஏழு, ப.179.
16. சிவஞான போதம், எடுத்துக்காட்டு வெண்பா, 5
17. மேலது, வெண்பா, 50
18. மேலது, வெண்பா, 80
19. 7:95:1
20. 8:6:18
21. சிவஞான சித்தியார் சுபக்கம், 319
22. சிவஞான சுவாமிகள், சிவஞான பாடியம், ப.117.

23. பேரூர்ப்புராணம், காலவன் வழிபடு படலம், பா.59
24. சிவஞான போதம், நூற்பா.10
25. தட்சிணாமூர்த்தி தேசிகர், உபதேசப் பஃறொடை, கண்ணி:157
26. உண்மை விளக்கம், பா.46
27. தாயுமானவர், எந்நாட் கண்ணி, நிற்கும் நிலை, 28.
28. பாம்பன் சுவாமிகள், சுத்தாத்வைத நிர்ணயம், பக்.9-10
29. கச்சியப்ப முனிவர், திருவானைக்கா புராணம், ஞான உபதேசப் படலம், ப.45
30. அம்பலவாண தேசிகர், தச காரியம், பா.46
31. திருமந்திரம், 2213.
32. துகளறு போதம், 25
33. சங்கற்ப நிராகரணம், பேதவாதி சங்கற்பம், வரி: 1-3
34. போற்றிப் பஃறொடை, வரி: 154-157
35. சதமணிக் கோவை, 62
36. அம்பலவாண தேசிகர், சித்தாந்தப் பஃறொடை, கண்ணி : 606-609
37. உண்மை விளக்கம், 50
38. சிவஞான சித்தியார் சுபக்கம், 262
39. திருவிளையாடற் புராணம், 2759
40. சிவஞான சித்தியார் சுபக்கம், 309
41. ஞானாமிர்தம், அகவல்.48
42. 8:6:21
43. 8:6:25
44. 8:6:39
45. ஆ.ஆனந்தராசன், சிவஞான போதம் வழித்துணை விளக்கம். ப.313
46. திருவருட்பயன், 98
47. சிவஞான சித்தியார் சுபக்கம், 262
48. திருவருட்பயன், 98
49. மேலது, 99
50. சி.அருணை வடிவேல் முதலியார், எட்டாம் திருமுறை - 1, பக். 242-243
51. பேரூர்ப் புராணம், காலவன் வழிபடு படலம், 69
52. மேலது, 69

5.7 புனிதன் நாமம்

ஞானாசிரியராலே மும் மலங்களும் நீங்கப்பெற்று ஞானம் பெற்ற உயிர்களுக்கும் மலவாசனை தாக்கும். வேப்ப மரத்தில் வாழ்ந்து கசப்பான காய், இலை முதலியவற்றையே தின்று தின்று பழகிப்போன புழு, அருகில் இருந்த கரும்பின்மேல் விழ அக் கரும்பின் தீஞ்சுவையை இனிது நுகர்ந்தாலும், முன்னர்ப் பழக்கம் காரணமாக வேப்பங்காயை மீண்டும் மீண்டும் விரும்பித் தின்னும்.[1] திருவள்ளுவர், மெய்யுணர்வு பெற்ற வழியும் ‘அவாவறுத்தல்’ என்ற அதிகாரத்தை உரைத்தருளியது போலவே, மெய்கண்ட தேவர் சிவஞான போதம் ஒன்பதாம் சூத்திரத்தில், ‘இவ் வான்மாக்களுக்கு ஞானம் பிரகாசித்தும் அஞ்ஞானத்தை வேம்பு தின்ற புழுப்போல நோக்கி நிற்குமாதலின் அதனை நீக்குவதற்கு ‘விதி எண்ணும் அஞ்செழுத்தே’ என்றும், வார்த்திக வுரையில் ‘ஸ்ரீபஞ்சாக்கரத்தை விதிப்படி உச்சரிக்க’ என்றும் உரைத்தருளினார்.

விடாமழை பெய்தல் நின்றவிடத்தும், தம்மிடத்து விரும்பி வசிக்கும் பறவைகளும் விலங்குகளும் கவலை கூர்ந்து வருந்த, எல்லா மரங்களும் சிறிய மழைத்துளிகளைச் சிந்தின எனப் புதிய உவமை மூலம் மல வாசனை தாக்கும் என்பதைச் சிவஞான முனிவர் காஞ்சிப் புராணத்தில் குறிப்பர்.

“போதம் மேலாகப் பண்டே புல்லிய மலநோய் தீர்ந்தும்
வாதனை தாக்குமா போல், மழைபெயல் மாறித் தீர்ந்துங்
காதல்செய் துறையும் புள்ளும் மாக்களுங் கவன்று நெஞ்சம்
நோதக, மரங்கள் எல்லாம் நுண்துளி துவற்றும் மாதோ” [2]

மல வாசனை தாக்குதல் ஆவது, தானல்லாத உடம்பைத் தான் என்றும், தனதல்லாத போகத்தைத் தனதென்றும் மாறுபாடாகக் கருதப் பண்ணுவதாம். இஃது அவ் வுடம்பிற்குரிய பிராரத்தவினை நுகர்ச்சியில் ஆணவ மல வாசனை தாக்குதலும், அவை ஆகாமியமாய் வந்து தாக்குதலும் ஆகும்.[3] நான், எனது என்பன எழுமாதலால், அவை ஆகாமியமாய் வந்து தாக்குதலும் ஆகும்.

இது பெருங்காயம் வைத்தெடுக்கப்பட்ட பாத்திரத்தில் வாசனை மங்கி மெலிதாய் வீசுவது போலதாகும். இதனை,

“. . . . . குவிவாய்த்
தசும்புறை இங்கு ஆங்கு அசும்பறத் துடைத்தும்
இருங்கடி இகவாப் பெருங்கடன் அல்லதை” [4]

என்று ஞானாமிர்தமும்,

“இங்குத், தங்கிப் போம் பாத்திரம். . . . .
மங்கிப்போய் வாதனையால் உழல்விக்கும்” [5]

என்று சித்தியாரும் எடுத்துக்காட்டுகின்றன.

அந்தச் சார்பின் விளைவுகள் உயிரைத் தாக்காது இருக்கும் பொருட்டு அஞ்செழுத்தை ஓதவேண்டும். இதனைச் சிவப்பிரகாசம்,

‘பந்தம் ஆனவை அறுத்துப் பவுதிகம் உழலும் எல்லைச்
சந்தியாது ஒழியாது இங்குத் தன்மைபோல் வினையும் சாரும்
அந்தம் ஆதிகள் இலாத அஞ்சு எழுத்து அருளினாலே
வந்தவாறு உரைசெய்வாரை வாதியா பேதியாவே” (சிவ.90)

என்று உரைக்கும். இச் சிவப்பிரகாசத்திற்கு,

“உடலுறு நுகர்வும் (பிராரத்தவினை) உற்றிடும் வினையும் (ஆகாமியம்) இடர்ப்பட அஞ்செழுத்து இயம்புக”[6] என்று காவை அம்பலநாதத் தம்பிரான் ‘கொளு’ செய்தருளினார்.

பரஞானத்தால் உயிர் பரத்தைத் தரிசித்தவழி, பர போகத்தை நுகர்ந்து கொண்டிருக்கும் ஆயினும் அவ் வுயிர், அனாதியே பயின்ற அஞ்ஞானத்தை நோக்கா வண்ணம், திருவைந்தெழுத்தை எண்ணுதல் வேண்டும்.

“காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக்கு உய்ப்பது;
வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது;
நாதன் நாமம் நமச்சிவாயவே”

இங்கு ‘நன்னெறி’ யென்பது பர ஞானத்தால் பரத்தைத் தரிசிக்கும் நன்னெறியாகும். ‘உய்ப்பது’ என்றதனால் அஞ்ஞானத்தை நோக்காது பர ஞானத்தை நோக்குமாறு செய்யு மென்பதை இனிது உணரலாம்.[7]

‘நாதன் நாமம் நமச்சிவாயவே’ என்பதையே சிவப்பிரகாசம் ‘புனிதன் நாமம்’ என்று போற்றுகிறது. ‘நமசிவாய’ என்பது இறைவன் திருப்பெயர். ‘சிவாயநம’ என்றால் பெயர்த்தன்மை நீங்கி மந்திர எழுத்தாகி விடுகிறது. மந்திரத்தை உடைய

தெய்வங்களிடத்தே அம் மந்திரமாய் வரும் சொற்களை வழங்கியவாறு கொள்வதே தவிர இலக்கணத்தால் யாப்புறவைக் கொள்ளக் கூடாது' எனப் பொருள்படும்,

'மந்திரப் பொருள்வயின் ஆஅகுநவும்
அன்றி அனைத்தும் கடப்பாடிலவே"[8]

என்னும் தொல்காப்பியம் இங்கு நினைக்கத்தக்கது. வேத மகா வாக்கியங்களின் பொருளாக விளங்கும் 'இறைவனின்', 'ஈண்டிய பெரும்பெயர்' ஆதலின் திருவைந்தெழுத்தை சிவப்பிரகாசம் 'அந்தம் ஆதிகள் இல்லாத அஞ்செழுத்து' என்று குறிப்பிடும்.

பஞ்சாக்ஷரமயம் சம்பும் பரப்ரஹ்ம ஸ்வரூபிணம்|
நகாராதி யகாரந்தம் ஜ்ஞாத்வா பஞ்சாக்ஷரம் ஜபேத்||

"நகாரம் முதல் யகாரம் வரை ஐந்தெழுத்து வடிவான பஞ்சாக்ஷர மந்திரமே பரப்பிரம்மமான சம்புவின் ஸ்வரூபம் என்று அறிந்து அதை ஜபிக்க வேண்டும்" என்று பஞ்ச பிரம்ம உபநிஷத் கூறும்.[9]

திருவாசகத்தில் உள்ள சிவ புராணம் 'நமச்சிவாய வாஅழ்க' என்று திருவைந்தெழுத்தை வாழ்த்தியே தொடங்குகிறது. திருக்கோவையார் 'ஊருணி உற்றவர்க்கு ஊரன் மற்று யாவர்க்கும் ஊதியமே' என நிறைவு பெறுகின்றது. பூட்டுவில் பொருளாக இவ்விரு நூல்களையும் ஒருங்கு வைத்துக் காண்பார்க்கு 'உயிர் பெறத்தக்க ஊதியம் திருவைந்தெழுத்தே' என்பது பெறப்படும். பிறவிப் பெருங்கடலில் நீந்துதற்குரிய புணை திருவைந்தெழுத்தே என்பாராக 'அஞ்செழுத்தின் புணை பிடித்துக் கிடக்கின்றேனை' என்றருளுகின்றார்.[10]

இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என வேதங்கள் நான்கு. அதர்வணத்தை மற்ற மூன்றனுள் அடக்கி வேதத்தைத் 'த்ரயீ' என்று கூறுவது மரபு. இவற்றின் நடுவில் இருப்பது யசுர் வேதம். அது 101 சாகைகளை உடையது. இவற்றின் நடுவில் இருப்பதான 51வது சாகை 'போதாயன சாகை' எனப்படும். இஃது, ஏழு காண்டங்கள் கொண்டது. இவற்றின் நடுவிலுள்ள நான்காவது காண்டம் 'சத ருத்ரீயம்' ஆகும். இதன் நடுவில் இருப்பது ஐந்தாவது பிரச்னமான 'ஸ்ரீருத்ரம்'. இதில் ***"நம: ஸோமாயச ருத்ராய"*** என்னும் அநுவாகத்தின் நடுவில் ***"நம: சிவாய"*** என்னும் இறைவனின் நாமம் மிளிர்கிறது. இவ்வாறு வேத நடுவில் விளங்குவதால் இது 'வேத இருதயம்' என்றழைக்கப்படும்.[11] இதனை மீனாட்சி சுந்தரம் பிள்ளை திருநாகைக் காரோணப் புராணத்தில்,

"மும்மறையுள் நடுமறையின் முனிவிலெழு காண்டத்தில்
செம்மைதரு நடுக்காண்டஞ் சேர்ந்தவெழு சங்கிதையில்
அம்மநடுச் சங்கிதையின் ஆதியீறு ஒழித்து நடுப்
பொம்மலுற அமர்மனுவின் பொருளாவான் அவன் மைந்த"[12]

என்று பாடுகிறார்.

மறைகளின் இதயத் தானத்தில் விளங்கும் மந்திரப் பொருளாவான் இறைவனே என்பது புலப்பட ***‘வேத விழுப்பொருள்’*** என்று மணிவாசகர் அருளிச் செய்வர்.[13]

மூவர் முதலிகள் (சம்பந்தர், அப்பர், சுந்தரர்) அருளிய ஏழு திருமுறைகளில் (சைவம்) திருநாவுக்கரசர் அருளிய திருமுறைகள் நான்கு, ஐந்து, ஆறு. அவற்றின் நடுவில் உள்ள ஐந்தாம் திருமுறை நூறு பதிகங்களைக் கொண்டது. அதன் நடுவில் அமைந்துள்ள 51வது திருப்பதிகம் திருப்பாலைத்துறைத் திருக்குறுந்தொகை. அது பதினொரு திருப்பாக்களை உடையது. அதன் நடுவில் உள்ள ஆறாவது திருப்பாசுரத்தின் நடுவில் ‘சிவாய’ என்னும் ஐந்தெழுத்து மந்திரம் ஒளிர்கிறது. வடமொழியில் வழங்குவதைப் போலவே இம்மந்திரம் **‘தமிழ் வேத இருதயம்’** என்று வழங்கப்படும்.

> **“விண்ணினார் பணிந்தேத்த வியப்புறும்**
> **மண்ணினார் மறவாது சிவாய வென்று**
> **எண்ணினார்க் கிடமா எழில் வானகம்**
> **பண்ணி னாரவர் பாலைத் துறையரே”** [14]

ஐந்தெழுத்தில் ஒவ்வொரு எழுத்தும் ஒரு நுண்பொருளைக் குறித்து நிற்கும். ‘சி’ என்பது சிவ பரம்பொருளையும், ‘வ’ என்பது அவனது அருட் சத்தியையும், ‘ய’ என்பது உயிரையும், ‘ந’ என்பது திரோதானத்தையும் (மாயை, கன்மம் இதனுள் அடங்கும்) ‘ம’ என்பது ஆணவ மலத்தையும் குறிக்கும். இதில் உயிரை நடுவாக வைத்து, ***“திருவெழுத்து அஞ்சில் ஆன்மா, திரோதம் மாசருள் சிவம் சூழ்தர நடுநின்றது” (91)*** என்று குறிப்பிடும் சிவப்பிரகாசம். ‘சிவ’ என்பது பதியையும், ‘ய’ என்பது பசுவையும் ‘நம’ என்பது பாசத்தையும் குறிக்கும். நடுவில் உள்ள பசு இரு பக்கமும் சென்று பாசத்தோடும், பதியோடும் சாரும் தன்மையில் சார்ந்ததன் வண்ணம் உடையது. திருவைந்தெழுத்தில் இவ்வாறு திரி பதார்த்தங்கள் நிற்கும் முறை சொல்லப்பட்டது.

இனி அவத்தை நிலைகளில் வைத்தும் திருவைந்தெழுத்தை விளக்கலாம். ‘ந’ என்பது உயிர் மாயையில் அழுந்தி நிற்கும் **சகல நிலை.** ‘ம’ உயிர் ஆணவ மலமாகிய அறியாமையில் அழுந்தி நிற்கும் **கேவல நிலை.** ‘வ’ உயிர் திருவருளில் அழுந்தி நிற்கும் **துரிய அருள் நிலை.** ‘சி’ உயிர் சிவத்தில் அழுந்தி நிற்கும் **துரியாதீத ஆனந்த நிலை**. எனவே, உயிர் பாசத்தைச் சார்ந்து சகல கேவலங்களையும், பதியைச் சார்ந்து அருள் நிலை, ஆனந்த நிலைகளையும் அடைவது என்பது விளங்கும்.[15]

ஐந்தெழுத்து மந்திரம் தூலம், சூக்குமம், அதிசூக்குமழ், காரணம், மகாகாரணம் என ஐந்து வகையாகக் கூறப்படும்.

1) தூல பஞ்சாக்கரம் - நமசிவாய
2) சூக்கும பஞ்சாக்கரம் - சிவாயநம

3) அதிசூக்கும பஞ்சாக்கரம் - சிவாய
4) காரண பஞ்சாக்கரம் - சிவ
5) மகா காரண பஞ்சாக்கரம் - சி

ஆகமங்கள் திருவைந்தெழுத்தை ஒரே வகையாகக் கூறாமல் பலவகைகளாகக் கூறுவதற்குக் காரணம், ‘உயிர்களின் பக்குவ நிலையில் உள்ள படிமுறையேயாம். அவை படிமுறையானே பாசத்தினின்றும் நீங்கும் இயல்புடையன. எனவே, உயிர்கள் அப் படிமுறையானே ஐந்தெழுத்தினைப் பெற்று அதனை ஓதிப் பயன் பெறுதல் வேண்டும்.

1) தூல பஞ்சாக்கரம்

‘நம’ என்னும் பாச எழுத்துகளை முதலாக உடையது தூல பஞ்சாக்கரம். உலகியலில் நின்று உலக இன்பத்தை நாடி நிற்போர் ஐந்தெழுத்து மந்திரத்தைத் தூலமாக வைத்துக் கணிக்க வேண்டும். இது சமய தீக்கையில் உபதேசிக்கப்படும். அதனைப் பெற்றோர் சரியை நெறியினை மேற்கொள்வர்.

> “நமச்சிவாயவே ஞானமும் கல்வியும்
> நமச்சிவாயவே நானறி விச்சையும்
> நமச்சிவாயவே நாநவின்று ஏத்துமே
> நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே” [16]

2) சூக்கும பஞ்சாக்கரம்

‘சிவ’ என்னும் பதி எழுத்தை முதலாக உடையது சூக்கும பஞ்சாக்கரம். மலத்தின் பிடி நீங்கிப் பிறவியில் உவர்ப்பு வந்து சிவத்தின் மீது ஆசை மிகுதிப் பட்டோருக்கு ஞானாசிரியர் சூக்கும பஞ்சாக்கரத்தை உபதேசம் செய்வார். இது விசேட தீக்கையில் உபதேசிக்கப்படும். இவர்கள் கிரியை நெறியிலும் பின்னர் யோக நெறியிலும் நிற்பர். சிவனின் திருவருளின் மீது ஆசைப்பட்டதை,

> “அருளைப் பெறுவான் ஆசைப்பட்டேன்” [17]

> “ஆசைப்பட்டேன் ஆட்பட்டேன் உன் அடியேனே” [18]

என்று திருவாசகத்தில் மாணிக்கவாசகர் அருளிச்செய்வார். திருவைந் தெழுத்தைத் தூலமாக நகாரம் முதலாகச் சொல்லுமிடத்து, அஃது ஒரு தொடர் மொழியாய் நின்று ‘சிவனுக்கு வணக்கம்’ என்னும் ஒரு பொதுப் பொருளையே தருவதால் இது ‘தூல பஞ்சாக்கரம்’ எனப்படும். திருவைந்தெழுத்தை சூக்குமமாகச் சிகாரம் முதலாகச் சொல்லுமிடத்து, உயிர் பாசங்களின் நீங்கித் திருவருள் வழியாகச் சிவத்தை அடையும் என்னும் சிறப்புப் பொருளைக் குறித்தலால் இது ‘சூக்கும பஞ்சாக்கரம்’ என்று அழைக்கப் பெறுகிறது.

நகாரத்தை முதலாக வைத்து ஓதும் முறையை மேற்கொண்டால் திருவருள் வெளிப்படாது. திருவருளைத் தலைப்பட விரும்பினால், சிகரத்தை முதலாக வைத்து ஓதுவாயாக, அப்போது திருவருள் பாசமாம் பற்று அறுத்து உன் உணர்வில் தோன்றும். இதனை,

'நம்முதலா ஓதில் அருள்நாடாது நாடும்அருள்
சிம்முதலா ஓது நீ சென்று" [19]

என்று உண்மை விளக்கம் கூறும்.

"சித்தம் ஒருக்கிச் 'சிவாய நம' என்று இருக்கினல்லால்" [20]

"உனதருளால் திருவாய்ப் பொலிய 'சிவாய நம' வென்று
நீறணிந்தேன்." [21]

"நானேயோ தவம் செய்தேன் 'சிவாய நம' எனப்பெற்றேன்" [22]

எனவரும் திருமுறைகள் இங்கு நினைக்கத்தக்கன.

3) அதி சூக்கும பஞ்சாக்கரம்

சூக்கும பஞ்சாக்கரத்தைக் கணித்து வரவர உள்ளம் உலகியலிலிருந்து நீங்கிச் சிவன்பாற் செல்லும். ஞானத்தில் வேட்கை உண்டாகும். அத்தகையவர் ஞான குருவை அடைந்து உபதேசம் வேண்டி நிற்பர். ஞானகுரு அவர்க்கு நிருவாண தீக்கை செய்து பாச எழுத்துகளான 'நம'வை நீக்கி ஐந்தெழுத்தைச் 'சிவாய' என்று மூன்றாக வைத்து உபதேசம் செய்வார். இதுவே அதிசூக்கும பஞ்சாக்கரம் எனப்படும்; முக்தி பஞ்சாக்கரம் என்றும் அழைக்கப்படும்.

"பந்தமும் பிரிவும் தெரிபொருட் பனுவற்
படிவழி சென்று சென்றேறிச்
சிந்தையும் தானுங் கலந்ததோர் கலவி
தெரியினுந் தெரிவுறா வண்ணம்
எந்தையும் தாயும் யானுமென்றிங்ஙன்
எண்ணில் பல் லூழிக ளுடனாய்
வந்தணுகாது நுணுகியுள் கலந்தோன்
மருவிடந் திருவிடை மருதே" [23]

"உலகியல் கட்டுகளையும், அவற்றிலிருந்து விடுதலை பெறுதலையும் ஆராய்கின்ற பொருள் பற்றிக் கூறுகின்ற தத்துவ சாத்திரங்களாகிய படிவழியில் பலகாலும் ஈடுபட்டுச் சிவநெறி எய்தி என் சிந்தையும் தானும் கலந்து என் தந்தையாகியும், என் தாயேயாகியும் யானே ஆகியும் உடனாய் இருந்தேன்' என்று திருவிசைப்பாவில் கருவூர்த்தேவர் குறிப்பிடுவார். இப்பாட்டில் வரும் 'எந்தையும் தாயும்

யானும்' என்பது, 'எந்தை - சிவம் (சி), தாய் - அருட்சத்தி (வா), யான் - உயிர் (ய)' எனப் பொருள் கொண்டு 'சிவாய' என்னும் அதிசூக்கும பஞ்சாக்கரத்தைச் சுட்டுவதை அறியலாம்.[24]

மந்திரத்தை உச்சரிக்கும் முறை மானதம் (மௌனம்), மந்தம் (மெல்லச் சொல்லுதல்), உரை (உரக்கச் சொல்லுதல்) என மூன்று வகைப்படும். ஆனால், இம் முத்தி பஞ்சாக்கரமாகிய மந்திரத்தை உச்சரிக்கும் முறை வேறு, சுத்தமானதம் எனப்படுகின்ற அறிவால் கணிக்க வேண்டும். அறிவால் கணித்தலாவது சிவோகம் பாவனையாகிய தியானத்தில் உறைந்து நிற்றல் முறையாகும்.

புருவ நடுவில் செய்யப்படும் தியானத்தில் மந்திரத்தை வைத்து தன் அறிவை நிறுத்துதல். இப் பஞ்சாக்கரத்தை உச்சரிக்க என்னாது, எண்ண வேண்டும். இப் பஞ்சாக்கரம் 'தத்துவமசி' என்னும் வேதமகா வாக்கியத்திற்கு நேரான 'சித்தாந்த மகாவாக்கிய'மாகும்.[25]

தத்துவமசி என்பதன் பொருள் 'அது நீ ஆகின்றாய்' என்பது. இதில் முதற்பொருள் 'அது' என்பது முத்தி பஞ்சாக்கரத்தில் 'சிவம்' எனச் சிறப்பாக வைத்துக் கூறப்படுகிறது. தத் (அது) என்னும் பதத்தின் பொருளே சிகாரத்தால் குறிக்கப் பெறுகிறது. துவம் (நீ) என்னும் பதத்தின் பொருள் யகாரத்தால் குறிக்கப்பெறுகிறது. அசி (ஆகின்றாய்) என்னும் இணைப்பு மொழியின் பொருளே வகாரத்தால் குறிக்கப்படுகிறது.

முத்தி பஞ்சாக்கரத்தைக் கொண்டு செய்யும் சிவோகம்பாவனையில் அப்பொழுதே அங்ஙனமே சிவன் தோன்றுவான். தியானம் செய்பவனுக்கு அவன் அடிமையாவான். இதனை, ***'அண்டனாம் சேடனாம்'***[26] என்று சிவஞான போதம் குறிப்பிடும்.

சிவாய என்னும் மூன்றெழுத்தைத் திரும்பத் திரும்பக் கூறினால் (சிவாய சிவாய சிவாய) 'ய' வானது 'வா', 'சி' ஆகிய இவற்றின் இடையே நிற்பதைக் காணலாம். இதனையே, உமாபதி சிவம், திருவருட்பயனில் ***'வாசியிடை நிற்கை வழக்கு'***[27] என்று கூறுவர். இப் பஞ்சாக்கரத்தை உணர்ந்து ஓதினால் வினை நீங்கும்; பதிஞானம் நன்கு விளங்கும்; பிறவி யறுதல் திண்ணமாம் என்று,

'பவமது தீரும்; பரிசும் அதற்றால்
அவமதி தீரும் அறும் பிறப்பன்றோ' [28]

எனவரும் திருமந்திரம் உணர்த்தும்.

4) காரண பஞ்சாக்கரம்

அதிசூக்கும பஞ்சாக்கரத்தினும் சூக்குமமாய் நிற்பது 'காரண பஞ்சாக்கரம்' எனப்படும். 'சிவாய' எனும் மூன்றெழுத்தில் 'ய' காரத்தை நீக்கி, சிவத்தை மட்டும் மந்திரமாகக் கொள்வது. 'சிவசிவ' என்பது அம்மந்திரத்தைத் தொடர்ந்து சொல்லும் முறையாகும். இம் மந்திரக் கணிப்பால் பிராணவாயு அடங்கும். இவ் விரண்டு எழுத்துகளும் முறையே இரேசக (வெளியிடுதல்), பூரக (உள்ளிழுத்தல்) எழுத்துகளாய்

'அசபா' மந்திரமாய்ப் பயன்படும். (ஜபம் - செபிக்கப்படுவது; அஜபம் - செபிக்கப்படாமல் கணித்தல்). இம்மந்திரம் முத்தியை எய்தும் நிலை உடையவர்க்கே கூடும்.[29]

"யத் த்வயக்ஷரம் நாம கிரேரிதம் ந்ருணாம்
ஸக்ருத பரஸங்கா - தக - மாசு ஹந்தி தத்"

'அந்த இரண்டு அட்சரங்கள் கொண்ட நாமத்தை மக்கள் தங்கள் நாவால் ஜபித்த மாத்திரத்தில் பாவங்களிலிருந்து விடுபடுகிறார்கள்' என்று தக்ஷனிடம் தாக்ஷாயணீ கூறுவதாக பாகவத புராணம் குறிப்பிடுகிறது.[30]

"எந்த ஜீவரத்தினத்தை அனைத்து ஆகமங்களும் துதிக்கின்றனவோ அதுவே முக்கண் உடைய சிவபெருமானின் நாமமாகும்" என்னும் பொருளில் வரும்,

"யஜ் - ஜீவரத்ன - மகிலாகம - லாலனீயம்
யே ச த்ரிநேத்ர - ம்ருட - சங்கர - நாமதேயே"

என்னும் பிரம்ம தர்க்க ஸ்தவ ஸ்லோகத்தில், 'சிவ' நாமத்தை 'ஜீவ ரத்னம்' என்று குறிக்கின்றார் அப்பைய தீட்சிதர்.[31]

'சிவ' என்பதைத் தொடர்ந்து உச்சரித்தால் 'வசி' என வருதல் பற்றி, 'வசி' என்பதே காரண பஞ்சாக்கரம் என்று கூறுவாரும் உளர்.

"கலந்தருள் பெற்றது மாவசியே;
காழி அரனடி மாவசியே"

என்றும் திருமுறையை எடுத்துக்காட்டி,

"நாலாய பூதமும் நாதமும் ஒன்றிடின்
நாலாம் நிலையாம் என்றுந்தீபற"

என்னும் திருவுந்தியார் 'வசி' என்பதையே காரண பஞ்சாக்கரமாகக் கூறிற்று என்பர். நாலாய பூதம் ஆகாயத்திலிருந்து எண்ண நான்காவது நீர். அதன் பீசம் வகாரம். நாதம் சிவ தத்துவம், மூர்த்தி சிவன். அவனைக் குறிப்பது 'சி' என்னும் எழுத்து. நாலாம் நிலை - நின்மல துரியம் அல்லது சாயுச்சியம் ஆம்.[32]

5) மகா காரண பஞ்சாக்கரம்

காரண பஞ்சாக்கரத்தினும் சூக்குமமானது மகாகாரண பஞ்சாக்கரம். ஆன்மா சிவத்தை அணைந்து ஆனந்தத்தில் மூழ்கும் நிட்டைநிலையில் ஆன்மா அருளையும் நினையாது ஆனந்தமாகவே நிற்றலால், அவ்விடத்து அருள் எழுத்தாகிய வகாரமும் நீங்கச் சிகாரம் ஒன்றுமே நிற்கும். 'சி' என்னும் இந்த ஓரெழுத்து மந்திரம் 'மகா காரண பஞ்சாக்கரம்' எனப்படும். இது 'மஹாமனு' என்றும் சொல்லப்படும். இம் மஹா மனுவை உச்சரிப்பதனால் சிவஞானம் உண்டாகும் என்று அருணகிரிநாதர் குறிப்பிடுவார்:

“சிகர மருந்து வாழ்வது சிவஞானம்
சிதறியலைந்து போவது செயலாசை
மகர நெருங்க வீழ்வது மகமாய
மருவி நினைந்திடா அருள் புரிவாயே” [33]

இம் மந்திரமே நான்கு வேதப்பொருளாக விரிந்தது; இதுவே கடவுளின் இருப்பிடம்; இதுவே ஒளிப்பொருள்; இதனைச் சித்தர்கள் ‘நாயோட்டு மந்திரம்’ என்று நகைப்பிற்காக மறைத்துக் கூறுகின்றனர் என்று திருமந்திரம் கூறும்.

“நாயோட்டு மந்திரம் நான்மறை; நால்வேதம்
நாயோட்டு மந்திரம் நாதன் இருப்பிடம்
நாயோட்டு மந்திரம் நாதாந்தமாம் சோதி
நாயோட்டு மந்திரம் நாமறியோமே” [34]

இதுவே ஒளி வழியில் சென்று இறைவனை அடையும் வீட்டு நிலையைக் கொடுக்கும்.

ஐந்தெழுத்தில் தச காரியம்

சிவஞானிகளின் அப்பியாச ஞான சாதனமே தச காரியமாகும். உண்மை ஞானம் ஆகிய ‘வ’ காரமும் அவ் வுண்மை ஞானத்தைப் பெற்று அதுவேயாகும் ‘ய’ காரமும் அன்றி அங்கு ‘ந’காரம் இல்லை.

1. யகாரம் வகாரமானபின் நகாரத்தை அந்த வகார அறிவால் அறிவதே தத்துவ ரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி.
2. யகாரம் நகாரத்தின் நீங்கி யாவற்றையும் (அச் சிவஞானத்தால்) உணர்ந்து தன்னைத் தனித்துக் காண்டல் ஆன்மரூபம்.
3. யகாரம் தத்துவ ரூப தரிசன சுத்தியுற்றது, சிவஞானத்தால்தான்; தன்னறிவால் அன்று. எனவே, சிவஞானம் உணர்த்த யான் உணர்ந்தேன் என அறிவது ஆன்ம தரிசனம்.
4. வகாரம் யகாரத்திற்குத் தத்துவ ரூப தரிசன சுத்தியாக்கியதோடு அமையாமல் அவ் வழியால் தன்னைக் காட்டியது சிவரூபம்.
5. யகாரத்தை வகாரமாக்குவதே ஆன்ம சுத்தி. அதில் சிவ தரிசனம், சிவ யோகம் இரண்டும் நிகழும்.
6. வகாரமாய் நின்ற யகாரம், சிகாரத்தோடு சேர்ந்து அவ்வகாரத்தை மறந்து சிகாரமாய் நிற்பதே சிவபோகம். இதுவே ஆன்மலாபம்.

என்று ஐந்தெழுத்தின் தச காரிய நிலையை விளக்குவர் காஞ்சி ஞானப்ரகாச சுவாமிகள்.[35]

உமாபதி சிவம் தம் ஞானாசிரியராகிய மறைஞான சம்பந்தர் தமக்கு ஐந்தெழுத்தை உபதேசித்து, தன்னை மீண்டும் ஒரு பிறப்பில் உட்படாமல்

விடுபடுகின்ற திருவருளை வழங்கினார் என்று 'நெஞ்சு விடு தூதில்' விரிவாக விளக்கிக் கூறுகிறார்:

"அஞ்செழுத்தின் உள்ளீடு அறிவித்தான் அஞ்செழுத்தை
நெஞ்சழுத்தி நேய மயலாக்கி - அஞ்செழுத்தை
உச்சரிக்கும் கேண்மை யுணர்த்தி அதில் உச்சரிப்பு
வைச்சிருக்கும் அந்த வழிகாட்டி - அச்சமறச்
சென்று விளக்கை எழத்தூண்டிச் செழுஞ்சுடரின்
ஒன்றி ஒரு விளக்கின் உள்ளொளியாய் - நின்ற
பெருவிளக்கின் பேரொளியின். . . . . .
. . . . மெய்ஞ்ஞானமாக்கி மனமெல்லாம்
இறப்பித்தான் என் பிறவி யீர்த்தான்..." [36]

ஐந்தெழுத்தாய் இருந்த மந்திரம் பின்பு மூன்றெழுத்தாய், பின்பு இரண்டெழுத்தாய் இறுதியில் ஓரெழுத்தாய் ஆகிவிடுகிறது. இது,

"சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றாம்
திருப் பெருந்துறையுறை சிவனே" [37]

என மாணிக்கவாசகர் அருளிச்செய்த அருபவத்திற்கு ஒத்துள்ளது. இதனை உமாபதி சிவம் தம் சங்கற்ப நிராகரணத்தில்,

". . . . . .பசுபதி என்ற வற்று
இரண்டாய், இரண்டும் ஒன்றின் ஒன்றாகத்
திரண்டுஆம் பயன் எனும் திருவருள் தெளியில்
சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றாம்
என்று இறை இயற்கை இயம்புதல் தகுமே' [38]

என்று ஓதியருளினார். இதனைச் சிவஞான யோகிகள் தம் சிவஞான, மாபாடியத்துள் 'பரம சித்தாந்தம்' என்று எடுத்துரைத்தார்.[39] இதனைத் தொகுத்து,

'ஆசுறு திரோதம் மேவாது அகலுமா சிவமுன்னாக
ஓசைகொள் அதனின் நம்மேல் ஒழித்து அருள் ஓங்கும் மீள
வாசியை அருளும் மாய மற்று அது பற்றா உற்றுஅங்கு
ஈசனில் ஏகம் ஆகும் இது திரு எழுத்தின் ஈடே" (சிவ.92)

என்று சிவப்பிரகாசம் உரைக்கும்.

1) அஞ்ஞானமாகிய மலமும்(ம)ஆன்மாவைச் சார்ந்த திரோதம் (ந) அகலுமாறு - ஆசுறு திரோதம் மேவாது அகலுமா (ந.ம.)

ii) சிகரமும், வகரமும் முதலில் நிற்குமாறு செபிக்க வேண்டும் - சிவ முன்னாக ஓசைகொள் (சிவாயநம)

iii) அவ்வாறு செய்யின் நகரமாகிய திரோதம் மேவி மலத்தை ஒழித்து அருட்சத்தியாய் மாறும் - அதனில் நம்மேல் ஒழித்து அருள் ஓங்கும் (சிவாய)

iv) மலத்தினின்று ஆன்மாவை மீளவிட்ட வகரமாகிய அருளும் சிகரமாகிய சிவத்தைத் தரும் - மீள வாசியை அருளும் (சிவ)

v) இதனால் மலத்தினின்று நீங்கி மலபாகம் பெற்று பக்குவப்பட்ட மகத்தான ஆன்மா (மா - மகத்து, பெருமை; ய - ஆன்மா, மா ய)

vi) வகரமாகிய அருளைப் பற்றுக்கோடாகக் கொண்டு அவ்வருளில் அடங்கி அதுவேயாய் சிவத்தில் அத்துவிதமாய் (ஏகமாய்) இருக்கும். - மற்று அது பற்றா உற்று அங்கு ஈசனில் ஏகம் ஆகும். (சிவ)

vii) இதுவே திருவைந்தெழுத்தின் பெருமையாகும். - இது திருஎழுத்தின் ஈடே.

‘சிவாய’ என்றும் அதிசூக்கும பஞ்சாக்கரத்தில், ஆன்மா (நம) பாசத்தை விடுத்து ‘வா’ ஆகிய திருவருளைச் சார்ந்து நிற்கும் சுத்தநிலையில் உள்ளது. இவ்வாறு பாசத்தினின்று நீங்கிய பக்குவப்பட்ட ஆன்மாவை மா, ய. அதாவது மகத்தான ஆன்மா என்பார் உமாபதிசிவம். இது, சித்தாந்தத்தில் புதுமையான கருத்தாகும்.

“மா ய என்றதை மலத்தினின்று நீங்கின மகத்தான ஆன்மா வென்றதேதென்னில் அந்தச் சிவத்தை முன்னிட்டு நின்று உச்சரிக்கையினால் என அறிக” என மதுரை சிவப்பிரகாசர் குறிப்பிடுவர்.[40]

நம்மேல் ஒழித்து அருள்ஓங்கும்

நவ்வாகிய திரோதசத்தி மவ்வாகிய மலத்தின் மேலீட்டை நீக்கி அருளாய் நின்று பிரகாசிக்கும். இதற்கு,

> “முற்சினமருவு திரோதாயி கருணைஆகி
> திருந்திய சத்திநிபாதம் திகழும்” (சிவ.48)

என்ற விருத்தத்தையும்,

> “பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்விளைதன்
> பாதத்திறம் பாடி”

என்ற திருவெம்பாவையையும் எடுத்துக்காட்டுவர் மதுரை சிவப்பிரகாசர்.[41]

பேதித்தலாவது - மறைப்பு சத்தியாய் வினை போகத்துள் அழுத்துதல்;

வளர்த்தலாவது - வினைக்கீடாக இன்ப துன்பங்களை நுகரச்செய்து மலம் நீங்கும்படி (ம) செய்ய அருள் தருதல்;

எடுத்தலாவது - அருட்சத்தியாகி ஆன்மாக்களை பிறவியிலிருந்து கைகொடுத்து தூக்குதல் (சிவாய);

நம்மையாவது - இங்கு 'ய' வாகிய ஆன்மா;

பாதத்திறம் ஆவது - அருட்சத்தியின் திருவருட்டிறமே (சிவ) 'சி'யைத் தருதல் (வா, சியை அருளும்)

எழுத்தை அழுத்தும் எழுத்து

> "எழுத்தறிவோம் என்றுரைப்பார்கள் சிலர்
> எழுத்தை அழுத்தும் எழுத்தறியாரே" (திருமந்.2678)

என்பது திருமந்திரம்.

"எழுத்தை யழுத்தும் எழுத்து' என்பதில் முதல் எழுத்து, 'அயன் எழுத்து' என்றும், 'தலையெழுத்து' என்றும் கூறும் வழக்குண்மையறிக. அழுத்துதல் - அடங்குதல், ஊழ்வினை ஊட்டியல்லது ஒழியாமை பற்றி 'ஒழிக்கும் - என்னாது, 'அழுத்தும்' என்றார். 'உயிரைத்தாக்காது உடல் ஊழாய் வந்து போகும்' என்பதாம்

> "திருவாஞ்சியத் துறையும்
> ஒருவனார் அடியாரை ஊழ்வினை
> நலிய ஒட்டாரே"

என்று அருளிச் செய்தது இப்பொருட்டு.

> "சிவாய நமஎன்று சிந்தித் திருப்போர்க்கு
> அபாயம் ஒருநாளும் இல்லை; - உபாயம்
> இதுவே; மதி ஆகும்; அல்லாத எல்லாம்
> விதியே மதியாய் விடும்."

என்றும் ஔவையார் திருமொழியும் காண்க.

"இறுதியில் உள்ள 'எழுத்து' என்பது, இசை வல்லுநர்கள் 'சரிகமபதநி' என்னும் எழுத்துக்களைச் சொல்லக் கேட்ட ஒருவன் 'இந்த எழுத்துக்களை நான் அறியேனோ' என்று சொல்வது போல்வதுதான், ஐந்தெழுத்துக்களை நாம் அறிவோம்' என்றல் என்றபடி" என மேற்கண்ட திருமந்திர மொழிக்கு விளக்கக் குறிப்புரை வரைவார் சி.அருணைவடிவேல் முதலியார்.[42]

இதுகாறும் புனிதன் நாமமாகிய ஐந்தெழுத்தின் சிறப்பும், மகிமையும் ஒருவாறு சொல்லப்பட்டன.

அடிக்குறிப்புகள்

1. ஆ.ஆனந்தராசன், சிவஞான போதம் வழித்துணை விளக்கவுரை பக்.274, 275
2. சிவஞான முனிவர், காஞ்சிப் புராணம், திருநாட்டுப் படலம், பா.12
3. மு.திருவிளங்கம், சிவப்பிரகாச மூலமும் புத்துரையும், ப.166

4. ஞானாமிர்தம், 48 : 13-15
5. சித்தியார், 309
6. காவை அம்பலநாதத் தம்பிரான் கொளு, மதுரைச் சிவப்பிரகாசர் உரை, ப.277
7. ஔவை.சு.துரைசாமிப் பிள்ளை, மெய்கண்டார் சித்தாந்த மகாநாடு - திருமுறைத் திருநாள், ப.159
8. நச்சினார்க்கினியர் உரை, தொல்காப்பியம், நூற்பா:930, ப.247
9. பஞ்சப்பிரம்ம உபநிடதம், 6
10. கு.சுந்தரமூர்த்தி, திருவைந்தெழுத்து, பக்.21, 22
11. ஸ்ரீமத் அப்பய்ய தீட்சித மூர்த்திகள், சிகரிணிமாலா என்னும் சிவதத்துவ விவேகம், ப.38
12. த.மீனாட்சி சுந்தரம்பிள்ளை, திருநாகைக் காரோணப் புராணம், புண்டரீக முனிவர் முதற்காட்சி படலம்,24
13. மு.கதிரேசச் செட்டியார், திருவாசகம் - திருவெம்பாவை, ப.34
14. 5:51:6
15. ஆ.ஆனந்தராசன், திருவருட்பயன் வழித்துணை விளக்கவுரை, ப.238
16. 5:90:2
17. 8:25:1
18. 8:5:82
19. உண்மை விளக்கம், 42
20. 4:94:5
21. 4:94:6
22. 8:38:10
23. 9:17:5
24. மு.அருணாசலம், திருவிசைப்பா, ப.106
25. பொ.முத்தையா பிள்ளை, சிவஞான போதச் சிற்றுரை விளக்கம், ப.474
26. சிவஞான போத வெண்பா, 59
27. திருவருட்பயன், 89
28. திருமந்திரம், 2671
29. சி.அருணை வடிவேல் முதலியார், ஒன்பதாம் தந்திரம், ப.965
30. அண்ணா, ஸ்ரீருத்ரம், ப.57, (மேற்கோள்)
31. மு.கா.நூல், ப.57
32. சி.அருணை வடிவேல் முதலியார், மு.கா.நூ., ப.966
33. தணிகைமணி செங்கல்வராய பிள்ளை, திருப்புகழ் பகுதி - 4, ப.10
34. திருமந்திரம், 2676

35. காஞ்சி ஞானப்ரகாச சுவாமிகள், சித்தாந்தக் கட்டுரைகள், பக்.101, 102
36. நெஞ்சுவிடுதூது, 189-200
37. 8:22:7
38. சங்கற்ப நிராகரணம், சைவவாதி சங்கற்ப நிராகரணம், வரி:59-63.
39. சிவஞான சுவாமிகள், சிவஞான பாடியம், ப.523
40. மதுரைச் சிவப்பிரகாசர், சிவப்பிரகாசம் மூலமும் உரையும், ப.283.
41. மேலது, ப.283.
42. சி.அருணைவடிவேல் முதலியார், மு.கா.நூல்,, ப.1062.

5.8 அணைந்தோர் தன்மை

“பிறிவறியா அன்பர் நின் அருட்பெய் கழல் தாளிணைக்கீழ் மறிவறியாச் செல்வம் வந்து பெற்றார்” என வரும் திருவாசகம், ‘உன்னைப் பிரியாத அன்பர் உன் திருவடிப் பேற்றோடு முத்திச் செல்வத்தையும் அடைந்தார்கள்’ என்று கூறும்.[1]

இங்ஙனம் முத்திச் செல்வத்தை எய்தினோர், உடம்போடுகூடி நிற்குங்கால், ‘சீவன் முத்தர்’ எனப்படுவர். உடம்பு நீங்கிய வழி அவர் இறைவனோடு இரண்டறக் கலந்து ‘பர முத்தர்’ ஆவர். எனவே சீவன் முத்திக்கும், பர முத்திக்கும் உள்ள வேறுபாடு உடம்போடு இருத்தலும், உடம்பின்றி இருத்தலுமே ஆகும். சீவன் முத்தரை ‘அணைந்தோர்’ எனத் தமிழில் சித்தாந்த நூல்கள் கூறும். சிவனும் சீவனும் சித்தாகிய ஒப்புடைப் பொருள்கள் ஆதலால், இவையே ஒன்றோடு ஒன்று அணையத் தக்கன என்பர் அறிஞர்.[2]

“பசுவென்னுஞ் சீவன் எஞ்ஞான்று, பொன்வண்ணனாய் கருத்தாவாய் புருடனாய்த் தோற்றங்கட் கெல்லாங் காரணமாயுள்ள ஈசனைக் காண்கின்றானோ அஞ்ஞான்றே சீவன் முத்தனாகிய அவன் புண்ணிய பாவங்களிலிருந்து நீங்கியவனாய் களங்க மில்லாதவனாய் சிவசாமியத்தை யடைகின்றனன்” என்று ‘சீவன் முத்தரை’ப் பற்றி முண்டகோபநிடதம் கூறும்.[3]

“விரிபுண்ணிய பாவாதிகளை மேவுறாது நிவர்த்திசெய்து
பிரியமிகுந்த பரசிவ அபேத சொருபமேயான
அரிய சாமியத்தை இனிது அடைவான்”[4]

என்று சூத சங்கிதையும் எடுத்துக்காட்டும்.

சீவன் முத்தர் இயல்புகள்

சீவன் முத்தர் தீங்கினைத் தருகின்ற மாயப் பிறவியில் மீளவும் சேராதபடி ஆசாரியனுடைய ஞான சத்தி, கிரியா சத்தி, சுவானுபவம் என்று மூன்று விதங்களால் மூவினைகளும் நீங்கிட, மூல மலமாகிய ஆணவத்தின் முனைப்பு ஒழிந்துபோக, சிவ

ஞானமாகிய மெய்ஞ்ஞானத்துள் அழுந்தி, அதனால் வருகின்ற பேரின்பம் தம் அறிவினிடத்தே ததும்பி நிற்கத் தாம் மாத்திரமாய் அவ் வின்பத்தை நுகர்ந்து இருப்பர். இவர்களே குற்றமற்ற தன்மை கொண்ட சீவன் முத்தர்கள் (துகள் இலார்) எனப்படுவர்.

“தீங்குறு மாயை சேரா
  வகை வினை திரிவிதத்தால்
நீங்கிட நீங்கா மூல
  நிறைஇருள் இரிய நேயத்து
ஓங்கு உணர்வு அகத்தடக்கி
  உளத்துள் இன்பு ஒடுங்க நேரே
தூங்குவர் தாங்கி ஏகத்
  தொன்மையில் துகள் இலோரே” (சிவ.93)

அணைந்தோர் நிலையை அடைந்த ஆன்மா சிவானந்தத்துள் ஒடுங்கும். அந்தச் சிவானந்தத்தில் ஒடுங்கினோம் என்ற போதமும் ஒழிந்து நிற்பதே இன்பத் துயில். நேயத்து - முதல்வன் காட்டியும் கண்டும் உபகரித்தும் வரும் பேருதவியை மறவாது கடைப்பிடித்து; ஓங்கு உணர்வு அகத்தடங்கி - இவ்வாறு கடைப்பிடித்தற்கு நிலைக்களமாய் எவ்விடமும் நிறைந்த பராசத்தியின் இடத்து தமது ஞானக் கிரியைகள் அடங்கி; உளத்துள் இன்பு ஒடுங்கத் தூங்குபவர் - இன்பத் துயிலில் ஆழ்வர்.[5]

எனவே, சீவன் முத்தர் தம் பணி நீத்துச் சிவத்தோடு ஏகமாகி நின்று பேரானந்தத்தை எப்பொழுதும் அனுபவித்துக் கொண்டிருப்பர் என்பதாம். அத்யாத்ம உபநிடதமும்,

“ஸத்தித ப்ரஜ்ஞோ யதிரயம் ய: ஸதானந்த-மச்னுதே”

எனவரும் வாசகத்தால், ‘ஸ்திதப்ரக்ஞான யதியானவன் ஆனந்தத்தை எப்பொழுதும் அனுபவித்துக் கொண்டிருக்கிறான்’ என்று கூறும்.[6]

ஞானப்படி நிலையில் ஞானத்தின் ஞானமாகிய நிட்டையின் பயனாக அடையப்படும் ‘சாயுச்சியம்’ என்னும் நிலையை இவ்வுலகில் சீவன் முத்தர் இவ் வுடம்போடு கூடியிருக்கும் நிலையில் பெற்றிருத்தல் இதுவாகும். இந் நிலையில் தற்போத முனைப்பின்றிச் சிவனது அருள் நிறைவில் கலந்து நிற்போருக்குப் பிரிய அப்பிரிய மின்மையாலும், ‘எங்கு எழில் என் ஞாயிறு எமக்கென்று குறைவின்மையாலும், சங்கற்பமே ஒழிந்தமையாலும், யாதொன்றையும் பிரித்து அறிந்து விரும்பி இயற்றுவதற்கு வேண்டிய பற்றின்மையாலும் ஒழுக வேண்டிய ஒழுக்கம் முதலியன அவசியமில்லை.[7]

குறிப்பிட்ட இடம், காலம், திக்கு, ஆசனம், கொள்கை, குலம், குணம், சீர், நோன்பு, சீலம், தவம், செபம், தியானம் ஆகிய நியமங்களை சீவன் முத்தர்கள் வேண்டாம் என வெறுப்பதும் இல்லை; விரும்பிச் செய்வதும் இல்லை; அறிவே

வடிவான மெய்ப் பொருளாகிய சிவத்தில் அழுந்தினவர்களுக்கு இவைகள் எல்லாம், உறங்குவோர் கையிலுள்ள பொருள் அவர் அறியாதவாறு நழுவி விழுவது போல அவர்களை விட்டுத் தாமே நீங்குவனவாகும். ஆனால், மெய்ஞ்ஞானம் ஒன்று மட்டும் அவர்களை விட்டு நீங்காது.

"குறிப்பிடம் காலம் திக்கு ஆசனம்
கொள்கை குலம் குணம் சீர்
சிறப்புறு விரதம் சீலம்
தபம் செபம் தியானம் எல்லாம்
மறுத்துஅற ஒழிதல் செய்தல்
மருவிடா மன்னு செய்தி
உறக்கு உறுபவர்போல் வாய்மை
ஒழிந்தவை ஒழிந்து போமே" (சிவ.94)

என்று சிவப்பிரகாசம் கூறும்.

"ஒண்பொருட்கண் உற்றார் உறுபயனே அல்லாது
கண்படுப்போர் கைப்பொருள் போற்காண்"[8]

என்று திருவருட்பயனும்,

"ஞால நீதியும் நான்மறை நீதியும்
பாலர் உன்மத்தர் பசாசரில் எனவும்
உறங்கினோன் கை வெறும்பாக்கு எனவும்
தானே தவிராது ஆனால் புரியாது
ஒழிந்திடில் நிரயத்து அழுந்துதல் திடமே"[9]

என்று சங்கற்ப நிராகரணமும், 'உறக்குறுபவர்போல் வாய்மை ஒழிந்து, மன்னு செய்தியவை ஒழிந்து போமே' என்று கூறுகின்றன. இதனை, 'ஞானிகளுக்கு விதித்தன செய்தலும், விலக்கியன ஒழிதலும் வேண்டாம். அவர் செய்தன வெல்லாம் தவமாகலின்' என்பர் சிவஞானமுனிவர்.[10]

இஞ்ஞானநிலையில் ஞானிகள் பாலர், பித்துக்கொண்டோர், பேய்பிடியுண்டோர் முதலியோர் தன்மைகளை உடையவராய், பாடல் ஆடல் முதலிய ஆனந்தக் குறியாந் தொழில்களைச் செய்யினும் செய்திருப்பர்.

"பாலருடன் உன்மத்தர் பிசாசர்குணம் மருவிப்
பாடலினொடு ஆடல் இவை பயின்றிடினும் பயில்வர்"[11]

என்பது சித்தியார்.

‘பாலர் உன்மத்தர் பிசாசர் ஆகியோர் போல் நடந்தாலும் மதியில் குறைவின்றித் தனியொருவராக சஞ்சரிப்பவர்கள் சீவன் முத்தர்கள்’ என்னும் பொருள்பட “பாலோன்மத்த பிசாசவதேகாகீ” என்று துரியாதீத உபநிடதம் கூறும்.[12]

பாலர் விடயத்தைப் பற்றியறிந்து விரும்பி வினை புரியுந் தன்மை முற்றுமின்மையால் அவர் ஞானியரது செயலின்மைக்கும் ***உன்மத்தர்*** சுயபுத்தியுள்ளபோதறிந்து விரும்பிப் புரிந்தும் அஃதில்லாதபோது விரும்பாமற் வினைபுரிந்தும் நிற்றலால் அவர் ஞானியர் ஒருகாற் செய்து ஒருகால் செய்தவை ஒழிதற்கும் ஒக்கும். **பசாசர்** தம் செயலே முற்றுமின்றிப் பேயின் செயலாய் வினைபுரிவார் ஆதலின், அவர் ஞானியர் செயல் இழப்பினின்று செய்ததற்கும் உவமையாயினர்.[13] அதுபோல, சீவன் முத்தர்கள் தம் செயலற்றுத் தாம் அற்று இறைவன் செயல்வழி ஒழுகுவதால் அவர்கள் உலகத்தில் படிந்தாலும் அது அவர்களைத் தாக்கி வருத்துவதில்லை.

ஞானம்

அகப் பூசை, புறப் பூசை என்று இரு வகையில் சிவ பூசை செய்து இச்சித்த போக மோட்சங்களைப் பெறுகிற இவ்வுலகில், அவ் விரு பூசைகளும் இல்லாமல், அஞ்ஞானமே தமக்கு வடிவமாகி வினையநுபவம் எல்லாம் தம்மாட்டு நிகழ அதனைக் கருதாமல் இச்சித்துக் கிடக்கிற அளவில் மகிழ்வுற்று வாழ்கிற உலகத்தவர்போல், ஞானம் பிரகாசித்தவிடத்து அகம் புறம் எனப் பிரித்தறியாமல் எங்கும் ஒரு தன்மையாகக் காணும் செம்மை ஞானம் பெற்ற பெரியோர் உண்மையான ‘சாயுச்சிய’ ஞானம் பெற்ற சீவன் முத்தர் ஆவர்.

“அகம்புறம் என்று இரண்டால்
 அர்ச்சனை புரியும் இந்தச்
சகம்தனில், இரண்டும் இன்றித்
 தமோமயம் ஆகி எல்லாம்
நிகழ்ந்திட மகிழ்ந்து வாழும்
 நீர்மையார் போல ஞானம்
திகழ்ந்து அகம்புறம் எனாத
 செம்மையார் நன்மை யாரே” *(சிவ.95)*

என்பது சிவப்பிரகாசம் காட்டும் சீவன் முத்தர்களின் ஞான நிலை விளக்கமாகும். நன்மையாகிய சிவத்தைப் பெற்ற செம்மை நலம் உடைய சீவன் முத்தர்கள் ஆனந்தக் களிப்புடன் வாழ்வார்கள்.

யான், எனது என்னும் வகையில் உலகை நோக்கி ஒன்றைச் செய்தலும், அவ்வாறின்றிச் சிவனையே நோக்கி ஒன்றைச் செய்தலும் ஆகிய செயல்கள் எல்லாவற்றையும் விடுத்து, சொரூப சிவனிடத்து உண்மையான பத்தியில் நின்று ஞானிகள் அடையும் ஆனந்தமே உண்மைப் பேரனாந்தமாகும்.

"மெய்த்தவம் செய்கைவினைவிட்ட மெய்யுண்மைப்
பத்தியில் உற்றோர் பரானந்தர் போதரே" 14

என்பது திருமந்திரம்.

சாத்திர உலகில் உலகத்து மக்களை மூன்று வகையாகப் பகுப்பது ஒரு மரபு. அவர்கள் பிராகிருதர், வைநயிகர், சாமுசித்தர் என்று கூறப்படுவர்.

பிராகிருதர் என்போர், உண்பதும் உடுப்பதும் உறங்குவதுமன்றி வேறு எதையும் கருதாதவர்கள். அவர்களுக்கு மனச் சஞ்சலம் ஏதுமில்லை. ஏனெனில், தாம் அறியாமையில் வாடுகிறோம் என்பதனையே அறியாதிருக்கிறார்கள்.

வைநயிகர் என்போர், விநயம் உடையவர்கள். அவர்களுக்கு உலகியல் வாழ்க்கை நிறைவு தருவதில்லை. எனவே, அவர்கள் மெய்ப்பொருளைத் தேடும் வேட்கை யுடையவர்களாகி ஞான நூல்களைக் கேட்கவும் சிந்திக்கவும் தெளியவும் நிட்டை கூடவும் ஆவலுறுகிறார்கள். இவர்கள் பொருட்டே மெய்ந்நூல்கள் அருளப்பெற்றன. இவர்கட்கே மெய்ந்நூல்களைக் கற்பிக்க வேண்டும். இவர்களே விதித்தன செய்து விலக்கியன ஒழியும் இயல்புடையவர்கள். இவர்கள் அகம், புறம் என்ற இருவகை வழிபாடுகளுள் ஒன்றைப் பின்பற்றுவர்.

மூன்றாவது நிலையினரான சாமுசித்தர்கள் முற்பிறவிகளில் ஈட்டப்பட்ட தவத்தின் பயனால் இறைவன் திருவருளுக்கு உடனே இலக்காகும் மேலாம் தரம் பெற்றவர்கள். இவர்களுக்கு நூலின் துணை தேவையில்லை.[15]

மேற்கண்ட சிவப்பிரகாசப் பாடலில் பிராகிருதர்கள் எனப்படும் உலகியல் வாழ்க்கை உடையவர்களுக்கும், உண்மை ஞானம் வாய்க்கப்பெற்ற ஞானியர்க்கும் உள்ள ஒருபுடை ஒப்புமை உமாபதி சிவத்தால் எடுத்துக்காட்டப்பெறுகிறது.

உலகவருக்கு அருள் தெரியாது; மூவாசை உண்டு; விருப்பு வெறுப்பு உண்டு; யான் எனது உண்டு. ஞானிகளுக்கு பிரபஞ்சம் தெரியாது; மூவாசை இல்லை; விருப்பு வெறுப்பு இல்லை; யான் எனது என்பதும் இல்லை.

உலகவர்களான பிராகிருதர்கள் அறியாமை வடிவாய் இருப்பார்கள். ஞானிகள் சிவத்தோடு சேர்ந்து ஞான வடிவமாகவே நிற்பார்கள்.

"அறியார்களும் அறியார் அறிவார்களும் அறியார்
அறியார்களும் அறிவார்களும் ஒன்றோதம்மில் இன்றாம்
அறியார்களும் பசுபாசம் என்னும் இருளான் மறைந்தறியார்
அறிவார்களும் பரமானந்த ஒளியால் நிறைந்து அறியார்" 16

என வரும் மெய்ஞ்ஞான விளக்கம். அறியார்கள் இறைவனை அறியாமலும், இறைவனை அறிவார்கள் உலகத்தை அறியாமலும் இருப்பார்கள் என்று கூறும்.

'பாச சம்பந்தத்தினால் ஆன்மா பசு; பாசம் நீக்கமுற்ற முத்தான்மா பசுவெனப் படான்' எனப் பௌஷ்கர ஆகமம் கூறுவதை ஒட்டி, உலகவரை 'பசு ஞானிகள்' என்றும், சீவன் முத்தரைச் 'சிவ ஞானிகள்' என்றும் அழைப்பர் அறிஞர்.[17]

"அகம்புறம் என்றி ரண்டாம் அறிவதை ஒழித்து மாயாச்
செம்புற மாக்கித் தன்னைத் தெரிசித்துச் சிவனோடு ஒன்றாய்
இகம்பர மற்று நிற்கும் இன்பத்துள் அதீதமான
சுகம்புரி கருணை மேனி தொழுது கண்டுஉருகா நிற்கும்.[18]

என வரும் அம்பலவாணர் தச காரியம், சீவன் முத்தர்கள் அகம், புறம் என்னும் பேதத்தைக் கடந்து பரமானந்தத்தில் திளைத்திருப்பர் என்று கூறும்.

"ஞானம் திகழ்ந்து அகம், புறம் எனாத செம்மையார் நன்மையாரே" என்பது சிவானந்த போகம் துய்க்கும் பர முத்தரது ஞானத்தின் முறைமையாகும்.

"ஆனந்தக் கூத்தன் அருள்பெறில் நாம் அவ்வணமே
ஆனந்தமாகி நின்று ஆடாமோ தோணோக்கம்"

"ஆனந்தமே செவி அம்புயத்தாளினை அங்கைகளும்
ஆனந்தமே திருக்கண்ணும் செவ்வாய் அருள்மேனியெல்லாம்
ஆனந்தமே அருட்சிற்றம்பலவர் அருட்பொருளும்
ஆனந்தமே அவன் தில்லையும் காழியும் ஆனந்தமே"

என்பவை 'சுவாநுபூதிமான்களது சிவாநுபவச் சிறப்பு' என்பார் காஞ்சி ஞானப்ரகாச சுவாமிகள்.[19] ***"உள்ளும் புறம்பும் உனைப்பறின் நின்னுள்ளே மொள்ளா அமுதாமென்று உந்தீபற"***[20] என்பது திருவுந்தியார். இந்நிலையை,

'பரஞானத்தால் பரத்தைத் தரிசித் தோர் பரமே
பார்த்திருப்பர் பதார்த்தங்கள் பாரார்" [21]

என்று சித்தியார் எடுத்துச் சொல்லும். இவர்கள் உடம்பு நீங்கியவுடன் சிவ சாயுச்சியமாகிய பர முத்தியைப் பெறுதல் அன்றி வேறில்லை. அதனால் திருவருட்பயன், ***'மூதறிவார்க்கு அம்மையும் இம்மையே ஆம்'***[22] என்று குறிப்பிடும்.

இத்தகைய ஞான நிலையினின்றும் நீங்கிய நிலையில் சீவன் முத்தர்கள் உண்மை ஞானத்தைப் பெற்று அதனோடும் கூடி அனுபவிக்கின்றபொழுது பழைய வாதனா பலத்தாலே பிரபஞ்ச வாசனை மேலிடும். அப்பொழுது சாத்தியமாகிய ஞானத்தைப் பெற்ற அவர்களும் சரியை, கிரியை, யோகம் முதலியவற்றைக் கைக்கொள்ள வேண்டும்.

"ஞானயோகக் கிரியை சரியை நான்கும்
நாதன்தன் பணி ஞானி நாலினுக்கும் உரியன்" [23]

என்பது சித்தியார்.

"உலகின் மருவாத இன்பத்துள் வைத்த குருவின் உபகாரத்தைக் கருதி நால்வகைத் தொழிலும் ஞானி செய்தலே கடப்பாடென்பது, உள் தொழில் செய்வார் புறத்தொழிற்கும் உரியரென்னும் முறைமைபற்றி ஞானி நாலினுக்கும் உரியன். ஏனையோர் தத்தந் தொழிற்கே உரியர் என்பது, புறத்தொழில் செய்வார் உட்தொழிற்கு உரியரல்லர் என்னும் முறைமைபற்றியும் உணர்ந்து கொள்ளப்படுவன" என விளக்கம் தருவார் சிவஞான முனிவர்.[24]

சிவஞானம் பெற்றோர், மற்ற மூவரினும் (சரியை, கிரியை, யோகம் பெற்றவர்கள்) மேலாம்படியில் நின்றாலும், நான்கையும் பின்பற்றுதற்கும் பிறர்க்கு உணர்த்துதற்கும் உரிமையுடையோர்கள் ஆவர்.

"பசுவின் பாலானது செல்வப் பெருக்கம் உடையார்க்கு உணவாயும், உடல் நோயுற்றோர்க்கு நோய் நீக்கும் மருந்தாயும் உள்ளது. அதுபோலச் சீவன் முத்தரிடத்து நிகழ்வது, சிவானந்த அனுபவத்தை மேன்மேல் வளரச் செய்யும் அனுபவமாயும், பிரபஞ்ச வாதனையாகிய நோயைத் தீர்க்கும் மருந்தாகவும் உளதாகும் என்று சிவஞான மாபாடியம் வழி பொ.முத்தையாபிள்ளை உணர்த்துவர்.[25]

வறியவர்கள் பொருளைப் பெறுதற்கு உழைக்கின்றார்கள்; செல்வர்கள் பெற்ற பொருளை அழியாமற் காக்க உழைக்கின்றார்கள் என்று "பொருளாட்சி போற்றாதார்க்கு இல்லை" என்ற குறள் மூலம் விளக்கம் தருவர் சி.அருணைவடிவேல் முதலியார்.[26]

யோகம்

நிலம் முதலிய நாற் பொருள்களும் வானைப் பொருந்தி நிற்ப, அவ்வானம் அவை அனைத்தையும் தன்னகத்து அடக்கி நிற்றல் போல, அனைத்துப் பொருள்களிலும் முழுமையாக இறையருள் கலந்திருத்தலின் தாம் காணும் பொருள்களையும் அவ் வருள் வடிவாகக் காணின் இறைவனும் அவ்வடிவில் நிற்பான். சீவன் முத்தர்கள் இவ்வாறு அனைத்தையும் சிவமாகக் கண்டு நிற்றலின் அவர்கள் ஞான நிலையை அடைதலில் ஐயமின்றாம்.

> **"அண்டம் மேவிட அனைத்தும்,**
> **அனைத்தையும் அண்டம் மேவிக்**
> **கொண்டல்போல் எவையும் ஞானக்**
> **குறைவிலா நிறைதலாலே**
> **கண்டதோர் பொருளை அந்தக்**
> **கருத்தினால் காணில் தானே**
> **அண்டநாயகனார் மேனி**
> **ஆனதேல் ஐயம் இன்றே"** (சிவ.96)

என்று சீவன் முத்தர் அடையும் யோகத்தைக் குறிக்கிறது சிவப்பிரகாசம்.

சராசரங்கள் அனைத்திலும் திருவருள் கலந்து வியாபகமாய் நிற்றலால், 'தனக்கு எதிர்ப்படும் பொருள்களை அத் திருவருள் வடிவாகக் காணில்', தானும் அவ் வருள் வடிவாக ஞான நிலையை அடையலாம். சிவத்தை அணைந்து சிவமாம் தன்மையைப் பெற்றோர் அசத்தைக் காணார்.

"ஓம் ஈசாவாஸ்ய மிதக்ம் ஸர்வம் யத் கிஞ்ச ஜகத்யாம் ஜகத்" என்பது ஈசாவாஸ்யத்தின் முதல் வாக்கியம். "உலகில் உள்ள அனைத்துப் பொருள்களிலும் இறைவன் நிறைந்து இருக்கின்றான்" என்பது பொருளாகும்.[27]

"பார்க்கின்ற மலரூடு நீயே இருத்தி; அப்
பனிமலர் எடுக்க மனமும் நண்ணேன்" [28]

எனத் தாயுமானவர், பார்க்குமிடம் எங்கும் நீக்கமற நிறைகின்ற பரம்பொருளைக் காண்கின்றார்.

திருவையாற்றில் எம்பெருமானின் கயிலைக் காட்சியைக் கண்ட அப்பர் பெருமான், நிற்பவையும், உலவுபவையும் ஆகிய அசரம், சரம் ஆகிய அனைத்து உயிர்களிடத்தும் அனைத்துப் பொருள்களிடத்தும் உள்ளுறைந்து நிற்கும் சத்தியும் சிவமும் ஆகிய தன்மையைக் கண்டு வணங்கினார். அவர் சுற்றுமுற்றும் பார்த்தபோது இறைவனைத் தவிர வேறு யாரையும் காணவில்லை. அனைத்துத் தோற்றங்களிலும் அனைத்து வடிவங்களிலும் இறைவனை மட்டுமே கண்டார்; கண்டு மகிழ்வு எய்தினார். எனவேதான், ***'கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்"***[29] என்று பாடினார்.

மணிவாசகர் தம்மைத் தாக்குகின்ற மாயா ரூப விடயங்கள் எல்லாம் சிவசொரூபம் என்று கண்டு, ***"கூறும் நாவே முதலாகக் கூறும் கரணம் எல்லாம் நீ"*** [30] என்று திருவாசகத்தில் கூறுவர்.

ஞானசம்பந்தப் பெருமான் எற்புக் குடத்தினின்றும் எழுந்த பூம்பாவையிடம், அவளுடைய மாயா காரியமாகிய உருவ அழகைக் காணாமல், அவள் வடிவத்தில் இறைவனது கருணை வெள்ளத்தைக் கண்டார். ***"கண்ணுதல் கருணை வெள்ளம் ஆயிரம் முகத்தாற் கண்டார்"*** [31] என்பது சேக்கிழார் வாக்கு.

கிரியை

நிலம் முதலிய தத்துவங்களை எல்லாம் தனக்கு வேறான சடப்பொருள்கள் என்று கண்டு நீக்கி, அவ்வாறு காணுமாறு செய்த திருவருளிலே நிலைத்து அந்த அருட்கண்ணால் அனைத்தையும் பார்த்து, திருவைந்தெழுத்தை வீடுபேற்று முறையில் மாறிக் கணித்து எங்கும் சிவனது பரிபூரணத் தன்மையை உணர்ந்து துதிப்பதே சிவனுக்கு ஞானபூசை யென்று அருள்நூல்கள் சொல்லும்.

நிலம் முதலான தத்துவங்களையும் சடப்பொருள் என்று ஞானத்தாற் கண்டு அதனை நீக்கலே பூத சுத்தியாகும்.

தற்போதம் விட்டுச் சிவபோதம் என்றும் திருவருள் வசமாகப் பொருந்தி ஒழுகுதலே ஆன்ம சுத்தியாகும்.

உலகத்தில் உள்ள எல்லாப் பொருள்களும் திருவருள் வியாபகத்தினுள் அடங்கி இயங்கும் என்பதை அறிதலே திரவிய சுத்தியாகும்.

காரண பஞ்சாக்கரத்தை (சிவ) பிறப்பறும்படி செபிப்பதே மந்திர சுத்தியாகும்.

முதல்வனுடைய வியாபகத்தில் தானும் தனக்குத் துணைபுரியும் திருவருளும் அடங்கியிருத்தலை அறிதலே இலிங்க சுத்தியாகும்.

“மண்முதல் கரணம் எல்லாம்
மறுஅசத்து ஆக்கி ஞானக்
கண்ணினில் ஊன்றி அந்தக்
கருத்தினால் எவையும் நோக்கி
எண்ணி அஞ்சு எழுத்தும் மாறி
இறைநிறை உணர்ந்து போற்றல்
புண்ணியன் தனக்கு ஞான
பூசையாய்ப் புகலும் அன்றே” (சிவ.97)

எனச் சிவப்பிரகாசம் கூறும்.

பிரபஞ்ச வாசனையில் யோக நிலை சிறிது குலையலாம். அவ்வாசனையை நீக்கிக் கொள்வதற்கே ஞானத்திற் கிரியை என்னும் பஞ்ச சுத்திகளையும் சீவன் முத்தர் செய்துகொள்ள வேண்டும்.

இச் சிவப்பிரகாசக் கருத்தையே,

“புவிமுதல் நால்ஒன்பதுவுஞ் சடமா மென்றல்
பூதசுத்தி; உயிரருளைப் பொருந்தல் தானே
அவமகலும் உயிர்ச்சுத்தி எல்லா மிந்த
அருளெனவே காண்டல் திரவிய நீள்சுத்தி
சிவமுதலாய் மாறி மலந் திரோதை நீங்கித்
திருவருளால் உயிர்அரனைச் சேர்ந்தொன்றாகிப்
பவமறன் மந்திர சுத்தியில் லிங்க சுத்தி
பரன்நிறைவுட் புகுதல் பஞ்ச சுத்தியாமே” [32]

என்று சிவஞான தீபம் விளக்கமாகக் காட்டும்.

சரியை

சிவனடியார்களையும் தேவர்கள் தொழுகின்ற சிவலிங்கத்தையும் சிவனே என வணங்கி, கண்கள் நீர்வழிய வாக்குத் தழுதழுப்ப மெய்ப்பொருளாகிய சிவத்தையே

கண்டு கொண்டிருப்பார்கள் ஞானக் கடலமுது அருந்தினோர்கள்:

“தொண்டர்கள் இடத்தும் வானோர்
தொழுந்திருமேனி தானும்
அண்டரும் கண்டி லாத
அண்ணலே என வணங்கி
வெண்தரளங்கள் சிந்த
விழிமொழி குழறி மெய்யே
கண்டு கொண்டிருப்பர் ஞானக்
கடலமுது அருந்தி னோரே” (சிவ.98)

இந் நிலை ‘ஞானத்துச் சரியை’ என்னும் நிலையாகும். ***‘ஞானத்துச் சரியை குரு லிங்க வேடம் நாதன் எனத் தொழுது பணி மேவும்’*** எனக் குறிக்கிறது சிவஞானதீபம்.[33]

“மால்அற நேயம் மலிந்தவர் வேடமும் ஆலயமும் தானும் அரன் எனத் தொழுமே” என்பது சிவஞான போதத்தின் பன்னிரண்டாம் நூற்பா. சீவன் முத்தரின் வழிபாடு குரு, லிங்க, சங்கம வழிபாடு என்று மூன்று வகையாகக் கூறப்படும். இங்கே சங்கமர்கள் ஆகிய தொண்டர்களையும் லிங்கத் திருமேனியையும் மட்டிலுமே சிவப்பிரகாசம் குறிக்கிறது. ‘தொண்டர்கள் தாமும் வானோர் தொழுந் திருமேனி தானும் . . . அண்ணலே என வணங்கி” என்பது சிவப்பிரகாசம்.

சித்தியாரில், குரு, லிங்க, சங்கம வழிபாடு ஆகிய மூன்றையும் இரண்டனுள் அடக்கி,

“தாபர சங்கமங்கள் என்று இரண்டு உருவில் நின்று
மாபரன் பூசை கொண்டு மன்உயிர்க்கு அருளை வைப்பன்” [34]

என்று கூறும். இவ்வாறு வழி நூல் உணர்த்திய முறையிலேயே சிவப்பிரகாசம் குறிக்கிறது எனலாம்.

சொருப சிவமும், தடத்த சிவமும், பரஞானத்தை யுடையாரும், சிவலிங்காதி மூர்த்தங்களும், சிவபத்தர் பொருட்டாக அப்போதைக்கப்போது வெளிப்பட்டருளும் மூர்த்தங்களும் ஆகியவை எல்லாம் குரு மூர்த்தங்களே யாதலின், சிவ குருவென வேறு தனித் தொன்றையும் சிவப்பிரகாசம் கூறவில்லை.

“திருவுரு மூன்றிடத்தும் திருந்திய வணக்கம் ஒன்ற
அருளியது இயல்பாம் என்னை அடைந்திடுபவர்க்கு” [35]

என்று அம்பலவாண தேசிகர் அருளிய தச காரியத்தில், சீவன் முத்தருக்கு குரு, லிங்க, சங்கம வழிபாடு வேண்டும் எனக் கூறுவர். மேலும்,

“அங்கமுள் அங்கி ஒத்துத் தங்கலால் அங்கி தானாம்
இங்குயிர் உள்ளே ஈசன் இயைதலால் கருணை தானாய்த் தங்கிடும்.”[36]

என்று சிவபிரானுக்கும் அடியாருக்கும் வேற்றுமை காணலாகாது என்பதையும் வலியுறுத்துவர்.

சித்தாந்த சிகாமணியிலும்,

“மூவுருவே எவ்வுயிர்க்கும் முத்தி அளிக்குமால்
மூவுருவில் ஒன்றறவே முத்தியில்லை - மூவுருவும்
ஈசனே தானாய் எழலால் இழிவுயர்வு
பேசுதற்கே இல்லையெனப் பேசு”[37]

என்றருளிச் செய்வர்.

பெத்த நிலையில் குரு, லிங்க, சங்கம வழிபாடு முத்தி நிலையை நோக்கி முன்னேற அவசியமாகிறது. ஆனால் சீவன் முத்தருக்கு முத்தி இன்பம் பெருகுவதற்குத் துணைசெய்து மல வாதனையைப் போக்குவதற்கும் உதவுகிறது.

சிவனடியார்கள் கொண்ட வேடத்தினாலும் தியான சமாதியினாலும் அவர்களிடத்தே சிவன் சாந்நித்தியமாகச் செய்து நிற்கையால் அவர்களை வழிபடவேண்டும். அதனால்தான், சிவஞானமுனிவர்,

“இடையறாப் பேரன்பும் மழைவாரும் இணைவிழியும்
உழவா ரத்திண்
படையறாத் திருக்கரமும் சிவபெருமான் திருவடிக்கே
பதித்த நெஞ்சும்
நடையறாப் பெருந்துறவும் வாகீசப் பெருந்தகைதன்
ஞானப் பாடல்
தொடையறாச் செவ்வாயும் சிவவேடப் பொலிவழகும்
துதித்து வாழ்வாம்”[38]

என்று திருநாவுக்கரசுப் பெருமானைத் துதிக்கிறார்.

அசத்தோடு பொருந்துவதற்குக் காரணமாகிய வினை வேரோடு அற்றுப் போகவேண்டும். அவ்வாறு அறுவதற்கும் ஞானத்தில் நிலைபெறுவதற்கும் மெய்யடியாரிடத்துச் செய்யும் வழிபாடு இன்றியமையாதது.[39]

பாலானது பசுவினுடைய தேகமெல்லாம் வியாபித்திருந்தாலும் வேறிடங்களில் காணப்படாமல் கன்றைக் கண்டபோது முலையிலே விம்மி ஒழுகுவதுபோல, பரமசிவனும் அன்பினால் வழிபடும் ஞானிகளுக்கு அவ் வன்பே தாமாய் நின்று

திருக்கோயிலில் உள்ள சிவலிங்கம் முதலிய திருமேனிகளில் வெளிப்பட்டு அருள் செய்வதனால் அத் திருமேனிகளைச் சிவமே யெனக் கண்டு வழிபடுவர் சீவன் முத்தர்.

அத்திருமேனி வானவர்க்கும் அறிய ஒண்ணாதது என்பதை,

'வான நாடரும் அறியொணாத நீ'

'கனவேயுந் தேவர்கள் காண்பரிய கனைகழலோன்'

'அளவறுப்பதற் கரியவன் இமையவர்க் கடியவர்க் கெளியான்'

என மாணிக்கவாசகர் திருவாசகத்தில் கூறியருளியதால் உணரப்படும்.[40]

இலிங்க மூர்த்தத்தை அண்டரும் கண்டிராத அண்ணலே என்றதேதென்னில், இந்த இலிங்க மூர்த்தத்தை வழிபடுமவர்கள் உண்மை ஞானமாகிய பூரணத்தை இலிங்கத்தினிடத்திலே தியானித்து வழிபடுதலால் அப்படிச் சொல்லப்பட்ட தாகும். உண்மை ஞானம் என்பது சிவ சம்பந்தமான பதி புண்ணியம். ஆனால், தேவர்கள் சிவனை இழந்து நின்ற பசு புண்ணியத்தை மட்டும் அனுபவித்துக் கொண்டிருப்பவர்கள். பசு புண்ணியத்தினாலே தெய்வ பதத்தைப் பெற்றுச் சிற்றின்பமாகிய போகங்களை அநுபவித்திருக்கையால் அந்த உண்மை ஞானத்தை அறியாதவர்கள் என்றது என அறிக என்பர் மதுரைச் சிவப்பிரகாசர்.[41]

இலிங்கத் திருமேனிகள் எழுந்தருளியிருக்கின்ற திருக்கோயிலும், திருக்கோபுரக் காட்சியும் ஞானியர்க்கு என்றும் இன்பம் தருவன.

"திருநாவுக்கரசரும் அத்திருவொற்றியூர் அமர்ந்த
பெருநாகத்திண் சிலையார் கோபுரத்தை இறைஞ்சிப்புக்கு
ஒருஞானத் தொண்டருடன் உருகி வலங் கொண்டு அடியார்
கருநாமம் தவிர்ப்பாரைக் கைதொழுது முன் வீழ்ந்தார்." [42]

திருநாவுக்கரசர் திருவொற்றியூர்க் கோபுரத்தை வணங்கி, உள்ளே புகுந்து, வலமாய் வந்து, அடியாரின் பிறவியைத் தவிர்க்கும் பெருமானைக் கைதொழுது திருமுன்பு வீழ்ந்தார்.

"தேடுமால் அயனுக்கு அரியவர் மகிழ்ந்த
    திருவாலவாய் மருங்கணைந்து
நீடுயர் செல்வக் கோபுரம் இறைஞ்சி
    நிறைபெரு வியப்புடன் புக்கு
மாடுசூழ் வலங்கொண்டுடையவர் கோயில்
    மந்திரி யாருடன் புகுந்தார்." [43]

திருஞானசம்பந்தர் திருஆலவாய்க் கோயில் பக்கத்தை அடைந்து நீண்டு உயர்ந்த கோபுரத்தை வணங்கிப் புகுந்து நிறையும் பெரு விருப்பத்துடன் உள்ளே

புகுந்து, வலமாகச் சுற்றி வந்து இறைவரின் கோயிலுக்குள் மந்திரி குலச்சிறையாருடன் சென்றார்.

"...எதிர்கொளும் பதிகளானவற்றின்
வினைதரும் பவம் தீர்ப்பவர் கோயில்கள் மேவி
புனையும் வண்டமிழ் மொழிந்தபடி பணிந்து போந்தணைந்தார்" [44]

வினை காரணமாக வரும் பிறவிகளை விலக்கியருளும் திருக்கோயில்களை வணங்கிப் பாடி இறைவருடைய அடிகளை வணங்கிச் சென்றார் திருஞானசம்பந்தர்.

"வடகரையில் திருவையாறு எதிர்தோன்ற மலர்க்கரங்கள்
உடலுருக உள்ளுருக உச்சியின்மேற் குவித்தருளிக்
கடல்பரந்த தெனப் பெருகுங் காவிரியைக் கடந்தேறி
தொடர்வுடைய திருவடியைத் தொழுவதற்கு நினைவுற்றார்." [45]

சுந்தரர் திருவையாறு எதிரே தோன்றவும், உடலும், உள்ளமும் உருக மலர்போன்ற கைகளைத் தலைமீது குவித்து இறைவனின் திருவடியை வணங்குவதற்குத் திருவுள்ளம் கொண்டார்.

இவ்வாறு ஞானியர்கள் திருக்கோபுரக் காட்சி கண்ட அளவிலேயே உள்ளம் உருக கைகுவித்து பின் வணங்கி, திருக்கோயில் உட்சென்று வலம் செய்து, அத் திருக்கோயிலின் உள்ளே உள்ள இலிங்கத் திருமேனியை இறைவன் என்றே வணங்கி மகிழ்ந்தனர் என்று சேக்கிழார் பெரிய புராணத்தில் பாடியருளியது இங்கு நினைந்து இன்புறத்தக்கதாம்.

இங்ஙனம் இலிங்கத் திருமேனியை வழிபடுபவர்கள் இறைவன் நம் பொருட்டுத் திருமேனி கொண்டு அருள்கின்றான் என்று கண்டுகொண்டு தங்கள் அன்பின் மேலீட்டினால் விழிகளில் நீர்கொண்டு வாய்குழறுவர்.

"கண்டமிசை தழுதழுத்தல் நாவசைதல் இதழ்துடித்தல் கம்பமாதல்
விண்டுமயிர் பொடித்தல் அங்கம் வெதும்பியே விதிர்விதிர்த்து வெயிர்த்தல் நில்லா
தெண்டிசைகள் தள்ளாடிவிழல் விழிகண்ணீர் பிலிற்றல் கலுழ்ந்திரங்கல் ஆர்வம்
கொண்டு பரவசப்படுதல் இவை பத்தும் அடியார்க்குக் குறிகள் அம்மா" [46]

என்று கந்த புராணம் அவ் வழிபாட்டில் ஏற்படும் அடையாளங்களைச் சொல்கிறது.

"ஆளும் அங்கணர் ஆலவாய் அமர்ந்து இனிதிருந்த
காள கண்டரைக் கண்களின் பயன்பெறக் கண்டு
நீள வந்தெழும் அன்பினால் பணிந்தெழ நிறையார்
மீளவும் பலமுறை நிலமுற விழுந்து எழுவார்" [47]

அங்கம் எட்டினும் ஐந்தினும் அளவின்றி வணங்கிப்
பொங்கு காதலின் மெய்ம்மயிர்ப் புளகமும் பொழியும்
செங்கண் நீர்தரும் அருவியும் திகழ் திருமேனி
எங்குமாகி நின்று ஏத்தினார் புகலியர் இறைவர்" [48]

திருஞானசம்பந்தர் ஆலவாய் அண்ணலைக் கண்டு, இக் கண்கள் பெற்ற பயன் எனக் கருதி, அன்பினால் பணிந்து எழுந்தும் அமைதி பெறாதவராய்த் திரும்பவும் நிலமிசை பலமுறை விழுந்து வணங்கி எழுவார். எட்டு உறுப்புகளாலும் ஐந்து உறுப்புகளாலும் அளவிலாமுறை வணக்கங்கள் செய்து, உள்ளத்தில் பொங்கி எழுந்த அன்பின் மிகுதியால் உடலில் மயிர்க்கூச்செறிந்து, கண்களில் அருவிநீர் பெருக்கித் திருமேனி முழுதும் வழிந்தோட இறைவனை வணங்கி நின்றார்.

"வார்ந்து சொரியும் கண்ணருவி
மயிர்க்கால் தோறும், வரும்புளகம்
ஆர்ந்த மேனிப் புறம்பலைப்ப
அன்பு கரைந்து என்பு உள்ளலைப்பச்
சேர்ந்த நயனப் பயன்பெற்றுத்
திளைப்பத் திருவேகம்பர்தமை
நேர்ந்த மனத்தில் உறவைத்து
நீடும் பதிகம் பாடுவார்" [49]

எனத் திருநாவுக்கரசர் காஞ்சியில் ஏகம்பரநாதரைத் தொழுது வணங்கிப் பதிகம் பாடும் காட்சியைப் போற்றிப் பரவுகிறது பெரிய புராணம்.

"மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து உன்
விரையார் கழற்கு என்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி
வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்ந்து உன்னைப் போற்றி சயசய
போற்றி என்னும்
கைதான் நெகிழ விடேன் உடையாய் என்னைக்
கண்டு கொள்ளே" [50]

என்று மாணிக்கவாசகர் மனம், மொழி, மெய் என்னும் மூன்றும் அன்பு வழிய வணங்கித் துதிக்கின்றார்.

இங்ஙனம் உருகும் மெய்யடியார்களை 'மெய்க்குணம் மிக்கார்' என்று சேக்கிழார் பாடிப் போற்றுகிறார்:

> **“ஈசனையே பணிந்துருகி இன்பமிகக் களிப்பெய்திப்**
> **பேசினவாய் தழுதழுப்பக் கண்ணீர் பெருந்தாரை**
> **மாசிலா நீறழித்தங்கு அருவிதர மயிர்சிலிப்பக்**
> **கூசியே உடல்கம்பித்திடுவார் மெய்க்குணமிக்கார்”** [51]

திருநாவுக்கரசர்,

> **“என்னுளே உயிர்ப்பாய்ப் புறம்போந்து புக்கு**
> **என்னுளே நிற்கும் இன்னம்பர் ஈசனே”** [52]

என்றும், திருமூலர்,

> **“உள்ளத்தும் உள்ளன் புறத்துளன் என்றவர்க்கு**
> **உள்ளத்தும் உள்ளன் புறத்துளன் எம்மிறை”** [53]

என்றும் ‘மெய்க்குணம் மிக்க மெய்யடியார்கள் எப்பொழுதும் மெய்யே கண்டு கொண்டிருப்பர்’’ என்று கூறுவர்.

“கடல் அலைத்தே ஆடுதற்குக் கைவந்து நின்றும் கடல் அளக்க வாராதாற் போல்”[54] மெய்யடியார்களுக்கு அருள்பாலிப்பதற்காகத் திருமேனி கொண்டு ஆட்கொள்ளும் சிவபெருமானின் கருணை எல்லையற்று விரிந்து கிடக்கும் அண்டங்கள் கடல்களில் எல்லாம் பரந்து நிற்பது. உயிரின் சிற்றறிவு அவ் விரிவினை அறிந்து கொள்ள இயலாது. இருந்தாலும் அந்த ஞானக்கடலில் விளைந்த ஞான அமுதத்தை ஞானிகள் அருந்துவதால் அணைந்தோரான அவர்களை ***‘ஞானக்கடல் அமுது அருந்தினோர்’*** *(98)* என்று சிவப்பிரகாசம் சிறப்பித்துக் கூறுகிறது.

நிறைவுரை

சிவப்பிரகாசத்தின் உண்மை அதிகாரம் ஆன்மாவின் சிறப்பியல்புகளை விளக்கி, அவ் வான்மா ஞானம் பெறும் வாய்மையையும், அந்த ஞானத்தால் வரும் ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி, ஆன்ம லாபம் பற்றியும் விளக்கிக் காட்டுகிறது.

ஆன்மா ஞானம் பெற்ற பின்பும் மல வாதனை தாக்காமல் இருக்க ஸ்ரீபஞ்சாக்கரத்தை விதிப்படி உச்சரிக்க வேண்டிய சாதனத்தையும் எடுத்துக் காட்டுகிறது.

ஞானம் பெற்ற சீவன் முத்தர்களும் பெத்தர்களைப் போல சரியை, கிரியை, யோக நெறிகளில் நின்று குரு லிங்க சங்கம வழிபாடுகளைப் பின்பற்றிப் பிறர்க்கும் அதன் இன்றியமையாமையை உணர்த்தியருள வேண்டும்.

அடிக்குறிப்புகள்

1. 8:24:9
2. C.K. சுப்பிரமணிய முதலியார், திருத்தொண்டர் புராணம் (இரண்டாம் தொகுதி) ப.1408.

3. பாம்பன் சுவாமிகள், பரிபூரணானந்த போதம், ப.78
4. மேலது, ப.78
5. காஞ்சி ஞானப்ரகாச சுவாமிகள், (உ.ஆ), திருவருட்பயன், ப.121
6. அண்ணா, (உ.ஆ), 108 உபநிஷத் ஸாரம் (மூன்றாம்பாகம்), ப.179
7. மு.திருவிளங்கம் (புத்துரை), சிவஞான சித்தியார் சுபக்கம், ப.506
8. திருவருட்பயன், 78
9. சங்கற்ப நிராகரணம், மாயாவாதி சங்கற்ப நிராகரணம் ப:232-236
10. சிவஞான முனிவர் (பொழிப்புரை), சிவஞான சித்தியார் சுபக்கம், ப.263
11. சிவஞான சித்தியார், சுபக்கம், 284
12. அண்ணா, மு.கா.நூ., ப.111
13. மு.திருவிளங்கம் (புத்துரை), சிவஞானசித்தியார், சுபக்கம், ப.507
14. திருமந்திரம், 2591
15. சி.சு.மணி (தெளிவுரை), சிவப்பிரகாசம், ப.120
16. மேற்கோள், மதுரைச் சிவப்பிரகாசர், சிவப்பிரகாச மூலமும் உரையும், ப.291
17. பாம்பன் சுவாமிகள், மு.கா.நூ., ப.103
18. அம்பலவாணர் தச காரியம், பா.45
19. காஞ்சி ஞானப்ரகாச சுவாமிகள், சிவப்பிரகாசம், ப.177
20. திருவுந்தியார், 26
21. சிவஞான சித்தியார் சுபக்கம், 311
22. திருவருட்பயன், 99
23. சிவஞான சித்தியார் சுபக்கம், 326
24. சிவஞான முனிவர் (பொழிப்புரை), மு.கா.நூ., ப.330
25. பொ.முத்தையா பிள்ளை, சிவஞான போதச் சிற்றுரை விளக்கம், ப.579
26. சி.அருணைவடிவேல் முதலியார், சித்தாந்த வினாவிடை, பக்.390-391
27. ஈசாவாஸ்ய உபநிஷதம், 1.
28. தாயுமானவர், கருணாகரக்கடவுள், 6.
29. 4:3:1-11
30. 8:33:5
31. பெரிய புராணம், 3007.
32. சிவஞான தீபம், 160

33. மேலது, 159
34. சிவஞான சித்தியார் சுபக்கம், 118.
35. அம்பலவாணர் தச காரியம், பா.47
36. மேலது, பா.48
37. அம்பலவாண தேசிகர், சித்தாந்த சிகாமணி, 777.
38. சிவஞான முனிவர், காஞ்சிப் புராணம், பாயிரம், 11.
39. சி.சு.மணி, சிவஞான மாபாடியம், ப.959
40. மேற்கோள், மதுரைச் சிவப்பிரகாசர், மு.கா.நூ., ப.298 (8:5:95, 8:11:10, 8:5:35)
41. மேலது, ப.298
42. பெரிய புராணம், 1599
43. மேலது, 2562
44. மேலது, 2133
45. மேலது, 3878
46. மேற்கோள், S.P.சபாரத்தினம், குமாரஸ்தவம், ப.136
47. மேலது, 2563
48. மேலது, 2564
49. மேலது, 1588
50. 8:5:1
51. பெரிய புராணம், 4152
52. 5:21:1
53. திருமந்திரம், 1512
54. திருக்களிற்றுப்படியார், 90

6. பயன்பட்ட நூல்கள்

முதன்மை ஆதாரங்கள் (சிவப்பிரகாசம்)

1. அம்பலவாண தேசிகர் (உ.ஆ.), **சிவப்பிரகாசம் மூலமும் சிந்தனையுரையும்**, சைவ சித்தாந்த சமாஜம், சென்னை.
2. இராமநாத பிள்ளை, ப. (ப.ஆ.), **மெய்கண்ட சாத்திரம்,** (இரண்டாம் பகுதி), கழகம், சென்னை, 1974.
3. இராமலிங்கம் (ப.ஆ.), **சிவப்பிரகாசம்,** திருநாவுக்கரசு ஸ்வாமிகள் மடாலயம், திருநெல்வேலி, பதிப்பு ஆண்டு இல்லை.
4. இலக்கணம் ஸ்ரீ சிதம்பர, முனிவர், (உ.ஆ.), **சிவப்பிரகாசம்,** திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை, 1953.
5. ஈசுரமூர்த்திப் பிள்ளை, ஆ. (உ.ஆ.), **சிவப்பிரகாசம்,** சைவ சித்தாந்த சபை, சங்கரன் கோவில், ஏப்ரல், 2005.
6. காஞ்சி ஞானப்ரகாச சுவாமிகள் (உ.ஆ.), **சிவப்பிரகாசம் மூலமும் உரையும்,** அருள்நூல் பதிப்புக் குழு, சேலம், முதற்பதிப்பு, 1981.
7. சுந்தரமூர்த்தி, கு. (உ.ஆ.), **சிவப்பிரகாசம்,** திருப்பனந்தாள் காசித் திருமடம், திருப்பனந்தாள், நான்காம் பதிப்பு, 2007.
8. திருவிளங்கம், மு. (உ.ஆ), **சிவப்பிரகாசம் (புத்துரை),** யாழ்ப்பாணம் கூட்டுறவுத் தமிழ் நூற்பதிப்பு விற்பனைக் கழகம், யாழ்ப்பாணம், முதற்பதிப்பு, 1974.
9. மணி, சி.சு. (உ.ஆ.), **சிவப்பிரகாசம்,** அ.அ.மன்றம், திருநெல்வேலி, இரண்டாம் பதிப்பு, மே, 2001.
10. மீனாட்சிசுந்தரம் பிள்ளை, த.ச. (ப.ஆ.), **சிவப்பிரகாசம்,** திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை, 1966.

11. ஸ்ரீநிவாஸன், தே.ஆ. (உ.ஆ.), **சிவப்பிரகாசம் - சீர்மைக் கட்டுரை,** திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை, 1961.
12. ஸ்ரீநிவாஸன், தே.ஆ. (உ.ஆ.), **சிவப்பிரகாசம் நூலின் சீர்மைக் கட்டுரை,** திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை, 1962.
13. ஸ்ரீநிவாஸன், தே.ஆ. (உ.ஆ.), **சிவப்பிரகாசம் நூலின் சீர்மைக் கட்டுரை,** திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை, 1966.

பன்னிரு திருமுறைகள்

1. அருணைவடிவேல் முதலியார், சி., (வி.கு), **திருநாவுக்கரசர் தேவாரம்,** (ஆறாம் திருமுறை), ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமை ஆதீனம், மயிலாடுதுறை, இரண்டாம் பதிப்பு, 1997.
2. அருணைவடிவேல் முதலியார், சி., (வி.கு), **சுந்தரர் தேவாரம்** (ஏழாம் திருமுறை), ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமை ஆதீனம், மயிலாடுதுறை, இரண்டாம் பதிப்பு, 1997.
3. அருணைவடிவேல் முதலியார், சி., (வி.கு), **மாணிக்க வாசகர் - திருவாசகம்,** (எட்டாம் திருமுறை -1), ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமை ஆதீனம், மயிலாடுதுறை, இரண்டாம் பதிப்பு, 1997.
4. அருணைவடிவேல் முதலியார், சி., (வி.கு), **திருமூலர் - திருமந்திரம் 1, 2, 3,** (பத்தாம் திருமுறை -1), ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமை ஆதீனம், மயிலாடுதுறை, இரண்டாம் பதிப்பு, 1997.
5. அருணைவடிவேல் முதலியார், சி., (வி.கு), **திருமூலர் - திருமந்திரம் 4, 5, 6** (பத்தாம் திருமுறை - 2), ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமை ஆதீனம், மயிலாடுதுறை, மூன்றாம் பதிப்பு, 2014.
6. அருணைவடிவேல் முதலியார், சி., (வி.கு), **திருமூலர் - திருமந்திரம் 7, 8, 9** (பத்தாம் திருமுறை - 3), ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமை ஆதீனம், மயிலாடுதுறை, முதற் பதிப்பு, 1995.
7. அருணைவடிவேல் முதலியார், சி., (வி.கு), **பதினொன்றாம் திருமுறை** (திருவாலவாயுடையார் முதலிய பன்னிருவர் அருளியவை), ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமை ஆதீனம், மயிலாடுதுறை, இரண்டாம் பதிப்பு, 2014.
8. அருணைவடிவேல் முதலியார், சி., (வி.கு), **ஒன்பதாம் திருமுறை,** ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமை ஆதீனம், மயிலாடுதுறை, இரண்டாம் பதிப்பு, 1997.
9. கந்தசாமி பிள்ளை, அ. (வி.கு.), **திருஞானசம்பந்தர் தேவாரம்,** (மூன்றாம் திருமுறை), ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமை ஆதீனம், மயிலாடுதுறை, இரண்டாம் பதிப்பு, 1997.

10. சுந்தரமூர்த்தி, கு. (வி.கு.), **சேக்கிழார் - திருத்தொண்டர் புராணம்,** (பன்னிரண்டாம் திருமுறை முதற்காண்டம்); ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமை ஆதீனம், மயிலாடுதுறை, இரண்டாம் பதிப்பு, 2014.

11. சுந்தரமூர்த்தி, கு. (வி.கு.), **சேக்கிழார் - திருத்தொண்டர் புராணம்,** (பன்னிரண்டாம் திருமுறை இரண்டாம் காண்டம்), ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமை ஆதீனம், மயிலாடுதுறை, இரண்டாம் பதிப்பு, 2014.

12. தண்டபாணிதேசிகர், ச. (வி.கு.), **திருஞானசம்பந்தர் தேவாரம்,** (முதல் திருமுறை), ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமை ஆதீனம், மயிலாடுதுறை, மூன்றாம் பதிப்பு, 2011.

13. மாணிக்கவாசக முதலியார், முத்து. சு. (வி.கு.), **திருஞானசம்பந்தர் தேவாரம்,** (இரண்டாம் திருமுறை), ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமை ஆதீனம், மயிலாடுதுறை, இரண்டாம் பதிப்பு, 1997.

14. மாணிக்கவாசக முதலியார், முத்து. சு. (வி.கு.), **திருநாவுக்கரசர் தேவாரம்,**(நான்காம் திருமுறை), ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமை ஆதீனம், மயிலாடுதுறை, இரண்டாம் பதிப்பு, 1997.

15. வச்சிரவேல் முதலியார், க. (வி.கு.), **திருநாவுக்கரசர் தேவாரம்** (ஐந்தாம் திருமுறை), ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமை ஆதீனம், மயிலாடுதுறை, மூன்றாம் பதிப்பு, 2011.

16. ஸ்ரீமத் சுந்தரமூர்த்தி தம்பிரான் (ப.ஆ.), **மாணிக்கவாசகர் - திருக்கோவையார்,** (எட்டாம் திருமுறை - 2), ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமை ஆதீனம், மயிலாடுதுறை, முதற்பதிப்பு, 1977.

துணைமை ஆதாரங்கள்

1. அடிகளாசிரியர், **சிவஞான தீபம்,** தஞ்சாவூர் சரஸ்வதி மஹால், தஞ்சாவூர், 1970.

2. "அண்ணா" (உ.ஆ.), **மஹா நாராயண உபநிஷத்து,** ஸ்ரீராமகிருஷ்ண மடம், சென்னை, 1968.

3. "அண்ணா" (உ.ஆ.), **108 உபநிஷத் ஸாரம்,** ஸ்ரீராமகிருஷ்ண மடம், சென்னை, 1989.

4. "அண்ணா" (உ.ஆ.), **108 உபநிஷத்ஸாரம் இரண்டாவது பாகம்,** ஸ்ரீராமகிருஷ்ண மடம், சென்னை, 1991.

5. "அண்ணா" (உ.ஆ.), **108 உபநிஷத்ஸாரம் மூன்றாவது பாகம்,** ஸ்ரீராமகிருஷ்ண மடம், சென்னை, 1991.

6. "அண்ணா" (உ.ஆ.), **ஸ்ரீருத்ரம்,** ஸ்ரீராமகிருஷ்ண மடம், சென்னை, பதிப்பு ஆண்டு இல்லை.

7. அருணகிரி முதலியார், **திருவாசக விஷய சூசனம்,** தெய்வ சேக்கிழார் சைவ சித்தாந்தப் பாடசாலை, தஞ்சாவூர், 2ம் பதிப்பு, 2009.

8. அருணாசலம், மு. (உ.ஆ.), **திருவிசைப்பா திருப்பல்லாண்டு,** சென்னை பல்கலைக்கழக வெளியீடு, சென்னை, 1974.

9. அருணாசலம், மு. (கு.ஆ.), **சதமணிக் கோவை,** தருமை ஆதீனம், தருமபுரம், மயிலாடுதுறை, உரிமைப்பதிவு 1984.

10. அருணாசலம், மு. (கு.ஆ.), **தமிழ் இலக்கிய வரலாறு பதினான்காம் நூற்றாண்டு,** தமிழியல் ஆய்வு மற்றும் வெளியீட்டு நிறுவனம், சென்னை-14, 2005.

11. அருணை வடிவேலு முதலியார், சி., **சிவஞான போதச் சிற்றுரை விளக்கம்,** தருமை ஆதீனம், தருமபுரம், 1984.

12. அருணை வடிவேலு முதலியார், சி., **சிவஞான போத மாபாடியப் பொருள் நிலை விளக்கம்,** தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1991.

13. அருணை வடிவேலு முதலியார், சி., **முப்பொருள் இயல்பு,** சைவ சித்தாந்தப் பெருமன்றம், சென்னை, நான்காம் பதிப்பு, 2005.

14. அருணை வடிவேலு முதலியார், சி., (கு.ஆ.), **காஞ்சிப் புராணம்,** .கே.தாமோதரன், காஞ்சிபுரம், இரண்டாம் பதிப்பு, 2006.

15. அருணை வடிவேலு முதலியார், சி., (கு.ஆ.), **சித்தாந்த வினா விடை,** ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமை ஆதீனம், தருமபுரம், இரண்டாம் பதிப்பு, 2008.

16. அருணை வடிவேலு முதலியார், சி., (கு.ஆ.), **கந்தர் கலிவெண்பா,** பன்னிரு திருமுறை மன்றம், மதுரை, இரண்டாம் பதிப்பு, 2009.

17. அழகரடிகள் (உ.ஆ.), **சிவஞான போத விளக்கம்,** தொண்டமான் சக்கரவர்த்தி பதிப்பகம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 2008.

18. ஆனந்தராசன், ஆ., **தச காரியம்,** அ.அ.மன்றம், திருநெல்வேலி, பிப்ரவரி, 1993.

19. ஆனந்தராசன், ஆ., **உண்மை விளக்கம்,** அ.அ.மன்றம், திருநெல்வேலி, இரண்டாம் பதிப்பு, 1998.

20. ஆனந்தராசன், ஆ., **திருவருட்பயன் வழித்துணை விளக்கவுரை,** அ.அ.மன்றம், திருநெல்வேலி, பிப்ரவரி, 1999.

21. ஆனந்தராசன், ஆ., **சிவஞான பாடிய நுண்பொருள் விளக்கம்,** அருள்நந்தி சிவம் புத்தக நிலையம், திருநெல்வேலி, ஜூன், 2004.

22. ஆனந்தராசன், ஆ., **உண்மை விளக்கம்,** அருள்நந்தி சிவம் புத்தக நிலையம், திருநெல்வேலி, மறுபதிப்பு, நவம்பர் 2005.

23. ஆனந்தராசன், ஆ., **சித்தாந்த விளக்கம் - வினாவிடை,** சிவபாதசுந்தரனார் அருங்காப்பு, கோலாலம்பூர், சூலை 2008.

24. ஆனந்தராசன், ஆ., **திருவருட்பயன்,** நர்மதா பதிப்பகம், சென்னை, ஜூன் 2010.

25. ஆனந்தராசன், ஆ., **சிவஞான போதம் (வழித்துணை விளக்கம்),** நர்மதா பதிப்பகம், சென்னை, நவம்பர் 2010.

26. இரத்தின சபாபதி, வை. (கு.ஆ.), **துகளறு போதம்,** சைவ சித்தாந்தப் பெருமன்றம், சென்னை, வைகாசி, 1997.

27. இரத்தின சபாபதி, வை. (ப.ஆ.), **தத்துவப் பிரகாசம்,** சைவ சித்தாந்தப் பெருமன்றம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 2003.

28. இரத்தினம் செட்டியார், முரு.பழ., **கடவுளால் முடியாத செயல்கள்,** மறைமலையடிகள் மன்றம், கோவை, 1968.

29. இராகவையங்கார், ரா. (ப.ஆ.), **திணைமாலை நூற்றைம்பது மூலமும் உரையும்,** மதுரைத் தமிழ்ச்சங்கம், 'செந்தமிழ்' பிரசுரம்-அ, மதுரை, இரண்டாம்பதிப்பு,1927.

30. இராசமாணிக்கனார், மா., **சைவ சமய வளர்ச்சி,** பூங்கொடி பதிப்பகம், சென்னை, மூன்றாம் பதிப்பு, 1999

31. இராசமாணிக்கனார், மா., **பெரிய புராண ஆராய்ச்சி,** அலமு பதிப்பகம், சென்னை, நவம்பர் - 2002.

32. இராசவன்னியன், த., **உமாபதி சிவாச்சாரியாரின் இலக்கிய நூல்கள் - ஓர் ஆய்வு,** அ.ப.க., சிதம்பரம், 2000.

33. இராமநாதபிள்ளை, ப. (உ.ஆ.), **தாயுமானவடிகள் திருப்பாடல்கள்,** கழகம், திருநெல்வேலி, 1966.

34. இராமநாதபிள்ளை, ப. (ப.ஆ.), **மெய்கண்ட சாத்திரம் (முதற்பகுதி),** கழகம், சென்னை, 1967.

35. இராமநாதபிள்ளை, ப. (தொ.ஆ.), **சிவநெறிச் செய்யுட்டிரட்டு,** கழக வெளியீடு, பிப்ரவரி, 1969.

36. இராமநாதபிள்ளை, ப. (உ.ஆ.), **மெய்கண்ட சாத்திரம்,** தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 2000.

37. இராமநாதன், அ. (உ.ஆ.), **சிவதருமோத்தரம்,** சைவ சித்தாந்த நிலையம், மலேசியா, 1998.

38. இராமன், ப., **பரிபூரணானந்த போதம் - ஓர் ஆய்வு,** ப.இராமன், சென்னை, ஜூலை, 1984.

39. கங்காதரன், ச. (தொ.ஆ.), **தத்துவ இயல்,** தமிழ்நாட்டு பாடநூல் கழகம், சென்னை, 1996.

40. கங்காதரன், ச., **சைவ சித்தாந்தத் திறன்,** சைவ சித்தாந்தப் பெருமன்றம், சென்னை, ஜூன், 2012.

41. கச்சியப்ப முனிவர்., **பேரூர்ப் புராணம்,** திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை, 1969.

42. கணபதி சுப்பிரமணியன், எஸ்., மற்றும் பலர், **லலிதா ஸஹஸ்ரநாமம்,** (தமிழ் உரையுடன்) எஸ்.பத்மநாபன், சென்னை, மூன்றாம் பதிப்பு, ஆண்டு இல்லை.

43. கணபதி தேசிகர், சொ. (ப.ஆ.), **அஷ்டப் பிரகரணம் (முதல் மூன்று),** திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை, 1981.

44. கணேசையர், சி. (உ.ஆ.), **தொல்காப்பியம் சொல்லதிகார மூலமும் சேனாவரையருரையும்,** International Institute of Tamil Studies, Chennai, 2007.

45. கதிரேசச் செட்டியார், மு., **திருவாசகம் - திருவெம்பாவை (பேருரை),** சன்மார்க்க சபை, மேலைச்சிவபுரி, இரண்டாம் பதிப்பு, 1965.

46. கந்தசாமி, சோ.ந., **இந்தியத் தத்துவ களஞ்சியம் 3 தொகுதிகள்,** மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், ஜூலை 2003.

47. கந்தசாமி, சோ.ந., **தத்துவ நோக்கில் தமிழிலக்கியம்,** மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், நவம்பர், 2005

48. கந்தசாமி, (உ.ஆ.) மற்றும் பலர், **தணிகைப் புராணம்,** கழகம், திருநெல்வேலி, மே, 1965.

49. கமலக் கண்ணன், இரா.வ. (உ.ஆ.), **நாலாயிர திவ்யப் பிரபந்தம் - முதல் தொகுதி,** வர்த்தமானன் பதிப்பகம், சென்னை.

50. கலியாண சுந்தர முதலியார், **சித்தாந்தக் கட்டளை,** சைவசித்தாந்த சபை, சங்கரன் கோவில், 2006.

51. காஞ்சி ஞானப்ரகாச சுவாமிகள், (உ.ஆ.), **சிதம்பர மும்மணிக் கோவை,** அருள்நூல் பதிப்புக்குழு, சேலம், டிசம்பர் 1985.

52. காஞ்சி ஞானப்ரகாச சுவாமிகள், (உ.ஆ.), **பண்டார மும்மணிக் கோவை,** அருள்நூல் பதிப்புக் குழு, சேலம் (சென்னை), 1987.

53. காஞ்சி ஞானப்ரகாச சுவாமிகள், (உ.ஆ.), **சித்தாந்தக் கட்டுரைகள்,** அருள்நூல் பதிப்புக்குழு (சேலம்), சென்னை, 1996.

54. காஞ்சி ஞானப்ரகாச சுவாமிகள், (உ.ஆ.), **திருவருட்பயன் (விளக்கவுரை),** திருநெறிய தமிழ் மன்றம், கோவை, ஜனவரி, 2002.

55. காஞ்சி ஞானப்ரகாச சுவாமிகள், (உ.ஆ.), **உண்மை விளக்கம்,** திருநெறிய தமிழ் மன்றம், கோவை, 2010.

56. காஞ்சி ஞானப்ரகாச சுவாமிகள், (உ.ஆ.), **சிவநெறிக் கட்டுரைகள்,** திருநெறிய தமிழ் மன்றம், கோவை, இரண்டாம் பதிப்பு, பிப்ரவரி 2012.

57. காஞ்சி ஞானப்ரகாச சுவாமிகள், (உ.ஆ.), **கந்தர் கலிவெண்பா,** திருநெறிய தமிழ் மன்றம், கோவை, இரண்டாம் பதிப்பு, 2012.

58. கிருஷ்ணன், ஆர். (தொ.ஆ.), **புலவர் புராணம்,** இராமானந்த அடிகளார் அறக்கட்டளை, கோவை, 1994.

59. குஞ்சிதபாதம், சு., **சிவஞான முனிவர் காட்டும் சிவப்பிரகாசம்,** உலகத்தமிழ்க் கல்வி இயக்கம், சென்னை, மே, 1990.

60. குஞ்சிதபாதம், சு. (உ.ஆ.), **பண்டார சாத்திரம் (சித்தாந்த சிகாமணி),** திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை, இரண்டாம் பதிப்பு - 2003.

61. குஞ்சிதபாதம், சு. (உ.ஆ.), **பண்டார சாத்திரம் (சன்மார்க்க சித்தியார், சிவாச்சிரமத் தெளிவு),** திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை, இரண்டாம் பதிப்பு, 2003.

62. குஞ்சிதபாதம், சு. (உ.ஆ.), **பண்டார சாத்திரம் (உபாய நிட்டை வெண்பா, நிட்டை விளக்கம், உபதேச வெண்பா),** திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை, இரண்டாம் பதிப்பு, 2004.

63. குஞ்சிதபாதம், சு. (உ.ஆ.), **பண்டார சாத்திரம் (தச காரியங்கள்),** திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை, இரண்டாம்பதிப்பு, 2004.

64. குஞ்சிதபாதம், சு. (உ.ஆ.), **பண்டார சாத்திரம் (பஞ்சாக்கரப் பஃறொடை உபதேசப் பஃறொடை),** திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை, இரண்டாம் பதிப்பு, 2005.

65. குஞ்சிதபாதம், சு. (உ.ஆ.), **பண்டார சாத்திரம் (சித்தாந்தப் பஃறொடை),** திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை, இரண்டாம் பதிப்பு, 2005.

66. குஞ்சிதபாதம், சு. (உ.ஆ.), **பண்டார சாத்திரம் (அதிசயமாலை நமச்சிவாய மாலை),** திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை, இரண்டாம் பதிப்பு, 2006.

67. குஞ்சிதபாதம், சு. (தொ.ஆ.), **பண்டார சாத்திரங்கள் (ஆய்வுக் கட்டுரைகள்),** திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை, 2006.

68. குஞ்சிதபாதம், சு. (தொ.ஆ.), **சிவஞான போத ஆய்வுக் களஞ்சியம்,** திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை, 2014.

69. குருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், **ஸ்ரீ குருஞானசம்பந்தர் அட்டகம்,** தருமை ஆதீனம், தருமபுரம், மூன்றாம் பதிப்பு, 2000.

70. கோவிந்தசாமி பிள்ளை, இரா. (ப.ஆ.), **தத்துவ விளக்கம்,** சரஸ்வதி மஹால் நூல் நிலையம், தஞ்சாவூர், 1963.

71. கோவிந்தசாமி பிள்ளை, இரா. (ப.ஆ.), **திருநெறி விளக்கம்,** சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர், 1990.

72. கௌமாரீஸ்வரி, எஸ். (ப.ஆ.), **திருக்குறள் பரிமேலழகர் உரை,** சாரதா பதிப்பகம், சென்னை, ஏழாம் பதிப்பு, பிப்ரவரி 2006.

73. சத்தியோஜ்யோதி சிவாசாரியார், **அஷ்டப்பிரகரணம் (போகக் காரிகை),** திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை, 1998.

74. சத்தியோஜ்யோதி சிவாசாரியார், **அஷ்டப்பிரகரணம் (மோஷ காரிகை),** திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை, 2000.

75. சத்தியோஜ்யோதி சிவாசாரியார், **அஷ்டப்பிரகரணம் (பரமோஷ நிராச காரிகை),** திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை, 2001.

76. சதாசிவ செட்டியார், (கு.ஆ.), **சேக்கிழார் பிள்ளைத் தமிழ்,** கழக வெளியீடு, சென்னை, 1977.

77. சபாரத்தினம், எஸ்.பி. (உ.ஆ.), **குமாரஸ்தவம்,** சிவாகமப் பெருமன்றம், சென்னை, 1985.

78. சரவணன், சா. (ப.ஆ.), **மாதவச்சிவஞான முனிவர் நூற் களஞ்சியம் (3 தொகுதிகள்),** கவிதா பப்ளிகேஷன், சென்னை, ஜூன் 2010.

79. சாமிநாதையர், உ.வே., **சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லாருரையும்,** உ.வே.சா.நூலகம், சென்னை, 2013.

80. சாரங்கபாணி, இரா., **திருக்குறள் உரை வேற்றுமை (பொருட்பால்),** அ.ப.க., முதற்பதிப்பு, 1992.

81. சிங்காரவேலன், சொ., **மூவர் தேவாரம் (இரண்டு பார்வைகள்),** மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, 1987.

82. சிங்காரவேலன், சொ., **சித்தர் காட்டில் மலர்ந்த சிவஞானம்,** ஞானவேல் பதிப்பகம், மயிலாடுதுறை, மார்ச்சு, 1992.

83. சித்தலிங்கம், டி.பி., **சைவ சமயத் தோற்றமும் வளர்ச்சியும்,** திருவரசு புத்தகநிலையம், சென்னை, மூன்றாம் பதிப்பு, 2002.

84. சிதம்பர சுவாமிகள், **திருப்போரூர் சந்நிதி முறை,** கந்தசுவாமி தேவத்தானம், திருப்போரூர், 1967.

85. சிவஞான சுவாமிகள், **சிவஞான பாடியம்,** சைவசித்தாந்த மகா சமாஜம், சென்னை, 1936.

86. சிவஞான சுவாமிகள், **சிகரிணி மாலா என்னும் சிவதத்துவ விளக்கம்,** பாம்பன் மெர்க்கன்டைல்ஸ், மதுரை, 1991.

87. சிவஞான சுவாமிகள், **சித்தாந்தப் பிரகாசிகை,** திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை, நான்காம் பதிப்பு, 1998.

88. சிவஞான சுவாமிகள், (உ.ஆ.), **சிவஞான சித்தியார் சுபக்கம் (பொழிப்புரை),** சிவஞான சுவாமிகள் பேரவை, விக்கிரமசிங்கபுரம், 2001.

89. சிவப்பிரகாச சுவாமிகள், **ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் செந்தமிழ் நூல்கள் (2 தொகுதிகள்)**, மயிலம் - பொம்மபுர ஆதீனம், மயிலம், இரண்டாம் பதிப்பு, 2004.

90. சுந்தரமூர்த்தி, கு., **திருவைந்தெழுத்து,** அ.அ.மன்றம், திருநெல்வேலி, இரண்டாம் பதிப்பு, 2001.

91. சுப்பிரமணிய முதலியார், சி.கே. (உ.ஆ.), **திருத்தொண்டர் புராணம் மூன்றாம் - பகுதி, இரண்டாம் பாகம்**, கோவைத் தமிழ்ச் சங்கம், கோயம்புத்தூர், மூன்றாம் பதிப்பு, 1980.

92. சுப்பிரமணிய முதலியார், சி.கே. (உ.ஆ.), **திருத்தொண்டர் புராணம் ஏழாம் தொகுதி,** கோவைத் தமிழ்ச் சங்கம், கோயம்புத்தூர், இரண்டாம் பதிப்பு, 1992.

93. சுப்பிரமணிய முதலியார், சி.கே. (உ.ஆ.), **திருத்தொண்டர் புராணம் 3ஆம் பகுதி- முதற்பாகம்,** சேக்கிழார் நிலையம், கோயம்புத்தூர், மூன்றாம் பதிப்பு, 1997.

94. சுப்பிரமணிய முதலியார், சி.கே. (உ.ஆ.), **திருத்தொண்டர் புராணம் 2ஆம் பகுதி,** சேக்கிழார் நிலையம், கோயம்புத்தூர், மூன்றாம் பதிப்பு, 2001.

95. சுப்பிரமணிய முதலியார், சி.கே. (உ.ஆ.), **திருத்தொண்டர் புராணம் 4ஆம் தொகுதி,** சேக்கிழார் நிலையம், கோயம்புத்தூர், மூன்றாம் பதிப்பு, 2003.

96. சுப்பிரமணிய முதலியார், சி.கே. (உ.ஆ.), **திருத்தொண்டர் புராணம் முதல் தொகுதி,** சேக்கிழார் நிலையம், கோயம்புத்தூர், நான்காம் பதிப்பு, 2007.

97. சுப்பிரமணிய முதலியார், சி.கே. (உ.ஆ.), **திருத்தொண்டர் புராணம் ஐந்தாம் பகுதி,** சேக்கிழார் நிலையம், கோயம்புத்தூர், மூன்றாம் பதிப்பு, 2010

98. சுப்பிரமணிய முதலியர், சி.கே. (உ.ஆ.), **திருத்தொண்டர் புராணம் ஆறாம் பகுதி,** சேக்கிழார் நிலையம், கோயம்புத்தூர், 2015.

99. சுப்பிரமணியன், ச.வே. (உ.ஆ.), **தொல்காப்பியம்,** மணிவாசகர் பதிப்பகம், சென்னை, மே, 1998.

100. சுப்புரெட்டியார், ந., **சைவ சித்தாந்தம் ஓர் அறிமுகம்,** கழகம், சென்னை, 2001.

101. சுவாமி ஆசுதோஷானந்தர், (உ.ஆ.), **ஈசாவாஸ்ய உபநிஷதம்,** ஸ்ரீராமகிருஷ்ண மடம், சென்னை, 2001.

102. சுவாமி ஆசுதோஷானந்தர், (உ.ஆ.), **முண்டக உபநிஷதம்,** ஸ்ரீராமகிருஷ்ண மடம், சென்னை, 2002.

103. சுவாமி ஆசுதோஷானந்தர், (உ.ஆ.), **ஐதரேய உபநிஷதம்,** ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், சென்னை, 2003.

104. சுவாமி ஆசுதோஷானந்தர், (உ.ஆ.), **கேன உபநிஷதம்,** ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், சென்னை, 2003.

105. சுவாமி ஆசுதோஷானந்தர், (உ.ஆ.), **சாந்தோக்ய உபநிஷதம்,** ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், சென்னை, 2013.

106. சுவாமி ஆசுதோஷானந்தர், (உ.ஆ.), **பிரம்ம ஸூத்ரம்,** ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், சென்னை, 2013.

107. சுவாமிநாத சிவாசாரியார், சி. (ப.ஆ.), **காமிகாகமம் (முதற்பகுதி),** தென்னிந்திய அர்ச்சகர் சங்கம், சென்னை, 1977.

108. செங்கல்வராய பிள்ளை, வ.சு., **திருப்புகழ் - பகுதி 4,** கழகம், சென்னை, 1999.

109. செந்திநாதையர், **சைவ வேதாந்தம்,** தெய்வச் சேக்கிழார், சைவ சித்தாந்தப் பாடசாலை, தஞ்சாவூர், மீள்பதிப்பு - 2009.

110. சென்னியப்பன், ந.இரா., **கச்சியப்ப முனிவரின் சிவநெறி விளக்கம்,** திருவாவடுதுறை ஆதீனக் கிளைமடம், காஞ்சிபுரம், 2005.

111. தங்கதுரை, சு. (ப.ஆ.), **அருள்மிகு உமாபதி சிவாசாரிய சுவாமிகள் வரலாறு,** அருள்மிகு குமாரதேவர் திருமடம், திருமுதுகுன்றம், 2006.

112. தண்டபாணி தேசிகர், ச., **திருக்குறள் உரைக்களஞ்சியம், பொருட்பால் - அரசியல்,** ம.கா.ப. முதற்பதிப்பு, 1990

113. தண்டபாணி தேசிகர், ச.(உ.ஆ.), **திருவாசகம் - விளக்கவுரை 2 தொகுதிகள்,** திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை, இரண்டாம் பதிப்பு, 2009.

114. தண்டபாணி தேசிகர், ச.(உ.ஆ.), **திருமூலர் திருமந்திரம்,** ஐந்து ஆறு தந்திரங்கள், திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை, ஐந்தாம் பதிப்பு, 2008.

115. திருமுருக கிருபானந்த வாரியார்., **திருப்புகழ்,** திருமுருகன் திருப்புகழ்சபை, மதுரை, 1986.

116. திருவிளங்கம், மு. (உ.ஆ.), **சிவஞான சித்தியார் சுபக்கம்,** யாழ்ப்பாணம் கூட்டுறவு தமிழ் நூற் பதிப்பு, யாழ்ப்பாணம், இரண்டாம் பதிப்பு, 1971.

117. துரைசாமிப் பிள்ளை, சு. ஔவை, (ப.ஆ.), **சிவஞான போதச் சிற்றுரை,** அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1953.

118. துரைசாமிப் பிள்ளை, **சிவஞான போதச் செம்பொருள்,** ஸ்ரீகாசி மடம், திருப்பனந்தாள், மார்ச்சு, 1958.

119. துரைசாமிப் பிள்ளை, (உ.ஆ.), **வாகீசமுனிவர் அருளிச் செய்த ஞானாமிர்த மூலமும் பழைய உரையும்,** அ.ப.க., சிதம்பரம், 1987.

120. நந்திசிவாக்கிரயோகிகள், (உ.ஆ.), **சிவநெறிப் பிரகாசம்,** திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை, 1968.

121. நடேச முதலியார், அ., **அருள் அனுபவம்,** சொர்ணம் பதிப்பகம், வைத்தீஸ்வரன் கோயில், 2000.

122. "நஜன்" (நடராஜன், எஸ்.), (ப.ஆ.), **குஞ்சிதாங்க்ரி ஸ்தவம்,** பிரதிபா பிரசுரம், சென்னை, டிசம்பர், 2014.

123. நாகலிங்கம், அ. (ப.ஆ.), **ஆணவம் - கன்மம் - மாயை பற்றிய விளக்க உரைகள்,** மயிலை. சின்னண்ணன் பதிப்பகம், சென்னை, 2012.

124. நிரம்ப அழகிய தேசியர் (உ.ஆ.), **திருவருட்பயன்,** பொற்றடங்கண்ணி, சிதம்பரம், இரண்டாம் பதிப்பு, 1976.

125. பட்டராமகண்டர், **அஷ்டப்பிரகரணம் (நாத காரிகை),** திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை, 1998.

126. பாம்பன் சுவாமிகள், **தகராலய ரகசியம்,** குமரகுரு நூலகம், சென்னை, மூன்றாம் பதிப்பு, 1991.

127. பாம்பன் சுவாமிகள், **பரிபூரணானந்த போதம்,** குமரகுரு நூலகம், சென்னை, மூன்றாம் பதிப்பு, 1999.

128. பாம்பன் சுவாமிகள், **திருப்பா (முதல் புத்தகம்),** குமரகுரு நூலகம், சென்னை, 2000.

129. பாம்பன் சுவாமிகள், **திருப்பா (இரண்டாம் புத்தகம்),** குமரகுரு நூலகம், சென்னை, 2000.

130. பாம்பன் சுவாமிகள், **சிவஞான தேசிகம்,** குமரகுரு நூலகம், சென்னை, மூன்றாம் பதிப்பு, 2001.

131. பாஸ்கரன், க., **சைவ சித்தாந்தத்தில் அறிவாராய்ச்சியியல்,** தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 2006.

132. மணி, சி.சு., **சைவ சித்தாந்தம்,** அ.அ.மன்றம், திருநெல்வேலி, அக்டோபர், 1988.

133. மணி, சி.சு. (உ.ஆ.), **சிவஞான சித்தியார் பரபக்கமும் சுபக்கமும்,** அ.அ.மன்றம், திருநெல்வேலி, செப்டம்பர், 1995.

134. மணி, சி.சு., **சிவஞான சித்தியார் சுபக்கம்,** அ.அ.மன்றம், திருநெல்வேலி, 1998.

135. மணி, சி.சு., **மெய்கண்ட நூல்களுள் ஏழு,** அ.அ.மன்றம், திருநெல்வேலி, அக்டோபர், 1999.

136. மணி, சி.சு., **திருஉந்தியார் திருக்களிற்றுப் படியார்,** அ.அ.மன்றம், திருநெல்வேலி, இரண்டாம் பதிப்பு, 2000.

137. மணி, சி.சு., **சிவஞான மாபாடியம்,** சி.சு.மணி, திருநெல்வேலி, இரண்டாம் பதிப்பு, 2001.

138. மறைமலையடிகள், **சிவஞான போத ஆராய்ச்சி,** பூம்புகார் பதிப்பகம், சென்னை, ஏப்ரல், 2005.
139. மாணிக்கனார், அ. (உ.ஆ.), **பெரிய புராணம் 6 தொகுதிகள்,** வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, நான்காம் பதிப்பு, 1999.
140. மாணிக்கம், அ. (உ.ஆ.), **கந்த புராணம்,** வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 2000.
141. மாணிக்கம், அ., **குமரகுருபரர் பிரபந்தத் திரட்டு (முதல், இரண்டாம் தொகுதி),** வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, 2000.
142. மாணிக்கம், அ., **தாயுமானவர் திருப்பாடல்கள்,** வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, 2005.
143. மீனாட்சி சுந்தரம் பிள்ளை, த.ச. (ப.ஆ.), **சந்தான குரவர் நான்மணிமாலை,** திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை, 1961.
144. முத்துராமன், **சைவ சித்தாந்தம்,** தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், அக்டோபர், 1975.
145. முத்துராமன், எம்., **சைவ சித்தாந்தம்,** குமரன் புத்தக இல்லம், சென்னை, 2006.
146. முத்தையா பிள்ளை, பொ., **சிவஞான போதச் சிற்றுரை விளக்கம்,** சைவசித்தாந்தப் பெருமன்றம், சென்னை, 1989.
147. முத்தையா பிள்ளை, பொ. (உ.ஆ.), **சருவஞானோத்தர ஆகமம்,** சைவ சித்தாந்தப் பெருமன்றம், சென்னை, 2002.
148. முத்தையா பிள்ளை, பொ. (உ.ஆ.), **தேவி காலோத்தர ஆகமம்,** சைவ சித்தாந்தப் பெருமன்றம், சென்னை, சூன், 2004.
149. வச்சிரவேல் முதலியார், க., **சைவ சித்தாந்தத் திறவு,** ம.கா.ப., மதுரை, 1980.
150. வச்சிரவேல் முதலியார், க. (ப.ஆ.), **சிவஞான போத வசனாலங்கார தீபம்,** அ.அ.மன்றம், திருநெல்வேலி, ஏப்ரல், 1996.
151. வச்சிரவேல் முதலியார், க., மற்றும் பலர், **திருமூலர் திருமந்திரம்,** எட்டாம் தந்திரம், திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை, மூன்றாம் பதிப்பு, 2003
152. வரதராசன், மு., **தமிழ் இலக்கிய வரலாறு**, சாகித்திய அக்காதெமி, புதுதில்லி, 17ஆம் பதிப்பு, 2002.
153. விநாயகம், க., **சிவஞான முனிவர் உரைத்திறன்,** ஸ்ரீ அன்னை நூலகம், மயிலம், 1991.
154. வெள்ளையம்பலவாண முனிவர், (உ.ஆ.), **முத்தி நிச்சயம்,** தருமை ஆதீனம், தருமபுரம், 2014.

155. வெள்ளைவாரணனார், க., **சைவ சித்தாந்த சாத்திர வரலாறு**, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 2002.

156. வேற்பிள்ளை, ம.க. (உ.ஆ.), **திருவாதவூரடிகள் புராணம்**, சிவபாத சுந்தரனார், குருபூசை அறங்காப்பு, மலேசியா, ஆகஸ்ட் 2004.

157. வையாபுரி, ர., **புடைநூலும் பன்னிரு சூத்திரங்களும்**, சைவ சித்தாந்த சபை, ஈரோடு, முதற்பதிப்பு, 2007

158. வையாபுரி, ர., **கச்சியப்பமுனிவர் சைவ சித்தாந்தம்**, (சுருக்கம், விரிவு, முக்திநிலை ஆய்வு) (3 பாகங்கள்), சைவ சித்தாந்த சபை, ஈரோடு, டிசம்பர், 2009.

159. வையாபுரி, ர. (உ.ஆ.), **விநாயகர் அகவல்**, சைவ சித்தாந்த சபை, ஈரோடு, இரண்டாம் பதிப்பு, 2014.

160. ஸ்வர்ணா சோமசுந்தரம், (உ.ஆ.), **திருச்செந்தூர் சுப்பிரமணியர் அகவல்**, திருநெறிய தமிழ்மன்றம், கோவை, டிசம்பர், 2006.

161. ஸ்ரீஉமாபதி சிவாச்சாரியார், **சதரத்ன சங்க்ரஹம்**, வேதாகம அகாடமி, திருச்சி.

162. ஸ்ரீசந்திரன், ஜெ. (உ.ஆ.), **மணிமேகலை**, தமிழ் நிலையம், சென்னை, 2013.

163. ஸ்ரீசந்திரன், ஜெ., **நாலடியார்**, தமிழ் நிலையம், சென்னை, இரண்டாம்பதிப்பு, 2014.

164. ஸ்ரீநிவாஸன், தே.ஆ., **சங்கற்ப நிராகரணம் நூலின் சார்புக் கட்டுரை**, திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை, 1958.

165. ஜோதி, வ. (உ.ஆ.), **திருவிளையாடற் புராணம் 5 தொகுதிகள்**, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1998.

ஆங்கில நூல்கள்

1. Balasubramanian, K.M., **Special Lectures on Saiva Siddhanta**, The Annamalai University, Chidambaram, 1959.

2. Devadhar, C.R., **Malavikagnimitram of Kalidasa**, Motilal Banarsidass Publisher, New Delhi, 2000.

3. Deva Senapathi, V.A., **Saiva Siddhanta expounded in the Sivajnana - Siddhiyar and its six commentries**, University of Madras, 1966.

4. Gangadaran, S., **Studies in Jnanamrtam**, Madurai Kamaraj University, Madurai, 1981.

5. Gangadaran, S., **Saiva Siddhanta with Special reference to Sivaprakasam**, Angayarkanni Agam, Madurai, 1992.

6. George Joseph, V.S., **Centrality of Self in Saiva Siddhanta,** University of Madras, Chennai, 2005.
7. Gopaul Chetty, D., **New Light Upon Indian Philosophy or Swedenborg and Saiva Siddhanta,** MCM XXIII, London & Toronto Jm Dent & Sons Ltd, New York - 1923.
8. Janaki, S.S. (Editor), **Sri Umapati Sivacarya His Life, Works and Contribution to Saivism,** The Kuppuswami Sastri Research Institute, Chennai, 1996.
9. Kannan. M., Jennifer Clare (Editors), **DEEP RIVERS** (Francois Gros), French Institute of Pondicherry and Tamil Chair, Department of South and Southeast Asian Studies, University of California at Berkeley, 2009.
10. Murugesa Mudaliar, N., **The Relevance of Saiva Siddhanta Philosophy,** Annamalai University, Chidambaram, Second Edition, 1979.
11. Piet. John.H., **A Logical Presentation of the Saiva Siddhanta Philosophy,** The Christian Literature Society for India, Madras, 1952.
12. Sarah Manickaraj, **Advanced General Psychology,** Tamilnadu open University, Chennai, 2005.
13. Siddalingaiah, T.B., **Saiva Siddhanta in Historical Perspective,** Siddhanta Rathnam Smt.Usha Ramji Memorial Trust, Chennai, December 2004.
14. Sivaraman.K., **Saivism in Philosophical Perspective,** Motilal Banarasidass Publishers, New Delhi, 1973.
15. Surendranath Dasgupta., **A History of Indian Philosophy (Volume-V),** Motilal Banarasidass Publishers Private Limited, New Delhi, Reprint, 2000.
16. Vajravelu Mudaliar, K., **Sivajnana Mapadiyam,** Madurai Kamaraj University, Madurai, 1985.

மலர்கள், கலைக்களஞ்சியம், இதழ்கள்

1. மெய்கண்டான் சித்தாந்த மகாநாடு மலர், தருமபுரஆதீனம், தருமபுரம், 1944.
2. Encyclopaedia Americana, 1829.
3. Indian Philosophical Annual Volume. XIV. 1980-81.

i) "சிவஞானபாடிய"த்தில் 'சிவப்பிரகாசம்'

வ. எண்	சிவஞானபோத நூற்பா	அதிகரணம்	சிவஞான பாடிய பக்கம்	சிவப்பிரகாசம் பாடல் எண்	பாடல்குறிப்பு
1.	பாயிரம்	-	7	11,99	"பொது உண்மை எனக்கருதி" (11) "பெத்தமுத்திக் கண் மதித்தாமன்றே" (99)
2.	பாயிரம்	-	8	25	"வினையோஅன்றிச் சொல்லிவரு மாயையோ அணுவை முந்தச் சூழ்ந்தது" (25)
3.	பாயிரம்	-	11	7	"வேதாந்தத் தெளிவாஞ் சைவ சித்தாந்தத் திறன் இங்கு தெரிக்க லுற்றாம்" (7)
4.	பாயிரம்	-	12	10	"உயர்ஞானம் இரண்டாம் மாறா மலம்அகல அகலாத மன்னு போதத் திருவருள் (10)
5.	பாயிரம்	-	13	10	"கிரியை எனமருவும் அவையாவும் ஞானங் கிடைத்தற்கு நிமித்தம்" (10)
6.	பாயிரம்	-	32	9	"பொருவில் நிரு வாணம்.... பரபதத்துள் உயிர் விரவப் பயிற்றும் அன்றே" (9)
7.	அவையடக்கம்	-	45	72, 78	"தன்னாலே தனையறிந்தால் தன்னையும் தானே காணும்" (72) "அதில் அறிவு அடங்கி மன்னிட வியாபியாய வான்பயன் தோன்றும்" (78)

வ. எண்	சிவஞானபோத நூற்பா	அதிகரணம்	சிவஞான பாடிய பக்கம்	சிவப்பிரகாசம் பாடல் எண்	பாடல்குறிப்பு
8.	அவையடக்கம்	-	49	99	“நிகழ் சிவாத்துவித அந்தத்து குலவினர் அளவளாவா” (99)
9.	அவையடக்கம்	-	50	7	“புறச் சமயத்தவர்க்கு இருளாய் அகச் சமயத்து ஒளியாய்” 7)
10.	அவையடக்கம்	-	72	34	“இன்மை மலம் மாயைகன்மம் என்று இரண்டே... பெருகுஒளி முன்புளதே பெற்றிடும் என்று இத்திறம்” (34)
11.	நூற்பா.1.	அதிகரணம்.1	82	55	“அறிவினால் அறிந்த யாவும் அசத்தாதல் அறிதி” (55)
12.	நூற்பா.1	அதிகரணம்.2	117	77	“உள்ளத்து ஒன்றிய உணர்வு தம்பால் உள்ளது நிகழ்த்தும் ஈசன் தன்தொழில் நடாத்தும் மேனி தனக்கெனக் கொண்டு தானே” (77)
13.	நூற்பா.2	தோற்றுவாய்	121	13	“பலகலை ஆகம வேதம் யாவையினும் கருத்துப் பதி பசுபாசந் தெரித்தல்” (13)
14.	நூற்பா.2	அதிகரணம்.1	131	18	“ஏற்ற இவை அரனருளின் திருவிளையாட்டாக இயம்புவர்கள்” (18)

வ. எண்	சிவஞானபோத நூற்பா	அதிகரணம்	சிவஞான பாடிய பக்கம்	சிவப்பிரகாசம் பாடல் எண்	பாடல்குறிப்பு
15.	நூற்பா.2	அதிகரணம்.1	139	7,99	"புறச்சமயத்தவர்க்கு இருளாய்... சைவசித்தாந்தத் திறன் இங்கு தெரிக்கலுற்றாம்" (7) "சிவாத்துவித அந்தத்து குலவினர் அளவளாவா கொள்கையது ஆகி" (99)
16.	நூற்பா.2	அதிகரணம்.1	141	99, காப்பு	"வேதத் தலைதரு பொருளாய்" (99) "ஒளியான திருமேனி.... உளமான" (காப்பு)
17.	நூற்பா.2	அதிகரணம்.2	146	51	"இங்கிவை பொதுஇயம்பும்" (51)
18.	நுற்பா.2	அதிகரணம்.2	157	28	"நாசோற்பத்தி பண்ணிவரும் ஆதலால் அநாதியாகி" (28)
19.	நூற்பா.2	அதிகரணம்.2	161	23	"அன்னவனும் இது ஒழிய ஆக்கமாட்டான்... நித்தம் முன்னவன் அவ்வசித்தை விரித்து எவையும் ஆக்கும் முதன்மையது கொடுத்ததுஎன மொழிந்திடாரே" (23)
20.	நூற்பா.2	அதிகரணம்.2	168	70	"மாயை மாமாயை.. மருளினில் இருளாய் நிற்கும்... அருளினில் ஒளியாய் நிற்கும்" (70)
21.	நூற்பா.2	அதிகரணம்.2	169	37	"இகலிவரும் இவையுணரின் இருள் வெளியாம் தன்மை" (37)

வ. எண்	சிவஞானபோத நூற்பா	அதிகரணம்	சிவஞான பாடிய பக்கம்	சிவப்பிரகாசம் பாடல் எண்	பாடல்குறிப்பு
22.	நூற்பா.2	அதிகரணம்.2	171	69, 70	“நன்னலம் பெற நிறைந்த ஞானமே ஞானம் (69) “மாயை மாயை...” (70)
23.	நூற்பா.2	அதிகரணம்.2	172	20, 48	“பாகமாம் வகைநின்று திரோதானசத்தி பண்ணுதலான் மலமெனவும் பகர்வர்” (20) “முற்சினம் மருவு திரோதாயி கருணையாகி(48)
24.	நூற்பா.2	அதிகரணம்.2	183,184	22	“விரிவாய தன்செயலின் வியாபியாய்” (22)
25.	நூற்பா.2	அதிகரணம்.2	193	13	“நிலவும் அருவுருஅன்றி” (13)
26.	நூற்பா.2	அதிகரணம்.2	196	26	“வித்தை அராகம் இவை அனந்தரால் மாயை தனிலாகும்” (26)
27.	நூற்பா.2	அதிகரணம்.2	197	26	“அருத்தி மிகுங் கலை கால நியதி உடன்” (26)
28.	நூற்பா.2	அதிகரணம்.2	208	39	“வாயில்களின் பயனைப் புத்திதர வித்தையிடை நின்று அறிவை உயிர்க்குப் பொருந்தியிடும் வகை புணரும்” (39)
29.	நூற்பா.2	அதிகரணம்.2	210	20	“கலைகாலம் நியதியுடன் வித்தை யராகம் இவை அனந்தரால் மாயை தனிலாகும் (26)

வ. என்	சிவஞானபோத நூற்பா	அதிகரணம்	சிவஞான பாடிய பக்கம்	சிவப்பிரகாசம் பாடல் என்	பாடல்குறிப்பு
30.	நூற்பா.2	அதிகரணம்.2	217	41	“மெய்வகைய கலாசுத்தி தனில் இதற்கும் சுத்தி மேவியிடும் வகைதானும் விரும்பியநூல் விளம்பும் (41) (தீட்சையின்போது கலாசோதனை சரீரத்தில் ஐவ்கையாகச் செய்தல்) பிற்சேர்க்கை, ப.381)
31.	நூற்பா.2	அதிகரணம்.2	218	38	“உருஎவையும் தெரித்து” (38)
32.	நூற்பா.2	அதிகரணம்.2	233	43	“சிந்தை நினைவு ஐயம் வந்துதரும் மனம்ஒழிய வகுப்பு ஒணாதே” (43)
33.	நூற்பா.2	அதிகரணம்.2	237	63	“மருவிய பொறியில் ஒன்றும் மாபூதம் ஐந்தில் ஒன்றும் கருவிகள் நான்கும் நீங்காக் கலாதிகள் ஐந்தும்கூடி ஒருபுலன் நுகரும் (63)
34.	நூற்பா.2	அதிகரணம்.3	276	47	“தோற்றியிடும் அண்டசங்கள்... எண்பத்துநான்கு நூறாயிரம் என்று எடுத்தே” (47)

வ. எண்	சிவஞானபோத நூற்பா	அதிகரணம்	சிவஞான பாடிய பக்கம்	சிவப்பிரகாசம் பாடல் எண்	பாடல்குறிப்பு
35.	நூற்பா.4	அதிகரணம்.2	357	35	“மாயைமுதல் என வினையின் பான்மை முதல்... அறியாமை என நீ சொல்லியது மலம் என்பர் துணிந்துளோரே” (35)
36.	நூற்பா.4	அதிகரணம்.2	357	36	“அன்னியம் ஆனவை உணர்த்தி ... உணர்வு அரிதால் அதன் உண்மை தெரிவு அரிதாம் உனக்கே (36)
37.	நூற்பா.4	அதிகரணம்.2	361	8	“மூவகையார் உயிர் வர்க்கம் மலத்தார் கன்மமூல மலத்தார் மூன்றும் உடையார் அன்றே” (8)
38.	நூற்பா.4	அதிகரணம்.3	365	63	“மருவிய பொறியில் ஒன்றும்” (63)
39.	நூற்பா.4	அதிகரணம்.3	366	64	“தத்துவ வன்னரூபன்” (64)
40.	நூற்பா.4	அதிகரணம்.3	368	63	“மருவிய பொறியில் ஒன்றும்” (63)
41.	நூற்பா.5	தோற்றுவாய்	379	64	“தத்துவ வன்னரூபன்” (64)
42.	நூற்பா.5	தோற்றுவாய்	380	91	“திருவெழுத்து ஐந்தில் ஆன்மா திரோதம் மாசு அருள் சிவம் சூழ்தர நின்றது” (91)

வ. என்	சிவஞானபோத நூற்பா	அதிகரணம்	சிவஞான பாடிய பக்கம்	சிவப்பிரகாசம் பாடல் என்	பாடல்குறிப்பு
43.	நூற்பா.6	தோற்றுவாய்	391	72,70,36	“தன்னாலே தனை அறிந்தால் தன்னையும் தானே காணும் தான்அது ஆகி நின்றே” (72) “அருள் எனில் ஒளியாய் நிற்கும் (70) “உன்னரிய திருவருளை ஒழியமலம் உளது என்று உணர்வு அரிதால் அதன் உண்மை தெரிவு அரிதாம் உனக்கே” (36)
44.	நூற்பா.6	தோற்றுவாய்	394	57	“அசத்தைச் சத்துடன் நின்று நீக்கும் தன்மையால் சதசத்து ஆமே” (57)
45.	நூற்பா.6	அதிகரணம்.1	396	55	“அறிவினால் அறிந்தயாவும் அசத்து ஆதல் அறிதி” (55)
46.	நூற்பா.6	அதிகரணம்.2	426	57	“இருள்ஒளி அலாக்கண் தன்மையதாம்” (57)
47.	நூற்பா.6	அதிகரணம்.2	435	7	“பிறிவுஅரும் அத்துவிதம் ஆகும் சிறப்பினதாய் (7)
48.	நூற்பா.6	அதிகரணம்.2	436	7	“அறிவொளி போல் பிறிவரும் அத்துவிதமாகும்” (7)

வ. எண்	சிவஞானபோத நூற்பா	அதிகரணம்	சிவஞான பாடிய பக்கம்	சிவப்பிரகாசம் பாடல் எண்	பாடல்குறிப்பு
49.	நூற்பா.7	அதிகரணம்.1	445	65,14	“மன்டிய உணர்வு உயிர்க்கா மன்னி நின்று அறியும்” (65) “கூடும்ஒளி வள்குடிலை மாயை மேவி” (14)
50.	நூற்பா.7	அதிகரணம்.1	448	37	“இகலிவரும் இவை உணரில் இருள்வெளியாம் தன்மை” (37)
51.	நூற்பா.7	அதிகரணம்.3	453	57	“இருள்ஒளி அலாக்கன் தன்மையதாம்” (57)
52.	நூற்பா.8	அதிகரணம்.1	462	9	“பொருவில் நிருவாண மந்திரங்கள்.... பரபதத்துள் உயிர் விரவப் பயிற்றும் அன்றே (9)
53.	நூற்பா.8	அதிகரணம்.1	467	10	“உண்மைச் சரியை கிரியா யோகத் தன்மையோர்க்குச் சாலோக சாமீப சாரூபங்கள் மருவியிடும்” (10)
54.	நூற்பா.8	அதிகரணம்.1	478	48	“எதிர்வினையும் முடிவினை உதவு பயனால் நேராக” (48)
55.	நூற்பா.8	அதிகரணம்.2	482	7, 70	“அறிவொளி போல்” (7) “அருளினில் ஒளியாய் நிற்கும்” (70)
56.	நூற்பா.8	அதிகரணம்.4	494	70	“அருளினில் ஒளியாய் நிற்கும்” (70)
57.	நூற்பா.9	தோற்றுவாய்	500	71	“தான் பணியை நீத்தல்” (71)

வ. எண்	சிவஞானபோத நூற்பா	அதிகரணம்	சிவஞான பாடிய பக்கம்	சிவப்பிரகாசம் பாடல் எண்	பாடல்குறிப்பு
58.	நூற்பா.9	அதிகரணம்.2	511	57	“அசத்தைச் சத்துடன் நின்று நீக்கும் தன்மையால் சதசத்து ஆமே” (57)
59.	நூற்பா.10	அதிகரணம்.1	525, 526	58	“கண்ணொளி விளக்கின் சோதி கலந்திடும் கருத்து ஒன்று அன்றே” (58)
60.	நூற்பா.10	அதிகரணம்.1	527	72, 78	“தன்னாலே தனையறிந்தால் தன்னையுந் தானே காணும் தான்அது வாகிநின்றே (72) “அந்நிலை கரணமாகாவகை அதில் அறிவு அடங்கி மன்னிட வியாபியாய வான் பயன் தோன்றும் அன்றே” (78)
61.	நூற்பா.11	தோற்றுவாய்	540	7	“அறிவொளி போல் பிறிவரும் அத்துவிதம்” (7)
62.	நூற்பா.11	அதிகரணம்.1	544	58, 87	“விளக்கொளி கலந்து அவற்றைக்.... .... விளக்கின் சோதி கலந்திடும்” (58) “ஒன்றி நின்று உணரும் உண்மை” (87)
63.	நூற்பா.11	அதிகரணம்.1	547	96	“கண்டதோர் பொருளை அந்தக் கருத்தினால் காண்” (96)

வ. எண்	சிவஞானபோத நூற்பா	அதிகரணம்	சிவஞான பாடிய பக்கம்	சிவப்பிரகாசம் பாடல் எண்	பாடல்குறிப்பு
64.	நூற்பா.12	அதிகரணம்.1	558	36	“அந்நியமானவை உணர்த்தி அனன்னியமாய் நிறைந்த அறிவு அறியாமையினாலும்” (36)
65.	நூற்பா.12	அதிகரணம்.4	571	90	“பந்தம் ஆனவை அறுத்தும்... .. உரைசெய்வாரை வாதியா பேதியாவே” (90)

மேற்கோள்: மெய்கண்டதேவர் அருளிச் செய்த சிவஞானபோதமும், சிவஞான சுவாமிகள் அருளிச்செய்த சிவஞான பாடியமும், சைவசித்தாந்த மகா சமாஜம், சென்னை, இரண்டாம்பதிப்பு, ஏப்ரல் 2000-த்தின்படி அட்டவணை.

ii) தீட்சையின்போது கலா சோதனை சரீரத்தில் ஐவகையாகச் செய்தல்

வ.எண்.	நிலை	நிவர்த்திகலை	பிரத்திட்டாகலை	வித்தியாகலை	சாந்திகலை	சாந்திஅதீதகலை
1.	எல்லை	மூலாதாரம் முதல் மேல் உந்திக்கு மேல் எண்விரல் அளவு	இருதயம் தொடங்கி கண்டத்து அளவு	கண்டத்துக்கு மேல் தாலு மூலத்தளவு எல்லை 4 அங்குலம்	தாலுமூலத்திற்கு மேல் புருவமத்தியளவு எல்லை 4 அங்குலம்	புருவ மத்தியத்துக்கு மேல் மூன்று அங்குலம் எல்லை
2.	மண்டலம்	அக்கினி மண்டலம்	ஆதித்ய மண்டலம்	ஆதித்ய மண்டலம்	சோம மண்டலம்	சோம மண்டலம்
3.	ஆதாரம்	மூலாதாரம் சுவாதிட்டானம்	மணிபூரகம்	அநாகதம்	விசுத்தி	ஆக்ஞா
4.	அக்கரம்	அகாரம்	உகாரம்	மகாரம்	விந்து	நாதம்
5.	பிரகாசம்	சொரிதழற் கொழுந்து	அக்கினியும் ஆதித்தனும் கூடிய பிரகாசம்	மின்	விளக்கொளி	வான்ஒளி
6.	மலம்	மாயாமலம்	கன்மமலம்	மாயேயம்	திரோதாயி	ஆணவமலம்
7.	அவத்தை	சாக்கிரம்	சொப்பனம்	சுழுத்தி	துரியம்	துரியாதீதம்
8.	மாத்திரை	3	2	1	1/2	1/4
9.	மந்திரம்	இருதயம் சத்யோஜாதம் (மேற்கு)	சிரசு வாமதேவம் (வடக்கு)	சிகை அகோரம் (தெற்கு)	கவசம் தற்புருடம் (கிழக்கு)	நேத்திரம் அத்திரம் ஈசானம் (ஊர்த்துவம்)
10.	பதம்	ஓம் நமோ முதல் மகாதேவ முடிவாகிய 28	மகேஸ்வர முதல் அரூபின் அரூபின் முடிவாகிய 21	வியாபின் வியாபின் முதல் தியானகராய முடிவாகிய 20	நித்தியயோகினே முதல் வியோம வியாபினே முடிவாகிய 11	பிரணவம் ஒன்று

வ.எண்.	நிலை	நிவர்த்திகலை	பிரத்திட்டாகலை	வித்தியாகலை	சாந்திகலை	சாந்திஅதீதகலை
11.	வன்னம்	க்ஷகாரம்	24	7	3	16
12.	புவனம்	காலாக்கினி முதல் வீரபத்திரம் வரை 108	அமரேசம் முதல் சீகண்டம் வரை 56	வாமம் முதல் புவனேசம் வரை 27	வாமை முதல் சதாசிவம் வரை 18	நிவர்த்தி முதல் சமனாந்தம் வரை 15
13.	தத்துவம்	பிருதிவி	பிருதிவி நீங்கலாக ஆன்ம தத்துவம் 23	வித்யா தத்துவம் 7	சுத்தவித்தை (ஈசுரம் சாதாக்கியம்)	சத்தியும் சிவமும்
14.	தெய்வம்	பிரமன்	விஷ்ணு	உருத்திரன்	மகேஸ்வரன்	சதாசிவம்
15.	தொழில்	சிருஷ்டி (படைத்தல்)	ஸ்திதி (காத்தல்)	சங்காரம் (அழித்தல்)	திரோபாவம் (மறைத்தல்)	அநுக்கிரகம் (அருளல்)

மேற்கோள்:

1. மெய்வகையால் கலாசுத்திதனில் இதற்கும் சுத்தி மேவியிடும் வகைதானும் விரும்பிய நூல் விளம்பும் (சிவ.4)
2. சிவப்பிரகாச மூலமும் மதுரைச் சிவப்பிரகாசர் உரையும், பக்.145-146, கழக வெளியீடு, 1969.


சிவசூரியன்
பரசிவம்
பராசக்தி
ஆதிசக்தி
சிவம்
36. நாதம்
சக்தி
35. விந்து
சதாசிவர்
34. சாதாக்கியம்
அணு சதாசிவர்கள் பதின்மர்
மகேச்சுரர்
33. ஈச்சுரம்
அனந்தர் முதலான அஷ்டவித்யேஸ்வரர்கள்
உருத்திரர் (சப்தகோடி மகாமந்திரர்)
32. சுத்தவித்தை
வித்யா தத்துவம்
ஆன்ம தத்துவம்
சாந்த்யதீதகலை
சாந்திகலை
ஆகாய மண்டலம்
வாயுமண்டலம்

அணு சதாசிவர்

1. பிரணவர்
2. சுதர்
3. சுதீப்தர்
4. காரணர்
5. சுசிவர்
6. ஈசர்
7. சூக்குமர்
8. காலர்
9. அம்பு
10. தசேசர்

iii) சிவதத்துவம்
(பிரேரக காண்டம்)

அஷ்டவித்யேஸ்வரர்கள்

1. அனந்தர்
2. சூக்குமர்
3. சிவோத்தமர்
4. ஏகநேத்திரர்
5. ஏகருத்திரர்
6. திரிமூர்த்தி
7. சீகண்டர்
8. சிகண்டி


சிவசூரியன்
பரசிவம்
பராசக்தி
ஆதிசக்தி
36. நாதம்
35. விந்து
34. சாதாக்கியம்
33. ஈச்சுரம்
அனந்தர்
32 சுத்தவித்தை
31. மாயை
சீகண்டர்
பிரேரக காண்டம்
30. காலம்
மிச்ராத்துவா
29. நியதி
28. கலை
27. வித்தை
26. அராகம்
தேயு மண்டலம்
25
புருஷன்
வித்தியா கலை
ஆன்ம தத்துவம்

iv) வித்யா தத்துவம்
(போசயித்திருகாண்டம்)


சிவசூரியன்
பரசிவம்
பராசக்தி
ஆதிசக்தி
சிவதத்துவம் (5)
வித்யா தத்துவம் (7)
கலை
அப்பு மண்டலம்
பிரகிருதி (காரணம்)
24. சித்தம் (குணதத்துவம்)
சாத்விகம்
இராசதம்
தாமதம்
23. புத்தி
22. அகங்காரம்
அசுத்
தாத்வா
தைசத அகங்காரம்
வைகாரி அகங்காரம்
பூதாதி அகங்காரம்
மூலப்
பிரகிருதி
மாயை
21.மனம்
ஞானேந்திரியம்
20. செவி
19. மெய்
18. கண்
17. வாய்
16. மூக்கு
கன்மேந்திரியம்
15. நாக்கு
14. கால்
13. கை
12. எருவாய்
11. கருவாய்
தன்மாத்திரை
10. ஒலி
9. ஊறு
8. உருவம்
7. சுவை
6. நாற்றம்
பிரதிஷ்டா
கலை
5. ஆகாயம்
4. காற்று
3. நெருப்பு
2. நீர்
1. நிலம்
நிவர்த்தி கலை
பிருத்விமண்டலம்

V) ஆன்ம தத்துவம்
(போக்கிய காண்டம்)

திருவாவடுதுறை ஆதீனம் சரஸ்வதி மஹால் வெளியிட்ட சித்தாந்தப்படத்தை அடிப்படையாகக் கொண்டது


ஞானேந்திரியங்கள் (5)
• செவி
• தோல்
• கண்
• நாக்கு
• மூக்கு
சாக்கிரம் (நனவு)
(35)
கன்மேந்திரியங்கள் (5)
• வாய்
• கால்
• கை
• எருவாய்
• கருவாய்
கன்மேந்திரியங்களின் விடயங்கள் (5)
பேச்சு •
நடை •
கொடை •
போக்கு •
இன்பம் •
சொப்பனம் (கனவு)
(25)
தன்மாத்திரைகள் (5)
• ஓசை
• ஊறு
• ஒளி
• சுவை
• மணம்
சுழுத்தி (உறக்கம்)
(3)
சித்தம் மட்டும்
அந்தக்கரணங்கள் (4)
• மனம்
• புத்தி
• அகங்காரம்
• சித்தம்
0
துரியம் (பேருறக்கம்)
(2)
பிராணன் மட்டும்
(10)
தச வாயுக்கள்
துரியாதீதம் (உயிர்ப்படங்கல்)
(1)
புருடன் ①
• காலம்
• நியதி
• கலை
• வித்தை
• அராகம்
• பிராணன்
• அபானன்
• வியானன்
• உதானன்
• சமானன்
நாகன் •
கூர்மன் •
கிருகரன் •
தேவதத்தன் •
தனஞ்செயன் •

vi) ஐந்தவத்தையும் செயல்படும் கருவிகளும்



கிளாத்தோ (Clotho)
ஆகாமியம்

லாட்சிஸ் (Lachesis)
சஞ்சிதம்

அட்ரோபஸ் (Atropos)
பிராரத்தம்

vii) கிரேக்கர்களின் வினைக் கொள்கையை விளக்கும் மூன்று பெண்கள் (Moirai)

CENTRE FOR SHAIVA STUDIES
Puducherry

குறிப்புகள்

குறிப்புகள்

குறிப்புகள்

குறிப்புகள்

குறிப்புகள்



"தொன்மையவாம் எனும் எவையும் நன்றாகா இன்று
தோன்றிய நூல்எனும் எவையும் தீதாகா"

ஆய்வியல் அணுகுமுறை மேற்கொள்வார் பின்பற்ற வேண்டிய நுட்பமான இக்கருத்தினை விளக்கியு நூல் சிவப்பிரகாசம் ஆகும். இதனை நன்குணர்ந்த அறிஞர் சாந்திகுமார சுவாமி அவர்கள், சிவப்பிரகாசம் குறித்த ஓர் ஆய்வு நூலை வெளியிடுகின்றார். அவர் முனைவர்ப் பட்டம் பெற்றவர் ஆதலினால் பல்வேறு ஒப்புமைக் கருத்துகளுடன் இந்நூலை விளக்கியுள்ளார்.

– தருமையாதீனம் 27ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

வெளியீடு

திருமுறை அருட்பணி அறக்கட்டளை
பதிவு எண். 209/2004
எண்.7, பங்காரம்மன் தோட்டம், காஞ்சிபுரம் - 631 501

9 788190 957403

ரூபாய்: 600/-